TEST 12

| HISTORY OF TAMILNADU SOCIETY, RELATED ARCHAEOLOGICAL DISCOVERIES | | |
|---|---|---|
| 6th term 1 | Unit 4 | தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள் |
| 6th term 3 | Unit 1 | பண்டைக்காலத் தமிழகத்தில் சமூகமும் பண்பாடும் சங்க காலம் |
| | Unit 4 | தென்னிந்திய அரசுகள் |
| 7th term 1 | Unit 3 | தென்இந்தியப் புதிய அரசுகள் பிற்காலச் சோழர்களும், பாண்டியர்களும் |
| 9th book | Unit 3 | தொடக்ககாலத் தமிழ்ச் சமூகமும் பண்பாடும் |
| | Unit 7 | இடைக்கால இந்தியாவில் அரசும் சமூகமும் சோழர்கள் முதல் மொகலாயர்கள் வரை |
| 11th vol 1 | Unit 5 | தென்னிந்தியாவில் சமுதாய உருவாக்கம் |
| | Unit 11 | பிற்காலச் சோழரும் பாண்டியரும் |
| TAMIL LITERATURE FROM SANGAM AGE TILL CONTEMPORARY TIMES | | |
| 11TH சிறப்பு தமிழ் | Unit 1 | கவிதையியல் |
| | Unit 3 | அரங்கவியல் |
| | Unit 5 | ஊடகவியல் |
| 12TH சிறப்பு தமிழ் | Unit 1 | கவிதையியல் |
| | Unit 3 | அரங்கவியல் |
| Thirukkural - Significance as a Secular literature Relevance to Everyday Life- Impact of Thirukkural on Humanity- Thirukkural and Universal Values - Equality, Humanism, etc - Relevance to Socio - Politico - Economic affairs - Philosophical content in Thirukkural | | |
| 11th Economics | Unit 7 | இந்தியப் பொருளாதாரம் |
| 11th political Science | Unit 1 | அரசியல் அறிவியலின் அறிமுகம் |
| | Unit 15 | தமிழக அரசியல் சிந்தனைகள் |
| 12th political Science | Unit 4 | இந்திய நீதித்துறை |

அலகு– 4

## தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள்

| |
|---|
| உலகின் மிகத் தொன்மையான நாகரிகம் மெசபடோமியா நாகரிகம். இது 6500 ஆண்டுகளுக்கு முற்பட்டது. |

**பூம்புகார்:**

“பண்டைய தமிழகத்தின் மிகப் பழமையான நகரங்களுள் பூம்புகாரும் ஒன்று. காப்பிய மாந்தர்களான கோவலனும், கண்ணகியும் இந்த ஊரில்தான் பிறந்தார்கள். பூம்புகார் புகழ்பெற்று விளங்கிய துறைமுக நகரமும் கூட ஒவ்வொரு நாடும் தனது தேவைக்குப் போக எஞ்சிய பொருள்களை அண்டைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும், தங்கள் நாடுகளில் பற்றாக்குறையாக உள்ள பொருள்களைப் பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவும் வேண்டியிருந்தது. இதற்காகக் கடல்வழி வணிகம் அதிகரித்த போது, துறைமுகங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றுதான் பூம்புகார் துறைமுகம் ஆகும். இது வங்காள விரிகுடா கடலின் கரையில் அமைந்துள்ளது. இது காவிரி ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் தற்போதைய மயிலாடுதுறை அருகே உள்ளது.

**பூம்புகார் துறைமுகம்:**

- இந்த நகரத்துக்குப் புகார், காவிரிப்பூம்பட்டினம் போன்ற பெயர்களும் உண்டு. சங்க காலச் சோழ அரசின் துறைமுகம் பூம்புகார். பூம்புகார் துறைமுகத்தில் சீரும், சிறப்புமாக நடந்த வணிகம் குறித்து சங்க இலக்கிய நூலான பட்டினப்பாலையிலிருந்தும், இரட்டை காப்பிய நூல்களான சிலப்பதிகாரம், மணிமேகலையிலிருந்தும் அறிந்து கொள்ளலாம்.

- இவற்றில் குறிப்பாக, சிலப்பதிகாரம் பூம்புகாரின் சிறப்பைப் பேசுகின்றது. சிலப்பதிகார நாயகி கண்ணியின் தந்தை மாநாய்கள். மாநாய்கள் என்றால் பெருங்கடல் வணிகன் என்று பொருள். நாயகன் கோவலனின் தந்தை மாசாத்துவன். மாசாத்துவன் என்றால் பெருவணிகன் என்று பொருள். இதிலிருந்து பெருவணிகர்களும் பெருங்கடல் வணிகர்களும் நிறைந்த பகுதியாக பூம்புகார் விளங்கியது தெளிவாகிறது. இங்கு வணிகம் செய்ய கிரேக்கம், ரோம் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் வந்த வண்ணம் இருந்துள்ளனர். தொடர் வணிகத்தின் காரணமாக இவர்களில் பலர் பூம்புகார் நகரிலேயே வசித்திருக்கின்றனர். ஆகவே, இங்கு வெளிநாட்டவர் குடியிருப்புகளும் தோன்றின. எனவே இங்கு பல்வேறு மொழிகளும் பேசப்பட்டன. கப்பலில் இருந்து சரக்குகளை இறக்கி வைக்கவும், ஏற்றவும் சில மாதங்கள் ஆகும் என்பதால் அயல்நாட்டு வணிகர்கள் இங்குள்ள மக்களுடன் உரையாடவும், உறவாடவும் வாய்ப்புகள் உருவாயின. பூம்புகார் மக்கள் வெளிநாட்டவர் மொழிகளைக் கற்றறிந்தனர். அயல்நாட்டவரும் தமிழ் மொழியைக் கற்றனர். இதனால் பண்ட மாற்றங்களோடு கூடவே மொழி மாற்றமும் ஏற்பட்டது. இதன் விளைவாகச் சிந்தனைப் பரிமாற்றமும் பண்பாட்டுக் கலப்பும் நிகழ்ந்தன.

- பூம்புகார் நகரத்து வணிகர்கள் நேர்மைக்கும் நாணயத்திற்கும் பெயர் பெற்றவர்களாக விளங்கினார்கள். மிகச் சரியான விலைக்கே பொருள்களை விற்றனர். கூடுதலான விலைக்கு பொருளை விற்பது தவறான செயல் என்று அவர்கள் கருதினர் என்பதை பட்டினப்பாலை கூறுகிறது.

- பட்டினப்பாலை ஆசிரியர் கடயலூர் உருத்திரங்கண்ணனார் பொ.ஆ.மு. 2ம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர். இதிலிருந்தே புகார் நகரின் தொன்மையை நாம் அறிந்து கொள்ளலாம்.

- “கடல் வழியாகக் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. கருமிளகு தரைவிழித் தடங்கள் வழியே இறக்குமதி ஆனது. வட மலையிலிருந்து தங்கம் இறக்குமதி செய்யப்பட்டது. அது மெருகூட்டப்பட்டு மீண்டும் அயல்நாட்டுக்கு ஏற்றுமதியானது.

- மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து சந்தனமும், தென்கடல் பகுதியிலிருந்து முத்தும், கிழக்குப் பகுதியிலிருந்து பவளமும்,ஈழத்திலிருந்து உணவுப்பொருள்களும் இறக்குமதியாகின.

- பூம்புகார் மற்ற நகரங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட முறையில் கட்டமைக்கப்பட்டிருந்தது. வீடுகள் ஒழுங்கான முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தன. அகன்ற, நேரான தெருக்களைக் கொண்டதாக புகார் நகரம் விளங்கியது.

- இங்கு கப்பல் கட்டும் மற்றும் செப்பனிடும் தளம் இருந்ததாகவும் கூறப்படுகிறது. பூம்புகார் நகர வாழ்வினை சிலப்பதிகாரத்தின் புகார் காண்டத்தினை வாசித்தும் பட்டினப்பாலை போன்ற சங்க இலக்கியங்களை வாசித்தும் அறியலாம்.

- பொ.ஆ. 200 வரை சிறப்புற்றுத் திகழ்ந்த புகார் நகரம் கடல்கோள் அல்லது கடல்சீற்றங்களால் அழிந்து போயிருக்கலாம் என்று கூறப்படுகிறது. அதன் சான்றுகளை பூம்புகார் நகரில் இன்றும் காணலாம்.

**மதுரை:**

- இந்தியாவில் உள்ள மிகப் பழமையான நகரங்களில் மதுரையும் ஒன்று. சங்கம் வளர்த்த நகரம் என்று பெயர் பெற்றுள்ளதில் இருந்தே இதன் தொன்மையைப் புரிந்து கொள்ளலாம்.

- பண்டைய காலத்தில் மதுரையை முறையே பாண்டியர்களும், சோழர்களும் களப்பிரர்களும் ஆட்சி செய்தனர். இடைக்காலத்தில் பிற்காலச் சோழர்களும், பிற்காலப் பாண்டியர்களும், அவர்களைத் தொடர்ந்து நாயக்கர்களும் ஆட்சி புரிந்தனர். இதன் விளைவாகப் பண்பாட்டுக் கலப்பு நிகழ்ந்தது. வணிகம் செழித்து, இதற்கான சான்றுகள் மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் நடத்தப்பட்ட அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்த பெருமை மதுரைக்கு உண்டு. கடைச்சங்க காலத்தில் தமிழ்ப் பணி செய்த புலவர்கள் 49 பேர்.

- கிழக்குக் கடற்கரையில் அமைந்திருந்த தொண்டியில் இருந்து மதுரைக்கு அகில், சந்தனம் போன்ற நறுமணப் பொருள்கள் கொண்டு வரப்பட்டன. பண்டைய இஸ்ரேல் அரசர் சாலமோன் முத்துக்களை உவரி என்னுமிடத்திலிருந்து இறக்குமதி செய்தார். பாண்டியர் துறைமுகமான கொற்கைக்கு அருகில் உவரி உள்ளது.
- ரோமானிய நாணங்கள் தயாரிக்கம் தொழிற்சாலை மதுரையில் இருந்துள்ளது.

| |
|---|
| நாளங்காடி, அல்லங்காடி என்ற இரண்டு வகை அங்காடிகள் மதுரையில் இருந்தன. நாளங்காடி என்பது பகல் பொழுதிலான அங்காடியாகும். அல்லங்காடி என்பது இரவு நேரத்து அங்காடியாகும். இரவு – பகல் வேறுபாடு இல்லாமல் உயிர்ப்புள்ள நகரமாக மதுரை விளங்கியதால் தூங்கா நகரம் என்று அழைக்கப்பட்டது,<br>பெண்கள் எந்த வித பயமும் இன்றி இரவு நேரத்தில் அல்லங்காடியில் பொருள்களை வாங்கிச் சென்றனர். அந்த அளவிற்குப் பாதுகாப்பானதாக மதுரை நகர் விளங்கியது |

- பிறநாட்டு நாணயங்களும் மதுரையில் அச்சடிக்கப்பட்டது. மதுரையின் புகழுக்கு ஒரு சான்று ஆகும்.

- புகழ்பெற்ற கிரேக்க வரலாற்றாசிரியர் மெகஸ்தனிசின் குறிப்புகளில் மதுரையைப் பற்றிய தகவல்கள் உண்டு. மௌரிய வம்ச அசரனான சந்திர குப்தரின் அமைச்சரான சாணக்கியர் மதுரையைப் பற்றி தனது அர்த்தசாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

- மதுரை நகரைச் சுற்றிலும் இருந்த அகழியில் யானைகள் கூட செல்லும் அளவுக்கு அகலமான சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு மதுரை பண்டைய காலத்தில் சிறப்புற்றுத் திகழ்ந்தது.

**காஞ்சி:**

- கல்வி கற்பதற்கான இடத்தினை பள்ளி என்று அழைக்கிறோம். இப்பள்ளிகள் காஞ்சி நகரில் தான் முதன் முதலில் ஏராளமாக அமைக்கப்பட்டன. சமணர் அமைத்த பள்ளிகளில் சமண மாணவர்களும், புத்த விகாரங்களில் புத்த மாணவர்களும் பயின்றனர். நாளந்தா பல்கலைக்கழகத்தில் பயின்ற சீன வரலாற்றாசிரியர் யுவான் சுவாங் கூடுதல் படிப்புக்காக காஞ்சியில் இருந்த கடிகைக்கு வந்திருக்கிறார்.

| |
|---|
| புகார் துறைமுக நகரம் |
| மதுரை வணிக நகரம் |
| காஞ்சி கல்வி நகரம் ஆகும் |

- ‘‘நகரங்களில் சிறந்தது காஞ்சி’’ என்று கவிஞர் காளிதாசர் கூறுகிறார். ‘கல்வியில் கரையிலாத காஞ்சி’’ என்று நாயன்மார்களுள் முதன்மையானவரான திருநாவுக்கரசர் காஞ்சி நகரைப் புகழ்ந்துள்ளார். புத்தகயா, சாஞ்சி போன்ற ஏழு இந்தியப் புனிதத் தலங்களுள் காஞ்சியும் ஒன்று என சீன வரலாற்றாசிரியர் யுவான் சுவாங்க குறிப்பிடுகிறார்.
- தொண்டை நாட்டில் உள்ள மிகப் பழமையான நகரம் காஞ்சியாகும். தர்மபாலர்,ஜோதிபாலர், சுமதி, போதிதர்மர் போன்ற சான்றோர்கள் காஞ்சியில் பிறந்து வாழந்தவர்கள். இச்செய்திகள் மூலம் காஞ்சியின் கல்விச் சிறப்பை அறியலாம்.

- காஞ்சி கோயில்களி நகரம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு உள்ள கைலாசநாதர் கோவில் புகழ்பெற்றது. பிற்காலப் பல்லவ மன்னன் ராஜசிம்மன் இந்த கற்கோவிலைக் கட்டினார். பல்லவர்கள் காலத்தில் எண்ணற்ற குடைவரைக் கோவில்களும் கட்டப்பட்டன. பௌத்தத் துறவியான மணிமேகலை தனது இறுதிக் காலத்தை காஞ்சியில் கழித்தார் என்பது இதன் சிறப்புக்கு இன்னொரு சான்று ஆகும்.

| |
|---|
| சேர நாடு – கோவை, நீலகிரி, கரூர், கன்னியாகுமரி மற்றும் இன்றைய கேரள மாநிலத்தின் பகுதிகள் |
| சோழ நாடு – தஞ்சை, திருவாரூர், நாகை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்கள் |
| பாண்டிய நாடு – மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, திருநெல்வேலி உள்ளிட்ட தென் மாவட்டங்கள் |
| தொண்டை நாடு – காஞ்சிபுரம். திருவள்ளுர், தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தின் வடக்குப் பகுதி. |

- வேளாண்மைச் சமூகத்தில் நீர் மேலாண்மைக்கு முதன்மையான இடம் உண்டு. காஞ்சி நகரைச் சுற்றிலும் நுற்றுக்கணக்கான ஏரிகள் வெட்டப்பட்டு நீர் தேக்கி வைக்கப்பட்டது. இந்த ஏரிகள் கால்வாய்களுடன் இணைக்கப்பட்டிருந்தன. இன்றும் காஞ்சிபுரம் ‘ஏரிகளின் மாவட்டம்’ என்று அழைக்கப்படுவதை நாம் அறிவோம். சோழர்களால் கட்டப்பட்ட கல்லணை, காஞ்சிபுரத்தைச் சுற்றிலும் உள்ள ஏரிகள் மற்றும் கால்வாய்கள் மூலம் தமிழர்களின் நீர் மேலாண்மைத் திறனை அறிந்து கொள்கிறோம்.

| |
|---|
| சோழ நாடு – சோறுடைத்து |
| பாண்டியநாடு – முத்துடைத்து |
| சேரநாடு – வேழமுடைத்து |
| தொண்டைநாடு – சான்றோருடைத்து |

- “பூம்புகார், மதுரை, காஞ்சி ஆகிய இம மூன்று நகரங்கள் மட்டுமல்லாமல் கொற்கை, வஞ்சி, தொண்டி, உறையூர், தகடூர், முசிறி, கருவூர், மாமல்லபுரம், தஞ்சை, காயல் போன்ற நகரங்களும் தமிழ்நாட்டில் இருந்துள்ளன. இங்கெல்லாம் ஆய்வுகள் மேற்கொள்வதன் வழியாக இன்னும் ஏராளமான தொல்லியல் சான்றுகளைக் கண்டறிய முடியும்.

# 6TH–Term 3வரலாறு

## அலகு – 1 பண்டைக்காலத் தமிழகத்தில் சமூகமும் பண்பாடும் சங்க காலம்

**சங்க காலம்**:

சங்கம் என்னும் சொல் மதுரைப் பாண்டிய அரசர்களின் ஆதரவில் தழைத்தோங்கிய தமிழ்ப் புலவர்களின் குழுமத்தைச் சுட்டுகிறது. இப்புலவர்கள் இயற்றிய பாடல்கள் மொத்தமாகச் சங்க இலக்கியம் என அறியப்படுகிறது. இப்பாடல்கள் இயற்றப்பட்ட காலம் சங்க காலம் என அழைக்கப்படுகிறது.

| |
|---|
| ஆறுமுக நாவலர் (யாழ்ப்பாணம்) தாமோதரம் பிள்ளை (யாழ்ப்பாணம்) உ.வே. சாமிநாத அய்யர் ஆகியோர் அரும்பாடுபட்டு பனையோலைகளில் எழுதப்பட்டிருந்த தமிழ் செவ்வியல் இலக்கியங்களையும் பண்டைக்காலத் தமிழ் நூல்களையும் மீட்டு வெளியிடுவதில் பல ஆண்டுகளைச் செலவிட்டனர். |

**சான்றுகள்:**

| | |
|---|---|
| கல்வெட்டுகள் | கலிங்கநாட்டு அரசன் காரவேலனுடைய ஹதிகும்பா கல்வெட்டு, புகளூர் (கரூர்க்கு அருகே) கல்வெட்டு, அசோகருடைய இரண்டு மற்றும் பதிமூன்றாம் பேராணைக் கல்வெட்டுக்கள் மேலும் மாங்குளம், அழகர் மலை, கீழவளவு ஆகிய ஊர்களிலுள்ள (இவ்வூர்கள் அனைத்தும் மதுரைக்கு அருகேயுள்ளன) கல்வெட்டுகள். |
| செப்புப் பட்டயங்கள் | வேள்விக்குடி மற்றும் சின்னமானூர் செப்பேடுகள் |
| நாணயங்கள் | சங்க காலத்தைச் சேர்ந்த சேர, சோழ பாண்டிய அரசர்களாலும், குறுநில மன்னர்களாலும் வெளியிடப்பட்ட நாணயங்களும், ரோமானிய நாணங்களும் |
| பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் | புதைவிடங்கள், நடுகற்கள் |
| அகழ்வாய்விலிருந்து பொருட்கள் கிடைத்த இடங்கள் | அதிச்சநல்லூர், அரிக்கமேடு, கொடுமணல், புகார், கொற்கை, அழகன்குளம், உறையூர் |
| இலக்கியச் சான்றுகள் | தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்கணக்கு, பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி ஆகியவை சிலப்பதிகாரம் - மணிமேகலை ஆகிய காப்பியங்கள் |
| அயல்நாட்டவர் குறிப்புகள் | எரித்தியக்கடலின் பெரிப்ளஸ் (The Periplus of Erythrean Sea) பிளினியின் இயற்கை வரலாறு (Natural History) தாலமியின் புவியியல் (Geography) மெகஸ்தனிஸின் இண்டிகா, ராஜாவளி, மகாவம்சம், தீபவம்சம் ஆகியன |

| |
|---|
| தொல்காப்பியம் ஒரு தமிழ் இலக்கண நூலாகும். அது சங்க காலத் தமிழ் மக்களின் மொழி, பாண்பாடு ஆகியவற்றின் உயர் தரத்தைச் சுட்டிக்காட்டுகிறது. |

| | |
|---|---|
| கால அளவு | கி.மு. (பொ.ஆ.மு) 3 ஆம் நூற்றாண்டு முதல் 3 ஆம் நூற்றாண்டு வரை |
| தமிழகத்தின் புவியியல் பரப்பு | வடக்கே வேங்கடம் (திருப்பதி) முதல் தெற்கே கன்னியாகுமரி வரை, கிழக்கிலும், மேற்கிலும் கடல்களை எல்லைகளாகக் கொண்டிருந்தது. |
| காலம் | இரும்புக் காலம் |
| பண்பாடு | பெருங்கற்காலப் பண்பாடு |
| அரசு முறை | முடியாட்சி |

| | |
|---|---|
| ஆட்சி புரிந்த அரச வம்சங்கள் | சேரர், சோழர், பாண்டியர் |

| |
|---|
| கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் தமிழ்மொழிப் பேராசிரியர் ஜார்ஜ் எல் ஹார்ட் என்பார் தமிழ்மொழியானது இலத்தீன் மொழியின் அளவிற்குப் பழமையானது எனும் கருத்தைக் கொண்டுள்ளார். ஏனைய மொழிகளின் செல்வாக்கிற்கு உட்படாமல் முற்றிலும் சுதந்திரமான ஒரு மரபாக அது உருபெற்று எழுந்துள்ளது என அவர் கூறுகிறார். |

**சேரர்:**

சங்க காலத்தின்போது மூவேந்தர்கள் தமிழகப் பகுதிகளைக் ஆட்சி புரிந்தனர். வேந்தர் எனும் சொல் சேரர், சோழர், பாண்டியர் அகியோரைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. சேரர்கள் தமிழகத்தைச் சேர்ந்த மத்திய மற்றும் வடக்குத் திருவிதாங்கூர், கொச்சி, தெற்கு மலபார், கொங்கு மண்டலம் ஆகியற்றை ஆண்டனர். பதிற்றுப்பத்து சேர அரசர்கள் குறித்த செய்திகளை வழங்குகின்றன. சேர அரசன் செங்குட்டுவன் வட இந்தியாவின் மீது படையெடுத்துச் சென்றார். சிலப்பதிகாரக் காவியக் பாத்திரமான கண்ணகிக்கு சிலை எடுப்பதற்காக அவர் இமயமலையிலிருந்து கற்களைக் கொண்டுவந்தார் எனத் தெரியவந்துள்ளது. பத்தினித் தெய்வவழிபாட்டை அவர் அறிமுகம் செய்தார். இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவனின் தம்பியாவார். அவர்தான் சிலப்பதிகாரத்தின் ஆசிரியர். சேரல் இரும்பொறை எனும் அரசன் தனது பெயரில் நாணயங்களை வெளியிட்டார். சில சேர நாணயங்களில் அவர்களின் சின்னமான வில்லும் அம்பும் பொறிக்கப்பட்டுள்ளன.

**சோழர்:**

சங்க காலத்தில் சோழ அரசு வேங்கட மலைகள் வரை விரிந்திருந்தது. காவிரி கழிமுகப்பகுதி சோழ நாட்டின் மையப் பகுதியாக விளங்கியது. இப்பகுதி பின்னர் சோழ மண்டலம் என அறியப்பட்டது. சோழ அரசர்களில் மிகவும் புகழ் பெற்றவர் கரிகால் வளவன் அல்லது கரிகாலன் ஆவார். அவர் தன்னை எதிர்த்த சேரர், பாண்டியர் மற்றும் அவர்களை ஆதரித்த பதினொன்று வேளிர் தலைவர்களின் கூட்டுப்படையைத் தஞ்சாவூர் பகுதியில் உள்ள வெண்ணி எனும் சிற்றூரில் தோற்கடித்தார்.

அவர் காடுகளை விளைநிலங்களாக மாற்றினார். வேளாண்மையை மேம்படுத்துவதற்காகக் காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டினார். சோழர்களின் துறைமுகமான புகார் இந்தியப் பெருங்கடலின் பல பகுதிகளிலிருந்து வணிகர்களை அதன்பால் ஈர்த்தது. பட்டினப்பாலை எனும் பதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்த நூல், கரிகாலனின் ஆட்சியின்போது அங்கு நடைபெற்ற வணிக நடவடிக்கைகள் பற்றிய விரிவான செய்திகளை வழங்குகிறது.

| |
|---|
| **கல்லணை:** |
| இது கற்களால் கட்டப்பட்ட தடுப்பணை ஆகும். பாசனத்திற்காகக் கழிமுகப் பகுதி வழியாக நீரைத் திருப்பிவிடுவதற்காக காவிரி ஆற்றின் குறுக்கே இவ்வணை கட்டப்பட்டது. கல்லணை கட்டப்பட்ட போது 69,000 ஏக்கர் நிலத்திற்கு அது நீர்ப்பாசன வசதியை வழங்கியது. |

| |
|---|
| **முக்கியத்துவம் வாய்ந்த சோழ அரசர்கள்:** |
| இளஞ்சேட்சென்னி |
| கரிகால் வளவன் |
| கோச்செங்கணான் |
| கிள்ளிவளவன் |

**பாண்டியர்கள்:**

பாண்டியர் இன்றைய தென்தமிழகத்தை ஆட்சி செய்தனர். பாண்டிய அரசர்கள் தமிழ்ப்புலவர்களையும் அறிஞர்களையும் ஆதரித்தனர். பல பாண்டிய அரசர்களின் பெயர்கள் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நெடுஞ்செழியன் மிகவும் புகழ்பெற்ற போர்வீரராகப் போற்றப்படுகிறார். அவர் தலையாலங்கானம் என்னுமிடத்தில் சேரர்,சோழர், ஐந்து வேளிர்குலத் தலைவர்கள் ஆகியோரின் கூட்டுப்படையைத் தலையாலங்கானம் என்னுமிடத்தில் தோற்கடித்தார். அவர் கொற்கையின் தலைவன் எனப் போற்றப்படுகின்றார். பாண்டிய நாடு முத்துக்குளிப்புக்குப் புகழ் பெற்றதாகும். பாண்டிய அரசர்கள் பல நாணயங்களை வெளியிட்டனர். அவர்களின் நாணயங்கள், ஒருபுறத்தில் யானையின் வடிவத்தையும் மற்றொருபுறத்தில் மீனின் உருவத்தையும் கொண்டுள்ளன. முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டிய அரசர் பல வேதவேள்விகளை நடத்தியதைக் கொண்டாடும் விதமாக நாணயங்களை வெளியிட்டார்.

**மூவேந்தர்கள் சூட்டிக்கொண்ட பட்டங்கள்:**

| சேரன் | சோழன் | பாண்டியன் |
|---|---|---|
| ஆதவன்<br>குட்டுவன்<br>வானவன்<br>இரும்பொறை | சென்னி<br>செம்பியன்<br>கிள்ளி<br>வளவன் | மாறன்<br>வழுதி<br>செழியன்<br>தென்னர் |

| முக்கியத்துவம் வாய்ந்த பாண்டிய அரசர்கள்: |
|---|
| நெடியோன்<br>நன்மாறன்<br>முதுகுடுமிப் பெருவழுதி<br>நெடுஞ்செழியன் |

**அரசுரிமைச் சின்னங்கள்:**

செங்கோல் (Scepter), முரசு (Drum) வெண்கொற்றக்குடை (White umbrella) ஆகியன அரசு அதிகாரத்தின் சின்னங்களாகும்.

| மூவேந்தர் | மாலை | துறைமுகம் | தலைநகர் | சின்னம் |
|---|---|---|---|---|
| சேரர் | பனம்பூ மாலை | முசிறி ∴ தொண்டி | வஞ்சி / கரூர் | <br>வில், அம்பு |
| சோழர் | அத்திப்பூ மாலை | புகார் | உறையூர் / புகார் | <br>புலி |
| பாண்டியர் | வேப்பம்பூ மாலை | கொற்கை | மதுரை | <br>இரண்டு மீன்கள் |

**குறுநிலமன்னர்கள் ஆய்,வேளிர், கிழார்:**

முடிசூடிய இம்மூன்று அரசர்களைத் தவிர, பல சுதந்திரமான, நெஞ்சுரம் மிக்க சிறிய குறுநிலமன்னர்களும் இருந்தான். ஆய் என்னும் பெயர் பழந்தமிழச் சொல்லான ஆயர் (பொருள் : ஆதிரை மேய்ப்போர்) என்ற சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். சங்க காலத்து ஆய் மன்னர்களில் முக்கியமானவர்களின் பெயர்கள் அந்திரன், திதியன், நன்னன் ஆகியனவாகும்.

வேளிர்கள் - வேளாளர் - பண்டைய காலத் தமிழகத்தில் ஆட்சி செய்த நிலவுடைமைப் பிரிவினர் ஆவர். புகழ்பெற்ற வேளிர்கள் கடையெழு வள்ளல்களான பாரி, காரி, ஓரி,

பேகன்,ஆய், அதியமான், நள்ளி ஆகியோராவர். அவர்கள் தமிழ்ப்புலவர்களைப் பெருத்தன்மையுடன் தாராளமாக ஆதரித்தமைக்காகப் புகழப்பட்டவர்கள் ஆவர்.

கிழார் என்பவர் கிராமத் தலைவர் ஆவார்.

**சங்க காலம் ஆட்சியமைப்பு**
**அரசுரிமை:**

அரசுரிமை பரம்பரையானது அரசர் 'கோ' என அழைக்கப்பட்டார். அது கோன் எனும் சொல்லின் சுருக்கமாகும். வேந்தன், கோன், மன்னன், கொற்றவன், இறைவன் எனும் வேறு பெயர்களாலும் அரசர் அழைக்கப்பட்டார். பொதுவாக ஆட்சி புரிந்துகொண்டிருக்கும் அரசரின் மூத்தமகனே அடுத்து அரியணை ஏறினார். பட்டம் சூட்டப்படும் விழா 'அசுக்கட்டிலேறுதல்' அல்லது முடிசூட்டுவிழா எனப்பட்டது. பட்டத்து இளவரசர் கோமகன் எனவும் அவருக்கு இளையோர் இளங்கோ, இளஞ்செழியன், இளஞ்சேரல் எனவும் அழைக்கப்பட்டனர். அரசர் தினந்தோறும் அரசவையைக் (நாளவை) கூட்டினார். அங்கு அவர் விவாதங்களைச் செவிமடுத்து அனைத்து வழக்குகளையும் தீர்த்துவைத்தார். அரசின் வருமானம் வரிகள் மூலம் பெறப்பட்டன. நிலவரியே வருவாயின் முக்கிய அதாரமாகும். அது'இறை' என அழைக்கப்பட்டது. இதைத்தவிர அரசசு சுங்கவரி, கப்பம், அபராதம் ஆகியற்றையும் வசூல் செய்தது.

அரசர்களும் வீரர்களும் வீரக்கழல் அணிந்திருந்தனர். அதன்மீது அணிந்திருப்பவரின் பெயரும், அவரின் சாதனைகளும் பொறிக்கப்பட்டிருந்தன. ஒற்றர்கள் நாட்டுக்குள் நடப்பனவற்றவை மட்டுமல்லாமல் வெளிநாடுகளில் நடப்பனவற்றையும் தெரிந்துகொள்ளப் பயன்படுத்தப்பட்டனர்.

புறமுதுகில் காயமடைவது அவமானமாகக் கருதப்பட்டது. போரின்போது புதுமுதுகில் காயம்பட்டதற்காக அசரர்கள் சாகும்வரை உண்ணாவிரதமிருந்து உயிரை மாய்த்துக் கொண்ட நிகழ்வுகளும் நடந்தன.

**சபை:**

அரசருடைய சபை அரசவை என அழைக்கப்பட்டது. அரசர் 'அரியணை' என்றழைக்கப்பட்ட ஆசனத்தில் அமர்வது வழக்கம். அரசவையில் அரசரைச் சுற்றி அதிகாரிகள், சிறப்பு விருந்தினர்கள், அவைப்புலவர்கள் ஆகியோர் அமாந்திருந்தனர். அரசர்கள் ஐந்து விதக் கடமைகளைச் செய்தனர். கல்விகற்பதை ஊக்குவிப்பது, சடங்குகளை நடத்துவது, பரிசுகள் வழங்குவது, மக்களைப் பாதுகாப்பது, குற்றவாளிகளைத் தண்டிப்பது ஆகியன அவ்வைந்து கடமைகளாகும். தூதுவர்கள் அரசரால் பணியில் அமர்த்தப்பட்டனர். தூதுவர்கள் முக்கியமான பங்கு வகித்தனர். அரசருக்கு நிர்வாகத்தில் பல அதிகாரிகள் உதவி செய்தனர். அவர்கள் ஐம்பெருங்குழு (ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழு) எண்பேராயம் (எட்டு உறுப்பினர்களைக் கொண்ட குழு) என இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டடிருந்தனர்.

**படை:**

அரசருடைய படை என்ற அழைக்கப்பட்ட இராணுவம் நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தது. அவை காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை என்பனவாகும். படைத்தலைவர் 'தானைத் தலைவன்' என அழைக்கப்பட்டார். அக்காலப்பகுதியில் பயன்டுத்தப்பட்ட முக்கியமான ஆயுதங்கள் வாள்,கேடய், தோமாரம் (எறியீட்டி) ஈட்டி, வில், அம்பு ஆகியனவாகும். தோமாரம் எனப்படுவது சற்று தொலைவில் இருந்து எதிரியின் மீத ஏவுகணையைப் போன்று வீசப்படுவதாகும். ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்த இடம் 'படைக் கொட்டில்' என அழைக்கப்பட்டது. கோட்டைகள் அரண்களாலும் ஆழமான அகழிகளாலும் பாதுகாக்கப்பட்டன. போர்முரசம் கடவுளாகவே கருதி வணங்கப்பட்டது.

**சட்டமும் நீதியும்:**

அரசரே இறுதியான மேல்முறையீட்டு நீதிமன்றம் ஆவார். தலைநகரில் நீதிமன்றம் 'அவை' என்றழைக்கப்பட்டது. கிராமங்களில் 'மன்றங்கள்' என்பவை தீர்ப்பு வழங்கப்படும் இடங்களாயிருந்தன. உரிமையியல் (Civil) வழக்குகளில் பின்பற்றப்பட்ட வழிமுறையின் படி நாகப் பாம்பு இருக்கும் ஒரு பானைக்குள் வாதி தனது கையை நுழைக்க வேண்டும். நாகம் அவரைத் தீண்டினால் குற்றவாளியாகக் கருதப்பட்டு அவருக்கு தண்டனை வழங்கப்படும். பாம்பு அவரைத் தீண்டவில்லை எனில் அவர் குற்றமற்றவர் எனக் கருதப்பட்டு விடுவிக்கப்படுவார். தண்டனைகள் எப்போதும் கடுமையாகவே இருந்தன. திருட்டு வழக்குகளில் மரணதண்டனை வழங்கப்பட்டது. தலையைச் சீவுதல், உடல் உறுப்புக்களைத் துண்டித்தல், சித்திரவதை செய்வது, சிறையில் அடைப்பது, அபதாரம் விதிப்பது ஆகியவை குற்றங்களுக்காக வழங்கப்பட்ட தண்டனைகளாகும்.

**உள்ளாட்சி நிர்வாகம்:**

ஒட்டுமொத்த ஆட்சிப் பகுதியும் 'மண்டலம்' என்றழைக்கப்பட்டது. மண்டலங்கள் நாடுகளாகப் பிரிக்கப்பட்டன. நாடு பல கூற்றங்களாகப் (கூற்றம்) பிரிக்கப்பட்டன. ஊர் என்பது கிராமம் ஆகும். அவை பேரூர் (பெரிய கிராமம்), சிற்றூர் (சிறிய கிராமம்) மூதூர் (பழமையான கிராமம்) என அழைக்கப்பட்டன. கடற்கரையோர நகரங்களுக்குப் பட்டினம் எனப் பெயர் 'புகார்' என்பது துறைமுகங்களைக் குறிக்கும் பொதுவான சொல்லாகும்.

**முக்கிய நகரங்கள்:**

புகார், உறையூர், கொற்கை, மதுரை, முசிறி, வஞ்சி அல்லது கரூர், காஞ்சி ஆகியன

**திணை (நிலம்) சார்ந்த சங்க காலச் சமூகம்:**

நிலம் ஐந்து திணைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

மண்ணின் வளத்தைப் பொறுத்து நிலங்கள் வகைப்படுத்தப்பட்டன. மருதநிலம் 'மென்புலம்' (நன்செய்) என அழைக்கப்பட்டது. அதில் நெல்லும் கரும்பும் விளைந்தன. நெய்தல் தவிர மற்றவை 'வன்புலம்' (புன்செய்) என அழைக்கப்பட்டன. அவற்றில் தானியங்களும் பருப்பு வகைகளும் விளைந்தன.

| **திணை** | **நிலம்** | **தொழில்** | | |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடடும் | வேட்டையாடுதல் / சேகரித்தல் | குறவர், குறத்தியர் | முருகன் |
| முல்லை | காடும், காடு சார்ந்த இடமும் | ஆநிரை மேய்த்தல் | ஆயர், ஆய்ச்சியர் | மாயோன் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் | வேளாண்மை | உழவன், உழத்தியர் | இந்திரன் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த பகுதியும் | மீன் பிடித்தல் / உப்பு உற்பத்தி | பரதவர், நுளத்தியர் | வருணன் |
| பாலை | வறண்ட நிலம் | வீரச் செயல்கள் | மறவர், மறத்தியர் | கொற்றவை |

**பெண்களின் நிலை:**

சமூக வாழ்வில் பெண்களுக்குக் கட்டுப்பாடுகள் இல்லை. கற்றறிந்த, அறிவுக் கூர்மையுடைய பெண்கள் இருந்தனர். நாற்பது பெண்புலவர்கள் வாழ்ந்து அரியநூல்களை கொடுத்துச் சென்றுள்ளனர். திருமணம் சொந்த விருப்பத்தை சார்ந்து அமைந்திருந்தது. இருந்தபோதிலும் 'கற்பு' பெண்களின் மிகச் சிறந்த ஒழுக்கமாகக் கருதப்பட்டது. பெற்றோரின் சொத்துக்களில் மகனும். மகளும் சமமான பங்கைப் பெற்றிருந்தனர்.

| **சங்க காலப் பெண்பாற்புலவர்கள்:** |
|---|
| அவ்வையார். வெள்ளிவீதியார், காக்கைப் பாடினியார். ஆதி மந்தியார், பொன்முடியார். |

**மத நம்பிக்கைகள் மற்றும் சமூகப் பிரிவுகள்:**

மக்களின் முதன்மைக் கடவுள் சேயோன் அல்லது முருகன். சங்க காலத்தில் வழிபடப்படட ஏனைய கடவுளர் சிவன், மாயோன் (விஷ்ணு), இந்திரன், வருணன் கொற்றவை ஆகியோராவர். நடுகல் வழிபாடும் வழக்கத்தில் இருந்தது. பௌத்தமும் சமணமும் கூட உடனிருந்தன. வட பகுதிகளில் வளர்ந்திருப்பதைப் போன்று தமிழகத்தில் சாதிமுறை வளர்ந்திருக்கவில்லை. ஒப்பீட்டளவில் வர்ணாசிரம முறை திராவிடத் தென்னாட்டில் பின்னர் வந்ததே.

**வீரக்கல் / நடுகல்:**
பண்டைக்காலத் தமிழர்கள் போர்களத்தில் மரணமுற்ற வீரர்கள்மேல் பெரும்மரியாதை கொண்டிருந்தனர். போரில் மரணமடைந்த வீரனின் நினைவைப் போற்றுவதற்காக நடுகற்கள் நடப்பட்டன.



**உடை மற்றும் அணிகலன்கள்:**

பொருளாதார வசதிமிக்க மக்கள் மஸ்லின், பட்டு மற்றும் நேர்த்தியான பருத்தியிழைத் துணிகளிலால் ஆன ஆடைகளை அணிந்தனர். சாதாரண மக்கள் பருத்தியினாலான இரு துண்டுகளான ஆடைகளை அணிந்தனர். சங்க இலக்கியங்கள் பாம்பின் தோலைக் காட்டிலும் மென்மையான துணிகளைப் (கலிங்கம்) பற்றிக் குறிப்பிடுகின்றன. பெண்கள் தங்கள் சடைகளைப் பூக்களால் அலங்கரித்துக்கொண்டனர். ஆண்களும் பெண்களும் விதவிதமான அணிகலன்களை அணிந்தனர். அவை தங்கம், வெள்ளி, முத்துக்கள், நவரத்தினக் கற்கள், சங்கு, பாசிமணிகள் ஆகியவற்றால் செய்யப்பட்டிருந்தன.

**கலைகள்:**

பலவிதமான இசைக்கருவிகளான முரசு, புல்லாங்குழல், யாழ் போன்றவை பற்றிய பல குறிப்புகள் உள்ளன. கரிகாலன் இசையின் ஏழு ஸ்வரங்கள் குறித்து பெரும்புலமை பெற்றிருந்தான் ஏழிசை வல்லான்) பாடல்கள் பாடும் புலவர்கள் ‘பாணர்’,‘விறலியர்’ என அழைக்கப்பட்டனர். ‘கணிகையர்’ நடனங்களை நிகழ்த்தினர். கூத்து (நாட்டுப்புற நாடகம்) சங்ககால மக்களுயை மிக முக்கியமான பண்பாட்டு அம்சமாக விளங்கியது. அவர்கள் முத்தமிழ் எனும் கோட்பாட்டை உருவாக்கினர் (இயல், இசை, நாடகம்)

**தொழில்:**

மக்களின் மிக முக்கியமான தொழில்கள் வேளாண்மை, ஆநிரை மேய்த்தல், மீன்பிடித்தல், வேட்டையாடுதல் ஆகியவையாகும். மேலும் கைவினைத் தொழில் செய்வோரான தச்சர், கொல்லர், பொற்கொல்லர், மண்பாண்டம் செய்வோரும் இருந்தனர். நெசவு செய்வது விவசாயம் செய்வோரின் மிகப் பொதுவான பகுதிநேரத் தொழிலாகவும், பலருக்கு அன்றாட முழுநேரத் தொழிலாகவும் இருந்தது.

**விழாக்கள் மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகள்:**

மக்கள் பல்வேறு விழாக்களைக் கொண்டாடினார்கள். அறுவடைத் திருநாள் (பொங்கல்), கார்த்திகை தீப விழா ஆகியன அவற்றில் சிலவாகும். இந்திரவிழா தலைநகரில் கொண்டாடப்பட்டது. பல வேடிக்கை நிகழ்ச்சிகளும் விளையாட்டுகளும் நடைபெற்றன. நடனமாடுதல், எருதுச் சண்டை, சேவல் சண்டை, தாயமாடுதல், வேட்டையாடுதல், மல்யுத்தம் செய்தல், ஊஞ்சலாடுதல் ஆகியன அவற்றில் முக்கியமானவை ஆகும். குழந்தைகள் பொம்மை வண்டிகளோட்டியும், மணல்வீடு கட்டியும் விளையாடினர்.

**வணிகம்:**

வணிகம் உள்ளூர், உள்நாட்டில், கடல் கடந்து வெளிநாட்டில் என மூன்று நிலைகளில் நடைபெற்றது. இக்காலப்பகுதியில் தமிழகம் மேற்கொண்ட விரிவான மற்றும் இலாபகரமான வெளிநாட்டு வணிகம், தமிழ்மக்கள் மிகச் சிறந்த கடலோடிகள் என்பதை மெய்ப்பிக்கின்றது. கடற்கரையோரமாகப் பொருட்களைப் பாதுகாப்பாக வைப்பதற்காகப் சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டன. முக்கியத் துறைமுகங்களில் 'கலங்கரை இலங்குசுடர்' எனும் ஒளிவிளக்குக் கோபுரங்கள் இருந்தன.

வணிகர்கள் தங்கள் விற்பனைப் பொருட்களை பல இடங்களுக்கு எருதுகள் பூட்டிய கூண்டு வண்டிகளில் எடுத்துச் சென்றனர். பண்டமாற்று முறை பரவலாக வழக்கத்தில் இருந்தது. புகார், மதுரை போன்ற முக்கியமான நகரங்களில் இரண்டு வகையான சந்தைகள் இருந்தன. மதுரையில் 'நாளங்காடி' எனப்படும் காலைநேரச் சந்தையும் 'அல்லங்காடி' எனப்படும் மாலைநேரச் சந்தையும் இருந்துள்ளன. இச்சந்தைகளில் பல்வகைப்பட்ட பொருட்கள் பெரும் அளவில் விற்கப்பட்டன. வாங்கப்பட்டன.

**மலபார் கருமிளகு:**

எகிப்து அரசன் இரண்டாம் ராம்செஸின் பதப்படுத்தப்பட்ட உடல் திறக்கப்பட்ட போது, தொல்லியல் அறிஞர்கள் அவருடைய நாசியினுள்ளும் அடிவயிற்றிலும் கருமிளகுக்கதிர் அடைக்கப்பட்டிருந்ததைக் கண்டனர். (இவ்வாறு பதப்படுத்தி உடலைப் பாதுகாப்பது பண்டைய நாட்களில் பின்பற்றப்பட்ட முறையாகும்)

**முக்கியத் துறைமுகங்கள்:**

முசிறி, தொண்டி, கொற்கை

**முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள்:**

- உப்பு, மிளகு, முத்துக்கள், தந்தம், பட்டு, நறுமணப் பொருட்கள், வைரம், குங்குமப்பூ, விலைமதிப்பு மிக்க கற்கள், மஸ்லின், சந்தனக் கட்டை.

**முக்கிய இறக்குமதிப் பொருட்கள்:**

- புஷ்பராகம்,ஈயம், திராட்சைமது, கண்ணாடி, குதிரைகள்

இந்திய வணிகர்களால் ரோமப் பேரரசுக்கு விநியோகம் செய்யப்பட்ட பட்டு மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது. ரோமப்பேரரசர் ஆரிலியன் அந்தபட்டு, எடைக்கு எடை தங்கம் கொடுத்துப் பெற தகுதியானது என அறிவித்தார்.

**கடல்கடந்த நாடுகளுடன் வாணிகத் தொடர்பு:**

தமிழகத்திற்கும் கிரேக்கம், ரோம், எகிப்து, சீனா, தென்கிழக்காசியா, இலங்கை ஆகிய நாடுகளுக்குமிடையே வணிக உறவுகள் நிலவியதைத் தொல்லியல் அகழ்வாய்வுகள் மெய்ப்பித்துள்ளன.

**முசிறி – முதல் பேரங்காடி**

ரோம் நாட்டைச் சேர்ந்த மூத்த பிளினி தன்னுடைய இயற்கை வரலாறு (Natural History) எனும் நூலில் முசிறியை 'இந்தியாவின் முதல் பேரங்காடி' எனக் குறிப்பிட்டுள்ளார். ரோமானியரின் குடியிருப்பு இருந்த முசிறியில் அகஸ்டஸ் கடவுளுக்காகக் கோவிலொன்று கட்டப்பட்டிருந்தது.

கி.மு. (பொ.ஆ.மு) இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாப்பிரஸ் இலையில் எழுதப்பட்ட ஒரு ஒப்பந்தப் பத்திரத்தில் (வியன்னாவிலுள்ள அருங்காட்சியகத்தில் உள்ளது) அலெக்ஸாண்டிரியாவைச் சேர்ந்த வணிகர் ஒருவருக்கும் முசிறியைச் சேர்ந்த ஒரு வணிகருக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட வணிக ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**களம்பிரர்கள்:**

கி.பி. (பொ.ஆ) மூன்றாம் நூற்றாண்டுடின் இறுதியில் சங்ககாலம் படிப்படியாகத் தனது சரிவைச் சந்தித்தது. களப்பிரர்கள் தமிழகத்தைக் கைப்பற்றி இரண்டரை நூற்றாண்டுகள் ஆட்சி செய்தனர். களப்பிரர்களைப் பற்றி அறிய நமக்குக் குறைவான குறிப்புகளே கிடைத்து உள்ளன. அவர்கள் விட்டுச்சென்ற நினைவுச் சின்னங்கள், தொல்கலைப் பொருட்கள் என எதுவுமில்லை. ஆனால் அவர்களின் ஆட்சி குறித்து இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. இலக்கியச் சான்றுகள், தமிழ், நாவலர் சரிதை, யாப்பெருங்கலம், பெரியபுராணம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். சீவக சிந்தாமணி, குண்டலகேசி ஆகிய இரண்டும் இக்காலத்தில் எழுதப்பட்டவைகளாகும். தமிழகத்தில் பௌத்தமும், சமணமும் முக்கியத்துவம் பெற்ற காலம் அது சமஸ்கிரும், பிராகிருதம் ஆகிய மொழிகளின் அறிமுகத்தால் வட்டெழுத்து என்னும் புதிய எழுத்துமுறை உருவானது. பதினெண் கீழ் கணக்கைச் சேர்ந்த பல நூல்கள் இயற்றப்பட்டன. இக்காலத்தில் வணிகமும் வர்த்தகமும் தொடர்ந்து செழித்தோங்கின. எனவே களப்பிரர் காலமானது பொதுவாகச் சித்திரிக்கப்பட்டதைப் போன்று இருண்ட காலம் அல்ல.

, , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , ,

6ம் வகுப்பு
அலகு - 4
# தென்னிந்திய அரசுகள்

**தென்னிந்திய அரசுகள்:**

ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வடக்கே ஹர்ஷருடைய ஆட்சியின் சமகாலத்தில் தொலைதூரத் தென்பகுதிகள் காஞ்சிபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆண்ட பல்லவ அரசர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்திருந்தன. அவர்களின் ஆட்சிப்பகுதி சோழ, பாண்டிய அரசுகளின் பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருந்தது. சோழர்களும், பாண்டியர்களும் அப்போது தங்கள் பகுதிசார் ஆற்றுச் சமவெளிப் பகுதிகளில் ஆட்சி செய்யும் அரச வம்சங்களாக உருவாகிக் கொண்டிருந்தனர். மத்திய மற்றும் கிழக்குத் தக்காணத்தின் பெரும்பகுதி வாதாபிச் (பதாமி) சாளுக்கியர்களின் கீழிருந்தன. சாளுக்கியர்கள் பின்னர் ராஷ்டிரகூடர்களால் அங்கிருந்து புறம்தள்ளப்பட்டனர். பிராந்திய அதிகார மையங்களின் தோற்றமே இடைக்கால இந்தியாவின் பண்பம்சமாக இருந்தது. இந்தியாவின் பெரும்பான்மைப் பகுதிகளை அடக்கி ஆளக் கூடிய, மௌரியர் அல்லது குப்தர்களைப் போன்ற தனிப் பேரரசு சக்தி ஏதும் அப்போது இல்லை.

**பல்லவர்கள்:**

பல்லவ அரசர்கள் தென்கிழக்குக் கடற்கரைப் பகுதியில் முக்கிய வணிக மையமாகத் திகழ்ந்த காஞ்சிபுரத்தையும், அதன் வளம் நிறைந்த வேளாண்பகுதிகளையும் ஆண்டனர். சீன, ரோமாபுரி வணிகர்கள் காஞ்சிபுரத்தை நன்கு அறிந்திருந்தனர். வளம் கொழித்த வணிக மையமாக காஞ்சிபுரத்திலிருந்து பிற்காலப் பல்லவர்கள் தங்கள் அரசாட்சியை ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் தமிழகம் முழுவதும் விரிவடையச் செய்தனர். ஆனாலும் தொண்டை மண்டலமே பல்லவ அரசின் மையப்பகுதியாக இருந்தது. இப் பெரிய அரசியல் பிரந்தியம் தமிழ்நாட்டின் வட பகுதிகளையும் அருகே அமைந்திருந்த ஆந்திர மாவட்டங்களையும் கொண்டிருந்தது.

**சான்றுகள்:**

| | |
|---|---|
| கல்வெட்டுகள் | மண்டகப்பட்டு குகைக் கல்வெட்டு, இரண்டாம் புலிகேசியின் அய்கோல் கல்வெட்டு |
| செப்பேடுகள் | காசக்குடிச் செப்பேடுகள் |
| இலக்கியங்கள் | மத்தவிலாசப் பிரகசனம், அவந்தி சந்தரி கதை, கலிங்கத்துப்பரணி, பெரிய புராணம், நந்திக் கலம்பகம் |
| அயலவர் குறிப்புகள் | யுவான் சுவாங்கின் குறிப்புகள் |

**பல்லவ வம்சாவளி (முக்கிய அரசர்கள்):**

தொடக்ககாலப் பல்லவ அரசர்கள் சாதவாகனர்களின் கீழ் சிற்றசர்களாக இருந்தனர். இரண்டாமட் சிம்மவர்மனின் மகனான சிம்மவிஷ்ணு (கி.பி. (பொ.ஆ.மு) 550 வாக்கில்) களப்பிரர்களை அழித்து ஒரு வலுவான பல்லவ அரசை உருவாக்கினார். சோழர்கள், பாண்டியர்கள் உள்ளிட்ட பல தென்னக அரசர்களை அவர் வெற்றி கொண்டார். அவருடைய மகன் முதலாம் மகேந்திரவர்மன் மிகத் திறமை வாய்ந்த அரசராக விளங்கினார். அவருக்குப் பின் அவருடைய மகன் முதலாம் நரசிம்மவர்மன் ஆட்சிப் பொறுப்பேற்றார். இரண்டாம் நரசிம்மவர்மன் அதாவது ராஜசிம்மன், இரண்டாம் நந்திவர்மன் ஆகியோர் ஏனைய முக்கிய அரசர்கள் ஆவர். கடைசிப் பல்லவ மன்னர் அபராஜிதன் ஆவார்.

| |
|---|
| முதலாம் நரசிம்மவர்மனின் படைத்தளபதி பரஞ்சோதி, சிறுத்தொண்டர் (63 நாயன்மார்களில் ஒருவர்) எனப் பிரபலமாக அறியப்பட்டார். பரஞ்சோதி வாதாபிப் படையெடுப்பில் பல்லவர் படைக்குத் தலைமை ஏற்று நடத்தினார். அதன் வெற்றிக்குப் பின்னர் மனமாற்றம் பெற்ற அவர் சிவ பக்தராக மாறினார். <br> பெரியபுராணம் |

மகேந்திரவர்மன் (கி.பி. 600 – 630) பல்லவ ஆட்சியின் சிறப்புக்குப் பங்களிப்ப்ச செய்தார். தொடக்ககாலத்தில் அவர் சமண சமயத்தைப் பின்பற்றினார். பின்னர் சைவத் துறவி அப்பரால் (திருநாவுக்கரசர்) சைவத்தைத் தழுவினார். கலை மற்றும் கட்டடக்கலைக்கு அவர் பேராதரவு அளித்தார். திராவிடக் கட்டடக்கலைக்கு ஒரு புதிய பாணியை அறிமுகம் செய்தார். அது "மகேந்திரபாணி" எனக் குறிப்பிடப்படுகின்றது. மத்தவிலாசப்பிரகசனம் (குடிகாரர்களின் மகிழ்ச்சி) உட்பட சில நாடகங்களைச் சமஸ்கிருத மொழியில் எழுதியுள்ளார். இந்நாடகம் பௌத்தத்தை இழிவுபடுத்தும் வகையில் உள்ளது.

மகேந்திரவர்மனின் ஆட்சிக்காலத்தில் வாதாபியைச் தலைநகராகக் கொண்ட மேலைச் சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசியோடு தொடர்ந்து போர்கள் மேற்கொள்ளப்பட்டன. இப்போர்களுள் ஒன்றில் இரண்டாம் புலிகேசி மகேந்திர வர்மனை வெற்றி கொண்டு நாட்டின் வடக்கில் பெரும் பகுதியை (வெங்கி) கைப்பற்றியதாகத் தெரிகிறது. அவருடைய மகன் முதலாம்ட நரசிம்மவர்மன் (ஏறத்தாழ 630 – 668) இத்தோல்விக்குப் பழிவாங்கும் வகையில் சாளுக்கியரின் தலைநகரான வாதாபியைக் கைப்பற்றினார். வாதாபி தீக்கிரையாக்கப்பட்டது. இரண்டாம் புலிகேசியும் கொல்லப்பட்டார்.

இரண்டாம் நரசிம்மவர்மன் (ஏறத்தாழ 695 – 722) ராஜசிம்மன் எனவும் அழைக்கப்பட்டார். அவர் மாபெரும் வீரர் ஆவார். சீன அரசுக்கு தூதுக்குழுக்களை அனுப்பினார். சீனநாட்டின் தூதுக் குழுக்களை வரவேற்றார். ஒப்பீட்டளவில் அவரது காலத்தில் அரசியல் பிரச்சனைகள் அதிகம் இல்லாததால் அவரால் கோவில்களைக் கட்டுவதில் கவனம் செலுத்த முடிந்தது. காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவிலைக் கட்டியது அவரே.

| **அரசர்களின் பெயர்கள்** | **பட்டங்கள்** |
|---|---|
| சிம்ம விஷ்ணு | அவனிசிம்மர் |
| முதலாம் மகேந்திரவர்மன் | சங்கீரணஜதி, மத்தவிலாசன், குணபாரன், சித்திரகாரப் புலி, விசித்திர சித்தன் |
| முதலாம் நரசிம்மவர்மன் | மாமல்லன், வாதாபி கொண்டான் |

**கட்டடக் கலைக்குப் பல்லவர்களின் பங்களிப்பு:**

பல்லவர் காலம் கட்டடக்கலைச் சிறப்புகளுக்குப் பெயர் பெற்ற காலமாகும். மாமல்லபுரத்திலுள்ள ஒற்றைக் கருங்கல்லில் செதுக்கி உருவாக்கப்பட்ட கடற்கரைக் கோவிலும், ஏனைய கோவில்களும், வராகர் குகையும் (ஏழாம் நூற்றாண்டு) பல்லவக் கட்டடக் கலையின் ஈடு இணையற்ற அழகிற்கு எடுத்துக்காட்டுகளாகும். 1984 ஆம் ஆண்டு யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னங்கள் அட்டவணையில் மாமல்லபுரம் சேர்க்கப்பட்டது.

பல்லவர் கட்டடக் கலையை கீழ்க்காணுமாறு வகைப்படுத்தலாம்.

பாறைக் குடைவரைக் கோவில்கள் - மகேந்திரவர்மன் பாணி
குற்றைக்கல் ரதங்களும் சிற்ப மண்டபங்களும் - மாமல்லன் பாணி
கட்டுமானக் கோவில்கள் - ராஜசிம்மன் பாணி, நந்திவர்மன் பணி

**மகேந்திரவர்மன் பாணி:**

மகேந்திரவர்மன் பாணியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னங்களுக்கு மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, மாமண்டூர், தளவானூர், திருச்சிராப்பள்ளி, வல்லம், திருக்கழுக்குன்றம், சியாமங்கலம் ஆகிய இடங்களிலுள்ள குகைக் கோவில்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

**மாமல்லன் பாணி:**

மாமல்லபுரத்திலுள்ள பஞ்சபாண்டவர் ரதங்கள் எனப் பிரபலமாக அழைக்கப்படும் ஐந்து ரதங்கள் ஐந்து வகையான கோவில்கட்டட பாணியை உணர்த்துகின்றன. ஒவ்வொரு ரதமும் ஒவ்வொரு தனிக் கல்லிலிருந்து செதுக்கப்பட்டிருக்கின்றன. எனவே அவை ஒற்றைக்கல்

ரதங்கள் என அழைக்கப்படுகின்றன. மகிஷாசுர மர்த்தினி மண்டபம், திருமூர்த்தி மண்டபம், வராகர் மண்டபம் ஆகியவை அவர் கட்டியுள்ள பிரபலமான மண்டபங்களாகும்.

மாமல்லனின் கட்டக்கலைப் பாணியில் அமைந்துள்ளவற்றில் மிகவும் முக்கியமானது மகாபலிபுரத்திலுள்ள திறந்தவெளிக் கலையரங்கம் ஆகும். பெரும் பாறையொன்றின் சுவற்றில், பேன் பார்க்கும் குரங்கு, பெரிய வடிவிலான யானைகள், தவமிருக்கும் பூனை ஆகிய நுண்ணிய சிற்பங்கள் மிகவும் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. சிவபெருமானின் தலையிலிருந்து அருவியெனக் கொட்டும் கங்கைநதி, அர்ச்சுனன் தபசு ஆகியவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. பெருந்தவ வடிவச் சிற்ப வேலைப்பாடு உலகில் செதுக்கப்பட்ட திறந்தவெளிச் சிற்பங்களில் மிகப்பெரியதாகும்.

**ராஜசிம்மன் பாணி:**

ராஜசிம்மன் எனவும் அறியப்பட்ட இரண்டாம் நரசிம்மவர்மன் பெருங்கற்களைக் கொண்டு கட்டுமானக் கோவில்களைக் கட்டினார். காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோவில் கட்டுமானக் கோவில் கலைப் பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இக்கோவில்கள் மிருதுவான மணற் கற்களால் கட்டப்பட்டவையாகும். கைலாசநாதர் கோவில் ராஜசிம்மேஸ்வரம் என்று அழைக்கப்படுகிறது.

**நந்திவர்மன் பாணி:**

பல்லவ கோவில் கட்டக்கலையின் இறுதிக் கட்டம் பிற்காலப் பல்லவர்களால் கட்டப்பட்ட கட்டுமானக் கோவில்களால் பிரதிநித்துவப் படுத்தப்படுகின்றன. காஞ்சிபுரத்திலுள்ள வைகுண்டப்பெருமாள் கோவில் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**சமூகமும் பண்பாடும்:**

பல்லவ அரசர்கள் பௌத்த, சமண சமயங்களையும் வேத சமயத்தையும் ஆதரித்தனர். அவர்கள் இசை, ஓவியம், இலக்கியம் ஆகியவற்றின் புரவலர்களாய்த் திகழ்ந்தனர். பக்தி மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஆழ்வார்களும் நாயன்மார்களும் புதிய வடிவிலான சைவம், வைணவம் ஆகியவற்றைப் போதித்தனர். அவர்களைச் சில பல்லவ அரசர்கள் ஆதரித்தனர். அப்பரும், மாணிக்கவாசகரும், ஆண்டாளும் வைணவ அடியார்களாகவும் விளங்கினர். பக்தி மார்க்கத்தைப் போதிப்பதை நோக்கமாகக் கொண்ட இவ்வியக்கம் சமஸ்கிருதத்தை விடவும் தமிழுக்கு முன்னுரிமை வழங்கியது. சமயக் கூட்டங்களில் பங்கேற்க பெண்கள் ஊக்குவிக்கப்பட்டனர். தமிழ் பக்தி வழிபாடு பௌத்த, சமண சமயங்களுடன் போட்டிபோட்டது. இதன் விளைவாகப் பௌத்தமும் சமணமும் தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளிலிருந்து படிப்படியாக வீழ்ச்சியுற்றன.

**கல்வியும் இலக்கியமும்:**

- காஞ்சியிலிருந்த கடிகை (மடாலயம் அல்லது கல்வி மையம்) பல்லவர் காலத்தில் புகழ்பெற்று விளங்கியது. அது இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் மாணவர்களைத் தன்பால் ஈர்த்தது. நியாய பாஷ்யா எனும் நூலை எழுதிய வாத்ஸ்யாயர் காஞ்சிக் கடிகையில் ஆசிரியராக இருந்தார்.

- தென்னிந்திய ஓவியங்கள் குறித்த ஆய்வேடான தட்சிண சித்திரம் முதலாம் மகேந்திரவர்மனின் ஆட்சிக் காலத்தில் தொகுக்கப்பட்டது.

- மாபெரும் சமஸ்கிருத அறிஞரான தண்டின் முதலாம் நரசிம்மவர்மனின் அவையை அரங்கரித்தார். அவர் தசகுமார சரிதம் எனும் நூலை எழுதினார்.

- மற்றொரு சமஸ்கிருத அறிஞரான பாரவி சிம்மவிஷ்ணுவின் காலத்தில் வாழ்ந்தார். அவர் கிராதார்ஜுனியம் என்னும் வடமொழிக் காப்பியத்தை வடித்தார்.

- தமிழ் இலக்கியமும் வளர்ச்சி பெற்றிருந்தது. நாயன்மார்களால் இயற்றப்பட்ட தேவாரமும் ஆழ்வார்களால் படைக்கப்பட்ட நாலாயிர திவ்விய பிரபந்தமும் பல்லவர் காலத்தில் எழுதப்பட்ட சமய இலக்கியங்களாகும். இரண்டாம் நந்திவர்மனால்

ஆதரிக்கப்பட்ட பெருந்தேவனார் மகாபாரதத்தை, பாரத வெண்பா எனும் பெயரில் தமிழில் மொழிபெயர்த்தார்.

**பல்லவர்காலக் கலை:**

பல்லவ அரசர்கள் கவின்கலைகளையும் ஆதரித்தனர். குடுமியான்மலை, திருமயம் ஆகிய இடங்களிலுள்ள கோவில்களில் காணப்படும் இசை குறித்த கல்வெட்டுக்கள் இசையில் பல்லவர் கொண்டிருந்த ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றன. புகழ்பெற்ற இசைக் கலைஞரான ருத்ராச்சாரியர் முதலாம் மகேந்திரவர்மனின் காலத்தில் வாழ்ந்தவர். இக்காலப் பகுதியைச் சேர்ந்த பல சிற்பங்கள் நடனமாடும் வகையில் வடிக்கப்பட்டுள்ளன.

**சாளுக்கியர்:**

சாளுக்கியர் தென்னிந்தியாவின் மத்தியிலும் மேற்கிலும் மராத்திய நாட்டை உள்ளடக்கிய பெரும்பகுதியை ஆண்டனர். அவர்களின் தலைநகர் வாதாபி (பதாமி) சாளுக்கியர்களில் மூன்று வெவ்வேறு ஆனால் நெருங்கிய தொடர்புடைய, சார்பற்ற வம்சங்கள் இருந்தன.

**அவை :**

1. வாதாபிச் சாளுக்கியர்கள்
2. வெங்கிச் சாளுக்கியர்கள் (கீழைச் சாளுக்கியர்கள்)
3. கல்யாணிச் சாளுக்கியர்கள் (மேலைச் சாளுக்கியர்கள்)

வடக்கே ஹர்ஷரின் பேரரசும், தெற்கே பல்லவ நாடும், கிழக்கே கலிங்கமும் (ஒடிசா) சாளுக்கியர்களின் எல்லைகளாக இருந்தன.

**சான்றுகள்:**

| | |
|---|---|
| கல்வெட்டுகள் | மங்களேசனின் வாதாபி குகைக் கல்வெட்டு, காஞ்சி கைலாசநாதர் கோவில் கல்வெட்டு, பட்டடக்கல் விருப்பாக்ஷா் கோவில் கல்வெட்டு, முதலாம் புலிகேசியின் அய்கோல் கல்வெட்டு |
| அயலவர் குறிப்புகள் | யுவான் சுவாங்கின் குறிப்புகள் |

**வாதாபிச் சாளுக்கியர்:**

முதலாம் புலிகேசி, பிஜப்பூர் மாவட்டம் பட்டக்கல்லில் ஒரு குறுநில மன்னராக இருந்தார். கி.பி. (பொ.ஆ) 543 இல் வாதாபி மலைக்கோட்டையைக் கைப்பற்றி அதனைச் சுற்றி மதில் சுவர் எழுப்பினார். விரைவில் கிருஷ்ணா,

**அய்கோல் கல்வெட்டு:**



இக்கல்வெட்டு அய்கோலிலுள்ள (பாகல்கோட் மாவட்டம், கர்நாடகா) மேகுதி கோவிலில் உள்ளது. இது சாளுக்கிய அரசன் இரண்டாமட் புலிகேசியின் அவைக்களப் புலவரான ரவிகீர்த்தி என்பவரால் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டது. இக்கல்வெட்டு ஹர்ஷவர்த்தனர் இரண்டாம் புலிகேசியால் தோற்கடிக்கப்பட்டதைக் குறிப்பிடுகின்றது.

துங்கபத்ரா ஆகிய நதிகளுக்கு இடைப்பட்ட பகுதியையையும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளையும் கைப்பற்றினார். இவருடைய மகன் முதலாம் கீர்த்திவர்மன் (ஆட்சிக்காலம் கி.பி. (பொ.ஆ) 566 – 597) கொங்கணக் கடற்கரைப் பகுதியைச் சாளுக்கியரின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். இரண்டாம் புலிகேசி (ஆட்சிக்காலம் கி.பி. 610 – 642) இவ்வம்சத்தின் மிகவும் வலிமை பெற்ற அரசராவார். பாரசீக (ஈரான்) அரசர் இரண்டாம் குஸ்ரூ இரண்டாம் புலிகேசியின் அவைக்குத் தூதுக்குழு ஒன்றை அனுப்பிவைத்தார். குஜராத், மாளவன் ஆகியவற்றின் சில பகுதிகளைக் கைப்பற்றுவதிலும் புலிகேசி வெற்றி பெற்றார். இவர் வட இந்திய அரசர் ஹர்ஷருக்கு அடிபணிய மறுத்தார். இருவரும் ஒப்புக் கொண்டபுரிதலின்படி இருவருக்கும் இடையிலான எல்லையாக நர்மதை நதி வரையறை செய்யப்பட்டது. கி.பி. 624 காலப்பகுதியில் வெங்கி அரசைக் கைப்பற்றிய இரண்டாம் புலிகேசி அதைத் தன்னுடைய சகோதரர் விஷ்ணுவர்த்தனருக்கு வழங்கினார். விஷ்ணுவர்த்தனர் முதல் கீழைச் சாளுக்கிய அரசரானார்.

கி.பி. (பொ.ஆ) 641-647 காலப்பகுதியில் பல்லவர்கள் தக்காணத்தைச் சூறையாடி வாதாபியைக் கைப்பற்றினர். ஆனால் கி.பி. 655இல் சாளுக்கியர் அதனை மீட்டனர். முதலாம் விக்கிரமாதித்தனும் ஆட்சிக்காலம் (கி.பி. (பொ.ஆ) 655 – 680 அவருக்குப் பின்வந்த இரண்டாம் விக்கிரமாதித்னும் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றினர். ஆனால் நகரைச் சேதப்படுத்தவில்லை. இவருக்குப் பின்னர் அரச பதவியேற்ற இரண்டாம்ட கீர்த்திவர்மனை ராஷ்டிரகூட வம்ச அரசை நிறுவிய தந்திதுர்க்கா போரில் தோற்கடித்தார்.

**கல்யாணி மேலைச் சாளுக்கியர்:**

இவர்கள் வாதாபிச் சாளுக்கியரின் வழித்தோன்றல்கள் ஆவர். கல்யாணியைத் (தற்போதைய பசவ கல்யாண்) தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். இரண்டாம் தைலப்பர் என்பவர் ராஷ்டிரகூடர்களின் சிற்றரசராக பிஜப்பூர் பகுதியை ஆண்டுவந்தார். இவர் கி.பி. (பொ.ஆ) 973 இல் மாளவ அரசர் பராமரரைத் தோற்கடித்து கல்யாணியைக் கைப்பற்றினார். இவருடைய வம்சம் முதலாம் சோமேஸ்வரின் ஆட்சியின் போது பேரரசாக வேகமாக வளர்ச்சி பெற்றது. முதலாம் சோமேஸ்வரர் தலைநகரை மன்யகேட்டாவிலிருந்து கல்யாணிக்கு மாற்றினார்.

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக தென்னிந்தியாவிலிருந்த இரண்டு பேரரசுகளான மேலைச் சாளுக்கியர்களும் தஞ்சாவூர்ச் சோழர்களும் வளம் நிறைந்த வெங்கியைக் கைப்பற்றுவதற்காகக் கடுமையாகக் போரிட்டுக்கொண்டனர். பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆறாம் விக்கிரமாதித்யரின் காலத்தில் வடக்கே நர்மதை ஆற்றுக்கும், தெற்கே காவேரி ஆற்றுக்கும் இடைப்பட்ட பெரும்பகுதி சாளுக்கியரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

**கலை மற்றும் கட்டடக்கலைக்குச் சாளுக்கியரின் பங்களிப்பு:**
**சாறுக்கியரின் பங்களிப்பு**

சாளுக்கியர்கள் சைவம், வைணவம் ஆகியவற்றின் ஆதரவாளர்களாகக் கலை மற்றும் கட்டடக்கலைத் துறைகளுக்குச் சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளனர். வெசாரா பாணியிலான கோவில் விமானங்களைக் கட்டும் முறை வளர்ச்சி பெற்றது. இது தென் இந்திய (திராவிட) மற்றும் வட இந்திய (நாகாரா) கட்டடப் பாணிகளின் கலப்பு ஆகும். சாந்து இல்லாமல் கற்களை மட்டுமே கொண்டு கட்டிடங்களைக் கட்டும் தொழில்நுட்பத்தை அவர்கள் மேம்படுத்தினர். அவர்கள் கட்டுமானத்திற்கு மிருதுவான மணற்கற்களைப் பயன்படுத்தினர்.

சாளுக்கியர்கள் பெரும் எண்ணிக்கையிலான குடைவரைக் குகைக் கோவில்களையும், கட்டுமானக் கோவில்களையும் கட்டி சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய கடவுளர்களுக்கு அர்ப்பணித்தனர். சாளுக்கியர்களின் கட்டுமானக் கோவில்கள் அய்கோல், வாதாபி, பட்டடக்கல் ஆகிய இடங்களில் உள்ளன. வாதாபி மற்றும் அய்கோலிலுள்ள விஷ்ணு கோவில்கள் பிஜப்பூர் மாவட்டம் பட்டடக்கல்லிலுள்ள விருப்பாக்ஷா கோவில் ஆகியன கற்களால் கட்டப்பட்ட கோவில்களாகும். வாதாபியிலுள்ள விஷ்ணு கோவில் சாளுக்கிய வம்சத்தைச் சேர்ந்த மங்களேசனால் கட்டப்பட்டது. இரண்டாம் விக்கிரமாதித்தனுடைய அய்கோல் கல்வெட்டு அங்குள்ளது. அவர்களின் குகைக்கோவில்கள் அஜந்தா, எல்லோரா, நாசிக் ஆகிய இடங்களில் உள்ளன.

வாதாபியிலுள்ள குகைக் கோவில்களில் சேஷநாகர் மீது சாய்ந்திருக்கும் விஷ்ணு, விஷ்ணுவின் வராக, நரசிம்ம, (பாதி சிங்கம் - பாதி மனிதன்) வாமன (குள்ள) அவதாரங்கள்

நேர்த்திமிக்க சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. லக்கண்டியிலுள்ள காசி விஸ்வேஸ்வரர் கோவில். குருவட்டியிலுள்ள மல்லிகார்ஜுனா கோவில், பகலி என்னுமிடத்திலுள்ள கள்ளேஸ்வரர் கோவில், இட்டகியிலுள்ள மகாதேவ கோவில் ஆகியவை கல்யாணி மேலைச் சாளுக்கியரின் கட்டிடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

ஓவியங்களில் சாளுக்கியர் வாகடகர் பாணியைப் பின்பற்றினர். அஜந்தா குகைகளில் காணப்படும் சில சுவரோவியங்கள் சாளுக்கியர் காலத்தைச் சேர்ந்தவை, பாரசீகத் தூதுக்குழுவை இரண்டாம் புலிகேசி வரவேற்பது போன்ற தொரு காட்சி அஜந்தா ஓவியமொன்றில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

பட்டடக்கல் - யுனெஸ்கோ உலகப்பாரம்பரியச் சின்னம். பட்டடக்கல் கர்நாடக மாநிலம் பாகல்கோட் மாவட்டத்திலுள்ள ஒரு சிற்றூர் ஆகும். அங்கு 10 கோவில்கள் உள்ளன. இவற்றில் நான்கு வட இந்திய பாணியான நாகாரா பாணியிலும் மற்றுமுள்ள ஆறு தென்னிந்திய திராவிட பாணியிலும் கட்டப்பட்டுள்ளன. விருப்பாக்ஷா கோவிலும் சங்கமேஸ்வரா கோவிலும் திராவிடப் பாணியிலும் பாப்பநாதர் கோவில் நாகாரா பாணியிலும் அமைந்துள்ளன. விருப்பாக்ஷா கோவில் காஞ்சி கைலாசநாதர் கோவிலை மாதிரியாக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இக்கட்டுமானப் பணியில் காஞ்சிபுரத்திலிருந்து வரவழைக்கப்பட்ட சிற்பிகள் ஈடுபடுத்தப்பட்டனர்.

**ராஷ்டிரகூடர்கள்**

ராஷ்டிரகூடர்கள் தக்காணத்தை மட்டுமல்லாது, தூரத் தெற்குப் பகுதிகளையும் கங்கை சமவெளிப்பகுதிகளையும் எட்டாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை ஆட்சி புரிந்தனர். அவர்கள் பிறப்பால் கன்னடர்களாவர். அவர்களின் தாய்மொழி கன்னடம் கன்னடம். தந்திதுர்க்கர் ராஷ்டிரகூட வம்சத்தை நிறுவியவர் ஆவர். அவர் வாதாபிச் சாளுக்கியரிடம் உயர் அதிகாரியாகப் பணியாற்றியவர். முதலாம் கிருஷ்ணர் தந்திதுர்க்கரை அடுத்துப் பதவி ஏற்றார். அவர் ராஷ்டிரகூடர் ஆட்சியை ஒருங்கிணைத்து விரிவுபடுத்தினார். அவர் கலை மற்றும், கட்டிடக்கலையின் பெரும் ஆதரவாளர் ஆவார். எல்லோராவிலுள்ள கைலாசநாதர் கோவில் இவர் கட்டயதாகும்.

**ராஷ்டிரகூட அரசர்கள்:**

ராஷ்டிகூட அரசர்களில் தலைசிறந்த அரசர் அமோகவர்ஷர், அவர் மான்யக்கோட்டாவில் (தற்போது கர்நாடகாவில் உள்ள மால்கெட்) புதிய தலைநகரை உருவாக்கினார். புரோச், அவர்களின் துறைமுகமானது. அமோகவர்ஷர் (கி.பி. 814 – 878) ஜினசேனா எனும் சமணத் துறவியால் சமண மதத்திற்கு மாற்றப்பட்டார். அமோகவர்ஷருக்குப் பின்னர் அவரது மகன் இரண்டாம் கிருஷ்ணர் அரசரானார். கி.பி, 916 அவர் பராந்தகச் சோழனால் வல்லம் (தற்போதைய திருவல்லம், வேலூர் மாவட்டம்) போர்களத்தில் தோற்கடிக்கப்பட்டார். மூன்றாம் கிருஷ்ணர் ராஷ்டிரகூட வம்சத்தின் திறமை வாய்ந்த கடைசி அரசனாவார். இவர் சோழர்களைத் தக்கோலம் (தற்போதைய வேலூர் மாவட்டத்தில் உள்ளது) போர்க்களத்தில் தோற்கடித்துத் தஞ்சாவூரைக் கைப்பற்றினார். மூன்றாம் கிருஷ்ணரின் கீழ் சாளுக்கியர் கன்னோசியைக் கைப்பற்றுவதற்காக ஏனைய வட இந்திய அரசர்களோடு போட்டியிட்டனர். அவர் இராமேஸ்வரத்தில் கிருஷ்ணேஸ்வரா கோயிலைக் கட்டினார். நாட்டைச் சரியான முறையில் வைத்திருந்த கடைசி அரசர் மூன்றாம் கோவிந்தனாவார். அவருக்குப் பின் ராஷ்டிரகூடரின் அதிகாரம் வீழ்ந்தது.

**இலக்கியம், கலை. கட்டடக்கலை ஆகியவற்றுக்கு ராஷ்டிரகூடர்களின் பங்களிப்பு**
**இலக்கியம்:**

கன்னட மொழி பெருமளவு முக்கியத்துவம் பெற்ற மொழியானது. அமோகவர்ஷரால் இயற்றப்பட்ட கவிராஜ மார்க்கம் கன்னட மொழியின் முதல் கவிதை நூலாகும். அரசவைப் புலவர்கள் கன்னட மொழியில் சிறந்த நூல்களை எழுதினர். இக்காலப் பகுதியின் கன்னட இலக்கியயத்தின் மூன்று ரத்தினங்கள் எனக் கருதப்படுபவர்கள் ஆதிகவி பம்பா, ஸ்ரீ பொன்னா, ரன்னா ஆகியோராவர்.. ஆதிகவி பம்பா அவரது நூற்களான ஆதிபுராணம், விக்கிரமார்ஜுன விஜயம் ஆகியவற்றிற்காகப் பெரும்புகழ் பெற்றவர் முதல் சமணத் தீர்த்தங்கரான ரிஷபதேவரின் வாழ்க்கையை ஆதிபுராணம் சித்திரிக்கின்றது. விக்கிரமார்ஜுனவிஜயம் மஹாபாரதத்தின் மீள்

தருகையாகும். இதில் தன்னை ஆதரித்த சாளுக்கிய அரிகேசரியை அர்சுனனின் பாத்திரத்தில் பொருத்தி பம்பா எழுதியுள்ளார்.

**கலை மற்றும் கட்டடக்கலை:**

இந்தியக் கலைக்கு ராஷ்டிரகூடர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளனர். ராஷ்டிரகூடர்களின் கலை மற்றும் கட்டிடக்கலைச் சாதனைகளை எல்லோராலும் எலிபெண்டாவிலும் காணலாம்.

**கைலாசநாதர் கோவில் - எல்லோரா (மகாராஷ்டிராவிலுள்ள ஔரங்காபாத் அருகில்)**

எல்லோராவின் குன்றுப்பகுதியில் அமைந்துள்ள முப்பது குடைவரைக் கோவில்களில் கைலாசநாதர் கோவிலும் ஒன்று. முதலாம் கிருஷ்ணருடைய ஆட்சிக் காலத்தில் இக்கோவில் உருவாக்கப்பட்டது. இக்கோவில் அதன் கட்டடக்கலை பிரமாண்டத்திற்கும் சிற்பங்களின் அற்புதங்களுக்கும் பெயர் பெற்றதாகும். இக்கோவில் 60,000 சதுர அடிகள் பரப்பளவைக் கொண்டுள்ளது. இதனுடைய விமானத்தின் (கோபுரம்) உயரம் 90 அடிகளாகும். இக்கோவில் மாமல்லபுரம் கடற்கரைக் கோவிலின் சாயலைப் பெற்றுள்ளது. கைலாசநாதர் கோவில் திராவிடக் கட்டடக்கலைக் கூறுகளைக் கொண்டுள்ளது.

**எலிபெண்டா தீவு:**

இத்தீவின் இயற்பெயர் ஸ்ரீபுரி – உள்ளூர் மக்களால் காரபுரி என்று அழைக்கப்படுகிறது. எலிபெண்டா மும்பைக்கு அருகிலுள்ள ஒரு தீவு ஆகும். இத்தீவிலுள்ள பெரிய யானையின் உருவத்தைக் கண்ணுற்ற போர்த்துகீசியர்கள், இத்தீவுக்கு எலிபெண்டா தீவு எனப் பெயரிட்டனர். எலிபெண்டா குகையிலுள்ள திரிமூர்த்தி (மூன்று முகங்கள் கொண்ட) சிவன் சிலையின் வனப்பு ஈடு இணையற்றதாகும். கோவிலின் நுழைவாயிலில் காணப்படும் துவாரபாலகர்களின் சிலைகள் நமது கண்ணையும் கருத்தையும் கவர்பவை.

**பட்டடக்கல்:**

பட்டடக்கல் வளாகத்தில் ராஷ்டிரகூடர்கள் கோவில்களைக் கட்டியுள்ளனர். இங்குச் சமண நாராயணர் கோவிலும் காசிவிஸ்வேஸ்வரர் கோவிலும் ராஷ்டிரகூடர்களால் கட்டப்பட்டுள்ளன.

7 ம் வகுப்பு
அலகு–III

### தென்இந்தியப் புதிய அரசுகள் பிற்காலச் சோழர்களும், பாண்டியர்களும்

1. பிற்காலச் சோழர்கள்

**அறிமுகம்**

தென்னிந்திய வரலாற்றில் பிரபலமான நன்கறியப்பட்ட முடியாட்சி அரசுகளில் சோழர்அரசும் ஒன்றாகும். அவர்களின் அரசுக் கட்டமைப்பு விரிவானது. நீர்பாசன அமைப்புமுறை விரிந்து பரந்தது. அதிக எண்ணிக்கையிலான கோவில்களை அவர்கள் கட்டியுள்ளனர். கலை மற்றும் கட்டடக்கலைக்குச் சோழர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். கடல் கடந்து அவர்கள் சாதனைகள் பல புரிந்துள்ளனர். இவையனைத்தும் அவர்களுக்கு வரலாற்றில் ஒப்புயர்வில்லா இடத்தை வழங்கியுள்ளது.

**சோழர்கள் ஆட்சியின் புத்தெழுச்சி**

பண்டைய சோழ அரசு காவிரி ஆற்றின் கழிமுகப்பகுதியை மையப்பகுதியாகக் கொண்டிருந்தது. அதன் தலைநகர் உறையூர் (இன்றைய திருச்சிராப்பள்ளி) ஆகும். கரிகாலானின் ஆட்சிகாலத்தில் இவ்வரசு சிறப்பான இடத்தை வகித்தது. அவருக்குப் பின்வந்தோர் காலத்தில் படிப்படியாகச் சரிவனைச் சந்தித்தது. ஒன்பதாம் நூற்றாண்டில் காவிரிக்கு வடக்கே ஒரு சிறு பகுதியை ஆண்டு வந்த விஜயாலயன் சோழ வம்சத்தை மீட்டெழச்செய்தார். அவர் தஞ்சாவூரைக் கைப்பற்றி அதைத் தனது தலைநகராக ஆக்கினார். பிற்காலத்தில் முதலாம் ராஜேந்திரனும் அவருக்குப் பின்வந்தோரும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கங்கைகொண்ட சோழபுரத்தைத் தலைநகராகக் கொண்டு சோழப்பேரரசை ஆட்சி செய்தனர்.

முதலாம் ராஜராஜன் (கி.பி. (பொ. ஆ) 985 - 1014) சோழப் பேரரசின் மாபெரும் வல்லமை பெற்ற பேரரசர் ஆவார். அவர் காலத்தை வென்ற புகழை ஈட்டினார். தென்னிந்தியாவின் பெரும் பகுதியின் மீது சோழர்களின் அதிகாரத்தை அவர் நிலைநாட்டினார். அவருடைய கப்பற்படையெடுப்புகள் மேலைக்கமற்கரையிலும் இலங்கையிலும் சோழர் ஆட்சி விரிவடைவதற்கு வழிவகுத்தன. புகழ்பெற்ற ராஜராஜேஸ்வரம் கோவிலைத் (பிரகதீஸ்வரர் கோவில்) தஞ்சாவூரில் கட்டினார். அவருடைய மகனும் அவருக்குப்பின்னர் ஆட்சிப்பொறுப்பை ஏற்றவருமான முதலாம் ராஜேந்திரன் (கி.பி. (பொ. ஆ) 1014 - 1044) தந்தையைப் போலவே பேரரசை விரிவுபடுத்தி கைப்பற்றிய பகுதிகளை ஒருங்கிணைத்தார். அவருடைய ஆட்சிக்காலத்தில் சோழப்பேரரசு தென்னிந்தியாவில் ஒரு வலுவான சக்தியாக விளங்கியது. கி.பி. (பொ.ஆ) 1023 இல் அரியணை ஏறிய பின்னர் அவருடைய மிக முக்கியப் படையெடுப்பான வட இந்தியப் படையெடுப்பில் பல பகுதிகளைக் கைப்பற்றினார். கங்கை கொண்டான் (கங்கையைக் கைப்பற்றியவர்) என்று தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டார். வடஇந்தியப் போர்களில் பெற்ற வெற்றியின் நினைவாக கங்கைகொண்ட சோழபுரம் கோவில் எழுப்பப்பட்டது. அவருடைய கடற்படை ஸ்ரீவிஜயப் பேரரசைக் (தெற்கு சுமத்ரா) கைப்பற்ற அவருக்குத் துணைபுரிந்தது. சோழர்களின் கடற்பகுதிகளின் மீதான கட்டுப்பாடு கடல் கடந்த வணிகம் செழித்தோங்க உதவியது.

**சோழப் பேரரசின் சரிவு**

முதலாம் ராஜேந்திர சோழனைத் தொடர்ந்து பதவியேற்ற மூவரும் திறமை வாய்ந்த அரசர்களாக இல்லை. மூன்றாவதாகப் பதவி ஏற்ற வீர ராஜேந்திரனின் மகன் அதி ராஜேந்திரன் உள்நாட்டுக் கலகம் ஒன்றில் கொல்லப்பட்டார். அவருடன் விஜயாலயனின் வழிவந்தோரின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

| |
|---|
| முதலாம் ராஜராஜனின் ஆட்சிக்காலத்தில் சோழர்களுக்கும் கீழைச் சாளுக்கியர்களுக்கும் இடையிலான திருமணஉறவு தொடங்கியது. அவருடைய மகளான |

குந்தவை சாளுக்கிய இளவரசர் விமலாதித்தனை மணந்தார். அவர்களின் மகனான ராஜராஜ நரேந்திரன் முதலாம் ராஜேந்திரனின் மகளான அம்மங்கா தேவியை மணந்தார். அவர்களின் மகனே முதலாம் குலோத்துங்கன் ஆவார்.

அதிராஜேந்திரனின் மறையைக் கேள்விப்பட்டவுடன் கீழைச் சாளுக்கிய இளவரசரான ராஜேந்திர சாளுக்கியன், சோழ அரியணையைக் கைப்பற்றினார். முதலாம் குலோத்துங்கன் எனும் பெயரில் சாளுக்கிய – சோழ வம்சத்தின் ஆட்சியை அவர் தொடங்கிவைத்தார். சோழ அரியணைக்கு ஏற்பட்டிருந்த அச்சுறுத்தல்களை விரைவில் ஒழித்துக்கட்டி முதலாம் குலோந்துங்கன் தனது நிலையை உறுதிப்படுத்தக்கொண்டார். தேவையற்ற போர்களைத் தவிர்த்த அவர் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றார். ஆனால் இலங்கையில் சோழர்களுக்குச் சொந்தமாக இருந்த பகுதிகளை இழந்தார். பாண்டிய நாட்டிலிருந்த பகுதிகளும் சோழர்களின் கட்டுப்பாட்டிலிருந்து நழுவின. காஞ்சிபுரத்தைத் தெலுங்குச் சோழர்களிடம் இழக்க நேரிட்டது. 1279இல் பாண்டிய அரசன் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் மூன்றாம் ராஜேந்திர சோழனைத் தோற்கடித்துப் பாண்டியர் ஆட்சியை இன்றைய தமிழகத்தில் நிறுவினார். அத்துடன் சோழ வம்சத்தின் ஆட்சி முடிவுற்றது.

### நிர்வாக முறை

மத்திய அரசின் நிர்வாகம் அரசரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்தது. நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருந்த அவர் பெருமளவு அதிகாரத்தைக் கொண்டிருந்தார். அரசரின் ஆணைகள் அவருடைய அதிகாரிகளால் பனையோலைகளில் எழுதப்பட்டன அல்லது கோவில் சுவர்களில் பொறிக்கப்பட்டன. அரசுரிமை பரம்பரை இயல்புடையதாய் இருந்தது. அரசர் தனது மூத்த மகனைத் தனது வாரிசாகத் தெரிவு செய்தார். மூத்தமகன் யுவராஜன் என்றழைக்கப்பட்டார். யுவராஜாக்கள் நிர்வாகத்தில் பயிற்சி பெறுவதற்காக மண்டல ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர்.

சோழ அரசர்கள் நன்கு கட்டமைக்கப்பட்ட நிர்வாக முறையை உருவாக்கியிருந்தனர். நிர்வாக வசதிக்காகப் பேரரசு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஓவ்வொரு மண்டலமும் பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஓவ்வொரு நாட்டுப் பிரிவுக்குள்ளும் பல கூற்றங்கள் (கிராமங்களின் தொகுப்பு) இடம் பெற்றிருந்தன. கிராமமே நிர்வாக அமைப்பின் மிகச் சிறிய அலகாகும்.

### உள்ளாட்சி நிர்வாகம்

உள்ளாட்சி நிர்வாகமானது ஊரார், சபையோர், நகரத்தார், நாட்டார் எனும் அமைப்புகளின் மூலமாகச் செயல்பட்டது. வேளாண்மையின் விரிவாக்கத்தினால் கிராமப்புறங்களில் அதிக எண்ணிக்கையில் விவசாயிகளின் குடியிருப்புகள் உருவாயின. அவை ஊர்கள் என அறியப்பட்டன. நில உடமையாளர்களாக இருந்த ஊரார், ஊரின் சார்பாகப் பேசுபவர்களாக இருந்தனர். பிராமணர் கிராமங்களைச் சேர்ந்த சபையோர் பொது நிர்வாகத்தையும், நிதி நிர்வாகத்தையும், நீதி வழங்குதலையும் மேற்கொண்டனர். வணிகர்களின் குடியிருப்புகளை நகரத்தார் நிர்வகித்தனர். இருந்தபோதிலும் தனித்திறன் பெற்ற கட்டுமானக் கலைஞர்கள், இரும்புத் தொழில் செய்வோர், தங்கவேலை செய்வோர், நெசவு செய்வோர், மட்பாண்டம் வனைவோர் ஆகியோரும் நகரத்தில் வாழ்ந்தனர். நாடுகளில் நாட்டார் எனும் அமைப்பு நாடோடு தொடர்புடைய பூசல்களையும் ஏனைய சிக்கல்களையும் தீர்த்துவைத்தது.

ஊர், சபை, நகரம், நாடு ஆகியவற்றில் இருந்த மன்றங்கள் பல்வேறு குழுக்கள் மூலம் பணிகளை மேற்கொண்டன. இக்குழுக்கள் நீர்ப்பாசனம், சாலைகள், கோவில்கள், தோட்டங்கள், வரிசூல், மத விழாக்களை நடத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டன.

### உத்திரமேரூர் கல்வெட்டுகள்

இன்றைய காஞ்சிபுர மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கிராமம் பிராமணர்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட ஒரு பிரம்மதேய கிரமமாகும். இக்கராமத்தில் கிராம சபைக்கான உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பது குறித்துத் தெளிவாக விளக்கும் கல்வெட்டுகள் உள்ளன. ஒவ்வொரு குடும்பிலிருந்தும் (வார்டு) உறுப்பினர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவர். மொத்தம் 30 குடும்புகள் இருந்தன. போட்டியிடும் ஆடவர் 35 – 70 வயது வரம்புக்குள் இருத்தல் வேண்டும். வேதநூல்களிலும், சமய நூல்களிலும் தேர்ச்சி

பெற்றிருப்பதும், நிலஉரிமையாளராகவோ, சொந்த வீடு உடையவராகவோ இருக்க வேண்டும் என்பவை தகுதிகளாகும். தேர்ந்தெடுக்கும் முறை: ஒவ்வொரு குடும்பிலிருந்தும் தகுதியுடைய வேட்பாளர்களின் பெயர்கள் பனையோலைத் துண்டுகளில் எழுதப்படும். அவை மட்பாண்டம் ஒன்றில் போடப்படும். மன்றத்தின் மூத்த உறுப்பினர் ஒரு சிறுவனை அழைத்து குடத்துக்குள் உள்ள ஓலைத் துண்டுகளை எடுக்கச் சொல்லி அதில் எழுதப்பட்டுள்ள பெயரை அறிவிப்பார். இம்முறையின்படி பல குழுக்கள் முடிவு செய்யப்படும்.

**வருவாய்**

சோழஅரசின் பொதுவருவாய் முக்கியமாக நிலவர் மூலம் பெறப்பட்டது. நிலவரியானது'காணிக்கடன்' என அழைக்கப்பட்டது. நிலவரியை நிரணயம் செய்வதற்காகச் சோழஅரசு விரிவான அளவில் நிலஅளவைப் பணியை மேற்கொண்டது. மகசூலில் மூன்றில் ஒரு பகுதி வரியாக வசூலிக்கப்பட்டது. இவ்வரி பெரும்பாலும் தானியமாகவே வசூல் செய்யப்பட்டது. நிலவரியைத் தவிர தொழில் வரிகளும் வணிகத்தின் மீதான சுங்கவரிகளும் வசூலிக்கப்பட்டன.

**நிலம் சார்ந்த உறவுகளை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பு**

சோழஅரசர்கள் வரிவிலக்கு அளிக்கப்பட்ட நிலங்களை அரசு அதிகாரிகளுக்கும், பிராமணர்களுக்கும், கோவில்களுக்கும் (தேவதானக் கிராமங்கள்), மத நிறுவனங்களுக்கும் கொடையாக வழங்கினர். சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் 'பள்ளிச்சந்தம்' என அழைக்கப்பட்டது. 'வேளாண்வகை' என்னும் நிலங்களின் உடைமையாளர்கள் வேளாளர் என்றழைக்கப்பட்டனர். வேளாளரில் ஒரு பிரிவினரான 'உழுகுடி' என்போர் நிலங்களின் உடைமையாளர்களாக இருக்க இயலாது. அவர்கள் பிரம்மதேய, வேளாண்வகை நிலங்களில் வேளாண்பணிகளைச் செய்யவேண்டியிருந்தது. மொத்த விளைச்சலில் வேளாண்வகை நிலவுடைமையாளர்கள் 'மேல்வார்த்தைப்' (விளைச்சலில் பெரும்பகுதி) பெற்றனர். உழுகுடிகள் 'கீழ்வாரத்தைப் (விளைச்சலில் சிறிய பகுதி) பெற்றனர். 'அடிமை' மற்றும் 'பணிசெய் மக்கள்' என்போர் சமுதாயத்தின் கீழ்நிலையில் இருந்தனர். சமூகத்தின் இடை மட்டத்தில் போர் செய்வோரும் வணிகர்களும் இடம் பெற்றனர்.

**நீர்ப்பாசனம்**

சோழர்கள் நீர்ப்பாசனத்திற்கு முக்கியத்துவம் வழங்கினர். கங்கை கொண்ட சோழபுரத்தில் முதலாம் ராஜேந்திர சோழனால் உருவாக்கப்பட்ட பதினாறு மைல் நீளம் கொண்ட ஏரிக்கரைத் தடுப்பணை மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். காவிரியின் கழிமுகப் பகுதியில் குறுக்கும் நெடுக்குமாக மரபுசார்ந்த முறையில் நீரினைத் திசைமாற்றிவிடுவதற்கான 'வடி-வாய்க்கால்கள்' அமைக்கப்பட்டிருந்தன. தேவைப்படும் நீரைக் கொண்டுவருவது 'வாய்க்கால்'. தேவைக்கு அதிகமான நீரை வெளியேற்றுவது 'வடிகால்'. பொதுமக்கள் அனைவருக்கும் சொந்தமான வாய்க்கால் 'ஊர் வாய்க்கால்' என அழைக்கப்பட்டது. நாடு எனும் நிர்வாகப் பிரிவின் மட்டத்தில் பயன்பட்ட வாய்க்கால்கள் 'நாடு வாய்க்கால்கள்' என குறிப்பிடப்பட்டன. நீர் விநியோகத்தில் சுற்றுமுறை நடைமுறையில் இருந்தது.

**மதம்**

சோழர்கள் வைத்தின் மீது மிகுதியான பற்றுக் கொண்டவராவர். சிவபெருமானின் திருவிளையாடல்கள் சைவ அடியார்களான நாயன்மார்களால் சைவ அடியார்களான நாயன்மார்களால் பாடல்களாக இயற்றப்பட்டுள்ளன. நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்ட அவை 'திருமுறைகள்' என அழைக்கப்படுகின்றன.

**கோவில்கள்**

சோழர்கள் காலத்தில் பிரமாண்டமான கோவில்கள் கட்டப்பட்டன. தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம் ஆகிய இடங்களிலுள்ள கோவில்கள் சோழர்களின் கலைகளான கட்டடங்கள், சிற்பங்கள், செப்புச்சிலைகள் ஓவியங்கள், படிமவியல் ஆகியவற்றின் களஞ்சியமாக உள்ளன. சோழர்கள் காலக் கோவில்கள் வழிபாட்டிற்கான இடங்கள் மட்டுமல்லாமல் பெருமளவு நிலங்களைச் சொந்தமாகக் கொண்டிருந்தன. ஆவை கல்வியையும்,

பக்திக் கலைகளின் வடிவங்களான நடனம், இசை, நாடகம் ஆகியவற்றையும் வளர்த்தன. நடகமாதர், இசைக்கலைஞர்கள், பாடகர்கள், இசைக்கருவிகளை மீட்டுவோர், அர்ச்சகர்கள் ஆகியோர் கோவில் பணியாளர்கள் ஆவர்.

**சோழர்களின் கல்விப் பணி**

சோழ அரசர்கள் கல்விப் பணிகளுக்குப் பெரும் ஆதரவு நல்கினர். முதலாம் ராஜேந்திரன் எண்ணாயிரம் (தற்போதைய விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள) எனும் கிராமத்தில் வேதக் கல்லூரி ஒன்றை நிறுவினார். அக்கல்லூரியில் 14 ஆசிரியர்களின் வழிகாட்டுதலில் 340 மாணவர்கள் வேதங்கள், இலக்கணம், உபநிடதங்கள் ஆகியவற்றைக் கற்றனர். அவருக்குப் பின்வந்த ஆட்சியாளர்கள் அவருடைய அப்பணியை முன்உதாரணமாகக் கொண்டு பின்பற்றினர். அதன் விளைவாக இன்றைய புதுச்சேரிக்கு அருகேயுள்ள திருபுவனை எனும் ஊரிலும், இன்றைய செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருமக்கூடலிலும் முறையே 1048, 1067 ஆகிய ஆண்டுகளில் இதே போன்ற கல்லூரிகள் நிறுவப்பட்டன. உன்னதமான இலக்கியங்களான 'பெரியபுராணமும் கம்பராமயணமும்' இக்காலப் பகுதியைச் சேர்ந்தவையாகும்.

**வணிகம்**

சோழர்களின் காலத்தில் வணிகம் தழைத்தோங்கியது. 'அஞ்சு – வண்ணத்தார்','மணி – கிராமத்தார்' எனப்படும் வணிகக் குழு அமைப்புகளைச் (கில்டு) சேர்ந்த வணிகர்கள் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அஞ்சு – வண்ணத்தார் குழுவானது மேற்கு ஆசியர்கள், அராபியர்கள், யூத்ர்கள், கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும். அவர்கள் கடல் கடந்து வணிகம் செய்தோர் ஆவார். அவர்கள் மேற்கு கடற்கரையோரத் துறைமுக நகரங்களில் குடியிருந்தனர். மணி – கிராமத்தார் வணிகக் குழு அமைப்பைச் சேர்ந்த வணிகர்கள் உள்நாட்டு வணிகத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர் எனச் சொல்லப்படுகிறது. காலப்போக்கில் அவ்விரு அமைப்புகளும் 'ஐநூற்றுவர்','திசை – ஆயிரத்து ஐநூற்றுவர்' எனும் பெயர்களில் ஒருங்கிணைந்தன. அவை கர்நாடக மாநிலம் ஐகோலில் இருந்த தலைமை அமைப்பின் வழிகாட்டுதலில் செயல்பட்டன. இந்த ஐநூற்றுவர் அமைப்பு தென்கிழக்காசிய நாடுகளை உள்ளடக்கிய கடல் கடந்த வணிக நடவடிக்கைகளைச் செயல்படுத்தியது. தென்கிழக்கு ஆசிய நாடுகளோடு மேற்கொள்ளப்பட்ட கடல் கடந்த வணிகத்தின் மூலம் யானைத் தந்தங்கள், பவழம், சங்குகள், ஒளிபுகும் - புகா கண்ணாடிகள், பாக்கு, ஏலம், வர்ணப் பட்டு நூல்களோடு நெய்யப்பட்ட பருத்தி இழைத்துணிகள் ஆகியன இறக்குமதி செய்யப்பட்டன. சந்தனக்கட்டை, கருங்காலிக்கட்டை, சுவையூட்டும் பொருட்கள், விலையுயர்ந்த ஆபரணக் கற்கள், மிளகு, எண்ணெய், நெய், தானியங்கள், உப்பு ஆகியவை ஏற்றுமதி செய்யப்பட்டன.

**பாண்டிய அரசு மீண்டெழுதல் (கி.பி. (பொ.ஆ) 600 - 920)**

கடுங்கோன் எனும் பாண்டிய அரசன் 6 ஆம் நூற்றாண்டின் இறுதியில் களப்பிரர்களிடமிருந்து பாண்டியர்களின் பகுதிகளை மீட்டார். அவரைத் தொடர்ந்து வேறு இருவர் அரச பதவி ஏற்றனர். அரிகேசரி மாறவர்மன் எனும் வலிமை மிக்க முதல் பாண்டிய அரசர் கி.பி. (பொ.ஆ) 642இல் அரியணை ஏறினார். அவர் பல்லவ அரசர்கள் முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன் ஆகியோரின் சமகாலத்தவராவார். கல்வெட்டுகளும் செப்புப்பட்டயங்களும் தனது எதிரிகளான சேரர், சோழர், பல்லவர், சிங்களர் ஆகியோரை அவர் வெற்றிகொண்டதைப் புகழ்பாடுகின்றன. அரிகேசரி மாறவர்மன் சமணர்களைத் துன்புறுத்திய கூன் பாண்டியனெ என அடையாளப்படுத்தப்படுகிறார்.

சைவத் துறவியான திருஞானசம்பந்தர் அரிகேசரியைச் சமண மதத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினார். மதம் மாறிய பின்னர் அரிகேசரி சுமார் 8000 சமணர்களைக் கழுவேற்றியதாகக் கூறப்படுகிறது. எண்ணிக்கை மிகைப்படுத்திக் கூறப்பட்டிருப்பினும், சைவத்திற்கு மாறிய பின்னர் அரிகேசரியின் சமண எதிர்ப்புப் போக்கு சந்தேகத்திற்கு இடமில்லாதது.

அரிகேசரிக்குப் பின்னர் பாண்டியர் அரசவம்சத்தின் மகத்தான மன்னான ஜடிலபராந்தக நெடுஞ்சடையன் (முதலாம் வரகுணன்) (756 - 815) ஆட்சிப் பொறுப்பேற்றார். அவரே வேள்விக்குடிச் செப்பேடுகளின் கொடையாளி ஆவார். நெடுஞ்சடைநன் தஞ்சாவூர்,

திருச்சிராப்பள்ளி, சேலம், கோயமுத்தூர் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாகப் பாண்டிய அரசை விரிவுபடுத்தினார். நெடுஞ்சடையனுக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்ற ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன், இரண்டாம் வரகுணன் ஆகியோர் பல்லவர்களால் தோற்கடிக்கப்பட்டனர். பின்னர் முதலாம் பராந்தகனின் கீழ் எழுச்சி பெற்ற சோழவம்சத்தை அவர்களால் எதிர்கொள்ள இயலவில்லை. முதலாம் பராந்தகனிடம் தோல்வியடைந்த பாண்டிய அரசன் இரண்டாம் ராஜசிம்மன் 920 இல் நாட்டைவிட்டு வெளியேறினார். இவ்வாறு கடுங்கோனால் மீள்எழுச்சி பெற்ற பாண்டியர் ஆட்சி முடிவுற்றது.

**பிற்காலப் பாண்டியர்களின் எழுச்சி (1190 - 1310)**

அதிராஜேந்திரனின் (விஜயாலயனின் வழிவந்த கடைசி அரசர்) மறைவுக்குப் பின்னர் பாண்டிய நாட்டில் சோழ மண்டலாதிபதிகளின் ஆட்சி பலவீனமடைந்தது. அதன் விளைவாகப் பதிமூன்றாம் நூற்றாண்டில் பாண்டியர் மட்டுமே எழுச்சி பெற்ற தமிழ் அரச வம்சமாக விளங்கினர். மதுரை அவர்களின் தலைநகராகத் தொடர்ந்தது. அவ்வமயம் காயல் அவர்களின் முக்கியத் துறைமுகமாயிற்று. வெனிஸ் நாட்டைச் சேர்ந்த புகழ் பெற்ற பயணியான மார்க்கோபோலோ இரண்டு முறை (1288, 1293) காயலுக்கு வருகைதந்தார். இத்துறைமுக நகர் அராபிய, சீனக் கப்பல்களால் நிரம்பியிருந்தது என்றும் விறுவிறுப்பான வணிக நடவடிக்கைகளைக் கொண்டிருந்ததாகவும் அவர் நம்மிடம் கூறுகிறார்.

பாண்டிய அரசு “செல்வச் செழிப்பு மிக்க, உலகிலேயே மிக அற்புதமான பகுதியாகும்” என மார்க்கோ போலா புகழாரம் சூட்டுகிறார். இலங்கையோடு சேர்ந்து உலகத்தில் காணப்படும் பெரும்பாலான மாணிக்கக்கற்களையும் முத்துக்களையும் உற்பத்தி செய்கிறது என மேலும் கூறுகிறார். தன்னுடைய பயணக் குறிப்புகளில் ‘சதி’ (உடன்கட்டை ஏறுதல்) நிகழ்வுகளையும் அரசர்களின் பலதாரமணத்தையும் பதிவு செய்துள்ளார்.

**சடையவர்மன் சுந்தரபாண்டியன்**

இரண்டாம் பாண்டியப் பேரரசின் புகழ்பெற்ற அரசர் சடைய வர்மன் (ஜடா வர்மன்) சுந்தரபாண்டியன் (1251 - 1268) ஆவார். ஒட்டுமொத்தத் தமிழகத்தையும் தனது கட்டுப்பபாட்டின் கீழ்க் கொண்டுவந்த அவருடைய ஆட்சி ஆந்திர மாநிலம் நெல்லூர் வரை பரவியிருந்தது. அவர் ஹொய்சாளர்களைக் கட்டுக்குள் வைத்திருந்தார். மலைநாட்டுத் தலைவனான சேர அரசர் சுந்தர பாண்டியனின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டு அவருக்குக் கப்பம் கட்டச் சம்மதித்தார். சோழ அரசின் வீழ்ச்சியால் ஊக்கம் பெற்ற மாளவப் பகுதியின் அரசர் வீர சோமேஸ்வரர் சுந்தர பாண்டியனைப் போருக்கு அழைத்தார். கண்ணனூர் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் சுந்தரபாண்டியன் வீர சோமேஸ்வரரைத் தோற்கடித்தார். வடதமிழகத்தில் கடலூர், காஞ்சிபுரம், மேற்குத் தமிழகத்தில் ஆர்க்காடு, சேலம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குறுநிலத் தலைவர்களின் மேல் தனது அதிகாரத்தை நிறுவினார்.

சுந்தர பாண்டியனின் ஆட்சியின்போது அவருடன் இரண்டு பேர் கூட்டு அரசர்களாக ஆட்சிசெய்தனர். அவர்கள் விக்கிரம பாண்டியன், வீரபாண்டியன் ஆகியோர் ஆவர். சுந்தர பாண்டியனுக்குப் பின்னர் மாறவர்மன் குலசேகரன் வெற்றிக்ரமாக நாற்பது ஆண்டுகள் ஆட்சிபுரிந்து நாட்டிற்கு அமைதியையும் செழிப்பையும் நல்கினார். அவருக்கு வீரபாண்டியன், சுந்தர பாண்டியன் என இரண்டு மகன்கள் இருந்தனர். அரசர் வீரபாண்டியனைக் கூட்டு அரசரக நியமித்தார். அதனால் தந்தை மீது வெறுப்புற்ற சுந்தர பாண்டியன் தந்தையார் மாறவர்மன் குலசேகரனைக் கொன்றார். தொடர்ந்து ஏற்பட்ட உள்நாட்டுப் போரில் வீரபாண்டியன் வெற்றி பெற்றுத்தன்னை வலுவாக நிறுவிக்கொண்டார். தோல்வியுற்ற சுந்தர பாண்டியன் டெல்லிக்கு விரைந்து அலாவுதீன் கில்ஜியின் பாதுகாப்பில் அடைக்கலமானார். இதுவே மாலிக்கபூரின் படையெடுப்புக்கான வாய்ப்பை வழங்கியது.

மாலிக்கபூரின் படையெடுப்புக்குப் பின்னர் ஆட்சி செய்து கொண்டிருந்த அரச குடும்பத்தைச் சேர்ந்த பல அரசர்களால் பாண்டிய நாடு பிரித்துக்கொள்ளப்பட்டது. மதுரையில் டெல்லி சுல்தானுக்குக் கட்டுப்பட்ட ஒரு முஸ்லீம் அரசு உருவாக்கப்பட்டது.

**ஆட்சிஅமைப்பும் சமூகமும்**

**அரசு**

பாண்டிய அரசர்கள் தலைநகரைப் பொருத்தமட்டிலும் மதுரைக்கே முன்னுரிமை கொடுத்தனர். மதுரை பொதுமக்களால் ‘கூடல்’ என்றே போற்றப்பட்டு வந்தது. பாண்டிய மன்னர்கள் பாரம்பரியமாகக் ‘கூடல்கோன்’,‘கூடல் காவலன்’ என மதிக்கப்பட்டனர். ராணுவரீதியாக அண்டைநாடுகளைக் காட்டிலும் பாண்டியர்களின் ஆதிக்கம் ஓங்கியிருந்தது. இதன் காரணம் அவர்களிடம் இருந்த குதிரைப் படைகளாகும். ஆராபிய வணிக, பண்பாட்டு உலகில் அவர்களுக்கு இருந்த தொடர்பின் மூலம் அவர்கள் அந்தக் குதிரைகளை இறக்குமதி செய்தனர்.

அரசர்,‘மனு சாஸ்திரத்தின்படி’ தான் ஆட்சி செய்வதாகக் கூறினார். இக்கோட்பாடு சமூகத்திலிருந்த ஏற்றத் தாழ்வு நிலைகளை நியாயப்படுத்தியது. அரசர்களும் உள்ளூர் தலைவர்களும் ‘மங்கலம்’ அல்லது ‘சதுர்வேதிமங்கலம்’ எனும் பிராமணர் குடியிருப்புகளை உருவாக்கினர். இவை நீர்ப்பாசன வசதிகளோடு உருவாக்கப்பட்டிருந்தன. நிலத்தின் உண்மையான உடைமையாளர்கள் ‘பூமி புத்திரர்’ அல்லது ‘வேளாளர்’ என விவரிக்கப்பட்டுள்ளனர். வரலாற்று ரீதியாக அவர்கள் அப்பகுதியைச் சேர்ந்த மக்களாகையால் அவர்கள் ‘நாட்டுமக்கள்’ எனவும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இச்சமூக மக்கள் ஒன்றிணைந்த மன்றம் ‘சித்திர – மேழி – பெரிய நாட்டார்’ என அழைக்கப்பட்டது.

**அரசு அதிகாரிகள்**

அதிகாரிகளின் குழுவொன்று அரசரின் ஆணைகளை நடைமுறைப்படுத்தியது. பிரதம மந்திரி ‘உத்தர மந்திரி’ என அழைக்கப்பட்டார். முக்கிய வரலாற்று ஆளுமைகளான மாணிக்கவாசகர், குலச்சிறையார், மாரன்காரி ஆகியோர் அமைச்சர்களாகப் பணியாற்றினர். அரசுச் செயலகம் ‘எழுத்து மண்டபம்’ என அழைக்கப்பட்டது. மிகவும் மதிக்கப்பட்ட அதிகாரிகள் ‘மாறன்-எயினன்’,‘சாத்தன்-கணபதி’,‘ஏனாதி-சாததன்’,‘திற-திறன்’‘மூர்த்தி-எயினன்’, ஆகியோரும் மற்றவருமாவர். ‘பள்ளி-வேலன்’,‘பரந்தகன்-பள்ளி-வேலன்’,‘மாறன்-ஆதித்தன்’,‘தென்னவன்-தமிழ்வேள்’ ஆகியவை படைத் தளபதிகளின் பட்டங்களாகும்.

**நிர்வாகப் பிரிவுகள்**

சோழநாட்டில் இருந்ததைப்போலவே ‘பாண்டியநாடு’ பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. மண்டலங்கள் ‘வளநாடுகள்’ என அழைக்கப்பட்டன. வளநாடுகள் பல ‘நாடுகளாகவும்’,‘கூற்றங்களாகவும்’ பிரிக்கப்பட்டன. நாடுகளை நிர்வகித்தவர்கள் ‘நாட்டார்’ ஆவர். நாடுகளும் கூற்றங்களும் மங்கலம், நகரம்,ஊர், குடி எனும் குடியிருப்புக்களைக் கொண்டிருந்தன. அவற்றில் பல்வகைப்பட்ட சமூகக் குழுக்களைச் சேர்ந்த மக்கள் வசித்தனர்.

**கிராம நிர்வாகம்**

திருநெல்வேலி மாவட்டம் மானூர் என்னும் ஊரில் உள்ள கி.பி. (பொ.ஆ) 800 ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு கிராமநிர்வாகம் தொடர்பான செய்திகளைக் கொண்டுள்ளது. கிராம மன்றங்களையும், பல்வேறு குழுக்களையும் கொண்டிருந்த சோழர்களின் உள்ளாட்சித் துறை போலவே நிர்வாகம் காணப்படுகிறது. சிவில் ராணுவ அதிகாரங்கள் ஆகிய இரண்டும் ஒரே நபரிடம் வழங்கப்பட்டடிருந்தன.

**நீர்ப்பாசனம்**

பாண்டிய மன்னர்கள் அதிக எண்ணிக்கையில் நீர் ஆதாரங்களை உருவாக்கினர். வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகளின் இரு கரைகளிலும் நீர்நிலைகளுக்கு நீர் கொண்டுசெல்லும் கால்வாய்கள் வெட்டப்பட்டன. தென்தமிழகத்தில் சோழர்களைப் போலவே பாண்டியர்களும் புதிய நீர்ப்பாசனத் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தனர். நீர்பாசனப் பணிகள் உள்ளாட்சி அமைப்புகளாலும், அதிகாரிகள் மற்றும் உள்ளூர்த் தலைவர்களாலும் மேற்கொள்ளப்பட்டன. பழுதுநீக்கும் பணிகள் பெரும்பாலும் உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டன. சிலசமயங்களில் நீர்ப்பாசன ஏரிகளை வணிகர்கள் வெட்டிக்கொடுத்துள்ளனர்.

**மதம்**

பாண்டிய அரசர்கள் வேத நடைமுறைகளுக்கு ஆதரவு நல்கினர். வேள்விக்குடிச் செப்பேடுகளும் ஏனைய பொறிப்பியல் சான்றுகளும் சிறந்த பாண்டிய அரசர்கள் ஒவ்வொருவரும் செய்த அஸ்வமேதயாகம், ஹிரண்ய கர்ப்பம், வாஜபேய வேள்வி போன்றவற்றைக் குறிப்பிடுகின்றன. பாண்டிய மன்னர்கள் சைவம், வைணவம் ஆகிய இரண்டையும் சமமாகவே கருதினர் என்பதைப் பொறிப்புச் சான்றுகளின் தொடக்கப் பகுதிகள் உணர்த்துகின்றன. இரு பிரிவைச் சேர்ந்த கோவில்களும் பாண்டிய மன்னர்களின் ஆதரவைப் பெற்றிருந்தன. இக்கோவில்களுக்கு நிலங்கள் கொடையாக வழங்கப்பட்டன. வரிவிலக்கும் அளிக்கப்பட்டது. அவை புனரமைக்கப்பட்டுப் புதிய கோபுரங்களும் விசாலமான மண்டபங்களும் கட்டப்பட்டன.

புகழ் பெற்ற சைவ, வைணவ அடியார்கள் (நாயன்மார்கள், ஆழ்வார்கள்) தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், ஆன்மிக அறிவு மேம்பாட்டிற்கும் பெரும் பங்களிப்பைச் செய்தனர். அக்காலப்பகுதியில் தீவிர மதமோதல்கள் இருந்ததாக குறிப்பிடப்படுகிறது. அக்காலகட்டப் பக்தி இயக்கம் புறசமயத்தாரை வாதத்திற்குத் தூண்டின. அப்படிப்பட்ட விவாதப் போட்டிகளில் பலமுறை பௌத்தர்களும் சமணர்களும் தோற்கடிக்கப்பட்டதாகப் பக்தி இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அக்காலப் பாண்டிய அரசர்கள் தமிழ், சமஸ்கிருதம் ஆகியவற்றை ஆதரித்து வளர்த்தனர்.

**கோவில்கள்**

இடைக்காலப் பாண்டியர்களும் பிற்காலப் பாண்டியர்களும் புதிய கோவில்கள் எதையும் நிர்மாணிக்கவில்லை. ஏற்கனவே இருந்த கோவில்களைப் பராமரித்தனர், புதிய கோபுரங்களையும் மண்டபங்களையும் கட்டிப் பெரிதாக்கினர். பெரி வடிவிலான அலங்கார வேலைப்பாடுகளுடன் கூடிய ஒற்றைக்கல் தூண்கள் இடைக்காலப் பாண்டியர்களின் தனித்தன்மை வாய்ந்த பாணியாகும். சிவன், விஷ்ணு, கொற்றவை, கணேசர், சுப்ரமணியர் ஆகிய தெய்வங்களின் சிற்பங்கள் இக்கோவில்களில் காணப்படும் சிறந்த கலை வடிவங்களாகும். வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குப் பாண்டியர் பேராதரவு நல்கினர். புதிய கோபுரங்களையும் மண்டபங்களையும் கட்டிக் கோவிலைத் தொடர்ந்து விசாலப்படுத்தினர்.

**வணிகம்**

ஏழாம் நூற்றாண்டு முதல் தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையில் உருவாகியிருந்த அராபிய வணிகர்களின் குடியிருப்புகள் அவர்களின் வணிக உறவுகள் கிழக்குக் கடற்கரைக்கு விரிவடைய வழிவகுத்தன. கிழக்குக் கடற்கரையில் இருந்த அரசுகள் அயல்நாட்டு வணிகர்களைப் பொறுத்தமட்டில் மிக தாராளமான, அறிவுபூர்வமான கொள்கையைப் பின்பற்றின. அவற்றின் பட்டயச் சட்டங்கள் வணிகர்களுக்குப் பல துறைமுக வரிகளிலிருந்தும், சுங்க வரிகளிலிருந்தும் விலக்கு அளித்தன. காயல் துறைமுகத்தில் மாலிக் உல் இஸ்லாம் ஜாமலுதீன் எனும் அராபிய வணிகரின் வணிக நிறுவனம் செயல்பட்டது. பாண்டிய அரசர்களுக்குக் குதிரைகள் எளிதாகக் கிடைப்பதற்கான வசதிகளை இந்நிறுவனம் செய்துகொடுத்தது.

13, 14ஆம் நூற்றாண்டுகளில் குதிரை வணிகம் மேலும் அதிகரித்தது. சம்பிரதாய விழாக்களுக்கும், போர்புரிவதற்கும் குதிரைகள் தேவைப்பட்டதால் அரசர்கள் குதிரைகளுக்காக முதலீடு செய்தனர் என்று மார்க்கோபோலோவும், வாசப்பும் குறிப்பிட்டுள்ளனர். குதிரை வணிகத்தில் ஈடுபட்டவர்கள் 'குதிரைச் செட்டிகள்' என அழைக்கப்பட்டனர். அவர்கள் கடல்சார் வணிகத்தில் தீவிரமாக ஈடுபட்டனர். பாண்டியர்களின் துறைமுகங்களில் மிகவும் விறுவிறுப்பாக வணிகம் நடைபெற்ற துறைமுகம் கிழக்குக் கடற்கரையிலிருந்த காயல்பட்டினம் ஆகும். இது இன்றைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளது. வணிகப் பரிமாற்றங்கள் தங்க நாணயங்கள் மூலம் நடைபெற்றதால் நாணயங்கள் அதிக அளவில் புழக்கத்தில் இருந்தன. அவை காசு, கழஞ்சு, பொன் எனப் பலவாறு அழைக்கப்பட்டன.

அலகு– 3

## தொடக்ககாலத் தமிழ்ச் சமூகமும் பண்பாடும்

**அறிமுகம்:**

கி.மு. (பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே தமிழ்ப் பண்பாடு தோன்றிவிட்டது. தமிழகத்து வணிகர்களும் கடலோடிகளும் கடல் கடந்த நாடுகளுடன் வணிகத் தொடர்புகளையும் பண்பாட்டுத் தொடர்புகளையும் கொண்டிருந்தனர். வெளிநாட்டு வணிகர்கள் கடல்வழியே தமிழகத்திற்கு வந்துபோயினர். வெளிநாட்டினருடன் ஏற்பட்ட பண்பாட்டுத் தொடர்புகளும், வணிக நடவடிக்கைகளும், தமிழகத்தின் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியும் வாழக்கைமுறைகளும் இணைந்து தமிழ்நாட்டில் முதல் நகரமயமாதல் உருவானது. தலைநகரங்களும் துறைமுகப்பட்டினங்களும் தோன்றின. நாணங்களும் பணமும் புழக்கத்திற்கு வந்தன. "தமிழ் பிராமி" என்ற வரிவடிவத்தில் தமிழ் மொழி முதன் முதலில் எழுதப்பட்டது. ஆவணங்கள் உருவாக்கப்பட்டன. செம்மொழித் தமிழ்ச் செய்யுள்கள் இயற்றப்பட்டன.

**தொடக்காலத் தமிழ்ச் சமூகம் குறித்து அறிந்து கொள்வதற்கான சான்றுகள்**

தொன்மைக்கால தமிழர்களின் வரலாற்றை அறிவியல் பூர்வமாக மீட்டுருவாக்கம் செய்வதற்குப் பல வகையான சான்றுகள் உதவுகின்றன.

அவையாவன:

1. செவ்வியல் தமிழ் இலக்கியங்கள்
2. கல்வெட்டுகள்
3. தொல்லியல் அகழாய்வுச் சான்றுகள் மற்றும் பண்பாட்டுப் பொருள்கள்
4. தமிழ் அல்லாத மற்றும் அயல்நாட்டினரின் இலக்கியக் குறிப்புகள்

**செவ்வியல் தமிழ் இலக்கியங்கள்:**

தொல்காப்பியம், பதினெண் மேல்கணக்கு நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், ஐம்பெருங்காப்பியங்கள் ஆகியவை சங்க காலத்தில் தோன்றிய செவ்வியல் தமிழ் இலக்கியங்கள் ஆகும். இவை சங்க கால மக்களின் வாழ்க்கை முறையை நன்கு அறிய உதவுகின்றன.

**தொல்காப்பியம்:**

தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம் தமிழின் பழமையான இலக்கண நூலாகும். இந்நூலின் முதலிரண்டு பகுதிகள் தமிழ் மொழியின் இலக்கணத்தை வரையறுக்கின்றன. மூன்றாவது பகுதி மக்களின் சமூக வாழ்க்கைக்கான இலக்கணத்தை வரையறுக்கிறது.

பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பதினெண் மேல்கணக்கு நூல்கள் என்று அழைக்கப்படுகின்றன. தமிழில் தோன்றிய இலக்கியங்களில் காலத்தால் முற்பட்ட இலக்கியங்கள். இவை பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காலத்தால் பிந்தையவை.

**எட்டுத்தொகை நூல்களாவன:**

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. பரிபாடல்
4. பதிற்றுப்பத்து
5. ஐங்குறுநூறு
6. கலித்தொகை
7. அகநானூறு
8. புறநானூறு

**பத்துப்பாட்டு நூல்களாவன:**

1. திருமுருகாற்றுப்படை
2. பொருநராற்றுப்படை
3. பெரும்பாணாற்றுப்படை
4. சிறுபாணாற்றுப்படை
5. முல்லைப்பாட்டு
6. நெடுநல்வாடை

7. மதுரைக் காஞ்சி
8. குறிஞ்சிப்பாட்டு
9. பட்டினப்பாலை
10. மலைபடுகடாம்

**பதினெண் கீழ்க்கணக்கு:**
வாழ்வியல் அறநெறிகளை எடுத்து இயம்புகின்ற பதினெட்டு நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு எனத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதன்மையானது திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள். 1330 குறட்பாக்களைக் கொண்ட திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்று மூன்று பால்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

**ஐம்பெருங்காப்பியங்கள்:**
காப்பியங்கள் என்பவை கவிதை நயமுடைய செய்யுள்வடிவிலான நீண்ட இலக்கியப் படைப்புகளாகும். அவை:
1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை
3. சீவகசிந்தாமணி
4. வளையாபதி
5. குண்டலகேசி

**கல்வெட்டுச் சான்றுகள்:**
கல்வெட்டுகளைக் குறித்து படிப்பது “கல்வெட்டியல்“ ஆகும். கல்வெட்டுகள் போலவே செப்பேடுகள். நாணயங்கள், மோதிரங்கள் போன்றவற்றிலும் தகவல்கள் பொறிக்கப்பட்டிருப்பதைத் தெரிந்துகொள்ளலாம். மொழியின் வரிவடிவம் தோன்றிய காலமே வரலாற்றின் தொடக்க காலம் எனலாம்.

**தமிழ் பிராமி கல்வெட்டுகள்**
தமிழ்நாட்டில் முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் தமிழ் பிராமி கல்வெட்டுள் கற்பாறைகளிலும் குகைவாழிடங்களிலும் காணப்படுகின்றன. சமணத் துறவிகள் இக்குகைகளைப் பெரும்பாலும் தமது வாழிடங்களாகக் கொண்டிருந்தனர். இயற்கையாக அமைந்த மலைக்குகைகளின் விளிம்பில், மழைநீர் வழிந்து வெளியேறுவதற்காகச் சிறிய பகுதியை வெட்டி கொடுங்கை அல்லது வாரி போன்று செதுக்கியிருந்தனர். அதற்குக் கீழேதான் பெரும்பாலான கல்வெட்டுகள் காணப்படுகின்றன. குகைகளின் உட்புறத்தில் வழுவழுப்பான படுக்கைகளைப் பாறைகளிலேயே செதுக்கி உருவாக்கியிருந்தனர். உலகியல் வாழ்வைத் துறந்து, குகைகளில் வாழ்ந்த துறவிகளுக்கு அரசர்களும் வணிகர்களும் இயற்கையாக அமைந்த குகைகளை வாழிடங்களாக மாற்றி உதவினர். தமிழ்நாட்டில் மாங்குளம், முத்துப்பட்டி, புகலூர், அரச்சலூர், கொங்கர்புளியங்குளம், ஜம்பை, மதுரை உள்ளிட்ட பல இடங்களில் உள்ள குகைவாழிடங்களில் தமிழ் பிராமி கல்வெட்டுகளை இன்றும் காணலாம். பெரும்பாலான குகைவாழிடங்கள் பண்டைக்கால வணிக வழிகளில் அமைந்துள்ளன.

**நடுகற்கள்:**
போர்க்களத்திலும் ஆநிரை கவரும் சண்டைகளிலும் வீரமரணம் அடைந்தவர்களின் நினைவாக நடுகற்கள் நடப்பட்டன. முல்லை நில வாழ்க்கையில் மக்களின் சிறப்பான செல்வ வளமாகக் கால்நடைகள் (ஆநிரைகள்) இருந்தன. அருகருகே வாழ்ந்த இனக்குழுவினர் மற்ற குழுவினரின் கால்நடைகளைக் கவர்ந்து தமதாக்கிக் கொள்வதற்காகச் சண்டையிட்டுள்ளனர். முல்லை நில மக்களின் தலைவன் எதிரிகளை எதிர்த்துப் போரிட்டுக் கால்நடைகளைக் கவர்ந்து வருவதுண்டு. இதை எதிர்த்து போரிடுபவரும் உண்டு. அப்போது இறந்துபடும் வீரர்களைத் தியாகிகளாகப் போற்றி அவர்களின் நினைவாக நடுகற்களை நிறுவினர். போர்க்களக் காட்சிகளையும், நடுகற்களைக் குறித்தும், அவற்றை வழிபட்ட முறைகளைக் குறித்தும் சங்க இலக்கியங்களில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நடுகற்கள் நடப்படுவதற்கான வழிமுறைகள் குறித்து தொல்காப்பியம் விரிவாக எடுத்துரைக்கிறது.

தேனி மாவட்டத்தின் புலிமான்கோம்பை, தாதப்பட்டி ஆகிய இடங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தின் பொற்பனைக்கோட்டை என்ற இடத்திலும் தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட சங்க கால நடுகற்கள் காணப்படுகின்றன. சங்ககாலத்தைச் சார்ந்த நடுகற்களில் உருவம் அல்லது சிலைகள் காணப்படவில்லை.

சங்க காலத்திற்குப் பிறகும், பல்லவர் காலத்திலும் நடப்பட்ட நடுகற்கள் முல்லை நிலப்பகுதிகளில் பெரிதும் காணப்படுகின்றன. குறிப்பாக, திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம் என்ற ஊரினைச் சுற்றியுள்ள பகுதிகளில் பரவலாக இத்தகைய நடுகற்களைக் காணலாம். யாருடைய நினைவாக அந்த நடுகற்கள் நடப்பட்டனவோ, அந்த வீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டு வீரர் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

**புலிமான் கோம்பை நடுகற்கள்:**

தேனி மாவட்டத்தின் கைகை ஆற்றுப் பள்ளத்தாக்கில் உள்ள ஊர் புலிமான் கோம்பை (புள்ளிமான் கோம்பை) ஆகும். 2006 ஆம் ஆண்டில் இந்த ஊரிலிருந்து தமிழ் பிராமி கல்வெட்டுகளுடன் கூடிய அரிய நடுகற்கள் கண்டெடுக்கப்பட்டன. புலிமான் கோம்பையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் ஒன்றில் கீழ்கண்ட செய்தி காணப்படுகிறது.

"கூடல்ஊர் ஆகோள் பெடு தீயன் அந்தவன் கல்"

இதன் பொருள்: "கூடலூரில் ஆநிரை கவர்ந்தபோது நடந்த பூசலில் கொல்லப்பட்ட தீயன் அந்தவனின் கல்"

**கல்வெட்டுகள்**

வரலாற்றின் தொடக்க காலத்தைச் சேர்ந்த சுடுமண் கலன்களில் மக்களின் பெயர்கள் தமிழ் பிராமி எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன. அரிக்கமேடு, அழகன்குளம், கொடுமணல், கீழடி உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல இடங்களிலும் இத்தகைய சுடுமண் பொறிப்புகள் காணப்படுகின்றன. மேலும், எகிப்து நாட்டின் பெரேனிகே (Berenike), குசேர் அல் காதிம் (Quseir al Qadhim) ஆகிய இடங்களிலும், ஓமன் நாட்டின் கோர்ரோரி (Khor Ron) என்ற இடத்திலும் தமிழ் பிராமி எழுத்துக்களில் மக்களின் பெயர் பொறித்த சுடுமண் கலங்களின் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் பண்டைத் தமிழர்கள் மேற்கு ஆசியாவிலும் அதற்கு அப்பாலும் உள்ள ரோமானியப் பேரரசுப் பகுதிகளுக்கும் சென்று வணிகத்தில் ஈடுபட்டிருந்தது குறித்து அறியமுடிகிறது. ஒரு பொருள் தமக்கு உரிமையானது என்பதைக் குறிப்பதற்காகவே அதன் மீது மக்கள் தம் பெயர்களைப் பொறித்து வைத்தனர். சுடுமண் கலன்களில் காணப்படும் பெரும்பாலான பெயர்கள் தமிழிலும், சில பெயர்கள் பிராகிருத மொழியிலும் உள்ளன. கப்பல்களில் அல்லது வண்டிகளில் பொருள்களை எடுத்துச் செல்லும்போது இவற்றை அடையாளம் காண்பதற்கும் தங்களது பெயர்களை எழுதினர்

**பிராகிருதம்**

மௌரியர் காலத்தில் வட இந்தியாவில் பொதுமக்களால் பேசப்பட்ட மொழிகள்

**தொல்லியல் அகழாய்வுக் களங்கள்**

தொல்லியல் அகழாய்வுப் (நஓஉயஎயவழைஎ) பணி என்பது பண்டைக்கால சமூகத்தின் வாழ்க்கை முறைகளை அறிந்துகொள்ளும் நோக்கில் முறைப்படி ஓர் இடத்தை அகழ்ந்து, சான்றுகளாகக் கிடைத்த பொருள்களை முறையாகத் திரட்டி ஆராய்வதாகும்.

வரலாற்றின் தொடக்க காலத்தைச் சேர்ந்த இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் வழியாகச் சங்க கால மக்களின் வாழ்க்கை முறை குறித்த சான்றுகள் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டில் அரிக்கமேடு, அழகன்குளம், கீழடி, கொடுமணல், உறையூர், கரூர், காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, வசவசமுத்திரம் ஆகிய இடங்களிலும், கேரளத்தின் பட்டணம் என்ற இடத்திலும் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளிலிருந்து சங்க கால மக்களின் வாழ்க்கை முறைக்கான பல வகையான தொல்லியல் சான்றுகள் கிட்டியுள்ளன.

புதுச்சேரிக்கு அருகில் உள்ள அரிக்கமேடு என்ற இடம் இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறையினர் அகழாய்வு செய்த சங்க காலத் துறைமுகப்பட்டினம் ஆகும். பிரிட்டினைச் சேர்ந்த சர் இராபர்ட் எரிக் மாட்டிமர் வீலர், பிரான்சைச் சேர்ந்த ஜே.எம். கசால், நம் நாட்டின் ஏ. கோஷ், கிருஷ்ண தேவா ஆகிய தொல்லியல் அறிஞர்கள் இங்கே அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டனர். சரக்கக் கிடங்கு, தொட்டிகள், உறைகிணறுகள், தெரு ஆகியவற்றை உள்ளடக்கிய திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நகரம் அங்கே இருந்தமையை அவர்கள் கண்டறிந்து வெளிப்படுத்தினர்.

இந்தியத் தொல்லியல் துறை (Archaeological Sruvey of India-ASI)பழங்கால மக்கள் வாழ்ந்த இடங்களையும் கட்டுமானங்களையும் நினைவுச் சின்னங்களையும் நிர்வாகம் செய்யும் அமைப்பு இந்தியத் தொல்லியல் துறை ஆகும். இது மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகிறது. தமிழக அரசின் கீழ் தமிழ்நாடு தொல்லியல் துறை இயங்குகிறது. இந்தியாவில் உள்ள தொல்லியல் பொருட்களைப் பாதுகாப்பதற்கு இந்தியக் கருவூலம் மற்றும் புதையல் சட்டம் (1878), பழங்காலப் பொருட்கள் மற்றும் கலைக் கருவூலங்கள் சட்டம் (1972), பழமையவாய்ந்த நினைவுச்சின்ங்கள், தொல்லியல் ஆய்வுக் களங்கள் மற்றும் எஞ்சியப் பொருட்கள் சட்டம் (1958) ஆகியவை வகுக்கப்பட்டுள்ளன.

**பண்பாட்டுப் பொருள்கள்:**

செங்கற் கட்டுமானங்கள், மணிகள், சங்கு வளையல்கள், அணி புடைப்பு மணிகள் (Cameo), செதுக்கு வேலைப்பாடுகள் கொண்ட பொருள்கள் (intaglio) போன்றவற்றைத் தொல்லியலாளர்கள், அகழாய்வு மேற்கொண்ட இடங்களில் கண்டறிந்தனர். தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட சுடுமண் பாண்ட ஓடுகளும், பல வகை நாணயங்களும் அங்கே கிடைத்துள்ளன. இத்தொல்பொருள்கள், அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகள். கலைகள், கைவினைத் திறன், தொழிலகங்கள் ஆகியவை குறித்து அறிந்துகொள்ள உதவுகின்றன.

அணி புடைப்புமணிகள் (உயஅநழ) என்பவை, விலையுயர்ந்த நவமணிகளின் மேற்புறத்தில் வேலைப்பாடு மிக்க உருவங்கள் செதுக்கப்பட்டவையாகும்.

செதுக்கு வேலைப்பாடுடைய பொருள்களில் (ஐவெயபடழை) உருவங்கள் உட்குழிவாகச் செதுக்கப்பட்டிருக்கும்.

**நாணயங்கள்:**

முதன் முதலாக, சங்க காலத்தில்தான் செலாவணிக்குரிய பொருளாக நாணயங்கள் புழக்கத்திற்கு வந்தன. சேர, சோழ, பாண்டிய அரசர்களின் நாணயங்கள், முத்திரை பொறிக்கப்பட்ட நாணயங்கள், ரோமானிய நாணயங்கள் ஆகியவை சங்க காலம் குறித்து அறிந்துகொள்ள உதவும் மற்றொரு வகையான சான்றாகும். கொடுமணல், போடிநாயக்கனூர் ஆகிய ஊர்களில் முத்திரை பொறித்த நாணயங்கள் கிடைத்துள்ளன.

ரோமானிய நாணங்கள் தென்னிந்தியாவில் கோயம்புத்தூர் மண்டலத்தில் செறிந்து காணப்படுகின்றன. அழகன்குளம், கரூர், மதுரை ஆகிய இடங்களிலும் அவை கிடைத்துள்ளன. சில சமயம் மதிப்புயர் செல்வமாகவும் (Treasure) நாணயங்கள் பாதுகாக்கப்பட்டன. மேலும் பலவற்றை உருக்கி அவர்கள் அணிகலன்களும் செய்திருக்கலாம்.

கட்டி வடிவிலான (ingots) தங்கம், வெள்ளி போன்ற மதிப்புமிக்க உலோகங்கள் புல்லியன் (bullion) என்று அழைக்கப்படுகிறது.

தொடக்க காலத்தில் இந்தியாவில் முத்திரை பொறித்த நாணயங்களே பயன்படுத்தப்பட்டன. பெரும்பாலும் வெள்ளியில் செய்யப்பட்ட அவற்றில எண்ணற்ற குறியீடுகள் முத்திரைகளாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

**தமிழ் அல்லாத பிற மொழிச் சான்றுகளும் வெளிநாட்டினரின் குறிப்புகளும்:**

தமிழ் அல்லாத பிற மொழிச் சான்றுகளும் தொடக்க காலத் தமிழ்ச் சமூகம் குறிந்த அரிய தகவல்களைத் தருகின்றன. பண்டைத் தமிழ்ச் சமூகம் உலகெங்கிலும் விரிந்த தொடர்புகளைக் கொண்டிருந்ததைத் தமிழ் அல்லாத சான்றுகள் மிகவும் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

**அர்த்த சாஸ்திரம்:**

மௌரியர் காலத்தில் வாழ்ந்த கௌடில்யர் என்ற சாணக்கியர் இயற்றிய அர்த்த சாஸ்திரம் என்ற நூல் பொருளாதாரம் குறித்தும் ஆட்சிமுறைமை குறித்தும் எடுத்துரைக்கிறது. "பாண்டிய காவாடகா" என்ற அந்நூலின் குறிப்பு பாண்டிய நாட்டில் கிடைத்த முத்துக்கள், கடற்பொருள்களைக் குறிப்பதாக இருக்கலாம்.

**மகாவம்சம்:**

இலங்கையின் புத்த சமய வரலாற்றைக் கூறும் மகாவம்சம் என்ற நூல் பாலி மொழியில் எழுதப்பட்டது. தென்னிந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் இருந்த வணிகர்கள் குறித்தும் குதிரை வணிகர்கள் குறித்தும் இந்நூல் குறிப்பிடுகிறது.

முக்கியமான வரலாற்று நிகழ்வுகளைக் காலவரிசையில் விவரிக்கும் குறிப்பு வரலாற்றுக் குறிப்பு (Chronicle) எனப்படும்.

**எரித்திரியன் கடலின் பெரிப்ளஸ் (Periplus of Erythrean sea):**

எரித்திரியன் கடலின் பெரிப்ளஸ் என்பது பண்டைய கிரேக்க நூலாகும். இந்நூலின் ஆசிரியர் யாரென்று தெரியவில்லை. பெரிப்ளஸ் என்றால் கடல் வழிகாட்டி என்று பொருள். மாலுமிகள் இவ்வழிகாட்டிகளைக் கடற்பயணத்திற்குப் பயன்படுத்தினர். செங்கடலைச் சுற்றியுள்ள கடற்பரப்பே எரித்திரியன் கடல் ஆகும். முசிறி, தொண்டி, குமரி, கொற்கை ஆகிய சங்ககாலத் துறைமுகப்பட்டினங்கள் குறித்தும் சேர, பாண்டிய அரசர்கள் குறித்தும் இந்த நூலில் குறிப்புகள் உள்ளன.

**பிளினியின் "இயற்கை வரலாறு"**

ரோமானியரான மூத்த பிளினி என்பவர் "இயற்கை வரலாறு" என்ற நூலை எழுதினார். லத்தீன் மொழியில் எழுதப்பட்ட இந்நூல், ரோமானியப் பேரரசின் இயற்கை வளங்கள் குறித்து விவரிக்கிறது. இந்தியாவுடன் நடைபெற்ற மிளகு வணிகம் குறித்துக் குறிப்பிடும் பிளினி, வடகிழக்கு அப்பிரிக்காவில் அருகில் உள்ள ஓசலிஸ் (Ocealis) துறைமுகத்திலிருந்து பருவக் காற்று (தென்மேற்குப் பருவக்காற்று) சரியாக வீசினால் நாற்பது நாள்களில் இந்தியாவை அடைந்து விடலாம் என்று கூறியுள்ளார். கேரளக் கடற்கரையில் இருந்த பக்காரே(Bacare) துறைமுகத்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர்கள் குறித்தும் அவர் குறிப்பிட்டுள்ளார். பக்காரே துறைமுகத்தின் தற்காலப் பெயர் என்னவென்று தெரியவில்லை. இந்தியாவுடன் நடைபெற்ற மிளகு வணிகத்தினால் ரோமானிய நாட்டுச் செல்வம் கரைந்தது குறித்துப் பிளினி ஆதங்கப்படுகிறார். இதன் மூலம் மிளகுக்கு இருந்த மதிப்பையும், பெருமளவிற்கு மிளகு தமிழகத்தில் இருந்து ஏற்றுமதியானதையும் அறியமுடிகிறது.

**தாலமியின் புவியியல்:**

இரண்டாம் நூற்றாண்டில் நிலவிய ரோமானியப் பேரரசின் புவியியல் அமைப்பு விவரங்கள், நிலப்படம் ஆகியவற்றைக் கொண்ட ஆவணமே தாலமியின் புவியியல் என்ற நூலாகும். இதில் காவிரிப்பூம்பட்டினம் (Khaberis Emporium) கொற்கை (Korkoi) கன்னியாகுமரி (Komaria) முசிறி (Muziris) ஆகிய துறைமுகப்பட்டினங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**பியூட்டிங்கேரியன் அட்டவணை (Peutingerian Table):**

பியூட்டிங்கேரியன் அட்டவணை என்பது ரோமானியப் பேரரசின் சாலைகள் குறித்த விளக்கமான நிலப்படம் ஆகும். இதில் பண்டைய தமிழகமும் முசிறி துறைமுகமும் மேலும் பல இடங்களும் குறிக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு:**

இங்கு இலங்கைத் தீவு வுயிசழடியநெ எனவும், முசிறி துறைமுகம் முசிறிஸ் எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

**வியன்னா பாப்பிரஸ்:**

வியன்னா பாப்பிரஸ் என்பது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க ஆவணமாகும். இதில் முசிறியில் நடைபெற்ற வணிகம் தொடர்பான குறிப்பு உள்ளது. தற்போது இந்த ஆவணம் ஆஸ்திரியா நாட்டின் தலைநகரான வியன்னாவில், ஆஸ்திரிய தேசிய நூலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள பாப்பிரஸ் அருங்காட்சியகத்தில் உள்ளது. இது வணிகர்களுக்கு இடையேயான எழுத்துப்பூர்வமான ஓர் உடன்படிக்கை ஆகும். ஹெர்மாபோலோன் (Hermapollon) என்ற பெயருடைய கப்பல், ரோமானிய நாட்டிற்கு ஏற்றுமதியான மிளகு, தந்தம் போன்ற சரக்குகள் குறித்த பட்டியல் இந்த ஆவணத்தில் காணப்படுகின்றன.

பாப்பிரஸ் என்பது பண்டைய எகிப்தில் பாப்பிரஸ் என்ற நாணலிலிருந்து தயாரிக்கப்பட்ட தாள் ஆகும். அக்காலத்தில் எழுதுவதற்கு இதைத்தான் பயன்படுத்தினர்.

**சங்க காலம்:**

சங்க காலம் அல்லது வரலாற்றுத் தொடக்க காலம் தென்னிந்திய வரலாற்றின் சிறப்புமிக்க காலமாகும். இலக்கியங்கள், தமிழ் பிராமி கல்வெட்டுகள் உள்ளிட்ட எழுத்துப்பூர்வமான சான்றுகள் கிடைத்துள்ளதால் சங்க காலம், வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் இருந்து மாறுபட்டுச் சிறப்புடன் விளங்குகிறது. சங்க வாழ்க்கை முறை குறித்தும் சமூக அமைப்பு குறித்தும் அறிய உதவுகின்றது.

**காலமுறைமை:**

சங்க காலத்தை காலவரையறை செய்வதில் அறிஞர்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. சங்க கால இலக்கியம் கி.மு. (பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டிற்கும், பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவையாகப் பெருவாரியான அறிஞர்களின் கருத்துக்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அசோகருடைய கல்வெட்டுகளில் காணப்படும் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் குறித்த தகவல்களும், தமிழ் பிராமி கல்வெட்டுகளும், கிரேக்க, ரோமானிய குறிப்புகளும் இக்காலவரம்பை உறுதிப்படுத்துகின்றன. சங்கச் செய்யுள்கள் வரலாற்றின் தொடக்கக் காலத்தில் இயற்றப்பட்டவை எனவும். பின்னரே அவை தொகை நூல்களாகத் தொகுப்பட்டன எனவும் கருதப்படுகிறது.

அசோகரின் கல்வெட்டுகளில் பயன்படுத்திய பிராமி வரிவடிவத்திற்கு அசோகன் பிராமி என்று பெயர்.

**திணை:**

தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியத்தில் திணை என்ற கருத்து விவரிக்கப்பட்டுள்ளது. திணை என்பது குறிப்பிட்ட இயற்கை நிலவமைப்பையும், அதன் வாழ்வியல் முறைகளையும் குறிப்பதாகும். சங்கச் செய்யுள்கள் திணை அடிப்படையிலேயே தொகுக்கப்பட்டுள்ளன. மனித வாழ்க்கையையும், இயற்கையோடு மனிதர்கள் கொண்டிருந்த நெருக்கமான உறவையும் அவை படம் பிடித்துக் காட்டுகின்றன.

சங்க காலச் செய்யுள்களை பொருண்மை அடிப்படையில் பொதுவாக அகத்திணைப் பாடல்கள் என்றும் புறத்திணைப் பாடல்கள் என்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அகத்திணை என்பது காதல் வாழ்வையும் குடும்ப வாழ்வையும் அம்சங்களையும் குறிப்பாக, போர், வீரம் முதலிய பொருள்களைப் பேசுகிறது.

**ஐந்திணை:**

ஐந்து திணைகள் அல்லது ஐந்து வகை நிலப்பகுதிகள்.

ஐந்திணை என்பது தமிழ்நாட்டின் ஐந்து வகையான நிலப்பகுதிகளைக் குறிக்கும். இந்த ஐந்துவகை நிலங்களும் தனித்த பண்புகள் கொண்டவை. ஒவ்வொரு திணைக்கும் தனியே கடவுள், தொழில், மக்கள், பண்பாடு போன்றவை உண்டு. இந்த வகைப்பாடு ஐவகை நிலங்களில் வாழ்ந்த மக்களின் உண்மையான வாழ்க்கைச் சூழலைப் பிரதிபலிப்பதை அறிஞர்கள் பலர் விளக்கியுள்ளனர்.

**ஐவகை நிலங்கள் குறிஞ்சி, முல்லை. மருதம், நெய்தல். பாலை ஆகும்.**

- மலையும் மலைச் சார்ந்த பகுதிகளும் குறிஞ்சி
- காடும் காடு சார்ந்த பகுதிகளும் முல்லை
- வயலும் வயல்வெளி சார்ந்த பகுதிகளும் மருதம்
- கடலும் கடல் சார்ந்த பகுதிகளும் நெய்தல்
- வறண்ட நிலப்பகுதி பாலை

**சங்க கால அரசியல்: பண்டைய தமிழக அரசியல் நிலை:**

சங்க காலத்திற்கான அடித்தளம் இரும்புக் காலத்தில் வேர் கொண்டது. இரும்புக் காலத்தில் மக்கள் குழுக்களாக வாழ்ந்து வந்தனர். தலைவர்கள் அந்நிலப்பகுதிகளைத் தமது ஆளுகைக்குக்கீழ் கொண்டு வந்தனர். இவ்வாறு உருவான தலைவர்களில் இருந்தே வரலாற்றின் தொடக்கக் காலத்தில் வேந்தர்கள் தோன்றினார்கள். வேளிர்கள் என்போர் சங்க காலத்தின் குறுநிலமன்னர்கள் ஆவர்.

மௌரியப் பேரரசர் அசோகர் கலிங்கத்தையும் (ஒடிசா) ஆந்திரம், கர்நாடகத்தின் சில பகுதிகளையும் படையெடுத்து வென்றார்.

**மூவேந்தர்:**

சங்க கால ஆட்சியாளர்களில் சேர, சோழ பாண்டியர் என்ற மூவேந்தர்களே முன்னிலையில் இருந்தனர். அக்காலத்தைய பெரு நகரங்களும் துறைமுகப்பட்டினங்களும் மூவேந்தரின் ஆளுகைக்குக் கீழேயே இருந்தன.

அசோகரின் கல்வெட்டுகளில் கேரளபுத்திரர்கள் என்று குறிக்கப்பட்டுள்ள சேரர் தற்காலத்துக் கேரளத்தையும், தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியையும் ஆட்சிபுரிந்தனர். அவர்களது தலைநகராக வஞ்சியும், துறைமுகப்பட்டினங்களாக முசிறியும் தொண்டியும் இருந்தன. தமிழ்நாட்டில் தற்போதுள்ள கரூர் தான் வஞ்சி என்று சிலரும், கேரளத்தில் உள்ள திருவஞ்சைக்களம்தான் வஞ்சி என்று வேறு சிலரும் கூறுகின்றனர். சங்க இலக்கியமான பதிற்றுப்பத்து சேர அரசர்கள் குறித்தும் அவர்களுடைய நாட்டின் எல்லைகளைக் குறித்தும் பேசுகிறது. சேரர்கள் பனம்பூ மாலை அணிந்தனர். கரூரை அடுத்த புகலூரில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் சேர மன்னர்களின் மூன்று தலைமுறைகளைக் குறிப்பிடுகிறது. மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் கரூரில் கிடைத்துள்ளன.

சிலப்பதிகாரத்தின் பாட்டுடைத் தலைவியான கண்ணகிக்குக் கோயில் எழுப்பிய சேரன் செங்குட்டுவன் குறித்து சிலப்பதிகாரம் விரிவாகக் கூறுகிறது. சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவனின் தம்பி என்பது மரபு. வில்லும் அம்பும் சேரர்களின் இலச்சினையாகும்.

**சோழர்:**

காவிரி வடிநிலப்பகுதியையும் தமிழ்நாட்டின் வடபகுதிகளையும் ஆண்ட சோழர்களுக்கு உறையூர் தலைநகராக இருந்தது. காவிரி ஆறு வங்கக் கடலில் கலக்கும் பூம்புகார் என்ற காவிரிப்பூம்பட்டினம் அவர்களுடைய துறைமுகப்பட்டினமாக விளங்கியது. கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற சங்க காலப் புலவர் காவிரிப்பூம்பட்டினம் குறித்துப் பட்டினப்பாலை என்ற நெடிய பாடலை இயற்றியுள்ளார். காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த வணிகத்தைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. சோழ மன்னர்களில் தலைசிறந்தவராகப் போற்றப்படும் கரிகால் சோழன், காவிரி ஆற்றின் நீர்பெருக்கைத் திறம்படப் பயன்படுத்திப் பாசன வசதிகளைப் பெருக்கிப் பெரும் நிலப்பரப்பில் விவசாயம் தழைக்க வகை செய்த பெருமைக்குரியவர் ஆவார். பிற்காலச் சோழர்களின் ஆட்சியில் (10 முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை) உச்சத்தை எட்டிய பாசனநீர் மேலாண்மைக்குக் கரிகால்சோழன் ஆட்சியில்தான் வித்திடப்பட்டது. பாண்டியரையும் சேரரையும் ஏனைய குறுநில மன்னர்களையும் இலச்சினை புலி. அவர்கள் சதுரவடிவிலான செப்பு நாணங்களை வெளியிட்டனர். அவற்றின் முகப்பில் புலியின் உருவமும் மறுபுறத்தில் யானை மற்றும் புனிதச் சின்னங்களும் காணப்படுகின்றன.

**பாண்டியர்:**

பாண்டியர்கள் குறித்தும் அசோகரது கல்வெட்டுகளில் குறிப்புகள் உள்ளன. மதுரையைத் தலைநகராகக் கொண்டு தென்தமிழகத்தை அவர்கள் ஆண்டனர். தமிழ்ச் சங்கங்களை நிறுவி ஆதரவு அளித்தவர்கள் என்ற தமிழ் இலக்கியங்கள் பாண்டிய அரசர்களைப் போற்றுகின்றன. மாங்குளத்தில் கண்டறியப்பட்ட தமிழ் பிராமி கல்வெட்டுகள் பாண்டியன் நெடுஞ்செழியனைக் குறிப்பிடுகின்றது. நெடியோன், முடத்திருமாறன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி ஆகியோர் குறிப்பிடத்தக்க பாண்டிய மன்னர்கள் பாண்டியர்களின் இலச்சினை மீன் ஆகும்.

**வேளிர் / குடித்தலைமை:**

தமிழகத்தை ஆட்சிபுரிந்த மூவேந்தர்களைத் தவிரப் பல குறுநில மன்னர்களும் சிறிய பகுதிகளில் குடித்தலைமை ஏற்றிருந்தனர். குறுநில மன்னர்கள் வேளர் என்றும் அழைக்கப்பட்டனர். வேளரில் கடையேழு வள்ளல்களான பாரி, காரி, ஓரி. நள்ளி, பேகன், ஆய், அதியமான் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் இவர்களின் வள்ளல் தன்மையைச் சங்க இலக்கியம் விரிவாகப் பேசுகின்றது. புலவர்களோடு நெருக்கமான தொடர்பு கொண்டிருந்த வேளிர்களின் கொடைத்திறம் இலக்கியங்களில் போற்றப்படுகின்றது. வேளிரில் சிலர் மூவேந்தர்களோடு துணைநின்று அவர்களுக்காகப் போர் புரிந்தனர். வேறுசில வேளிர்கள் மூவேந்தரை எதிர்த்தும் போரிட்டுள்ளனர்.

**சங்ககாலச் சமூகம்:**

இரும்புக் காலத்தைச் சேர்ந்த பல சமுதாயங்கள் பழங்குடிச் சமுதாயங்களாக இருந்தன. சில, ஒரு குடித்தலைமையின் கீழ் ஒன்றுபட்டு வாழ்ந்திருந்தன. சங்க காலச் சமூகம், பழங்குடி குலத்தலைமைச் சமுதாயத்திலிருந்து ஒரு பெரும்பரப்பை ஆட்சி செய்யும் மன்னர் ஆட்சிமுறைக்கு மாறிக் கொண்டிருந்தது.

**சமூகப்பிரிவுகள்:**

சங்க காலத் தமிழ்ச் சமூகத்தில் சமூகப் பிரிவுகள் வேரூன்றத் தொடங்கின. பாணர், பரதவர், எயினர், உழவர், கானவர், வேட்டுவர், மறவர் போன்ற குழுக்கள் குலம் அடிப்படையிலான சமுதாயங்களாக (Clan based communites) இருந்தனர். அரசர்களும் குலத்தலைவர்களும் உயர்பிரிவினராகக் கருதப்பட்டனர். அந்தணர்கள் என்று அறியப்பட்ட பூசாரிகளும் இருந்தனர். கைவினைத் தொழில் புரிந்த பானை செய்வோர், உலோகவெலை செய்வோர் போன்ற பிரிவினர் சமூகத்தில் இருந்தனர். வட இந்தியாவில் காணப்பட்ட சாதி அமைப்பு தமிழகத்தில் வேரூன்றவில்லை. மாறாக ஐவகை நிலச் சூழல் மற்றும் செய்தொழில் அடிப்படையில் சமூகக் குழுக்களாக் காணப்பட்டனர். சங்க காலச் சமூகத்தினர் ஒரு வரம்புக்குட்பட்டே பொருள் நுகர்ச்சியில் ஈடுபட்டனர். எனினும் அரசர்களும். குலத்தலைவர்களும், வணிகர்களும் செழிப்பான வாழ்வில் திளைத்தனர். சமூகத்தின் விளிம்புநிலை மக்கள் மத்தியல் வறுமை நிலவியது. பல நிலங்களுக்குச் சென்ற இளைவாணவர்களாகிய பாணர்கள், செல்வம் படைத்தோரைப் பாடிப் பரிசில் பெற்று வாழ்க்கை நடத்தினர்.

வேளாண் வளர்ச்சியும், கால்நடை வளர்ப்பும் இயற்கை வளங்களையும் வனவிலங்குகளையும் ஓரளவுக்குப் பாதித்திருக்க வேண்டும். வேட்டையாடி உயிர்ப்பிழைத்த சில பிரிவினர் வனப்பகுதியில் வாழக் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கலாம் அல்லது காலப்போக்கில் உடல் உழைப்புத் தொழிலாளர்களாக மாறியிருக்கலாம். நன்செய் வேளாண் பகுதிகளில் வேளாண் வளர்ச்சிக்காகச் சில குறிப்பிட்ட சமூகப்பிரிவினர் பெருமளவுக்கு உடல் உழைப்பைத் தந்தனர்.

**பெண்கள்:**

சங்க இலக்கியங்களில் தாய், தலைவி, செவிலித்தாய், தோழி என்று பற்பல இடங்களில் மகளிர் குறித்த செய்திகள் பலவாறு கூறப்படுகின்றன. பாணர் குலப் பெண்கள், நாட்டிய மகளிர், பெண்பாற் புலவர்கள், அரச மகளிர் ஆகியோர் குறித்தும் ஐவகை நிலப்பகுதிகளைச் சார்ந்த பெண்கள் குறித்தும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. வெண்ணி என்ற ஊரைச் சார்ந்த வெண்ணிக்குயத்தியார் பெண்பாற் புலவராகக் கண்டறியப்படுகிறார். மகளிர் தினைப்புனம் காத்தல் குறித்தும், உமணர் குல மகளிர் உப்பு விற்றது குறித்தும் சங்கச் செய்யுள்கள் குறிப்பிடுகின்றன. இதன் மூலம் பெண்கள் முதல் நலை உற்பத்தியில் ஈடுபட்டதை அறியலாம். பெண்கள் தங்கள் கணவரோடு உயிர்துறக்க முன்வந்ததை அக்கால இலக்கியங்களில் சில இடங்களில் காணலாம்.

**பொருளாதாரம்:**

திணைக் கோட்பாடு விளக்குவது போலவே சங்க காலப் பொருளாதாரம் பல வகைப்பட்டதாக இருந்தது. வேளாண்மை, கால்நடைவளர்ப்பு, வணிகம், பணப்பரிமாற்றம், வேட்டையாடுதல், மீன் பிடித்தல் என்று மக்கள் வாழ்ந்த நிலங்களுக்கு ஏற்றவாறு தொழில்களும், அவை சார்ந்து பொருளாதாரமும் இருந்தன.

**வேளாண்மை உற்பத்தி:**

சங்க கால மக்களின் உயிர்வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்வதில் வேளாண்மையே முதலிடத்தில் இருந்தது. நெல், கரும்பு, சிறுதானியங்கள் பயிரிடப்பட்டன. நன்செய் நிலத்திலும் புன்செய் நிலத்திலும் பயிர்த்தொழில் நடைபெற்றது. ஆற்றுவடிநீர்ப் பகுதிகளிலும் குளம், ஏரி போன்ற நீர்நிலைகளால் பாசனவசதி பெற்ற பகுதிகளிலும் நெல் பயிரிடப்பட்டது. தானியங்கள் புன்செய் நிலத்தில் பயிரிடப்பட்டது. செந்நெல், வெண்நெல், ஐவனநெல் எனப் பலவகையான நெல்கள் குறித்து இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஆதிச்சநல்லூரிலும், பொருந்தல் என்ற இடத்திலும் மேற்கொண்ட அகழாய்வுகளில் தாழிகளுடன் நெல்லும் கிடைத்துள்ளது. வனப்பகுதிகளில், இடம்விட்டு இடம் மாறி சாகுபடி செய்யும் முறை புனம் எனப்பட்டது.

**கால்நடை வளர்ப்பு:**

பசு, எருமை, காளை உள்ளிட்ட மாடுகள், வெள்ளாடு செம்மறி ஆடுகளை வளர்த்தல் மூலம் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கினர்.

**சங்க கால கைவினை மற்றும் தொழிற் கூடங்கள்:**

கைவினைத் தயாரிப்புகளும், மிக நுண்ணிய வேலைப்பாடுடைய தொல்பொருள்களும் நகரவாழ்வின் முக்கியமான அடையாளங்களாகும். சங்க காலத்தில் பல்வேறு பொருள்களைத் தயாரிக்கும் நிபுணத்துவம் பெற்ற தொழிலாளர்கள் இருந்தனர். பொருள் உற்பத்தி செய்யும் அமைப்புகள் தொழிற் கூடங்கள் ஆகும்.

மட்கலன்களைச் செய்வது பரவலாக எல்லா இடங்களிலும் காணப்பட்டது. மக்களின் அன்றாட வாழ்வுக்குப் பலவிதமான மட்கலன்கள் தேவையாக இருந்தன. கரியநிறத்தவை, செந்நிற வண்ணம் பூசிய வெள்ளைக் கோடுகள் வரையப்பட்டவை (Russet – Coated), கருப்பு – சிவப்பு நிறத்தவை என்று பலவிதமான மட்கலங்கள் தயாரிக்கப்பட்டன.

குட்டூரிலும் இரும்பு உருக்கு உலைகள் அகழாய்வில் வெளிப்பட்டுள்ளன. இரும்பில் கருவிகள் செய்தோர் குறித்து சங்க இலக்கியத்தில் குறிப்புகள் உள்ளன. உழுகருவிகளும், வாள்,ஈட்டி, கத்தி போன்ற படைக்கருவிகளும் தயாரிக்கப்பட்டன.

**கல்லில் செய்த அணிகலன்கள்:**

சங்க காலத்து மக்கள் பலவிதமான அணிகலன்களை அணிந்துதங்களை அழகுபடுத்திக் கொண்டனர். எளிய மக்கள் பூக்களையும் இலை தழைகளையும் சூடிக்கொண்டதுடன், சுட்ட களிமண், உலோகம் ஆகியவற்றிலும் அணிகலன்கள் செய்து அணிந்தனர். செல்வர்கள் செம்பு, தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களில் செய்த நகைகளில் நவமணிகளையும் பதித்து அழகுபடுத்தி அணிந்தனர்.

**தங்க ஆபரணங்கள்:**

தங்கத்தால்தான் அணிகலன்களைச் சங்க கால மகளிர் பரவலாக அணிந்தனர். ரோமானியர்களின் நாணயங்களைக் கொண்டும் நகைகள் செய்யப்பட்டன. கேரளத்தின் பட்டணத்தில் பொன்னை உருக்கும் உலைகள் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. பெருங்கற்காலத்தைச் சேர்ந்த அகழாய்வுக் களங்களான சுத்துக்கேணி, ஆதிச்சநல்லூர், கொடுமணல் ஆகிய இடங்களிலும், அரிக்கமேடு, கிழடி, பட்டணம் ஆகிய பழங்கால நகரங்களிலும் தங்க அணிகலன்கள் கிடைத்துள்ளன.

**கண்ணாடி மணிகள்:**

கண்ணாடி மணிகளைச் செய்யும் முறையை அக்கால மக்கள் அறிந்திருந்தனர். சிலிக்கா மற்றும் பிற பொருள்களை உலையிலிட்டு உருக்கி நீண்ட சிறிய குழல்களாக்கிய பின்னர் அவற்றைச் சிறுசிறு மணிகளாக நறுக்கினர். கண்ணாடி மணிகள் பல்வேறு வண்ணங்களிலும் வடிவங்களிலும் தயாரிக்கப்பட்டன. அரிக்கமேட்டிலும், கடலுருக்கு அருகில் குடிக்காடு என்ற ஊரிலும் கண்ணாடி மணி செய்யும் தொழிலகங்கள் இருந்துள்ளன. விலை உயர்ந்த நவமணிக் கற்களை வாங்க இயலாதவர்கள் கண்ணாடி மணிகளை அணிந்திருக்கலாம் எனத் தெரிகிறது.




கீழடி அகழாய்வின்போது ஒரு முத்து கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சங்குகளை அரிந்து வளையல் செய்யும் தொழிலும் சங்க காலத்தில் சிறப்புற்றிருந்தது. பாம்பன் கடல்பகுதிகளில் சங்குகளைச் சேகரித்தனர். கைவினைக் கலைஞர்கள் அவற்றை அழகுற அறுத்து எழிலான வளையல்களைச் செய்தனர். முழுமையான சங்குகளும், உடைந்த வளையல்களும் பல தொல்லியல் இடங்களில் கிடைத்துள்ளன. பெண்கள் சங்கு வளையல்கள் அணிந்திருந்தது குறித்துச் சங்க இலக்கியங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.

**துணி நெசவு:**

துணி நெசவு இன்னொரு முக்கியத் தொழிலாகும். நூல் நூற்கும் கதிர்களும் துண்டுத் துணிகளும் கொடுமணலில் கிடைத்திருக்கின்றன. கலிங்கம் மற்றும் பிற வகைத் துணிவகைகள் குறித்து இலக்கியங்களில் குறிப்புகள் உள்ளன. பெரிப்ளஸ் என்ற நூலில் தமிழகத்தில் துணிகள் நெய்யப்பட்டது குறித்த தகவல் உள்ளது.

நூல் நூற்கும் கதிர் (Spindle whorl) பருத்தியிலிருந்து நூலை எடுப்பதற்கு நூல் நூற்கும் கதிர் பயன்படுகிறது.

**பண்டமாற்றம், வணிகம், வணிகர்கள், வணிகப் பெருவழிகள்**

நெல் முதலான தானியங்கள், கால்நடைவளர்ப்பு, கைவினைப் பொருள் தயாரிப்பு போன்றவை குறித்து அறிந்தோம். ஆனால் மக்கள் வாழ்ந்த எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களையும் தயாரிக்க இயலாது. ஓரிடத்தில் கிடைக்கின்ற மூலப்பொருள்களும், வளமும், தொழில் நுட்பக் கலைஞர்களும் மற்ற இடங்களில் கிடைப்பதில்லை. எடுத்துக்காட்டாக, மலைப் பகுதிகளில் கடல் மீனும் உப்பும் கிடைக்காது. கடற்கரையின் மணற்பகுதிகளில் நெல் முதலான தானியங்களைப் பயிரிட முடியாது. ஓரிடத்தில் கிடைக்கும் பொருள்களை மற்ற இடங்களில் உள்ளவர்கள் தம்மிடம் உள்ள பொருள்களைக் கொடுத்து மாற்றிக்கொள்வார்கள். இதற்குப் பண்டமாற்று என்று பெயர்.

**வணிகர்கள்:**

தமிழ் பிராமி கல்வெட்டுகளில் வணிகன். நிகமா ஆகிய சொற்கள் ஆளப்படுகின்றன. பொன் வணிகர்கள், துணி வணிகர்கள், உப்பு வணிகர்கள் என்று குறிப்பிட்ட பண்டத்தை

மட்டும் வியாபாரம் செய்த வணிகர்களும் இருந்தனர். உப்பு வணிகர்களை உமணர்கள் எனப்பட்டனர். அவர்கள் தம் குடும்பத்தோடு மாட்டு வண்டியில் சென்று வணிகம் செய்தனர்.

**போக்குவரத்து முறைகள்:**

மாட்டு வண்டிகளும் விலங்குகளும் சரக்குப் போக்குவரத்திற்குப் பயன்பட்டன. தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களும் வணிக வழிகளால் இணைக்கப்பட்டன. கடற்பயணம் மேற்கொள்ள உதவிய கலம், பரி, ஓடம், தோணி, தெப்பம், நாவாய் போன்றவை கடற்போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்டது குறித்து இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**பண்டமாற்றமும் நாணயங்களும்:**

பண்டமாற்றுமுறை மூலமாகவே மக்களிடையே பெருமளவில் பரிமாற்றம் நடைபெற்றது. அரிசியைக் கொடுத்து மீனைப் பெற்றனர். உப்பு விலைமதிப்புடையதாகக் கருதப்பட்டது. எனவே ஒரு குறிப்பிட்ட அளவு உப்புக்கு அதே அளவு அரிசி பரிமாறிக்கொள்ளப்பட்டது. சங்க கால சேர, சோழ, பாண்டிய மற்றும் மலையமான் ஆகிய அரசர்களின் நாணங்கள் பெருமளவு கிடைத்திருப்பதைக் கொண்டு, அவை பரவலாகப் புழக்கத்தில் இருந்தன என்று அறியமுடிகிறது.

**தமிழகமும் வெளிநாட்டுத் தொடர்புகளும்:**

கிழக்கிலும் மேற்கிலும் பல வெளிநாடுகளுடன் தமிழர்கள் வணிகத் தொடர்பு வைத்திருந்தனர். ரோமானியக் கப்பல்கள் பருவக்காற்று வீசும் சமயத்தில் மேலைக்கடலான அரபிக்கடலைக் கடந்து தமிழகக் கடற்கரைகளுக்கு வந்தன. மிளகு போன்ற நறுமணப் பொருள்களும், யானைத் தந்தம், நவமணிகள் உள்ளிட்ட அரிய பொருள்களும் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி ஆயின. தங்கம், வெள்ளி, செம்பு உள்ளிட்ட உலோகங்களும் இறக்குமதி செய்யப்பட்டன.

கிரேக்க, ரோமானிய, மேற்கு ஆசிய மக்கள் உள்ளிட்ட மேற்கத்தியர்கள் யவனர் என்று அழைக்கப்படுகின்றனர். யவனர் என்னும் சொல் கிரேக்கப் பகுதியான 'அயோனியா'விலிருந்து வந்தது.

**தமிழ்நாட்டிலிருந்து செங்கடல் கரைக்கு:**

செங்கல் கடற்கரையில் உள்ள பெர்னிகே துறைமுகத்தில் ஏழரை கிலோ மிளகு இருந்த இந்தியப் பானையும், தேக்கு மரப்பலகைத் துண்டுகளும், தமிழ் பிராமி எழுத்துகள் பொறித்த (தமிழக) பானை ஓடு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டன.

செங்கல் கடற்கரையில் பெர்னிகே துறைமுகத்திற்கு வடபகுதியில் உள்ள இன்னொரு துறைமுகம் குசேர் அசல் காதிம் என்பதாகும். இந்த இடத்தில் தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட மூன்று சுடுமண் பாண்டத் துண்டுகள் கண்டறியப்பட்டன. அவற்றில் பனை ஓறி, கண்ணன் (கணன்), சாத்தன் (சாதன்) என எழுதப்பட்டுள்ளது.

'பெரும் பத்தன் கல்' என்ற பெயரில் தாய்லாந்து நாட்டில் உள்ள குவான் லுக் பாட் என்ற இடத்தில் அரிய கல் ஒன்று கிடைத்துள்ளது. இக்கல், பெரும்பத்தன் என்பவரால் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். மேலும் அவர் ஒரு பொற்கொல்லராக இருக்க வேண்டும். அந்தக் கல், தங்கத்தின் தரத்தை அறிய உதவும் உரைகல் ஆகும்.

**நகரங்கள் மற்றும் துறைமுகங்களின் தோற்றம்:**

சங்க காலத்தில்தான் தமிழ்நாட்டில் நகரங்கள் முதன் முறையாக உருப்பெற்றன. சாலைகளும் குடியிருப்புப் பகுதிகளும் கொண்ட திட்டமிட்ட நகரங்களில் செங்கற்களால் ஆன கட்டிடங்கள் கட்டப்பட்டன. வீடுகளுக்குக் கூரையாக ஓடுகள் வேயப்பட்டன. உறைகிணறுகளும், சேமிப்புக் கிடங்குகளும் இருந்தன. சில நகரங்கள் துறைமுகப்பட்டினங்களாகவும், கைவினைத் தொழில் மையங்களாகவும் இருந்தன. கிழக்குக் கடற்கரையில் அமைந்த அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், அழகன்குளம், கொற்கை ஆகிய நகரங்களும். கேரளத்தின் பட்டணம் என்ற நகரும் துறைமுகங்களாகவும் விளங்கியவை. காஞ்சிபுரம், உறையூர், கரூர், மதுரை, கொடுமணல் ஆகிய நகரங்கள் உள்நாட்டு வணிக மையங்களாகத் திகழ்ந்தன. இம்மையங்களில் பல வகைப்பட்ட பொருள்களும் பண்டங்களும் உற்பத்தி செய்யப்பட்டுப் பல்வேறு பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

**நகர்மையம் என்பது என்ன?**
திட்டமிட்ட வடிவமைப்பும், செங்கல் கட்டுமானங்களும் கொண்ட மக்கள் வசிப்பிடமே நகரம் ஆகும். வேளாண்மை, கால்நடைவளர்ப்பு அல்லாத ஏனைய தொழில்களில் ஈடுபடுகின்ற மக்கள் அவ்விடங்களில் பெருமளவில் வாழ்வார்கள். நகரங்களில் பற்பல உற்பத்திப் பணிகள் நடைபெறும்.

எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் இந்த நகரங்கள் அளவில் பெரியவை. நகரங்களைத் தவிர எண்ணற்ற சிற்றூர்களிலும் மக்கள் வாழ்ந்திருந்தனர். வெண்கலப் பொருள்கள், மணிகள், சங்கு வளையல்கள், கண்ணாடி மணிகள், தமிழ் பிராமி எழுத்துகளில் மக்களின் பெயர் பொறித்த மட்கலங்கள் போன்றவை இந்த இடங்களில் கிடைத்துள்ளன.

**நம்பிக்கைகளும் வழிபாட்டுமுறையும்:**

சங்க காலச் சுமுகம் மற்றும் பொருளாதார அமைப்பில் பன்மைத்துவம் காணப்படுவது போலவே மக்களின் வழிபாட்டு முறைகளிலும் பன்மைத்துவம் காணப்படுகிறது. ஆவி வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு போன்றவை சங்க காலத்தில் இருந்தன.

ஐந்திணைகளுக்கும் உாயி வழிபாட்டு கடவுள்களைத் தொல்காப்பியம் கட்டுகிறது. குறிஞ்சிக்கு முருகன், முல்லைக்குத் திருமால், மருதத்திற்கு இந்திரன், நெய்தலுக்கு வருணன், பாலைக்குக் கொற்றவை என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

எனினும் மக்கள் வீரமரணம் எய்திய வீரர்களையும், தமது குல மூதாதையர்களையும் அதிக அளவில் வழிபட்டனர். இயற்கைக்கு மீறிய ஆற்றல் கொண்ட அணங்கு குறித்துச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது.

குகைகளில் காணப்படும் தமிழ் பிராமி கல்வெட்டுகள் மூலம் சமண சமயம் வழக்கில் இருந்தமை தெரிகிறது. வேள்விகள் மேற்கொள்ளப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. சில இடங்களில் புத்த சமயமும் இருந்தது. வெவ்வேறு குழுக்கள் வேறுவேறான வழிபாட்டு முறைகளைக் கொண்டிருந்தனர்.

**நுண்கலைகள்:**

சங்க காலத்தில் பலவகையான கலைகளும் செழித்திருந்தன. சமய சடங்குகளின் போது நிகழ்த்தப்படும் ஆட்டங்களில் ஒரு வகைக்கு வெறியாட்டம் என்று பெயர். செய்யுள் இயற்றல், இசைக்கருவிகளை இசைத்தல், நடனமாடுதல் ஆகியவற்றைப் பலரும் அறிந்திருந்தனர். சங்க காலத்து உணவு முறைகள் குறித்து இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது. மகளிர் தம் கண்களுக்கு மைதீட்டுவதற்குச் செம்பினால் ஆன மெல்லிய குச்சிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இக்குச்சிகள் பல அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதனால் தங்கள் தோற்றப் பொலிவிலும் அவர்கள் அக்கறை கொண்டிருந்தனர் எனத் தெரிகிறது.

**கொடுமணல்**
கொடுமணல், தமிழ்நாட்டிலன் ஈரோடுக்கு அருகில் உள்ளது. சங்க இலக்கியமான பதிற்றுப்பத்தில் குறிப்பிடப்படும் கொடுமணம் தான் இவ்வூர் எனக் கருதப்படுகிறது. பெருங்கற்கால முதுமக்கள் தாழிகளும் இரும்பு, மணிக்கற்கள். சங்கு வேலைப்பாடுகள் குறித்த சான்றுகளும் இங்கே கிடைத்துள்ளன. தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட 300 க்கும் மேற்பட்ட மட்கலப் பொறிப்புகள் இந்த ஊரில் கிடைத்துள்ளன.

**மதுரைக்கு அருகே உள்ள கீழடி**
மதுரையிலிருந்து ராமேஸ்வரம் செல்லும் நெடுஞ்சாலையில் சிலைமான் என்ற ஊருக்கு அருகில் கீழடி உள்ளது. இங்கே பள்ளிச் சந்தைத்திடல் என்று அழைக்கப்படும் பரந்த தென்னந்தோப்பில் இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறையினர் மேற்கொண்ட அகழாய்வுகளின் மூலம் சங்க காலத்து நகரம் புதையுண்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. செங்கங் கட்டுமானங்கள்,கழிவுநீர் வழிகள், தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட மட்கல ஓடுகள், செம்மணிக்கற்களாலான அணிகள், முத்து, இரும்பு பொருள்கள், விளையாட்டுப்பொருள்கள்,

கண்ணுக்கு மை தீட்டும் செப்புக் கம்பி போன்றவை கண்டறியப்பட்டுள்ளன. இன்னும் அகழாய்வுகளை மேற்கொண்டால், கைத்தொழில் முறைகள் மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகள் குறித்தும் பல தகவல்கள் வெளிவரும்.

**பட்டணம், கேரளா**

கேரளத்தின் எர்ணாகுளம் மாவட்டத்தில் உள்ள வடக்குப் பரவூர் என்ற ஊரை ஒட்டிய வடக்கேகரா என்ற சிற்றூரின் அருகே பட்டணம் அமைந்துள்ளது. மேலை நாடுகளோடும் கீழை நாடுகளோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்த பழங்காலத் துறைமுகம்தான் பட்டணம்.

# 7.இடைக்கால இந்தியாவில் அரசும் சமூகமும் சோழர்கள் முதல் மொகலாயர்கள் வரை

**அறிமுகம்:**

இந்திய வரலாற்றின் இடைக்காலம் கி.பி (பொ.ஆ) 7ஆம் நூற்றாண்டு முதல் (ஹர்ஷ-சாளுக்கியப் பேரரசுகளின் காலம்) 16 ஆம் நூற்றாண்டில் மொகலாயப் பேரரசின் தொடக்கம் வரை எனவும் கி.பி (பொ.ஆ) 18ஆம் நூற்றாண்டு வரை நவீன காலத்தின் தொடக்கம் எனவும் வரையறை செய்யப்படுகிறது. இக்காலப் பகுதியில் இந்தியாவின் பலபகுதிகள் முக்கியத்துவம் வாய்ந்த, உறுதியான அரசியல் மாற்றங்களுக்கு உள்ளாயின. இம்மாற்றங்கள் சமூக-பொருளாதார அடிக்கட்டுமானங்களையும் நாட்டின் வளர்ச்சியையும் குறிப்பிடத்தகுந்த அளவிற்கு மாற்றியமைத்தது.

**முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் மாற்றங்கள்:**

- முதலாம் இராஜராஜன் காலத்தில் தொடங்கிய சோழப் பேரரசின் விரிவாக்கம் பாண்டிய பல்லவ அரசுகளை மறையச் செய்து வடக்கே ஒரிசா வரை பரவியது.

- பன்னிரெண்டாம் நூற்றாண்டிலிருந்து பல நூற்றாண்டு காலம் நீடித்த முஸ்லிம்களின் ஆட்சி டெல்லியில் தொடங்கி வட இந்தியா முழுவதும் பரவியது. இஸ்லாம் மதம் இந்தியா முழுவதும் பரவியது.

- 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் சோழப் பேரரசின் மறைவைத் தொடர்ந்து அதன் விளைவாக தென்னிந்தியாவில் பல சமயம் சார்ந்த அரசுகள் தோன்றின. இறுதியில் தென்னிந்தியா முழுவதிலும் தனது ஆட்சி அதிகாரத்தை நிறுவிய விஜயநகரப் பேரரசு எழுச்சி பெற்றது. அது தென்னிந்தியாவில் சமயம் சார்ந்த ஆட்சியின் கோட்டையாகக் கருதப்பட்டது.

- கி.பி (பொ.ஆ) 1526 இல் பாபர் இப்ராஹிம் லோடியை தோற்கடித்ததிலிருந்து வட இந்தியாவில் மொகலாயர் தலைமையில் முஸ்லிம்களின் ஆட்சியை ஒருங்கிணைத்து வலிமைப்படுத்தும் பணி துவங்கியது. மொகலாயப் பேரரசு அதன் புகழின் உச்சத்தில் காபூலிலிருந்து குஜராத் மற்றும் வங்காளம் வரையிலும் காஷ்மீரத்திலிருந்து தென்னிந்தியா வரையிலும் பரவியிருந்தது.

- கி.பி. (பொ.ஆ) 1498 இல் மேலைக்கடற்கரையில் வந்திறங்கிய போர்ச்சுகீசியர்களைத் தொடர்ந்து ஏனைய ஐரோப்பியரும் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர்.

**அரசியல் மாற்றங்கள் கி.பி. பொ.ஆ) 1000 – 1700**
**வட இந்தியா : இஸ்லாமிய வருகை:**

முஸ்லிம்கள் ஆட்சி, 12 ஆம் நூற்றாண்டின் இறுதியில் முகமது கோரியால் டெல்லியில் நிறுவப்பட்டது. கி.பி. (பொ.ஆ) 9 ஆம் நூற்றாண்டிலேயே அராபிய வணிகர்கள் மேலைக் கடற்கரைத் துறைமுகங்களில் குறிப்பாகக் கேரளத் துறைமுகங்களில் வணிகம் செய்தனர். அதைப்போலவே கி.பி. (பொ.ஆ) 8 ஆம் நூற்றாண்டு முதலாகவே மேற்காசியாவைச் சேர்ந்த முஸ்லிம் படையெடுப்பாளர்கள் குஜராத்திலும் சிந்துவிலும் தங்கள் சுல்தானியங்களை நிறுவி ஆட்சி புரிந்து வந்தனர்.

முஸ்லிம் ஆட்சியின் தாக்கம் அலாவுதீன் கில்ஜியின் (கி.பி. (பொ.ஆ) 1296 – 1316) ஆட்சியின் போது உணரப்பட்டது. ஆட்சியை விரிவுபடுத்துதல் என்பதைக்காட்டிலும் செல்வங்களைக் கவர்ந்து செல்லும் நோக்கத்துடனே தென்னிந்தியாவின் மீது பல படையெடுப்புகளை அவர் மேற்கொண்டார். தேவகிரி (அவுரங்காபாத்திற்கு அருகில்) அலாவுதீன் கில்ஜியால் கைப்பற்றப்பட்டது. 'தௌலதாபாத்' என மறுபெயர் சூட்டப்பெற்ற இந்நகரம் வளர்ந்து வரும் அவருடைய நாட்டின் இரண்டாவது வலிமைமிகுந்த தளமாயிற்று. கி.பி. (பொ.ஆ) 1300 களின் தொடக்கப் பத்தாண்டுகளில் அலாவுதீன் கில்ஜியின் அடிமையும், படைத் தளபதியுமான மாலிக்கபூரின் தலைமையில் தென்னிந்தியப் படையெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டது.

அலாவுதீன் கில்ஜிக்குப் பின்னர் ஆட்சி பொறுப்பேற்ற துக்ளக் வம்ச அரசர்களும் தங்கள் படைகளைத் தெற்கு நோக்கி அனுப்பினர். இதன் விளைவாகப் பொதுவாக தனிமைப்பட்டிருந்த நாட்டின் தென்பகுதி வட இந்திய முஸ்லிம் அரசர்களின் சுற்று வட்டத்திற்குள் வந்து சேர்ந்தது. தக்காணத்தின் பலபகுதிகளுக்கு ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். மதுரையில் ஒரு சுல்தானிய ஆட்சியே நிறுவப்பட்டது.

முகமதுபின் துக்ளக்கின் ஆட்சியின்போது, தௌலதாபாத்தில் கலகம் வெடித்தது. அதன் விளைவாக அலாவுதீன் பாமான்ஷா கிபி. (பொ.ஆ) 1347 இல் பாமினி சுல்தானியத்தை உருவாக்கினார். பிடார் அவ்வரசின் தலைநகரானது. பாமினி சுல்தானியம் சுமார் நூற்றைம்பது ஆண்டு மக்களிடையே மதிப்புப் பெற்றிருந்த அரசியல் மேதையும் விசுவாசமிக்க அசைச்சருமான மகமுத் கவான் என்பவரின் சிறந்த நிர்வாகமாகும். அவருடைய இறப்பிற்குப் பின்னர் பல ஆளுநர்கள் தங்களைச் சுதந்திர அரசர்களாக அறிவித்துக் கொண்டனர். பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் தக்காணத்தில் ஐந்து சுல்தானியங்கள் உதயமாயின. அவை பீஜப்பூர், கோல்கொண்டா, அகமதுநகர், பிரார், பிடார் ஆகியனவாகும். இவற்றில் அளவில் பெரியதான பீஜப்பூரும்ட கோல்கொண்டாவும் பெருமளவு பொருளாதார வளர்ச்சியைப் பெற்றன. வணிகமும் பெருமளவில் விரிவடைந்தது. கி.பி. (பொ.ஆ) 1660 களில் இத்தக்காணச் சுல்தானியங்களை ஔரங்கசீப் கைப்பற்றினார். தெற்கே மெட்ராஸ் (சென்னை) உட்பட அனைத்துப் பகுதிகளும் மொகலாயப் பேரரசின் பகுதிகளாயின.

**தெற்கில் சோழப் பேரரசு:**

சோழப் பேரரசின் விரிவாக்கம் முதலாம் ராஜராஜன் காலத்தில் தொங்கியது. பல்லவ அரசு ஏற்கனவே சோழ அரசோடு இணைக்கப்பட்டுவிட்டது. பாண்டிய அரசு சுதந்திர அரசாக இருந்தபோதிலும் சோழர்களுக்குக் கட்டுபட்டதாகவே இருந்தது. முதலாம் ராஜேந்திரன் காலத்தில் சோழப் பேரரசு மேலும் விரிவடைந்தது. தனது படைகளை வடகிழக்கு இந்தியாவில் கங்கை நதிவரை நடத்திச் சென்றார். மேலும் தனது கப்பற்படைகளை ஸ்ரீவிஜய சைலேந்திர அரசுக்கு எதிராகவும் கடாரம் (கேடா) (இந்தோனேசியாவில் ஒரு பகுதி) மற்றும் ஸ்ரீலங்காவிற்கு எதிராகவும் அனுப்பிவைத்தார். இதனால் ''கங்கையும், கடாரமும் கொண்ட சோழன்'' எனும் பட்டத்தைப் பெற்றார். ஸ்ரீலங்கா சோழப் பேரரசின் ஒரு மாகாணமாக சில பத்தாண்டுகள் இருந்தது. ராஜேந்திர சோழனின் பேரன் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் கீழைச் சாளுக்கிய அரசோடு மேற்கொள்ளப்பட்ட திருமண உறவுகள் மூலம் பேரரசு மேலும் வலுப்படுத்தப்பட்டு ஒரிசாவின் எல்லைவரை பரவியது.

சேழர்கள் காலத்தில் தென்கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் சீனா உடனான வணிகம் பெருமளவில் விரிவடைந்தது. தமிழ் வணிகர்களோடு ஏற்பட்ட இடைவிடாத தொடர்பினால் இந்தியப் பண்பாடு மற்றும் கலையின் செல்வாக்கு தென்கிழக்கு ஆசியாவில் பரவியது. அதை கம்போடியாவிலுள்ள நேர்த்திமிக்க, மிகப்பிரமாண்டமான அங்கோர் - வாட் கோவில்களில் நாம் பார்க்கலாம்.

**விஜயநகர் மற்றும் தென்னிந்தியா சோழர்களுக்குப் பிந்தைய காலம்:**

சோழப் பேரரசின் சரிவு 13 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தொடங்கியது. கடைசி சோழப் பேரரசர் மூன்றாம் ராஜேந்திரனுக்குப் பின்னர் கி.பி. (பொ.ஆ) 1279 இல் சோழப் பேரரசு முற்றிலும் வீழ்ந்தது. இதனைத் தொடர்ந்து இப்பகுதிகளில் பல அதிகார மையங்கள் உருவாயின. இதற்கும் தெற்கே பாண்டிய அரசர்கள் சோழர்கள் காலத்தில் தாங்கள் இழந்த செல்வாக்கையும் புகழையும் மீண்டும் நிலைநிறுத்தும், முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். 13 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஜடாவர்மன் சுந்தரபாண்டியனைப் போன்ற அறிவுக் கூர்மையுடைய மன்னர்களால் பாண்டிய நாடு ஆளப்பட்டது. வடக்கே பேலூரையும் பின்னர் ஹளபேடுவையும் தலைநகராகக் கொண்ட ஹொய்சாள அரசு அமைந்திருந்தது. இவ்வரசு இன்றைய கர்நாடக மாநிலத்தின் பெரும்பகுதியை உள்ளடக்கியதாய் இருந்தது. காகத்தியர்கள் வாராங்கல்லிலிருந்து (தெலுங்கானா) ஆட்சி செய்தனர். தேவகிரியில் யாதவர்கள் அட்சி புரிந்தனர். 13 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தேவகிரி அலாவுதீன் கில்ஜியின் படையெடுப்பினால் வீழ்ந்தது. தென்னிந்திய அரசுகள் தங்களிடையே அமைதியான ஒத்துழைப்பைக் கொண்டிராத காரணத்தினாலும் அவர்களிடையே ஏற்பட்ட உட்பூசல்களும், போர்களும் மோதல்களும் வீழ்ச்சிக்கு வழிவகுத்தன.

விஜயநகர அரசு (பின்னர் பேரரசு) உருவாக்கப்பட்டதே தென்னிந்தியாவின் இடைக்கால வரலாற்றின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த வளர்ச்சியாகும். சங்கம வம்சத்தின் ஹரிஹரர் மற்றும் புக்கர் ஆகிய இரு சகோதரர்களால் இவ்வரசு நிறுவப்பட்டது. இவர்களே சங்கம வம்சத்தின் முதல் அரசர்கள் ஆவர். துங்கபத்ரா நதியின் தென்கரையில் புதிய தலைநகர் ஒன்றை உருவாக்கி அதற்கு விஜயநகரம் (வெற்றியின் நகரம்) ஹரிஹரர் அரசராக முடிசூட்டப்பெற்றார். சங்கம வம்ச அரசர்கள் விஜயநகரை சுமார் 150 வருடங்கள் ஆட்சி செய்தனர். பின்னர் வந்த சாளுவ வம்ச அரசர்கள் குறுகிய காலமே ஆட்சி புரிந்தனர். இதன் பின்னர் ஆட்சி செய்தவர்கள் துளுவ வம்ச அரசர்களாவர். விஜயநகர அரசர்களுள் மாபெரும் அரசரான கிருஷ்ணதேவாயர் இவ்வம்சத்தைச் சேர்ந்தவராவார்.

| |
|---|
| அரசு : ஒரு அரசரால் அல்லது அரசியால் ஆளப்படும் ஒரு நாடு<br>பேரரசு: ஒரு அரசரால் அல்லது அரசியால் ஆளப்படும் பல நாடுகளை கொண்ட பெரும் நிலப்பரப்பு. |

பேரரசாக விரிவடைந்தபோது தெற்கேயிருந்த ஹொய்சாள தமிழகப் பகுதியில் இருந்த அரசுகளும் விஜயநகர அரசோடு இணைத்துக் கொள்ளப்பட்டன. விஜயநகர அரசர்கள் தொடர்ந்து பாமினி அரசுகளோடும் சமயம் சார்ந்த அரசுகளான கொண்டவீடு மற்றும் ஒரிசாவோடும் தொடர்ந்து போர்கள் செய்து கொண்டிருந்தனர். இறுதியில் கி.பி (பொ.ஆ.) 1565 இல் தலைக்கோட்டைப் போரில் தக்காண சுல்தான்களின் கூட்டுப்படையினர் விஜயநகரைத் தோற்கடித்தனர். விஜயநகரப் பேரரசர்கள் இதன் பின்னர் தங்கள் தலைநகரைத் தெற்கேயுள்ள பெனுகொண்டாவிற்கும் இறுதியில் திருப்பதி அருகேயுள்ள சந்திரகிரிக்கும் மாற்றினர். இறுதியாக இப்பேரரசு (அல்லது அதில் மீதமிருந்த பகுதிகள்) பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வீழ்ச்சியுற்றது.

**மொகலாயர்கள் கி.பி. (பொ.ஆ) 1526 – 1707)**

மொகலாயப் பேரரசு நிறுவியவர் பாபர் ஆவார். கி.பி. (பொ.ஆ) 1526 ஆம் ஆண்டு பானிபட் போர்க்களத்தில் இப்பராகிம் லோடியை வெற்றி கொண்ட பின்னர் பாபர் இவ்வரசை நிறுவினார். முதல் ஆறு மொகலாயப் பேரரசர்கள் மாபெரும் மொகலாயர்கள்' எனக் குறிப்பிடப்படுகின்றனர். அவர்களில் கடைசி மாபெரும் மொகலாயப் பேரரசர் ஔரங்கசீப் ஆவார். நாடுகளைப் கைப்பற்றியதன் மூலமும், ராஜஸ்தானத்து சமயம் சார்ந்த அரசுகளோடு நல்லுறவைப் பேணியதின் மூலமும் அக்பர் தனது பேரரசை ஒருங்கிணைத்து வலிமைப்படுத்தினார். ஔரங்கசீப்பிற்குப் பின்னர் முகலாயப் பேரரசு சிதையத்

தொடங்கியிருந்தாலும் கி.பி. (பொ.ஆ) 1857 இல் ஆங்கிலேயர்கள் இதனை முடிவுக்குக் கொண்டு வரும் வரை கிட்டத்தட்ட மறைந்துபோன ஒன்றாக இருந்து வந்தது.

மகாராஷ்டிராவில் பதினேழாம் நூற்றாண்டில் ஒரு அதிகார மையம் எழுச்சி பெற்றது. சிவாஜியின் தலைமையில் மராத்தியர்கள் மேற்கு இந்தியப் பகுதிகளில் மொகலாயரின் அதிகாரத்தைப் பெருமளவில் மதிப்பிழக்கச் செய்தனர். மொகலாயப் பேரரசு அதன் உச்சத்தில் இரந்தபோது இந்தியத் துணைக் கண்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் பரவியிருந்தது. கேரளத்தின் தென்மேற்குப்பகுதி, தென் தமிழகப் பகுதிகள் ஆகியவை மட்டுமே மொகலாயரின் நேரடி ஆட்சிக்கு உட்படாத பகுதிகளாக இருந்தன.

**ஐரோப்பியரின் வருகை:**

பதினைந்தாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு ஒரு நேரடி கடல் வழியைக் கண்டறிவதில் ஐரோப்பியர்கள் தீவிரமாய் ஈடுபட்டிருந்தனர். ஏற்கனவே இருக்கிற, மேற்காசியா மற்றும் மத்தியதரைக்கடல் பகுதிகள் வழியாகச் செல்கிற நிலவழிக்கு மாற்றாக இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்தியாவிலிருந்து நடைபெறும் நறுமணப் பொருட்களின் வணிகம் அலெக்ஸாண்டிரியா நகர்வரை முஸ்லிம்களின் கட்டுப்பாட்டின் கீழிருந்தது. இந்தியாவுடன் நேரடித்தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் ஐரோப்பியர்கள் நறுமணப் பொருட்களின் வணிகத்தை தங்களுடைய நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்துவிடலாம். மேலும் அப்பொருட்களைத் தங்களுக்குச் சாதகமான விலையிலும் கொள்முதல் செய்யலாம் என எண்ணினர். கி.பி. (பொ.ஆ 1498 இல் வாஸ்கோடகாமா, தென்னாப்பிரிக்காவின் நன்னம்பிக்கைமுனையைச் சுற்றிக் கொண்டு கேரளக் கடற்கரையை (கள்ளிக்கோட்டை) வந்தடைந்தார். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் கி.பி. (பொ.ஆ) 1503 இல் போர்ச்சுக்கீசியர்கள் கொச்சியில் தங்கள் முதல் கோட்டையைக் கட்டினர். கி.பி. (பொ.ஆ) 1510 இல் கோவா கைப்பற்றப்பட்டு இந்தியாவில் போர்சுகீசிய அரசின் மையமாக மாறியது. தங்களுடைய கப்பற்படை வலிமையின் காரணமாகப் போர்ச்சுகீசியர்களால் கிழக்கு ஆப்பிரிக்காவிற்கும் மலாக்காவுக்கும் இடைப்பட்ட பல துறைமுகங்களைக் கைப்பற்ற முடிந்தது. மேலும் இப்பகுதி முழுவதிலும் நடைபெற்ற கடல்சார் வணிகத்தை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தவும் முடிந்தது.

ஏனைய ஐரோப்பிய நாடுகளும் போர்ச்சுகீசியரைப் பின்தொடர்ந்து குறிப்பாக இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகியவை இந்தியாவிற்குள் நுழைந்தன. ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் தங்கள் அனைத்து நடவடிக்கைகளையும் கிழக்கிந்தியக் கம்பெனிகள் மூலம் மேற்கொண்டனர். இந்நிறுவனங்கள், தனியார் வர்த்தக நிறுவனங்களாக இருந்தபோதிலும் வலுவான அரசியல் நிகழ்ச்சி நிரலைக் கொண்டிருந்தன. 17 ஆம் நூற்றாண்டில் மொகலாய அரசு வலுவாக இருந்த வரையிலும், இந்த ஐரோப்பிய வர்த்தக நிறுவனங்கள் மொகலாயப் பேரரசில் வணிகம் செய்தன. ஆனால் மொகலாயப் பேரரசின் எல்லைக்குள் தங்களுக்கெனச் சொந்தமான பகுதிகளைப் பெற அவற்றால் இயலவில்லை. இருந்தபோதிலும் தென்னிந்தியாவில் வலுவான அரசுகள் நிறுவனங்கள் தங்களுக்கென்று சொந்தமான வணிகத்தலங்களை ஏற்படுத்திக் கொண்டு அவற்றில் முழு அதிகாரம் செலுத்தின.

(எ.கா) புலிகாட் (பழவேற்காடு) மற்றும் நாகப்பட்டிணத்தில் டச்சுக்காரர்களும், மெட்ராஸ் - ல் (சென்னை) ஆங்கிலேயர்களும், பாண்டிச்சேரியில் பிரெஞ்சுக்காரர்களும், தரங்கம்பாடியில் டேனியர்களும் நிலை கொண்டனர்.

**அரசியல் மாற்றங்களின் தாக்கங்கள்:**

இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் நிர்வாக அமைப்புகள், சமூக பொருளாதாரம் ஆகியவற்றின் மேல் பரந்துபட்ட தாக்கங்களையும் விளைவுகளையும் எற்படுத்தின.

சோழர்கள் காலம் தமிழ்நாட்டு வரலாற்றில் செழிப்புமிக்க காலமாகும். இக்காலத்தில் வணிகமும் பொருளாதாரமும் விரிவடைந்தன. நகரமயமாதலும் இவற்றுடன் இணைந்து கொண்டது. சோழர்கள் காலத்தில் நிர்வாக இயந்திரமானது மறுசீரமைக்கப்பட்டது. உள்ளாட்சி நிர்வாகத்தின் அடிப்படை அலகு கிராமம் (ஊர்) ஆகும். அதற்கு அடுத்தவை ஊர்களின் தொகுப்பான 'நாடு' மற்றும் 'கோட்டம்' (மாவட்டம்) என்பனவாகும். பிராமணர்களுக்கு மானியமாக வழங்கப்பட்ட வரிவிலக்கு அளிக்கப்பட்ட கிராமங்கள் 'பிரம்மதேயம்' என்றறியப்பட்டன. சந்தை கூடுமிடங்களும் சிறுநகரங்களும் 'நகரம்' என்றழைக்கப்பட்டன. ஊர், நாடு, பிரம்மதேயம், நகரம் ஆகிய ஒவ்வொன்றும் தனக்கென ஒரு மன்றத்தைக் (சபை) கொண்டிருந்தது. நிலங்களையும் நீர்நிலைகளையும் கோவில்களையும் பராமரித்து மேலாண்மை செய்வது. உள்ளூர் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பது அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய வரிகளை வசூல் செய்வது ஆகியவை இம்மன்றங்களின் பொறுப்புகளாகும்.

சோழர்களின் குறிப்பிடத்தகுந்த அம்சம், முதலாவதாக அதிக எண்ணிக்கையில் கோவில்கள் கட்டப்பட்டதாகும். இது இரண்டு பரிமாணங்களைக் கொண்டிருந்தது. ஒன்று புதிய கோவில்கள் கட்டப்பட்டன. இரண்டாவது ஏற்கனவே உள்ள கோவில்கள் பலமுனைச் செயல்பாடுகளைக் கொண்ட சமூகப் பொருளாதார நிறுவனங்களாக மாறியதாகும். கோவில்கள் கட்டப்படுவதானது அரசின் வளர்ந்துவரும் பொருளாதாரச் செழிப்பை பிரதிபலிப்பதாய் அமைந்தது. ஏனெனில் கோவில் கட்டுமானமென்பது மிகப்பெரும் செலவினங்களை உள்ளடக்கிய நடவடிக்கையாகும். கோவில்கள் வழிபாட்டிற்கான இடங்களாக மட்டுமல்லாமல் முக்கிய பொருளாதாரப் பண்புகளைக் கொண்ட நிறுவனங்களாகவும் மாறின. அவை பொருட்களைக் கொள்முதல் செய்பனவாகவும் மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனமாகவும் நில உடமையாளராகவும் மாறின.

டெல்லியில் இஸ்லாமியராட்சி நிறுவப்பட்டது இந்தியச் சமூகத்தின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தொடக்கத்தில் இஸ்லாம் சமூகப் பதட்டங்களை ஏற்படுத்தவில்லை. எடுத்துக்காட்டாக கேரளக் கடற்கரைப் பகுதிகளில் குடியேறிய அராபிய முஸ்லிம் வணிகர்கள் உள்ளூர்ப் பெண்களை திருமணம் செய்து அமைதியான வாழ்க்கையை மேற்கொண்டனர். இஸ்லாம் ஒரு அரசு மதமாக மாறிய போதுதான் சூழ்நிலைகள் மாறின. எதிரிகளின் வாழிபாட்டு இடங்களை அழிப்பது என்பது தன்னுடைய அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காக இடைக்கால அரசர்கள் பின்பற்றிய ஒரு வழிமுறையாகும். மற்றபடி 'ஒரு கடவுள்' தத்துவத்தை முன்வைக்கும் இஸ்லாம் இந்தியச் சமூகத்தின் மீது பல நேரிடைத் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. ஒரு கலப்புப் பண்பாடு உருவாவதில் இஸ்லாம் அளப்பரிய பங்காற்றியுள்ளது.

டெல்லி மற்றும் தக்காணத்திலிருந்த முஸ்லிம் அரசுகள் அராபியாவிலிருந்தும் பாரசீகத்திலிருந்தும் குடிபெயர்பவர்களை இந்தியாவில் குடியேறக் கவர்ந்திழுத்தன. இவ்வாறு குடியேறியவர்கள் இந்நாடுகளில் பல்வேறு பணிகளில் அமர்ந்தனர். அவர்களில் பலர் முக்கியமானவர்களாகவும் நன்கறியப்பட்ட அரசியல் மேதைகளாகவும் விளங்கினர். இச்சூழல் இந்தியச் சமூகத்திற்கு மேற்காசியாவோடு நிலையான உறவுகளை மேற்கொள்ள கதவுகளைத் திறந்து வைத்தது. இதன் விளைவாகப் பண்பாட்டு தொழில்நுட்பப் பரிமாற்றங்கள் அரங்கேறின. படையெடுப்புகளின் போது முஸ்லிம் வணிகர்களும் கைவினைஞர்களும் இந்தியாவில் வடக்கேயிருந்து தெற்கே குடிபெயர்ந்தனர். இதனால் சமூகமானது பல இன மக்களைக் கொண்டதாகவும் கலப்புப் பண்பாட்டுத் தன்மை கொண்டதாகவும் மாறியது. இவ்வாறு ஒரு புதிய கலப்புப் பண்பாடு உருவானதைத் தக்காண சுல்தானியங்களான பீஜப்பூரிலும் கோல்கொண்டாவிலும் மிகத் தெளிவாகவே பார்க்கமுடியும். இவ்விரு அரசுகளின் சுல்தான்கள் பரந்த மனப்பான்மை கொண்டவர்களாகவும் சமயச்சார்பற்ற பார்வை உடையவர்களாகவும் இருந்தனர்.

இக்காலப்பகுதியில் நிகழ்ந்த மற்றுமொரு குறிப்பிடத் தகுந்த வளர்ச்சி முஸ்லிம் சுல்தானியங்களைப் பற்றிய அராபிய பாராசீக வரலாற்று அறிஞர்கள் எழுதிய பெருமளவிலான சமகால வரலாற்றுக் குறிப்புகளாகும். இபின் பதூதா, அல்பரூனி, பெரிஷ்டா ஆகியோர் நன்கறியப்பட்ட சிறந்த வரலாற்று அறிஞர்கள் ஆவர். இவ்வரலாற்று அறிஞர்கள் இடைக்கால இந்தியாவின் அரசர்கள் மற்றும் நிகழ்ச்சிகளைப் பற்றிய முக்கியச் செய்திகளை குறிப்பிட்டுள்ளனர். இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சி குறித்து ஒரு மாற்று வரலாற்றுக் கருத்தை அதுவும் சமகால முஸ்லிம் வரலாற்று அறிஞர்களின் நேரடி அனுபவத்தின் அடிப்படையில் உருவான கருத்தை அவை முன் வைப்பதால் அவை மதிப்புமிக்க வரலாற்றுச் சான்றுகளாகக் கருதப்படுகின்றன.

விஜயநகரப் பேரரசு நிறுவப்பட்டதால் தென்னிந்தியாவின் குறிப்பாக தமிழகத்தின் நிர்வாக, சமூக நிறுவனக் கட்டமைப்புகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அடிப்படையிலேயே விஜயநகர அரசு ஒரு ராணுவத்தன்மை கொண்ட அரசாகவே உருவானது. ஒருவேளை தொடக்கத்திலிருந்தே வடக்கே பாமினி சுல்தான்களோடு கொண்டிருந்த பகைமையே அதற்கு காரணமாக இருக்கலாம். பேரரசின் ராணுவத்திற்கு இரண்டு வகையான மூலவளங்கள் தேவைப்பட்டன. அவை நிதி ஆதாரமும் படைகளில் பணியாற்றத் தேவையான மனித வளமுமாகும். கைப்பற்றப்பட்ட பகுதிகளின் குறிப்பாகத் தமிழகத்தின் நிர்வாகத்தை மறுசீரமைப்பதின் மூலமே இத்தேவைகள் நிறைவேற்றப்பட்டன. தமிழ்நாட்டின் பல்வேறு மையங்களில் ‘நாயக்’ என்றழைக்கப்பட்ட இராணுவ அதிகாரிகள் பணியமர்த்தப்பட்டனர். அவர்கள் அரசர்களிடமிருந்து நிலங்களை மானியமாகப் பெற்றனர். இவர்களுக்கு அடுத்த நிலையில் பாளையக்காராகள் இருந்தனர். இவர்கள் படைகளுக்குத் தேவையான வீரர்களை வழங்கினர். பல கோட்டைகள கட்டப்பட்டன. அவைகள் பிராமண படைத்தளபதிகளின் கீழிருந்தன.

விஜயநகரப் பேரரசுக்கு விசுவாசமான மூன்று முக்கிய நாயக்க அரசுகள் கி.பி. (பொ.ஆ) 1500 – க்கும் கி.பி. (பொ.ஆ) 1550 க்கும் இடைப்பட்ட காலத்தில் மதுரை, தஞ்சாவூர், செஞ்சி ஆகியவற்றை மையமாகக் கொண்டு உருவாயின. விஜயநகர அரசசபை சம்பிரதாய முறைகளில் இவர்களுக்குப் பங்கிருந்தது. பதினாறாம் நூற்றாண்டில் தமிழகத்தில் இது ஒரு புதிய அரசியல் ஒழுங்கானது. இம்மூன்று நாயக்க அரசர்களும் ஏனைய நாயக்கத் தளபதிகளும் வலுவான சமயம் சார்ந்த கோவில்களின் ஆதரவாளர்களாய் இருந்தனர். இவ்வரசர்களின் ஆதரவில் மூன்று தலைநகரங்களும் சிறந்த பண்பாட்டு மையங்களாய் உருக்கொண்டன. நாயக்க அரசர்கள் இலக்கியங்களுக்கும் நிகழ்த்து கலைகளுக்கும் ஆதரவளித்து மேம்படுத்தினர்.

நிலங்களிலிருந்து பெறப்பட்ட வருவாயை இந்நாயக்க அரசுகள் வரிப்பணம் என்ற வடிவத்தில் இல்லாமல் கப்பத் தொகையாகப் பேரரசிற்கு அனுப்பி வைத்தனர். இப்படியாக மையப் பகுதிகளின் குறிப்பாகத் தமிழகத்தின் மூல வளங்கள் இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன. இப்படியான நிர்வாக முறை, சோழர்கள் காலத்து பரவலாக்கப்பட்ட உள்ளூர் நிர்வாகத்தையும் கோவில்களையும் உள்ளூர் வளங்களையும் மேலாண்மை செய்து வந்த உள்ளாட்சி நிறுவனங்களை அழித்துவிட்டன. தெலுங்கு நாயக்கர்கள் பணியமர்த்தப்பட்டதன் விளைவாக தெலுங்கு மொழி பேசும் மக்கள் வடக்கேயிருந்து தமிழகத்தில் குடியேறினர். அவர்களுள் படைவீரர்கள், விவசாயிகள், கைவினைஞர்கள், பிராமணர்கள் அடங்குவர்.

மொகலாயர் பேரரசு வட இந்தியாவின் சமூகத்தையும் பொருளாதாரத்தையும் மாற்றியமைத்தது. அக்பரின் ஆட்சிக் காலத்தில் மொகலாயரின் ஆட்சி என்னும் குடையின் கிழ் ராஜபுத்திர அரசுகளோடு இணைந்து செயல்படும் கொள்கையைப் பின்பற்றியதன் மூலம் அக்பர் மொகலாய அரசை ஒருங்கிணைத்து வலுவுள்ளதாக்கினார். தனது அதிகாரத்தின் உச்சத்தில் மொகலாயப் பேரரசானது உலகிலேயே மிகப் பெரிய, செல்வச் செழிப்பைக் கொண்ட அதிகாரமிக்க பேரரசுகளுள் ஒன்றாகத் திகழ்ந்தது.

ஔரங்கசீப்பின் ஆட்சியின் போது அவர் மீண்டும் பழமைவாத இஸ்லாமிய நிர்வாக நெறிமுறைகளைப் பின்பற்றியதால் ராஜபுத்திர அரசர்களும் இந்துக்களும் அந்நியப்படுத்தப்பட்டனர். மேலும் பேரரசு ஓர் அளவைத் தாண்டி விரிவடைந்து விட்டதால் தனது ஆட்சியை கட்டுப்படுத்த முடியாமல் தள்ளாடத் துவங்கியது. இத்தகைய காரணங்களால் பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பேரரசு சரியத் தொடங்கியது.

இந்தியாவுக்கு ஐரோப்பியரின் வருகையானது இறுதியாக இந்தியாவில் ஆங்கிலேயரின் காலனியாதிக்கம் உருவாவதில் முடிந்தது. ஐரோப்பியரின் வருகையின் தாக்கம் குறித்த விவாதத்தில் இது முதன்மையாகக் கருதப்படுகின்றது. இதே சமயத்தில் ஐரோப்பியச் சந்தையில் இந்தியத் துணிகளுக்கு எதிர்பாராத மிகப் பெருந் தேவை ஏற்பட்டது. இம்மனோநிலை அடிக்கடி ‘‘இந்தியத் துணி மீது மயக்கம்’’ எனக் குறிக்கப்பட்டது. இச்சூழல் இந்தியாவில் பெருமளவிலான துணி உற்பத்தியின் விரிவாக்கத்திற்கு இட்டுச் சென்றது. இதோடு இணைந்து வணிகப் பயிர்களான பருத்தி, அவுரி மற்றும் ஏனைய சாயப் பொருட்களின் உற்பத்தியும் பெருகியது. இவற்றின் விளைவாக வணிக நடவடிக்கைகள் பெருகின.

**அரசியல் மாற்றங்களின் தாக்கங்கள்:**

**சாதி:**

சாதி என்பது இந்தியச் சமூகத்தின் மிகவும் தனித்தன்மை வாய்ந்த அம்சமாகும். முதலாவதாக ‘சாதி’ என்ற வார்த்தை தொடர்பான இரண்டு பரிமாணங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும் முதலாவதாக சமய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு சமூகப் பிரிவுகள், வர்ணம் என குறிப்பிடப்படுவது.

தங்கள் சாதியின் தகுதியை மேம்படுத்திக் கொள்வதே பெரும்பாலான சாதிக் குழுக்களின் முக்கியப் பணியாக இருந்தது. பதினான்காம் நூற்றாண்டுக்குப் பின்னர் இப்போக்கு தெளிவாகத் தெரிந்தது. இக்காலப் பகுதியில் உள்ளூர் வளங்களையும் சமூக உறவுகளையும் கட்டுப்படுத்திய மரபுசார்ந்த உள்ளூர் அமைப்புகள் வலுவிழந்தன. மரபு சார்ந்த சமூகத்தில் பல சாதிகளுக்கு பல்வேறு விதமான சமூக உரிமைகள் மற்றும் சலுகைகள் மறுக்கப்பட்டன.

சாதியின் தோற்றத்தை மெய்ப்பிக்கப் புராணங்கள் சார்ந்த கற்பனை கலந்த வம்சாவளியை உருவாக்கினர். சமூகப்படி நிலைகளில் உயர்ந்த மதிப்புடைய இடம் வழங்கப்பட வேண்டுமென்ற தங்கள் கோரிக்கையை நியாயப்படுத்த இதைப் பயன்படுத்தினர். காலின் மெக்கன்சியால் சேகரிக்கப்பட்ட பல கையெழுத்துப் பிரதிகளில் இப்படியான வம்சாவளிகளைக் காணலாம்.

**மதம்:**

இடைக்காலத்தில் ஏற்பட்ட பக்தி இயக்கத்தின் காரணமாக பல்வேறு சிந்தாந்தாங்கள் உருவாயின. வித்யாராண்யர் போன்ற குருக்களின் அல்லது சமயத் தலைவர்களின் பெயரில் மடங்கள் நிறுவப்பட்டன. தமிழகத்தில் சைவ சித்தாந்தம் கர்நாடகத்தில் வீர சைவம் போன்ற சைவ இயக்கங்களும் உருவாயின. மகாராஷ்டிரத்தில் விதோபாவின் பக்தர்களால் உருவாக்கப்பட்ட ‘‘வர்க்கரி சம்பிரதாயா’’ என்னும் இயக்கம் 14ம் நூற்றாண்டில் எழுச்சி பெற்றது.

இந்தியாவில் பௌத்தத்தின் செல்வாக்குகு மங்கியது. சங்கரர் மற்றும் ராமானுஜர் மேற்கொண்ட வலுவான பக்தி இயக்க புத்துயிர்ப்பின் விளைவாக சமணமதம் இந்தியாவின் பலபகுதிகளில் தனது பிடிப்பை இழந்தது. இருந்தபோதிலும் குஜராத் மற்றும் மார்வார் பகுதிகளில் குறிப்பாக வணிகச் சமூகங்களிடையே சமணம் செழித்தோங்கியது. கிறித்துவ மதத்தைப் பொறுத்தமட்டிலும் எண்ணிக்கையில் குறைவான சில கிறித்துவக் குழுக்கள் தாங்கள் ஏசுவின் சீடர்களில் ஒருவரான புனித தாமஸ் என்பவரால் கேரோளாவில் கிறித்துவ

சமயத்திற்கு மாற்றப்பட்டதாக உரிமை கொண்டாடினர். ஆனால் போர்ச்சிக்கீசியர்கள் கேரளாவிற்கு வந்து பின்னர் கோவாவில் நிலை கொண்டபோது கிறித்துவ மதம் வேர்கொண்டது. கோவாவிலேயே உள்ளூர் மக்கள் கிறித்துவ மதத்திற்கு மதம்மாற அதுவும் காரணமானது. மேலும் சமய நீதிமன்றங்களின் அடக்குமுறையின் கீழ் வற்புறுத்தப்பட்டனர். மற்றொருபுறத்தில் ஏசுசபையைச் சார்ந்த சமயப் பரப்பாளர்கள் வேறுபகுதிகளில் குறிப்பாக பாண்டிய நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் பரதவ சமூக மக்களிடையே சமயப் பரப்புப் பணிகளில் ஈடுபட்டனர். அவர்களில் நன்கறியப்பட்டவர் புனித பிரான்சிஸ் சேவியர் ஆவார். இவர் தூத்துக்குடிப் பகுதியில் வாழும் பரதவ சமூக (மீன் பிடிக்கும் சமூகம்) மக்கள் கிறித்தவ மதத்திற்கு மாறுவதற்கு கருவியாக இருந்தவராவார். மற்றொருவர் மதுரையில் செயல்பட்ட ராபர்ட் டி நொபிலி ஆவார்.

சிக்கிய மதம் பதினைந்து மற்றும் பதினாறாம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் வாழ்ந்த குருநானக் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. பேரரசர் ஔரங்கசீப் மேற்கொண்ட கடுமையான அடக்குமுறையையும் மீறி சீக்கிய மதம் வலுவாக வளர்ச்சியடைந்தது. ஆகவே பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியா முழுவதும் பல மதங்கள் ஒரே நேரத்தில் இருந்துள்ளன. யூதர்களும். ஜொராஸ்டிரியர்களும் (பார்சிகள்) இந்தியாவிற்கு குடிபெயர்ந்தபோது அந்நிய மதங்களும் இந்தியாவிற்குள் வந்தன. பார்சீகள் குஜராத்திலும் யூதர்கள் கேரளத்திலும் குடியேறினர். சூரத் துறைமுகத்திலும், ஆங்கிலேயர் காலத்தில் பம்பாயிலும் பார்சி இன வணிகர்களே பணம்படைத்த முக்கியத்துவம் வாய்ந்த வணிகர்களாய் இருந்தனர்.

**பண்பாடு**

**இலக்கியம், கலை, கட்டடக்கலை**

சோழர்களின் காலம் குறிப்பிடத்தகுந்த பண்பாட்டு நடவடிக்கைகளின் ஒரு சகாப்தமாகும். இந்த நூற்றாண்டுகளில்தான் முக்கியமான இலக்கியங்கள் எழுதப்பட்டன. மிக நன்கறியப்பட்ட செவ்வியல் புலவரான கம்பர் தமிழில் இராமாயணத்தை எழுதி, அதை முறைப்படி ஸ்ரீரங்கம் கோவிலில் அரங்கேற்றம் செய்தார். இதைப்போலவே சேக்கிழாரின் பெரியபுராணமும் சிதம்பரம் கோவிலில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. கலிங்கத்துப் பரணியும், மூவருலாவும் ஏனைய சிறந்த படைப்புகளாகும்.

சோழர்களின் பெரும் சிறப்பு வாய்ந்த கட்டடக் கலையை தஞ்சாவூர் பெரிய கோவிலிலும் கங்கை கொண்ட சோழபுரத்திலும், தாராசுரத்திலும் நாம் காணலாம். இவை ஒரு சில எடுத்துக் காட்டுகளே. கோவில் சுவர்களிலும் தூண்களிலும் கல் சிற்பங்கள் செதுக்கப்பட்டன. பேரழகும் கலைநுட்பமும் பொருந்திய செப்புச் சிலைகள் மெழுகு அச்சு (Lostwax) முறையில் வார்க்கப்பட்டன. பிரபஞ்ச நடனமாடும் நடராஜர் (சிவன்) சிலை சோழர்கால செப்புச் சிலைகளில் மிகவும் புகழ் பெற்றதாகும்.

இஸ்லாமியர் ஆட்சி நிறுவப்பட்டதிலிருந்து ஒரு தனித்தன்மை வாய்ந்த இஸ்லாமியப் பண்பாட்டு மரபு இந்தியாவில் வளர்ச்சி பெற்றது. முஸ்லிம் சுல்தான்கள் டெல்லியிலும் தங்கள் ஆட்சிக்கு உட்பட்ட தென்னிந்தியப் பகுதிகளிலும் பல கோட்டைகளையும் மசூதிகளையும், கல்லறைகளையும் ஏனைய நினைவுச் சின்னங்களையும் கட்டினர். குறிப்பாக மொகலாயர் காலமானது இந்தியாவின் பண்பாட்டு வரலாற்றில் ஒளிமிக்க காலமாகும். மொகலாய மன்னர்கள் கலை வளர்ச்சிக்குப் பெரிதும் ஆதரவளிக்கும் புரவலர்களாய்த் திகழ்ந்தனர். ஷாஜகானாபாத் (டெல்லி), பதேபூர் சிக்ரி ஆகிய முழுமையான நகரங்களையும் தோட்டங்களையும் மசூதிகளையும் கோட்டைகளையும் கட்டி எழுப்பிய மொகலாயர்கள் அவற்றுடன் சேர்த்து எண்ணற்ற நினைவுச் சின்னங்களையும் விட்டுச் சென்றுள்ளனர்.

நகரப்புற சார்ந்த செல்வந்தர்கள் மற்றும் அரச குடும்பத்தைச் சேர்ந்தோரின் ஆதரவோடு அலங்காரக் கலைகளான குறிப்பாக விலைமதிப்பில்லா அரிய கற்கள், ஓரளவு அரிய நவரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட தங்க நகைகளைச் செய்யும் கலை செழிப்புற்றது.

ஓவியக்கலையும் மொகலாயர் காலத்தில் செழித்து வளர்ந்தது. நுண்ணிய ஓவியங்கள் என்றழைக்கப்படும் இவை நூல்களில் இடம் பெற்றுள்ளன. தனி ஓவியங்கள் செருகேடுகளில் (Albums) இடம் பெற்றன. பெருமளவிலான இலக்கியங்கள் இக்காலத்தில் உருவாயின. குறிப்பாகப் பாராசீக மொழியில் எழுதப்பட்டாலும், உருது, இந்திய மற்றும் ஏனைய வட்டார மொழிகளிலும்ட இலக்கியங்கள் எழுதப்பட்டன. குறிப்பிட்ட சொல்லப்பட வேண்டியது ஒவ்வொரு அரசரைப் பற்றிய அனைத்து விபரங்களும் அடங்கிய வரலாற்று நூல்கள் பாரசீக மொழியில் எழுதப்பட்டன. நிகழ்த்துக் கலைகளில் ஒன்றான இந்துஸ்தானிய இசையில் தான்சேன் புகழ்பெற்று விளங்கினார். இதன் மூலம் இக்கலைக்கு அக்பர் அளித்த ஆதரவை அறியலாம்.

தென்னிந்தியாவில் விஜயநகர அரசர்களும் அவர்களுடைய போர்த் தளபதிகளும்கோவில் கட்டுமானங்களுக்கு பெரும் ஆதரவு நல்கினர். பல புதிய கோவில்கள் அவர்களால் கட்டப்பட்டன. ஏற்கனவே இருக்கின்ற கோவில்களில் விரிவான அளவில் கலை நுணுக்கங்களோடு செதுக்கப்பட்ட பல தூண்களைக் கொண்ட பெரிய மண்டபங்களும் ஒய்வுக் கூடங்களும் கட்டப்பட்டன. கலை வரலாற்று அறிஞர்கள் விஜயநகர காலத்து கோவில் சிற்பங்களின் தனித்தன்மை வாய்ந்த பாணியைச் சுட்டிக் காட்டுகின்றனர். கோவில்களின் நுழைவாயில்களில் மிக நுட்பமான வகையில் சிற்பங்கள் செதுக்கப்பட்ட மிக உயர்ந்த கம்பீரமான கோபுரங்கள் விஜயநகர அரசர்கள் காலத்தில் எழுப்பப்பட்டன. கோவில் சுவர்கள் வண்ண ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டன.

விஜயநகர நாயக்க அசரர்களின் ஆதரவில் பெருமளவிலான இலக்கியங்கள் குறிப்பாக சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட இலக்கியங்கள் உருவாயின. அரச குடும்ப ஆதரவில் தெலுங்கு இலக்கியம் செழிப்புற்றது. சமயக் கருத்துக்களை உள்ளடக்கமாகக் கொண்ட பல நூல்கள் இக்காலத்தில் எழுதப்பட்டன. பிரபந்தம் எனப்படும் ஒரு புதிய வகைத் தமிழ் இலக்கியம் இக்காலத்தில் உருவானது. காப்பிய நூலான சிலப்பதிகாரத்திற்கும் திருக்குறளுக்கும் இக்காலத்தில்தான் மிகச் சிறந்த உரைநூல்கள் எழுதப்பட்டன. இக்காலத்தில் வாழ்ந்த கோவிந்த தீட்சிதரின் மகன் வேங்கட மகி கர்நாடக இசைக்குரிய ராகங்களை வகைப்படுத்தினார்.

**பொருளாதாரம்:**

**வேளாண்மை:**

இந்தியா அடிப்படையில் ஒரு விவசாய நாடாக இருந்தது. மக்கள் தொகையில் பெரும்பாலோர் கிராமப்புறங்களில் வசித்து வந்தனர். வேளாண்மையைத் தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டிருந்தனர். இந்தியாவில் வடஇந்தியா தென்னிந்தியா ஆகிய இரண்டு பகுதிகளிலும் வேளாண்மை பெருமளவில் நீர்ப்பாசன வசதிகளைச் சார்ந்திருந்தது. மழை மற்றும் நதிகளைத் தொடர்ந்து கால்வாய்களும் கிணறுகளும் நீராதாரங்களாக இருந்தன. அதிக அளவில் நீர் கிடைப்பதற்காக அரசுகள் கால்வாய் கட்டும் பணிகளைத் தீவரமாக மேற்கொண்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னர் இந்தியா அறிந்திருந்த மிகப்பெரிய வலைப்பின்னலைப் போன்ற கால்வாய்கள் பதினான்காம் நூற்றாண்டில் பெரோஸ் துக்ளக்கால் டெல்லி பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கால்வாய்களே ஆகும். ஏரிகள் குளங்கள் மற்றும் ஏனைய நீர்நிலைகள் நீரை வெளியேற்ற உதவும் மதகுகளோடு கட்டப்பட்டதாலும். தடுப்பணைகள் கட்டப்பட்டதாலும் வேளாண்மை செய்வதற்கு அதிக அளவில் நீர் கிடைத்தது. விவசாயிகள் கிணறுகளை வெட்டிக் கொள்ள ஊக்கப்படுத்தப்பட்டனர். நீரை மேலே கொண்டுவர நீர் இறைக்கும் முறை பயன்படுத்தப்பட்டது. வட இந்தியாவில் கிணறுகளிலிருந்து நீர் இறைக்க 'பாரசிகச் சக்கரம்' பயன்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டின் சோழ அரசர்கள் நீர்ப்பாசனத்திற்காக காவேரி நதியின் கிளை ஆறுகளை இணைத்து வலைபின்னலைப் போன்ற கால்வாய்களை அமைத்தனர். நீராதாரத்தை அதிகப்படுத்த ஏரிகளும் குளங்களும் வெட்டப்பட்டன.

இந்திய வேளாண்மையின் மிக முக்கியமான அம்சம், அதிக எண்ணிக்கையில் பல்வகைப்பட்ட பயிர்கள் பயிர் செய்யப்பட்டமைதான் இக்காலகட்டத்தில் உலகின் ஏனைய நாடுகளின் விவசாயிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்திய விவசாயிகள் அதிக எண்ணிக்கையிலான பயிர்களைப் பற்றிய அறிவைப் பெற்றிருந்தனர். எண்ணை வித்துக்கள், அவரை வகைகள் ஆகியவைகளோடு அரிச, கோதுமை, திணை வகைகள் போன்ற பல்வகை உணவுதானியங்களும் விளைவிக்கப்பட்டன. மேலும் வணிகப்பயிர்களான கரும்பு, பருத்தி மற்றும் அவுரி ஆகியனவும் பயிரிடப்பட்டன.

பொதுவான உணவு தானியப் பயிர்களுக்கு மேலாக தென்னிந்தியாவில் பிராந்தியத் தனித்தன்மையோடு மிளகு, இலவங்கம், நறுமணப் பொருள்கள், தென்னை போன்றவை பயிர் செய்யப்பட்டன.

பொதுவாக வெவ்வேறு பருவகாலங்களில் இருபோக சாகுபடிகள் செய்யப்பட்டன. இது மண்ணின் உற்பத்தி சக்தியைப் பாதுகாத்தது. ஐரோப்பியருடைய வருகைக்குப் பின்னர் சோளமும் புகையிலையும் புதிய பயிர்களாக அறிமுகமாயின. பப்பாளி, அன்னாசி, கொய்யா, முந்திரிப்பருப்பு போன்ற புதிய பழ வகைகளும் தோட்டப்பயிர்களும் அறிமுகமாயின. அவை மேலை நாடுகளிலிருந்து குறிப்பாக அமெரிக்காவிலிருந்து வந்தவையாகும். உருளைக்கிழங்கு, மிளகாய், தக்காளி போன்றவையும் இந்திய உணவோடு இரண்டறக் கலந்துவிட்டன.

**விவசாயம் அல்லாத உற்பத்தி:**

இந்தியப் பொருளாதாரம் முதன்மையாக வேளாண்மை சார்ந்ததாக இருந்தபோதிலும் பதினேழாம் நூற்றாண்டின் இறுதிவரை உலக அளவில் பெருமளவில் பொருள் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாக இந்தியா இருந்துள்ளது. வேளாண்மை சாராத பொருள் உற்பத்தி என்பது பக்குவப்படுத்தப்பட்ட வேளாண் பணடங்களையும் கைவினைப் பொருள் உற்பத்தியையும் குறிப்பதாகும். சர்க்கரை, எண்ணெய், துணிகள் ஆகியன பதப்படுத்தப்பட்ட வேளாண் பண்டங்கள் என்ற வகையின் கீழ் வருபவை. உலோகப் பொருட்கள், நவரத்தினக்கற்கள், பொன் ஆபரணங்கள், கப்பல் கட்டுமானம், அலங்கார மர, தோல் பொருட்கள் ஆகியவை கைவினை உற்பத்தி பொருள் பட்டியலில் இடம்பெறுவனவாகும். இவைகளைத் தவிர ஏராளமான சிறு பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

சந்தையின் இயல்பைப் பொறுத்தே உற்பத்தி திட்டமிடப்பட்டது. உற்பத்தியில் பெரும்பகுதி கிராம அல்லது கிராமப் பகுதிகளின் உள்ளூர் பயன்பாட்டைக் கருத்தில் கொண்டே செய்யப்பட்டது. இப்பொருட்கள் அடிப்படைப் பயன்பாட்டுக் பொருட்களான மட்பாண்டங்கள், உலோகத் தட்டுக்கள், கலப்பை போன்ற கருவிகள் மரத்தால் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முரட்டுத் துணிவகைகளாகவும் இருந்தன. இப்பொருட்கள் வணிகச் சுற்றுக்குள் இடம் பெறவில்லை உற்பத்தியாளரே தனது உற்பத்திப் பொருட்களைச் சந்தையில் விற்றார். செலாவணி பெரும்பாலும் பண்ட மாற்று முறையாகவே இருந்திருக்கக் கூடும்.

பொருளாதார ரீதியாக எது முக்கியமானதாக இருந்ததென்றால் தனித்திறன் பெற்ற தொழிலாளர்களால் நகாப்புறம் சார்ந்த மேட்டுக்குடி மக்கள் மற்றும் கிராமப்புற செல்வந்தர்களுக்கு அதிகம் தேவைப்படும் பொருட்களைச் சிறப்புடன் உற்பத்தி செய்வதாகும். இவ்வுற்பத்தி வெளிச் சந்தையை மனதில் கொண்டு செய்யப்படுவதாகும். இவ்வகை பொருள் உற்பத்தி மையங்கள் பெரும்பாலும் நகர்ப்புறங்களில் அல்லது நகரங்களின் அருகேயுள்ள கிராமப்புறங்களில் அமைந்திருந்தன. கைவினைஞர்கள் தனியாகவோ அல்லது குடும்ப உறுப்பினர்களுடனோ வீட்டிலிருந்தோ அல்லது தொழிற்கூடத்திலோ வேலை செய்தனர். மொகலாய அரசில் மிகப்பெரிய தொழிற் கூடங்கள் “கர்கானா“ என்ற பெயரில் பல கைவினைஞர்களை பணியிலமர்த்தி செயல்பட்டுள்ளன.

**துணி உற்பத்தி:**

உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து வகைத் துணிகளும் பருத்தி இழைகளால் நெய்யப்பட்டவை ஆகும். வங்காளத்திலும் குஜராத்திலும் பட்டுத் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன. இந்தியாவின் ஒவ்வொரு பகுதியும் பல எண்ணிக்கைகளில் உயர்ந்த குறிப்பிட்ட பயன்பாட்டிற்குரிய பருத்தி இழைத் துணிகளை முரடான துணிவகை முதல் மிக நேர்த்தியான துணிவகைகள் வரை உற்பத்தி செய்தன. இவை அனைத்தும் வெளிச் சந்தைக்காக உற்பத்தி செய்யப்பட்டவை ஆகும். சாயங்களைப் பொறுத்தமட்டிலும் தாவரங்களிலிருந்து பெறப்பட்ட சாயங்களே பயன்படுத்தப்பட்டன. பருத்தி இழை இரண்டு இயற்கையான சாதகங்களைப் பெற்றிருந்தது. பெரும்பாலும் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் பருத்தி பயிரிடப்பட்டதால், அடிப்படையான மூலப் பொருள் எளிதாகக் கிடைத்தது. இரண்டாவதாக தாவரக் சாயங்களைப் பயன்படுத்தி பருத்தி இழைகளின் மேல் நிரந்தரமாக வர்ணம் ஏற்றும் தொழில்நுடபம் இந்தியர்களுக்கு ஆரம்ப காலங்களிலேயே தெரிந்திருந்தது. துணிகளைப் பதனம் செய்யாவிடில் சாயங்கள் அவற்றின் மேல் ஒட்டாது. அதற்காக முதலில் துணிகளின் மேல் வேதியியல் பொருட்களைப் பயன்படுத்தி ஒரு மேற்பூச்சு பூசும் நுட்பத்தை இந்தியர்கள் அறிந்திருந்தனர். இந்நுட்பத்தை வேறு உலக நாடுகள் அறிந்திருக்கவில்லை. அவுரி இந்தியாவில் பயிரிடப்பட்ட முக்கியமான சாயப் பயிராகும். இதைத் தவிர ஏனைய சாயப் பயிர்களும் (சிவப்பு வர்ணத்திற்காக பயன்படுத்தப்பட்ட சாய் என்னும் தாவரத்தின் வேர்) சாயத் தயாரிப்புக்குத் தேவையான மரங்களும் அரக்கு போன்ற பிசின்களும் இறக்குமதி செய்யப்பட்டன. இவைகளைத் தவிர மலர்கள், பழங்கள் மற்றும் மஞ்சள் போன்ற பொருட்களைப் பல விகிதங்களில் கலந்து பலவகைப்பட்ட வர்ணங்கள் தயாரிக்கப்பட்டன.

**வணிகம்:**

மிகப்பெரும் உற்பத்தித் துறையானது முக்கியமாக சொந்தப் பயன்பாட்டிற்காக அல்லாமல் பரிமாற்றத்திற்காகவே பொருட்களை உற்பத்தி செய்தது. ஆகவே பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்காக இந்தியா விரிவான சந்தையைப் பெற்றிருந்தது. கிராமமே பொருள் உற்பத்தியின் அடிப்படை நிலவியல் அலகாக இருந்தது. முக்கியமாகப் பிழைப்புக்கான பொருளாதார நிலையே நிலவியது. செலாவணி என்பது பண்டமாற்றமாகவே இருந்தது.

கடைகளோடும் கடைவீதிகளோடும் நகரங்கள் எப்போதும் முக்கிய வணிக மையங்களாகச் செயல்பட்டன. இந்நகரங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளோடு பல சாலைகளால் இணைக்கப்பட்டிருந்ததால் அவைகள் பிராந்தியங்களுக்கிடையே நடைபெறும் வணிகத்தில் இடைநிலை முனையங்களாகச் செயல்பட்டன. இத்தரைவழி வணிகத்தோடு நாட்டின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரைப் பகுதி வணிகத்தில் சிறு கப்பல்களும் படகுகளும் பயன்படுத்தப்பட்டன. ஊர் ஊராகச் சென்று வணிகம் செய்வோர் பொதுவாக பஞ்சாரா என்றழைக்கப்பட்ட நாடோடிச் சமூகத்தினர் படையெடுத்து சென்று போரிடும் படைகளுக்குத் தேவையான பொருட்களை சுமந்து சென்று விற்றனர். நாட்டின் முக்கியத் துறைமுகங்கள் (சூரத், மசூலிபட்டிணம், கோழிக்கோடு) கடல்சார் வணிக முனையங்களாவும் பன்னாட்டு வணிக முனையங்களாகவும் செயல்பட்டன.

இந்தியப் பெருங்கடலை கடந்து, கிழக்கே சீனா முதல் மேற்கே ஆப்பிரிக்கா வரை விரிந்து பரந்திருந்த கடல் வணிகம் நூற்றாண்டுகளுக்கு செழித்தோங்கியது. ஆகவே மலாக்கா, கோழிக்கோடு போன்ற துறைமுகங்கள் சிறப்புவாய்ந்த இப்பிராந்திய வணிகத்தில் இடைநிலை முனையங்களாக அல்லது பொருள் வைக்கும் இடங்களாகச் செயல்பட்டன. பதினேழாம் நூற்றாண்டில் குஜராத்தில் சூரத், கோல்கொண்டா ஆந்திராவில் மசூலிபட்டிணம் வங்காளத்தில் சிட்டகாங், சோழமண்டலக் கடற்கரையில் புலிக்காட் (பழவேற்காடு) நாகப்பட்டிணம் கேரளக் கடற்கரையில் கோழிக்கோடு ஆகியன ஆசிய வணிகத்தின் முக்கியத் துறைமுகங்களாகும்.

துணி, மிளகு, விலைமதிப்புமிக்க நவரத்தினக்கற்கள் சற்றெ விலைமதிப்புக் குறைந்த நவரத்தினக் கற்கள் - முக்கியமாக வைரம் அதுவும் இந்தியாவில் மட்டுமே கிடைக்கக் கூடிய வைரம் ஆகியவற்றை ஏற்றுமதி செய்ததில் இந்தியாவும் ஒரு முக்கிய ஏற்றுமதி நாடாக இருந்தது. மேலும் ஒட்டு மொத்த ஆசியப் பகுதியில் பெருமளவில் தேவைப்பட்ட இரும்பையும் எ.்.கையும் ஏற்றுமதி செய்த நாடுகளில் இந்தியா முக்கியமான ஒன்றாகும். இந்தியாவின் ஒட்டு மொத்த ஏற்றுமதியில் 90% விழுக்காடுகள் துணியாகவே இருக்கும். சீனாவிலிருந்தும் ஏனைய கீழ்திசை நாடுகளிலிருந்தும் பட்டு, சீன செராமிக் ஓடுகள், தங்கம், நறுமணப் பொருட்கள், நறுமண மரங்கள், கற்பூரம் ஆகியவை இறக்குமதி செய்யப்பட்டன. பட்டு, மருந்த வகைகள், சாய மரங்கள் சர்க்கரை ஆகியன பாரசீகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முக்கியப் பொருட்களாகும். தங்கம் தந்தம் மற்றும் அடிமைகளும் ஆப்பிரிக்காவிலிருந்து பெறப்பட்டன.

**நகரமயாமாதல்**

இடைக்காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த வெளிநாட்டுப் பயணிகள் பல்வேறு அளவுகளில் நகரங்களும் சிறுநகரங்களும் சந்தை நகரங்களும் இந்தியா முழுவதும் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளனா். ஆனாலும் இந்தியா அடிப்படையில், கிராமியத் தன்மை கொண்டதாகவே இருந்தது. மொத்த மக்கள் தொகையோடு ஒப்பிடுகையில் நகா்ப்புறங்களில் வாழ்ந்த மக்கள் தொகை குறைவாகவே இருந்தது. இருந்தாலும் அதனுடைய பெருளாதார, பண்பாட்டு முக்கியத்துவம் அதனுடைய வடிவத்தைக் காட்டிலுமட் சிறப்பாகவே இருந்தது.

நகரமயமாக்கலை இயக்கிய காரணிகள் யாவை? நரங்களும் சிறுநகரங்களும் தங்களின் வெவ்வேறான பொருளாதாரப் பங்கினைப் பூர்த்தி செய்தன. பெரிய நகரங்கள் பொருள் உற்பத்தி, சந்தை, நிதி மற்றும் வங்கிச் சேவைகள் ஆகியவற்றின் மையங்களாகத் திகழ்ந்தன. அவைகள் விரிவான அளவில் வலைப்பின்னலைப்போல் அமைக்கப்பட்டிருந்த போக்குவரத்துச் சாலைகள் சந்திக்கின்ற இடங்களில் அமைந்திருந்தன.

தென்னிந்தியாவில் முக்கியமாகத் தமிழகத்தில் நகரமயமாதலும் கோவில்களும் கைகோர்த்து நடந்தன. கோவில்கள் பெரிய அளவிலான பொருளாதார மையங்களாகின. பல்வகைப்பட்ட பொருட்களும் சேவைகளும் அவற்றின் செயல்பாட்டிற்குத் தேவைப்பட்டன. தங்களுடைய மதம் சாா்ந்த சேவை நடவடிக்கைகள், மடப்பள்ளி மற்றும் ஏனைய பணிகளுக்காக அதிக எண்ணிக்கையில் மக்களை வேலையில் அமா்த்திக் கொண்டன. கோவில்களுக்கு வழிபட வரும் பக்தா்களுக்கு பல பொருட்களும் சேவைகளும் தேவைப்பட்டதால் கோவில் நகரங்கள் சந்தை மையங்களாகின.

**முடிவுரை:**

இந்திய வரலாற்றில் எழுநூற்றுக்கும் மேற்பட்ட ஆண்டுகளை உள்ளடக்கிய இடைக்காலம் அரசியல் பரப்பில் மாபெரும் மாற்றங்கள் நடந்த காலப்பகுதியாகும். அம்மாற்றங்கள் நாட்டின் சமூகப் பொருளாதாரத்தளங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது.

, , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , ,

11ம் வகுப்பு தொகுதி - 1

## பாடம் - 5
## தென்னிந்தியாவில் சமுதாய உருவாக்கம்

**சான்றுகள்**

**தொல்பொருள்கள்**

- தொடக்க வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த பெருங்கற்காலப் புதைவிடங்கள்

- அரிக்கமேடு, கொடுமணல், ஆலங்குளம், உறையூர் கட்டிட இடிபாட்டுத் தடயங்களைக் கொண்டுள்ளன. துறைமுகங்கள் தலைநகரங்கள் உள்ளிட்ட பழங்கால இடங்களில் அகழ்வாய்வின் மூலம் பெறப்பட்ட பொருள்கள்.

- ஆந்திரா, கர்நாடகப் பகுதிகளில் அமைந்துள்ள ஸ்தூபிகளும் சைத்தியங்களும் கூடிய பௌத்தத்தலங்கள் (அமராவதி, நாகார்ஜுனாகொண்டா முதலானவை)

**நாணயச் சான்றுகள்**

- ஆந்திர-கர்நாடகப் பகுதிகளின் சாதவாகனர்கள் மற்றும் அவர்களுக்கு முந்தைய குறுநில மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள்.

- சங்க காலச் சேர, சோழ, பாண்டிய அரசர்களும் வேளிரும் வெளியிட்ட நாணயங்கள்.

- தங்கம், வெள்ளி, தாமிரத்தாலான ரோம நாணயங்கள்.

**கல்வெட்டுகள்**

- ஆந்திர-கர்நாடகப் பகுதிகளில் காணப்படும், பிராகிருத மொழியில் பொறிக்கப்பட்ட அசோகர் கல்வெட்டுகள்.
- தமிழக, கேரளக் குகைகளில் காணப்படும் தமிழ்-பிராமி கல்வெட்டுகள்: மாங்குளம். ஜம்பை, புகளூர் முதலானவை
- ஆந்திரப் பகுதிகளிலுள்ள சாதவாகனர் கல்வெட்டுகளும் பிற பௌத்த கல்வெட்டுகளும்
- தமிழகப் பகுதியில் கிடைத்துள்ள மட்பாண்டங்கள், மோதிரம், கற்கள் ஆகியவற்றில் பொறிக்கப்பட்ட எழுத்துகள்: இந்தியாவிற்கு வெளியே பெரனிக்கே, குவாசிர் அல் காதம்(எகிப்து), கோர் ரோரி(ஓமன்), குவாங்லுக்(தாய்லாந்து) போன்ற இடங்களில் காணப்படும் ஆவணங்கள்.

**இலக்கியச் சான்றுகள்:**

சங்க நூல்களும் சங்கம் மருவிய இலக்கியங்களும்
- பொருளாதாரம், அரசாட்சிக் கலை ஆகியன குறித்து கௌடில்யர் எழுதிய அர்த்த சாஸ்திரம்
- ஆந்திரர்/சாதவாகனர் வம்சாவளி வரலாற்றினைக் குறிப்பிடும் புராணங்கள்
- மகாவம்சம் முதலான பௌத்த வரலாற்று நூல்கள்
- சாதவாகன அரசர் ஹாலா பிராகிருத மொழியில் எழுதிய காஹாசப்தசதி.
-

**தமிழ் செவ்வியல் இலக்கியம்**

தமிழ் செவ்வியல் இலக்கியத் தொகுப்பானது தொல்காப்பியம், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. தமிழின் மிகப் பழமையான இலக்கண நூலான தொல்காப்பியம் கவிதையியலைப் பற்றி மட்டும் பேசவில்லை. அக்காலத்து சமூகப் பண்பாட்டையும் பேசுகிறது. சங்கம் மருவிய காலத்தைச் சேர்ந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் ஐம்பெரும் காப்பியங்களும் (பொ.ஆ.நான்காம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை) இதற்கடுத்த காலச் சமூகப் பண்பாட்டுச் சூழலைப் சார்ந்தவையாகும்.

**வெளிநாட்டவரது குறிப்புகள்**

கீழ்க்காணும் கிரேக்க, லத்தீன் சான்றுகள் தொலைதூர வணிகம், பண்பாட்டுத் தொடர்புகள் குறித்த செய்திகளைத் தெரிவிக்கின்றன.

- பொ.ஆ. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொன்மையான கிரேக்க நூலான எரித்திரியக் கடலின் பெரிப்ளஸ்
- பொ.ஆ. முதலாம் நூற்றாண்டில் மூத்த பிளினி எழுதிய 'இயற்கை வரலாறு' (Natural History)
- பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டில் தாலமி எழுதிய ஜி'யோகிரபி (புவியியல்)
- ரோமானியரின் நிலவரைப்படமான பியூட்டெஞ்செரியன் அட்டவணை.(Peutingerian Table).

**மௌரியர் காலத் தென்னிந்தியா**

அசோகருடைய கல்வெட்டுகளே (பொ.ஆ.மு. 270-30) தென்னிந்தியாவின் அரசியல் நிலை குறித்த முதல் சித்திரத்தை வழங்குகிறது. அசோகரின் இரண்டாம் பாறைக் கல்வெட்டில் மௌரிய அரசின் எல்லைக்கப்பால் அமைந்த அண்டை அரசுகளானத் தமிழகத்தில் ஆட்சி புரிந்த அரச மரபுகளான சோழர், பாண்டியர், கேரளபுத்திரர், சத்தியபுத்திரர் ஆகியோரைக் குறிப்பிடுகின்றார். அப்பகுதிகளின் அசோகர் மனிதர்களுக்கும் விலங்குகளுக்குமான இருவகைப்பட்ட மருத்துவ வசதிகள் செய்து கொடுத்தார் எனச் சொல்லப்படுகிறது. அக்காலத்தில் மொரியப் பேரரசு கர்நாடகா, ஆந்திராவின் வடபகுதிகளையும் கொண்டிருந்தது. தமிழக அரசுகள் சுதந்திரமான அண்டை நாடுகள் என்றோ குறிப்பிடப்பட்டுள்ளன.

மௌரியப்பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னரும், சாதவாகனர் எழுச்சிக்கு முன்னரும் பல சிற்றரசுகள் தோன்றியுள்ளன. அவற்றின் அரசர்களைப் பற்றி போதுமான செய்திகள் கிடைக்கவில்லை. எனினும் அவர்கள் வெளியிட்ட நாணயங்கள், அவர்கள் சிறுபகுதிகளை ஆண்டு வந்த குறுநில மன்னர்கள் என்பதைத் தெரிவிக்கின்றன.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஏறத்தாழ 2400 பாடல்கள் கொண்ட இலக்கியக் கருவூலமாகும். மூன்று முதல் எண்ணூறு அடி அளவு கொண்ட இப்பாடல்கள் பாணர்களாலும் புலவர்களாலும் இயற்றப்பட்டவை.

எட்டுத்தொகையாவன: 1. நற்றினை, 2. குறுந்தொகை 3. ஐங்குறுநூறு 4. பதிற்றுப்பத்து 5. பரிபாடல் 6. கலித்தொகை 7. அகநானூறு 8. புறநானூறு

பத்துப்பாட்டாவது: 1. திருமுருகாற்றுப்படை 2. பொருநராற்றுப்படை 3. சிறுபாணாற்றுப்படை 4. பெரும்பாணாற்றுப்படை 5. முல்லைப்பாட்டு 6. மதுரைக் காஞ்சி 7. நெடுநல்வாடை 8. குறிஞ்சிப்பாட்டு 9. பட்டினப்பாலை 10. மலைபடுகடாம்.

சங்கம் மருவிய காலத்தைச் சேர்ந்த, பதினெண் கீழ்கணக்கு நூல்கள் பெரும்பாலும் நீதி பற்றியும், ஒழுக்க நெறிமுறைகளைப் பற்றியும் பேசுவனவாகும். திருக்குறளும் நாலடியாரும் இதில் முதன்மையானவை.

முதன்மையான காப்பியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் பண்பாடு மற்றும் மத வரலாற்றுக்கு சிறந்த சான்றுகளாகப் பயன்படுபவை.

**சங்க காலப் பெண்பாற் புலவர்**

சங்கப் பாடல்களின் தொகுப்பிற்கு பங்களித்த 450க்கும் மேற்பட்ட புலவர்களில் முப்பது பெண்பாற் புலவரும் அடங்குவர். அவர்களுள் ஔவையார், அல்லூர் நன்முல்லையார், காக்கைப்பாடினியார், காவற்பெண்டு, நல்வெளியார், ஒக்கூர் மாசாத்தியார், பாரிமகளிர் ஆகியோர் மிகமுக்கியப் பெண்பாற் புலவர்களாவர்.

**சாதவாகனர்கள் ஆட்சியின் கீழ் தென்னிந்தியா**

சாதவாகனர்கள் பொ.ஆ.மு. முதலாம் நூற்றாண்டில் தக்காணப் பகுதியில் தோன்றினர். மகாராஷ்ட்டிரா, கர்நாடகா, மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த ஒரு சில பகுதிகளை அவர்கள் ஆண்டனர். அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளின்படி தெலுங்கானா பகுதிகளில் ஆட்சியைத் தொடங்கிய சாதவாகனர் மகாராஷ்டிரப் பகுதிகளுக்கு நகர்ந்து, கோதாவரி நதித் தீரத்தில் பிரதிஸ்தான்(மகாராஷ்டிராவில் பைத்தன்) என்னும் நகரைக் தலைநகராகக் கொண்டு ஆடசி புரிந்தனர். பின்னர் கிழக்கு நோக்கி நகர்ந்து ஆந்திராவின் கடற்கரைப் பகுதிகளைக் கட்டுப்படுத்தினர். பிளினியின் நூல் ஆந்திர நாட்டிலிருந்த கோட்டைகளுடன் கூடிய 30 நகரங்கள், ஒரு பெரும்படை, குதிரைப்படை, யானைப்படை ஆகியன குறித்து பேசுகிறது.

சாதவாகன அரசர்களுள் கௌதமபுத்ர சதகர்னி பெரும் அரசராவார். சாகஅரசர் ‘நாகபனா’வை வென்ற அவர் நாகபனாவின் நாணயங்களைத் தன் அரச முத்திரையோடு மீண்டும் வெளியிட்டார். அவருடைய தாயான கௌதம பாலஸ்ரி என்பாரின் நாசிக் கல்வெட்டு, சாகர் பகல்வர், யவனர்கள் ஆகியோரை இவர் வெற்றி கொண்டதாகக் கூறுகிறது. பெருமைக்குரிய அஸ்வமேத யாகத்தை இவர் நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

கௌதமபுத்ர சதகர்னிக்குப் பின்னர் ஆட்சி பொறுப்பேற்ற வசிஷ்டபுத்ர புலுமாயி, சாதவாகன நாட்டின் எல்லைகளை விரிவடையச் செய்தார். மற்றொரு புகழ்பெற்ற அரசரான யக்னஸ்ரி சதகர்னி, தனது ஆட்சியின் வெளிநாட்டு வணிகத்தின் முக்கியத்துவத்தைக் காட்டும் வகையில் கப்பலின் வடிவம் பதிக்கப்பட்ட நாணயங்களை வெளியிட்டார்.

சாதவாகன அரசர் ஹாலா 700 காதற் பாடல்களைக் கொண்ட காஹாசப்தசதி என்ற நூலை இயற்றினார். மகாராஷ்டிரப் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட இந்நூலின் கருப்பொருள் சங்க இலக்கியத்தின் அகப்பொருளை ஒத்துள்ளன. பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டையொட்டி சாதவாகனப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. அவர்களைத் தொடர்ந்து ஆந்திரப் பகுதியில் இக்சவாகு, வட கர்நாடகப் பகுதிகளில் கடம்பர் ஆகியோர் ஆட்சி புரிந்தனர்.

**சாதவாகனர் காலத்தின் முக்கியத்துவம்**

நிலமானியம் வழங்குவது சாதவாகனர் காலத்தின் முக்கிய அம்சமாகும். இதன் பயனாளிகள் பெரும்பாலும் பௌத்தர்களும் பிராமணர்களும் ஆவர். பௌத்தத் துறவிகளுக்கு வழங்கப்பட்ட நிலங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டதை நனிகாட் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இவ்வாறு மதகுருமார்களைக் கொண்ட குழுக்கள் செல்வாக்குப் பெற்று உயரிடத்தை வகிக்கத் தொடங்கியதைக் காணமுடிகிறது. நிலங்களைக் கொடையாக வழங்கும் இம்முறை நிலங்களில் வேளாண்மை செய்யாமல், நிலங்களுக்கு உரிமையாளர்களாக மாறிய ஒரு பிரிவினரை உருவாக்கியது.

**சங்க காலம்**

பொ.ஆ.முதல் நூற்றாண்டுகளே சங்க காலம் என்பது பெரும்பாலோர் ஒத்துக் கொள்ளும் கால வரையறையாகும். இக்காலம் பற்றிய செய்திகள் அனைத்தும் சங்க இலக்கியங்களிலிருந்தே பெறப்படுகின்றன.

**மூவேந்தர்**

பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே தமிழகத்தின் மூன்று அரச மரபுகள் குறித்து அசோகர் அறிந்திருந்தாலும், பொ.ஆ. முதலாம் நூற்றாண்டு மற்றும் அதற்கு பின் வந்த காலத்தைச் சேர்ந்த சங்க இலக்கியத்தின் மூலமே அவ்வரசர்களின் பெயர்களை அறிந்து கொள்ள முடிகிறது.

மூவேந்தர் என்றறியப்பட்ட மணிமுடிசூடிய அரசர்களான சேர, சோழ, பாண்டியர் பெரும்பாலான வேளாண் நிலங்களையும், வணிகப் பெருவழிகளையும் நகரங்களையும், தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அசோகர் கல்வெட்டுகளில் மேற்சொல்லப்பட்ட மூவேந்தரோடு இடம் பெற்றுள்ள சத்யபுத்ர(அதியமான்) என்பது சங்கப் பாடல்களில் இடம் பெறும் வேளிரைக் குறிப்பதாக உள்ளது.

## சோழர்

தமிழகத்தின் மத்திய, வட பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டிருந்தனர். அவர்களது ஆட்சியின் மையமாக இருந்த பகுதி காவிரியாற்றின் கழிமுகப் பகுதியாகும். இதுவே பின்னர் சொழ மண்டலம் என்றழைக்கப்பட்டது. அவர்களின் தலைநகர் உறையூர் ஆகும். (திருச்சிராப்பள்ளி நகரத்திற்கு அருகே அமைந்துள்ளது). மேலும் புகார் அல்லது காவிரிப்பூம்பட்டினமானது முக்கியத் துறைமுகமாகவும் அரச குடும்பத்தின் மாற்று வாழ்விடமாகவும் திகழ்ந்தது. சோழரின் சின்னம் புலி ஆகும். காவிரிப்பூம்பட்டினம் இந்துமா கடலின் பல பகுதிகளைச் சேர்ந்த வணிகர்களைத் தன்பால் ஈர்த்தது. கரிகாலனின் ஆட்சியின்போது இங்கு நடைபெற்ற ஆரவாரமான வணிக நடவடிக்கைகள் குறித்துக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலையில் விரிவாக விளக்குகிறார்.

இளஞ்சேட்சென்னியின் மகனான கரிகாலன் சங்ககால சோழஅரசர்களில் தலையாயவராக அறியப்படுகிறார். பட்டினப்பாலை அவருடைய ஆட்சியைப் பற்றி விரிவாகக் கூறுகிறது. கரிகாலனுடைய தலையாய போர் வெற்றி என்பது வெண்ணி போர்க்களத்தில் சேரரையும் பாண்டியரையும் அவர்களுக்கு உதவிய பதினோரு வேளிர் குலத்தலைவர்களையும் வெற்றி கொண்டதாகும். காட்டை வெட்டி வளம் பெருக்கியதற்காகவும், காவிரியில் அணை கட்டி, வாய்க்கால்கள் வெட்டி நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்ததன் மூலம் வேளாண்மையை வளரச் செய்தார் என்பதற்காகவும் இவர் போற்றப்படுகிறார். பெருநற்கிள்ளி எனும் பெயருடைய மற்றொரு அரசன் வேத வேள்வியான ராஜசூய யாகத்தை நடத்தியுள்ளார். கரிகாலனின் மறைவைத் தொடர்ந்து உறையூர், மற்றும் புகார் அரச குடும்பத்தினரிடையே வாரிசுரிமை தொடர்பான மோதல் ஏற்பட்டிருக்கிறது.

## சேரர்

மத்திய, வடக்கு கேரளப் பகுதிகளையும் தமிழ்நாட்டின் கொங்கு பகுதியினையும் ஆட்சி செய்தனர். வஞ்சி அவர்களின் தலைநகராகும். மேலைக் கடற்கரைத் துறைமுகங்களான முசிறியும் தொண்டியும் அவர்களது கட்டுப்பாட்டில் இருந்தன. வஞ்சி இன்றைய தமிழகத்தின், கரூர் என்று அடையாளம் காணப்படுகிறது. அதேசமயம் சில அறிஞர்கள் கேரளத்திலுள்ள திருவஞ்சைக்களம் என்னும் ஊரே வஞ்சி என்று அடையாளங் காண்கின்றனர். சேர அரச குடும்பத்தில் இரு கிளைகள் இருந்ததெனவும். பொறையர் என்னும் கிளையினர் தமிழ்நாட்டின் கரூர் நகரிலிருந்து ஆட்சி புரிந்தனர் எனவும் பல அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

எட்டு சேர அரசர்கள் குறித்தும் அவர்கள் ஆண்ட பகுதிகள், அவர்களது சாதனைகள் குறித்தும் பதிற்றுப்பத்து பேசுகிறது. கரூர் நகருக்கு அருகேயுள்ள புகளூரிலுள்ள கல்வெட்டு, மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த சேர அரசர்களைக் குறிப்பிடுகிறது. அவர்களில் ஒருவரான சேரல் இரும்பொறை தன் பெயரில் நாணயங்கள் வெளியிட்டுள்ளார். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், செங்குட்டுவனும் முக்கிய சேர அரசர்கள் ஆவர். பல குறுநில மன்னர்களைச் செங்குட்டுவன் வெற்றி கொண்டுள்ளார். கடற்கொள்ளையர்களை அடக்கியதன் மூலம் முக்கியத் துறைமுகமான (கொடுங்களூர்களுக்கு அருகேயான) முசிறியின் பாதுகாப்பை உறுதிபடுத்தினார் என்றும் கூறப்படுகிறது. ஆனால் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் செங்குட்டுவனின் மாபெரும் வட இந்தியப் படையெடுப்பு சங்க இலக்கியங்களில் சொல்லப்படவில்லை. இவர் ஐம்பத்தாறு ஆண்டுகள் ஆட்சி செய்ததாகவும் வைதீக, அவைதீக மதங்களை ஆதரித்ததாகவும் கூறப்பட்டுள்ளது. செப்பு,ஈய நாணயங்களைச் சேர அரசர் வெளியிட்டுள்ளார். தமிழ் பிராமியில் புராணக் குறிப்புகளைக் கொண்டுள்ள அவை, ரோம நாணயத்தைப் போலுள்ளன. எழுத்துக்கள் எவையும் இல்லாமல் சேரர்களின் வில் அம்புச் சின்னங்களைத் தாங்கிய சேர நாணயங்களும் கிடைத்துள்ளன.

## பாண்டியர்

மதுரையிலிருந்து ஆண்டனர். தாமிரபரணி நதி வங்காளவிரிகுடாக் கடலில் கலக்குமிடத்தில் அமைந்துள்ள கொற்கை அவர்களின் முக்கியத் துறைமுகமாகும். இது முத்துக் குளிப்பிற்கும் சங்குகள் சேகரிப்பிற்கும் பெயர் பெற்றதாகும். கொற்கை பெரிப்ளசின் குறிப்புகளில் கொல்கொய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பாண்டியரின் சின்னம் மீன். அவர்களின் நாணயங்களில் ஒருபுறம் யானையின் வடிவமும் மற்றொரு புறம், புதிய பாணியில் மீனின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. இவர்கள் கேரளத்தின் தெற்குப் பகுதிகளின் மீது போர் தொடுத்து கோட்டயத்துக்கு அருகேயுள்ள நெல்கிண்டா துறைமுகத்தை தங்கள்

கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்தனர். மரபுவழிச் செய்தியின்படி பாண்டியர் தமிழ்ச் சங்கங்களை ஆதரித்து சங்க நூல்களைத் தொகுப்பித்தனர். சங்கப் பாடல்கள் பாண்டிய அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றன. ஆனால் அவர்கள் எப்போது அரச பதவி ஏற்றார்கள், அவர்கள் ஆண்ட கால அளவு என்ன, என்பன போன்ற விவரங்கள் தெளிவாக இல்லை.

மாங்குளம் தமிழ்-பிராமி கல்வெட்டு பொ.ஆ.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டிய அரசன் நெடுஞ்செழியனைக் குறிப்பிடுகிறது. மதுரைக் காஞ்சி முதுகுடுமிப்பெருவழுதியையும் மற்றொரு நெடுஞ்செழியனான தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனையும், வேறு சில பாண்டிய மன்னர்களையும் குறிப்பிடுகின்றது. முதுகுடுமிப் பெருவழுதி எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வேள்விக்குடிச் செப்பேடுகளில், பிராமணர்களுக்கு நிலங்களைத் தானமாக வழங்கினார் எனக் குறிக்கப்படுகிறார். தான் செய்த வேத வேள்விச் சடங்குகளின் நினைவாகப் பெருவழுதி என்ற பெயரில் புராண கதைப் பொறிப்புகளைக் கொண்ட நாணயங்களை வெளியிட்டுள்ளார்.

நெடுஞ்செழியன்,சேரர், சோழர் ஐந்து வேளிர் குல சிற்றரசர்கள் (திதியன், எழினி, எருமையூரான், இருங்கோவேண்மான், பொருநன்) ஆகியோரின் கூட்டுப்படைகளைத் தலையாலங்கானத்துப் போரில் வெற்றி கொண்டதற்காகப் புகழப்படுகிறார். மேலும் சிற்றரசர்களிடமிருந்து (வேளிர்) மிலலை, முத்தூர் (புதுக்கோடடை மாவட்டம்) என்னும் இடங்களைக் கைப்பற்றிய பெருமை இவரையே சாரும். கொற்கையின் தலைவனென்றும், தீருநெல்வேலி கடற்கரைப் பகுதியில் வாழும் மீன் பிடிக்கும், போர்புரியும் திறன் பெற்ற தென்பகுதி பரதவர்களின் தலைவனென்றும் இவர் புகழப்படுகிறார்.

**தமிழ் திணைப் பகுதிகளில் சமூக உருவாக்கம்**

அக்காலத்தில் சமூக உருவாக்கத்தை நாம் புரிந்துகொள்ளச் சங்க இலக்கியங்கள் பெரிதும் துணை புரிகின்றன. திணைக் கோட்பாட்டின் பின்புலத்தில் தமிழகம் குறிங்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்து முக்கிய நிலப்பரப்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொன்றும் தெய்வம், மக்கள், சூழல் சார்ந்த பண்பாட்டு வாழ்க்கை எனத் தனித்தன்மைகளைக் கொண்டிருந்தது.

| | |
|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த பகுதியுமாகும். இங்கு வேட்டையாடுதலும், உணவை சேகரித்தலும் வழக்கமாக இருந்தது. |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமுமான இங்கு, கால்நடை மேய்ப்பதும், அத்துடன் மாற்றிட வேளாண்மை செய்வதும் தொழிலாக இருந்தது. |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமுமான இங்கு நீர்பாசனத்தின் மூலம் கலப்பைகளைப் பயன்படுத்தி வேளாண்மை செய்வது தொழிலாகும். |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடமுமான இங்கு மீன்பிடித்தலும் உப்பு உற்பத்தியுமே முக்கியத் தொழில்களாகும். |
| பாலை | மணலும் மணல் சார்ந்த வறண்ட நிலப்பகுதியான இங்கு வேளாண்மை சாத்தியமில்லை என்பதால் மக்கள் கால்நடைத் திருட்டையும் கொள்ளையடிப்பதையும் தொழிலாகக் கொண்டனர். |

**தமிழ் அரசமைப்பு**

ஆட்சியாளர்களில் மூன்று வகைப்பட்ட தலைமைத்துவம் கொண்டவர்களைக் காண முடிகிறது. 1) கிழார் 2) வேளிர் 3) வேந்தன். கிழார் என்போர் கிராமங்களின் அல்லது ஒரு சிறிய பகுதியின் தலைவராக இருந்து, பின்னர் நாடு என்றறியப்பட்ட நிராவாகப் பிரிவின் தலைவராவர். இவர்கள் குறிப்பிட்ட இடங்களில் வாழும் பழங்குடிச் சமூகங்களின் தலைவர்காளாவர். வேந்தர் எனப்பட்டோர் மிகப் பெரும் வளமான நிலப் பகுதியை கட்டுப்படுத்திய அரசர்களாவர்.

மூவேந்தர்களின் வளம் நிறைந்த பகுதிகளின் இடையே அமைந்திருந்த மலைப்பாங்கான காட:டுப் பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டிருந்தனர்.

அதியமான், பாரி, ஆய், இருங்கோ போன்ற குறுநில மன்னர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கென இயற்கை வளமிக்க ஒரு பகுதியை ஆண்டனர். அவர்கள் பெருந்தன்மை கொண்ட புரவலர்களாகப் புலவர்களையும் ஆடல் பாடல் கலைஞர்களையும் ஆதரித்தனர்.

சங்க கால சேர, சோழ, பாண்டிய அரசுகளின் அரசியல் அமைப்பைப் பொறுத்த மட்டிலும் அறிஞர்களுக்கிடையே பல மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன.

1. சமூகப் பிரிவினைகள் வெளிப்படவில்லை.
2. எல்லைகள் தெளிவாக வரையறை செய்யப்படாத நிலையிலிருந்தது.
3. ஒரு அரசின் உருவாக்கத்திற்குத் தேவைப்படும் வேளாண் வளர்ச்சியும் வேளாண் உபரியும் நாசம் ஏற்படுத்தும் போர்களால் தடுக்கப்பட்டன.
4. வட இந்திய அரசுகளைப் போல வரி விதிப்பு இருந்ததாகச் சான்றுகள் இல்லை.

பொ.ஆ.மு. முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கி, பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டு வரை வணிகம் மிகப்பெரும் பங்கை வகித்துள்ளது.

கிழார்களையும், வேளர் குலத்தலைவர்களையும் வேந்தர்கள் அடிபணியச் செய்ததோடு தங்களுக்குள்ளும் போரிட்டுக்கொண்டனர். இதன் பொருட்டு தங்களுக்கெனப் படை வீரர்களை அணிதிரட்டியதோடு, சில வேளிர்குலத் தலைவர்களின் உதவியையும் பெற்றனர். சங்க காலத்தைச் சேர்ந்த வேந்தர்கள் தங்களது வலிமையைப் பறைசாற்றிக் கொள்வதற்காகச் சிறப்புப் பட்டங்களைச் கொள்வதற்காகச் சிறப்புப் பட்டங்களைச் சூடிக் கொண்டனர். கடுங்கோ, இமயவரம்பன், வானவரம்பன், பெருவழுதி போன்ற பட்டப்பெயர்களைச் சூட்டிக் கொண்டதன் மூலம் தங்களை ஏனைய மக்களிடமிருந்தும் வேளிர்குலத் தலைவர்களிடமிருந்தும் வேறுபடுத்திக் காட்டிக் கொண்டனர்.

**சமூகமும் பொருளாதாரமும்**

சங்க காலத்தில் வேந்தர்கள் மேற்கொண்ட போர்கள் எதிரிகளின் பகுதிகளைக் கைப்பற்றி அதன் மூலம் தங்களது ஆட்சி எல்லைப் பரப்பினை விரிவாக்குவதற்காய் அமைந்தன.

பொருளாதார உற்பத்தியில் பெண்களும், செயலூக்கத்துடன் பங்கெடுத்துள்ளனர். சங்க காலத்தில் பல பெண்பாற்புலவர்களும் இருந்துள்ளனர்.

கைவினைத் தொழில்களான உலோகப் பாண்டம் செய்தல், சங்கு வளையல், அணிகலன் செய்தல், கண்ணாடி, இரும்பு வேலை, மட்பாண்டம் செய்தல் போன்ற உற்பத்தி நடவடிக்கைகள் குறித்து சான்றுகள் உள்ளன. நகர மையங்களான அரிக்கமேடு, உறையூர், காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம், மதுரை, கொற்கை, கேரளத்தில் பட்டணம் ஆகிய இடங்களில் இது போன்ற கைவினைப் பொருளுற்பத்தி வளமையாக நடந்துள்ளன.

மதுரைக்காஞ்சி பகல் மற்றும் இரவு நேரக் கடைவீதிகளையும் (நாளங்காடி, அல்லங்காடி) அங்கு விற்பனையாகும் பலவகைப்பட்ட கைவினைப் பொருள்கள் பற்றியும் பேசுகிறது. பல்வேறு வகைப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருள்கள் அனைத்து இடங்களிலும் கிடைக்கவில்லை. சிலர் விலையுயர்ந்த ஆபரணக் கற்களையும், ஓரளவு மதிப்புள்ள ஆபரணக் கற்களையும் பண்டமாற்றாகக் கொடுத்து மூலப்பொருள்களைப் பெற்றனர். அம்மூலப் பொருள்கள் தொழிற்கூடங்களைச் சென்றடைந்து பல்வேறு பொருள்களாகத் தயார் செய்யப்பட்டது.

மட்பாண்டங்களின் மீது பொறிக்கப்பட்டுள்ள சில பெயர்கள், தமிழ் மொழி பேசாத ஏனைய மக்கள், பெரும்பாலும் வணிகர்கள் நகரங்களிலும் தொழில் மையங்களிலும் இருந்ததைத் தெரிவிக்கின்றன. தொலைதூர நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் தமிழகத்தில் தங்கியிருந்து வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். மகதக் கைவினைஞர்கள், மாளவ உலோகப் பணியாளர்கள், மராத்திய எந்திரப் பொறியாளர்கள் போன்றோர் தமிழகக் கைவினைஞர்களோடு கூட்டுறவு முறையில் இணைந்து பணியாற்றியதாக மணிமேகலை குறிப்பிடுகின்றது. தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் வணிகத்தோடு தொடர்புடைய வணிகன், சாத்தன், நிகம போன்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன. உப்பு வணிகர்கள் உமணர் என்றழைக்கப்பட்டனர். அவர்கள் மாடுகள்

பூட்டிய வண்டிகளில் குடும்பத்தோடு வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சாத்து என்னும் சொல் இடம் விட்டு இடம் சென்று வணிகம் செய்பவர்களைக் குறிப்பிதாகும்.

வணிகத்தில் நாணயங்கள் பயன்படுத்தப்பட்டாலும் பண்டமாற்று முறையே அதிக அளவில் பழக்கத்திலிருந்தது. ரோம தங்க வெள்ளி நாணயங்களும் பரிமாற்றத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன. ரோமப் பேரரசு தென்கிழக்கு ஆசிய நர்டுகள் போன்ற தொலைதூரத்தில் அமைந்துள்ள நாடுகளோடும் வணிகத்தொடர்புகள் மேற்கொண்டதைத் தொல்பொருள் ஆய்வுச் சான்றுகள் உறுதி செய்கின்றன.

இந்தியாவில் தென் பகுதியில் கடற்கரைகளை எளிதாகச் சென்றடைய முடியும் என்ற சூழல் இருந்ததாலும், கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் கடல்வழிப் பாதையில் அமைந்திருந்த காரணத்தினாலும் கடல் கடந்த தொடர்புகளில் முக்கியப்பங்கு வகித்தது. தொடக்க வரலாற்றுக்கால துறைமுகங்கள் பலவற்றில் கிடைத்துள்ள அம்போரா என்னும் ரோம நாட்டு ஜாடிகள், கண்ணாடிப் பொருள்கள், கடல் கடந்த வணிக நடவடிக்கைகளைச் சுட்டுகின்றன. ரோமானியர்களால் கொண்டுவரப்பட்ட செல்வம் அயல்நாட்டு வணிகர்களின் வருகை ஆகியவை குறித்து தொல்பொருள் சான்றுகளும் இலக்கியச் சான்றுகளும் உள்ளன. ரோமானியத் தங்க, வெள்ளி நாணயக் குவியல்கள் கோயம்புத்தூர் பகுதியிலும் தென்னிந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் கண்டறியப்பட்டுள்ளன.

**கருத்தியலும் மதமும்**

இக்காலகட்டத்தில்தான் பௌத்த மதம் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பரவியிருந்தது. அசோகரின் மகள் போதிமரத்தை இலங்கைக்கு கொண்டு சென்றதாகக் கருதப்படுகின்றது. அசோகருக்கு முன்னதாக சந்திரகுப்த மௌரியர் கர்நாடகத்திற்கு வருகை தந்ததாகவும் பழங்கதை ஒன்று உள்ளது. சாதவாகனர்களும், சங்க காலத்து அரசர்களும், இக்சவாகுக்களும், வேத வேள்விகளை ஆதரித்தனர். பிராமணருடைய வருகை குறித்தும் வேதச் சடங்குகள் நடைபெற்றமைக்கும் சங்க இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. ஆனால் இக்காலக்கட்டத்தில் ‘வர்ணாசிரமம்’ என்னும் கருத்தியல் தமிழ்ப்பகுதிகளில் வேரூன்றவில்லை.

பௌத்த மதம் தொடர்பான சான்றுகள் தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகின்றன. ஆந்திராவில் கிருஷ்ணா, கோதாவரி நதிகளின் கழிமுகப் பகுதிகள் பல பௌத்த மையங்களைக் கொண்டுள்ளன.

பௌத்த மதம் எந்த அளவிற்கு ஆழமாக வேறூண்றியிருந்தது என்பதை அமராவதி, நாகர்ஜுனகொண்டா ஆகிய இடங்ளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் உணர்த்துகின்றன.

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், காவிரிபூம்பட்டினம் ஆகிய இடங்களில் பௌத்த ஸ்தூபிகள் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. சமண மதத்தோடு ஒப்பிடுகையில் பௌத்த மதத்திற்கான சான்றுகள் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மட்டுமே கிடைக்கின்றன. தமிழகத்தில் காணப்படும் தமிழ்-பிராமி கல்வெட்டுகளுடன் கூடிய எண்ணற்ற குகை உறைவிடங்கள் பௌத்த மதத்தைக் காட்டிலும் சமண மதம் செல்வாக்குடன் விளங்கியதைப் பறைசாற்றுகின்றன.

சங்கம் மருவிய காலத்தில் சமணர்கள் தமிழ் இலக்கியத்திற்கு அளப்பரிய சேவை செய்துள்ளனர்.

**களப்பிரர்களின் காலம் - சங்கம் மருவிய காலம்**

சங்க காலத்திற்கும், பல்லவர், பாண்டியர் காலத்திற்கும் இடைப்பட்ட (தோராயமாக, பொ.ஆ 300-600க்கும்) காலமே, தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம் என அறியப்படுகிறது. இவ்விடைவெளியில் போர்க்குணம் மிக்க களப்பிரர்கள் என்போர் தமிழகத்தைக் கைப்பற்றித், தமிழகத்தின் பாராம்பரிய அரசுகளான மூவேந்தர்களையும் தோற்கடித்ததால் இக்காலமானது களப்பிரர்களின் இடைக்கால ஆட்சி என்றும்,

இருண்ட காலமென்றும் தொடக்க வரலாற்று ஆசிரியர்கள் சித்தரித்தனர்.

ஆனால் தமிழ்ப் பண்பாட்டின் பல சிறந்த கூறுகள் இக்காலத்தில்தான் தோன்றியிருக்கிறது. இக்காலத்தில்தான் உன்னதமான தமிழ் இலக்கியமான திருக்குறளும் அதோடு ஏனைய பதினென் கீழ்க்கணக்கு நூல்களும் இயற்றப்பட்டன.

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய சிறந்த காப்பியங்களும்,

அவைதீக மதங்களான சமணமும், பௌத்தமும் பெரும் செல்வாக்குப் பெற்றமையால் வைதீக வேதபுராண கருத்துக்களைக் கொண்டிருந்த அறிஞர்கள், ஆட்சி புரிகின்ற களப்பிரர்கள் தீயவர்கள் என்ற கருத்துத் தோற்றத்தை உருவாக்கியிருக்கலாம் எனத் தெரிகிறது.

பொ.ஆ ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்னர் வட தமிழகத்தில் பல்லவரும், தென்தமிழகத்தில் பாண்டியரும் அரசு மற்றும் சமூகத்தை உருவாக்க வழி உருவானது என்று அண்மைக்கால வரலாற்றாய்வாளர்கள் கூறுகின்றனர். தொடக்கத்தில் இந்நாடுகளின் அரசர்கள் சமண பௌத்த மதங்களையே சைவ-வைணவ பக்தி இயக்கத்தால் புத்துயிர் பெற்ற வேத புராண மதங்களின் செல்வாக்கிற்கு உள்ளாயினர். ஆனால் இம்மதங்கள் பக்தி இயக்க அடியார்களின் வெறுப்பைத் தூண்டும் வகையில் பொது மக்களிடையே சமண பௌத்த மதங்கள் பெரும் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தன.

, , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , ,

**11th வரலாறு**

**அலகு– 11**

**பிற்காலச் சோழரும் பாண்டியரும்**

**கற்றல் நோக்கங்கள்:**

- பிற்காலச் சோழர், பாண்டியர் ஆட்சியின் போது நடைபெற்ற கீழ்கண்டவை குறித்து அறிவு பெறுதல் ஆகும்.

**I சோழர்:**

- சோழ அரசர்களின் சாதனைகள்
- சோழப் பேரரசின் கீழ் ஏற்பட்ட பண்பாட்டு வளர்ச்சி
- நன்கு வளர்ச்சி அடைந்த வேளாண்மைக் கட்மைப்பு, நீர்ப்பாசன முறை ஆகியவற்றின் தோற்றம்
- இடைக்காலத் தமிழச் சமூகத்தில் கோயில்களின் பங்களிப்பு
- சோழர் காலக் கடல்வழிவணிகம்

**II. பாண்டியர்:**

- மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு பாண்டியரின் எழுச்சி
- மாலிக் காபூரின் படையெடுப்பும் வீழ்ச்சியும்
- அலாவுதீன் கில்ஜியை வரவழைத்த வாரிசுரிமைச் சண்டை
- பாண்டியர் ஆட்சியில் வேளாண்மை, நீர்ப்பாசனம், வணிகம்
- தென் தமிழ்நாட்டில் மதமும் பண்பாடும்

**அறிமுகம்:**

வரலாற்றின் தொடக்க காலத்தில் மூன்று வலிமை வாய்ந்த மரபுவழி அரசர்கள் தமிழத்தை ஆட்சி செய்தனர். சங்க இலக்கியம் மூவேந்தர்கள் என்று அவர்களைக் குறிப்பிடுகிறது. பல சங்கப் பாடல்கள் சோழ அரசர்களின் மரபு பற்றிக் குறிப்பிடுகின்றன. எனினும், சங்க காலத்திற்குப் பின், பொ.ஆ.9-ஆம் நூற்றாண்டு வரை சோழர் குறித்த சான்றுகளை அறிய முடியவில்லை. இந்த இடைப்பட்ட காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட அசைவியக்கங்கள் இப்பகுதியில் பெரிய அளவிலான மாற்றங்கள் ஏற்பட வழிவகுத்தன. அம்மாற்றங்கள் முடியாட்சி தோன்றி நிலத்திருக்கக் காரணமாயின. அவற்றுள் ஒன்றுதான் பிற்காலச் சோழப் பேரரசு ஆகும்.

பிற்காலச் சோழரின் தோற்றத்துக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் ஒன்று வேளாண்மை விரிவாக்கம் ஆகும். இந்த விரிவாக்கம் ஆற்று வடிநிலங்களில் ஏற்பட்டது. இதன்மூலம் வேளாண் உற்பத்தி பன்மடங்கு பெருகியது. இந்த வேளாண் பெருவளர்ச்சி அபரிமிதமான உபரி தானிய உற்பத்திக்கு இட்டுச் சென்றது. ஆனால் இந்த உபரி சமமற்ற செல்வப் பகிர்வுக்கும் காரணமாயிற்று. தொடக்க காலத்தில் இருந்ததைப் போல் அல்லாமல், சமூகம் படிப்படியாகப் பெரிய அளவில் வேறுபாடுகளுக்கு உள்ளானது. இதே காலகட்டத்தில், இந்தியாவின் வட பகுதியிலிருந்து அறிமுகமான மதங்கள், அவை சார்ந்த கோயில்கள் போன்ற நிறுவனங்களும் சிந்தனைப் போக்குகளும் புதிய சக்திகளாக வடிவெடுத்தன. பக்தி இயக்கத்துக்குத் தலைமை தாங்கிய நாயன்மார்களும், ஆழ்வார்களும் தமது கருத்தியலை பரப்புரை செய்தனர். இதேபோன்று, வட இந்தியாவில் உருவான அரசியல் சிந்தனைகளும் நிறுவனங்களும் விரைவில் தெற்கில் பரவின. இம்மாற்றங்களின் ஒட்டுமொத்த விளைவாக இங்கு அரசு உருவானது. முடியாட்சி முறையைக் கொண்ட இவ்வரசுக்குப் பண்டைய சோழ மன்னனின் வழிவந்தவர்களாகத் தங்களை பறைசாற்றிக் கொண்டோர் தலைமையேற்றனர்.

சோழப் பேரரசு செல்வாக்கு இழந்ததும், வைகை ஆற்று வடிநிலமான மதுரை பகுதியில் பாண்டியர் ஆட்சி செய்யத் தொடங்கினர். பதினான்காம் நூற்றாண்டுவாக்கில் பாண்டியரின் ஆட்சி வலிமை பெற்றது. சோழர் போலவே பாண்டியர்களும் வேளாண்மை, வணிகம் மூலம் பெரும் வருவாய் ஈட்டினர். இக்கால கட்டத்திலும் கடல் கடந்த வாணிபத்தின் விரிவாக்கம் தொடர்ந்தது. பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாக இருந்த திருநெல்வேலியிலிருந்து மலபார் கடற்கரைப்பகுதிக்குத் தானியங்களும் பருத்தியும் பருத்தித்துணிகளும் காளைகளும் ஏற்றுமதி

செய்யப்பட்டன. மேற்கு, தென்கிழக்கு ஆசியா பகுதிகளுடனும் வணிகத் தொடர்பு மேற்கொள்ளப்பட்டது. பாண்டிய மன்னர்கள் மத, பண்பாட்டு, அரசியல் கூறுகளைத் தொகுத்து உருவாக்கிய பண்பாட்டு மரபானது குப்த அரசர்கள் செவ்வியல் காலத்தில் உருவாக்கியதாகக் கருதப்படும் ஒற்றைப் பரிமாணப் பண்பாட்டில் இருந்து முற்றிலும் வேபட்டதாகும்.

## I– சோழர்:

### சோழப் பரம்பரையின் தோற்றம்:

சங்க காலத்துக்குப் பிறகு கிடைக்கும் ஆவணங்களின்படி, காவிரிப்பகுதியில் சோழர் பல்லவருக்குக் கீழ்நிலை ஆட்சியாளர்களாக இருந்துள்ளார்கள் எனத் தெரிகிறது. விஜயாலயன் (பொ.ஆ. 850 – 871) முத்தரையர்களிடமிருந்து காவிரி ஆற்றின் கழிமுகப்பகுதிகளை வென்றார். அவர் தஞ்சாவூர் நகரைக் கட்டமைத்து, 859 இல் சோழ அரசை நிறுவினார். எனவே, வரலாற்றாய்வாளர்கள் இச்சோழர்களைப் பிற்காலச் சோழர் என்றும் பேரரசுச்சோழர் என்றும் குறிப்பிடுகிறார்கள். விஜயாலயனுக்குப் பின் வந்த சோழ அரசர்கள் தாங்கள் சங்க காலத்தின் புகழ்பெற்ற சோழ அரசனான கரிகாலனின் மரபில் வந்தவர்கள் எனச் செப்பேடுகளில் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் தமது மரபுவழிப்பட்டியலில் 'சோழ' என்ற பெயருடைய அரசரைத் தனது மூதாதையராகக் குறிப்பிட்டுள்ளார்கள். கிள்ளி, சோச்செங்கண்ணன்,கரிகாலன் எனும் பெயர்களைக் கொண்ட சோழ அரசர்கள் தங்கள் கொடிவழியைச் சேர்ந்தவர்கள் என இச்செப்பேடுகளில் குறிப்பிட்டுள்ளார்கள்.

விஜயாலயனுக்குப் பின்வந்தோரில் முதலாம் பராந்தகன் (907 – 955) முதல் மூன்றாம் குலோத்துங்கன் வரையான அரசர்கள் சோழருக்குப் பெருமையும் புகழும் சேர்ந்தனர். பராந்தகச் சோழன் நாட்டின் எல்லையை விரிவுப்படுத்தினார். ஆட்சிமுறையின் அடித்தளத்தையும் விரிவாக்கினர். முதலாம் இராஜராஜனும் அவருடைய மகன் முதலாம் இராஜேந்திரரும் தங்கள் முன்னோடிகள் மூலம் ஏற்பட்டிருந்த வளர்ச்சிகளை ஒருங்கிணைத்து, தீபகற்ப இந்தியாவில் சோழரின் மேலாதிக்கத்தை நிறுவினர்.

### சான்றுகள்:

சோழர் தங்களது பரந்து விரிந்த பேரரசை ஆள்வதற்கு வலுவான நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கியதுடன், பிற்கால வரலாற்றாய்வாளர்களுக்கு உதவும் வண்ணம் பெரும் எண்ணிக்கையிலான வரலாற்றுச் சான்றுகளையும் விட்டுச் சென்றுள்ளனர். செப்பேடுகளிலும் கல்லிலும் 10,000-க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் சோழர் வரலாற்றுக்கான முதல்நிலைச் சான்றுகளாக உள்ளன. இந்த வரலாற்று ஆவணங்களில் பெரும்பான்மையானவை அரசர்களும் பிறரும் கோயில்களுக்கு வழங்கிய கொடை குறித்த தகவல்களாகவே உள்ளன. அற்றின் உள்ளடக்கத்தில் நிலப் பரிமாற்றங்கள், வரிகள் (விதிக்கப்பட்ட வரிகள், விலக்கப்பட்ட வரிகள்) ஆகியன குறித்த தகவல்களே அதிகம். ஆனால், பிற்காலக் கல்வெட்டுகள் சமூக வேறுபாடுகள் குறித்துக் குறிப்பிடுகின்றன. அவை சமூகத்தில் சாதிகள், துணைச்சாதிகள் இருந்ததைக் காட்டுகின்றன. இவற்றின் வாயிலாக அன்றைய சமூகக் கட்டமைப்பு குறித்த தகவல்களை அறிய முடிகிறது. இவற்றுடன் செப்பேடுகளிலும் அரசர் ஆணைகள் காணப்படுகின்றன. அவற்றிலும் கொடிவழி, போர்கள், வெற்றிகள், நிர்வாகப் பிரிவுகள், உள்ளாட்சி அமைப்பு, நில உரிமைகள், பல்வேறு வரிகள் குறித்த செய்திகள் உள்ளன. சோழர் ஆட்சியில் இலக்கியங்களும் செழித்தன. சைவ, வைணவ நூல்கள் தொகுத்து முறைப்படுத்தப்பட்டன. இது சோழர் காலத்தில் நடந்த முக்கியமான சமய இலக்கியப் பணியாகும். பெருங்காவிய நூலான கம்ப இராமாயணம் இலக்கிய வடிவிலான வரலாற்று நூல்களான கலிங்கத்துப்பரணி, குலோத்துங்கச் சோழன், பிள்ளைத்தமிழ், மூவருலா, ஆகியனவும் இக்காலத்தில் இயற்றப்பட்டன. நான்னூல், நேமிநாதம், வீரசோழியம் ஆகியவை இக்காலத்தில் எழுதப்பட்ட குறிப்பிடத்தக்க இலக்கண நூல்கள் ஆகும். பாண்டிக்கோவை, தக்கயாகப்பரணி ஆகியவை பிற முக்கிய இலக்கியப் படைப்புகளாகும்.

### ஆட்சிப்பகுதி :

தமிழ்நாட்டில் சோழ அரச மரபின் கீழ் இருந்த ஆட்சிப் பகுதி சோனாடு அல்லது சோழ நாடு எனப்படுகிறது. சோழ மண்டலம் எனப்படும் காவிரி ஆற்றின் கழிமுகப்பகுதி சோழ அரசின் மையப்பகுதியாக விளங்கியது. சோழ மண்டலம் என்ற சொல் ஐரோப்பியர் நாவில் 'கோரமண்டல்' எனத் திரிபடைந்தது. தற்போது இச்சொல் தென்னிந்தியாவின் கிழக்குப் பகுதி முழுவதையும் குறிக்கின்றது. தமது படைவலிமையைப் பயன்படுத்தி, தற்போதைய

புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களையும் தற்போதைய மேற்குத் தமிழ்நாட்டின் கொங்குப் பகுதியையும் இணைத்துச் சோழப் பேரரசை விரிவுப்படுத்தினார்கள். பதினொன்றாம் நூற்றாண்டு வாக்கில் படையெடுப்புகள் மூலம் தொண்டை நாடு, பாண்டி நாடு, தெற்குக் கர்நாடகத்தைச் சேர்ந்த கங்கைவடி, மலைமண்டலம் என்ற கேரளம் ஆகிய பகுதிகள் வரை விரிவுப்படுத்தினார்கள். கடல் கடந்த விரிவாக்கத்தின்போது, சோழர் இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளைக் கட்டுப்படுத்தியும், அப்பகுதிகளை 'மும்முடிச்சோழ மண்டலம்'' என அழைத்தார்கள்.

**பேரரசு உருவாக்கம்:**

சோழ அரசர்களில் மிகவும் போற்றப்படுபவர் முதலாம் இராஜராஜன். அவரது கடல் கடந்த படையெடுப்புகள் மேற்குக்கடற்கரை, இலங்கை ஆகியவற்றில் வெற்றியைப் பெற்றுத்தந்தன. இவர் இந்தியப் பெருங்கடலில் மாலத் தீவுகளைக் கைப்பற்றியதும் இதில் சேரும். இலங்கையை வென்றதன் மூலம் அதன் வடக்கு கிழக்குப் பகுதிகள் சோழ அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளை கைப்பற்றியதும் இதில் சேரும். இலங்கையை வென்றதன் மூலம் அதன் வடக்கு கிழக்குப் பகுதிகள் சோழ அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளை நிர்வகிப்பதற்கு ஒரு தமிழ் தளபதியை இராஜராஜன் நியமித்ததுடன், அங்கு ஒரு கோயில் கட்டவும் ஆணை பிறப்பித்தார். அக்கோயில் 'சிவ-தேவாலே'' (சிவாலயம்) எனப்படுகிறது. இவரால் 'மகாதிட்டா' என்ற இடத்தில் கட்டப்பட்ட கோயில் 'இராஜராஜேஸ்வரம்' என அழைக்கப்படுகிறது.

இராஜராஜன் தன் மகன் முதலாம் இராஜேந்திரனை வாரிசாக அறிவித்தார். இருவரும் இரு ஆண்டு காலம் கூட்டாக ஆட்சி செய்தார்கள். முதலாம் இராஜேந்திரன் தன் தந்தையின் படையெடுப்புகளில் பங்கேற்று, மேலைச்சாளுக்கிரைத் தாக்கி, சோழ அரசின் எல்லையைத் துங்கபத்திரை ஆறு வரை விரிவுப்படுத்தினார். இராஜராஜன் மதுரை மீது தாக்குதல் தொடுத்தபோது பாண்டியர் தங்கள் மணிமுடி மற்றும் அரச நகைளுடன் தப்பி, இலங்கையில் அடைக்கலம் புகுந்தார்கள். எனவே முதலாம் இராஜேந்திரன் இலங்கையை வென்று, பாண்டியரின் மணிமுடியையும் பிற அரச உடைமையையும் கைப்பற்றினார்.

1023 இல் முதலாம் இராஜேந்திரன் அரசப் பொறுப்பேற்றார். அவர் வட இந்தியாவின் மீது மிகத் தீவிரமான ஒரு படையெடுப்பை நிகழ்த்தினார். இதற்காகப் படைகளைக் கோதாவரி ஆறு வரை அவரே வழிநடத்திச்சென்றார். கோதாவரியைக் கடந்த பிறகு படைக்குத் தலைமையைத் தனது தளபதியிடம் ஒப்படைத்தார். அத்தளபதியின் தலைமையில் படையெடுப்பு தொடர்ந்தது. முதலாம் இராஜேந்திரனுக்கு வட இந்தியாவில் கிடைத்த வெற்றிகளின் நினைவாகக் கங்கை கொண்ட சோழபுரம் கட்டப்பட்டது.

தமிழர்களின் கடல்வழிச் சாதனைகள் சோழர்காலத்தில் உச்சத்தை எட்டின. சோழர் சோழ மண்டலக்கடற்கரையோடு,மலபார் கடற்கரையையும் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். வங்காள விரிகுடாப் பகுதியில் சோழரின் செல்வாக்குச் சில பத்தாண்டு காலத்திற்கு நீடித்தது. இராஜேந்தினின் கடற்படை ஸ்ரீவிஜயா (தெற்கு சுமத்ரா) மீது தாக்குதல் தொடுத்தது. தென்கிழக்கு ஆசியாவில் 700க்கும் 1300 க்கும் இடையே செழித்து வளர்ந்த நாடுகளுள் ஸ்ரீவிஜயாவும் ஒன்றாகும். இது வலிமையான கடற்படைகொண்டதாகவும் வணிகத்தில் சிறந்ததாகவும் இருந்தது. இதேபோன்று குறுநில மன்னரின் ஆட்சியின் கீழ் இருந்த கெடாவும் (கடாரம்) ராஜேந்திரனால் தோற்கடிக்கப்பட்டன. எனவே, ராஜேந்திரனுக்கு 'கடாரம் கொண்டான்'' என்ற பட்டம் சூட்டப்பட்டது.

மேலைச் சாளுக்கிய அரசின் மீது 1003இல் முதலாம் இராஜராஜன் தொடுத்த போரும் 1009 இல் முதலாம் இராஜேந்திரன் தொடுத்த போரும் அவர்களுக்கு வெற்றியைத் தந்தன. சாளுக்கியரின் தலைநகரான கல்யாணியைத் தகர்ப்பதற்கு இராஜேந்திரன்தன் மகனை அனுப்பினார். அங்கிருந்து கொண்டுவரப்பட்ட துவாரபாலகர் (வாயிற்காப்போன்) சிலையைக் கும்பகோணத்திலுள்ள தாராசுரம் கோயிலில் இன்றும் காணலாம். ராஜேந்திரன் முடிகொண்ட சோழன்,கங்கைகொண்டான், கடாரம் கொண்டான், பண்டித சோழன் போன்ற பட்டங்கள் சூடிக்கொண்டார்.

**சோழர் நிர்வாகம்:**

**அரசர்:**

சோழ அரசின் தன்மை குறித்து வரலாற்றாய்வாளர்களிடையே பலவிதக் கருத்துகள் உள்ளன. சோழ அரசு மரபுவழிப்பட்ட முடியாட்சியை அடிப்படையாகக் கொண்டிருந்தது என்பது தெளிவாகிறது. அரசர் பற்பல பெருமைகளுக்கு உரியவராக அக்காலத்தைச் சேர்ந்த இலக்கியங்களிலும் கல்வெட்டுக் குறிப்புகளிலும் புகழப்படுகிறார். கடவுளுக்கு இணையாகப் பெருமான் அல்லது பெருமகன், உலகுடைய நாயனார் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். பிற்காலத்தில் சக்கரவர்த்தி (பேரரசர்), திருபுவன சக்கரவர்த்தி (மூன்று உலகங்களுக்கானப் பேரரசர்) போன்ற பட்டங்களை சோழ அரசர்கள் சூடிக்கொண்டனர். அரசராகப் பட்டம் சூட்டும் விழாவின் போது அவரது பெயருக்குப் பின் ‘‘தேவன்’’ என்ற சொல்லைப் பின்னொட்டாகச் சேர்க்கும் நடைமுறை இருந்தது. அரசர்கள் தங்களைக் கடவுளின் நண்பன் (தம்பிரான்தோழன்) என்று உரிமை கோரித் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்தினர்.

சோழ அரசர்கள் தங்கள் ஆன்மீக வழிகாட்டி அல்லது இராஜ குருக்களாகப் பிராமணர்களை நியமித்தார்கள் முதலாம் இராஜராஜனும் முதலாம் இராஜேந்திரனும் தங்களுடைய இராஜ குருக்களாக முறையே ஈசான சிவன், சர்வ சிவன் ஆகியோரைக் கல்வெட்டுக் குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளனர். அரசர்கள் தங்கள் சமூக மதிப்பையும் அதிகாரத்தையும் உயர்த்திக்கொள்வதற்கான ஒரு வழிமுறையாகவே பிராமணர்களை ஆதரித்தனர். அதன் பொருட்டு பிராமணர்களுக்குப் பிரம்மதேயம், சதுர்வேதி மங்கலம் என்ற பெயரில் பெரும் நிலப்பரப்புகளைக் இறையிலியாக அளித்தனர்.

**மண்டலங்கள்:**

முன்னரே குறிப்பிடப்பட்டது போல் சோழ அரசின் எல்லை விஜயாலயன் காலத்திலிருந்தே சீராக விரிவடைந்து வந்தது. திறை செலுத்துபவர்கள் என்று வரலாற்று ஆசிரியர்களால் விளக்கமளிக்கப்படும் சிற்றரசர்கள் அல்லது குறுநில மன்னர்களுடனான போர்களுக்குப் பின்னர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பகுதிகள் சோழ அரசுடன் இணைத்துக்கொள்ளப்பட்டன. முதலாம் இராஜராஜன் இப்பகுதிகளையெல்லாம் மண்டலங்களாக ஒன்றிணைத்து, ஒவ்வொரு மண்டலத்திலும் ஓர் ஆளுநரை நிமித்தார். பாண்டிய நாட்டில் சோழ பாண்டியர், இலங்கையில் சோழ இலங்கேஸ்வரர் (இது, பின்னர் மும்முடி சோழ மண்டலம் என்று அழைக்கப்பட்டது), தெற்கு கர்நாடகத்தின் கங்கை வடி பகுதியில் சோழ கங்கர் என ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். மேலும், இருக்குவேளிர், இளங்கோ வேளிர், மழவர்கள், பானர்கள் போன்ற சிற்றரசர்கள் ஆட்சி செய்த முக்கியத்துவம் குறைந்த பகுதிகளும் பின்னர் சோழ அரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டன. இந்தச் சிற்றரசர்களும் சோழ ஆட்சி நிர்வாகத்தின் பல்வேறு பொறுப்புகளில் அமர்த்தப்பட்டனர்.

**படை:**

சோழப் பேரரசு நிரந்தரப் படையைக் கொண்டிருந்தது. இப்படை மரபுவழிப்பட்டை இருந்த மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தது. காலாட்படை, குதிரைப்படை (குதிரைச்சேவகர்), யானைப்படை (ஆனையாட்கள்), வில் வீரர்கள் (வில்லாளிகள்), வாள் வீரர்கள் (வாளிலர்),ஈட்டி வீரர்கள் (கொண்டுவார்) ஆகியோரும் படையில் இருந்தனர். படைப் பணிகளில் இருபடிநிலைகள் குறிப்பிடப்படுகின்றன. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு சீனப் புவியியலாளர்,‘‘சோழரிடம் 60 ஆயிரம் போர் யானைகள் இருந்தன. அவற்றின் முதுகில் வீடு போன்ற அமைப்பு இருக்கும். அதில் வீரர்கள் நிறைந்திருப்பார்கள். போரில் இவர்களின் நீண்ட தொலைவில் உள்ள இலக்குகளின் மீது அம்பு எய்வார்கள். அருகில் உள்ள பகைவர்களுடன் யானையின் மீதிருந்தபடியே ஈட்டியால் சண்டையிடுவார்’ எனக் குறிப்பிடுகிறார். சோழர் கடல்கடந்து சென்று நடத்திய போர்கள் மிகவும் புகழ்பெற்றவை. சோழர்களிடம் ‘எண்ணற்ற கப்பல்கள் இருந்தன என வரலாற்றாய்வாளர்கள் அவர்களின் கடற்படையை வியந்து குறிப்பிடுமளவுக்கு அதன் பலம் இருந்தது. படை வீரர்களுக்குப் படைப்பற்று’ என்ற உரிமை வழங்கப்பட்டிருந்தது. தலைநகரில் படை முகாம் இட்டிருந்த இடம் ‘படைவீடு’’ எனப்பட்டது. புதிதாகச் சேர்க்கப்படும் பகுதிகளில் அமைக்கப்பட்ட புறக்காவல் படைகள் ‘நிலைப்படைகள்’ எனப்பட்டன. ஒரு படைப்பிரிவின் தலைவர் ‘நாயகம்’ என்றும் பின்னாட்களில் ‘படைமுதலி’ என்றும் அழைக்கப்பட்டார். படைத்தளபதி ‘சேனாபதி’,‘தண்டநாயகம்’ என்றறியப்பட்டார்.

**உள்ளாட்சி அமைப்பு:**

சோழர் காலத்தில் பல்வேறு உள்ளாட்சிக் குழுக்கள் சிறப்பாக இயங்கியுள்ளன. அவை ஊரார், சபையார், நகரத்தார், நாட்டார் ஆகியவை அத்தகு குழுக்கள் ஆகும். இவை ஒப்பீட்டளவில் தன்னாட்சி உரிமை கொண்டவையாக இயங்கின. இந்த அடித்தளத்தின் மீதுதான் சோழப் பேரரசு கட்டமைக்கப்பட்டது.

**ஊரார்:**

வேளாண்மை விரிவாக்கத்தைத் தொடர்ந்து கிராமப்புறங்களில் வேளாண் குடியிருப்புகள் அதிகளவில் தோன்றின. அவை 'ஊர்' என அழைக்கப்பட்டன. அந்த ஊர்களில் நில உடமையாளர்களே ஊரின் பிரதிநிதிகளாகச் செயல்பட்டார்கள். அவர்கள் ஊரார் என அழைக்கப்பட்டார்கள். கோயில்களின் நிர்வாகத்தையும் குளங்களின் பராமரிப்பையும் இவ்வூரார் மேற்கொண்டனர். குளங்களிலிருந்த நீரை ஊரின் தேவைகளுக்குப் பயன்படுத்துவதையும் ஊரார் கவனித்துக்கொண்டார்கள். இவை தவிர, வரி உள்ளிட்ட வருவாய்களைச் வசூப்பது, சட்ட ஒழுங்கைப் பாதுகாப்பது, அரசரின் கட்டளையை நிறைவேற்றுவது ஆகிய நிர்வாகப் பொறுப்புகளையும் இவர்கள் மேற்கொண்டனர்.

**சபையார்:**

ஊர் என்பது நில உடைமை சார்ந்தோரின் குடியிருப்பு, பிரம்மதேயம் என்பது பிராமணர்களின் குடியிருப்பாகும். பிரம்மதேயத்தின் மையமாக விளங்கிய கோயில்கள், அவற்றின் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பது, பிரம்மதேய குடியிருப்புகளைப் பராமரிப்பது ஆகிய பணிகளை 'சபை'கள் மேற்கொண்டன. கோயில் நிலங்களுடன் இணைக்கப்பட்டிருந்த பாசனக்குளங்களின் பராமரிப்புக்குச் சபை பொறுப்பாக இருந்தது. ஊரைப் போலவே சபையும் அரசின் பிரதிநிதியாகச் செயல்பட்டது. நிர்வாகம், நிதி, நீதி ஆகிய துறைகள் சார்ந்த பணிகளையும் சபை மேற்கொண்டது.

**நகரத்தார்:**

நகரம் வணிகர்களின் குடியிருப்பாக விளங்கியது. தங்கம் உள்ளிட்ட உலோகப் பொருள்கள், கைவினைப் பொருள்கள், நெசவு, பானை வனைதல் ஆகியவற்றில் திறமை பெற்ற கைவினைஞர்களும் நகரத்தில் வசித்தனர். நகரத்தின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் நகரத்தார் எனப்பட்டனர். இவர்களின் நிதியுதவி கோயில்களுக்குத் தேவைப்பட்டது. கோயில்களின் நிர்வாகத்துடன் நகரத்தார் சீரான தொடர்பில் இருந்தனர். முதலாம் இராஜராஜனின் ஆட்சியில் மாமல்லபுரம் 'மாநகரம்' என்ற குழுவால் நிர்வகிக்கப்பட்டது. உள்ளூர் பொருள்கள் நகரங்களில் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டன. பட்டு, பீங்கான், கற்பூரம், கிராம்பு, சந்தனக்கட்டை,ஏலக்காய் போன்றவை இவ்வாறு பரிமாற்றம் செய்யப்பட்டதாகச் சீன வரலாற்றுக்குறிப்புகள் கூறுகின்றன. உள்நாட்டிலும் கடல் கடந்தும் வணிகத்தை ஊக்குவிப்பதற்காகக் குலோத்துங்கன் சுங்கவரிகளை நீக்கினார். எனவே அவர் 'சுங்கம் தவிர்த்த சோழன்' எனப்படுகிறார்.

**நாட்டார்:**

பிரம்மதேயங்கள் நீங்கலாகப் பல ஊர்களின் தொகுப்பு நாடு எனப்பட்டது. கால்வாய்கள், குளங்கள் போன்ற பாசன ஆதாரங்களைச் சுற்றி இவை உருவாக்கப்பட்டிருந்தன. வேளாண் வகை கிராமங்களில் நிலம் வைத்திருந்தவர்களின் மன்றம் நாட்டார் எனப்பட்டது. சோழ அரசக்கட்டமைப்பின் அடிப்படை உறுப்புகளாக நாட்டார் செயல்பட்டனர். அரசுக்கான நிர்வாகம், நிதி, நீதித்துறை சார்ந்த பணிகளை இவர்கள் மேற்கொண்டனர். நாட்டார்களுக்கு மரபுவழி நில உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன. தாங்கள் சார்ந்த நாட்டிலிருந்து வரி சேகரித்துக் கொடுக்கும் பொறுப்பும் அவர்களுக்கு இருந்தது. நாட்டார்களுக்கு மரியாதை செலுத்தும் நோக்கில் ஆசுடையான் (நில உரிமையாளர்). அரையன் (வழிநடத்துவோர்), கிழவன் (தலைவர்) போன்ற பட்டங்கள் அளிக்கப்பட்டன. நாட்டுக்கணக்கு, நாட்டு வையவன் எனும் பணியாளர்கள் நாட்டாரின் நிர்வாகப் பணிகளை ஆவணப்படுத்தினர்.

**உள்ளாட்சித் தேர்தல்களும் உத்தரமேரூர் கல்வெட்டுகளும்:**

பிரம்மதேயங்களில் (பிராமணர்களுக்கு வரிவிலக்குடன் அளிக்கப்பட்ட நிலம்) ஒன்றாக இருந்த உத்தரமேரூரில் (உத்தரமல்லூர் சதுர்வேதி மங்கலம்) கிடைத்த இரு கல்வெட்டுக் குறிப்புகள் (பொ.ஆ. 919 இலும் 921 இலும் அறிவிக்கப்பட்டவை) மூலம் சோழர் கால உள்ளாட்சித் தேர்தல் முறையை அறிய முடிகிறது. இவை ஒரு பிராமணக் குடியிருப்புக்கான பணிகளை மேற்கொள்வதற்கு வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்த உறுப்பினரைத் தேர்வு செய்யும் முறையைத் தெரிவிக்கின்றன. அதன்படி, கிராமம் 30 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்வானவர்கள் அனைவரும் சேர்ந்து வெவ்வேறு குழுக்களை உருவாக்குவார்கள். அவை பொதுப்பணிக்குழு, குளங்களுக்கான குழு, தோட்டங்களுக்கான குழு, பஞ்ச நிவாரணக் குழு, தங்கம் தொடர்பான குழு ஆகியவாகும்.

உறுப்பினராகப் போட்டியிடுவோரின் தகுதிகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆண்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும். போட்டியாளர் 35 வயதுக்கு மேலும் 75 வயதுக்குக் கீழும் உள்ளவராக இருக்க வேண்டும். சொத்தும் சொந்த வீடும் உடையவராக இருக்க வேண்டும். வேதங்களிலும் பாஷ்யங்களிலும் தேர்ந்தவராக இருக்க வேண்டும்.

ஒரு பிரிவில் போட்டியிடக்கூடிய அனைவருடைய பெயர்களும் தனித்தனிப் பனையோலைகளில் எழுதப்பட்டு, அவை ஒரு பானையில் இடப்படும் (குடவோலை), சபையில் வயதில் மூத்தவர் ஒரு சிறுவனை அழைத்து, பானையிலிருந்து ஓர் ஓலையை எடுக்கும்படி கூறுவார். அந்தச் சிறுவன் எடுக்கும் ஓலையில் உள்ள பெயருக்குரியவரே உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டவர் ஆவார்.

**பொருளாதாரம்:**

**வேளாண்மை:**

சோழர் காலகட்டத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய வளர்ச்சிகளில் ஒன்று, வேளாண்மை விரிவாக்கம் ஆகும். வளமான ஆற்றுச் சமவெளி பகுதிகளில் மக்கள் குடியேறினர். ஆறுகள் இல்லாத பகுதிகளிலும் குளம், கிணறு, கால்வாய் ஆகிய நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் உணவு தானிய உற்பத்தி உபரிநிலையை எட்டியது. இதனால் சமூக ஏற்றத்தாழ்வுகள் உருவாகின. வேளாண்மையில் கிடைத்த கூடுதல் வருவாய் நில வரியாகச் சோழ அரசுக்கு வலுவூட்டியது. நில வருவாய் நிர்வாகத்துக்கெனத் தனியாக ஒரு துறை 'புறவுவரித்திணைக்களம்' என்ற பெயரில் இயங்கியது. அதன் தலைவர் 'புறவு வரித்திணைக்கள நாயகம்' எனப்பட்டார்.

**நில வருவாயும் நில அளவையும்:**

வரிகளை மதிப்பிடுவதற்காகச் சோழர் விரிவான முறையில் நில அளவை செய்வதிலும் தீர்வை விதிப்பதிலும் ஈடுபட்டார்கள். முதலாம் இராஜராஜன் (1001), முதலாம் குலேத்துங்கன் (1086), மூன்றாம் குலோத்துங்கன் (1226) ஆகிய சோழ அரசர்கள் நிலங்களை வகைப்படுத்தி, அளவீடு செய்து அதற்கேற்றவாறு வரிகளை விதித்தனர். நில அளவீடு பணியில் ஈடுபட்டவர்கள் 'நாடு வகை செய்கிற' என்று குறிப்பிடப்பட்டார்கள். இவர் நில உடமைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களே ஆவர். நில அளவீடு செய்ய குழி, மா, வெளி, பட்டி, பாடகம் முதலிய அலகுகள் வழக்கில் இருந்தன. பெரும்பாலும் வரிகள் பொருள்களாகவே வசூலிக்கப்பட்டன. இறை, காணிகடன், இறை கட்டின காணிகடன், கடமை உள்ளிட்ட பல வரிகள் விதிக்கப்பட்டன. அவற்றில் முக்கியமான ஒரு வரி குடிமை வரி ஆகும். நிலத்தைக் குத்தகைக்குப் பெற்று வேளாண்மை செய்தவர்கள் அரசுக்கும் நில உடமையாளர்களுக்கும் செலுத்திய வரி குடிமை வரி எனப்படும். இந்நில உடமையாளர்கள் உடையான், அரையன், கிழவர் போன்ற மரியாதைக்குரிய பட்டங்களைப் பெற்றிருந்தனர். நிலத்தின் வளம், நில உடைமையாளரின் சமூக மதிப்பு ஆகியவற்றைப் பொறுத்து வரி நிர்ணயிக்கப்பட்டது. அரசரும் உள்ளூர்த்தலைவர்களும் 'ஒப்படி' என்ற வரியை வசூலித்தனர். கோயில்களுக்கும் பிராமணர்களுக்கும் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. விளைபொருளாகச் செலுத்தப்பட்ட வரி 'இறை கட்டின நெல்லு' எனப்பட்டது. இவ்வரிகள் அனைத்தும் பெரும்பாலும் காவிரிசமவெளிப் பகுதியில் தான் நடைமுறையில் இருந்தன. ஏனைய தொலைதூரப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஊர் மட்டத்தில் வரிகளை வசூலித்து, அரசுக்குச் செலுத்தும் பொறுப்பு ஊராரின் பொறுப்பு ஆகும். நாடு மட்டத்தில் நாட்டார் இப்பொறுப்பை நிறைவேற்றினர்.

வரியாக வசூலிக்கப்பட்ட நெல் ‘களம்’ என்ற அலகின் அடிப்படையில் வசூலிக்கப்பட்டது. ஒரு களம் என்பது 28 கிலோ ஆகும். முதலாம் ராஜராஜன் வரி வசூலை முறைப்படுத்தினார். ஒரு வேலி (6.5 ஏக்கர்) நிலத்திற்கு 100 களம் வரியாக வசூலிக்கப்பட்டது. வேலியின் அளவு என்பது மண்வளம், போகங்கள் ஆகியவற்றைப் பொருத்து மாறுபடுகிறது.

**பாசனம்:**

சோழர் நடைமுறையில் இருந்த நீர் பாசன முறையை மேம்படுத்தும் வழிமுறைகளை மேற்கொண்டார்கள். சோழ நாடு வேளாண்மை மூலம் அதிக வருவாய் ஈட்டும் அரசாக இருந்ததால், நீராதாரங்களை நிர்வகிப்பதில் அதிகக் கவனத்தைச் செலுத்தியது. வடி, வாய்க்கால் எனற் குறுக்கு மறுக்கான கால்வாய்கள் மழைநீரைச் சேமித்து வைப்பதற்குக் காவிரி வடிநிலப்பகுதியில் பயன்பட்ட மரபுவழி முறை. ‘வடி’ என்பது நீர் வடக்குத் தெற்காக ஓடுவதாகும். ‘வாய்க்கால்’ என்றால் கிழக்கு மேற்காக ஓடுவதாகும். வடி என்பது வடிகாலாக நீரை வெளியேற்றுவதையும், வாய்க்கால் என்பது நீரைக் கொண்டுவருவதையும் குறிக்கும். ஒரு விளைநிலைத்துக்கு வாய்க்கால் வழியே வரும் நீர் வடிக்குத் திருப்பப்பட்டு, மற்றொரு வாய்க்காலுக்குச் செல்லும். மழைநீர் கால்வாய் என்பது இயற்கையாக உருவாவதாகும். பல பாசனக்கால்வாய்கள் இத்தகைய இயற்கையான கால்வாய்களை மாற்றியமைத்துக் கொண்டு உருவாக்கப்பட்டவைதான். இவ்வாறு சேமிக்கப்படும் மழை நீர் வடி வழியாகவும்

கங்கை கொண்ட சோழபுரத்தில் இராஜேந்திர சோழன் மேற்கொண்ட பாசனப்பணி குறிப்பித்தக்கது. அங்குள்ள ஏரியில் வெள்ளம் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் 16 மைல் நீளமுள்ள ஓர் உறுதியான கட்டுமானத்தை அவர் எழுப்பியுள்ளார். அதை இராஜேந்திர சோழன் “ஜலமய ஜெயஸ்தம்பம்“ என்று குறிப்பிடுகிறார். அதற்கு, “நீரில் கிடைத்த வெற்றியின் நினைவாக எழுப்பிய தூண்“ என்று பொருள். 100 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த இடத்துக்கு வந்த அரேபிய வரலாற்றாசிரியரான அல்பெருனி இக்கட்டுமான அமைப்பைக் கண்டு வியந்தார். “எங்கள் மக்கள் அதனைக் கண்டு வியப்படைவார்கள். ஆனால், அதனை அவர்களால் விவரிக்க இயலாது. அது போன்ற ஒன்றை அவர்களால் கட்டவும் முடியாது” என்று அல்பெருனி பதிவு செய்துள்ளார். சான்று: ஜவஹர்லால் நேரு (Glimpses of world History)

வாய்க்கால் வழியாகவும் சுற்றுமுறையில் பயன்படுத்தப்பட்டது. இந்த அமைப்புமுறை அனைத்து நிலங்களுக்கும் நீர் சீராகச் செல்வதற்கு உதவியது. பல கால்வாய்களுக்கு அரசர்கள், அரசிகள், கடவுளரின் பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன. எடுத்துக்காட்டாக, உத்தமச் சோழ வாய்க்கால், பஞ்சவன் மாதேவி வாய்க்கால், கணபதி வாய்க்கால் போன்றவற்றைக் கூறலாம். ஊர் வாய்க்கால் என்பது நில உரிமையாளர்கள் பலரால் கூட்டாகப் பயன்படுத்தப்பட்டது. நாடு வாய்க்கால் என்பதே நாட்டு வாய்க்கால் எனப்பட்டது. சுழற்சி முறையில் நீரை விடுவது வழக்கில் இருந்தது. சோழர் கல்வெட்டுக் குறிப்புகள் சில பெரிய பாசன ஏரிகளைக் குறிப்பிடுகின்றன. சோழ வாரிதி, கலியநேரி, பல்லவர்களால் உருவாக்கப்பட்ட வைரமேகத் தடாகம், பாகூர் பெரிய ஏரி, இராஜேந்திர சோழ பேரேரி போன்றவை சில எடுத்துக்காட்டுகள், ஏரிகளை அனைத்து பருவங்களிலும் பராமரிக்கும் வகையிலும், மராமத்து பணிகளில் ஈடுபடும் வகையிலும் மக்கள் ஊதியமில்லா உழைப்பைத் தரும் வழக்கம் இருந்தது. வெட்டி, அமஞ்சி ஆகிய வடிவங்களில் ஊதியமில்லா உழைப்பு செயல்படுத்தப்பட்டது.

**நீர் மேலாண்மை:**

பல வகையான நீர் உரிமைகள் நிலவின. ஏரிகளில் இருந்தும், கிணறுகளில் இருந்தும் பெறப்படும் நீரின் பங்கினை இந்த உரிமைகள் முறைப்படுத்தின. கால்வாய்களை ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், பாசன அமைப்பைப் பழுதுபார்த்தல் ஆகிய பொறுப்புகளும் இந்த உரிமைகளில் அடக்கம். நீரைப் பங்கீடு செய்வது “நிற்கின்றவாறு“ (பங்கீடு செய்யப்பட்டபடியான நீரின் அளவு) என்று குறிக்கப்பட்டது. குமிழ் (மதகு), தலைவாய் (தலைமடை) ஆகியன வழியாக நீர் திறந்துவிடப்பட்டது. நீர் உரிமைகளை மீறுவதும் பிரம்மதேயங்களுக்குக் கொடையளிக்கப்பட்ட நீராதாரங்களை ஆக்கிரமிப்பதும் அரசுக்கு எதிரான செயல்கள் என்று அரசு ஆணைகள் எச்சரித்தன. ஊருக்குப் பொதுவான குளம் “எங்கள் குளம்“, என்று அழைக்கப்பட்டது. நன்கொடையாகவும் மானியமாகவும் நடைபெற்ற நிலப்பரிமாற்றங்களில் நீர் மீதான உரிமைகளும் இணைக்கப்பட்டிருந்தன.

சோழர்காலத்தில், கிராம சபைகள், பாசனக்குளங்களைப் பழுதுபார்க்க ஏரி ஆயம் என்ற வரி வசூலிக்கப்பட்டது. சில சமயங்களில் அரையன் போன்ற உள்ளூர் தலைவர்கள் புயலில் சேதமடைந்த குளங்களைப் பழுதுபார்த்துப் புதுப்பித்தனர். கிராம மக்களும் கோயில்களும் குளத்து நீரைப் பகிர்ந்துகொண்டதை நிகழ்வுகளும் நடந்துள்ளன. குளங்களிலும் ஆறுகளிலும் இருந்து மதகு அல்லது தலைமடை வழியாக நீரைத் திறந்துவிடுவதற்குத் தலைவாயா, தலைவாய்ச் சான்றார், ஏரி அரையர்கள் போன்ற சிறப்புக் குழுக்கள் இருந்துள்ளன. குளத்துக்குப் பொறுப்பான மக்கள் குழு குளத்தார் எனப்பட்டது. பிற்காலத்தில், கோயில்கள் பாசன ஆதாரங்களை நிர்வகிக்கும் பொறுப்புகள் கோயில்களுக்கு வழங்கப்பட்டன.

**சமூகமும் அதன் கட்டமைப்பும்:**

சோழர் காலச் சமூகம் பெருமளவில் வேளாண்மையைச் சார்ந்திருந்ததால், நிலம் வைத்திருப்பது சமூக மதிப்பையும் அதிகாரப் படிநிலையையும் நிர்ணயிக்கும் ஒரு முக்கியக் காரணியாக விளங்கியது. பிரம்மதேய குடியிருப்புகளில் உயர்தகுதி நிலையில் இருந்த நில உடமையாளர்கள் 'பிரம்மதேய – கிழவர்' என்று அழைக்கப்பட்டனர். இவர்களுக்கு நில வரியில் இருந்துவிலங்கு அளிக்கப்பட்டது இதைத் தொடர்ந்து அங்கிருந்த உள்ளூர் விவசாயிகள் 'குடிநீக்கம்' (குடிநீக்கி) செய்து இடம்பெயரச் செய்யப்பட்னர். நிலக்கொடை அளிக்கப்பட்ட கோயில்கள் 'தேவதானம்'' என்று அழைக்கப்பட்டன. இவற்றுக்கும் பிரம்மதேயம் போன்றே வரிவிலக்கு வழங்கப்பட்டன. இக்காலகட்டத்தில் கோயில்களே பல்வேறு செயல்பாடுகளின் இணைப்பு மையமாக மாறியிருந்தன.

சமூகப்படிநிலையின் அடுத்த இடத்தில் வேளாண்வகை கிராமங்களைச் சேர்ந்த சில உடமையாளர்கள் இடம் பெற்றனர். இவர்களின் நிலங்களிலும் பிராமணர்களின் நிலங்களிலும் 'உழுகுடி' என்ற குத்தகைதாரர்கள் வேளாண் வேலைகளை மேற்கொண்டனர், இவர்களுக்குச் சொந்தமாக நிலங்கள் இல்லை. நில உடமையாளர்கள் விளைச்சலில் மேல்வாரத்தையும் (அதிக பங்கு) உழுகுடிகள் கீழ்வாரத்தையும் (குறைவான பங்கு) எடுத்துக்கொண்டனர். சமூகப்படி நிலையில் அடிமட்டத்தில் உழைப்பாளிகளும் (பணிசெய் மக்கள்) அடிமைகளும் இருந்தார்கள்.
இந்த வேளாண் சமூகத்துக்கு வெளியே ஆயுதம் தரித்த வீரர்களும் கைவினைஞர்களும் வணிகர்களும் இருந்தனர். மக்கள்தொகையில் குறிப்பிடத்தக்க அளவில் இருந்திருக்கக்கூடிய கால்நடை வளர்ப்போர் குறித்துச் சில ஆவணங்கள் கூறுகின்றன. அக்காலத்தில் பழங்குடிகளும், காட்டில் வசித்த மக்களும் இருந்துள்ளனர். ஆனால், அவர்கள் குறித்து நமது அறிதல் குறைவானதாகும்.

**மதம்:**

சிவன், விஷ்ணு முதலான புராணக் கடவுளர்கள் சோழர் காலத்தில் பிரபலம் அடைந்தனர். இக்கடவுள்களுக்காக அதிக எண்ணிக்கையில் புதிய கோயில்கள் கட்டப்பட்டன. இக்கோயில்களுக்குப் பெருமளவில் நிலக் கொடைகள் வழங்கப்பட்டன. பெருமளவிலான மக்கள் இக்கோயில்களின் செல்வாக்கின் கீழ் கொண்டுவரப்பட்டவர்.

சோழ அரசர்கள் தீவிர சைவர்கள் ஆவர். முதலாம் பராந்தகனும் உத்தமச் சோழனும் (907 – 970) சைவ சமயத்தை வளர்க்க நிதியுதவியும் நிலக்கொடையும் அளித்தார்கள். தஞ்சை பிரகதீசுவரர் (பெருவுடையார்) கோயிலில் உள்ள ஒரு சுவரோவியத்தில் முதலாம் இராஜராஜனும் அவருடைய மனைவியரும் சிவனை வணங்குவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. சிவபாத சேகரன் என்பது அவருக்குரிய பட்டங்களுள் ஒன்று. சிவனுடைய பாதங்களை இறுகப் பற்றியவன் என்பது இதற்குப் பொருள்.

முதன்மைக் கடவுளான சிவன் இரு வடிவங்களில் வணங்கப்பட்டார். இக்கால கட்டத்தில், மிகவும் மேம்பட்ட தத்துவமாகச் சைவ சித்தாந்தம் உருவானது. இத்தத்துவத்தின் அடிப்படை நூலான சிவஞானபோதம் மெய்கண்டரால் இயற்றப்பட்டது. பிற்காலத்தில் பல சைவ மடங்கள் தோன்றி இத்தத்துவத்தை வளர்த்தன.

லிங்கோத்பவர் என்ற குறியீட்டு வடிவத்திலும் நடராஜர் என்ற மனித வடிவத்திலும் சிவ வழிபாடு நடைபெற்றது. காவிரி சமவெளியில் அமைந்த இக்கோயில் மையங்களைக் கொண்டு ஒருநில வரைபடம் தயாரித்தால், அது, இடம், காலம் தொடர்பான ஓர் வேளாண் - அரசியல் புவியியல் வரைபடத்தை நமக்கு வழங்கும்.

சிற்பங்கள், ஓவியங்களில் 'திரிபுராந்தகன்' (அசுரர்களின் மூன்று மாய நகரங்களை அழித்தவராகப் புராணங்களில் கூறப்படுபவர்) என்னும் வடிவத்தில் சிவன் மீண்டும், மீண்டும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவது, அவருக்குப் போர் வீரருக்குரிய ஒரு கூறினை வழங்கியது. இதன் மூலம் அரசர் தமது அரசப் பதவிக்குச் சட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டார். நடராஜன் அல்லது ஆடல் வல்லான் (நடனங்களின் அரசர்) ஆகிய வடிவங்களிலும் சிவன் சித்தரிக்கப்பட்டார். இது, நாயன்மார்கள் எழுதிய பாடல்களோடு இணைந்து தமிழ் இசை, நடனம், நாடகம் ஆகியவற்றின் மையக் கருவானது. சிவனைப் போற்றிப் பாடிய இப்பாடல்கள் அவரின் திருவிளையாடல்களை சித்தரிக்கின்றது. இவை சமூகத்தின் பல பிரிவுகளைச் சார்ந்த மக்களை ஈர்ப்பதாக அமைந்தன.

நம்பியாண்டார் நம்பி சைவ சமய நூல்களை மீட்டெடுத்து, திருமுறை என்ற பெயரில் தொகுத்து, வரிசைப்படுத்தினார். கோயில்களில் தினமும் திருமுறைகளை ஓதுவதற்கு ஓதுவார், பதிகம் பாடுவோர் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டனர். பாடல்களைப் பாடுவோர் 'விண்ணப்பம் செய்வோர்'' என்று அழைக்கப்பட்டனர். இசைக்கருவிகளை இசைப்பவர்களும் நியமனம் செய்யப்பட்டனர். கடவுளுக்குத் தொண்டு செய்ய பெண்கள் அர்ப்பணிக்கப்பட்டனர், அவர்களைப் பயிற்றுவிக்க இசை ஆசிரியர்களும் நடன ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டனர்.

காலப்போக்கில் சைவம் மீதான சோழ அரசர்களின் பக்தி மிகையான ஆர்வமாக மாறியது. இரண்டாம் குலோத்துங்கனிடம் இத்தகைய தன்மையைக் காண முடியும். அரச சமயமான சைவத்துக்கும் வைணவத்துக்கும் இடையே நடந்துவந்த சமய மோதல்களில் வைணவம் ஒதுக்கப்பட்டது. இவை, வைணவத் திருத்தொண்டரான ஸ்ரீ ராமானுஜர் சோழ நாட்டை விட்டு வெளியேறி கர்நாடகத்தில் உள்ள மேல்கோட்டைக்குச் சென்ற நிகழ்வுக்கும் இட்டுச் சென்றது.

**கோயில்கள்:**

சோழர் தமது காலத்தில் அதிக எண்ணிக்கையிலான கோயில்களை எழுப்பி, ஆதரித்தனர். தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம் ஆகிய இடங்களில் அரசர்களால் எழுப்பப்பட்ட கோயில்கள் சோழர்கால கட்டுமானம், ஓவியம், சிற்பம், சிலைவடிவத்தில் ஆகிய கலைகளின் களஞ்சியமாக விளங்குகின்றன. கோயில்கள் சமூகம், பொருளாதாரம், பண்பாடு மற்றும் அரசியல் ஆகிய செயல்பாடுகளின் மையங்களாக மாறின. அரசர், அதிகாரிகள், நடன கலைஞர்கள், இசைக் கலைஞர்கள், பாடகர்கள், அவர்களின் ஆசிரியர்கள், இவர்களுக்குத் தலைமை தாங்கும் மதகுரு என கோயில்களின் அமைப்பு அப்படியே அரச சபையைப் எதிரொளித்தது. இவர்கள் கோயிலின் பிரிக்க முடியாத உறுப்புகளாகவே செயல்பட்டாகள். தொடக்க கட்ட சோழர்கால கோயில்கள் கட்டுமான நோக்கில் எளிமையாக இருந்தன. அரசர்கள் புதைக்கப்படும் இடங்களில் கோயில் (பள்ளிப்படை) எழுப்பும் வழக்கமும் இருந்தது,

**சமூக நிறுவனமாகக் கோயில்:**

சோழர் காலத்தில் கோயில்கள் சமூகத் திருவிழாக்களுக்கான ஒரு களமாக மாறி சமூக நிறுவனங்களாக இயங்கின. சமூகம், அரசியல், பொருளாதாரம், பண்பாடு நடவடிக்கைகளுக்கான மையங்களாகக் கோயில்கள் விளங்கின. கோயிரமர், கோயில் கணக்கு (கோயில் கணக்காளர்) தேவ – கன்னி (கடவுளின் பிரதிநிதி) ஸ்ரீ வைஷ்ணவர், கண்டேசர் (கோயில் மேலாளர்) மற்றும் பிறர் முதல்நிலை கோயில் அதிகாரிகள் ஆவர். கல்வி, நடனம், இசை, ஓவியம், நாடகம் ஆகியவற்றின் வளர்ச்சியை அவர்கள் ஊக்குவித்தனர். முதலாம் இராஜராஜனின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் இராஜராஜ நாடகம் என்ற நாடக நிகழ்ச்சி தஞ்சாவூர் கோயிலில் நிகழ்த்தப்பட்டிருக்கிற சித்திரைத் திருவிழா, கார்த்திகை, ஐப்பசி விழா ஆகிய விழாக்கள் கொண்டாடப்பட்டிருக்கின்றன. கோயில்களில் பாடப்பட்ட வழிபாட்டுப் பாடல்கள் வாய்மொழிக் கல்வியை வளர்த்ததாகக் கூறப்படுகிறது. குடக்கூத்து, சாக்கைக்கூத்து போன்ற மரபு நடனங்கள் சிற்ப ஓவிய வடிவங்களாகக் கீழ்ப்பழுவூர், திருவொற்றியூர் கோயில்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் பெரிய கோயிலில் நிருத்யம், கர்ணம் போன்ற நடன நிலைகள் சிற்ப வடிவில் காட்டப்பட்டுள்ளன. தமிழ் மரபு இசைக்கருவிகளும் இதேபோல் சித்தரிக்கப்பட்டுள்ளன.

மேய்ச்சலைத் தொழிலாகக் கொண்ட மக்களும் தங்கள் பக்தியை வெளிப்படுத்தும் விதமாகக் கோயிகளின் அணையா விளக்குகளைப் பராமரிப்பதற்குக் கால்நடைகளைக் கொடையாக வழங்கினர். அவர்களது கொடைகள் பதிவு செய்யப்பட்டதன் மூலம் அம்மக்களின் பெயர்களும் அரச கோயில்களின் கல்வெட்டுகளில் இடம்பெற்றன. இதன் மூலம் அவர்கள் அரச குடும்பத்தின் நெருக்கத்தினைப் பெற்றனர். எண்ணெய் ஆட்டுபவர்கள் சங்கர பாடியார் என அழைக்கப்பட்டனர். இவர்கள் கோயில்களுக்கு எண்ணெய் வழங்கினர். இதன் மூலம் கோயில்களின் அன்றாட நிகழ்வுகளின் அங்கமாயினர். பஞ்ச காலத்தில் இவர்களில் சிலர் தங்களைத் தாமே கோயில் அடிமைகளாக விற்றுக்கொண்டனர்.

கடன் வழங்குதல், அறக்கொடைகளையும், நன்கொடைகளையும் வழங்குதல், பெறுதல் ஆகிய செயல்பாடுகளில் ஈடுபட்டதால் கோயில்கள் வங்கிகள் போன்று இயங்கின. வேதம், இசை, கலைகள் ஆகியவற்றில் பயிற்சி அளித்ததால் கோயில் ஒரு கல்வி நிறுவனமாகவும் விளங்கியது. சிற்ப வேலைகளும் உலோக வேலைகளும் ஊக்குவிக்கப்பட்டன. கோயிலின் வரவு செலவுக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டன. தணிக்கையாளர் 'கோயில் கணக்கு' என அழைக்கப்பட்டார்.

**கங்கை கொண்ட சோழபுரம்:**

முதலாம் இராஜேந்திர சோழனின் வட இந்திய வெற்றியின் நினைவாகத் தஞ்சாவூர் பெரிய கோயில் போன்றே கங்கைகொண்ட சோழபுரத்தில் ஒரு கோயிலைக் கட்டினார். இராஜேந்திரன் சோழ கங்கம் என்ற புதிய பாசன ஏரியையும் தலைநகர் அருகே உருவாக்கினார். இது ஜல தம்பம் (நீர்த்தூண்) என அழைக்கப்படுகிறது. கங்கை கொண்ட சோழபுரம் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் சோழ அரசர்கள் முடிசூட்டும் இடமாகவும் ஆனது.

**பெருவுடையார்(பிரகதீசுவரர்) கோயில்:**
இராஜராஜேஸ்வரம், பிரகதீசுவரர் கோயில் என்று அழைக்கப்படும் தஞ்சாவூர் பெரிய கோயில் கட்டடக்கலை, ஓவியம், சிற்பம், சிலை வடித்தல் ஆகிய கலைகளுக்குத் தன்னிகரற்ற எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இராஜராஜனின் ஆட்சி அதிகாரத்துக்கு இக்கோயில் அழுத்தமான சட்ட அங்கீகாரமாக உள்ளது. இக்கோயிலின் கருவறை மீது அமைக்கப்பட்ட விமானம் 80 டன் எடை கொண்ட ஒரே கல்லால் ஆனது. கருவறையின் வெளிச்சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ள இலட்சுமி, விஷ்ணு, அர்த்தநாரீசுவரர், பிச்சாடனர் (பிச்சை ஏற்கும் கோலத்தில் உள்ள சிவன்) ஆகிய உருவங்கள் சிறப்பு அம்சங்கள் ஆகும். புராணங்களிலும் காவியங்களிலும் காணப்படும் காட்சிகள் சுவரோவியங்களாகவும் குறும் சிற்பங்களாகவும் இக்கோயில் சுவர்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சோழ ஆட்சியாளர்களின் சமயக் கருத்தியலை இவை வெளிப்படுத்துகின்றன. நடனப் பெண்கள், இசைக்கலைஞர்கள், இசை ஆசிரியர்கள் இவை நாடு என்ற பகுதிகளைச் சேர்ந்த பல குடியிருப்புகளிலிருந்து தேர்வு செய்யப்பட்டுக் கோயில்களோடு இணைக்கப்பட்டனர். கோயில்களில் பக்திப்பாடல்களைப் பாடுவதற்காகப் பாடகர்கள் நியமிக்கப்பட்டனர்.

கங்கை கொண்ட சோழபுரம் கோயில் கருவறையின் வெளிப்புறச் சுவர் மாடங்களில் இடம்பெற்றுள்ள அர்த்த நாரீசுவரர், துர்கா, விஷ்ணு, சூரியன், சண்டேச அனுக்கிரக மூர்த்தி ஆகிய கடவுளரின் சிலைகள் சிறப்புமிக்கவை.

**தாராசுரம் கோயில்:**

இரண்டாம் இராஜராஜனால் (1146 – 1172) கட்டப்பட் தாராசுரம் கோயில் சோழர் காலக் கட்டுமானக் கலைக்கு மற்றொரு சிறந்த உதாரணம் ஆகும். இக்கோயிலின் கருவறைச்சுவரின் தளத்தில் 'பெரிய புராண' நிகழ்வுகள் குறுஞ்சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. நாயன்மார்களில் முதல் நால்வரில் ஒருவரான சுந்தரரின் கதையைச் சித்தரிக்கும் சுவரோவியமும் இங்குள்ளது. அரசு நிர்வாகத்தில் சேக்கிழார் செல்வாக்குப் பெற்றிருந்ததை இந்த ஓவியம் ஏற்பளிப்பு செய்வதாக உள்ளது.

**வணிகம்:**

வேளாண் உற்பத்தி அதிகரிப்புடன் கைவினைத் தொழில்கள் நடவடிக்கைகளாலும் உற்பத்திப் பொருள் அதிகரித்து, பண்டமாற்று முறை வணிக வளர்ச்சிக்கு இட்டுச்சென்றது.

இந்த வணிக நடவடிக்கைகளில், தென் இந்தியாவின் தொடக்க காலத்தில் அறிந்திராத விலை, லாபம், சந்தை போன்ற கருத்தாக்கங்கள் இப்போது ஈடுபடுத்தப்பட்டன. அஞ்சுவண்ணத்தார், மணிக்கிராமத்தார் ஆகிய இரு வணிகக்குழுக்கள் பற்றி அறியமுடிகின்றது. அஞ்சுவண்ணத்தார் குழு யூதர்கள், கிறிஸ்தவர்கள், இசுலாமியர்கள் உள்ளிட்ட மேற்கு ஆசியர்களைக் கொண்டிருந்தது. இவர்கள் கடல்வழி வணிகர்கள் ஆவர். மேற்குக்கடற்கரையின் துறைமுக நகரங்களில் இவர்கள் குடியேறியிருந்தார்கள். உள்நாட்டு வணிகம் செய்தவர்கள் மணிக்கிராமத்தார் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் கொடும்பாளூர், உறையூர், கோவில்பட்டி, பிரான்மலை போன்ற நாட்டின் உட்புற நகரங்களில் வசித்தனர். காலப்போக்கில் இந்த இரு வணிகக்குழுவினரும் ஒன்றாகி, ஐநூற்றுவர், திசை ஆயிரத்து ஐநூற்றுவர், வளஞ்சியர் போன்ற பெயர்களுடன் இயங்கினர். இவர்களது தலைமை வணிகக் குழு கர்நாடகத்திலுள்ள ஐஹோல் என்ற இடத்தில் இயங்கியது. ஐநூற்றுவர் வணிகக் குழு மேற்கொண்ட கடல் கடந்த வணிகம் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் நடைபெற்றது. முனைச்சந்தை (புதுக்கோட்டை), மயிலாப்பூர், திருவொற்றியூர் (சென்னை), நாகப்பட்டினம், விசாகப்பட்டினம், கிருஷ்ணப்பட்டினம் (தெற்கு நெல்லூர்) ஆகிய இடங்கள் கடல் வணிகக்குழுக்களின் மையங்களாக மாறின. உள்நாட்டு வணிகம் விலங்குகள், படகுகள் வழியாக மேற்கொள்ளப்பட்டன. சோழநாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள் சந்தனம், அகில், சுவையூட்டும் பொருள்கள், விலையுயர்ந்த ரத்தினங்கள், மிளகு, எண்ணெய், நெல், தானியங்கள், உப்பு ஆகியவை ஆகும். கற்பூரம், செம்பு, தகரம், பாதரசம் போன்ற பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. பாசன நடவடிக்கைகளில் வணிகர்களும் ஆர்வம் கொண்டனர். வளஞ்சியர் குழு வெட்டிய ஐநூற்றுவப்பேரேரி என்ற பாசன ஏரி புதுக்கோட்டையில் உள்ளது.

### கல்விப் புரவலர்களாக சோழர்:

சோழ அரசர்கள் கல்விப்புரவலர்களாக விளங்கினார்கள். அறக்கட்டைகளை நிறுவி, சமஸ்கிருதக் கல்விக்குப் பெரும் ஆதரவளித்தார்கள். அப்போது எழுத்தறிவு பரவலாக இருந்தது என்பதைக் கல்வெட்டுகள் மூலமட் அறிய முடிகிறது. முதலாம் இராஜேந்திரன் தென் ஆற்காடு பகுதியில் உள்ள எண்ணாயிரத்தில் வேதக் கல்லூரி ஒன்றை நிறுவினார். இக்கல்லூாயீல் 340 மாணவர்கள் பயின்றார்கள். 14 ஆசிரியர்கள் பணியாற்றினர். வேதம், இலக்கணம், வேதாந்தம் ஆகியவை இங்குக் கற்பிக்கப்பட்டன. அவருக்குப் பின்வந்த அரசர்களும் அவரைப் பின்பற்றினார்கள். இதன் விளைவாக, மேலும் இரு சமஸ்கிருதக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. இவை 1048 இல் புதுச்சேரிக்கு அருகிலுள்ள திருபுவனியிலும், 1061 இல் செங்கல்பட்டுக்கு அருகிலுள்ள திருமுக்கூடலிலும் அமைந்தன. இந்த சமஸ்கிருதக் கல்வி மையங்களில் வேதங்கள், சமஸ்கிருத இலக்கணம், சமயம், தத்துவங்கள் ஆகியவை கற்றுத்தரப்பட்டன. ஆசிரியர்களுக்கான ஊதியமாக அவர்களின் பணிக்காலத்திற்கு ஏற்ப நிலம் வழங்கப்பட்டது. பெரும் இலக்கியப் படைப்புகளான கம்ப இராமாயணம், பெரிய புராணம் ஆகியன இக்காலகட்டத்தைச் சேர்ந்தவை ஆகும்.

### சோழ ஆட்சியின் முடிவு:

ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை சோழ அரச மரபு நிலையாக இருந்தது. 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் அங்குள்ள குடித்தலைமை ஆட்சியாளர்கள் எழுச்சி அடையத் தொடங்கினர். இது மைய அரசின் வலிமையைக் குறைத்தது. அடிக்கடி நிகழ்ந்த பாண்டியரின் தொடர் படையெடுப்புகளால் ஒரு காலத்தில் வலிமை பெற்று விளங்கிய சோழ அரசு,தன்னை விட வலிமையில் குறைந்த ஹொய்சால அரசைச் சார்ந்திருக்குமளவிற்கு வலுவிழந்தது. 1264 இல் பாண்டிய மன்னன் முதலாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் சோழர் தலைநகரான கங்கைகொண்ட சோழபுரத்தைக் கைப்பற்றினார். அதற்கு முன்னரே காஞ்சிபுரத்தைத் தெலுங்குச் சோழர் கைப்பற்றியிருந்தனர். எஞ்சிய பகுதிகள் பாண்டியரின் ஆளுகைக்குச் சென்றன. 1279 இல் முதலாம் மாறவர்மன் குலசேகரப்பாண்டியன் கடைசி சோழ அரசரான மூன்றாம் இராஜேந்திர சோழனைத் தோற்கடித்தார். இத்துடன் சோழரின் ஆட்சி முடிவுக்கு வந்து, பாண்டியரின் ஆட்சி தொடங்கியது.

**சம்புவராயர்கள்:**
சம்புவராயர்கள ராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகிய சோழ அரசர்களின் ஆட்சிக்காலத்தில் வட ஆற்காடு, செங்கல்பட்டு பகுதிகளில் வலிமை படைத்த குறுநில மன்னர்களாக விளங்கினர். தாங்கள் சார்ந்திருந்த பேரரசுகளுக்கு ஆதரவாக போர்களில் ஈடுபட்டனர். பல சமயங்களில் தங்களுக்குள்ளும் போரிட்டுக் கொண்டனர். பதிமூன்றாம் நூற்றாண்டின் பிற்பதியிலிருந்து பாண்டியர் ஆட்சியின் இறுதி வரை சம்புவராயர்கள் பாலாறு

பகுதியில் அரசியல் செல்வாக்குடன் விளங்கினர். அவர்களின் அரசு இராஜ கம்பீர ராஜ்யம் எனப்பட்டது. அதன் தலைநகரம் படைவீட்டில் அமைந்திருந்தது. வீர சோழ சம்புவராயனின் கல்வெட்டுகள் (1314 – 1315) பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. சம்புவராயர்கள் உயர்ந்த பட்டங்களைச் சூட்டிக்கொண்டனர். எடுத்துக்காட்டாக, சகலலோக சக்ரவர்த்தி(ன்) வென்று மண்கொண்ட சம்புவராயன் (1322 – 1323), சகலலோக சக்கர்த்தி(ன்) இராஜநாராயண் சம்புவராயன் (1337 – 1338) ஆகியோரைக் கூறலாம். சகலலோக சக்ரவர்த்தி(ன்) இராஜநாராயணன் சம்புவராயன் 20 ஆண்டுகள் ஆட்சி செய்து, பின்னாட்களில் விஜயநகரத்தின் குமார கம்பணரால் தோற்கடிக்கப்பட்டார். இந்த முறியடிப்புக்குப் பிறகுதான் குமார கம்பணர் தெற்கு நோக்கி மதுரை வரை படையெடுத்துச் சென்றார். குமார கம்பணர் மதுரை சுல்தானைத் தோற்கடித்து முழுவெற்றி பெற்றார்.

## II - பாண்டியர்:

தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும் நவீன காலத்துக்கு முன்புவரை இந்தியாவின் தென்பகுதியைத் ஆட்சி செய்து வந்த மூவேந்தர் மரபினரில் பாண்டியரும் அடங்குவர். அசோகர் தன் கல்வெட்டுகளில் சோழர், சேரர், பாண்டியர் சத்தியபுத்திர் ஆகியோரைத் தென் இந்தியாவின் ஆட்சியாளர்களாகக் குறிப்பிடுகிறார். முத்துக்குளித்தல் தொழிலோடு வரலாற்றுப்பூர்வமாக இணைந்த கொற்கை பாண்டியரின் தொடக்க காலத் தலைநகரமாகவும் துறைமுகமாகவும் இருந்தது. பிற்காலத்தில் அவர்கள் மதுரைக்கு இடம் பெயர்ந்தனர்.

மதுரையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பாண்டியர்களின் தொடக்க காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் மடிரை என மதுரை குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் செவ்விலக்கியங்கள் மதுரையைக் கூடல் எனச் சுட்டுகின்றன. இச்சொல்லுக்குக் கூடுகை என்று பொருளாகும். பாண்டிய நாட்டைச் சேர்ந்த புலிமான் கோம்பை என்ற கிராமத்தில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில் கூடல் என்ற சொல் குறிப்பிடப்பெற்றுள்ளது. பத்துப்பாட்டு நூல்களிலான பட்டினப்பாலையிலும், மதுரைக்காஞ்சியிலும் கூடல் பாண்டியர் தலைநகரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எட்டுத்தொகை நூல்களிலும் இச்சொல் காணப்படுகிறது. வரலாற்றுப் பூர்வமாகவே மதுரை, கூடல் ஆகிய சொல்லாடல்கள் ஒன்றுக்கொன்று மாற்றுச்சொல்லாகவே கையாளப்பட்டு வந்திருக்கின்றன.

**சான்றுகள்:**

சங்ககாலப் பாண்டியர் வரலாறு ஏறத்தாழ பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டு வரை எனக் குறிப்பிடப்படுகிறது. பெருங்கற்கால ஈமப் பொருட்கள் கண்டுபிடிப்பு, தமிழ் பிராமி கல்வெட்டுகள், சங்க இலக்கியப் பாடல்கள் போன்ற பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் மூலம் சங்க காலப் பாண்டியர் வரலாறு மீட்டுருவாக்கும் செய்யப்பட்டுள்ளது. பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டின் இறுதிவாக்கில் தென் தமிழ்நாட்டில் பாண்டியர் தம் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தினர். ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தது குறித்த தகவல்களைச் சில செப்பேடுகள் உறுதிப்படுத்துகின்றன. அவற்றுள் நெடுஞ்சடையானின் வேள்விக்குடி மானியம் முக்கியமானதாகும். அரசு ஆணைகள், பாண்டிய அரசர்களின் மரபுவழி வரிசை, வெற்றிகள், அரசர்கள் எழுப்பிய கோயில்கள், உருவாக்கிய பிரம்மதேயங்கள் ஆகியவற்றுக்கு அரசர்கள் வழங்கிய மானியங்கள், அறக்கொடைகள் ஆகியன குறித்து செப்பேடுகள் தெரிவிக்கின்றன. குடைவரைக் கோயில்களை உருவாக்கியவர்கள், பாசன ஏரிகள், கால்வாய்கள் போன்றவற்றை உருவாக்கியவர்கள் குறித்த செய்திகளைக் கல்வெட்டுகள் அளிக்கின்றன. மார்க்கோ போலோ, வாசஃப், இபின் பதூதா போன்ற பயணிகள் எழுதியுள்ள வரலாற்றுக் குறிப்புகள் அக்காலகட்ட அரசியல், சமூக, பண்பாட்டு வளர்ச்சிகள் குறித்து அறிய உதவுகின்றன. மதுரைத் தல வரலாறு, பாண்டியக் கோவை, மதுரை திருப்பணி மாலை ஆகிய இலக்கியங்கள் மதுரையை ஆண்ட பிற்காலப் பாண்டியர் குறித்த செய்திகளை வழங்குகின்றன.

பொ.ஆ. ஏழாம் / எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்த “இறையனார் அகப்பொருளில் “சங்கம்“ என்ற சொல் கலைக்கழகம் என்ற பொருளில் இடம் பெற்றுள்ளது. ஆனால், பல்லவர்களுக்கு முந்தைய இலக்கியங்களில் சங்கம் என்ற சொல் இப்பொருளில் குறிப்பிடவில்லை. திருவிளையாடல் புராணம், பெரிய புராணம் ஆகிய பிந்தைய இடைக்கால நூல்களில் சங்கம் என்ற சொல் கலைக்கழகம் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது.

மணிமேகலையை இயற்றிய சீத்தலைச் சாத்தனார் மதுரையைச் சேர்ந்தவர் ஆவார்.

**ஆட்சிப்பகுதி:**

பாண்டியரின் ஆட்சிப்பகுதி பாண்டி மண்டலம், தென் மண்டலம், பாண்டி நாடு என்று அழைக்கப்படுகிறது. வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகளால் வளம் பெறும் சில பகுதிகள் நீங்கலாகப் பெரும்பாலும் பாறைகளும் குன்றுகளும் மலைத்தொடர்களும் நிறைந்த பகுதியே பாண்டிய நாடு ஆகும். புதுக்கோட்டை வழியே ஓடும் வெள்ளாறு பாண்டிய நாட்டின் வட எல்லையாகும். இந்தியப் பெருங்கடல் தென் எல்லையாகும். மேற்குத் தொடர்ச்சி மலைகள் மேற்கு எல்லையாகவும் வங்காள விரிகுடா கிழக்கு எல்லையாகவும் அமைந்திருந்தன.

**பாண்டியரின் மறுமலர்ச்சி (600 – 920)**

களப்பிரரின் மறைவுக்குப் பின் பாண்டியரின் மறு எழுச்சி ஏற்பட்டதாகத் தெரிகிறது. ஒரு காலத்தில் மழைவாழ் பழங்குடிகளாக இருந்த களப்பிரர்கள் விரைவிலேயே சமவெளியில் குடியேறினர். அவர்கள் புத்த, சமண சமயங்களை ஆதரித்தனர். களப்பிரரிடமிருந்து பாண்டியர் பகுதியைக் கடுங்கோன் மீட்டதாகச் செப்பேடுகள் மூலும் அறிய முடிகிறது. அவரைத் தொடர்ந்து இரு அரசர்கள் அடுத்தடுத்து ஆட்சி செய்துள்ளனர். அவர்களில் சேந்தன் என்பவர் போர் முறையில் சிறந்தவராக இருந்துள்ளார். சேரரை வென்றதால் அவர் வானவன் என்ற பட்டம் பெற்றார் எனச் செப்பேடுகள் கூறுகின்றன. அடுத்து வந்த தொடக்க காலப் பாண்டிய அரசர்களில் சிறந்தவரான அரிகேசரி மாறவர்மன் (624 – 674) 642 இல் பதவி ஏற்றார் என்பதை வைகை ஆற்றுப்பகுதி கல்வெட்டுகள் கூறுகின்றன. இவர் முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்ம வர்மன் ஆகியோருக்குச் சம காலத்தவர் ஆவார். அவர் தமது காலத்தைச் சேர்ந்த சேர, சோழ, பல்லவ சிங்கள அரசர்களை வெற்றி கொண்டதாக அக்கல்வெட்டுக் குறிப்புகளும் செப்பேடுகளும கூறுகின்றன. சமணர்களைக் கழுவேற்றிய கூன் பாண்டியனெ அரிகேசரி என்று அடையாளம் காணப்படுகிறார்.

சைவத் துறவியான திருஞானசம்பந்தர் அரிகேசரியை சமண மதத்திலிருந்து சைவ மதத்துக்கு மாற்றினார்.

அரிகேசரியைத் தொடர்ந்து கோச்சடையான் ரணதீரனும் (700 – 730), அவருக்குப் பின் மாறவர்மன் ராஜசிம்ஹனும் (730 – 765) ஆட்சி செய்தனர். அவர்களுக்குப் பின் ஜதில பராந்தக நெடுஞ்சடைநன் (முதலாம் வரகுணன்) (756 – 815) ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். இவரே புகழ்பெற்ற வேள்விக்குடி நிலக்கொடை அளித்தவர் ஆவார். பாண்டிய அரச மரபில் மிகச் சிறந்தவரான இவர் பல்லவர்களையும் சேரர்களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டார். பாண்டிய அரசைத் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளுக்கு விரிவுபடுத்தினார். பல விஷ்ணு கோயில்களைக் கட்டிய பெருமையும் இவருக்கு உண்டு. இவருக்கு அடுத்த அரசரான ஸ்ரீமாற ஸ்ரீவல்லபர் (815 – 862) இலங்கைக்குப் படையெடுத்து, அங்கு தன் அதிகாரத்தை நிலைநிறுத்தினார். எனினும் பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனிடம் (846 – 869) தோற்றார். அடுத்ததாக ஆட்சிக்கு வந்த இரண்டாம் வரகுணன் திருப்புறம்பியம் போரில் அபராஜித பல்லவனால் (885 – 903) தோற்கடிக்கப்பட்டார். இவருக்கு பின்னர் ஆட்சிக்கு வந்த பராந்தக வீரநாராயணன், இரண்டாம் இராஜசிம்ஹன் ஆகியோரால் முதலாம் பராந்தகனின் தலைமையில் தோன்றிய சோழரின் எழுச்சிக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. முதலாம் பராந்தகனிடம் தோற்ற இரண்டாம் இராஜசிம்ஹன் 920 இல் நாட்டை விட்டே ஓடினார்.

**மீண்டும் பாண்டிய எழுச்சி (1190 – 1310):**

பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இறுதிக் கால்பகுதியில் ஆதி இராஜேந்திரனின் மறைவுக்குப் பிறகு, சோழ அரசில் வெற்றிடம் ஏற்பட்ட நிலையில் பாண்டியப் பகுதியை நிர்வகித்த ஆளுநரும் வலுவிழந்தார். இதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட பாண்டியக் குடித்தலைமை மன்னர்கள் தங்களை நிலைநிறுத்திக்கொண்டு தமது சுதந்திர ஆட்சியை நிறுவ முயன்றனர். இரண்டாம் இராஜராஜசோழனுடன் போரிட்ட ஸ்ரீவல்லப பாண்டியன் தன் மகனைப் போரில் பறிகொடுத்தார். ஐந்து பாண்டியக் குறுநில மன்னர்கள் இச்சூழலைப் பயன்படுத்திக்கொண்டு முதலாம் குலோத்துங்கனுடன் (1070 – 1120) போரிட்டார்கள். போரில் அவர்களுக்குத் தோல்வியே கிடைத்தது. 1190 இல் சடையவர்மன் ஸ்ரீவல்லபன் முதலாம்

பாண்டிய நாட்டுக்கு வருகை தந்த வெனீஸிய (இத்தாலி) பயணி மார்க்கோ போலோ நேர்மையான நிர்வாகத்துக்காவும் வெளிநாட்டு வணிகர்களைச் சிறந்த முறையில் நடத்தியதற்காகவும் பாண்டிய அரசரைப் பாராட்டியுள்ளார். உடன்கட்டை ஏறும் வழக்கம், அரசர்கள் பன்பற்றிய பலதார மணமுறை ஆகியவை மார்க்கோ போலோவின் பயணக் குறிப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குலோத்துங்கனுடைய அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு, பாண்டிய நாட்டில் ஆட்சியைத் துவக்கினார். சடையவர்மன் ஸ்ரீவல்லபன் மதுரையில் நடைபெற்ற பட்டம் சூட்டு விழாவில் அரசராக முடிசூடி, செங்கோல் ஏந்தி, அரியாணையில் அமர்ந்தார். இந்த நிகழ்வின் நினைவாகச் சுந்தரசோழபுரம் என்ற வேளாண் குடியிருப்புப் பகுதியைச் சுந்தரசோழசதுர் வேதிமங்கலம் என்று பெயர் மாற்றி இறையிலியாகப் பிராமணர்களுக்கு வழங்கினார்.

சோழரின் வீழ்ச்சிக்குப் பிறகு, பதின்மூன்றாம் நூற்றாண்டில் பாண்டியர் செல்வாக்குமிக்க அரச மரபினராக மாறினார்கள். மதுரை அவர்களின் தலைநகரமாக இருந்தது. காயல் அவர்களுக்கான பெருந்துறைமுகமாக விளங்கியது. வெனிஸைச் சேர்ந்த புகழ்பெற்ற பயணி மார்க்கோ போலே 1288 இலும் 1293 இலுமாக இரு முறை காயலுக்கு வந்துள்ளார். அப்போது காயல் துறைமுகம் முழுவதும் அரேபிய, சீன கப்பல்களால் நிறைந்திருந்ததாகவும் காயல் நகரில் வணிக நடவடிக்கைகள் முழு வீச்சில் நடைபெறுவதாகவும் மார்க்கோ போலோ கூறுகிறார்.

**சடையவர்மன் சுந்தர பாண்டியன்:**

இரண்டாம் பாண்டிய அரசின் சிறப்புமிக்க ஆட்சியாளர் சுந்தரபாண்டியன் (1251 – 1268) ஆவார். அவர் தமிழ்நாடு முழுவதையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்ததுடன், ஆந்திராவில் உள்ள நெல்லூர் வரை தனது அரசியல் அதிகாரத்தைச் செலுத்தினார். இவர் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் என்று அழைக்கப்படுகிறார். அவருடைய ஆட்சிக்காலத்தில் தான் பாண்டிய அரசு வலிமையின் உச்சத்தில் இருந்தது. அப்போது ஹொய்சாலர்கள் அடக்கி வைக்கப்பட்டார்கள். பல கல்வெட்டுக்கள் அவரை மிகவும் உயர்வாகப் போற்றப்படுகின்றன. சுந்தரபாண்டியன் சேர அரசரான மலைநாட்டுத் தலைவரை அடக்கி, தனக்குக் கப்பம் செலுத்த வைத்தார். சோழரின் வீழச்சி மால்வா பகுதியை ஆட்சி செய்த போஜ அரசன் வீர சோமேஸ்வரனுக்குச் சுந்தரபாண்டியனை சவாலுக்கு அழைக்கும் துணிச்சலைக் கொடுத்தது. இருவருக்குமிடையே கண்ணனூரில் நடந்த போரில் சுந்தர – பாண்டியன் வீர சோமேஸ்வரனைத் வென்று, மால்வா பகுதியைச் சூறையாடினார். சேந்தமங்கலத்தையும் கட்டுக்குள் கொண்டுவந்தார். கடலூரை மையமாகக் கொண்டு வட தமிழகத்தில் வெல்வாக்குடன் ஆட்சி நடத்திய காடவர்களையும் அடக்கிய சுந்தரபாண்டியன் அவர்களைக் கப்பம் செலுத்தப் பணிந்தார். அவர் மேற்குப்பகுதியையும் தற்கால ஆற்காடு பகுதிக்கும் சேலத்துக்கும் இடைப்பட்ட பகுதியையும் கைப்பற்றினார். போரில் காஞ்சிபுரம் அரசனைக் கொன்று அதையும் எடுத்துக்கொண்டார். கொல்லப்பட்ட காஞ்சிபுரம் அரசரின் சகோதாரர் பாண்டிய மன்னருக்கு அடிபணிந்ததன் மூலம் காஞ்சிபுரம் ஆட்சியை கவனித்துக் கொண்டார். கப்பம் செலுத்தவும் சம்மதித்தார். எனினும் அவர் தனி ஒருவராக ஆட்சி செய்யும் வாய்ப்பு மறுக்கப்பட்டது. சுதந்திர பாண்டியன் தன்னுடைய தரப்பினரான விக்கிரம பாண்டியன், வீர பாண்டியன் ஆகிய இருவருடன் சேர்ந்து ஆட்சி புரியும்படி செய்தார். வீரபாண்டியன் ஈழம், கொங்கு, சோழ மண்டலம் (சோழ நாடு) ஆகியவற்றை வெற்றிகொண்டதாக அவர் குறித்த ஓர் ஆவணம் (1253 – 1256) கூறுகிறது.

**மாறவர்மன் குலசேகரன்:**

சுந்தர பாண்டியனுக்குப் பிறகு மாறவர்மன் குலசேகரன் நாற்பது ஆண்டுகள் பாண்டிய நாட்டை வெற்றிகரமாக ஆட்சிபுரிந்தார். அவரது ஆட்சியில் அமைதியும் வளர்ச்சியும் நிலவின. அவர் 1268 இல் அரியணை ஏறி, 1312 வரை ஆட்சி செய்தார். அவருக்கு இரு மகன்கள், மூத்தவர் சுந்தர பாண்யடின்: இளையவர் வீரபாண்டியன், 1302 இல் இளைய மகன் வீரபாண்டியனுக்கு இளவராகப் பட்டம் சூட்டப்பட்டது. இதனால் கோபமடைந்த மூத்த மகன் சுந்தர பாண்டியன் தன் தந்தையைக் கொன்று பதவிக்கு வந்தார். இதைத் தொடர்ந்து மூண்ட உள்நாட்டுப் போரில் வீரபாண்டியன் வென்று ஆட்சியைப் பிடித்தார். சுந்தர பாண்டியன் தில்லிக்குத் தப்பிச் சென்று அலாவுதின் கில்ஜியிடம் அடைக்கலமானார். இந்த நிகழ்வுகளே மாலிக் காபூர் தமிழகப் படையெடுப்புக்கு வழிவகுத்தன.

**மாலிக் காபூர் படையெடுப்பு:**

மாலிக் காபூர் 1311 இல் மதுரையை அடைந்தபோது, அங்கே யாரும் இல்லை, வீரபாண்டியன் ஏற்கனவே தப்பியோடிருந்தார். இந்த மதுரை படையெடுப்பு குறித்து அலாவுதின் கில்ஜியின் அரசவைக் கவிஞர் அமிர் குஸ்ருவின் கணிப்பின் படி, அங்கிருந்து 512 யானைகள், 5,000 குதிரைகள், 500 மூட்டைகளில் வைரம், முத்து, மரகதம், மாணிக்க நகைகள் மாலிக் காபூரால் எடுத்துச் செல்லப்பட்டன எனத் தெரிகிறது. அமிர் குஸ்ரு மிகைப்படுத்தி எழுதக்கூடியவர், இருப்பினும் சொக்கநாதர் குறித்து அலாவுதின் கில்ஜியின் அரசவைக் கவிஞர் அமிர் குஸ்ருவின் கணிப்பின்படி, அங்கிருந்து கோயிலை இடித்து ஏராளமான விலை மதிக்க முடியாத பொருள்களை மாலிக் காபூர் எடுத்துச் சென்றார் என்பது உண்மையே. இச்செல்வத்தைப் பயன்படுத்தி அலாவுதீன் கில்ஜி தனது எதிரிகளை தன் பக்கம் ஈர்த்து தனது பலத்தை அதிகரித்துக் கொண்டார்.

மாலிக் காபூரின் படையெடுப்புக்குப் பிறகு, பாண்டிய அரசின் ஆட்சிப்பொறுப்பு பாண்டிய அரசக் குடும்ப உறுப்பினர்களால் தனித் தனியாகப் பிரித்துக்கொள்ளப்பட்டன. மதுரையில் தில்லி சுல்தானிய அரசுக்குக் கட்டுப்பட்ட ஓர் அரசு உருவாகிறது. இது 1335 வரை தான் நீடித்தது. மதுரையை ஆட்சி செய்த ஆளுநர் ஜலாலுதீன் அஸன் ஷா டெல்லி சுல்தானுக்குக் கட்டுப்படாமல் 1335 இல் மதுரை அரசராகத் தன்னை அறிவித்துக் கொண்டார்.

**அரசு:**

பாண்டிய அரசர்கள் தொடர்ந்து மதுரையையே தங்கள் தலைநகராகக் கொண்டார்கள். பாண்டிய அரசர்களைக் கூடல்கோன், கூடல் நகர் காவலன், மதுரபுர பரமேசுவரன் என்று போற்றுவது மரபாக இருந்தது. தொடக்க காலப் பாண்டியருக்கான பட்டங்கள்: பாண்டிய அதியரசன், பாண்டிய மகராசன், மன்னர் மன்னன், அவனிப சேகரன், ஏக வீரன், சகலபுவன சக்கரவர்த்தி போன்றவை ஆகும். பிற்காலப் பாண்டியருக்குச் சமஸ்கிருதத்தில் அமைந்த பட்டங்கள்: கோதண்ட ராமன்,கோலாகலன்,புவனேகவீரன், கலியுக ராமன் போன்றவை ஆகும். தூய தமிழில் அமைந்த கோலாகலன்,புவனேகவீரன், கலியுக ராமன் போன்றவை ஆகும். தூய தமிழில் அமைந்த பட்டங்கள்: செம்பியன், வானவன், தென்னவன் போன்றவை. பாண்டியர் தம்முடன் நெடிய வணிக பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்த அரபு நாடுகளிலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்தனர். இக்குதிரைகளைக் கொண்டு ராணுவத்தைப் பலப்படுத்திக்கொண்டனர். இதன்மூலம் பாண்டியர் தங்கள் ராணுவ வலிமையைத் தக்கவைத்துக் கொண்டனர்.

**அரண்மனையும் அரியணையும்:**

பாண்டியர் அரண்மனை திருமாளிகை, மனபரணன் திருமாளிகை என்று அழைக்கப்பட்டன. அரசர்கள் நீளமான, ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அமரும் இட வசதி கொண்ட அரியணையில் அமர்ந்தபடி நிர்வாகம் செய்தனர். குறுநில மன்னர்கள் மீது அரசர்களின் சட்டபூர்வ மேலாளுமையைக் காட்டும் விதத்திலும் அரியணைகளுக்குப் பெயரிடும் வழக்கம் இருந்தது. அத்தகைய அரியணைகளின் பெயர்கள் முன்னைய தரையன், பாண்டியத்தரையன், கலிங்கத்தரையன் ஆகும். அரசர்கள் அரியணைளில் இருந்தபடிதான் அரசக்கட்டளைகளை வாய்மொழியாகப் பிறப்பித்தார்கள். அவை திருமந்தி, ஓலை என்று அழைக்கப்பட்டன.

**அரசு அதிகாரிகள்:**

அதிகாரிகள் குழு அரச கட்டளைகளை நிறைவேற்றியது. முதன்மை அமைச்சர் உத்தர மந்திரி எனப்பட்டார். மாணிக்கவாசகர், குலச்சிறையார், மாறன்கரி போன்ற ஆளுமைகள் பாண்டிய அமைச்சர்களாக இருந்துள்ளனர். அரச தலைமைச் செயலகம் எழுத்துமண்டலம் எனப்பட்டது. அக பரிவார முதலிகள் என்பவர்கள் அரசரின் தனிப்பட்ட உதவியாளர்களாக இருந்தனர். மாறன் எயினம், சாத்தன் கணபதி, ஏனாதி சட்டம், திரதிரன், மூர்த்தி எயினன் போன்றவை உயர்ந்த மதிப்புக்குரிய அரச பதவிகளாக இருந்தன. படைத்தளபதிகளுக்குப் பள்ளி வேலன், பராந்தகன் பள்ளி வேலன், மாறன் ஆதித்தன், தென்னவன் தமிழவேள் ஆகிய பட்டங்கள் சூட்டப்பட்டன.

**அரசியல் பிரிவுகள்:**

பாண்டிய மண்டலம் என்பது பல வளநாடுகளைக் கொண்டது. ஒரு வளநாடு பல நாடுகளாகவும் கூற்றங்களாகவும் பிரிக்கப்பட்டது. நாடு, கூற்றம் ஆகியன மங்கலம், நகரம்,ஊர், குடி ஆகிய குடியிருப்புகளைக் கொண்டவையாக இருந்தன. பாண்டிய மண்டலத்தில் குளக்கீழ் என்ற ஒரு தனிச்சிறப்பான அரசியல் பிரிவு இருந்தது. பாசன ஏரிக்குக் கீழேயிருக்கும் பகுதி என்று இதற்குப் பொருளாகும். எடுத்துக்காட்டாக, மதுரை நகரம் "மடக்குளக்கீழ் மதுரை" என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேளாண் நிலங்களின் தன்மைகளை மதிப்பிட்டு, வரிகளை விதிப்பது நாட்டாரின் வேலையாகும். நில அளவீடுகளின் போது 14 மற்றும் 24 அடி நீளமுள்ள கழிகளைப் பயன்படுத்தினர். பின்னர் அவற்றைக் கொடையாக வழங்கினர். சாலபோகம் நிலம் பிராமணர்களுக்கு ஒதுக்கப்பட்டது. இரும்பு உலோக வேலை செய்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலம் "தட்டார் காணி" எனப்பட்டது. மரவேலை செய்பவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலம் "தச்சர் மானியம்" எனப்பட்டது. கல்வி கற்பிக்கும் பிராமணக் குழுவிற்கு வழங்கப்பட்ட நிலம் பட்ட விருத்தி எனப்பட்டது.

**நிர்வாகமும் சமயமும் : 7 முதல் 9 ஆம் நூற்றாண்டு வரை:**

800-ஐச் சேர்ந்த மானூர் (திருநெல்வேலி மாவட்டம்) கல்வெட்டு கிராம நிர்வாகத்தைப் பற்றிய செய்திகளைக் கூறுகிறது. அதன்படி, பாண்டியர் கிராம நிர்வாகமும் கிராமசபைகள், குழுக்கள் எனச் சோழர் ஆட்சியின் உள்ளாட்சி முறை போன்றே அமைந்திருந்தது. குடிமை அதிகாரங்கள், இராணுவ அதிகாரங்கள் ஒரே நபரிடமே இருந்துள்ளன. இக்காலகட்ட பாண்டிய அரசர்கள் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளையும் ஆதரித்தனர். சைவ, வைணவ அடியார்கள் (நாயன்மார்களும் ஆழ்வார்களும்) தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தங்கள் பங்களிப்பை அளித்தனர். இக்காலகட்டம் கடுமையான மத மோதல்கள் நிகழ்ந்த காலகட்டமாகக் குறிக்கப்படுகிறது. பக்தி இயக்கத்தின் எழுச்சி வேற்று மத அறிஞர்களை விவாதங்களுக்கு அழைத்தது. இத்தகைய விவாதங்களில் புத்த, சமண மதங்கள் தோல்வி அடைந்ததாக பக்தி இலக்கியங்கள் கூறுகின்றன.

**பொருளாதாரம்:**
**சமூகம்:**

அரசர்களும் குறுநில மன்னர்களும் பாசன வசதிகளுடன் கூடிய குடியிருப்புகளை உருவாக்கி மங்கலம், சதுர்வேதிமங்கலம் என்ற பெயரிட்டு பிராமணர்களுக்கு வழங்கினர். இக்குடியிருப்புகளுக்கு அரசனின் பெயர்களும் கடவுளரின் பெயர்களும் சூட்டப்பட்டன. செல்வாக்குமிக்க பிராமணர்கள் பிரம்மாதிராஜன், பிரம்மராஜ்யன் ஆகிய உயர் தகுதிநிலை பட்டங்களைக் கொண்டிருந்தனர்.

**வணிகம்:**

இசுலாமியர்களைத் தமிழ் நாட்டுக்குள் முதன் முதலாக வரவழைத்தது மாலிக் காபூரின் படையெடுப்பு அல்ல. ஏழாம் நூற்றாண்டிலேயே தென்னிந்தியாவின் மேற்குக்கடற்கரையில் அரபுக்குடியிருப்புகள் தோன்றிவிட்டன. இதன்மூலம் தங்கள் வணிகத்தை கிழக்குக் கடற்கரையிலிருந்த தமிழர்களுடன் விரிவுபடுத்திக் கொண்டனர். இதன் காரணமாக கிழக்குக் கரையில் இருந்த அரசுகள் இந்த அரபு வணிகர்கள் மீது மிகவும் தாராளமாக கொள்கைகளைத் தளர்த்தி ஆதரவு அளித்துள்ளனர். இதனால் அவ்வணிகர்களுக்குத் துறைமுகக் கட்டணங்கள், சுங்க வரி ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டன. காயல் துறைமுக நகரில், அரபுத்தலைவன் மாலிக்கு இஸ்லாம் ஜமாலுதீன் என்பவரால் ஒரு முகவர் நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் பாண்டியருக்குக் குதிரைகளை இறக்குமதி செய்யும் பணிகளை மேற்கொண்டுள்ளது.

| |
|---|
| பாண்டியர் கால குதிரை வணிகம் குறித்து வாசாஃப் பின்வருமாறு பதிவு செய்துள்ளார். "காயல் மற்றும் இந்தியாவின் பிற துறைமுகங்களில் ஏறத்தாழ 10,000 குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றில் 1,400 குதிரைகள் ஜமாலுதீனுக்குச் சொந்தமானவை. குதிரையின் சராசரி விலை 220 செம்பொன் தினார்களாகும்". |

நிகமத்தோர், நானாதேவி, திசை ஆயிரத்து ஐநூற்றுவர், ஐநூற்றுவர், மணிக்கிராமத்தார், பதினென் விஷயத்தார் என்று வணிகர்கள் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறார்கள். அவர்களது வணிக குழுக்கள் கொடும்பாளூர், பெரியகுளம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன. மிளகு, முத்து, விலையுயர்ந்த கற்கள், குதிரைகள், யானைகள், பறவைகள் ஆகியன வணிகத்தில் ஈடுபடுத்தப்பட்டன. பதிமூன்று – பதினான்காம் நூற்றாண்டுகளில் குதிரை வணிகம் விறுவிறுப்பாக நடைபெற்றது. விழாக்கள், போர்களில் பயன்படுத்த குதிரைகள் அதிக அளவில் தேவைப்பட்டதால் பாண்டிய அரசர்கள் குதிரைகளில் அதிக முதலீடு செய்தனர் என்று மார்க்கோ போலோ, வாசா.ஃப் ஆகியயோர் குறிப்பிடுகிறார்கள். குதிரை வணிகம் செய்வோர் குதிரைச்செட்டி எனப்பட்டனர். இவர்கள் கடல்வழி வணிகத்திலும் ஈடுபட்டனர். பாண்டியர் காலத்தில் முழு வீச்சில் இயங்கிய துறைமுக நகரம் காயல்பட்டினம் ஆகும். வணிகத்தில் பரிமாற்றத்துக்கான ஊடகமாக தங்கம் விளங்கியதால், தங்க நாயணங்கள் அதிகமாகப் புழக்கத்தில் இருந்தன. அவை காசு, பழங்காசு, அன்றாட நற்பழங்காசு, கனம், கழஞ்சு, பொன் எனப் பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்பட்டன. வணிகர்களின் கடவுளர் அவர்களுக்கான பட்டப்பெயர்களுடன் கூடிய பெயர்களுடன் அமைந்திருந்தன. எடுத்துக்காட்டாக, ஆயிரத்து ஐநூற்றுவார் உடையார், சொக்கநாயகி அம்மன் போன்ற பெயர்களைக் கூறலாம். சீரான கால இடைவெளியில் நடத்தப்பட்ட பொருட்காட்சிகள் தவளம் எனப்பட்டன. வணிகர்களின் குடியிருப்புப் பகுதி “தெரு எனப்பட்டது.

**பாசனம்:**

பாண்டிய அரசர்கள் பெரும் எண்ணிக்கையிலான பாசன வளங்களை உருவாக்கினர். அவை அரசக் குடும்ப உறுப்பினர்கள் பெயர்களில் அறியப்படுகின்றன. வாசுதேவப்பேரேரி, வீரபாண்டியப்பேரேரி, ஸ்ரீ வல்லபப் பேரேரி, பராக்கிரமபப்பாண்டியப்பேரேரி போன்றவை ஆகும். ஏரிகள் திருமால் ஏரி, மாறன் ஏரி, கலியன் ஏரி, காடன் ஏரி என்று பெயரிடப்பட்டன. வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகளின் இரு கரைகளிலும் அவற்றின் நீரைப் பாசனக் குளங்களுக்குக் கொண்டு செல்லும் கால்வாய்கள் வெட்டப்பட்டன. சேந்தன் மாறன் காலகட்டத்தைச் சேர்ந்த வைகை ஆற்றுப்படுகைக் கல்வெட்டுகளில் அவரால் நிறுவப்பட்ட ஆற்று மதகு குறிப்பிடப்படுகிறது. ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் வெட்டிய ஒரு பெரிய ஏரி இன்றும் பயன்பாட்டில் உள்ளது. வட மாவட்டங்களில் பல்லவர்கள் மேற்கொண்டதைப் போன்றே தென் மாவட்டங்களிலும் பாண்டியர் பாசனத் தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்தனர். ஏரிகளின் கரைகளை அமைக்கும்போது பண்டைய கட்டுமானக் கலைஞர்கள் கரை மட்டத்தைச் சமமாகப் பராமரிக்க நூல் பயன்படுத்தினர். கரைகளின் உட்பகுதியை வலுவூட்ட கல் அடுக்குளைப் பயன்படுத்தியது பாண்டிய பாசனத் தொழில்நுட்பங்களில் ஒன்றாகும். பிற்காலப் பாண்டியர் காலத்தில் (ஏறத்தாழ 1212) திருவண்ணாமலை கோயில் நிலங்கள் பாசன வசதி பெற, பெண்ணை ஆற்றிலிருந்து வாய்க்கால் அமைத்துத் தந்துள்ளார். வறட்சிப்பகுதியான இராமநாதபுரத்தில் பல ஏரிகள் வெட்டப்பட்டன. இத்தகைய பகுதிகளில் உள்ளாட்சி அமைப்புகள், உள்ளூர் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோர் மேற்பார்வையில் பாசன வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. பாசன நீர்நிலைகளின் பராமரிப்பு பணிகள் பெரும்பாலும் உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டன. சில சமயங்களில் வணிகர்களும் பாசன ஏரிகளை வெட்டினார்கள்.

இருப்பைக்குடி கிழவன் என்ற உள்ளூர்த்தலைவர் பல ஏரிகளை வெட்டியதுடன், அவற்றைப் பழுதுபார்க்கும் வேலையிலும் ஈடுபட்டார். நில உடமையாளர்கள் பூமிபுத்திரர் எனப்பட்டனர். வரலாற்று நோக்கில் இவர்கள் உள்ளூர் குடிகளாக இருந்ததால், நாட்டு மக்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களின் சமுதாயக் குழு சித்திர மேழி பெரிய நாட்டார் எனப்பட்டது.

**ஏழுத்தறிவு:**

பாண்டியர் ஆட்சியில் எழுத்தறிவைப் பரப்பும் பணிகள் பல்வேறு வழிகளில் மேற்கொள்ளப்பட்டன. கோயில்களில் பக்திப்பாடல்கள், பாடப் பாடகர்கள் நியமிக்கப்பட்ட செயல்பாடுகளை, எழுத்தறிவை ஊக்குவிக்கும் செயல்பாடுகளாகக் காணமுடியும். அரங்குகளில் நாடகங்கள் இதே நோக்கில் அரங்கேற்றப்பட்டன. சமஸ்கிருதக் கல்வியை ஊக்குவிக்கப் பட்ட விருத்தி, சாலபோகம் ஆகிய பெயர்களில் அறக்கொடைகள் வழங்கப்பட்டன. கடிகை, சாலை, வித்யா ஸ்தானம் ஆகிய நிலையங்களில் பிராமணர்கள் சமஸ்கிருதம் பயின்றனர். பன்னிரெண்டாம் நூற்றாண்டில் மடங்கள் உருவாகி மத ஆர்வத்தில் கல்வி கற்பிக்கும் நோக்கத்துடன் கோயில்களுடன் இணைக்கப்பட்டன. தமிழை வளர்க்கவும் மகாபாரதத்தை

மொழிபெயர்க்கவும் ஒரு கலைக்கழகம் அமைக்கப்பட்டதாக ஒரு செப்பேடு கூறுகிறது. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் இயற்றப்பட்ட முக்கியமான இலக்கிய நூல்கள் திருப்பாவை, திருவெம்பாவை, திருவாசகம், திருக்கோவை முதலியன ஆகும்.

**மதம்:**

பாண்டியர் தொடக்கத்தில் சமணர்களாக இருந்து, சைவ மதத்துக்கு மாறியவர்கள் என்று கூறப்படுகிறது. கோயில் கல்வெட்டுகளும் சிற்பங்களும் அதற்குச் சான்று பகர்வதாக உள்ளன. குடவரை-குகை கோயில்கள் இக்கால கட்டத்தில் மதம்- கட்டடக்கலை ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களின் வெளிப்பாடுகளாகக் காணப்படுகின்றன. இடைக்காலப் பாண்டியரும் பிற்காலப் பாண்டியரும் பல கோயில்களைப் பழுதுபார்த்து, அவற்றுக்குத் தங்கம், நிலம் ஆகியவற்றை நன்கொடையாகக் வழங்கியுள்ளனர். திருவரங்கம், சிதம்பரம் ஆகிய கோயில்களின் கருவறை மீதுள்ள விமானங்கள் தங்கத் தகடுகளால் வேயப்பட்டன. சடையவர்மன் சுந்தர பாண்டியன் திருவரங்கம் கோயிலில் பட்டம் சூட்டினார். அதன் நினைவாக அக்கோவிலுக்கு ஒரு விஷ்ணு சிலையை நன்கொடையாகக் கொடுத்தார். இக்கோயிலின் உட்சுவர்களும் பிற மூன்று விமானங்களும் தங்கத்தகடுகள் பொருத்தப்பட்டவை ஆகும்.

பாண்டியர் வேத நடைமுறைகளுக்கும் தங்கள் ஆதரவை விரிவுபடுத்தினார்கள். பல வேதச் சடங்குகளைச் செய்த பல்யாகசாலை முதுகுடுமிப்பெழுவழுதி சங்க காலத்தைச் சேர்ந்த பாண்டிய அரசர் ஆவார். ஒவ்வொரு பெரிய பாண்டிய அரசரும் அசுவமேத யாகம், ஹரண்ய கர்பா, வாஜபேய யக்னா ஆகிய சடங்குகளை மேற்கொண்டதாக வேள்விக்குடி செப்பேடும் பிற கல்வெட்டுகளும் கூறுகின்றன. அரசர்கள் சைவத்தையும் வைணவத்தையும் சமமாக நடத்தியதைக் கல்வெட்டுக் குறிப்புகளில் காணப்படும் கடவுள் வாழ்த்துப்பகுதிகள் தெரிவிக்கின்றன. சில அரசர்கள் தீவிர சைவச் சமயத்தவராகவும் இருந்துள்ளனர். எனினும் இரு பிரிவைச் சேர்ந்த கோயில்களும் ஆதரிக்கப்பட்டன. நிலக்கொடைகள், வரி விலக்கு, புதுப்பிக்கும் பணி, கூடுதலாகக் கோபுரம் கட்டுவது, அதிக இட வசதி உள்ள மண்டபங்களைக் கட்டுவது போன்ற அறக்கொடைகள் மூலம் கோவில்கள் சிறப்பாக ஆதரிக்கப்பட்டன.

**கோயில்கள்:**

பாண்டியர் பல்வேறு மாதிரிகளில் கோயில்கள் கட்டினார்கள். அவை கல்லறைக்கோயில்கள் (சுந்தரபாண்டிசுவரம்), குடைவரைக் கோயில்கள், கட்டமைப்புக் கோயில்கள் ஆகும். இடைக்காலப் பாண்டியர்களும் பிற்காலப் பாண்டியர்களும் புதிதாகக் கோயில்களைக் கட்டவில்லை. மாறாக, புதிய கோபுரங்கள் எழுப்புவது, பிரகார வீதிகள் அமைப்பது, மண்டபங்கள் கட்டுவது ஆகிய விரிவாக்கப் பணிகளில் ஈடுபட்டனர். தொடக்க காலப் பாண்டியர் கோயில்கள் எளிமையாகவும் சிறியதாகவும் இருந்தன. இக்கோயில்களில் சிவன், விஷ்ணு, கொற்றவை, கணேசன், சுப்பிரமணியர், சூரியன், பிரம்மன் ஆகிய கடவுளர் சிலைகள் சிறப்பாக வடிவக்கப்பட்டிருந்தன. பாண்டியர் காலத்தில் மதுரை மீனாட்சியம்மன் கோயில் கூடுதல் அக்கறையுடன் பராமரிக்கப்பட்டது. கூடுதல் கோபுரங்கள், மண்டபங்கள் என கோயில் பரப்பை விரிவாக்கிக் கொண்டேயிருந்தனர்.

பண்டைய பாண்டியர்களால் உருவாக்கப்பட்ட குடைவரைக் கோயில்கள் பிள்ளையார்பட்டி, திருமயம், குன்றக்குடி, திருச்செந்தூர், கழுகுமலை, கன்னியாகுமரி, சித்தன்னவாசல் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. சித்தன்னவாசல், அரிட்டாபட்டி, திருமலைபுரம், ரெநெடுங்கரை ஆகிய கோயில்களில் ஓவியங்கள் காணப்படுகின்றன. சித்தன்னவாசல் குகைக்கோயிலில் காணப்பட்ட ஒன்பதாம் நூற்றாண்டு கல்வெட்டு அந்தக் குகை இளம் கௌதமர் என்பவரால் உருவாக்கப்பட்டது என்று கூறுகிறது. அதே காலகட்டத்தைச் சேர்ந்த இன்னொரு கல்வெட்டு ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லபன் இக்கோயிலைப் புதுப்பித்ததார் என்று கூறுகிறது. கோயிலின் சுவர்களிலும் கூரைகளிலும் தூண்களிலும் காணப்படும் ஓவியங்கள் சிறந்த கலைப்படைப்புகளாகும். இந்த ஓவியங்கள் நடனமாடும் பெண், அரசன், அரிசி போன்றோரைச் சித்தரிக்கின்றன. ஒரு குளத்தைச் சித்தரிக்கும் ஓவியத்தில் சில நீர்வாழ் உயிரினங்களும் பூக்களும் பறவைகளும் சில பாலூட்டிகளும் இடம் பெற்றுள்ளன.

இந்தியாவின் கடல் சார்ந்த வரலாறு பாண்டியர்களின் வரலாறு இன்றி முழுமை பெறாது. பாண்டியர்களின் காலத்தில் கிழக்குக்கடற்கரை நெடுகிலும் துறைமுக நகரங்கள் இருந்தன. பாண்டியர் தென்கிழக்கு ஆசிய அரச மரபுகளில் திருமண உறவுகளும் செய்து கொண்டார்கள்.

கடல்வழி வணிக நடவடிக்கைகளில் பாண்டியர் ஓர் அழுத்தமான தடத்தை விட்டுச் சென்றுள்ளனர்.

| |
|---|
| சிந்தாமணி, மயிலாப்பூர், திருவெற்றியூர், திருவாடானை, மகாபலிபுரம் ஆகியவை சுறுசுறுப்பான கடல் வணிக மையங்களாக இருந்தன என்பதை கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம். |

## 11TH சிறப்பு தமிழ்
## அலகு – 1
## கவிதையியல்
## கவிதை – ஒரு பார்வை

- கவிதை ஒரு மொழியின் மேன்மையான வெளிப்பாடு, மொழியின் அனைத்துக்கூறுகளையும் கொண்டு உருவாகும் கலை கவிதையைப் போல் வேறேதுமில்லை. அதனால் தான் ஒரு மொழியின் மாண்பும் செறிவும் அழகும் அம்மொழியின் கவிதைகளைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றன. தமிழ்ச் சமூகத்தின் பாரம்பரியம் மிக்கப் பண்பாட்டின் வேர்கள், தமிழ்க் கவிதைகளின் வழியாகவே கிளை விரிக்கின்றன.

- தனது கவிதை இலக்கியத்தால்தான், உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசையில் வைத்து, தமிழ் போற்றப்படுகிறது. உலகின் பிற மொழிகளோடு ஒப்பிடுகையில் தமிழ்க்கவிதைகளின் தொன்மை, மரபு, பிறமொழிச்சார்பின்மை, இடையறாத தொடர்ச்சி ஆகியன தனிச்சிறப்பு வாய்ந்தவை. அதைப்போலவே இயற்கை சார்ந்த மக்கள் வாழ்வியலைக் கொண்ட கவிதைகள், தமிழில் தான் முதலில் எழுதப்பட்டன.

**சங்ககாலக் கவிதைகள்:**

- சங்ககாலக் கவிதைகள் தமிழரின் உயர்ந்த நாகரிகச் செழுமைக்கு அடிப்படையாக அமைந்தவை. இவை அகம், புறம் சார்ந்த வாழ்வியல் நெறிகள், கலைகள், கல்வி, அரசியல், பொருளாதாரம், வணிகம், வேளாண்மை குறித்த பதிவுகளை வெளிப்படுத்துகின்றன.

- அகம்: மாந்தர், அகமனத்தில் துய்க்கின்ற காதல், அன்பு, கருணை முதலான உணர்வுகளை வெளிப்படுத்துவது அகத்திணை.

- புறம்: மாந்தர், புறவாழ்வில் கொண்டாடுகின்ற வீரம், கொடை, புகழ் முதலான பண்புகளை வெளிப்படுத்துவது புறத்திணை.

- அகம், புறம் சார்ந்த சங்ககாலக் கவிதைகள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என நூல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகிய பா வகைமைகளில் அமைந்தவை.

**சிறகிழந்த நாரை:**

- எட்டுத்தொகையில் ஒன்றான குறுந்தொகையில், தலைவி மீதான தலைவனின் அன்பும், சிறகிழந்த நாரையாய்த் தலைவிக்காக அவன் வருந்துவதையும் காட்டும் பரணரின் ஓர் அகத்திணைப்பாடல்.

குணகடல் திரையது பறைதபு நாரை
திண்தேர்ப் பொறையன் தொண்டி முன்றுறை
அயிரை ஆரிரைக் கணவந் தாங்குச்
சேயள் அரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே

குறுந்தொகை 128

- கீழ்க்கடலில் எழுந்த அலைக்கு அருகில் நின்ற, முதுமையால் சிறகிழந்த நாரையொன்று, சேரனது மேல்கடற்யிலமைந்த தொண்டியென்னும் நகரில் உள்ள பெறற்கரிய உணவாகிய அயிரை மீனைப்பெற வருந்தியிருந்தது. அதுபோல, பெறற்கரியவளாகிய தலைவியைப் பெறும்பொருட்டுத் தலைவனின் நெஞ்சமும் வருந்தியிருந்ததாம்.

**நீரும் நிலனும்:**

- எட்டுத்தொகையில் ஒன்றான புறநானூற்றி பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார் அறிவுரை கூறுவதாக அமைந்த ஒரு புறப்பாடல்.

நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்;
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தோடு நீரே;
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு;
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே;

புறம் 18

- உணவு கொடுத்தவரே உயிர் கொடுத்தவர். இந்த உடலானது, உணவினாலானது, உணவு என்பது யாது? நிலத்தோடு நீர் சேர்வது தான். அப்படி இணைத்து வேளாண்மைக்கு உதவுக. அவ்வாறு உதவியவரே உலகத்தில் உயிரையும் உடலையும் நிலைநிறுத்தி வாழ்வித்தவராவர் என்று நீரின்றி அமையாத உடல் குறித்துக் கூறி, நீர்வளம் பெருக்க, பாண்டிய மன்னை அறிவுறுத்துகிறார்.

**அறநிலைக் கவிதைகள்:**

- சங்கம் மருவிய காலத்தில் எழுந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் வாழ்வியல் அறங்களைக் கற்பிப்பவை. இவை வெண்பா என்னும் யாப்பு வகைமையில் அமைந்தவை. உலகளாவிய அறிஞர்களால் ஒப்பற்ற நூலென ஏற்றுக்கொள்ளப்பட்ட திருக்குறள், கீழ்க்கணக்கு நூல்களுள் குறிப்பிடத்தக்கது.

**காப்பியக் கவிதைகள்:**

- மன்னர்களைப் பாடிய காலம் மாறிக் குடிமக்களைக் கவிதையின் பாடுபொருளாய்க் கொண்டெழுந்தவை தமிழ்க்காப்பியங்கள். காப்பியக்கவிதைகள் காதல், வீரம், அறம் என அனைத்தையும் பாடிச் செல்கின்றன. உரையொடு கலந்த கவிதைகளை அறிமுகம் செய்தவை இவை. பிறப்பின் வேற்றுமையொழிப்பு, பசியின்றிவாழ்தல், வாழ்வின் நிலையாமை எனக் காப்பியக்கவிதைகளின் தளம் பரந்துபட்டது. மாந்தருக்கு அறமே நிலையானது என்பதைக் குறிக்கும் மணிமேகலைகாப்பியத்தில் அமைந்த கவிதை இங்கு நோக்கத்தக்கது.

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா
புத்தேன் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை ஆவது

மணிமேகலை, சிறைசெய்காதை 135 – 138

**பக்திமைக் கவிதைகள்:**

- காப்பியக் கவிதைகளுக்குப் பின் இயற்றப்பட்ட தமிழ்க்கவிதைகளின் பாடுபொருள், கடவுளை நோக்கியதாக அமைந்திருந்தது. இறையுணர்வோடு அன்பையும் அறத்தையும் இக்காலக் கவிதைகள் வெளிப்படுத்தின. இறைவன் மீது காதல் கொண்டு எழுதப்பட்ட இக்கவிதைகள் இன்றும் மாறாத்தன்மையோடு பக்திமை மணம் வீசிக்கொண்டிருக்கின்றன.

**சிற்றிலக்கியக் கவிதைகள்:**

- பக்திவழியே பயணித்துக்கொண்டிருந்த தமிழ்க்கவிதைகள் பின்னர், சிற்றிலக்கியங்கள் என்னும் விமர்சனப்பாங்கு கொண்ட புதியவடிவில் மக்களிடம் பேசத்தொடங்கின. சிற்றிலக்கியத்தின் வடிவங்களான, கோவை,உலா, அந்தாதி போன்றவை கடவுள், அரசன், சிற்றரசர்கள், வள்ளல்களைப் புகழ்ந்தன. எனினும் பள்ளு, குறவஞ்சி போன்றவை எளிய மக்களின் வாழ்வியலையும் எடுத்தியம்பின.

**தனிப்பாடற் கவிதைகள்:**

- புலவர் பெருமக்கள் தம் கவிப்புலமையைக் காட்ட நல்லதொரு களமாகத் தனிப்பாடல்கள் பயன்பட்டன. சிலேடை, விடுகதை, சொற்புதிர் போன்ற சிந்தைக்கு விருந்தாகும் வகையில் புலவர் பெருமக்கள் பாடிச்சென்ற பாடல்கள் தனிப்பாடற் திரட்டுகளாக நமக்குக் கிடைக்கின்றன.

**தமிழ்க் கவிதையின் மரபு வடிவம்:**

- திமிழ் யாப்பிலக்கணத்தின்படி எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய கூறுகளுடன் அமைந்த பாவினங்களை மரபுப்பாடல் என்கிறோம். சங்க காலம் தொடங்கி இன்றைய நவீனகாலம் வரையிலும் மரபுக்கவிதைகள் தொடர்ந்து எழுதப்பட்டு வருகின்றன. வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா முதலிய மரபார்ந்தபா வடிவங்களிலும் கண்ணி, சிந்து, தெம்மாங்கு, கும்மி போன்ற வடிவங்களிலும் மரபுக் கவிதைகள் அமைகின்றன. இன்றளவும் தமிழில் மரபு மாறாத கவிதைகள் எழுதப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**புதிய வடிவ முன்னெடுப்புகள்:**

- காலத்திற்குக் காலம் செய்யுள் வடிவில் மாற்றங்கள் நேரலாம். தமிழ்மொழி வளர்ச்சிக்கு இத்தகைய மாற்றங்கள் பயன்படுமானால் அவற்றை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை என்று கருதியே தொல்காப்பிர்.

    விருந்தே தானும் புதுவது புனைந்த
    யாப்பின் மேற்றே (தொல் செய் 231)

- என்று ‘விருந்து’ என்பதைப் ‘புதுமை’ என்னும் பொருளில் கூறியுள்ளார். தற்காலத்தின் சிறுகதை, நாவல், புதுக்கவிதை முதலியவற்றை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

- 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உலகளவில் தோன்றிய இலக்கிய மறுமலர்ச்சியின் காரணமாகக் கவிதையின் வடிவத்திலும் பாடுபொருளிலும் மாற்றம் ஏற்பட்டது. தனிமனித வாழ்வியல், சமூக வாழ்வியல் போன்றவை நவீனக்கவிதைகளின் பாடுபொருள்களாயின. புதுக்கவிதை, ஹைக்கூ, லிமெரிக், லிமெரைக்கூ, சென்ரியூ, குக்கூ என நவீன வடிவங்களிலும் தமிழ்க்கவிதைகள் பயணிக்கத் தொடங்கின.

**புதுக்கவிதை:**

- தொன்று தொட்டு வரும் மரபு வடிவத்தில், இன்றும் தமிழ்க் கவிதைகள் எழுதப்பட்டு வருகின்றன. எனினும் யாப்பிலக்கண வரையறைக்கு உட்படாமல் சுதந்திரமான வெளிப்பாட்டோடும் கட்டற்ற தன்மையோடும் இன்றைய புதுக்கவிதை எழுதப்படுகிறது. இ∴து உவமை, உருவகம், படிமம், குறியீடு, அங்கதம், சிலேடை, முரண், இருண்மை முதலான பல்வேறு உத்திகளைத் தன்னகத்தே கொண்டு, கவிஞனின் விரிசிந்தனைக்கேற்பப் புதுப்புது வடிவமெடுக்கிறது. யாப்பிலக்கணம் அறிந்தோருக்கு மட்டுமே என்றிருந்த கவிதையின் தன்மையை மாற்றி, பொதுவாசகர்களும் கவிதையைப் படிக்கவும் படைக்கவும் புதுக்கவிதை வாய்ப்பளிக்கிறது.

    சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது
    சொற்புதிது சோதிமிக்க நவகவிதை.

என்று பாரதியார் பாடுவதைப் புதுக்கவிதைக்குரிய விளக்கமாகக் கொள்ளலாம். புதுக்கவிதையில் கவிஞன் எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றித் தன் மனத்தில் தோன்றியதை, அதே உணர்வுடன் வெளிப்படுத்த முடிகிறது. இதில் சமூக அவலங்கள், சமகால நிகழ்வுகள், எதிர்பார்ப்புகள் இலக்குகள் என அனைத்தும் பாடுபொருள்களாகின்றன.

**பாரதி தந்த புதுமை:**

- பாரதியார்தாம் முதன் முதலில் தமிழ்க் கவிதைகளில் புதிய முயற்சிகளை மேற்கொண்டார். அவரின் கவிதை வடிவம் தமிழின் மரபான செய்யுள் வடிவமும் நாட்டார் பாடல்களின் ஓசை வடிவமும் கலந்தது. என்றாலும் உலகளவில் தோன்றிய நவீன கவிதைப் போக்கினை உள்வாங்கிக் கொண்ட அவர் உள்ளடக்கம், வடிவம் இரண்டிலும் மரபுக்கும் புதுக்கவிதைக்கும் மாலமாகத் திகழ்ந்தார். தம் காலத்தில் மட்டுமல்லாது இன்றும் அவர் தமிழ்க்கவிதையின் வலிமையான குரலாக ஒலிக்கின்றார். இவர் 'காட்சி' என்ற தலைப்பில் எழுதிய கவிதை, தமிழில் புதுமையான வடிவத்தில் அமைந்த முதல் வசன கவிதையாகும்.

**காட்சி**

தீ இனிது, நீர் இனிது, நிலம் இனிது,
ஞாயிறு நன்று, திங்களும் நன்று.
வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன,
மழை இனிது, மின்னல் இனிது, இடி இனிது.
கடல் இனிது, மலை இனிது, காடு நன்று.

இவ்வாறு பாரதியின் முயற்சியால் தமிழில் கட்டற்ற கவிதை வடிவம் பிறந்தது.

**பாரதியின் காலம்:**

- பாரதி வாழ்ந்த காலம் இந்திய வரலாற்றில் திருப்பங்கள் நிறைந்தது. மக்கள், அந்நியர் ஆட்சிக்கு எதிராக விடுதலை வேட்கையோடு போராடிய காலம், பாரதி அச்சூழலில் மொழியை மக்களுக்கான குரலாகப் பயன்படுத்தத் துணிந்தவர். இதனால், பாரதியின் கவிதைகள் விடுதலைக்கான குரலாக ஓங்கி ஒலித்தன. இவர் தம் கவிதைகளில் தேசவிடுதலை, பெண் விடுதலை, சமுதாயவிடுதலை இம்மூன்றும் பாடுபொருள்களாயின. அவர் கவிதையைச் சமூகமாற்றத்திற்கான கருவியாகப் பயன்படுத்தினார். நாட்டுப்புறச் சிந்து இசையின் அடிப்படையில் அமைந்த கவிதைகளைப் பாடியதனால் 'சிந்துக்குத் தந்தை' என அழைக்கப்பட்டார். மக்களோடு நேரடியாகப் பேசும் முறையில் கவிதைகளைப் படைத்தார். இவர் ஷெல்லியின் கவிதைகளால் கவரப்பட்டு, தமது பெயரை 'ஷெல்லிதாசன்'' என மாற்றிக் கொண்டார்.

**பாரதிதாசன் காலம்:**

- 'பாரதியின் கவிதாமண்டலத்தைச் சேர்ந்தவர்' என்று பாரதியாரால் முன்மொழியப்பட்டவர் பாரதிதாசன். இவர், சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, தமிழ் வளர்ச்சி, மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தல் முதலான கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர். எல்லாரும் எல்லாரும் பெறவேண்டும். புவியை நடத்து; பொதுவில் நடத்து போன்ற பொதுவுடைமைக் கருத்துக்களையும் மக்களாட்சித் தத்துவங்களையும் தமது பாடல்களில் வலியுறுத்தியவர். சந்த அமைப்புகளிலும் இசையிலும் பாரதியைப் போலவே நல்ல தேர்ச்சி பெற்றவர். மக்கள் இலக்கிய வடிவங்களான கும்மி, தெம்மாங்கு, ஏற்றப்பாட்டு போன்ற வடிவங்களிலும் கவிதை பாடியவர். பழைய யாப்பு வடிவில் ஆசிரியப்பாவையும் ஆசிரியவிருத்தங்களையும் பாடினார். சமூகத்தில் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது என்பதை,

ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
    உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம்மாறி
    ஒப்பப்பர் ஆகிவிடுவார் உணரப்பாநீ
என்ற பாடலின் மூலம் எடுத்துரைக்கின்றார்.

- பாரதிதாசன் தன்மொழி, தன்னாடு, தன்மக்கள் எனப் பாடியதால் இரஷ்யக் கவிஞரான 'இரசூல் கம்சதோவ்' என்பவரோடு ஒப்பிடப்படுகிறார். பாரதிதாசனைப் பின்பற்றி எழுதிய வாணிதாசன், முடியரசன், சுரதா போன்றோர் பாதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

**மணிக்கொடி காலம்:**

- பாரதியைத் தொடர்ந்து தமிழில் பல்வேறு கவிஞர்கள் புதுக்கவிதை எழுத முற்பட்டனர். புதுக்கவிதை முன்னோடிகளான ந.பிச்சமூர்த்தி, கு.ப. ராசகோபாலன், க.நா. சுப்பிரமணியன், புதுமைப்பித்தன் போன்றோர் மணிக்கொடி இதழில் புதுக்கவிதைகளை எழுதினர். ந. பிச்சமூர்த்தி ‘புதுக்கவிதையின் தந்தை’ என அறியப்படுகிறார். இக்கால கட்டத்தில் கிராம ஊழியன், கலாமோகினி ஆகிய இதழ்களும் வசன கவிதைகளை வெளியிட்டன.

**எழுத்து காலம்:**

- புதுக்கவிதை மறுமலர்ச்சியும் வலிமையும் பெற்றதில் எழுத்து இதழின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். சி.சு. செல்லப்பா தொடங்கிய ‘எழுத்து’’ இதழ் புதுக்கவிதையின் சோதனை முயற்சிகளை வெளியிட்டது. ‘பெட்டிக்கடை நாரணன்’,‘விஞ்ஞானி’’ போன்ற கவிதைகளை ந. பிச்சமூர்த்தி எழுதினார்.

- எழுத்து இதழ் புதிய கவிஞர்களின் கவிதைகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது. புதுக்கவிதை குறித்த பல திறனாய்வுக் கட்டுரைகளும் அதில் வெளியாகின. மயன், சிட்டி, வல்லிக்கண்ணன், வேணுகோபாலன், டி.கே. துரைஸ்வாமி (நகுலன்) தருமுசிவராமு (பிரமிள்), சி. மணி, சுந்தரராமசாமி (பசுவய்யா), எஸ். வைத்தீஸ்வரன் போன்றோர் எழுத்து இதழில் எழுதியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

- அக்காலத்தில் தமிழில் புதுக்கவிதைத் தொகுப்பாகப் ‘புதுக்குரல்கள்’ என்னும் நூல் வெளிவந்தது. இக்கவிதைத் தொகுப்பு உருவத்திலும் உள்ளடக்கத்திலும் பாரதியைப் பின்பற்றியது. 24 கவிஞர்களால் எழுதப்பட்ட 63 கவிதைகளைக் கொண்டது.

**கசடதபற காலம்:**

- 1970 இல் வெளிவந்த ‘கசடதபற’ என்னும் இதழ் ஞானக்கூத்தன், கலாப்பிரியா, கல்யாண்ஜி போன்ற புதிய கவிஞர்களை அறிமுகப்படுத்தியது. இக்காலகட்டத்தின் கவிதைகள் பெரும்பாலும் நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்த நகர வாசகர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தின.

**வானம்பாடி காலம்:**

- 1971 இல் கோவையிலிருந்து ‘வானம்பாடி’ இதழ் வெளிவந்தது. இதில் எழுதிய கவிஞர்கள் ‘மானுடம் பாடவந்த வானம்பாடிகள்’ என்று தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். அவர்கள் சமூக நலனில் அக்கறை கொண்டு தம்கவிதைகளை உருவாக்கினர். சிற்பி, மீரா, நா. காமராசன், மு. மேத்தா, புவியரசு, இன்குலாப், தமிழன்பன், கங்கைகொண்டான், அக்னிபுத்திரன், சக்திக்கனல், சிதம்பரநாதன் போன்றோர் இக்காலத்தில் குறிப்பிடத்தக்கக் கவிஞர்களாவர்.

- இதேகாலகட்டத்தில், அப்துல்ரகுமான், அபி போன்ற கவிஞர்கள் இயக்க அடையாளங்கள் இல்லாமல் தனித்துவத்தோடு கவிதைகள் எழுதியமை குறிப்பிடத்தக்கதாகும்.

## புதுக்கவிதையின் உத்திகள்:

**ஊவமை**

- தெரிந்த பொருளைக் கொண்டு தெரியாத பொருளை உணர்த்துவது உவமை ஆகும். பொருள் உணர்த்தும் முறைகளில் உவமை முதலிடம் பெறுகிறது.

ஒரு உலோபி
பஞ்சத்தில் காக்கும்
பணப்பையைப் போல்
கோடை மேகம்

\- வைரமுத்து

-

- கோடையின் வறட்சியில் வானமெங்கும் கருக்காத மேகங்கள் இருந்து பயனில்லை. கருணை இல்லாத கருமியின் பணப்பை போல என்று அழகாய்ப் பேசுகிறது இவ்வுவமை.

**உருவகம்:**

- உவமையும் பொருளும் வேறுவேறல்ல, ஒன்றே எனக்கருதுமாறு செறிவுற அமைவது உருவகமாகும்.

**வாழ்க்கையும் காவிரி**
**அதிலெங்கும் கிளிக்கூண்டு;**
**வார்த்தையே மணல்**
**ஓசையே ஜலம்**
**என் தீரா வேட்கையே**
**------**
**குவிக்கும் விரல்கள்**
**பாட்டென்னும் கூண்டொன்று அமைத்தேன்**
**அழகென்னும் கிளியை அழைத்தேன்**
**ஆறெங்கும் கிளிக்கூண்டு கட்டுவேன்**
**அழகினை அழைப்பேன் நான் எந்நாளும்**

- ந. பிச்சமூர்த்தி

**படிமம்:**

- உவமை, உருவகம் என்பன மேன்மேலும் இறுகிய நிலையில்தான் படிமம் தோன்றுகிறது. முற்றுருவகப் பாங்கில் அமைந்து, தெளிவானதோர் அகக் காட்சியை வழங்கும் ஆற்றலுடையதே படிமம் ஆகின்றது.

**விடிவு**
**பூமித் தோலில்**
**அழகுத் தேமல்**
**கதிர்கள் கமழ்ந்து**
**விரியும், பூ**
**இருளின் சிறகைத்**
**தின்னும் கிருமி**
**வெளிச்சச் சிறகில்**
**மிதக்கும் குருவி**

- பிரமிள்

குறியீடு:

- ஒரு குறிப்பிட்ட கருத்தைச் சொல்வதற்குப் பதிலாக அக்கருத்தைத் தன்னகத்தே மறைமுகமாகக் கொண்ட சொற்களையோ, காட்சிகளையோ குறியீடாகப் பயன்படுத்தி எழுதப்படும் கவிதை.

**சமரச வேசமிட்ட குரங்கினிடம்**
**அப்பத்தைப் பறிகொடுத்த**
**பூனைகள் நாம்**

- அப்துல்ரகுமான்

**அங்கதம்:**

- அங்கதம் என்பது நகைப்புடன் கூடிய எள்ளலாகும். இது தீங்கையும் அறிவின்மையையும் கண்டனம் செய்வதாகவும், சமகால நிகழ்வுகளில் எதிரிடைப் பதிவுகளாகவும் அமையும். குற்றங்களைக் கடிந்துரைக்காமல் நகைச் சுவையுடன் சுட்டிக் திருத்தவல்ல திறனுடையது அங்கதம்

**திண்ணை இருட்டில்**
**எவரோ கேட்டார்**
**தலையை**

**எங்கே வைப்பதாம்**
**என்று**
**எவனோ ஒருவன்**
**சொன்னான்**
**களவு போகாமல்**
**கையருகே வை!**

- ஞானக்கூத்தன்

**முரண்:**

- ஒன்றுக்கு ஒன்று எதிரானவற்றைக் கொண்டு அமைப்பது முரண் என்னும் உத்தியாகும். மரபுக் கவிதைகளில் இது முரண்தொடை எனக் கூறப்படும். மாறுபட்ட இரு பொருள்களை அடுத்தடுத்து இணைத்துப் பார்ப்பதில் சுவையும் கூடும்; நினைவிலும் நிற்கும்.

என் கவிதை
கை குலுக்கும்
காலில் விழாது
உடுத்திக் கொள்ளும்
போர்த்திக்கொள்ளாது

- மு. மேத்தா

**சிலேடை**

- சிலேடை என்பது ஒரு சொல் இருபொருள்பட வருவதாகும். பொதுவாகப் புதுக்கவிதை சொல்லலங்காரத்தை விரும்புவதில்லை. எனனே. சில கவிதைகளில் தான் சிலேடை உத்தியைக் காணமுடிகின்றது.

என்னை
எவரெஸ்டாகப் பார்க்கும்
எந்த ஊரின் பார்வையில்
என் வீழ்ச்சி
மிகப் பெரிய வீழ்ச்சியே
எனினும்
இது இயல்பானது
தடுக்க முடியாதது
…. என் வீழ்ச்சி

**நீர்வீழ்ச்சியே**

- என்னும் மீராவின் கவிதையில் ‘வீழ்ச்சி’ என்னும்சொல் ‘வீழ்தல்’ என்னும் பொருளிலும்,‘நீர்வீழ்ச்சி’ என்பது ‘அருவி’ என்னும் பொருளிலும் சிலேடைகளாக வந்துள்ளன.

- சொல்லுக்கும் அ∴து உணர்த்தும் பொருளுக்கும் இடையிலான தொடர்பு தெளிவற்றிருக்கும். படிப்பவர்தம் அறிவுக்கும் உணர்வுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப அது வெவ்வேறு பொருளைத் தரும்.

நான் ஒரு உடும்பு
ஒரு கொக்கு
ஒரு ஒன்றுமேயில்லை

- நகுலன்

இவ்வாறு புதுக்கவிதைகள் பல்வேறு உத்திகளைக் கொண்டு அமைகின்றன.

**புதுக்கவிதையின் உள்ளடக்கம்**
**இயற்கை மரபு**

- தமிழ்க்கவிதை சங்ககாலம் முதலே இயற்கையோடு இணைந்த வாழ்வியலுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. இயற்கையின் அழகை உருவகப்படுத்தும் தமிழ்க்கவிதை மரபு புதுக்கவிதையிலும் தொடர்கிறது.

கவிஞர் சிற்பி, தம் கிராமத்து நதியினைப் பற்றிப் பாடும்போது,

இது

நான் தவழந்த கோரைப்பாய்
முகம் பார்த்த கண்ணாடி
என் காதலின் வீணை
நினைவுகளைப் பொதிந்து வைத்த
வெள்ளித்தாள்.

- என்று அழகுபட எழுதுகிறார். கோரைப் பாயாகவும் கண்ணாடியாகவும் வீணையாகவும் வெள்ளித்தாளாகவும் நதியை அவர் உருவகப்படுத்தியுள்ளார்.

**மனிதநேயம்:**

- தமிழ்க்கவிதைகள் மனித நேயத்திற்கு முக்கியத்துவம் தருபவை.

ஆட்டுக்குட்டியை
மடியில் போட்டு
ஈத்திக் கொண்டிருக்கும்
அம்மாவும்
பசுவிற்கு
உண்ணி பிடுங்கி நிற்கும்
அப்பாவும்
படித்ததில்லை….
உயிர்களிடத்தில் அன்பு வேணும்

- இளம்பிறை

**அழகியல்:**

- கவிதையின் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்வதற்கும் சுவைப்பதற்கும் அழகியல் உணர்வு தேவை. ஒரு மொழியின் வெளிப்பாட்டுத் தரத்தினை மதிப்பிட அதன் அழகியல் பதிவுகளே அடிப்படையாகும்.

தினசரி வழக்கமாகிவிட்டது
தபால் பெட்டியைத்
திறந்து பார்த்துவிட்டு
வீட்டுக்குள் நுழைவது.
இரண்டு நாட்களாகவே
எந்தக் கடிதமும் இல்லாத
ஏமாற்றம்
இன்று எப்படியோ
என்று பார்க்கையில்
அசைவற்று இருந்தது
ஒரு சின்னஞ் சிறு
இறகு மட்டும்
எந்தப் பறவை
எழுதியிருக்கும்
இந்தக் கடிதத்தை

**நம்பிக்கைத் தளிர்கள்:**

- வெற்றிக்கு அடித்தளமாக அமைவது தன்னிம்பிக்கையே. ஒவ்வோர் இலையுதிர்கால வீழ்ச்சிக்குப் பிறகும் புதியதளிர்களோடு வரும் வசந்தகாலம் போல ஒவ்வொரு தோல்விக்குப் பிறகும் வெற்றியின் தளிர்கள் தழைக்கும் என்ற நம்பிக்கையைப் பேசுகிறது இக்கவிதை.

புதுத் தளிர்களால்

கொண்டாடக் காத்திருக்கிறது தரு
ஒரு பாடலுடன் வரவிருக்கிறது குயில்
உடன் தளர்ந்து விழும் சருகுகளைத் தொடர்ந்து
ஒரு பழுப்பாடை தரித்து
என் பயணமும்
இலையுதிர் காலம் எனினும்
சருகாவதில்லை வேர்கள்

- இன்குலாப்

**பெண்ணுரிமை:**

- பெண்களுக்கு வழங்கும் மதிப்பில்தான் ஒரு நாகரிக சமுதாயத்திற்கான அளவுகோல் உள்ளது. தமிழ்க்கவிதைகள் பெண்விடுதலைக்குத் தொடர்ந்து குரல் கொடுத்துவருகின்றன. தமிழ்க் கவிதைப் போக்கில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளுள் ஒன்று பெண்களின் பங்களிப்பு. பெண்கள் சந்திக்கும் பல்வேறு அனுபவங்கள் கவிதைகளாகின்றன.

நாளும் கிழமையும்
நலிந்தோர்க்கு இல்லை
ஞாயிற்றுக்கிழமையும்
பெண்களுக்கில்லை

- கந்தர்வன்

ஏடுகளில்
முன்பக்கத்தில
அட்டையில்!
வீடுகளில்
பின்பக்கத்தில்
அடுப்பங்கரையில்!

- காசி ஆனந்தன்

**யானைக் கதை**

முன்பு ஒருநாள்
தன் அம்மா சொன்ன
கதைக்குள் இருந்த யானை ஒன்றை
என் அம்மா எனக்குப் பரிசாகக்
கொடுத்தாள்
வெகுகாலம் கழித்து வெயில் தாளாமல்
யானையுடன் கடலுக்குச் சென்றேன்
மலைமலையாய் அலையெழுப்பி
நீருக்குள் புதைத்துப் புரட்டி
கிண்டிக் கிளறி வெளியே என்னைத்
தூக்கி எறிந்தது கடல்
கரைந்து மீந்த பாதித் தும்பிக்கையுடன்
கடலும் வானமும் ஒன்றாகக் கலந்து
பிளிறியது
சோகத்துடன் திரும்பினேன்
ஊரே கூடி என்னை வேடிக்கைப்
பொருளெனப் பார்க்க
குழம்பிப் பின் திரும்பினேன்
தெருவெல்லாம்
அலையலையாய் என்பின்னே
தொடர்ந்துவர
கடலில் கரைந்த ஒற்றை யானைக்கு
ஓராயிரம் தும்பிக்கைகளென
என் மகள் ஊருக்கெல்லாம்
ஒரு கதை சொல்லிச் செல்கிறாள்.

- மாலதி மைத்ரி

**விளிம்பு நிலை மாந்தர்:**

- எண்பதுகளின் பிற்பகுதியில் தமிழில் விளிம்புநிலை மாந்தருக்கான கவிதைகள் எழுதப்பட்டன. இக்கவிதைகள் விடுதலையை, சுயமரியாதையை மீட்டெடுப்பதற்கான குரலாக வெளிப்படுகின்றன.

தேசமெங்கும் இரட்டை வாழிடங்களில் உள்ள விளிம்பு நிலை மாந்தரின் வலிகளைப் பதிவு செய்கிறது இக்கவிதை

எட்டாத தொலைவில் நின்று
பனையோலைகளில் தேநீர் அருந்துகையில்
உதட்டிலிருந்து வழியும் சாதியின் வலி
காலணிகளற்ற பாதங்களை நனைக்க
என் கிராமத்தின் ஓவியம்
தன்னைச் சட்டமிட்டுக் கொள்கிறது
ஒருபோதும் உறங்காத ரெட்டை வாழிடத்தில்

- சுகிர்தராணி

**திருநங்கையர்:**

- திருநங்கையரின் கோணத்திலிருந்து பேசும் இக்கவிதைகள் அழகான படிமங்களோடு வெளிப்படுகின்றன. அவர்களை ஏற்றுக்கொண்டு,அரவணைத்துச் செல்லவேண்டுமென்கிற உணர்வை நமக்குள் ஏற்படுத்துகின்றன.

**சந்திப்பிழை**

காலமழைத் தூறலிலே
களையாய்ப் பிறப்பெடுத்தோம்
தாய்ப்பாலின் சரித்திரத்தில்
சதிராடும் புதிரானோம்
விதை வளர்த்த முள்ளானோம்
விளக்கின் இருளானோம்
சந்திப்பிழை போன்ற
சந்ததிப்பிழை நாங்கள்
காலத்தின் பேரேட்டைக்
கடவுள் திருத்தட்டும்

- நா. காமராசன்

**உனக்குத் தெரிவதில்லை**

சில சமயங்களில் உனக்குத் தெரிவதில்லை
சிறிய எறும்புகளை மிதித்தபடி நீ நடந்து போவதை
சில சமயங்களில் நீ உணர்வதில்லை

பசும்புல்லை நசுக்கியபடி கடந்து போவதை
தெரிந்தும் உணர்ந்தும்
கடந்து போகிறாய்
என் அந்தரங்கத்தை மிதித்தபடி…..
யார் எவர் என்று தெரியாமல்
தொடர்ந்து மிதிபட்டே வருகிறோம்
நானும் இருண்ட என் எதிர்காலமும்!!

- லிவிங் ஸ்மைல் வித்யா

**புதிய வடிவங்கள்:**

- உலகளாவிய கவிதை வடிவங்களைப் பின்பற்றித் தமிழ்ச்சூழலுக்கேற்ற உள்ளடக்கங்களுடன் ஹைக்கூ, லிமெரிக், லிமெரைக்கூ, சென்ரியூ ஆகிய வடிவங்களில் கவிதைகள் எழுதப்படுகின்றன.

**துளிப்பா – ஹைக்கூ**

- 16 ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் தோன்றிய பழைமையான 'ரென்கா' பாடல் மரபிலிருந்து 'ஹைக்கூ' கவிதை உருவானது. இக்கவிதை வடிவத்தினைத் தமிழுக்கு அறிமுகம் செய்தவர் பாரதியார். ஹைக்கூ கவிதை மூன்று வரிகளால் ஆனது. முதல் இரண்டு வரிகளில் கூறப்படும் கருத்தை மூன்றாவது வரி விடுவிக்கும். மிக நுணுக்கமாக ஒரு காட்சி அல்லது ஓர் அனுபவப் பதிவைக் கொண்டிருக்கும் ஹைக்கூ, கடைசி வரியில் படிப்பவரின் மனத்தில் வெளிச்சமான ஓர் உணர்வை ஏற்படுத்திவிடும்.

தந்தை தந்த
தாய்ப்பால்
முப்பால்

அகதி முகாம்
மழையில் வருகிறது
மண்வாசனை

பள்ளிக்குப் போகாத சிறுமி
செல்லமாய்க் குட்டும்
ஆலங்கட்டி மழை

- அறிவுமதி

அடிவழ அடிவிழ
அதிரும் பறை
தலைமுறைக் கோபம்

- மித்ரா

குட்டிமீன்
கடித்துச் சென்றது
தூண்டில்காரன் காலை

கோடை மரம்
கொஞ்சம் இலை
நிறைய வானம்

- வைகறை

ஆயிரம் முட்கள் இருந்தும்
ஒரு தூண்டில் முள்ளிடம்
தோற்றுவிடுகிறது மீன்

மிதித்து விடாதே
அழகாயிருக்கிறது
குழந்தையின் நிழல்

நிழலில் கொஞ்சம் இளைப்பாறலாம்
விழித்ததும் வெட்ட வேண்டும்
இதே மரத்தை
- பனிமலர் என்னும் கவிதைத் தொகுப்பிலிருந்து

**நகைப்பா – சென்ரியூ**

- சென்ரியூ கவிதை என்பது ஹைக்கூ கவிதையின் பரிணாமமாகும். ஹைக்கூவின் கட்டுப்பாடுகளை உதறிவிட்டு, அது சுதந்திரமாக இயங்குகிறது. ஹைக்கூவின் தத்துவமும்

கருத்தாழமும் அதில் குறைவு. அன்றாட வாழ்வியல் நிகழ்வுகளில் குறும்புத்தனமும் நகைச்சுவையும் கலந்து சென்ரியூ எழுதப்படுகிறது.

அடடே!
இந்தப்பழம் இனிக்கும்
ஏணியுடன் அதே நரி

- தமிழன்பன்

மதில்மேல் பூனை
இரண்டு பக்கமும்
நாய்கள்

- அமுதபாரதி

**இயைபுக் குறும்பா – லிமெரிக்**

- லிமெரிக் கவிதை ஐந்து அடிகளைக் கொண்டிருக்கும். முதல், இரண்டாம் மற்றும் கடைசி அடிகளில் உள்ள கடைசிச்சொற்கள் தம்முள் ஒலி ஒற்றுமை கொண்டு, மழலையர் பாடல்கள் போல் இருக்கும். இவை நகைச்சுவை, எள்ளல் ஆகிய கூறுகளைக் கொண்டமைபவை. ஈழத்துக் கவிஞர் மகாகவியின் லிமெரிக் கவிதையொன்று…

முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்
முன்னாலே வந்து நின்றான் காலன்
சத்தமின்றி, வந்தவனின்
கைத் தலத்திற் பத்து முத்தைப்
பொத்தி வைத்தான் போனான் முச்சூலன்

இக்கவிதையில் இன்றைய சமுதாயத்தில் புரையோடிக்கிடக்கும் ஊழல், நையாண்டி செய்யப்படுகிறது.

**இயைபுத்துளிப்பா – லிமெரைக்கூ**

- ஹைக்கூ, கவிதையின் மூவடி எல்லையையும், லிமெரிக் கவிதையின் இயைபையும் கொண்டது லிமெரைக்கூ, இது வாழ்வியலை நகைச்சுவையோடு
வெளிப்படுத்துவது, தமிழில் முதலில் லிமெரைக்கூ எழுதியவர் ஈரோடு தமிழன்பன். அவரது லிமெரைக்கூ கவிதைகளுள் சில ….

வானம் கூட்டுள் வருமா?
பறக்க மறந்து ஒடுங்கி இருந்தால்
சிறகு பெருமை தருமா?

குழந்தை வளர்ந்த தொட்டில்
கிழிந்து கந்தல் ஆன பின்னும்

பாடும் தாய்மை மெட்டில்

**மீராவின் குறும்பாக்கள்**

- ஈழத்துக் கவிஞர் மகாகவி எழுதிய லிமெரிக் கவிதைகளினால் பெரிதும் கவரப்பட்ட கவிஞர் மீரா, அதன் தாக்கத்தில் குறும்பாக்களை எழுதினார். லிமெரிக்கின் ஓசை இயைபுகளை மாதிரியாகக் கொண்டு எழுதப்பட்ட அக்கவிதைகள் ‘குக்கூ’ எனும் தலைப்பில் தொகுப்பாக வெளிவந்துள்ளன.

ஆயிரம் ஈக்கள்
மொய்க்கும் ஆசையில்
வானத் தட்டில்
இராத்திரிக் கிழவி
சுட்டு வைத்த

ஒற்றைத் தோசையில்

## மொழிபெயர்ப்புக் கவிதை

- மொழிபெயர்ப்பின் வாயிலாக நம்மை வந்தடையும் கவிதைகளை வாசிக்கும் போது, நமக்குக் கிடைக்கும் அனுபவங்கள், காட்சிப் பதிவுகள், கருத்தாக்கங்கள், கேள்விகள், அதிர்வுகள் ஆகியன புதிய தேடல்களைத் தரக்கூடியவை. அவ்வகையில் அமைந்த ஒரு மராத்தியக் கவிதையின் தமிழ்மொழி பெயர்ப்பு ….

**என் பசி**:

ஒத்துக்கொள்கிறேன்
நான் உன் அடிமை என்பதை,
உணர்ந்து கொண்டேன்
இழந்துபோன
என் உரிமைகளை.

நானே வலிய வந்து
ஏற்றுக்கொண்டு விட்டேன்
என் சுதந்திரம்
பறிக்கப்பட்டதை

என்னைக் கட்டிப்போட்டிருக்கும்
சங்கிலியின் மறுமுனை
உன் வசம்,
நீ ஆட்டுகிறாய்

என்னை ஆட்டுவிக்கிறாய்
காட்சிப்படுத்துகிறாய்
என்னைக்
காட்சிப் பொருளாக்கும்
கண்காட்சிகளை
என் சம்மதத்துடனேயே
அரங்கேற்றுகிறாய்

என்னை விடுவிக்க
என் மீது கொண்ட
அபரிதமான உன் காதலால்கூட
என் கட்டுகளை அவிழ்க்கும்
நாட்களைப் பற்றிப் பேசாதே.

கெட்டுப்போன
எச்சில் பருக்கையை
என் தட்டில் பரிமாற
காத்திருக்கும்
ராட்சதக் கைகள்
என்ன செய்யட்டும்
இருந்துவிட்டுப் போகிறேன்
உனக்கு மட்டுமேயான
அடிமையாக

களைத்துப் போய்விட்டேன்.
கண்டவர்கள்
கால்களை எல்லாம்
நக்கி நக்கி

வறண்டு போய்விட்டது
என் நாக்குகள்,

அதில் பிறக்கும்
என் வார்த்தைகள்
வலிமை குன்றிவிட்டன
எழுந்து நிற்க முடியாமல்
சரிந்து விழுகின்றன.
பற்களுடன் உரசியபின்னும்
என் நாக்குகளுக்குக்
கிடைக்கவில்லை
வார்த்தைகளின்
ஒலிச்சுவடு.

என் உதடுகளைப்
பற்றிக்கொள்ள துடிக்கும்
வார்த்தைகள்
எல்லா இடங்களிலும்
பலகீனமாய் எதிரொலிக்கின்றன.

எதுவும் மிச்சமில்லை
என்வசம் இப்போது.
கண்களில்
தென்படும் கடைசி
எதிர்பார்ப்பைத்தவிர

உன் தட்டில்
எஞ்சி இருக்கும்
கடைசிப் பருக்கையைத்
தருவாயா
என் பசித்தீர்க்க?

- மராத்தியில் கவிதா மகாஜன்
- தமிழில் புதியமாதவி

இவ்வாறாகத் தமிழ்க்கவிதை தன் ஆதி மரபிலிருந்து இன்றைய நவீனம்வரை உன்னதமான வெளிப்பாட்டுடன் வளர்ந்து வருகின்றது.

தமிழ் வாழ்வின் பண்பாட்டுத் தளத்தில் கிளைத்து விரியும் தமிழ்க்கவிதைகள், உலகளாவிய கவனத்தையும் சிறப்பையும் பெற்றுவருகின்றன.

**நாட்டுப்புறப்பாடல்கள்**

- சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு, கலை ஆகியவற்றை வெளிப்படுத்தும் காலக்கண்ணாடியே நாட்டுப்புறப் பாடல்கள். இவை, நாட்டுப்புறங்களில் வாழும் மக்கள், உழைக்கின்ற போது களைப்புத் தோன்றாமல் இருப்பதற்காகவும் தம் வாழ்வில் பெறும் அனுபவங்களை வெளிப்படுத்துவதற்காகவும் பாடப்படுகின்றன. இப்பாடல்கள், மக்களது உணர்வுகளையும் மனப்பதிவுகளையும் எத்தகைய புனைவுகளுமின்றி இயல்பாகப் பதிவு செய்கின்றன.

- இப்பாடல்கள் காலத்தால் முந்தியவை என்றாலும் இன்றும் நம் வாழ்க்கையில் மண்ணின் மணம் மாறாமல் இசைத் தன்மையோடு ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றை நாடோடிப்பாடல், பாமரப்பாடல், மரபுவழிப்பாடல், ஏட்டிலெழுதாக் கவிதை, மக்கள் பாடல், பரம்பரைப்பாடல், நாட்டார்பாடல் என்று பல்வேறு பெயர்களில் மக்கள் அழைக்கின்றனர்.

- மக்கள் வாழ்வோடு பின்னிப்பிணைந்த நாட்டுப்புறப்பாடல்கள் தாலாட்டுப்பாடலாக, தெம்மாங்குப்பாடலாக, விளையாட்டுப்பாடலாக, கும்மிப்பாடலாக, ஒப்பாரிப்பாடலாக, தொழிற் பாடலாக, வழிபாட்டுப்பாடலாகப் பல்வேறு வடிவங்களில் எட்டுத்திக்கும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. வில்லிசை, பொம்மலாட்டம், தெருக்கூத்து, கரகாட்டம், ஒயிலாட்டம், கும்மியாட்டம் ஆகிய நாட்டுப்புறக்கலை வடிவங்களில் நாட்டுப்புறப்பாடல் தன் ஆற்றலை வெளிக்காட்டுகிறது.

## விறகொடிக்கும் பெண்

வேகாத வெயிலுக்குள்ளே – ஏ தில்லலோ லேலோ
　　விறகொடிக்கப் போற பொண்ணே – ஏ தில்லலோ லேலோ
காலுனக்குப் பொசுக்கலையோ – ஏ தில்லலோ லேலோ
　　கத்தாழ முள்ளு குத்தலையோ – ஏ தில்லலோ லேலோ
காலு பொசுக்கினாலும் - ஏ தில்லலோ லேலோ
　　கத்தாழ முள்ளு குத்தினாலும் - ஏ தில்லலோ லேலோ
காலக் கொடுமையாலே – ஏ தில்லலோ லேலோ
　　கஷ்டப்படக் கலமாச்சு – ஏ தில்லலோ லேலோ
கஷ்டப்பட்டுப் பாடுபட்டு – ஏ தில்லலோ லேலோ
　　கழுத்தொடிய சுமக்கும் பொண்ணே – ஏ தில்லலோ லேலோ

எங்கே போய் விறகொடிச்சி – ஏ தில்லலோ லேலோ
　　என்னசெய்யப் போற பொண்ணே – ஏ தில்லலோ லேலோ
காட்டுக்குள்ளே விறகொடித்து – ஏ தில்லலோ லேலோ
　　வீட்டுக்கத சொமந்து வந்து – ஏ தில்லலோ லேலோ
கால்ரூவாய்க்கு வெறகு வித்து – ஏ தில்லலோ லேலோ
　　கஞ்சிகண்டு குடிக்கணுமே – ஏ தில்லலோ லேலோ

நாட்டுப்புறப் பாடல்கள் உள்ளத்து உணர்வுகளை வடிகட்டாமல் அப்படியே கொட்டும் பாடல்கள். அதனால் அவற்றில் இயல்பான சொல்வளமும் உணர்ச்சிகளின் கொந்தளிப்பும் நிறைந்திருக்கும். அத்தகு பாடல்களுள் ஒன்று இது.

**தாயை இழந்த மகள் பாடுவது**

பூமியிலே விட்டாலே – என்
பொற்பாதம் நோகுமென்பாய்.
தரையிலே விட்டாலே – என்
தங்கக்கால் நோகுமென்பாய்.

மார்மேலே தொட்டி கட்டி – எனக்கு
மடிமேல் நடை பழக்கி,
தோள்மேலே தொட்டிகட்டி – எனக்குத்
துடைமேல் நடை பழக்கி

நெய் ஊட்டி வளர்த்த – உன்
நேசத்தை நான் மறவேன்
பால் ஊட்டி வளர்த்த – உன்
பாசத்தை நான் மறவேன்

கள்ள நிழலாச்சே - இனி எனக்குக்
கண்டவர்கள் தாயாச்சே
வேலி நிழலாச்சே - இனி எனக்கு
வேண்டியவர்கள் தாயாச்சே

குடத்தோடே தண்ணீர் - எனக்குக்
குளிரத்தான் வளர்த்தாலும்
தாய்வளர்த்த தண்ணீர்போல்
தாகந் தணியா தெனை.

**சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற கவிதை நூல்கள்:**

| | |
|---|---|
| 1968 | வெள்ளைப் பறவை அ. சீனிவாச ராகவன் |

| | |
|---|---|
| 1978 | புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் - வல்லிக்கண்ணன் |
| 1982 | மணிக்கொடி காலம் - பி.எஸ். ராமையா |
| 1999 | ஆலாபனை – அப்துல் ரகுமான் |
| 2002 | ஒரு கிராமத்து நதி – சிற்பி. பாலசுப்பிரமணியம் |
| 2004 | வணக்கம் வள்ளுவர் - ஈரோடு தமிழன்பன் |
| 2006 | ஆகாயத்துக்கு அடுத்த வீடு – மு. மேத்தா |
| 2009 | கையொப்பம் - புவியரசு |
| 2017 | காந்தன் நாட்கள் - இன்குலாப் |

## தனிப்பாடல்கள்:

- தமிழில் தனிப்பாடல்களின் வரலாறு தனித்துவமானது. சங்ககாலப் பாடல்களைத் திரட்டித் தொகுத்தது போல இன்று வரையிலும் புதிய தடங்களில் பல திரட்டுகள் வெளிவருகின்றன. தனித்தனிப் புலவர்களால் பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட பாடல்களைத் தனிப்பாடல் என்கிறோம். புலவர்கள் தம் உள்ளக்கருத்தை எவ்விதக் கட்டுப்பாட்டிற்கும் உட்படாமல் விருப்பம் போல எழுதிய பாடல்கள் இவை. இவற்றைத் தமிழறிஞர்களும் சுவைஞர்களும் பெரிதும் முயன்று, தேடித்த 'தனிப்பாடல்கள்' என்ற தலைப்பில் தொகுத்திருக்கிறார்கள். இப்பாடல்களில் பலவித உணர்ச்சிகள், ஓசை விளையாட்டு, சொல் விளையாட்டு, விடுகதை என அத்துணை சுவைகளும், நயங்களும் காணக்கிடக்கின்றன.

### தனிப்பாடலில் சொல்விளையாட்டு

முற்பாதி போய்விட்டால் இருட்டே யாகும்
முன்னெழுத் தில்லாவிட்டால் பெண்ணே யாகும்
பிற்பாதி போய்விட்டால் ஏவற் சொல்லால்
பிற்பாதியுடன் முன்னெழுத்து இருந்தால் மேகம்
சொற்பாகக் கடை தலைசின் மிருகத்தீனி
தொடர் இரண்டாம் எழுத்து மாதத்தில் ஒன்றாம்
பொற்பார்திண் புயமுத்து சாமி மன்னா
புகலுவாய் இக்கதையின் புதையல் கண்டே

- அழகிய சொக்கநாதர்

- திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த அழகிய சொக்கநாதர் சிலேடை பாடுவதில் வல்லவர். இவர் பாடிய தனிப்பாடல்கள் இருபத்தைந்திற்கும் மேற்பட்டவை. முத்துசாமி என்பார் இவரை ஆதரித்தவர் ஆவார். இவர் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். காந்திமதி அம்மை மீது பிள்ளைத்தமிழ் மாலை, அந்தாதி போன்றவற்றைப் பாடியுள்ளார்.

### பொருள்:

- முத்துசாமி வள்ளலே! இக்கதையின் உட்பொருளை ஆராய்ந்து சொல்லுக. ஒரு சொல்லின் முதற்பாதியை நீக்கிவிட்டால் இருப்பது 'அல்' என்னும் சொல். அதற்கு இருள் என்பது பொருள். அச்சொல்லின் முதலெழுத்தாகிய 'பு' என்னும் எழுத்தை நீக்கிவிட்டால்'தையல்' ஆகும். அச்சொல்லுக்குப் பெண் என்பது பொருள். அச்சொல்லின் பிற்பாதியை நீக்கிவட்டால்,'புதை' என்னும் கட்டளையிடும் சொல்லாகும். அச்சொல்லின் பிற்பாதி எழுத்துடன் முன்னெழுத்தாகிய 'பு' சேர்த்தால் மேகம் என்னும் பொருள்படும் 'புயல்' ஆகும். அந்தச் சொல்லின் முதல் எழுத்தாகிய 'பு'வையும் கடை எழுத்தாகிய 'ல்'என்பதையும் சேர்த்தால் விலங்குகள் தின்னும் 'புல் ஆகும். அச்சொல்லின் இரண்டாம் எழுத்தாகிய 'தை' மாதத்தில் ஒன்றாகும். 'புதையல்' என்ற சொல்லைப் பலவாறு பிரித்துப் பல அரிய பொருள் விளங்குமாறு சொல் விளையாட்டில் ஈடுபடும் புலவர் தமிழ்ச் சொல் வளத்தின் மாண்பினைப் புலப்படுத்துகிறார்.

### தனிப்பாடலில் விடுகதை

பத்துக்கால் மூன்றுதலை பார்க்கும்கண் ஆறுமுகம்
இத்தரையில் ஆறுவாய் ஈரிரண்டாம் - இத்தனையும்
ஓரிடத்தில் கண்டேன் உகந்தேன் களிகூர்ந்தேன்

பாரிடத்தில் கண்டே பகர்

- சுந்தர கவிராயர்

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் சுந்தரகவிராயர். உழவுத் தொழிலின் உயர்வை நன்குணர்ந்தவர். எட்டையபுரம் அருணாசலத்துரை, தையூர் முத்து முதலானோர் இப்புலவரை ஆதரித்துள்ளனர்.

பொருள்:

- இவ்வுலகில் பத்துக்காலும் மூன்று தலையும் பார்க்கும் கண் ஆறும் முகம் ஆறும் வாய் நான்கும் ஆகிய இத்தனையும் உடைய ஒன்றை ஒரிடத்திலேயே பார்த்தேன்; அதன் மீது விருப்பம் கொண்டேன்; மகிழ்ச்சி அடைந்தேன். இவ்வுலகில் இந்தப் புதுமையைக் கண்டு என்னவென்று கூறுவாயாக.

நயம்:

- இரு காளையை ஏரில் பூட்டி ஓட்டும்போது, இரு காளையின் கால் எட்டும், ஓட்டும் மனிதன் கால் இரண்டும் ஆகப் பத்துக்காலும், காளையின் தலை இரண்டும், மனிதன் தலை ஒன்றும் ஆக மூன்று தலையும் இருக்கும்.

- இரு காளையின் கண்கள் நான்குடன் ஏர் ஓட்டுபவன் முகத்திலுள்ள இரு கண்களும் சேர்த்து ஆறு ஆவன காண்க. காளை. மனிதன் முகங்களோடு கொழுமுகம் மூன்றும் சேர்த்து முகம் ஆறும், காளைகள், மனிதன் ஆகியோரின் மூன்று வாயோடு நாழிவாய் ஒன்றும் சேர்த்து வாய் நான்காவதும் காண்க.

(உழவுத் தொழிலின் மேன்மை)

## சித்தர் பாடல்கள்

- “சித்து“ என்ற சொல் அறிவு என்னும் பொருளைக் குறிக்கும். சித்தர் என்னும் சொல் அறிவுடையோர் என்ற பொருளைத் தரும். சித்தர் இலக்கியம் சடங்குகள், சம்பிரதாயங்கள், சமூக ஏற்றத்தாழ்வு ஆகியவற்றிற்கு எதிரான விமர்சனத்தை முன்வைத்தது. அதே சமயம் மெய்யியல் அனுபவங்களையும் முன்வைத்தவர்கள் சித்தர்கள். உருவ வழிபாடுகளை எதிர்த்துள்ளனர். சாதி, சமய ஏற்றத்தாழ்வையும் எதிர்த்துள்ளனர். வானவியல், யோகாசனம், வர்மம், பஞ்சபட்சி சாஸ்திரம் போன்ற பல துறைகளிலும் ஆற்றல் பெற்றிருந்தனர். பிராணாயாமம் என்னும் மூச்சுப்பயிற்சி சித்தர்களின் கொடையாகும். சித்தர்கள் தமது கண்டுபிடிப்புகளையும் ஆற்றல்களையும் மக்களின் நன்மைக்கே பெரும்பாலும் பயன்படுத்தினர். இவர்கள் தம்பாடல்களின் வழி சமூகத்தில் நிலவிய மூடப்பழக்கவழக்கங்களை எதிர்த்தவர்கள். சித்தர்கள் பெரிதும் மனித வாழ்வின் நிலையற்ற தன்மையைக் கூறி, மனத்தையும் உடலையும் யோகப்பயிற்சியால் ஒரு முகப்படுத்தலாம் என்னும் தத்துவத்தைத் தந்துள்ளனர். சித்தர்கள், மருத்துவத்தில் “சித்தமருத்துவம்“ என்ற தனிப்பிரிவு தோன்றும் படி பல்வேறு நோய்களையும் அவை தீர்க்கும் மருந்துகளையும் கண்டறிந்தவர்கள்.

### இடைக்காட்டுச் சித்தர் பாடல்

கண்ணுள் மணியைக் கருதிய பேரொளியை
விண்ணின் மணியை விளக்கொளியைப் போற்றீரே!
பாலிற் சுவைபோலும் பழத்தில் மது போலும்
நூலிற் பொருள்போலும் நுண்பொருளைப் போற்றீரே!
எள்ளில் தைலம்போல் எங்கும் நிறைபொருளை
உள்ளில் துதித்தே உணர்வடைந்து போற்றீரே!

- இடைக்காட்டுச் சித்தர்

### ஆசிரியர் குறிப்பு:

- இடைக்காடு என்ற ஊரில் பிறந்ததனால் இவர் இடைக்காட்டுச் சித்திர் என்று அழைக்கப்பட்டார். இவர் போகர் என்ற சித்திரின் சீடர். “இடைக்காடர் ஞான சூத்திரம்

எழுபது“ என்பது இவருடைய நூல். மெய்ப்பொருளின் தன்மையினையும் பிறவியற்ற பேரின்ப நிலையை எய்தும் வழியினையும் இவர் பாடியுள்ளார்.

**பொருள்:**

- நம் கண்ணில் இருக்கும் கருமணி போன்றவனை நாம் கருதுகின்ற மாபெரும் ஒளியைப் போன்றவனை விண்ணில் விளங்கும் சுடர் போன்றவனை திருவிளக்கின் ஒளியாய்த் திகழ்பவனை எந்நாளும் போற்றுவீராக. பாலில் மறைந்துள்ள சுவை போலவும் பழத்தில் மறைந்துள்ள இனிமை போலவும் நூல்களில் மறைந்துள்ள நுட்பமான கருத்துகள் போலவும் உலகப் பொருள்களில் எல்லாவற்றிலும் நுட்பமாய் மறைந்திருக்கும் இறைவனைப் போற்றுவீராக. எள்ளின் உள்ளிருக்கும் எண்ணெய்யைப்போல எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை உள்ளத்தில் இருத்தி, உணர்வுடன் போற்றுவீராக.

**குதம்பைச் சித்தர் பாடல்**

வெட்ட வெளிதன்னை மெய்யென்று இருப்போர்க்குப்
பட்டயம் ஏதுக்கடி – குதம்பாய்!
பட்டயம் எதுக்கடி.

மெய்ப்பொருள் கண்டு விளங்கும்மெய்ஞ் ஞானிக்குக்
கற்பங்கள் ஏதுக்கடி – குதம்பாய்!
கற்பங்கள் ஏதுக்கடி.
முத்தமிழ் கற்று முயங்கும்மெய்ஞ் ஞானிக்குச்
சத்தங்கள் ஏதுக்கடி – குதம்பாய்!
சத்தங்கள் ஏதுக்கடி.

**ஆசிரியர் குறிப்பு:**

- இவருடைய பாடல்களில் “குதம்பாய்“ என்று மகடூஉ முன்னிலை வருவதால், இவர் “குதம்பைச் சித்தர்“ என்று அழைக்கப்பட்டார். இவர் பாடல்களில் சித்தர்களின் இயல்புகள் பேசப்படுகின்றன.

**பொருள்:**

- குதம்பாய்! உலகம் நிலையற்றது. வெட்டவெளியாகிய உலக இயக்கமே நிலையானது என்ற கொள்கையுடைய சான்றாண்மை உடையோருக்கு அதற்கான உரிமை ஆவணம் எதற்கு? மெய்ப்பொருளைக் கண்டுணர்ந்த மெய்ஞ்ஞானியர்க்குப் புறஉடலுக்கு வலிமை தரும் காயகற்ப மருத்துகள் எதற்கு? மூன்று தமிழையும் கற்று மெய்ப்பொருளோடு இணைந்துவிட்ட மெய்ஞ்ஞானிகளாகிய சித்தர்களுக்குச் சத்தமிட்டுப் பாடும் வெற்றுக்கூப்பாடுகள் எதற்கு?

## சிற்றிலக்கியங்கள்

**சிற்றிலக்கிய வரையறை:**

- பேரிலக்கியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனையும் உணர்த்துவதற்காக எழுந்தன. இவற்றுள் ஒன்றோ பலவோ குறைந்து வரும் தன்மையில் அமைந்த இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள். சிற்றிலக்கியங்கள் தொல்காப்பியம் கூறும் “விருந்து“ என்னும் வனப்பினுள் அடங்கும். சிற்றிலக்கியம் 96 வகையின என்பர். தூது, உலா, பரணி, குறிவஞ்சி, பள்ளு, அந்தாதி, கோவை, கலம்பகம், பிள்ளைத்தமிழ், சதகம் போன்றன சிற்றிலக்கிய வகைகளுள் சில. சிற்றிலக்கியங்களின் காலத்தைக் குறிப்பிட்ட

- வரையறைக்குள் அடக்கிவிட இயலாது. சங்கம் முதல் இன்றுவரை பெரிதும் சிறிதுமாக இவ்வகை இலக்கியம் தொடர்ந்து எழுதப்பட்டு வருகிறது. இவை வட்டாரச் சார்புடையவை. பல்லவர்கள் காலத்தில் பக்தி இலக்கியங்கள் செழித்தோங்கியதைப் போல, நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் செழித்தன.

**ஆசியா உம்மா பாடல்கள் சூப்பித்துவம்**

- மெய்ஞ்ஞானத் தேடலையும் மறைபொருள் சார்ந்த ஆன்மீக உட்பரிமாணத்தையும் குறிப்பதே சூஃபித்துவம். அதன் தொடக்கப் புள்ளியாக அலி இபின் அபி தாலிஃப் கருதப்படுகிறார். சூஃபித்துவத்தின் ஆணிவேர், இசுலாத்தின் அடிப்படையான மனிதநேயத்திலும் ஆன்மீகத்திலும் வேருன்றியுள்ளது. தத்துவக்கோட்பாடுகளையும் அறிவு சார்ந்த தருக்கங்களையும் தாண்டி, ஆழ்ந்த அன்பையும் பக்தியையும் வலியுறுத்தும் அகத்திரிசனமே சூஃபித்துவத்தின் அடிப்படை எனலாம். தூய்மையான ஆன்மீகத் தேடலில் மானுட இருப்பினை மீட்பதே சூ..ஃபிக்களின் நோக்கமாகும்.

**ஆசியா உம்மாவின் பேரானந்தக் கண்ணிகள்:**

எத்தனையோ ஓதிடினும் எவ்விதங்கள் கற்றாலும்
சித்தந் தெளியார்க்கு சித்தி ஜெயமோ பேரானந்தமே!

பணமும் சனமும் பண்பான ஆஸ்திகளும்
ஜனங்களை விட்டேகையிலே சதமோ பேரானந்தமே!

ஆண்என்பதும் பெண் என்பதும் ஆதியன்றி வேறொன்றில்லை
தான்என்பதை யறிய தவமருள் பேரானந்தமே!

மூலப்பொருளை நன்றாய் மவுனமுடனே யறிந்தால்
வாலைப்பிராயம் வந்து வாய்க்குமே பேரானந்தமே!

- செய்யிது ஆசியா உம்மா

- ஆசிரியர் பற்றி சீதக்காதி மரபு வந்த ஹபீபு முகம்மது மரைக்காயருக்கும் ஹபீபு உம்மாவுக்கும் மகளாகப் பிறந்தவர் செய்யிது ஆசியா உம்மா. இவர் கல்வத்து நாயகத்தின் சீடர். இவர் மெய்ஞ்ஞான தீப இரத்தினம், மாலிகா இரத்தினம் ஆகிய பாடல்களை அரபுத்தமிழ் வடிவத்தில் இயற்றினார். இவை "மெய்ஞ்ஞானப்பாடல்" எனும் தொகுப்புநூலில் இடம் பெற்றுள்ளன.

**தெளிவுரை:**

- எத்தனை வேதங்களை எம்முறையில் கற்றாலும் அறிவில் தெளிவு அடையாதவர் தெளிவு அடைவதே பேரின்ப நிலையாகும்.

- சேர்த்த பொருட்செல்வங்களும் இந்த உலகில் சேர்ந்த உறவினர்களும் நேர்மையாகச் சேர்த்த சொத்துகளும் இறுதி நாளில் இவ்வுலகை விட்டுப் பிரிகையில் நிலைத்து நம்மோடு வருவதில்லை. பேரானந்த நிலையே இறுதியில் நிலையானது.

- ஆண் என்பதும் பெண் என்பதும் அன்றிலிருந்து இன்றுவரை இருக்கின்ற பழைமைதானே தவிர, வேறில்லை, "தான்" என்பதை அறியும் நிலையே பேரானந்தமாகும்.

- உலகில் மூலப்பொருளை. மௌனமாய் உணர்ந்து அறிந்தால், என்றும் இளமையாய் இருக்கும் நிலை உண்டாகும். அதுவே அமைதி நிலையாகும்.

**சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்**

- சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று கீர்த்தனை. கீர்த்தி என்னும் சொல்லுக்குப் புகழ், இசை எனப் பல பொருளுண்டு. கீர்த்தனை என்பதை இதைப்பாடல் என்பர். இசைக்கூறுகள் மிகுந்து காணப்படுவதால் இது கீர்த்தனை எனப் பெயர் பெற்றது.

- "சிந்து என்ற பாடல் வகையே கீர்த்தனைகளாக வளர்ச்சி பெற்றுள்ளது. கீர்த்தனைகளில் சுரத்தைவிடச் சொற்களக்குத்தான் முதன்மை அளிக்கப்படுகிறது. இப்பாடல்கள் பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற மூன்று நிலைகளில் அமையப்பெறும். பதினெழாம் நூற்றாண்டில்

தோன்றி, வளர்ந்த இச்சிற்றிலக்கிய வடிவம் பிற்காலத்தில் மக்களின் சிக்கல்களையும் பேசத் தொடங்கியது.

**குடும்ப சம்பந்தக் கீர்த்தனைகள்**
**தாய்தந்தையரை வணங்குதல்**

உடல்உயிர் சகலமும் நீர்தந்ததே யன்றி
உண்டோ இனிவேறு
அடரும் உலகெலாம் உமக்களித் தாலுமே
ஆமோ கைம்மாறு,

தேனினும் அமிர்தினும் இனிதே எனக்குநீர்
செப்பிய தாலாட்டு
வானினும் அமரர்க்கு வருமோ இதுபோல்
மங்களத் திருப்பாட்டு.

இரவு முழுதுமே தூங்கா திருந்துநீர்
எந்தனைக் காத்தீரே
அரவு முதற்பல ஜெந்துக் களால்வரும்
ஆபத்தைத் தீர்த்தீரே.

தோளினும் மார்பினும் இடையினு மேயெனைத்
தூக்கிக்கொண் டலைந்தீரே
நீள்பஞ்ச காலத்தில் உள்ளசோ றெனக்கிட்டு
நீர்பசித் துலைந்தீரே.

மண்பிள்ளை ஆயினும் தன்பிள்ளை யென்றெனை
மகிழ்ந்தா தரித்தீரே
பண்புடன் என்பொருட் டாகநீர் பலரையும்
பணிந்துப சரித்தீரே

எனக்கொரு சுகம்வரில் உமக்குவந் ததுபோல்
எக்களிப் படைந்தீரே
எனக்கொரு துயர்வரில் உமக்குவந் ததுபோல்
ஏங்கிஉள் ளுடைந்தீரே.
இளமைப் பருவத்தில் என்னால்வருந் துன்பம்
எல்லாம் பொறுத்தீரே
தளர்ந்த பருவத்தில் உம்மால்வருந் துன்பம்
சகிப்பது பெருஞ்சீரே.

- மாயூரம் வேதநாயகர்

- இத்தகைய கீர்த்தனைப் பாடல்களைச் சமரச நோக்கோடு பாடியவர் மாயூரம் வேதநாயகர். இவர் பாடிய இசைப்பாடல் நூல் “சர்வ சமய சமரசக் கீர்தட்தனைகள்“ ஆகும். இந்நூலின் பெயருக்கு ஏற்ப, எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான இசைப்பாடல்களைப் பாடியுள்ளார். சமுதாயக்கருத்து, அறநெறிக்கருத்து, தாம் வாழ்ந்த காலத்துச்சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் கீர்த்தனைகளைப் பாடியுள்ளார். இந்நூலில் 192 கீர்த்தனைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

- வேதநாயகர் இவற்றை, தேவதோத்திரக் கீர்த்தனைகள்,ஈசுவர வருடத்துப் பஞ்சத்தைப் பற்றிய கீர்த்தனைகள், ஹிதோபதேசக் கீர்த்தனைகள், உத்தியோக சம்பந்தக் கீர்த்தனைகள், குடும்ப சம்பந்தக் கீர்த்தனைகள் என ஐந்தாக வகைப்படுத்தியுள்ளார்.

- வேதநாயகர் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள குளத்தூரில் பிறந்தவர். சிறுவயதிலேயே ஆங்கிலப் பயிற்சி பெற்றமையால், ஆங்கில அரசாங்கம் இவரை மாவட்ட நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக அமர்த்தியது. பின்பு, தரங்கம்பாடி, சீர்காழி, மாயூரம் ஆகிய இடங்களில் மாவட்ட நீதிமன்றத்தில் முன்சீப்பாகப் பணியாற்றினார். பொ.ஆ. 1876 ஆம்

ஆண்டு வெளியான இவரின் “பிரதாப முதலியார் சரித்திரம்“ என்னும் புதினம் தமிழில் வெளியான முதல் புதினம் ஆகும்.

**பாடல் பொருள்:**

- என் உடல் உயிராகிய அனைத்தும் நீங்கள் தந்ததேயன்றி வேறில்லை. இதற்கு இப்பரந்த உலகம் முழுவதையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது.
- எனக்காக நீங்கள் பாடிய தாலாட்டுப் பாடல் தேனைவிட, அமிழதத்தைவிட மிகவும் இனிமையானது. இத்தகைய மங்களத் திருப்பாட்டு வானோர்க்கும் கிட்டாதது ஆகும்.
- இரவு முழுவதும் தூங்காமல் இருந்து, நீங்கள் என்னைக் காத்தீர்கள். பாம்பு முதலாகிய பல உயிரிகளால் எனக்கு வரும் துன்பத்தைப் போக்கினீர்கள்.
- செல்லும் இடங்களுக்கெல்லாம் தோளிலும் மார்பிலும் இடையிலும் என்னைத் தூக்கிச் சென்றீர்கள். மிகுந்த வறுமையுற்ற காலத்தில் உங்கள் பசியை மறைத்து எனக்குச் சோறளித்தீர்கள்.
- எத்தகைய குறைகள் இருப்பினும் உங்கள் பிள்ளை என்பதால் என்னை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டீர்கள். எனக்காக நீங்கள் பலரையும் பணிந்து பண்புடன் மரியாதை செய்தீர்கள்.
- எனக்கோர் இன்பம் வந்தால் அது உமக்கே வந்ததாக அகம் மகிழ்ந்தீர்கள். துன்பம் வந்தாலோ உமக்கே வந்ததாக இரங்கி மனமுடைந்தீர்கள்
- இளமைப் பருவத்தில் என்னால் ஏற்பட்ட துன்பங்களைப் பொறுத்தீர்கள். நீங்கள் துன்பங்களைப் பொறுத்துக்கொள்வது நான் பெற்ற பெரும்பேறாகும்.

**ஓவியப்பா**

- கவிபாடும் புலவர்களை, அவர்களின் கவிபாடும் திறனுக்கேற்ப ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என நான்கு வகையாகப் பகுத்துக் கூறுவர். பொருளடி, பாவணி முதலியன தந்து, மற்றொருவன் பாடுக என்ற உடனே பாடுவோன் ஆசுகவி, பொருட்செல்வம், சொற் செல்வம், தொடை விகற்பம் செறிய, உருவகம் முதலிய அலங்காரத்தோடு இனிய ஓசையுடன் அமுதமுறப் பாடுவோன் மதுரகவி, மாலைமாற்று, சுழிகுளம், நாகபந்தம், சக்கரம், எழுகூற்றிருக்கை முதலிய மிளிர கவி பாடுவோன் சித்திரகவி, மாலை, யமகம், கலம்பகம், தசாங்கம், புராணம் முதலியன விரித்துப் பாடுவோன் வித்தாரகவி, இத்தகைய கவிகளைப்பாடுவோர் பனுவர் எனப்பட்டனர்.
- சித்திரகவியை “ஓவியப்பா” என்றும் கூறுவர், சித்திரகவி என்பது தமிழில் காணப்படும் இலக்கிய வகைமைகளுள் ஒன்று. தொல்காப்பியம் குறிப்பிடும் “வண்ணங்கள்” சித்திரகவிகளின் தோற்றுவாய். திருமங்கையாழ்வாரால் பாடப்பட்ட “திருவெழுகூற்றிருக்கை” ஓவியப் பாங்குடன் அமைந்த சித்திரகவி. இவரைப் பின்பற்றி அருணகிரிநாதரும் சித்திரகவிகளைப் பாடியுள்ளார். இவர்களின் வரிசையில் பாம்பன் சுவாமிகளும் சித்திரகவிகள் படைத்துள்ளர்.
- ஓவியப்பாவின் வகைகளுள் “நாகபந்தம்” என்பதும் ஒன்று. நாகப்பிணை என இதனைத் தனித்தமிழ்ச் சொற்களால் குறிப்பிடலாம். இரண்டு, நான்கு, எட்டு என நாகப்பாம்புகள் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டிருப்பது போலப் படம் வரையப்படும். பாடல் ஒன்றின் எழுத்துகள் நாகங்களின் தலையிலிருந்து வால் வரையில் உள்ள கட்டங்களில் எழுதப்பட்டிருக்கும். எந்த நாகத்தின் தலையிலிருந்து படித்தாலும் அதே பாடல் வரும்படி பாடலின் அமைப்பு இருக்கும். இவ்வாறு அமைக்கும்போது, கவிதையின் மொத்த எழுத்துக்களும் சித்திரத்திற்குள் சுருங்கித்தோன்றும். சொல்வளம் மிக்கவர் இதனைப் பாடுவர்.

**இரட்டை நாகபந்தம்:**

- இரண்டு பாம்புகள் ஒன்றோடு ஒன்று பின்னிப்புணர்ந்து விளையாடுவன போலச் சித்திரம் வரைந்து, அப்பாம்பின் உருவங்களில் கணக்கிட்ட அறைகள் வகுத்துச் சந்திகளில் நின்ற அறைகளில் பொதுவான எழுத்துகளமையப் பாடப்படுவது, இரட்டை நாகபந்தம் ஆகும். இப்பாடலைப் பாம்பின் தலைப்பகுதியிலிருந்து தொடங்கி வால்பகுதி வரைசென்று பொருள்காண வேண்டும்.

”வாலு ளிருமூன்றும் தலையி லிரண்டெழுத்தும்
மூலைக ணான்கும் வயிறிரண்டும் ஐவைவந்தாய்
நாலெட்டு நாலைந்தே ழாகி நடைபெறுமே
சேலிட்ட கண்ணாவின் சீர்“.

- மேற்கண்ட வெண்பாவிலிருந்து இரட்டை நாகபந்தம் இயற்றுதலின் வரையறையை அறியலாம். இவ்வெண்பாவில் கூறப்பட்ட விதிகளின் அடிப்படையில் நாமும் இவ்வாறான பந்தங்களை உருவாக்கலாம். இவ்வகையில் அமைந்த பாடல்களிரண்டை அறிவோம்.

”அருளின் நிருவுருவே யம்பலத்தா யும்பர்
தெருளின் மருவாச்சீர்ச் சீரே – பொருவிலா
வொன்றே யுமயா ளுடனே யுருத்தரு
குன்றே தெருள வருள்“

”மருவி னவருளத்தே வாழ்சுடராய் நஞ்சு
பெருகொளியான் மேயபெருஞ் சோதித் - திருநிலா
வானஞ் சுருங்க மிகுசுடரே சித்த
மயரு மளவை யொழி”

- மேற்கண்ட பாடல்கள் இரண்டும் இரட்டை நாகபந்தம் என்ற அடிப்படையில் அமைந்த பாடல்களாகும். இப்பாடல் இரட்டை நாகச் சித்திரத்தில் பொருந்தும் விதத்தினை இங்கு நோக்குவோம்.

**பாடலின் பொருள்:**

- இரக்கத்தின் அழகிய வடிவமாக உள்ளவனே! திருச்சிற்றம்பலத்தில் நடகம் புரியும் இறைவனே! தேவர்களின் அறிவிற்கு எட்டாத (அறியவொண்ணாத) சிறப்பினையுடைய புகழை உடையோய்! பார்வதி தேவியுடன் கூடிய உருவத்தோடு அடியவர்களுக்குக் காட்சியளிக்கும் மலை போன்றவனே! நாங்கள் தெளிந்த மெய்யறிவைப் பெற அருள் செய்வாயாக.

- மருவினவர் உள்ளத்தே வாழ்சுடரே! அடைந்தவர் மனத்திலே குடிகொண்டிருக்கும் ஒளியுருவமானவனே! விடத்தாலுண்டாகிய மிக்க ஒளியோடு பொருந்திய பெருஞ்சோதி வடிவமே! அழகிய நிலவின் ஒளி பொருந்திய பரந்த வானமும் சுருங்கும்படி மேலோங்கிய ஒளியே! திருமேனியாக வாய்ந்தோய்! மனமயங்கும் காலத்தை நீக்கி அருள்வாயாக!

## $11^{TH}$ சிறப்பு தமிழ்
## அலகு – 3
## அரங்கவியல்

### தெருக்கூத்தில் கட்டியக்காரன்

**தெருக்கூத்து – ஓர் அறிமுகம்:**

- தமிழகத்தின் தொன்மையான கலைவடிவங்களுள் ஒன்று, கூத்துக்கலை, தெருவில் நடத்தப்படும் கூத்து என்பதால், இது தெருக்கூத்து என அழைக்கப்படுகிறது. பார்வையாளர்களுக்குக் கதை சொல்லல், நடித்தல், ஆடல், பாடல் எனப் பல கலைத்தன்மைகள் சேர்ந்த ஒன்றே கூத்துக்கலை. தெருக்கூத்தின் வேர், தமிழப் பண்பாட்டிலும் ஊடுருவியுள்ளதைக் காணலாம். இது பெரும்பாலும், திருவிழாக்களிலும், சடங்குசார்ந்த நிகழ்வுகளிலும், வழிபாடுகளிலும் நிகழ்த்தப்படுகிறது. மிகுந்த துடிப்போடு விளங்கும் இந்தக் கலையில், நடிப்புடன் கூடிய வசனம். ஆடல், பாடல் என அனைத்தும் உள்ளன. இக்கலை, இரவு ஒன்பது மணிக்குத் தொடங்கி, விடியற்காலை வரை தொடர்ந்து நடைபெறுவதும் உண்டு.

- தெருக்கூத்துக் கலையானது நாட்டார் கதை, சீர்திருத்தக்கதை, விழிப்புணர்வுக்கதை, மகாபாரதம், இராமாயணக் கதைகள், புராணக்கதைகள், கதைப்பாடல்கள் ஆகியவற்றின் உள்ளடக்கத்தைக் கொண்டு நிகழ்த்தப்படுகிறது.கூத்து தொடங்கும் முன் அரைமணி நேரத்திற்கு மிருதங்கம், ஜால்ரா உள்ளிட்ட இசைக்கருவிகள் அனைத்தும் ஒரு சேர ஒலிக்கும். இவ்வொலி, ஊராரை அழைப்பதற்கு உதவியாக இருக்கும். இதனைக் களரிகட்டுதல் என்பர். தென்னாற்காடு மாவட்டத்தில் இதனைத் தாளக்கட்டு என்பர். களரி கட்டுக்குப் பிறகு, பார்வையாளர்கள் முன் தோன்றுகிற, குறிப்பிடத்தக்க முதல் கதைமாந்தனைக் கட்டியக்காரன் என அழைக்கிறோம்.

- கட்டியக்காரன், கூத்துக்களில் தன்னை அறிமுகப்படுத்துவதுடன் அவையோரை ஆயத்தம் செய்தல், கதைமாந்தர்களை அறிமுகப்படுத்தல், கதையை விளக்குதல், கதைமாந்தர்களுக்கிடையே தொடர்பை ஏற்படுத்துதல், கூத்தின் ஒழுங்கமைப்பையும் காட்சி நிகழ்வுகளையும் எடுத்துக்கூறல், முக்கியத்துவம் மிகுந்த கதைமாந்தர்களுடன் உரையாடுதல், விமர்சனம் செய்தல், பார்வையாளர்களுடன் ஊடாடுதல் போன்ற செயற்பாடுகளைச் செய்யும் கதைமாந்தன் ஆவான்.

**தெருக்கூத்தில் கட்டியக்காரன் என்னும் கதைமாந்தன்**

கட்டியக்காரன் : அண்டம் நடுநடுங்க, ஆகாசம் கிடுகிடுக்க, கட்டியக்காரன் நான் இங்கு வந்தேனே... கட்டி ஆள இங்கு வந்தேனே...

(எனக் கட்டியக்காரன், தெருக்கூத்தின முதல் கதைமாந்தனாகத் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு வருவான்)

மன்னர் : காவலா!

கட்டியக்காரன் : மன்னா!

மன்னர் : நான் யாரென்று தெரியுமா?

கட்டியக்காரன் : எனக்குத் தெரியும் ஆனால், இங்கு உட்கார்ந்து இருக்கிறவர்களுக்குத் தெரியாது. அதனால், நீங்களே சொல்லுங்க.

- கூத்தில் இவனது நடிப்பும் பாடலும் அனைவரது கவனத்தையும் ஈர்க்கக்கூடியதாக அமையும். கட்டியக்காரன், தெருக்கூத்தைக் கட்டியாள்பவனாகக் கூத்தின் தொடக்கம் முதல் இறுதிவரை இயங்குவான். இவன், கதையின் முக்கிய கதை மாந்தர்களையும் அவர்களது செயற்பாடுகளையும் மறைமுகமாகக் கேலி செய்வான்; கேள்விக்கு உட்படுத்துவான்.

- தெருக்கூத்தில் கோமாளி, காவலன், மந்திரி, தோழி, குறிசொல்பவன் போன்ற பலவகையான துணைமாந்தர் வேடமேற்றுக் கட்டியக்காரன் இயங்குவான். பெண் பாத்திரமேற்றுப் பேச வேண்டியிருந்தால், துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு தோழியாக மாறுவான்; இடுப்பில் கட்டிக்கொண்டு பணிவுடன் பேசினால் காவலாளி; கழுத்தில் மாலை போட்டுக்கொண்டால்

மந்திரி என்பது போலத் துணைமாந்தர் பலரின் வேடங்களை ஏற்றுக் கதையோட்டத்திற்கு ஏற்ப நடிப்பான்.

- கட்டியக்காரனின் கூற்றிலும் தன்மையிலும், கூத்துக்குக் கூத்து வேறுபாடுகள் இருந்தாலும், கட்டியக்காரனின் தோற்றம், பாடும் முறை, கட்டியங்கூறும் வகை என்பனவற்றில் பெரிய வேறுபாடுகளில்லை. கட்டியக்காரன் இப்படி, இவ்வாறு, இந்த நேரங்களில் வரவேண்டும் என முறையான வரையறைகள் ஏதும் இல்லை.

- இந்த நெகிழ்வுத்தன்மையுடன், அக்கூத்தின் கதையோட்டத்தையும் கதைமாந்தர்களையும் இறுதிவரை கட்டுக்கோப்பாகக் கொண்டுசெல்லும் முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பாளனாக இவன் செயல்படுவான். மேலும், கூத்தின் தொடக்கம் முதல் முடிவு வரை எத்தனை நாள் கூத்து நடந்தாலும், ஏதேனும் ஓர் உருவத்தில் ஆடுபரப்பில் செயல்பட்டுக் கொண்டே இருப்பான். கட்டியக்காரன், கூத்து நிகழ்த்தும் வாத்தியாருக்கு நிகரானவன் என்பது, கூத்தில் அவனுடைய பொறுப்பை எடுத்துக்காட்டுகிறது.

**கட்டியக்காரனின் உடை:**

- கட்டியக்காரனுடைய உடை, முழுக்கால் சட்டையும் பல வண்ணங்கள் கொண்ட மேல் சட்டையும் கோமாளித் தொப்பியும் ஆகும். மற்றவர் கதைக்கு ஏற்பவும், பாத்திரத்தின் தன்மைக்கேற்பவும், உடலோடு ஒட்டிய முழுக்கால் சட்டை, அதன் மேல் குட்டைப் பாவாடை போன்ற உடையும் அணிவான். பாத்திரத்திற்கேற்ற மேல் உடையும் கட்டைகளால் ஆன மகுடம், மார்புப் பதக்கம், தோளணிகள் (புஜகீர்த்திகள்) போன்ற அணிகளையும் அணிவான். வண்ணக் காகிதங்கள், பாசிமணிகள், கண்ணாடித் துண்டுகள் போன்றவற்றால் அணிகலன்கள் அழகுபடுத்தப்பட்டிருக்கும். பெண் வேடம் புனையும்போது, சேலையும் இரவிக்கையும் அணிந்து குறைவான அணிகலன்களையும் அணிவான்.

**கட்டியக்காரனுக்கு வழங்கும் வேறு பெயர்கள்:**

- கட்டியக்காரன் கோமாளி, காவற்காரன், ப.ஃபூன், சபையலங்காரன், விதூஷகன் போன்ற பல பெயர்களில் அழைக்கப்படுகிறான். கட்டியம் என்றால், அரசன் முன் புகழ்மொழி கூறுதல் என்று பொருள். தெருக்கூத்துக் கதைமாந்தர்களின் அருமை பெருமைகளைச் சொல்லிப் பார்வையாளர்களுக்கு அவர்களை அறிமுகப் படுத்துவதாலும் கட்டியக்காரன் எனப் பெயர்பெற்றுள்ளான்.

- கூத்தில் மிகச் சுதந்தரமாக இயங்கும் கதைமாந்தன், கட்டியக்காரன் மட்டுமே. பார்வையாளர்கள், இரவு முழுவதும் உறங்காமல் விழித்திருப்பதற்காகக் கலகலப்பை ஏற்படுத்தியும் அவ்வப்போது நிகழ்கால நடப்புகளைச் சொல்லியும் கூத்தைக் கொண்டு செல்வான்.

- கட்டியக்காரன், கூத்து நடைபெறும் கால அளவுக்கேற்பக் கூத்தை நீட்டுவதற்கோ சுருக்குவதற்கோ ஏற்றார்போல், கதைமாந்தர்களை எல்லைக்குள் கொண்டுவந்து நிறுத்த வேண்டும். ஒப்பனை முடிந்து கதைமாந்தர் மேடைக்கு வரும்வரை பார்வையாளர்களோடு நாட்டு நடப்பையும் நகைச்சுவையையும் பகிரவேண்டும. இத்தனையும் நிறைவேற்றும் கட்டியக்காரன், கூத்தின் அனைத்துக் கூறுகளையும் தெரிந்தவனாக இருக்க வேண்டும். கூத்துக்கலையில் தேர்ந்த கட்டியக்காரன், பார்வையாளர்களின் தேர்ந்த கட்டியக்காரன், பார்வையாளர்களின் குரலாக, மக்களின் குரலாக இறுதிவரை இயங்குகிறான்.

- கட்டியக்காரன், கூத்து நடைபெறும் கால அளவுக்கேற்பக் கூத்தை நீட்டுவதற்கோ சுருக்குவதற்கோ ஏற்றார்போல், கதைமாந்தர்களை எல்லைக்குள் கொண்டுவந்து நிறுத்த வேண்டும். ஒப்பனை முடிந்து கதைமாந்தர் மேடைக்கு வரும்வரை பார்வையாளர்களோடு நாட்டு நடப்பையும் நகைச்சுவையையும் பகிரவேண்டும்.

- இத்தனையும் நிறைவேற்றும் கட்டியக்காரன், கூத்தின் அனைத்துக் கூறுகளையும் தெரிந்தவனாக இருக்க வேண்டும். கூத்துக்கலையில் தேர்ந்த கட்டியக்காரன், பார்வையாளர்களின் குரலாக, மக்களின் குரலாக இறுதிவரை இயங்குகிறான்.

**தெருக்கூத்தில் கட்டியக்காரன் பாடும் பாடல்**

வந்தேனே கட்டியக்காரன்
வெட்டிவேர் மரிக்கொழுந்து
வீசுதே வாசம்
வேடிக்கை விநோதமுள்ள
கட்டியக்காரன் (வந்தேனே)

பல்லில் முத்து வரிசை
பளபளன்னவே
பாங்கியர் இருபுறும்
சாமரம் வீசுவே (வந்தேனே)

கன்னத்தில் கனத்தமீசை
கையில் முறுக்கி
கபுதார் கபுதார்என்று
கையைக் கொட்டியே (வந்தேனே)

முறுக்கு மீசை முகத்தில்
பொறி பறக்க
அறிக்கை சொல்ல வேண்டியே
அன்புடன் வந்தேன் (வந்தேனே)

கோரைப் பல்லும் நீண்ட மூக்கும்
கோடையிடி போலக் காட்டி
தேரைப்போல் முதுகுடைய
தீரன் கட்டியக்காரன் (வந்தேனே)

செம்பட்டை மயிர் துலங்க
ஜெகத்தில் உள்ளோர் கலங்க
வெம்புடன் போலக் கட்டியன்
வீறுடனே வந்தேன் பாரீர் (வந்தேனே)

- இத்தகைய கூத்துகள் தமிழகத்தின் வடபகுதிகளில் நடத்தப்படுகின்றன. தமிழகத்தின் தென்பகுதிகளில் இத்தகைய கூத்துகளுக்குப் பதிலாக ஸ்பெஷல் நாடகங்கள் நடத்தப்படுகின்றன. சங்கரதாச சுவாமிகள் இந்த ஸ்பெஷல் நாடக முறையை உருவாக்கினார். பின்பு நடிகர் நடிகையர்கள் ஒருவரோடு ஒருவர் வெவ்வேறு இடங்களில் மாறி மாறி இணைந்து நடிப்பது இந்நாடகத்தின் இயல்புகளுள் ஒன்றாகும்.

- குறிப்பிட்ட ஊரில் நாடகம் நடத்துவதற்கு அவ்வூர் மக்கள் எந்தெந்த நடிகர்களை விரும்பி அழைக்கிறார்களோ அவர்களாக வந்து நாடகத்தில் நடிப்பார்கள். நாடகத்திற்கென்று தனியாக ஒத்திகை ஏதும் நடைபெற்றது. கலைஞர்கள், பாடல்களையும் வசனங்களையும் சூழ்நிலைக்கேற்ப நிகழ்த்துவார்கள். நடிகர்களும் எல்லோருக்கும் எல்லா நாடகங்களும் தெரிந்திருந்தால் தான் ஸ்பெஷல் நாடகத்தில் நடிக்க முடியும். அவரவர்கள் கற்ற வித்தையின் மூலம் ஒருவரை ஒருவர் வெல்லும் நோக்கத்தில் நிகழ்ச்சியைப் பேசியும் பாடியும் நிகழ்த்துவார்கள். நகர்ப்புறங்களைவிடக் கிராமப்புறங்களில் ஸ்பெஷல் நாடகங்களுக்கு மிகுந்த செல்வாக்கு உண்டு.

**நாடகவியல் ஆளுமைகள்**

**சங்கரதாச சுவாமிகள் (1867 – 192)**

- தமிழ்நாடக மரபைப் பின் பற்றியும் கால மாற்றங்களுக்கேற்ப நாடகம் படைத்தவர் சங்கரதாச சுவாமிகள். இசையை முதன்மைப்படுத்திக் கூத்து மரபுகளை உள்வாங்கி நாடகங்களைப் படைத்தார். பழங்கதைகளில் குறைவான நிகழ்ச்சிகளை எடுத்துக்கொண்டு

பாத்திரங்களின் தர்க்கத்திற்கு இடமளித்து நாடகங்களை உருவாக்கினார். சிறுவர்களைக் கொண்ட ‘பாய்ஸ் கம்பெனி’’ என்ற பாலர் நாடகக்குழுவை இவர் உருவாக்கியது குறிப்பிடத்தக்கது. இதைத் தொடர்ந்து பல குழுக்கள் உருவாயின. இவரைத் தமிழ் நாடகத் தலைமையாசிரியர் என அழைப்பர்.

- ஆட்டம், இசை, சிறிதளவு வசனம் என்று இருந்த தெருக்கூத்து நாடகங்களின் அமைப்பைக் குறைத்து, கற்பசைன் சிறப்பும் சந்தநயம் மிக்கதுமான பாடல்களை இவர் படைத்தார். நடிகர்கள் விருப்பம்போல் வசனங்களைப் பேசிவந்த நிலையை மாற்றி வரையறுத்த நாடகப் பிரதிகளை உருவாக்கினார். பழந்தமிழ் இலக்கிய வரிகளையும் உரையாடலில் பயன்படுத்தினார். இவரது நாடகங்களிலும் பாடல்களின் ஆதிக்கம் இருந்தது. இவர் பல புராண நாடகங்களையும் வரலாற்று நாடகங்ளையும் எழுதியிருக்கிறார். இசையை, கருநாடக இசைக் கூறுகளை முதன்மைப்படுத்தி நாடகங்கள் நிகழ்ந்தன. இவர்காலத்தில் படிப்படியாக நகரங்களை நோக்கி நாடகங்கள் நகர்ந்தன.

**மதுரகவி பாஸ்கரதாஸ் (1892 – 1952)**

- சுதந்திரப் போராட்ட காலகட்டத்தில் இந்திய அளவில் புகழ்பெற்றுத் திகழ்ந்தவர். தமிழ் நாடகக் கலைஞர் மதுரகவி பாஸ்கரதாஸ். ஆங்கிலேய அரசின் அடக்குமுறையை ஏதிர்த்தார். நாடு முழுவதும் விடுதலை அரசியல் வீறுகொண்ட காலகட்டத்தில் தேசிய விடுதலை இயக்கத்தின் மீதும் காந்தியடிகளின் அகிம்சைவழிப் போராட்டங்களின் மீதும் பற்றுக்கொண்ட இவர், தம் நாடகங்களில் பாடல்களின் வழி விடுதலைக்கருத்துகளைப் பொதுமக்களிடத்தில் கொண்டு சேர்த்தார்.

- ஆங்கிலேய அரசின் அடக்குமுறைச் சட்டங்கள் நாடகங்களைக் கட்டுப்படுத்திய போது தேசிய விடுதலைக் கருத்துகளை நுட்பமாக இணைத்து நாடகப் பாடல்களை இயற்றிக் கவி புனைவதில், புதிய முறையை உருவாக்கினார். பகத்சிங் தூக்கிலேற்றப்பட்ட நிகழ்வு, காந்தியடிகள் பங்கேற்ற வட்டமேசை மாநாடு, பஞ்சாப் படுகொலை ஆகிய நிகழ்வுகளைக் கொண்டு இவர் இயற்றிய நாடகப் பாடல்கள் ஆங்கில ஆங்கில அரசால் தடைசெய்யப்பட்டன.

- திரைப்படங்கள் அல்லாத அக்கால கட்டத்தில் மதுரகவியின் நாடகப்பாடல்களைப் புகழ்பெற்ற ஹிஸ் மாஸ்டர் வாய்ஸ் (His Master’s Voice) இசைத்தட்டு நிறுவனம் கிராமபோன் இசைத்தட்டுகளில் பதிவேற்றி உலகம் முழுவதும் கொண்டு சென்றது. புகழ்பெற்ற இசைக்கலைஞர்களான கே.பி. சுந்தராம்பாள்,கிட்டப்பா, எம்.எஸ். சுப்புலட்சுமி போன்றோரும் இவரின் நாடகங்களில் பாடி நடித்துள்ளனர்.

**பம்மல் சம்பந்தனார் (1873 – 1964):**

- ‘தமிழ் நாடகத் தந்தை’ என்றழைக்கப்பட்ட பம்மல் சம்பந்தனார் நாடக அமைப்பிலும் நடிப்பு முறையிலும் மாற்றங்களை ஏற்படுத்தியதன் மூலம் தமிழ் நாடகத்தை மேனாட்டு நாடகங்களுக்கு நிகராக மாற்றியவர். புராண, வரலாற்று நாடகங்களுடன் மக்களின் வாழ்க்கையை ஒட்டிய கதைகளைக் கொண்ட, இயல்பான பேச்சு மொழியில் அமைந்த சமூக நாடகங்களையும் இவர் நடத்தினார். பாடல்கள் மிகுந்திருந்த தமிழ் நாடகங்களில் உரையாடல்களை முதன்மைப் படுத்தினார்.

- நாடகங்களையும் இவர் படைத்துள்ளார். இரவு முழுவதும் நடைபெற்ற நாடகங்களை மூன்று மணி அல்லது நான்கு மணி நேரத்திற்குள் முடிக்கும் முறையைக் கொண்டுவந்தார்.

- 1891 இல் இவரால் ஏற்படுத்தப்பட்ட சுகுண விலாச சபை, தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட முதல் பயில்முறை நாடகக் குழுவாகும். இவர் எழுதிய 94 நாடகங்களும் அச்சு நூல்களாக வெளிவந்துள்ளன. அவற்றுள் மனோகரா, சபாபதி, சந்திரஹரி, சிறுத்தொண்டர் நாடகம், உத்திமபத்தினி போன்றவை குறிப்பிடத்தக்கன. நாடகத்தமிழ், நாடகமேடை நினைவுகள், பேசும்பட அனுபவங்கள் ஆகியன இவர் நாடகம் தொடர்பாக எழுதிய நூல்களாகும். ‘இந்திய நாடக மேடை’ என்ற இதழையும் இவர் வெளியிட்டார்.

**பாலாமணி அம்மையார் (19ஆம் நூற்றாண்டின் இறுதி):**

- பாலாமணி அம்மையார் முதன் முதலாக முழுவதும் பெண்களே பங்கேற்ற 'பாலாமணி அம்மாள் நாடகக் குழு'' வினைத் தொடங்கி நடத்தியவர். இவரின் குழுவில் எழுபதுபெண்கள் இருந்தனர். 'நாடக அரசி' எனச் சிறப்பிக்கப்பட்ட இவரது நாடகங்கள், சமுதாய சீர்திருத்தங்களையே உள்ளடக்கங்களாகக் கொண்டிருந்தன. நாடக மேடையில் பெட்ரோமாக்ஸ் விளக்குகளை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவரும் இவரே.

பாலாமணி அம்மையார் குறித்து, அவ்வை சண்முகம் ''எனது நாடக வாழ்க்கை'' என்ற நூலில் கீழ்க்காணுமாறு எழுதியுள்ளார்.

- 'குமப்கோணத்தில் இரவு ஒன்பதரை மணிக்கு நாடகம் ஆரம்பமாகும். இதற்காகப் பார்வையாளர்களை ஏற்றிக்கொண்டு மாயவரத்திலிருந்து இரவு எட்டு மணிக்கு ஒரு ரயில் கும்பகோணத்திற்கு வரும். அதேபோல எட்டரை மணிக்குத் திருச்சியிலிருந்து ஒரு ரயில் வரும். அந்த ரயில்கள், கும்பகோணத்தில் நின்று விட்டு, இரவு மூன்று மணிக்கு மீண்டும் பறப்பட்டு, மாயவரத்துக்கும், திருச்சிக்கும் போய்விடும். பாலாமணி நாடகங்களைப் பார்க்க ரசிகர்களுக்காக ஆங்கில அரசு இத்தகைய சிறப்புத் தொடர்வண்டி விட்டது. இத்தொடர்வண்டியை,'பாலாமணி ஸ்பெஷல்' என்று அழைத்தனர்''.

**ஆண்டன் செகாவ் (1860 – 1904)**

ஆண்டன் செகாவ் ரஷ்ய நாட்டைச் சேர்ந்த நாடக ஆசிரியர் மற்றும் சிறுகதை எழுத்தாளர். இவர் புனைகதை இலக்கிய உலகில் தலைசிறந்தவராகக் கருதப்படுகிறார். நாடக ஆசிரியராக இருந்து படைத்த, கடல் பறவை (The Seagull) அங்கிள் வான்யா (Uncle Vanya), மூன்று சகோதரிகள் (Three Sister), செர்ரிப் பழத்தோட்டம் (The Cherry Orchard) ஆகிய நான்கு செவ்வியல் நாடகங்கள் மற்றும் அவரது சிறந்த சிறுகதைகள் ஏனைய எழுத்தாளர்கள் மற்றும் விமர்சகர்களிடம் தனி மரியாதையை ஏற்படுத்தின.

ஹென்ரிக் இப்சன் மற்றும் ஆகஸ்ட் ஸ்ட்ரின்ட்பெர்க் ஆகிய இருவருடனும் செகாவ் இணைந்து நவீனத்துவத்தை நாடகங்களில் தொடங்கிவைத்ததில் இம்மூவரும் முக்கியமானவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். மேலும். செகாவின் இந்நாடகங்கள் மரபுவழி நடிப்புக்குப் பதிலாக, பார்வையாளர்களுக்கு ''மனநிலை சார்ந்த அரங்கியல்'' என்னும் நுட்பத்தையும்,''நாடகத்தின் உரைகளுக்குள் ஆழ்ந்து போகும் நிலையையும்'' கொடுத்தன.

**ஆர். எஸ். மனோகர் (1925 – 2006)**

- தமிழ் நாடக உலகில் 'நாடகக் காவலர்' என்று போற்றப்பட்ட நடிகர் ஆர்.எஸ். மனோகர் ஆவார். கல்லூரி நாடகத்தில் 'மனோகர்' கதாபாத்திரத்தில் நடித்ததால், அதையே தன் பெயராக மாற்றிக் கொண்டவர். இவரின் இயற்பெயர் 'ராமசாமி சுப்பிரமணியன்' பல படங்களில் கதாநாயகனாக நடித்தார். ஆனாலும், நாடகத்தின் மீதான காதலால் 'நேஷனல்தியேட்டர்ஸ்' நாடக நிறுவத்தை 1954 இல் தொடங்கினார். 'இன்ப நாள்','உலகம் சிரிக்கிறது' ஆகிய சமூக நாடகங்களை அரங்கேற்றினார். பின்னர் பிரம்மாண்ட இதிகாச, வரலாற்று நாடகங்களை அரங்கேற்றினார். ராவணன், சூரபத்மன் உள்ளிட்ட எதிர்மறைக் கதாபாத்திரங்களைக் கொண்ட நாடகங்களைப் படைத்தார். சிறப்பான மேடை அமைப்பும், தந்திரக் காட்சிகளும் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றன. இவரின் 'இலங்கேஸ்வரன்' நாடகம் வியக்கத்தக்க அளவில் தயாராகியிருந்தது. இலங்கையில் இந்த நாடகத்தைத் தொடர்ந்து 21 நாள்கள் தொடர்ந்து நடத்துவதற்கான வாய்ப்பு தேடி வந்தது. நாடகத்தைப் பார்த்து வியந்த மக்கள், இவருக்கு 'இலங்கேஸ்வரன்' என்ற பட்டத்தைக் கொடுத்து கவுரவித்தனர். இவரது நாடகங்களில் பன்முறை மேடையேறிய நாடகம் இது,'சாணக்கிய சபதம்','சூரபத்மன்','சிசுபாலன்','இந்திரஜித்','நரகாசுரன்','சுக்ராச்சரியார்' உள்ளிட்ட நாடகங்களும் குறிப்பிடத்தக்கவை. சொன்ன நேரத்துக்கு நாடகம் தொடங்கி விட வேண்டும் அனைத்தும் துல்லியமாக இருக்கவேண்டும் என்பதில் கவனமாக இருப்பார். ஒவ்வொர நாடகத்துக்கும் 30 நாள்கள் ஒத்திகைபார்ப்பவர். இவர் 200-க்கும் மேற்பட்ட திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.

தமிழ் நாடகத் தலைமையாசிரியர் என அழைக்கப்பெற்ற திரு. சங்கரதாச சுவாமிகளும், கவிராயர் முத்துச்சாமியும் உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது, கவிராயர், சுவாமிகளை நோக்கி,“சங்கரதாச சுவாமிகளே! உம்முடைய பாடல்கள் முள்ளும் முரடும்போல் இருக்கின்றன” என்றார். அவர் கூறியதனைக் கேட்டவுடன், சங்கரதாச சுவாமிகள் சிரித்துக்கொண்டே,‘கவிராயர் பாடல்கள் கல்லும் கரடும்போல இருக்கின்றனவே!” என்றாராம். இருவருமே புலவர்கள். புலவர்களின் சொல்லாடல், அவர்களின் பேச்சிலும் ஊடுருவியுள்ளதைக் காணலாம். முள்ளும் முரடும், கல்லும் கரடும் என்பன முரட்டுத்தனமான பாடலென்றும் கடினமான பாடலென்றும் பொருள் தோன்றும். ஆனால் உட்பொருள் அதுவன்று, முள்ளும் முரடும்போல் என்றால், பலாச்சுளைபோல் இனிக்கிறது எனவும், கல்லும் கரடும் என்றால், கற்கண்டைப்போல் இனிக்கிறது எனவும் பொருள்படும்.

- தமிழ் நாடகத் தலைமையாசிரியர் என்னும் நூலிலிருந்து டி.கே. சண்முகம்.

**நாடகம்**

**‘ஒரு ருபாய்’**

- **ஜெயந்தன்**

**(ஒற்றை நடிகர் நாடகம்)**

- மேடையில் சவுக்குக் கழிகள் ஆங்காங்கே நடப்பட்டுள்ளன. அந்தக் கழிகளின் தலைப்பில் போதுமான நீள அகலமுள்ள அட்டைகள் அறையப்பட்டுள்ளன. அட்டையில் எழுத்துகள் புளோரஸ்ண்ட் மையால் எழுதப்பட்டுள்ளன. இந்தக் கழிகள் எல்லாற்றையும் ஒரு நீள வடக்கயிறு இணைத்துக் கொண்டு சென்றிருக்கிறது. இந்தக் கயிற்றைப் பிடித்துக் கொண்டுதான் நடிகன் ‘பேருந்து நிலையத்திலிருந்து ‘வீடு” வரை பயணிக்கிறான்.

- கயிறு, தரையிலிருந்து சுமார் நான்கடி உயரத்தில் இருக்கிறது. மேடையில் மெல்ல ஒளி வளரும்போதே, ஒரு ‘கனமான’ ஸ்பாட்லைட், கழிகளில் அறையப்பட்டுள்ள அட்டைகளின் மேல் விழுந்து, நகருகிறது. அது எல்லா அட்டைகளையும் காட்டி முடிக்கவும், மேடையில் ஒளி போதுமான அளவு வளர்ந்து நிற்கவும் சரியாக இருக்கிறது.

- கழிகன் ‘பேருந்து நிலையம்’ மற்றும் ‘வீடு’ இரண்டின் முன் மட்டும் நாற்காலிகள் உள்ளன. பேருந்து நிலையம் முன்பு உள்ள நாற்காலியில் நடிகன் உட்கார்ந்திருக்கிறான். அவன் தலைநாட்டி, துடைகளில் முன்கை வைத்து, முகவாய் தாங்கி உட்கார்ந்திருக்கிறான். உடை, ஒரு சாதாரண பேண்டும் சிலாக் சட்டையும், வயது 32 லிருந்து 36 வரை.

- இடையில், பின்னணியில் ஒரு பெரிய பேருந்து நிலையத்தின் இரைச்சலும் சத்தங்களும் அவை மெல்ல எழுந்து, உரத்து பின்மெல்ல அடங்குகின்றன. முகத்தில் சோகம், இருந்தாலும், விடுபட்டுத்தானே ஆக வேண்டும்? என்ற உணர்வு கூட, அவன் மெல்லக் கைகளை உதறி, இயல்பு நிலைக்கு வர முயல்கிறான்.

அவன்: ரொம்பப் பெரிய விஷயம் இல்லதான். ஆனாலும் (இடைவெளி)

- நூத்து அம்பது ரூபாய் (இடைவெளி) பிக்பாக்கெட் ஆயிடுச்சு. எவனோ அடிச்சுட்டான். (நேரடியாக அவையைப் பார்த்து) இவ்வளவுதானே. ஒரு பக்பாக்கெட் ஆயிட்டதுக்கா என்னமோ கப்பலே கவுந்து போயிட்ட மாதிரி உக்காந்து இருந்தே அப்படின்னு கேக்கறீங்களா? அது உங்க குற்றமில்லதான். அது இயற்கைதான். என்னதான் இருந்தாலும் அடிபடுறது வேற ஒருத்தன். இல்லியா? இன்னொருத்தன் பட்ட அடிய புரிஞ்சுக்கறது கஷ்டம்தான் … நீங்க சொலறமாதிரி கப்பல் கவுந்து போகாம இருக்கலாம். ஆனா …. ஆனா ஒரு ரகசியம் சொல்றேன்.

- ஒரு நகரமே காணாமப் போச்சு ஐயா, என்னோட மதுரை மாநகரமே காணாமப் போச்சு. கூடல் மாநகரமே காணாமப் போச்சு, வெளங்கல, இல்ல? சொன்னேன். அந்தப் பணத்த நான் ஒண்ணும் கைக்காவலுக்கு எடுத்துகிட்டு வரல. அதுக்குச் சரியான செலவு இருந்தது.

- (அவன் முதலில் தனது சட்டைப் பையில் தேடிவிட்டு, பிறகு பேண்ட் பாக்கெட்டிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து, அந்தக் கழிமேலேயே சாய்ந்து கொண்டு படிக்கிறான்)

டைபை டைபை – பை ஒண்ணு
பச்சரிசி – 1 கிலோ
குக்கர் கேஸ்கட் - 1
பாரக்ஸ் - 1
டெரிபிளின் மாத்திரை – 5
வேணுவுக்கும் சாந்திக்கும் அல்வா, பக்கடா.
பச்சப்பழம் - 6
அம்மாவுக்கு வெற்றிலை, பாக்கு.
(அந்தக் கடிதத்தை மடித்து மீண்டும் சட்டைப் பையில வைத்தபடி)

- சரி,ஆனா இப்ப பச்சரிசி, மாத்திரை எல்லாம் இருக்கட்டும். என்னால எங்கம்மாவுக்கு வெத்தலபாக்கு வாங்க முடியுமா? அது கூட வேணாம். நான் திரும்பி வீட்டுக்குப்போக டவுன் பஸ்ஸுக்கு ஒரு ரூபா வேணுமா, அதுக்குக் கருணை செய்யுமா இந்த நகரம்? அதோ எதிர்ல. சர்பத் கடையில நிக்கிறாரே அதோட முதலாளி. அருகிட்டப் போயி, மெதுவா ''சார். ஒரு விஷயம். பர்ஸ் பிக்பாக்கெட் ஆயிடுச்சி. வீடு தெப்பக்குளம் பக்கம், திரும்பிப்போகப் பஸ்ஸுக்கு ஒரு ரூபா வேணும். கொடுத்தா, நாளைக்கி வர்ரப்ப கொடுத்துடுவேன்னு சொன்னா, அவரு என்னா சொல்வாரு? ஒண்ணும் சொல்ல வேணாம். கொஞ்சம் மேலயும் கீழயும் பாத்துட்டு அப்புறம் கட்டக்குரல்ல,''எத்தினி பேரு இப்பிடிக் கௌம்பி இருக்கீங்கன்னு'' கேட்காம விட்டா பெரிசு, இல்லியா?

- என்னா கொடுமையக இது. ஒரு பிக்பாக்ட்காரனால, ஒருத்தன, அவன் ஊருக்குள்ள இருக்கப்பவே, ஊருக்கு வெளியே தூக்கி எறிஞ்சுட முடியுமா?
இது நான் பொறந்த ஊருங்க. எங்க ஊரு. எங்க ஊருன்னு ஆயிரம் தடவ சொல்லி மார்தட்டுன ஊருங்க. வெளியூர்ல இருக்கப்ப யாராவது சொந்த ஊர் எதுன்னு கேட்டா? உள்ளுக்குள்ள ஒரு பெருமையோட 'மதுரை' ன்னு சொல்லுவேன்.

- இப்ப அந்த ஊருக்கு நடுவுல நிக்கிறப்பவே, அதுக்கும் எனக்கும் எந்தச் சமபந்தமும் இல்லே. அது யாரோ, நான் யாரோ! நீங்க உள்ளுக்குள்ள முணுமுணுக்கலாம். 'என்னய்யா பர்ஸ் போயிட்டா கையில பணம் இருக்காது. ஒண்ணும் வாங்க முடியாது. ஒண்ணும் செய்ய முடியாது. கஷ்டம்தான். ஆனா, அதுக்காக ஒருத்தன் இவ்வளவு அலட்டிக்கனுமானு கேக்கலாம்.

- உண்மதான், உண்மதான், ஆனா, என்மனசு என்னமோ ஆறலிங்க. என்னால ஜீரணிக்க முடியலிங்க. ஒரு மனுஷனையும் அவனோட நகரத்தையும் சேத்துக் கட்டியிருக்க சங்கிலி ஒரு மணிப்பர்ஸ்தானா? அது போயிட்டா எல்லாம் போயிடுமா என்ன வாழ்க்கை விதி இங்க அமல்ல இருக்கு?

(இப்போது அவன் இரண்டடி முன்னால் வந்து அவையிலிருந்து யாரோ பேசுவது போலவும் அதைக் கேட்பது போலவும் காது கொடுக்கிறான்)

என்னா சொல்றீங்க?
தயவு செஞ்சு கொஞ்சம் சத்தமா பேசுங்க
சரிங்க, சரிங்க, ம்….. சரிங்க, சரிங்க.
(முடிவாக) சரிங்க.

- நீங்க முதல் வரிசையில் இருந்து பேசுனதுனால, ஒங்க பேச்சு சபை முழுசுக்கும் கேட்டிருக்காது அதனால மொதல்ல, நீங்க சொன்னத சபைக்குச் சொல்லிடுறேன்.

(அவன் முற்றிலும் வேறொரு பாணியில் பேச ஆரம்பிக்கிறான்)

- மிஸ்டர், சிறுகதையைப் பத்தி சொல்வாங்க: முதல் பக்கத்துல ஒரு துப்பாக்கி தொங்குனா,நாலாவது பக்கத்துல அது வெடிச்சாகணும்னு, அந்த மாதிரி, ஒரு ஒற்றை நடிகன். நடிகை நாடகத்துல, முதல்ல ஒரு பேருந்து நிலையத்தையும் கடைசியில ஒரு வீட்டையும் போர்டு போட்டு காட்டிட்ட பின்னாடி, அதாவது இந்த நாடகத்தோட நீளம், இந்த

ரெண்டுக்கும் இடைப்பட்ட பயணம்னு சொல்லிட்டுப் பின்னாடி, அந்தப் பயணத்த அதாவது நாடகத்த, அதாவது ஒரு ஒற்றை நடிகன் நாடகத்த, இருபது, இருபத்தஞ்சு நிமிஷத்துக்குள்ள முடிச்சாகணும். நீ என்னடானா பொறப்பட்ட எடத்துல நின்னே அஞ்சு நிமிஷமா பேசிக்கிட்டு இருக்கியே. இப்படியே பத்துப் பதினைந்து நிமிஷத்த பாதி தூரத்துக்கே செலவிழிச்சுட்டு, அப்புறம் நேரம் பத்தாம, வீட்டப் பாத்துக் குடுகுடுனு ஓடுவியா?

(தொண்டையைக் கனைத்துக் கொள்கிறான். பிறகு எழுத்து நடையில் பேசுகிறான்).

- அவையோர்களே! இப்போது அவர் சொல்லியது அனைத்தும் உங்களுக்கும் என்னவென்று தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அவர் சொன்னதும் சரிதான். அது எனக்கும் தெரிந்த விஷயம் தான். ஆனாலும், அதைநான் அவ்வளவு கண்டிப்பாக அனுசரிக்காததற்குக் காரணம் இருக்கிறது. ஒரு கதையும் கருத்தும் என்று எடுத்துக் கொண்டால் அதை இரண்டு வகையில் சொல்ல முடியும்.

- ஒன்று: நிகழ்ச்சிகளை வரிசையாகச் சொல்லி, கடைசியில் நாம வரவேண்டிய முடிவுக்கு, அதாவது கருத்து அடைவுக்கு வருவது.

- இரண்டு: முதலிலேயே கருத்தைச் சொல்லிவிட்டுப் பிறகு அதை நியாயப்படுத்தக் கூடிய நிகழ்ச்சிகளை வரிசையாகச் சொல்லிக்கொண்டு போவது. என்னுடைய கதை இரண்டாவது வகைகையைச் சோந்தது. அதனால், அஸ்திவாரத்தைக் கொஞ்சம் பலமா போட்டுவிட்டுத்தான் ஆரம்பிக்க வேண்டும். இருந்தாலும் நன்றி ரகிகர் அவர்களே! நான் இப்போதே எனது பயணத்தைத் தொடங்குகிறேன்.

- (மீண்டும் பழையபடி பழைய தொனியில்)

- ஒரு மனுஷனையும் அவனோட நகரத்தையும் சேத்துக் கட்டியிருக்க சங்கிலி அவனோட பர்ஸ்தானா? அது போயிட்டா எல்லாம் போயிடுமா? என்ன வாழ்க்கை விதி இங்க. அமலில் இருக்கு. சரி, பொதுவான மனுஷ ஜாதிமேல வச்ச அக்கறை போதும். இப்ப சொந்த கவலைக்கு வர்றேன். கையில் காசுமில்லை, கடன் கொடுப்பார் யாருமில்லை. வீட்டுக்கே நடராஜா சர்வீஸ்லதான் திரும்பணும். வீடு, தெப்பக்குளம், தாமரை நகர், அஞ்சு கிலோ மீட்டராச்சும் இருக்காதா? நடந்துட முடியாதா? முடியுமா? முடியாதாங்குற கேள்வியில்ல. முடிஞ்சாகணும். ஓகே. ஆனா நேரா விடுவிடுன்னு நடந்துடக் கூடாது. எப்பவும் டவுனுக்கு வந்ததும் காச வச்சுக்கிட்டு நடந்து போற ருட்லயே இப்ப காசு இல்லாம நடந்து, இந்த அனுபவம் எப்படியிருக்கும்னு பாத்துடனும். சரி நடக்கலாம்.

- (அவன் கயிற்றின் ஆரம்பத்தை வலது கையில் பிடித்துக் கொள்கிறான். பிறகு தேவாலயம் போர்டை நோக்கி மிக மெதுவாக நடக்கிறான். இங்கே நடிகன் நடக்காமலே நடக்கும் மௌன நாடக (Mime) நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்)

- இந்தத் தேவாலயம் வந்தாச்சு. என்னப் பாத்ததும் தேவாலயம் வாசல்ல இருக்க பிச்சக்காரங்க எல்லாம் உஷாராயிடுறாங்க. தட்டுகள கையில் எடுக்கிறாங்க. அடப் பாவிங்களா, இப்ப, என் நெலம உங்க நெலமயவிட மோசமப்பா. இப்ப ஒங்ககிட்டனாலும் டெண்டொண்ணு இருக்கும்!

- இந்தக் கோயில் வாசல் வரிசையில் கூட நான் யாருக்கும் பிச்ச போட்டதில்லை. ஒரேயொரு தடவமட்டும், அந்தா, கடைசியில உக்காந்திருக்கானே தாடி ஆசாமி. அவனுக்கு 50 காசு போட்டுட்டேன். அதுல இருந்து அவன் புடிச்சுக்கிட்டான். எப்ப என்னப் பாத்தாலும் அவன் முகம் மலர்ந்திடும். அதுல நூறு பெர்சன்ட் எதிர்ப்பார்ப்பு. இந்த எதிர்பார்ப்பையும் முகமலர்ச்சியையும் கெடுக்க விரும்பாமயே, அப்புறம் ஒவ்வொரு தடவையும் காசு போட ஆரம்பிச்சேன். எனக்குக்கூட ஒரு ஆசை. ஒரு தடவ இவனுக்குக் காசு போடாம விட்டு இவன் ரியாக்ஷன் எப்படியிருக்கும்னு பார்க்கணும். ஆனா போடான, இருக்க முடியாது. இப்ப ஒரு சான்ஸ், இவன் ரியாக்ஷன் எப்படியிருக்கும்னு பாத்துடலாமே.

(அவன் நான்கு அடிகள் நடக்கிறான். பின் சட்டென்று திரும்பிக் கீழ்நோக்கிப் பார்க்கிறான். பார்த்துத் திகைக்கிறான்)

- ஓ!, இது என்ன பார்வை! நான்தான் பிச்சைக்காரன் என்றால், நீ எனக்கு மேல பிச்சக்காரனா போயிட்டியா? என்று கேட்கும் பார்வையா! அதுதான் அந்த அமரத்துவமான பொன் மொழியா! இருந்தத விட இப்ப ரெண்டு மடங்கு மூணு மடங்கு அதிகமாகத் தெரியுது. இப்பக் குடிச்சாகணுமென்னு வருது! இதுதான் மனுஷ புத்தி, இல்ல? சில மனுஷ பலவீனங்கள் அவன் மண்டைக்குள்ளயே உறஞ்சு கெடக்கு. The gone fish was so big - ஓடன முயல்தான் பெரிய முயல்.

- ரெண்டு பக்கமும் கடைகள். வர்த்தக நிறுவனங்கள், பகல்லயே, பத்து பன்னெண்டு டியூப் லைட் போட்டு ஜொலிக்கும் ஜவுளிக் கடையில் இருந்து செருப்புக்கடை வரையிலும், ஆனா இன்னிக்கு எனக்கு எதுவுமே சம்பந்தமில்ல. எனக்குக் கொஞ்சம் தாமாஸா கூட இருக்கு. இன்னைக்கு இவனுக யாராலயும் என்னைய ஒண்ணும் அட்ராக்ட் பண்ணிட முடியாதாக்கும். மேலக் கோபுர வாசல். இந்த வாசல் தெருவும் கீழக் கோபுர வாசல் தெருவும் சந்திக்கிற எடத்துல ஒரு நாலஞ்சு பழைய புஸ்தகக் கடை. எனக்குப் புதுப் புத்தகங்கள் பிரியம்தான். ஆனா, பழைய புஸ்தகம்னா கேரி.

- ஆனா, இப்ப பயம், இந்தப் பழைய புத்தகக் கடையும் அந்தப் பாரதி புத்தக நிலையம் மாதிரி ஏதாவது ஏடாகூடமா கேட்டு வச்சா? மெதுவா நழுவுறேன்.

- கீழக்கோபுர வாசல் இன்னம் நூறு நூத்தம்பது அடியிருக்கும். அய்யோ போச்சுடா! திண்டுக்கல் செல்வராஜு மாமா! செல்வராஜ் மாமா அடுத்தவன் பாக்கெட்ல கை வைக்கிற 65-வது கலைய அய்யம் திரிபுற அறிஞசவரு. 'தெரிந்தவன் என்று ஒருவன் கண்ணில் படுவது என்பதே தனக்குச் செலவு செய்வதற்காக' என்ற கொள்கையுடையவர். 'வா! வா! வா! பாத்து எவ்வளவு நாளாச்சு. மொதல்ல டிபன் வாங்கிக்குடு'. இது பாலபாடம். முடிஞ்சா ஒரு வேட்டி சட்டை கூட வாங்கிடுவாரு.

- இந்தப் பிக்பாக்கெட் விவகாரம் எல்லாம் அவருக்கு அத்துப்படி. எனக்கு இத்தனை வருஷத்துக்குப் பின்னாடி இப்பதான் ஒரு தடவ நடந்திருக்கு. இனி வாழ்நாள் பூரா நடக்காதுனு நெனைக்கிறேன். ஏன்னா, இனிமே பர்ஸ் வச்சுக்கவே போறதில்ல. ஆனால், செல்வராஜ் மாமாவுக்கு எத்தினியோ தடவ பிக்பாக்கெட் போயிருக்கு. எவன் கிட்டயாவது திண்டுக்கல் போக டிக்கட்டுக்குப் பணம் கறக்கணும்னா இவருக்குப் பிக்பாக்கெட் ஆயிடும்!.

- இப்பதான் இவருகிட்ட உண்மையைச் சொன்னா, என்னாடா? மாப்ள நம்ம வழியிலயே வர்றானானுதான் நெனப்பாரு. அதோட இவருகிட்ட இன்னொரு நல்ல குணம். எவ்வளவு செலவு வச்சாலும் யாராச்சும் அகப்பட்டா, என்னப்பா ஒரு காப்பி வாங்கிக் குடுக்க அப்படிப் பேய்முழி முழிக்கிறான்னு சொல்லக் கூடியவர். (பதற்றத்துடன்) ஆக எப்படியும் இவருகிட்ட இருந்து தப்பிச்சாகணும். நான் சட்டுன்னு ரைட்ல அருணா ஜவுளிக்கடையப் பார்த்து நடக்குறேன்.

- (அவன் கயிற்றை விட்டுவிட்டு நடு – முன் மேடைக்கு வருகிறான்)

அங்க ஜவுளிக்கடை ஓரம்,'எதெடுத்தாலும் பத்து ரூபா'' முன்னால் வந்து நின்னுக்கிறேன். உடனே என்னோட ஊனக்கண் போயி, ஞானக்கண் திறந்துடுது,

- (அவன் ஒரு மாதிரி உடம்பைக் குறுக்கிக் கொள்ளக் கண்கள் மட்டும் திசை மாறுகின்றன)

- மாமா ரோட்டு நடுவுல வர்ராரு. பத்தடி, 15 அடி, 30 அடி, இப்ப சரியா என் முதுகுக்குப் பின்னாடி போய்க்கிட்டு இருக்காரு. 10, 20 30, 40, 50 அடி, மாமா போயே போயிட்டாரு. போயிட்டாருனு தெரிஞ்சு தலையைத் திருப்பிப் பாக்குறேன். என் கண்கள் ஞானக்கண் இல்ல. பூனக்கண்ணுனு அப்பதான் தெரியுது. மாமாவும் ரெண்டு பேர் தள்ளி,'எதெடுத்தாலும் பத்து ரூபா' பாத்துக்கிட்டு இருக்காரு. நான் நைசா நழுவுறேன்

(மீண்டும் பழைய இடத்திற்குச் சென்று கயிற்றைப் பிடித்துக் கொள்கிறான். நடக்கிறான்)

- ஞாபகம் வருது. எங்க வீட்டுப் பக்கத்துல ஒரு குடிசை. அதுல ரெண்டு சிறுசுகளோட லெட்சுமி. ஒரு நாளு அவளோட 10 வயசுப் பையன் பள்ளிகூடத்துல சுற்றுலா போறாங்கனு 10 ரூபா கேட்டப்ப சொல்றா' அட போடா, நான் ஒரு ரூவாயக் கண்டு ஒரு வாரம் ஆவுது தெரியுமா? அவன் கிட்ட சொன்னது மட்டுமல்ல, மறுநாள் எங்க வீட்டுக்கும் வந்து, கண் கலங்க அதச் சொல்லிட்டுத்தான் 10 ரூபாய் கடன் வாங்கிட்டுப்போனா. ஒரு ரூபாய் இல்லாம ஒரு வாரமா ஒருத்தி – ரெண்டு பிள்ளைகளோட! அப்பக்கூட அது எனக்குப் பெருசா ஓரைக்கல. இப்பதான் அதோட முழு கனம் தெரியுது.

(அவன் 'கீழமாசி' வருகிறான்)

- கீழமாசி வீதி வந்தாச்சு. இங்க இருந்துதான் வழக்கமா தெப்பக்குளம் பஸ் ஏறுறது. இப்ப, இன்னிக்கு இங்க இருந்துதான் எக்ஸ்ட்ரா நடை. விளக்குத்தூண் தாண்டி, கீழ வெளிவீதி போயி, அப்புறம் அங்க இருந்து நேரா நடையைக் கட்டணும். கீழவெளி வீதி வந்தாச்சு. மாலை மங்கிட்ட நேரம். பஸ் ஸ்டாண்டுல கொஞ்சம் பேரு நின்னுகிட்ட இருக்காங்க. ஒரு யோசன. யாராச்சும் தெரிஞ்சவங்க இருக்காங்களானு பாக்கலாமே. இருந்தா பேசிக்கிட்டு இருந்துட்டு, பஸ் வந்ததும் எனக்கும் டிக்கட் வாங்கிடுங்கனு சிம்பிளா சொல்லிட்டு ஏறிடலாமே. ஆனா அப்படி தெரிஞ்சவங்கதான் யாரையும் காணாம். அப்ப ஒரு நிகழ்வு. பஸ்சுக்கு நின்ன பெரியவர் ஒருத்தர் திடீர்னு மயக்கம் போட்டு விழுந்துடுறாரு. கூட இருந்த ஒரு சின்னப்பெண் அய்யோ தாத்தா, தாத்தானு கத்துறா. ஒரே பரபரப்பு. ரெண்டு பேரு அவரத் தூக்கி உக்கார வைக்கிறாங்க. ஒரு அம்மா என்னப்பாத்து ஒரு சோடா வாங்கியாங்களேனு கெஞ்சற மாதிரி சொல்ல, என்னையறியாம நான் ஓடுறேன். கடை பக்கத்துலதான். சொன்னதும், கடைக்காரன் ஒரு சோடாவ கொடுக்குறான். கொண்ணாந்து கொடுத்ததும் பெரியவர் முகத்துல தெளிக்கிறாங்க. அவருக்குப் பிரக்ஞை வர்ரதுக்கு முன்னால எனக்கு வந்துடுது. அடடா! அந்தச் சோடா பாட்டிலுக்கும் காசுக்கும் நாமதான பொறுப்பு. அதுக்கு எங்க போறது? பெரிய வெக்கக்கேடா இல்ல போயிடும். அப்பதான் என் மண்டைக்குள்ளயும் ஒரு கிரிமினல் செக்ஷன் இருந்தது புரிஞ்சது. அந்தக் கூட்டத்தையும், இருட்டையும் பயன்படுத்திக்கிட்டு, மெல்ல நடையைக் கட்டிட்டேன். (மெல்லச் சிரிக்கிறான்) இருந்தாலும் நூறு இருநூறு அடி வரையிலும் பயன்தான். கடைக்காரன் இல்லாட்டி யாராவது, சோடா வாங்கியாந்தது நீங்கதானேனு கூப்பிடுட்டா?

(மீண்டும் நடக்கிறான்)

- தினமணி டாக்கீஸ் வந்தாச்சு, குருவிக்காரன் சாலை சந்திப்பு வந்தாச்சு, இன்னம் ரெண்டு ப்ர்லாங்கு நடக்கணும். கை, கால் அசந்து வருது (அவன் நடையில் களைப்பும் தளர்ச்சியும்) இனிமே கட்டடங்கள் கூட அவ்வளவு கிடையாது. ஆடிக்காத்து வேற, இந்தா, அதுவும் அது பங்குக்கு என்னையப்பதம் பாக்க வந்துருச்சு போல இருக்கே.

- (காற்றின் பெரிய இரைச்சல் கேட்கிறது. அவன் காற்றையும், கண்ணில் விழும் தூசியையும் சமாளிக்க முடியாமல் தடுமாறுகிறான். பிறகு காற்று மெல்ல அடங்கப் பெருமூச்சு விடுகிறான்; நடக்கிறான்)

ஒரு வழியாக வீட்டுப பக்கம் வந்தாச்சு, அந்த வீடு.

(அவன் நின்று கண்கள் விரியப் பார்க்கிறான்)

- அதென்ன வீட்டு முன்னால் அவ்வளவு கூட்டம்? என்ன நடந்திருக்கும்? யாருக்கும் ஒடம்பு சரியில்லயா? ஏதோ ரெண்டு போலீஸ் தொப்பி கூடத் தெரியுது.

(வேகமாக நடந்து வீட்டருகில் வருகிறான்)

- யாரோ சொல்றாங்க. "என்னாது அந்தா அங்க வர்றது அவரு மாதிரியில்ல தெரியுது"

- திடீர்னு கூட்டம் பூரா என் பக்கம் திரும்புது. என் மனைவி அழுது அடிச்சுக்கிட்டு ஓடி வர்றா. பின்னால என் அம்மா. பிள்ளைங்க. விஜி என் மேல விழுந்து, கட்டிப் பிடிச்சு அழுகுறா.

- எனக்கு ஒண்ணும் வெளங்கல. என்னா என்னானு கேக்குறேன். அமமாதான் 'அட அய்யா, நீ பஸ்ல அடிபட்டி செத்துப் போயிட்டேனு சொல்லிட்டாங்க அய்யா'னு, சொல்லிட்டு அழுவுறாங்க.

- விஷயம் இதுதான், என் பா்ஸ அடிச்சுட்டுப் போனவன் ஏதோ ஒரு பஸ்ல அடிபட்டுச் செத்துப் போயிருக்கான். அவன் கிட்ட என்னோட பா்ஸ், அதுல என் விலாசம். தகவல் கொடுக்க போலீஸ் என் வீட்டுக்கு வந்தாச்சு.

- (அவன் அங்குள்ள நாற்காலியில் உட்காருகிறான். சிறிது நேரம் எடுத்துக் கொள்கிறான்)

- எல்லாரும் போயாச்சு. வீடும் நா்மல் ஆயிடுச்சு. பிள்ளைங்க, விஜி, அம்மா எல்லாரும் படுத்தாச்சு. எனக்குத்தான் தூக்கம் வரல. நடந்தது எல்லாம் வந்து, வந்து போவுது. ஆனா, இது அடிக்கடி வருது. லெட்சுமி சொன்னது. ‘‘அட போடா, ஒரு ரூவாயக் கண்டு வாரம் ஒண்ணாச்சு’’

(அவன் நாற்காலியில் எவ்வளவு கால் நீட்டிச் சாய முடியமோ அவ்வளவு சாய்ந்து தலையைப் பின்புறமாகப் போடுகிறான். மெல்ல மேடையில் ஒளி குறைய, திரையும் இறங்குகிறது)

**ஜெயந்தன் (1937 – 2010)**
ஜெயந்தன் என்னும் புனைப்பெயர் கொண்டவர் பெ. கிருஷ்ணன். இவர், திருச்சி மாவட்டம் மணப்பாறையைச் சேர்ந்தவர். இவரது ‘நினைக்கப்படும்’ என்ற நாடகம் இலக்கியச் சிந்தனை பரிசு பெற்றது. ‘சிறகை விரி, வானம் உனது’ என்னும் இவரது வானொலி நாடகம், அகில இந்திய வானொலியில் முதல் பரிசு பெற்றது. இவர், சிந்தனைக்கூடல்’ என்னும் அமைப்பைத் தொடங்கி, இளைஞர்களுக்கு எழுத்துப் பயிற்சியையும் பேச்சுப் பயிற்சியையும் அளித்தவர்.

## பேச்சுக்கலை

- ”வாயுள்ள பிள்ளை தான் பிழைக்கும்“ என்று சொல்லக் கேட்டிருப்போம். பேச்சின் மூலம் எண்ண ஓட்டங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்த முடியும். தனிமனிதனின் தேவைக்கு மட்டுமல்லாமல் சமூகத்தின் தேவைக்கும் பேச்சுக்கலை அவசியமாகும். கருத்து வெளிப்பாட்டிற்கான பேச்சுமொழி, கலை வடிவமாக உருப்பெற்றுச் சமூகத்தின் மிக இன்றியமையாத அடையாளமாகவும் ஆளுமைத் திறனாகவும் வளர்ந்திருக்கிறது. இதன் காரணமாகவே

- ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்து ஒன்றாம் புலவர் வார்த்தை பதினாயிரத்து ஒருவர் என்று ஔவையார் பாடியுள்ளார். கற்றறிந்த அறிஞர்கள் கூடியிருக்கும் உயர்ந்த சபைகளில் அமரும் தகுதி, நூறு போரில் ஒருவருக்கே கிடைக்கும். ஆயிரம் பேரில் ஒருவரே கவிஞராகத் திகழ்வார். ஆனால், பத்தாயிரம் பேரில் ஒருவரே சிறந்த பேச்சாளராகத் திகழ்வார் என்று ஔவையார் வலியுறுத்தியுள்ளார். இத்தகைய ஆற்றல் வாய்ந்தது பேச்சுக்கலை.

**பேச்சுக்கலையின் ஆற்றல்:**

- பேச்சு, தனிமனிதனுக்குப் பயன்படுகிறது. பேச்சுக்கலை, தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் பயன்படுகிறது. அது, மக்களின் வாழ்க்கை முறைகளையும் நாகரிகத்தையும் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் பேணிப்பாதுகாக்கிறது. ஒருங்குபடுத்தப்பட்ட சமுதாயத்தை வடிவமைக்க உதவுவது பேச்சுக்கலை ஆகும். உலகின் மிகச்சிறந்த தலைவர்கள் தங்கள் பேச்சாற்றலால் சமூகத்தில், அரசியலில் மிகப்பெரிய மாற்றங்களைச் செய்திருக்கிறார்கள்.

- மன்னர் ஆட்சியை, ஏகாதிபத்திய ஆட்சியை, அந்நியர் ஆட்சியை, கொடுங்கோல் ஆட்சியை, முடியாட்சியை வீழ்த்தி மக்களாட்சியை மலரச்செய்த ஆற்றல் உடைய கலை ”பேச்சுக்கலை” ஆகும்.

- மக்களாட்சி, தேசியம், பொதுவுடைமை, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், விழிப்புணர்வு முதலான பண்புகள் ஒரு நாட்டில் வளர்வதற்குத் துணையாக இருப்பது மனிதனின் தனித்திறமை வாய்ந்த பேச்சுக்கலையாகும்.

- அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த உட்ரோ வில்சனிடம் நண்பர் ஒருவர், "நீங்கள் கால்மணி நேரம் சொற்பொழிவாற்ற எத்தனை நாள்கள் தயார் செய்வீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர், "இரண்டு வாரம்" என்றாராம். பிறகு, "ஒரு மணி நேரம் பேச ஒரு வாரம்" என்றாராம். பிறகு, "இரண்டு மணி நேரம் பேச வேண்டும் என்றால், எத்தனை நாள் தயார் செய்வீர்கள்?" என்று கேட்டதற்கு "இப்போதே பேசுகிறேன்" என்றாராம்.

**பேச்சும் பேச்சுக்கலையும்:**

- எண்ணத்தை வெளிப்படுத்த சைகை பயன்பட்டது. அழுகை, சிரிப்பு, அச்சம் முதலான உணர்ச்சிகளை வெளிப்படுத்த இயல்பாக எழுந்த ஒலிக்குறிப்புகள் ஒருவரின் எண்ணத்தையும் உணர்வுகளையும் தெரிவித்தன. இனக்குழுக்களாக வாழ்ந்த மனிதச் சமூகம் பல நூற்றாண்டுகளாக ஒலியைத் தம் தேவைக்குப் பயன்படுத்தி வந்தது. அதன் பக்குவப்பட்ட வடிவமாகப் பேச்சுமொழி விளங்குகிறது.

- அன்றாடம் பேசுவது பேச்சு, அது மக்களை ஈர்க்கும் கலையாவது பேச்சுக்கலை. பேச்சில் உணர்ந்ததை உணர்ந்தவாறு தெரிவித்தால் போதுமானது. ஆனால், மேடைப்பேச்சிலோ உணர்ந்ததனை, உணர்த்தும் வகையிலும் தெரிவித்தல் வேண்டும். மனிதர்களின் ஐம்புலன்களுக்கும் பணிகள் இருக்கின்றன. ஐம்புலன்களின் இயல்பான பணிகள் திறன் படைத்தாக மாறும்போது கலைசார்ந்ததாகச் செழிப்படைகின்றன. நாக்கு, சுவைத்தல் என்கிற பணியைச் செய்கிறது; பேசுவதற்கும் உதவுகிறது. அன்றாடத் தேவைக்கான பேச்சு இன்னும் கலைத்தன்மை சேர்ந்து பேச்சுக்கலையாகிறது. பேச்சில் அழகு, ஒழுங்கமைவு மற்றும் திறன்கள் இணையும்போது, அது கலை ஆகிறது. பேச்சு, கலைவடிவம் பெறுவதே பேச்சுக்கலையாகும். பேசுபவரின் திறன், மொழியின் திறன் இரண்டும் பேச்சுக்கலையின் அடிப்படைகளாகும். பேசுபவரின் ஒலிப்பு.

- பேச்சின் ஏற்ற இறக்கம், குரல்வளம் ஆகியவை பேசுபவரின் திறனாகும். அடுக்கு மொழி, மரபுத்தொடர், கவிதை, பாட்டு, உரையாடல் ஆகியன மொழியின் வளங்களாகும். இவை சிறப்பாகப் பேசுவதற்கும் பேச்சானது, கலை வடிவம் பெறுவதற்கும் உதவுகின்றன. பேச்சும் மேடைப் பேச்சும் வெவ்வேறானவை.

**பேச்சாளரின் பண்புகள்:**

- கருத்துத்தெளிவு, சுருக்கம், தன்கருத்தில் என்றும் உறுதி, நூல்வழிக் கற்றது மட்டுமன்றித் தன்சுய சிந்தனைக் கருத்துகளை முன்வைத்தல்,கேட்பவர்களுக்குப் புரியும் எளிய மொழிநடை, நகைச்சுவை உணர்வு, அவையறிந்து பேசுதல், நேரமறிந்து பேசுதல், உண்மையை மட்டுமே பேசுதல், சாதி, மத, மொழி, இன, தூண்டல்களும் வேறுபாடுகளும் இன்றிப் பேசுதல், பிறரது கருத்துகளை ஏற்கும் மனப்பான்மை, பிறரது நேரத்தை எடுத்துக் கொள்ளலாமல், தமக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் பேசி முடித்தல் போன்றவை பேச்சாளரின் தலைசிறந்த பண்புகளாகும்.

> "மனிதனுக்கு உள்ள திறமைகளில் மிகுந்த போற்றுதலுக்குரியது பேச்சாற்றல், அதைச் சரியாகக் கைவரப் பெற்றவர்கள் அரசனைவிட அதிகாரம் பெற்றவர்கள். அந்தக் கலையைக்கற்றவர்கள் இந்த உலகில் விடுதலை பெற்ற ஆற்றலாக இயங்கக்கூடியவர்கள்".
>
> \- வின்ஸ்டன் சர்ச்சில்

**குரலும் மொழியும்:**

- குரல்வளம் சிறப்பாக இருந்தால் பேச்சின் நடைநலமும் சிறக்கும்.

- ஒரே குரலில் சீராகப் பேசுவது பார்வையாளருக்கு விரைவில் சலிப்பை ஏற்படுத்திவிடும்.

- பேசும் கருத்திற்கு ஏற்ற உணர்ச்சியை வெளிப்படுத்துவதாகப் பேச்சின் வெளிப்பாடு இருக்க வேண்டும். மிகை உணர்ச்சி வெளிப்பாடுகளோ, உணர்ச்சியற்ற பேச்சோ இரண்டுமே தவிர்க்கப்பட வேண்டியவை.

- உச்சரிப்பில் தெளிவும் பேச்சில் உரிய ஏற்ற இறக்கமும் அமைந்திருத்தல் அவசியம்.

- பேசும் மொழியைப் பிழையில்லாமல் ஒலிக்கப்பழகிக்கொள்ள வேண்டும். பிழையான ஒலிப்பு, பேச்சையும் பேச்சாளரையும் நகைப்புக்குள்ளாக்கிவிடும்.

- உச்சரிப்புப் பிழையின்மை, மொழியழகு, சொற்குற்றம் இன்மை, சொல்லாட்சித் திறமை ஆகியவற்றையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**பேச்சாளருக்கான தகுதிகள்:**

- பேசும் இடம், பங்கேற்பவர்கள் எண்ணிக்கை, பேச வேண்டிய கருத்து என்பனவற்றில் கவனத்தோடு இருக்க வேண்டும்.

- பேச்சை ஆரம்பிக்கும் முன்னர் நம் சிந்தனையில் சரியெனப் பட்டவற்றை நன்றாகச் சிந்தித்துப் பேச வேண்டும்.

- அவையை உயிரோட்டமுள்ளதாகவும் சுறுசுறுப்பானதாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.

- பொருத்தமான கேள்விகளையும் பதில்களையும் முன்வைத்தல், பொருத்தமான நிகழ்வுகளையும் கதைகளையும் தம் பேச்சில் கூறுதல் நல்லது.

- பேசும் கருத்துகளை ஒழுங்குபடுத்திக் கொண்டு தொடக்கம் முதல் இறுதிவரை பேச்சின் அமைப்பை ஒரே சீராகப் பேணுதல் வேண்டும்.

- ஒரு கருத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லிச் சலிப்படையச் செய்யக்கூடாது.

- பேச்சை முடிக்கும் போது நாம் இதுவரை பேசிய பேச்சின் சுருக்கத்தைச் சொல்லி முடிப்பது சிறப்பு.

- பேசும்போது தேவையற்ற மெய்ப்பாடுகளையும் உடல் அசைவுகளையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

- பேச்சில் ”போலச் செய்தல்” என்பதைத் தவிர்த்துத் தனக்கெனத் தனித்துவமான ஒரு நடையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

அமெரிக்காவில் நிறவெறிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து தம் உரைகள் மூலம் சமத்துவத்தை எடுத்துரைத்த மார்ட்டின் லூதர் கிங் (Martin Luther king) சிறந்த பேச்சாளர். கறுப்பின மக்களுக்கு அதிகாரத்தில் பங்கு வேண்டும் என்ற அவரின் போராட்டங்கள் அவரின் சிறந்த உரைகள் மூலமே மக்களைச் சென்றடைந்தன. 1963 ஆம் ஆண்டு ஆற்றிய “எனக்கொரு கனவு உள்ளது” (I Have A Dream) என்ற உரை மிகச்சிறந்த உரையாக இன்றளவும் போற்றப்படுகின்றது.

- குறித்த நேரத்தில் பேச்சை ஆரம்பிக்கவும் முடிக்கவுமான பயிற்சியில் தேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

- பேசும்போது நம்முடைய பார்வையை அவையோர் அனைவரின் பக்கமும் செலுத்த வேண்டும்.

- பள்ளி, கல்லூரிகளில் நடைபெறும் பேச்சுப் போட்டிகள், ஊரில் நடக்கும் நிகழ்ச்சிகள் போன்றவற்றில் கலந்து கொண்டு, மேடையில் அச்சம், கூச்சமின்றிப் பேசுவதற்குப் பழக வேண்டும்.

**பேச்சின் முக்கூறுகள்:**

- முறைப்படுத்தப்பட்ட உழைப்பும், சிறந்த திட்டமிடலும் ஒருவரின் வெற்றிக்கு அணி செய்கின்றன. பேசும் பொருளை ஒழுங்குமுறைக்குக் கொண்டுவந்து தொடக்கம், இடைப்பகுதி, முடிவு எனப்பகுத்துப் பேசுவதையே பேச்சின் கூறுகள் என்கிறோம். இதனை எடுத்தல், தொடுத்தல், முடித்தல் எனவும் கூறலாம்.

**எடுத்தல்**

- பேச்சைத்தொடங்குவது எடுப்பு, தொடக்கம் நன்றாக இராவிட்டால் கேட்பவர்களுக்குப் பேச்சினைக் குறித்த நல்லெண்ணம் தோன்றாது. சுருக்கமான முன்னுரையுடன் தொடங்க வேண்டும். தடங்கலின்றிப் பேச்சைத் தொடங்குவதே நல்ல அடித்தளமாகும். அவையோருக்கு வணக்கம் கூறி,சிறிய அறிமுகத்துடன் தொடங்க வேண்டும். அறிஞர்களின் மேற்கோள்கள், கவிதைவரிகள், ஆர்வத்தை ஏற்படுத்தும் செய்திகளோடு தொடங்கலாம். கேட்வர்களுக்கு ஆர்வம் ஏற்பட வேண்டும் என்பதை மனத்திற்கொள்ள வேண்டும்.

**தொடுத்தல்:**

- தொடக்கவுரைக்குப் பிறகு, பொருளை விரித்துப் பேசும்முறை தொடுத்தல் எனப்படும். சொல்ல வேண்டிய கருத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்க வேண்டும். சிலர் பேசும்போது, என்ன தலைப்பில் பேச வந்தோம் என்பதையே மறந்து பேசிக்கொண்டிருப்பர்.

- பேச்சு நன்றாக இல்லாவிட்டால் கேட்போரின் கவனம் சிதறிவிடும். பேச்சு கேட்பவர்களைக் கவர வேண்டும். பேச்சின் அடிப்படை, தெளிவாகப் பேசுதலாகும். ஆகையால் சொல் தெளிவும் கருத்துத் தெளிவும் மிக முக்கியமானவை. கருத்து, சுருக்கமாக இருக்கும் போது தான் பேச்சு சுவைக்கும்.

- நாம் பேசும் பேச்சு, எளிமையான சொற்களைக் கொண்டதாகவும் பார்வையாளர்களின் ஆர்வம் குறையாமல் கருத்தைக்கொண்டு சேர்ப்பதாகவும் அமைதல் வேண்டும். மேலும் அது, கருத்தாழம் உடையதாகவும் தெளிவுடையதாகவும் கருத்து விளக்கமுடையதாகவும் அமையுமாயின் வெற்றியடையும்.

- எண்ணங்களைச் சொல்லும் முறையால் அழகுபடுத்துவதே அணி எனப்படும். கேட்போர் சுவைக்கத்தக்க உவமைகள், எடுத்துக்காட்டுகள், சொல்லாட்சிகள், பல்வேறு நடைகள், சிறுசிறு கதைகள் முதலியன அமையப் பேசுவதே சிறந்த பேச்சாகும்.

- உணர்ச்சி உள்ள பேச்சே உயிருள்ள பேச்சாகும். பேச்சாளர், தம் உணர்ச்சிப் பெருக்கில் பேசக்கூடாது. கேட்போரின் உள்ளத்தில் தாம் விரும்பும் உணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் பேசுதல் வேண்டும்.

**முடித்தல்:**

- பேச்சை முடிக்கும்போதுதான், பேச்சாளர் தமது கருத்தை வலியுறுத்தவும் கேட்போர் மனத்தில் பதிவுமாறு சுருக்கிக் கூறவும் கூடும். பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடித்தல், உணர்ச்சியைத் தூண்டும் முறையில் முடித்தல், பாராட்டி முடித்தல், பொருத்தமான கவிதையைக்கூறி முடித்தல் என முடிக்கும் முறைகள் பல உள்ளன. சிறந்த பேச்சாளர் எப்படி முடித்தாலும் அது அழகாகவே இருக்கும்.

**வடிவங்களும் வகைகளும்:**

- பட்டிமன்றம், வாழக்காடு மன்றம், சிறப்புரை, வரவேற்புரை, தொகுப்புரை, தலைமையுரை,ஏற்புரை, நன்றியுரை, சொற்பொழிவு,நகைச்சுவை மேடை, தொலைக்காட்சி விவாதமேடை, வானொலி உரை, அரசியல் பேச்சு, தொலைக்காட்சி உரை எனப் பலவகைகளையும் பல வடிவங்களையும் பேச்சுக்கலை கொண்டுள்ளது.

**இலக்கியங்களில் பட்டிமன்றம்:**

- தற்காலத்தில் "பட்டிமன்றம்" என்று அழைக்கபடுவது, முன்பு "பட்டிமண்டபம்" என்று அழைக்கப்பட்டது. பட்டிமண்டபம் என்ற சொல் சிலப்பதிகாரம்,மணிமேகலை, திருவாசகம், கம்பராமாயணம் முதலான நூல்களில் காணப்படுகிறது. சிலப்பதிகாரத்தில், "வேந்தன் பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம்" (5 – 102) எனவும் மணிமேகலையில் "பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏற்றுமின் "(1-16) எனவும் குறிக்கப்பட்டுள்ளது. திருவாசகத்தில் "பட்டிமண்டபம் ஏற்றினை" (சதகம் - 41) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. "பன்னஅரும் கலைதெரி பட்டிமண்டபம்" எனக் கம்பராமாயணத்திலும் வருகிறது. இதனால் கலைகளை ஆராயும் இடமே பட்டிமண்டபம் என்பது புலனாகிறது.

- தற்காலத்தில் நடைபெறும் பட்டிமன்றத்திற்கும் வழக்காடு மன்றத்திற்கும் உள்ள வேற்றுமைகள் பின்வருமாறு:

**மேடைப்பேச்சு நடை:**

- பொதுவாக மேடைப்பேச்சில் கடின நடை, எளிய நடை, இலக்கிய நடை, அடுக்குமொழி நடை, கொச்சை நடை என ஐவகை நடைகள் உள்ளன.

**பேச்சுக்கலையும் ஆளுமைகளும்:**

- ஒரு பேச்சு எந்த மேடையில் நிகழ்த்தப்படுகிறதோ அந்த இடத்திற்கு மட்டுமே பொருத்தமாக இருந்தால், அது நல்ல பேச்சாக மட்டுமே இருக்கும். காலத்தை வென்று நிற்கும் சொற்பொழிவாக உயர முடியாது. எல்லா மக்களுக்கும் எல்லாக் காலத்துக்கும் ஏற்றுக் கொள்ளும்படியான உண்மைகளை உள்ளடக்கி, இலக்கிய நயங்கள் மிளிர அமைக்கப்பட்ட உரைகளே தலையாய சொற்பொழிவுகளாக நிலைத்து நிற்கின்றன.

| பட்டிமன்றம் | வழக்காடு மன்றம் |
|---|---|
| நடுவரும் இருதரப்பிலும் மூன்று பேர் என்னும் எண்ணிக்கையில் கருத்துகளை முன்வைப்பர் இந்த எண்ணிக்கை நேரத்திற்கும் சூழலுக்கும் தக்கவாறு மாறலாம். | நடுவரை நீதியரசர் என்போம், வழக்குத் தொடுப்பவர், மறுப்பவர் என மூவரைக் கொண்டு வழக்காடுவர் |
| பேசுபவரை நடுவர் மட்டுமே குறுக்கிட்டு, கருத்தைச்சொல்ல முடியும் | நடுவரும் வழக்கை மறுப்பவரும் வழக்குத் தொடுப்பவரைக் குறுக்கீடு செய்யலாம். |
| ஒரு தலைப்பில் மூவர் கருத்துகளை முன்வைப்பர். | ஒருவரே மூன்று நிலைகளில் வழக்கை முன்வைப்பர் |
| இரு அணியின் கருத்துகளையும் கேட்டபின் அவற்றுள் ஏதேனும் ஓர் அணிக்கு ஏற்புடைய தீர்ப்பை வழங்கலாம். | நடுவர் நீதியரசராக இருப்பதால் முன்னுரையோ அடித்தளமோ கூறமாட்டார். |
| நடுவர் இருதரப்பு கருத்துகளையும் விடுத்துத் தன்கருத்தைத் தீர்ப்பாகக் கூறலாம். | வாதிடுகின்ற இருவரின் கருத்துகளின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குவார் |

**விவேகானந்தரின் சிகாகோ செற்பொழிவு:**

- விவேகானந்தர் அமெரிக்காவின் சிகாகோ நகரில் செப்டம்பர் 11, 1893 அன்று நடைபெற்ற உலகச் சமய மாநாட்டுக் கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து சில பகுதிகள்... அமெரிக்காச் சகோதர சகோரரிகளே!

- இன்பமும் இதமும் கனிந்த உங்கள் வரவேற்புக்கு மறுமொழி கூற, இப்போது உங்கள் முன் நிற்கிறேன். என் இதயத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. அதனை வெளியிட வார்த்தைகள் இல்லை. உலகத்தின் மிகப் பழமைவாய்ந்த துறவியர் பரம்பரையின் பெயரால் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். அனைத்துச் சமயங்களின் அன்னையின் பெயரால் நன்றி கூறுகிறேன். பல்வேறு இனங்களையும் பிரிவுகளையும் சார்ந்த கோடிக்கணக்கானவர்களின் பெயரால் நன்றி கூறுகிறேன். இந்த மேடையில் அமர்ந்துள்ள பேச்சாளர்களுள் சிலர் கீழ்த்திசை நாடுகளிலிருந்து வந்துள்ள பிரதிநிதிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, "வேற்றுச் சமய நெறிகளை வெறுக்காத பண்பினைப் பல நாடுகளுக்கு எடுத்துச் சென்ற பெருமை இவர்களைத்தான் சாரும் என்று உங்களுக்குக் கூறினார்கள்". அவர்களுக்கும் என் நன்றி.

பிற சமயக் கொள்கைகளை வெறுக்காமல் மதித்தல், அவற்றை எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய இரு பண்புகளை உலகத்திற்குப் புகட்டிய சமயத்தைச் சார்ந்தவன் நான், என்பதில் பெருமையடைகிறேன். எதையும் வெறுக்காமல் மதிக்க வேண்டும் என்னும் கொள்கைகளை நாங்கள் நம்புவதோடு, எல்லாச் சமயங்களும் உண்மை என்று ஒப்புக் கொள்ளவும் செய்கிறோம்.

- என் அருமைச் சகோதரர்களே! பிள்ளைப் பருவத்திலிருந்தே நான் பாடிப் பயின்று வருவதும் கோடிக்கணக்கான மக்கள் இன்றளவும் நாள்தோறும் தொடர்ந்து பாடி வருவதுமான பாடலின் ஒருசில வரிகளை இங்கு உங்கள் முன் குறிப்பிட விரும்புகிறேன்.

எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம்
    இறுதியிலே கடலில் சென்று
சங்கமாம் பான்மையினைப் போன்றுலகோர்
    பின்பற்றும் தன்மை யாலே
துங்கமிகு நெறிபலவாய் நேராயும்
    வளைவாயும் தோன்றி னாலும்
அங்கவைதாம் எம்பெரும! ஈற்றில்உனை
    அடைகின்ற ஆறே யன்றோ!

- இதுவரை நடந்துள்ள மாநாடுகளில் மிகமிகச் சிறந்ததாகக் கருதக்கூடிய இந்தப் பேரவை கீதையில் உபதேசிக்கப்பட்டுள்ள பின்வரும் அற்புதமான ஓர் உண்மையை உலகத்திற்குப் பிரகடனம் செய்துள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறென்.

- யார் எந்த வழியாக என்னிடம் வர முயன்றாலும் நான் அவர்களை அடைகிறேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழிகளில் என்னை அடைய முயல்கிறார்கள். அவை எல்லாம் இறுதியில் என்னையே அடைகின்றன.

- பிரிவினைவாதம், அளவுக்கு மீறிய சமயப்பற்று இவற்றால் உண்டான சமயவெறி, இவை இந்த அழகிய உலகை நெடுநாளாக இறுகப் பற்றியுள்ளன. அவை இந்தப் பூமியை நிரப்பியுள்ளன. உலகை இரத்த வெள்ளத்தில் மீண்டும் மீண்டும் மூழ்கடித்து, நாகரிகத்தை அழித்து, எத்தனையோ நாடுகளை நிலைகுலையச் செய்துவிட்டன. இந்தக் கொடிய அரக்கத்தனமான செயல்கள் இல்லாதிருந்தால் மனித சமுதாயம் இன்றிருப்பதை விட பலமடங்கு உயர்நிலை எய்தியிருக்கும். அவற்றிற்கு அழிவுகாலம் வந்துவிட்டது. இன்று காலையில் இந்தப் பேரவையின் ஆரம்பத்தைக் குறிப்பிட முழங்கிய மணி, சமயவெறிகளுக்கும் வாளாலும் போனாவாலும் நடைபெறுகின்ற கொடுமைகளுக்கும் ஒரே குறிக்கோளை அடையப் பல்வேறு வழிகளில் சென்று கொண்டிருக்கும் மக்களிடையே நிலவும் இரக்கமற்ற உணர்ச்சிகளுக்கும் சாவு மணியாகும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

**ஆபிரகாம் லிங்கனின் கெட்டிஸ்பர்க் உரை:**

- கெட்டிஸ்பர்க்கில் 1863 நவம்பர் 19 ஆம் நாள் நடைபெற்ற நினைவுச்சின்னம் திறப்பு விழாவில் கலந்து கொண்டு லிங்கன் நிகழ்த்திய உணர்ச்சிமிகு உரை.

- ”எண்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு நமது முன்னோர் இந்தக் கண்டத்தில் சுதந்திரத்தை மனத்திற் கொண்டும் எல்லா மனிதர்களும் சமமானவர்கள் என்ற எண்ணத்திற்கு அர்ப்பணித்தும் ஒரு புதிய நாட்டை உருவாக்கினர்.

- அப்படி உருவாக்கப்பட்ட, அர்ப்பணிக்கப்பட்ட ஒருசேதம் நீண்டகாலம் நிலைபெற்றிருக்குமா என்று பரிசோதனை செய்யுமொரு பெரும் உள்நாட்டுப் போரில் நாம் தற்போது ஈடுபட்டிருக்கிறோம். அந்தப்போரின் களத்திற்கு நாம் கொண்டு வரப்பட்டிருக்கிறோம். இந்தத் தேசம் வாழ்வதற்காகத் தங்களுடைய இன்னுயிரைத் தந்தவர்கள் இறுதி ஒய்வு கொள்வதற்காக இந்தக் களத்தின் ஒரு பகுதி மண்ணை அர்ப்பணிப்பதற்காக வந்திருக்கிறோம். நாம் இதைச் செய்வது பொருத்தமானதும் முறையானதுமாகும்.

- ஆனால், ஒரு விரிவான பொருளில் பார்த்தால் நாம் இந்த மண்ணை வெறுமனே அர்ப்பணிக்க முடியாது; புனிதப்படுத்திவிட முடியாது. போரில் வீர மரணம் அடைந்த,

உயிரோடு இருக்கிற மாவீரர்கள், நாம் நமது அற்ப அதிகாரத்தை வலுப்படுத்துவதற்கோ குறைப்பதற்கோ முன்னதாகவே தம் போராட்டத்தின் மூலம் இந்த மண்ணைப் புனிதப்படுத்தி விட்டார்கள். நாம் இங்கே என்ன சொல்கிறோம்? என்பதை உலகம் கவனத்தில் கொள்ளவோ நீண்ட காலம் நினைவில் வைத்திருக்கவோ செய்யாது. ஆனால், அது அவர்களின் வீரச்செயலை ஒருநாளும் மறக்காது.

- அவ்வீரர்களின் முற்றுப்பெறாத பணிகளை, வாழ்ந்து கொண்டிருக்கும் நாம்தான் அர்ப்பணிப்புடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இங்கே நாம் கௌரவப்படுத்திய வீரர்கள் எந்த நோக்கங்களுக்காகத் தம் அர்ப்பணிப்பை முழு வழங்கினார்களோ, அந்நோக்கங்களை நிறைவேற்றும் மாபெரும் பொறுப்பு நம் முன்னால் உள்ளது. அவர்களின் உயிர்த்தியாகம் வீணாகிவிடாமல் அவர்தம் நோக்கங்களை நாம் முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் கடவுளின் பெயரால் அமைக்கப்படுகிற சுதந்திரமான, மக்களால், மக்களுக்காக உருவாக்கப்படுகிற மக்களின் அரசை இந்தப் பூமியிலிருந்து அழித்தொழிக்க முடியாது".

**திரு.வி.கலியாணசுந்தரனார்:**

- "திரு.வி. கலியாண சுந்தரனாரின் உரை மேடையில் மெல்லிய பூங்காற்றாக வீசியது. அவர் உரையில் அதிர்வோ ஆர்ப்பாட்டமோ இருக்காது. எளிமையான கருத்துப் பொழிவில் எழில் சேர்ப்பார். கருத்துகளைத் தெள்ளிய நீரோடை போலக் கேட்போர் இதயங்களில் பாயச் செய்வார்".

- திரு.வி.க. தமிழ் மாணாக்கர் மாநாட்டில் 07.08.1923 இல் ஆற்றிய தலைமையுரையில் தமது பேச்சை முடிக்குமிடத்தில்

- "சகோதரிகளே! சகோதரர்களே! இன்னும் உங்கள் அரிய காலத்தைக் கொள்ளை இடுவதற்கு என் மனம் எழவில்லை. இதுகாறும் பொறுமையுடன் என் புன்மொழிகளைச் செவிமெடுத்த உங்களுக்கு எனது நன்றியறிதலான வணக்கம் உரியதாகுக.

- வருங்கால உலகம் உங்களை எதிர்நோக்கி நிற்கிறது. அதற்கு முதலாவது உடலை ஓம்பிக் கல்வி பயின்று, விஞ்ஞானக் கலைகளில் ஊக்கம் செலுத்துங்கள்; நாட்டுக் காவியங்களுடன் உறவுகொண்டு, அவற்றின் இயற்கை அமிழ்தை உண்ணுங்கள்; உங்களை நன்முறையில் பயன்படுத்த தமிழ்த்தாய் உங்கள் முகத்தை நோக்கிய வண்ணமாய் இருக்கிறாள். அவளைப் பற்றியுள்ள பீடிகைகள் எல்லாவற்றையும் தொலைக்க எழுங்கள்! எழுங்கள்! இளம்பரிதிகளே! சாதி வேற்றுமை, பெண்ணடிமை, தீண்டாமை முதலிய கட்டுகள் இரிந்து ஓட தமிழ்க்கதிர் பரப்பி எழுங்கள்! எழுங்கள்! என எழுச்சியுடன் நிறைவு செய்துள்ளார். இவர், பேச்சின் தொடக்கமாக இருந்தாலும் முடிவாக இருந்தாலும் தம் கருத்தை மக்களிடம் கொண்டு செல்லும் நோக்கத்தில் வெற்றியடைந்துள்ளார். இவரைத் "தமிழ்த்தென்றல்" எனவம் அழைப்பர்.

**பெரியாரின் இயல்பான பேச்சு:**

- தமிழக வரலாற்றில் பல ஆண்டுகளாகச் சிந்தனை இன்றி உழன்ற மக்களைச் சிந்திக்க வைத்து, பகுத்தறிவுடன் வாழ வழிகாட்டிய தலைவர் தந்தை பெரியார். ஏதென்ஸ் நகரில் சாக்ரடீஸ் எப்படி வீதி விதியாகச் சென்று, இளைஞர்களைத் தம் கருத்துகள் மூலம் சிந்திக்க வைத்தாரோ, அதே போன்று மிகப்பெரிய சிந்தனை எழுச்சியைத் தமிழ்நாட்டு வீதிகளில் ஏற்படுத்தியவர் தந்தை பெரியார். அவர் பேச்சில் இலக்கிய நயம் இருந்ததில்லை. இயல்பான பேச்சுத்தமிழில் தான் உரையாற்றுவார்.

- ஆனால், அந்த இயல்பான பேச்சுத்தமிழ் மக்களைச் சிந்திக்க வைத்தது. தமிழ்நாட்டில் அவர் ஏற்படுத்திய தாக்கம், அவர் உருவாக்கிய இயக்கம் அறிஞர்களை, தலைவர்களை, சிறந்த பேச்சாளர்களை மக்களுக்கு அடையாளம் காட்டியது. அவர்களுள் முதன்மையானவர் அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தால் "அறிஞர்" எனப் பட்டமளித்துச் சிறப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா.

**அண்ணாவின் அடுக்கு மொழி:**

- அண்ணா பேசும்போது உலக வரலாறும், உவமைகளும் அவரின் உரையில் தவழும். அவரின் மிகப்பெரிய சிறப்பு, ஒரு நாளில் இருவேறு கூட்டத்தில் பேசினாலும் கூறிய கருத்துகளை மீண்டும் கூறமாட்டார். அதே உவமைகள் இருக்காது. மடைதிறந்த வெள்ளம்போல உரையாற்றும் ஆற்றல் பெற்றவர். சென்னைக் கன்னிமாரா நூலகத்தில் அவர் கைபடாத நூல்கள் இல்லை என்னும் அளவிற்குச் சிறந்த வாசிப்பாளர். அந்த வாசிப்புதான் அவரின் தனித்துவமான உரைகளுக்குக் காரணம்.

**காந்தியடிகள் மறைவுக்கு அண்ணா ஆற்றிய உரை:**

- "ஆகாயத் தாமரையைப் பறித்துக் கொடுக்கும் அற்புதம் அவர் காட்டினாரில்லை. ஆனால், ஊமைகளாக இருந்து வந்த மக்களைப் பேச வைத்தார். உரிமை முழக்கமிடச் செய்தார். அயுதம் தாங்கியவர் எதிரில் சாகப் பயப்படாதாரின் ஓர் அணிவகுப்பை நிறுத்திக்காட்டினார். சிட்டுக் குருவிகளுக்கு வல்லூற்றை எதிர்த்திடும் ஆற்றல் ஏற்படச் செய்தார். இந்தியா என்றோர் நாடுண்டு. அங்கு ஏலம், கிராம்பு பெறுவதுண்டு. பொன்னும் பொருளும் மிக உண்டு. போக்கறியாதார் நிரம்ப உண்டு என்ற அளவில் பதினாறாம் நூற்றாண்டிலே உலகம் அறிந்திருக்கிறது. பிறகு படிப்படியாக இந்தியா பிரிட்டிஷ் பிடியிலே சிக்கிவிட்டது. அப்போது இந்தியா என்றோர் நாடுண்டு, அது ஆங்கிலேயர்க்கு நல்ல வேட்டைக்காடு என்று உலகம் இழித்தும் பழுத்தும் பேசிக்கொண்டது. விடிவெள்ளி தோன்றுவது போலத் திலகர் காலத்திலே விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது என்ற போதிலும், காந்தியடிகள் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே, இந்தியா என்றோர் நாடுண்டு.

- அங்கு விழிப்பும் எழுச்சியும் மிக உண்டு என்று அறிந்துகொள்ள முடிந்தது. காந்தியடிகளின் புகழொளி மூலமே, உலகம் இந்தியாவைக் கண்டுவந்தது. தன்னலமற்ற, விளைவு பற்றிய கவலையற்ற போராட்ட மனோபாவத்தை நாட்டிலே காந்தியடிகளால்தான் உண்டாக்க முடிந்தது. அவருடைய உருவமோ உடலமைப்போ பேச்சோ நடவடிக்கையோ இராணுவ மனப்பான்மையை ஏற்படுத்தக்கூடிய விதமாக இல்லை. ஆனால், அவரால் இராணுவங்களையும் எதிர்த்து நிற்கக்கூடிய வீர உணர்ச்சியை இலட்சக்கணக்கானவர்களிடத்தில் உண்டாக்க முடிந்தது".

- இவ்வாறு, தம்முடைய மேடைப்பேச்சின் மூலம் மக்களைப் பெரிதும் ஈர்த்தவர் பேரறிஞர் அண்ணா. தமிழனுக்கு நாடக அரங்குகளும் திரைப்படக் கொட்டகைகளும் பொழுது போக்குகளாக இருந்த காலகட்டத்தில் புத்தொளி வெளிச்சமாக அண்ணாவின் மேடைப்பேச்சு மலரத்தொடங்கியது.

**குன்றக்குடி அடிகளார்:**

- குன்றக்குடி அடிகளார் ஓர் ஆன்மீகவாதி, அறிவு பற்றிய பரந்த நோக்கினை ஆழ்மனச் சிந்தனையோடு அவரது பேச்சாற்றல் பதியச் செய்கிறது.

- "மக்களாகப் பிறந்தோர், இயற்கை வழங்கிய அறிவு வாயில்களைப் பயன்படுத்தி, மக்களுக்குரிய தகுதியினைப் பெறுதல் வேண்டும். வாழ்க்கையின் இலட்சியமே மக்களை அறிவு நலமுடையராக்குதலும் பண்பு நலமுடையோராக்குதலுமே. இவ்விரண்டு குறிக்கோளும் இன்று அடையத்தக்க வழியில் மக்களுடைய வாழ்க்கை நடைமுறை இல்லை. ஆறு அறிவுடையவன் மனிதன்; அறிவு ஒரு கருவி; அறிவுடையவன் எல்லாம் உடையவன்; அவன் ஆவது அறிவான், செய்திகளைச் சேகரிப்பதுதான் அறிவா? நூலறிவு அறிவின் அளவுகோலா? வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே" என்பார் மாணிக்கவாசகர் அறிவார்ந்த ஆள்வினையோடு வாழ்தல் வேண்டும்.

1. வாழ்வதன் வழி முதல் அறிவு பெறுகிறான்.
2. செய்யும் தொழிலின் மூலம் இரண்டாம் நிலை அறிவு பெறுகிறான்.

3. தான் வாழும் காலத்தின் சூழ்நிலைத்தாக்கத்திலிருந்து காத்துக்கொள்வதன் மூலம் மூன்றாம் அறிவு பெறுகிறான்.

4. நல்ல நூல்களைத் தேர்ந்து கற்பதன்வழி நான்காவது அறிவு பெறுகிறான். பட்டறிவு நூல்களைப் படிப்பது நம் காலத்தை மிச்சப்படுத்தும்.

5. இயற்கை இயக்கத்தின் மூலம் பெறும் அறிவு ஆறாவது அறிவாம். உடல் மனநலத்தைக் கெடுத்து இயக்க ஆற்றலைக் குறைப்பது கிரணம் எனும் உண்மையையும் ஓசோன் சார்ந்து சுறுசுறுப்பையும் உயிரியக்கத்தையும் மிகுதிப்படுத்தும் என்பதையும் அறியும் அறிவே ஆறாவது அறிவாகும்.

- நம் நாட்டில் பேசுகின்ற திறன் நிறைய வளர்ந்துள்ளது. இதை வைத்துக்கொண்டு அவனுக்கு நிறைய தெரிந்திருப்பதாக எண்ணுகிறோம். அறிவு ஒரு கருவியே. இதனைச் செயற்பாட்டுக்குத்தான் பயன்படுத்த வேண்டும். தான் கற்ற கருத்தைச் செயல்படுத்துவதில்தான் அறிவின் திறன் இருக்கிறது".

**என்.எஸ்.கிருஷ்ணன்:**

- திரைப்படத்தில் நகைச்சுவை குறித்த கலைவாணனர் என்.எஸ். கிருஷ்ணன் பேச்சு கலைத்துறையின் முக்கியத்துவத்தைக் கூறுகிறது. நகைச்சுவை கலந்த உணர்ந்த கருத்தைக் கூறும் திறத்தினைக கலைவாணர் உரை வெளிப்படுத்துகிறது.

**பேச்சாற்றலின் வலிமை:**

பிரிட்டன் நாட்டு முதன்மை அமைச்சராய் இருந்தவர் டிஸ்ரேலி. அவர், பொதுக் கூட்டங்களில் பேசிப் பழக்கமில்லாதவர். முதன் முதலில், அவையினர் முன் பேசுவதற்காக அவர் எழுந்த போது, உடல் நடுங்கியது; நாட குழறியது; பேச முடியாமல், உடல் வியர்த்து, அமைதியாக உட்கார்ந்துவிட்டார். அதனால், அவையினரின் ஏளனப்பார்வைக்கு ஆளானார். இருந்தபோதிலும், அவர் கூட்டத்தினரைப் பார்த்து, "நான் எனது பேச்சின் மூலம் வெற்றி பெறுவேன். என் பேச்சைக் கேட்பதற்காகவே நீங்கள் எல்லாரும் காத்துக்கொண்டு இருப்பீர்கள்" எனச் சூளுரைத்தார்.
நாளடைவில், மிகச்சிறந்த பேச்சாளாராக மாறினார். ஒரு கருத்தைச் சார்ந்து, ஒட்டியும் வெட்டியும் பேசும் அவருடைய பேச்சு, அனைவரையும் கவர்ந்தது. உலகத்தின் மிகச் சிறந்த பேச்சாளர்களுள் ஒருவராக மதிக்கப்பட்டார். இருமுறை பிரிட்டன் நாட்டின் முதன்மை அமைச்சராகப் பதவியேற்றார்.

- "தற்போது சில படங்களில் வரும் வில்லன்களைப் பார்த்தால் கூட எனக்குக் கோபம் வருவதில்லை. காமெடியன்களைப் பார்த்தால் அவ்வளவு கோபம் வருகிறது. தலையை மொட்டை அடித்துக் கொண்டு, வந்து நின்று தாறுமாறாகத் தாளத்தைக் காலுக்குள் போட்டு மிதித்து ஆடுகிறார்கள்.பயங்கரமாக மீசை வைத்துக்கொண்டு குழந்தைகளைப் பயங்காட்டுகிறார்கள். வாழைப் பழத்தோலில் கால் வைத்து வழுக்கி விழுகிறார்கள். அத்துடனாவது விடுகிறார்களா? இல்லை. விழுமுன் அழுகிறார்கள். அழுது முடிக்கும் முன் சிரிக்கிறார்கள். வட்ட மேஜை மாநாட்டுக்கு மகாத்மா காந்தி போயிருக்கும் போது, "இந்த வெறும் வேஷ்டியுடன், இப்படியேவா, மன்னரைப் பார்க்கப் போகிறீர்கள்? நல்ல ஆடைகள் அணிந்து கொள்ள வேண்டாவா?" என்று அங்குள்ள ஒருவர் கேட்டாராம். அதற்கு அவர் என்ன சொன்னார்? சிரித்துக்கொண்டே", நான் என்ன செய்வேன்? எனக்குள்ளதையெல்லாம் சேர்த்துத்தான், உங்கள் மன்னர் அணிந்திருக்கிறாரே" என்று கேட்டுவிட்டாராம். கேள்வி கேட்டவருக்கு நாணமாகி விட்டதாம்!.

- காந்தியின் ஒரே பதிலில் மன்னரின் ஆதிக்கமும் காந்தியின் நகைச்சுவையும் நல்லறிவும் எவ்வளவு தெளிவாகக் தெரிகிறது பார்த்தீர்களா? இந்த நூற்றாண்டுக்கு, குறிப்பாக இந்த வருஷங்களுக்கு, இத்தகைய நகைச்சுவைகள் தாம் தேவை! காமெடியனின் பொறுப்பு சாதாரணமானதல்ல! இவன் உலகின் தாய்! உலகம் அவன் குழந்தை! குழந்தையின் மகிழ்விற்காகத் தாய் போடும் ஆட்டத்தில் எவ்வளவு அன்பும் அர்த்த பஷ்டியான அறிவும் இருக்க வேண்டுமோ, அவ்வளவும் காமெடியனின் செயல்களில் இருக்க வேண்டும் என்பதே என்ஆசை, இலட்சியம்! "என்று பேசுகிறார்.

- கலைத்துறைகள் சமூகப் பொறுப்புணர்வோடு செயல்பட வேண்டும். ஆன்மீகப் பொழிவாக இருப்பினும் நகைச்சுவைப் பொழிவாக இருப்பினும் அரசியல் பொழிவாக இருப்பினும் சொல்லவரும் கருத்தை மக்கள் மனத்தில் ஆழமாகப் பதிவு செய்தல் பேச்சுக்கலையின் இன்றியமையாத் தன்மையாகும்.

**பேச்சுப் போட்டிகளில் வெல்வதற்கு மேற்கொள்ள வேண்டியவை.**

- மாணவர்கள் நூலகம் சென்று முதலில் சிறிய வடிவிலான நூல்களை வாசித்தல் வேண்டும்.
- தமிழகத் தலைவர்கள், தேசியத் தலைவர்கள், துறைசார் அறிஞர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்று நூல்களை வாசிக்க வேண்டும்
- இந்நூல்களைப் படிக்கின்றபோது நல்ல கருத்துகள், நல்ல கவிதைகளைக் குறிப்பெடுப்பதைப் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.
- குறிப்புகளைப் பொருத்தமான தலைப்புகளின் கீழ்க் கொண்டுவந்து, பேசுகிற போது பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
- இணையத்தில் வெளிவருகின்ற பல்வேறு இளைஞர்களின் தன்னம்பிக்கையூட்டும் பேச்சுகளைக் கேட்டு, இனிய கருத்துக்களைக் குறித்துக் கொள்ள வேண்டும்.
- உங்கள் ஊரில் நடைபெறும் தொடர் சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள், வழக்காடு மன்றங்கள் ஆகியவற்றைக்கேட்டு நற்கருத்துகளை மனத்தில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.
- பேச்சுக்கலை கல்லான மனத்தையும் கரையச் செய்யும்; இளகிய மனத்திற்கும் இரும்பின் வலிமையேற்றும்; ஒடுக்கப்பட்ட மக்களின் ஒடுங்கிய குரலையும் ஓங்கிச் சங்கொலியென முழங்கச் செய்யும்; வீரத்தீயை மூட்டிவிடும். பெருந்திரள் மக்களைத் தன்வயப்படுத்தும் அதிசயக்கருவி, இத்தகைய பேச்சுக்கலை உலகை உள்ளத்துள் உள்வாங்குகிறது. அறிவுத்தேனைத் தேடித்தேடிக் கலந்து, தான் உள்வாங்கிய உலகிற்குச்சுவை கூட்டுகிறது. இவற்றோடு தற்சிந்தனை என்னும் நறுமணத்தைச் சேர்க்கிறது.
- உலகையே தன்னுடைய ஒலிகளுக்குள் சுழலவைத்துக் கேட்போரையும் சிறந்த ஆளுமைகளாக மாற்றுகிறது. இத்தகு பேச்சுக்கலை நம்மிடம் வளர்ந்தால் நாளைய உலகு நம் கையில் தான்.

**11TH சிறப்பு தமிழ்**
**(ஊடகவியல்)**
**அலகு – 5**

**11th சிறப்பு தமிழ்**
**இதழ்களின் அமைப்புமுறை**
**அலகு 5**

**ஊடகம்:**

- உலகின் பல்வேறு இடங்களில் நாள்தோறும் நடைபெறும் நிகழ்வுகளை மக்களுக்குக் கொண்டுசெல்ல உதவும் கருவிகளே ஊடகங்கள். இவற்றை அச்சு, காட்சி, கேட்பு, இணையவழி ஊடகங்கள் என வகைப்படுத்தலாம். செய்திப் பதிவுகளையும் படங்களையும் உள்ளடக்கிய இதழ்களே அச்சு ஊடகங்கள். நிகழ்வுகளைக் காணொளிகளாக ஒளிபரப்பும் தொலைக்காட்சி, காட்சி ஊடகம், நிகழ்வுகளை உரை வடிவங்களாக ஒலிபரப்பும் வானொலி, கேட்பு ஊடகம், இன்றைய அறிவியல் வளர்ச்சியினால் அச்சு, காட்சி, கேட்பு ஆகிய ஊடகப்பதிவுகளை இணையவழி ஊடகம் ஒருங்கிணைக்கிறது. இவை அனைத்தும் வழியாகவும் செய்திகள் மக்களைச் சென்றடைகின்றன.

**இதழ்கள்:**

- நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் இதழ்கள் ஆற்றிவரும் பங்கு அளப்பரியது. இதனால் பாரதிதாசனும்,

**காரிருள் அகத்தில் நல்ல**
**கதிரொளி நீதான்! இந்தப்**
**பாரிடைத் துயில்வோர் கண்ணில்**
**பாய்ந்திடும் எழுச்சி நீதான்**
**ஊரினை நாட்டை இந்த**
**உலகினை ஒன்று சேர்க்கப்**
**பேரறி வாளர் நெஞ்சில்**
**பிறந்த பத்திரிகைப் பெண்ணே!**
**என்று இதழ்களின் பெருமையைப் பாடுகிறார்.**

**இதழ்களின் வகைகள்:**

- நாள்தோறும் வெளியாகும் செய்தித்தாள்களை நாளிதழ்கள் எனவும் காலமுறைப்படி வெளியாகும் இதழ்களைப் பருவ இதழ்கள் எனவும் வகைப்படுத்தலாம். பருவ இதழ்கள் வாரம், வாரமுரு முறை, மாதம், மாதமிரு முறை, காலாண்டு, அரையாண்டு, ஆண்டு எனக் கால இடைவெளியை வரையறுத்துக் கொண்டு வெளிவருகின்றன.

**நாளிதழ்கள்:**

- நாளிதழ்கள், நாள்தோறும் காலை இதழ், மாலை இதழ் என இருவகையாக வெளிவருகின்றன. அவை, உலகெங்கும் நிகழும் நிகழ்ச்சிகளை நாள்தோறும் மக்களிடம் கொண்டு சேர்க்கின்றன. நாளிதழ்களை உருவாக்குவதில் செய்தியாளர்கள், இதழாசியரிகள், பதிப்பாளர்கள், முகவர்கள் ஆகியோர் இன்றியமையாப் பணியாற்றுகினற்னர்.

**பருவ இதழ்கள்:**

- பருவ இதழ்கள், நாட்டு நடப்புகளை விவரித்து எழுதுகின்றன. இவை பல்வேறு துறை சார்ந்த பருவ இதழ்களாக உள்ளன. எடுத்துக்காட்டாக இலக்கிய இதழ்கள், அறிவியல் இதழ்கள், வேளாண் இதழ்கள், கலை இதழ்கள், சிறுவர் இதழ்கள், மகளிர் இதழ்கள், சமய இதழ்கள், சோதிட இதழ்கள், அரசியல் இதழ்கள், கல்வி இதழ்கள் ஆகியவற்றைச் சுட்டலாம்.

**செய்தித்திரட்டும் வெளியீடும்:**

- செய்திகளைத் திரட்டுபவர்கள், செய்தியாளர்கள். இவர்களை நிருபர்கள் எனவும் அழைக்கின்றனர். இவர்கள் தங்கள் பகுதிசார்ந்த அரசு செயல்பாடுகள், மக்களின் தேவைகள், குறைகள், விபத்து, சமூக நிகழ்வுகள், வானிலை அறிக்கைகள், அறிவியல்சார் நிகழ்வுகள், அறிவிப்புகள், குற்றங்கள் எனப் பல செய்திகளைத் திரட்டித் தங்களுடைய அலுவலகத்திற்கு உடனுக்குடன் அனுப்பி வைப்பர். செய்தியாளரால் திரட்டப்பட்ட செய்திகள், செய்திப் பிரிவுக்கு அனுப்பப்பட்டு முதன்மைப்பதிப்பாசிரியராலும் ஆசிரியர் குழுவாலும் செம்மைப்படுத்தப்பட்டு வெளியிடப்படுகின்றன.

- மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மக்கள் செய்தித்தொடர் அலுவலகம், நீதிமன்றங்கள், மருத்துவமனைகள், காவல் நிலையங்கள் ஆகியவை முதன்மைச் செய்திக் களங்களாகக் கருதப்படுகின்றன. செய்தியாளர்கள், செய்தி திரட்டுவதற்காக எல்லா இடங்களிலும் பம்பரமாய்ச் சுழல்வார்கள். எனவேதான், புகை நுழையமுடியாத இடத்திலும் செய்தியாளர்கள் நுழைந்துவிடுவர் என்னும் சொல் வழக்கு ஏற்பட்டது.

**இதழ் உருவாக்கம்:**

- இதழாசிரியர்கள், செய்திகளின் முதன்மை கருதி எந்தச் செய்தியை எந்தப் பக்கத்தில் வெளியிடுவது என்று முடிவு செய்து இதழை வடிவமைப்பர். இதழ் சிறப்பான முறையிலும் குறித்த நேரத்திலும் வெளிவர வேண்டுமெனில் மாதிரித் திட்ட வரைவினை உருவாக்குவர். இந்த மாதிரித் திட்ட வரைவைச் செய்தியின் கட்டமைப்பு முறை என்பர். செய்தியின் மதிப்பை உயர்த்துவதில் இக்கட்டமைப்பு முறை சிறப்பான இடத்தைப் பெறுகிறது. படிப்பவர்களின் உள்ளங்களைக் கவரும்வண்ணம் இதழ் கட்டமைப்பு இருத்தல் வேண்டும். ஒரு செய்தியின் வலிமையான கட்டமைப்பை நான்கு காரணிகள் உறுதிசெய்கின்றன. அவையாவன:

1. செய்தி எழுதுவதற்குக் கிடைக்கும் நேரம்
2. செய்தியின் உருவ அமைப்பு
3. செய்தித்தாளில் அவற்றை வெளியிடுவதற்குக் கிடைக்கும் இடம்
4. செய்தி எழுதுபவரின் திறமை

**செய்தியின் பகுதிகள்:**

- செய்தித்தாளில் வெளிவருகின்ற ஒரு செய்தி தலைப்பு, முகப்பு, செய்தி விளக்கம் ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டு அமைகிறது.

1. **தலைப்பு:**

- செய்தியின் தலைப்பு, பெரிய எழுத்துகளில் அச்சிடப்பட்டிருக்கும். இது படிப்பவர்களைக் கவர்ந்திழுக்கும் வகையிலும், படித்தவுடன் செய்தியை உணரும் வகையிலும் இருக்கும். தலைப்புகள் ஒரு செய்தித்தாளுக்கு வடிவ அமைப்பையும் அழகையும் கொடுக்கின்றன.

**தமிழ்நாடு மின் வாரிய இணையதளம் புதுப்பிப்பு**

**தலைப்பின் நோக்கம்:**

- ”இதழ்களை, அவற்றில் இடம்பெறும் தலைப்புகளே துல்லியமாகக் கணிக்கின்றன” என்று ஆலன் ஹோம் கோம்ப் கூறுகிறார். செய்தித் தலைப்பைச் செய்தித் தாளின் பலகணி என்பர். செய்தியின் சிறப்புத்தன்மைகளைக் கூறுதல். இன்றியமையாமையை உணர்த்துதல், படிப்பவர்களைக் கவர்தல், விற்பனையை உணர்த்துதல் ஆகியவை தலைப்பின் நோக்கங்களாகும்.

**மக்களாட்சியின் நான்காவது தூண்:**
”ஊடகம் மக்களாட்சியின் நான்காவது தூண்” என அழைக்கப்படுகின்றது. முதல் தூணாக அரசு நிருவாகமும் இரண்டாவது தூணாகப் பாராளுமன்றமும் சட்டமன்றமும் மூன்றாவது தூணாக

நீதிமன்றமும் நான்காவது தூணாக ஊடகமும் குறிப்பிடப்படுகின்றன. மக்களின் அடிப்படை உரிமையான கருத்துரிமையைக் காத்தல், சமூகக் குற்றங்களை எதிர்த்தல், அரசுக்கு வழிகாட்டுதல், ஆலோசனைகளை வழங்குதல் போன்ற செய்திகளை வழங்குவதால் ஊடகம் நான்காவது தூணாகக் கருதப்படுகிறது.

**தலைப்பின் வகைகள்**

1. **கூம்புத் தலைப்பு:**
   கோபுர அமைப்பில் முதல் வரி சிறியதாகவும், தொடரும் வரிகள் அதனைவிட நீளமானவையாகவும் இருக்கும்.

2. **தலைகீழ்க் கூம்புத்தலைப்பு:**
   தலைகீழ்க் கோபுரம் போல இருக்கும்.

3. **இடப்பக்கம் தள்ளிய தலைப்பு:**
   இடப்பக்கம் தள்ளியதாகத் தலைப்பு இருக்கும்.

4. **வலப்பக்கம் தள்ளிய தலைப்பு:**

   வலப்பக்கம் தள்ளியதாகத் தலைப்பு இருக்கும்.

5. **உடுக்குத் தலைப்பு:**
   உடுக்கையின் உருவம் போலத் தலைப்பு இருக்கும்
   இவ்வாறு பலவகையான தலைப்பு வடிவங்கள் செய்தித்தாளில் இடம்பெறும்.

2. **முகப்பு:**
   தலைப்பைத் தொடர்ந்து இடம்பெறுவது முகப்பு, இதில் ஒரு செய்தியின் முதன்மையான உள்ளடக்கம் ஓரிரு சொற்றொடர்களில் அமையும்.

   **முகப்பின் தன்மை:**

- செய்தியின் முகப்புப்பகுதி, சுருக்கமாகவும் தெளிவாகவும் எளிமையாகவும் இருத்தல் வேண்டும். இது செய்திக்கு உயிரோட்டம் தருகிறது, படிப்பவர்களின் ஆவலையும் தூண்டுகிறது.

  **இந்திய அஞ்சல் துறை இணையத்தள வங்கி சேவை:**
  **நாடு முழுவதும் மார்ச் மாத்தில் அமல்படுத்த முடிவு**

  **செய்தி விளக்கப்பகுதி:**

- செய்தியின் தலைப்பையும் முகப்பையும் எழுதிய பிறகு, செய்தியின் விளக்கப்பகுதியை எழுத வேண்டும். செய்திகள் தொடக்கம், இடை, இறுதி என்று மூன்று நிலைகளில் அமைதல் வேண்டும்.

- செய்தியின் விளக்கப்பகுதியை எழுதுவதற்கு முன்னால் மூன்று குறிப்புகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். முதலாவதாகச் செய்தியை முழுமையாகப் படித்து, படிப்பவர்களுக்கு எவை தேவை என்பதைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக செய்திக்குத் தேவையான எல்லா விவரங்களும் இருக்கின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும். மூன்றாவதாகச் செய்தியை எவ்வளவு விரைவாகக் கூற முடியுமோ அவ்வளவு விரைவாகக் கூற வேண்டும்.

- செய்தியின் விளக்கப்பகுதி, செய்தியைப் பொருள் மயக்கமின்றி உணர்த்துவதாகவும் புதுமையாகவும் சுவையூட்டுவதாகவும் விறுவிறுப்பாகவும் அமைவதன் மூலம் செய்தியின் மதிப்பு கூறுகிறது.

**பக்க அமைப்பு முறை:**

- செய்தித்தாளில் இடம்பெற வேண்டிய செய்திகள், எந்தெந்தப் பக்கத்தில் எந்தெந்த இடத்தில் எப்படி அமைய வேண்டுமெனத் தீர்மானிப்பது, பக்க வடிவமைப்பு, செய்தித்தாளின் அனைத்துப் பக்கங்களும் மிகவும் இன்றியமையாதவையாக இருப்பினும், முதற்பக்கம் சிறப்பானதாகவும், பொலிவுடையதாகவும் அமைந்திருக்கும். முதற்பக்கத்தில் முதன்மையான அரசியல் செய்திகள், உள்ளத்தை உருக வைக்கும் நிகழ்வுகள், வண்ணப்படங்கள் போன்றவை இடம்பெற்றுப் படிக்கும் ஆவலைத் தூண்டும் விதமாக அமைந்திருக்கும். செய்தித்தாளை அச்சிடுவதற்கு முன்புவரை கிடைக்கக்கூடிய (கடைசி நேரச் செய்திகள்) இன்றியமையாத செய்திகள், முதற்பக்கத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கும். மற்ற பக்கங்கள் முன்பே முழுமையாக முடிக்கப்பட்டிருக்கும். செய்திகளை வழங்குவதன் அடிப்படையில் செய்தித்தாள் மூவகைப் பக்க அமைப்பைக் கொண்டுள்ளது.

1. **சமநிலைப் பக்க அமைப்பு:**
   முறையான ஓர் அமைப்பில் செய்திகள், படங்கள். கேலிச்சித்திரங்கள், துணுக்குகள், விளம்பரங்கள் ஆகியவற்றை ஒரே சீராக அமைப்பது.

2. **மாறுபட்ட பக்க அமைப்பு:**
   ஒரு பக்கத்தைச் சமநிலையில் அமைக்கின்றபொழுதே இடையிடையே மாறுபட்ட முறைகளில் செய்திகளையும் படங்களையும் அமைப்பது.

3. **கலப்புநிலைப் பக்க அமைப்பு:**
   சமநிலைப் பக்க அமைப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக அமைப்பது கலப்பு நிலைப் பக்க அமைப்ப. இதில், செய்திகள் மற்றும் உள்ளடக்கங்கள் இடம்பெறும் பக்கங்கள் ஒவ்வொரு நாளும் மாறுபடலாம்.

**பக்க அமைப்பின் நோக்கங்கள்:**

- படிப்பவர்களைக் கவர்தல், செய்தியின் இன்றியமையாமையைக் காட்டுதல், படிப்பதற்கு ஏற்றவாறு அமைத்தல், சுவை கூட்டுதல், இதழை இனம் காட்டுதல், விரும்புவதைப் படிக்கச் செய்தல், பயனை மதிப்பிட உதவுதல், மிகுதியான செய்திகளைப் படிக்க வாய்ப்பளித்தல் முதலியன பக்க அமைப்பின் நோக்கங்களாகும்.

**பக்தி அமைப்பு:**

- இதழ்களில் பத்திகள் ஐந்து செ.மீ நீளத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். ஒரு பத்திக்கும் இன்னொரு பத்திக்கும் தொடர்பு இருக்க வேண்டும். இரண்டு பத்திக்குமிடையே தொடர்பு விட்டுப் போகுமிடத்தில் துணைத் தலைப்பிட்டு இணைப்பை ஏற்படுத்த வேண்டும்.

**படங்கள்:**

- நாளிதழ் வனப்பையும் செய்தி மதிப்பையும் கூட்டுவனவாகப் படங்கள் உள்ளன. ஆயிரம் சொற்களால் சொல்ல முடியாதவற்றை ஒரு படம் உணர்த்திவிடுகிறது. கற்றோர், எழுத்தறிவற்றோர், முதியோர், சிறுவர்கள் ஆகிய அனைத்துத் தப்பினரும் பார்த்துச் செய்திகளைப் புரிந்துகொள்ளப் படங்கள் உதவுகின்றன.

**இதழ்களின் மொழிநடை**

- ஓர் இதழுக்குச் சிறப்பு சேர்ப்பனவற்றுள் முதன்மையானது, அதனுடைய மொழி நடையாகும். சிறப்பான மொழிநடை மக்களை வெகுவாக ஈர்க்கிறது. நாம் மற்றவர்களோடு பேசுவதற்குப் பயன்படுத்துவது பேச்சுத் தமிழாகும். விளம்பரத்திற்காகக் கையாளும் தமிழ், அழகாகவும் செறிவாகவும் இருக்கும். மேடை ஏறி முழங்கும் பேச்சாளர்கள் சிலர், பயன்படுத்தும் நடை இலக்கிய நயத்துடன் இருக்கும்.

- மொழிநடை பொருளுக்கேற்பவும் வேறுபடுகிறது. பெரும்புலவர்கள் எழுதுகின்ற இலக்கியக் கட்டுரைகள் சொற்செறிவுடன் அமைந்திருக்கும். இதழ்களில் இடம்பெறும் புனைகதைகளில்

அணி சேர்க்கும் அடைமொழிகளும் உவமைகளும் கையாளப்படும். சிறுகதைகளில் சொற்கள் சிக்கனமாகப் பயன்படுத்தப்படும். இதுபோலவே படிக்கத் தெரிந்தவர்கள் அனைவரும் எளிதாகப் படித்துப் புரிந்துகொள்ளும் வகையில் இதழ்களில் மொழிநடை அமைந்திருக்கும்.

**தலையங்க மொழிநடை:**

- நாளிதழ், பருவ இதழ்களில் தலையங்கம் முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. நடைமுறையில், தலையங்கம் இதழின் தரத்தை உயர்த்துகின்றது. தலையங்கம், செய்தித்தாளின் சமூகப் பார்வையையும் நிலைப்பாட்டையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

**திரு.வி.க. வின் தமிழுணர்வு:**

1. "தேசப்பிதா காந்திஜி" யை முதன் முதலில் காந்தியடிகள் என்று குறிப்பிட்டு இதழ்களில் திரு.வி.க எழுதினார். சிலப்பதிகாரத்தில் வரும் கௌந்தியடிகளைப் படிக்கும்போது காந்தியை, காந்தியடிகள் என்று குறிப்பிட வேண்டுமென்று தோன்றியதாகத் தமது நவசக்தி இதழில் எழுதியுள்ளார்.
2. அன்னிபெசண்ட் அவர்களை "அன்னை வசந்தை" என்றே அவர் எழுதினார்.
3. "வல்லரசு" என்ற புதிய அரசியல் பதத்தை முதன் முதலில் அவர் உருவாக்கினார்.
4. சட்டசபையில் ஆங்கிலமே பேசப்பட்டு வந்த நிலையில் சேலத்தைச் சேர்ந்த பி.வி. நரசிம்மன் என்பவர் முதன் முதலில் தமிழில் பேசியதை எந்த இதழும் வெளியிடாத நிலையில் தமது தேசபக்தன் இதழில் வெளியிட்டார்.

**தலையங்கத்தின் இயல்புகள்:**

- தலையங்கம், ஓர் இதழின் கருத்துக் கண்ணாடி ஆகும். இதனை எழுதும் ஆசிரியர், தம் பொறுப்பினை உணர்ந்து எழுதவேண்டும். எதனைப் பற்றித் தலையங்கம் எழுதினாலும் தரவுகளைத் திரட்டிவைத்துக்கொண்டு நடுநிலையோடு எழுதுதல் வேண்டும். கட்டுரையைப் போல் விரிவாக இல்லாமல் சுவையாகவும் சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைவது, தலையங்கத்திற்குச் சிறப்பைத் தரும். சிறந்த தலையங்கங்கள் பொருளுக்கேற்பத் தெளிவான நடையில், வலுவான கருத்துகளைக் கொண்டு அமைந்திருக்கும். ஒரு கொள்கை / கருத்தின் மீதான செய்தித் தாளின் நிலைப்பாட்டை இதன் மூலம் அறியலாம்.

**இடம்பெறும் பிற செய்திகள்:**

- இதழ்கள், நடப்புச்செய்திகளை வெளியிடுவதோடு அல்லாமல் கருததுப்படம், நூல் மதிப்பரை, வாசகர் கடிதம், விளம்பரம் முதலிய பகுதிகளுக்கெனக் குறிப்பிட்ட பக்கங்களில் இடங்களை ஒதுக்கி அவை தொடர்பான செய்திகளை வெளியிடுகின்றன.

**நூல் மதிப்புரை:**

- நூல் மதிப்புரை என்பது, ஒரு நூலைப்பற்றிய திறனாய்வாகும். இது நாளிதழ்களில், ஒரு வாரத்தின் குறிப்பிட்ட நாளில் வெளியிடப்படுகிறது. இப்பகுதியில் புது நூல்களின் வரவு குறித்த அறிமுகங்கள் இடம்பெறும். சிறப்பான உள்ளடக்கங்கள் கொண்ட நூல்கள் குறித்து மதிப்புரைகள் எழுதப்படும். நூலின் விலை, கிடைக்குமிடம் ஆகிய விவரங்களும் இப்பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**வாசகர் கடிதம்:**

- வாசகர் கடிதம் என்ற பகுதி, படிப்பவர்களின் பின்னூட்டங்களைப் பதிவு செய்யும் ஒரு களமாக விளங்குகிறது. செய்திகள், பிற படைப்புகள் ஆகியவை வாசகர்களிடையே ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் அல்லது மறுப்புகள் இப்பகுதியில் வெளியிடப்படுகின்றன. வாசகர் கடிதம், அடுத்தடுத்து வரும் செய்திகளைச் செம்மைப்படுத்திக்கொள்ள இதழ்களுக்கு உதவுகிறது. மேலும், இப்பகுதி தீவிரமான அரசியல் சமூகச் சிக்கல் ஆகியவற்றைக் குறித்துக் கலந்துரையாடும் திறந்த மேடையாகவும் விளங்குகிறது.

**விளம்பரம்:**

- எந்த இதழைப் புரட்டினாலும் அதன் விற்பனை அளவிற்கும் புகழுக்கும் ஏற்ப விளம்பரங்கள் வெளியிடப்பட்டிருப்பதைக் காணலாம். விளம்பரம் என்பது, படங்கள் மற்றும் கவர்ச்சியான வாசகங்களைப் பயன்படுத்திப் பொருள்களை வாங்க மக்களைத் தூண்டும் முறையாகும். இதழ்களில் பல வகையான விளம்பரங்கள் வெளிவருகின்றன.

- வணிக விளம்பரம், நிறுவன விளம்பரம், அறிவிப்பு விளம்பரம், தொழில் விளம்பரம், அரசு விளம்பரம், பங்குச்சந்தை விளம்பரம் போன்ற விளம்பரங்களை நாளிதழ்களில் காணலாம்.

**இணைப்பு இதழ்கள்:**

- தற்காலத்தில் ஒவ்வொரு நாளிதழும் வாரத்தின் ஏழு நாளிலும் ஒவ்வொரு வகையான இணைப்பிதழை வழங்குகின்றன. எடுத்துக்காட்டாக சிறுவர் இதழ், அறிவியல் இதழ், மருத்துவ இதழ், கல்வி இதழ், பெண்கள் இதழ் தொழில் இதழ், வணிக இதழ், விளையாட்டு இதழ், இளைஞர் இதழ், சோதிட இதழ், சமய இதழ், வேலைவாய்ப்பு இதழ் முதலியவற்றைக் கூறலாம்.

**பருவ இதழ்களின் அமைப்பு:**

- பருவ இதழ்களில் அறிஞர்களின் நேர்காணல்கள், நடப்பு நிகழ்வுகள், கட்டுரைகள், தொடர்கள், சிறுகதைகள், கவிதைகள், உடல்நலம், வேளாண்மை, வேலைவாய்ப்பு மற்றும் திரைப்படச் செய்திகள் போன்றவைப் படிப்பவர்களின் மனத்தைக் கவரும்வகையில் வண்ணப்படங்களுடன் அமைந்திருக்கும்.

**அட்டைப்படம்:**

- பருவ இதழ்களில் அட்டைப்படங்களே இதழ்களின் வாயில்கள் எனலாம். அட்டைப்பகுதி, படிப்பவர் மனங்களைச் கவரும்வகையில் அமைதல் வேண்டும். இதழின் உள்ளடக்கச் செய்தியைத் தலைப்பாகக்கொண்டு. வண்ணப்படங்களுடன் அட்டைப்பகுதி அமைந்திருக்கும்.

| **இதழியல் - சில முதன்மைகள்** |
|---|
| 1. இந்திய இதழியலின் தந்தை – ஜேம்ஸ் அகஸ்ட்டஸ் ஹிக்கி |
| 2. இந்தியாவில் முதன் முதலில் தொடங்கப்பட்ட இதழ் பெங்கால் கெஜட் (1780) (கல்கத்தா ஜெனரல் அட்வைசர்) |
| 3. தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் நாளிதழ் - மதராஸ் மெயில் (1868) |
| 4. தமிழ்நாட்டில் வெளிவந்த முதல்தமிழ் நாளிதழ் - சுதேசமித்திரன் (1882) |

**இணைய இதழ்கள்:**

- இன்று, மக்களிடையே செய்தியை விரைவாகக் கொண்டுசேர்க்கும் ஊடகமாக இணையத்தளம் செயல்பட்டு வருகின்றது. நவீன உலகில் அன்றாடச் செயல்பாடுகளில் தவிர்க்க முடியாத தேவையாக இணையம் உள்ளது. இணையத்தில் வெளியிடப்படும் இதழ்கள், கணினி வழியாகவோ திறன்பேசி வழியாகவோ மிக எளிதாக வாசகர்களைச் சென்றடையும் வலிமை வாய்ந்தவை. அச்சு இதழ்களைவிட இணைய இதழ்களின் பரவல் உலகளாவியது. முழுவதும் மின்பக்கங்களைக் கொண்ட மின்னிதழ்கள், இணையத்தில் வெளியிடப்படுகின்றன.

**இணையத்தில் அச்சிதழ்கள்:**

- அச்சில் வெளிவரும் பெரும்பாலான நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் இணையத்திலும் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. அவற்றில் எந்த ஒரு இதழையும் காலவாரியாக நாம் பதிவிறக்கம் செய்து படிக்கலாம். பெரும்பாலான வெளியீட்டு நிறுவனங்கள் இவற்றைக் கட்டணமின்றி வழங்குகினற்ன. சில நிறுவனங்கள், கட்டணங்களைப் பெற்றுக்கொண்டு மின்னிதழ்களை வழங்குகின்றன.

**இதழ்**களின் **பெருக்கமும் தேவையும்:**

- இதழ்களே வெளிவந்தன. தற்போது நாளுக்குநாள் படிப்பவர்களின் எண்ணிக்கை பெருகிவருகின்றது. எனவே, அவர்களின் தேவைக்கேற்ப இதழ்கள் வெளிவருகின்றன. ஒவ்வோர் இதழும் வாசகர்களை மனநிறைவு அடையச் செய்ய முயல்கின்றன. இதழ்கள் படிப்போரின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்டு வெளிவருகின்றன. மேலும், நடுநிலையோடு செய்திகளை வெளியிடுகின்றன; மக்களிடையே நாட்டுநடப்புகளை அறியவைத்து, அறிவாற்றலை மேம்படுத்துகின்றன; சமூக மாற்றங்களுக்கு அடித்தளமாகவும் உள்ளன.

**தமிழ் இதழ்கள் - ஒரு சிந்திப்பு**

ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது, வழியெங்கும் வண்ணத் தோரணங்களும் விதவிதமான கோலங்களும் மனத்தை மகிழ்வித்தன. கவின், கடைத்தெரு வழியாகச் சென்று கொண்டிருக்கிறான். அப்போது பக்கத்து ஊரில் வசிக்கும் சிற்றப்பா மகள் கவிமதி எதிரே வருகிறாள் இருவரும் சந்தித்து உரையாடுகின்றனர்.

**கவின் :** கவிமதி! யாரைத் தேடுகிறாய்?

**கவிமதி** : கவின் உன்னைத்தான் காணவந்தேன். உங்கள் ஊரில் திருவிழாவா?

**கவின்**: ஆம், புத்தகத் திருவிழா.

**கவிமதி**: என்ன! புத்தகத் திருவிழாவா? உங்கள் ஊரில் புத்தகத் திருவிழா நடப்பதை நினைத்தால் மிகவும் பெருமையாக இருக்கிறது.

**கவின்** : சரி, வா. வீட்டிற்குச் செல்வோம், எங்கள் வீட்டில் உன்னைக் கண்டால் அனைவரும் மகிழ்வர்.

(இருவரும் பேசியபடி கடைத்தெருவழியே நடந்து செல்கின்றனர். அப்போது யாரோ அழைப்பது போல் தோன்றியது. இருவரும் அழைப்பு வந்த திசையினை நோக்கித் திரும்பினர். அழைத்தது எதிரே இருந்த புத்தக்கடையில் மிடுக்குடன் அச்சின் வாசனையோடு, புத்தகம் புதியதாகப் படபடத்துக் கொண்டிருந்தது ஒரு நாளிதழ். அது யாரும் எதிர்பாராத நேரத்தில் சட்டெனப் பேசத் தொடங்கியது)

**நாளிதழ்**: நண்பர்களே! இங்கு வாருங்கள்.

**கவின்**: என்ன! எங்களை அழைத்தது நீயா? எதற்காக அழைத்தாய் நாளிதழே?

**நாளிதழ்**: நானும் பல நாளாக உங்களின் நட்பிற்காகக் காத்திருக்கிறேன்

நீங்கள் தாம் என்னுடன் பேசாமலும் என்னைப் புரட்டாமலும் உங்கள் போக்கில் சென்று கொண்டிருக்கிறீர்கள்.

**கவிமதி:** நாங்கள் ஏன் உன்னுடன் பேச வேண்டும்?

**நாளிதழ்:** அன்றாடம் நடைபெறும் நாட்டுநடப்புகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள நினைக்கிறேன். என் வரிகளை நீங்கள் மேலிருந்து கீழாய் வாசித்தால் நான் உங்களைக் கீழிருந்து மேலாய் உயர்த்துவேன் தெரியுமா? இதனால் நமக்குள் நல்ல நட்பு மலர்வதுடன் உங்கள் அறிவாற்றலும் வளரும்.

**கவிமதி** : எப்படி?

**நாளிதழ்**: என்னை வாசித்தால் நீங்கள் திறம்படச் சிந்திப்பீர்கள். உலகின் பல இடங்களில் நடைபெறும் நிகழ்வுகள், அறிவியல் செய்திகள், பொருளியல் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், திரைப்படச் செய்திகள், கருத்துப்படங்கள், கல்விச் செய்திகள் முதலானவற்றை என்னிடமிருந்து உங்களால் பெற இயலும்.

**கவின்**: எங்கள் ஆசிரியர் சொல் விளையாட்டு ஒன்றை உருவாக்கி வரும்படி என்னிடம் கூறினார். அதற்கான வழிமுறையினை உன்னால் கூற இயலுமா?

**நாளிதழ்**: சொல் விளையாட்டிற்கான வழிமுறையினை இணைப்பு இதழாய் வெளிவரும் என் மகளாகிய சிறுவர் இதழில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாமே!

**கவிமதி**: சிறுவர் இதழில் வேறு என்னவெல்லாம் தெரிந்துகொள்ளலாம்?

**நாளிதழ்**: சிறுவர் இதழில் சிறுவர்களுக்கான நன்னெறிக் கதைகள்.

**ஓவியம்** வரைதல், வண்ணம் தீட்டுதல், கணிதப் புதிர்கள், புதிர் விளையாட்டுகள், விடுகதைகள் போன்றவற்றை அறியலாம். மேலும், இவற்றில் போட்டிகள் நடத்திப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

(அப்போது, சிறுவர் இதழ் குறுக்கிட்டுப் பேசத் தொடங்குகிறது)

**சிறுவர்** இதழ்: அம்மா! இன்னும் சிலவற்றை மறந்துவீட்டீர்கள். அறிவியல் விந்தைகள், குழந்தைப் படைப்புகள், பிறந்தநாள் வாழ்த்துகள் ஆகியவற்றையும் நான் கொண்டிருக்கிறேன்.

**கவின்** : அப்படியா? தங்களுடன் பிறந்தவர்கள் யாரேனும் உள்ளனரா?

**சிறுவர்** இதழ்: ஆம், எங்கு நோக்கினும் இதழ்த் தம்பிகளும் தங்கைகளும்தான்! இளைஞர் இதழ், மகளிர் இதழ், மருத்துவ இதழ், ஆன்மீக இதழ், சோதிட இதழ் முதலான உடன்பிறந்தவர்கள் பலரும் எனக்கு உண்டு.

(அப்போது, எங்கிருந்தோ சிரிப்பொலி கேட்கிறது)

**கவிமதி** : யார் இப்படிச் சிரிப்பது?

**நாளிதழ்**: அது வேறுயாருமில்லை, எங்கள் வீட்டில் செல்லமாய் வளரும் கேலிச் சித்திரம் தான். யாரையாவது விளையாட்டாகப் படம் வரைந்து நகைக்கச் செய்வதே அதன் வேலையாய்ப் போய்விட்டது.

**கவின்** : உள்ளே வேறு யாரெல்லாம் உள்ளார்கள்?

**நாளிதழ்**: உள்ளே கருத்துப்படம், கதைப்படம், செய்திப்படம், துணுக்குச்செய்தி போன்ற செல்லப் பிள்ளைகள் பலரும் இருக்கின்றனர். காலை நாளிதழ், மாலை நாளிதழ் என ஒரு நாளில் இருமுறை வெளிவருகிறோம்.

**கவின்**: எதற்காக ஒரு நாளைக்கு இரண்டு முறை?

**நாளிதழ்**: நாம் தகவல் யுகத்தில் வாழ்கிறோம். அவ்வப்போது நடைபெறும் செய்திகளை உடனுக்குடன் கொண்டு சேர்ப்பதற்காக நான் ஒரு நாளைக்கு இரண்டு முறை வெளிவருகிறேன்.

**கவின்**: உங்கள் வீட்டில் விருந்தினர் பலர் வந்திருக்கிறார்கள் போல் தோன்றுகிறதே!

**நாளிதழ்**: ஆம், புத்தகத் திருவிழா என்று கேள்விப்பட்டு என்னுடைய தோழி பருவ இதழ், தன் குழந்தைகளுடன் வந்திருக்கின்றாள். உங்களுடன் பேச ஆசைப்படுகிறாள்.

**கவிமதி**: நாங்களும் தான்.

பருவ இதழ்: வணக்கம், நண்பர்களே!

**இருவரும்**,: வணக்கம் பருவ இதழே! உன்னைப்பற்றித் தெரிந்துகொள்ள நாங்கள் மிகவும் ஆவலாக உள்ளோம்.

**பருவ இதழ்**: நான் இலக்கியம், விளையாட்டு, மகளிர் மேன்மை, சிறுவர் நலன், இளைஞர் நலன், தன்னம்பிக்கை, மருத்துவம், வேளாண்மை, வாணிகம், வேலைவாய்ப்பு, புலனாய்வு,

ஆராய்ச்சி, தொழில்நுட்பம், திரைப்படம் போன்ற செய்திகளைத் தாங்கித் தனித்தனி இதழ்களாக வெளிவருகிறேன்.

**கவிமதி**: இலக்கிய இதழாய் எங்களுக்குக் கூற ஏதேனும் செய்தி உள்ளதா?

**பருவ** இதழ்: இலக்கியத்தோடு எனக்கு நெருக்கமான தொடர்பு உண்டு. சமகாலப் படைப்பிலக்கியங்கள். படைப்பாளிகளின் நேர்காணல்கள், நவீன இலக்கியக் கோட்பாட்டுக் கட்டுரைகள், சமூக, பொருளாதார, அரசியல் எதிர்வினைகள், இளம் படைப்பாளர் அறிமுகம் போன்றவற்றை இலக்கிய இதழான என்னுள் காணலாம். கதை, கவிதை, கட்டுரை போன்றனவும் எனக்குள் இடம்பெறும்.

**கவின்**: எனக்கு விளையாட்டு மிகவும் பிடிக்கும்.

**பருவ இதழ்**: நீங்கள் என்ன கூற வருகிறீர்கள் என்று எனக்குத் தெரிகிறது. விளையாட்டு பற்றிய செய்திகள் தானே? உலகக் கோப்பைப் போட்டிகள், விளையாட்டு வீரர்களின் நேர்காணல்கள் என விளையாட்டுச் செய்திகளுக்கென விளையாட்டு இதழாக நான் வெளிவருகிறேன். அதில் உங்களுக்கு ஏற்படும் ஐயங்களுக்கான விடைகளைப் பெறலாம்.

**கவிமதி**: என் தாயாருக்கு அடிக்கடி உடல் நலமில்லாமல் போகிறது. அவர்களின் உடல்நலத்திற்கான வழிகாட்டுதல்களைத் தங்களால் கூற இயலுமா?

**பருவ இதழ்**: வந்தபின் வருந்துவதைவிட, வருமுன் காப்பது தானே சிறந்தது. நல்வாழ்வு தரும் விழிப்புணர்வுக் கருத்துகளோடு நான் மருத்துவ இதழாக வெளிவருகிறேன்; உடல்நலம் சார்ந்த இயற்கையான மருத்துவக் குறிப்புகளையும் மருத்துவர்களின் ஆலோசனைகளையும் வழங்குகிறேன் உடல்நலம் குறித்த கட்டுரைகளையும் உளவியல் தொடர்பான வினாவிடைகளையும் தாங்கி வெளிவருகிறேன். இச்செய்திகள் உங்கள் தாயாருக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**பருவ** இதழ்: தொழில் முனைவோருக்கான கல்வித் தகுதிகள், வழிகாட்டுதல்கள், முதலீடுகள், அதற்கான அரசு மானியத்தொகை பற்றிய செய்திகளுடன் தொழில் இதழாக வெளிவருகின்றேன். வேளாண்மைக்கான அரசுத்திட்டங்கள், பங்குச்சந்தை முதலீடுகள் மேலாண்மைச் சிந்தனைகள், விளம்பர உத்திகள், வரிவிதிப்பு தொடர்பான ஆலோசனைகளோடு வாணிக இதழாகவும் வெளிவருகிறேன்.

**கவின்**: அப்படியா! சரி. சிறந்த ஓர் ஆய்வாளராக வர விரும்புகிறேன். அதற்கு நீ வழிகாட்டுவாயா?

**பருவ**இதழ்: ஓ! புதிய கண்டுபிடிப்புகளையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் கொண்டு ஆராய்ச்சி இதழாக வெளிவருகின்றேனே அது மட்டுமே? உங்களைப் போன்ற இளைஞர்களுக்குத் தன்னம்பிக்கையைக் கொடுக்கும் வகையில் கட்டுரைகள், கதைகள் கவிதைகள், சாதனை படைத்த ஆளுமைகள் பற்றிய செய்திகளைத் தாங்கித் தன்னம்பிக்கை இதழ்களாகவும் வெளிவருகிறேன்.

**கவிமதி**: புதிய தொழில் நுட்பங்களைப்பற்றி உன்னிடம் தெரிந்துகொள்ள இயலுமா?

**பருவ**இதழ்: ஓ! தெரிந்துகொள்ளலாமே கணினித் தொழில்நுட்பத்திற்கெனத் தனி இதழாகவே வெளிவருகிறேன். அதுமட்டுமின்றி, மென்பொருள், இயந்திரங்கள், வாகனங்கள், வேளாண்மை முதலான தொழில்நுட்பம் பற்றிய செய்திகளையும் என்னைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம். இத்துடன் திரைப்படத் தொழில்நுட்பம் பற்றியும், திரைப்படக் கலை பற்றியும் கூறுவதற்காகத் திரைப்பட இதழ்களாகவும் வெளிவருகிறேன்.

**செய்தி நிறுவனங்கள்:**

| **உலகச் செய்தி நிறுவனங்கள்:** | |
|---|---|
| 1. | அமெரிக்க அசோசியேட்டட் பிரஸ் (A.P) |
| 2. | இராய்ட்டர் நிறுவனம் (Reuter) |

| | |
|---|---|
| 3. | ஏஜென்சி பிரான்ஸ் பிரஸ் (A.F.P) |
| 4. | யுனைடெட் பிரஸ் இன்டர்நேஷனல் (U.P.I) |
| 5. | டாஸ் செய்தி நிறுவனம் (Tass) |
| **இந்தியச் செய்தி நிறுவனங்கள் பொது நிறுவனம்** | |
| 1. | அசோசியேட்டட் பிரஸ் ஆப் இந்தியா (A.P.I) |
| 2. | பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா (P.T.I) |
| 3. | யுனைடெட் பிரஸ் ஆப் இந்தியா (U.P.I) |
| 4. | யுனைடெட் நியூஸ் ஆப் இந்தியா (U.N.I) |
| 5. | பிரி பிரஸ் ஆப் இந்தியா (F.P.I) |
| **தனியார் நிறுவனங்கள்** | |
| 1. | குளோப் நியூஸ் ஏஜென்சி (Globe News Agency) |
| 2. | ஓரியண்ட் பிரஸ் (Orient Press) |
| 3. | டைம்ஸ் ஆப் இந்தியா (Times of India) |
| 4. | இந்தியன் எக்ஸ்பிரஸ் (Indian Express) |

**கவின்**: இவை எல்லாவற்றையும் நாங்கள் எப்படித் தெரிந்து கொள்வது?

பருவ இதழ்: இவை எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள வேண்டுமானால், நீங்கள் என் பிள்ளைகளான வார இதழ், மாத இதழ், ஆண்டிதழ்களோடு நட்பு கொண்டு அவர்களை அவ்வப்போது படித்துவர வேண்டும். இதோ, எனது இளைய மகள் வார இதழ் வந்துவிட்டாள், அவளுடன் சற்று உரையாடுங்கள்.

**கவிமதி**: வணக்கம் தோழி!

**வார இதழ்**: வணக்கம். நண்பர்களே! உங்களின் நட்பு கிடைத்ததில் நான் மிகவும் மகிழ்கிறேன். நமது நட்பு தொடர என்னைப் பற்றிய சில செய்திகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

**கவிமதி** : சொல்லுங்கள், தெரிந்து கொள்கிறோம்.

**வார இதழ்:** நான் வாரம் ஒரு முறை இதழாகவும், வாரம் ஒரு முறை இதழாகவும் வாரம் மும்முறை இதழாகவும் வெளிவருகிறேன். அரசியல், தொழில் கல்வி, மகளிர், இளைஞர், மருத்துவம், திரைப்படம் சார்ந்த தனித்தனி இதழ்களாகவும் வருகின்றேன்.

**கவிமதி**: எதற்காக இத்தனை இதழ்களாக வெளிவருகின்றீர்கள்?
வார இதழ்: மக்களனைவரும் அவரவர் விருப்பத்திற்கேற்பச் செய்திகளைத் தேடிப் படிக்கின்றனர். எனவே, அவரவர் விருப்பத்திற்கு ஏற்பத் தனித்தனி இதழ்களாக வெளி வருகிறேன்.

**கவின்**: உங்களுடன் வந்துள்ள மற்ற உடன்பிறந்தவர்களைப் பற்றியும் அறிந்துகொள்ள ஆசைப்படுகிறோம்.

**வார**இதழ்: கட்டாயமாக நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். முதலில், என் உடன்பிறந்தவளான மாத இதழை அழைக்கிறேன்.

**மாத இதழ்**: வணக்கம். நண்பர்களே!

இருவர்: வணக்கம். மாத இதழாரே! நீங்கள் மாதம் ஒருமுறை வருவதாக அறிந்தேன்.

**மாத இதழ்**: மாதம் ஒருமுறை மட்டுமல்ல, மாதம் இரு முறையாகவும் வெளிவருகிறேன்.

**கவிமதி** : நீங்கள் என்னென்ன செய்திகளைத் தருவீர்கள்?

**மாத இதழ்**: நான், ஒரு மாதத்தில் நடைபெற்ற நிகழ்வுகளைத் தாங்கி வெளிவருகிறேன். மருத்துவம், வேளாண்மை, தொழில், விளையாட்டு, வாணிகம், வேலைவாய்ப்பு, திரைப்படம் போன்ற பல செய்திகளுடன் சிறுகதை, கட்டுரை,தொடர்கதை போன்றவற்றையும் கொண்டு வெளிவிருகிறேன். என் மற்றொரு தோழியான ஆண்டு இதழ் உங்களிடம் பேச விருப்பப்படுகிறாள்.

**கவிமதி**: பேசச்சொல்லுங்கள். நாங்களும் கேட்க ஆவலாக இருக்கிறோம்.

**ஆண்டு இதழ்**: நண்பர்களே! வணக்கம். ஆண்டிற்கு ஒரு முறை வெளியாவதால் என்னை ஆண்டு இதழ் என்று அழைக்கின்றனர். நான், ஓர் ஆண்டு முழுவதும் நடைபெறும் உலகச் செய்திகளைத் தொகுத்து மொத்தமாகத் தந்திடுவேன். மேலும், போட்டித் தேர்விற்குத் தேவையான பொது அறிவு தொடர்பான செய்திகளையும் வெளியிடுவேன். எனவே, என்னை எல்லாரும் விரும்பிப் படிப்பர். மேலும், காலாண்டிற்கு ஒருமுறை காலண்டிதழும், அரையாண்டிற்கு ஒருமுறை அரையாண்டிதழும் என்னைப் போலவே வெளிவருகின்றன.

**கவிமதி**: உங்களுக்குள் செய்திகளின் தன்மை அடிப்படையில் ஏதேனும் வேறுபாடுகள் உண்டா?

**இதழ்**கள்: உண்டு, பொருள் நிறைந்த தகவல்களைக்கொண்டு புலமைமிக்கவர்கள் மட்டும் படிக்கும் இதழ்களைச் செவ்வியல் இதழ்கள்“ என்றும், அனைத்து மக்களும் எளிதாகப் படிக்கக் கூடிய இதழ்களை “மக்கள் இதழ்கள்“ என்றும் அழைப்பர்.

**கவின்**: வேறு ஏதேனும் புதிய செய்திகள் இருந்தால் கூறுங்கள்?

**இதழ்**கள்: எங்களுடைய குழந்தைகளான இணைய இதழ்கள் பற்றியும் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

**கவின்** : இணைய இதழ்களா? அவை என்ன செய்கின்றன? அவர்களை நாங்கள் எப்படிச் சந்திப்பது?

**ஆண்டு இதழ்**: கவலை வேண்டாம். எங்களையாவது பார்ப்பதற்கு நீங்கள் எங்கள் இருப்பிடம் தேடி வருதல் வேண்டும். ஆனால் நீங்கள் இணைய இணைப்பைப் பெற்றிருந்தால் எங்கள் குழந்தைகளான மின்னிதழ்களை உங்கள் இல்லத்திற்கே வரவரைக்கலாம். அவை உடனுக்குடன் செய்திகளை உங்களுக்குக் கொண்டு வந்து சேர்க்கின்றன.

**குவஹிமதி**: மிகவும் வியப்பாக உள்ளதே! இதுவரை உங்களின் பெருமை தெரியாமல் நாங்கள் உங்களைப் படிக்காமல் இருந்துவிட்டோம். இனி, நாங்கள் உள்களின் நண்பர்கள். எங்களின் அறிவு வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்குகும் தேவையான கருத்துகளை உங்களிடமிருந்து பெறக் காத்திருக்கின்றோம்.

**இதழ்**கள்: மிக்க மகிழ்ச்சி! உங்களின் ஆர்வம் எங்களை வியக்க வைக்கிறது. உங்களின் முன்னேற்றத்திற்காகவும், பயனுள்ள முறையில் நேரத்தைச் செலவிடவும் பல செய்திகளை உங்களுக்கு வழங்கவும் காத்திருக்கின்றோம். மேலும், உங்களின் படைப்புகளை வெளியிடவும் காத்திருக்கின்றோம். கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள் போன்ற உங்களின் படைப்புகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். அவற்றுள் சிறந்த படைப்புகள், இதழ்களில் வெளிவரும். அவற்றிற்குப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

கவின்: மிக்க நன்றி, உங்கள் அனைவரையும் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி. கல்வித் திருவிழா நாளன்று நல்லறிவைப் பருகிய நிறைவுடன் செல்கின்றோம். படிப்பதில் உள்ள இன்பம் இப்பொழுது புரிகின்றது. நேரம் போனதே தெரியவில்லை. புத்தகத் திருவிழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். வீட்டில் அம்மா தேடுவார்கள். நாங்கள் செல்கிறோம். மீண்டும் சந்திப்போம்.

**சமுதாய முன்னேற்றத்தில் இதழ்கள்**

- நாடோடிகளாக வாழ்ந்த மனித இனம் படிப்படியாக நாகரிக வளர்ச்சி பெற்று வாழ முற்பட்டது. அவர்களுக்குள்ளே செய்திப் பரிமாற்றங்கள் தேவைப்பட்டன. இதுவேமொழி தோன்றுவதற்கு முதன்மைக் காரணமாக அமைந்தது. தீப்பந்தங்களை எரித்தும், பறை

அறிவித்தும் ஓர் இடத்தில் நிகழும் செய்திகளை மற்றவர்களுக்கு அறிவித்தனர். மேலும், ஆட்களை அனுப்பியும் புறாக்களின் கால்களில் ஓலைகளைக் கட்டியும் செய்திகளைத் தெரிவித்தனர்.

**இதழ்களின் தோற்றம்:**

- செய்தியை மக்களுக்கு அறிவிக்கும் ஒரு முறையினை ஜூலியஸ் சீசர் பொ.ஆ.மு. 60 இல் அறிமுகப்படுத்தினார். அவர் தினசரி செய்தி (Acta Diurna) என்ற பெயரில் கற்பலகைகள் மற்றும் செப்புத் தகடுகளில் அரசுச்செய்திகளை எழுதிப் பொதுமக்களின் பார்வைக்கு வைத்தார். எனவே, அவர் ”இதழியலின் தந்தை“ என அழைக்கப்படுகிறார். இந்தியாவில் அசோகரின் கல்வெட்டுகளை இதழ்களின் முன்னோடியாகக் கொள்ளலாம்.

- (1398 – 1468) என்ற ஜெர்மானியர் முதன் முதலில் அச்சுப் பொறியினைக் கண்டுபிடித்தார். இதனால், அச்சிட்ட இதழ்கள் நம் கரங்களில் தவழ்ந்து, சமுதாயம் பல மாற்றங்களைப் பெறக் காரணமாக அமைந்தது.

**அச்சு இதழ்கள்:**

- சீனர்களால் காகிதம் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு அச்சுக்கலை தோன்றி வளர ஆரம்பித்தது. இதழ்களின் வளர்ச்சிக்கு அச்சுக்கலை பெருந்துணை புரிந்தது. பொ.ஆ. 1450 இல் ஜோஹன்னஸ் கூடன்பர்க் (Johannes Gutenberg) ஆதரவில் ”ஜனவிநோதினி” என்ற தமிழ் மாத இதழ் வெளிவந்தது. கல்வி வளர்ச்சியே இதன் தலையாய குறிக்கோளாக இருந்தது.

**விடுதலைப் போராட்டத்தில் தமிழ் இதழ்கள்:**

- 1882 இல் ஜி. சுப்பிரமணியம் என்பவரால் வார இதழாகத் தொடங்கப்பெற்ற ”சுதேசமித்திரன்” 1889-இல் நாளிதழாக மாறியது. 1904-இல் மகாகவி பாரதியார் சுதேசமித்திரனில் துணையாசிரியராகச் சேர்ந்தார். தமிழக மக்களின் துயில் நீக்க, புரட்சிகரமான கருத்துகளாலும் சுவைமிகு உரைநடையாலும் சுதேசமித்திரன் புதுப்பொலிவோடும் வலுவோடும் வெளிவந்தது.

**இந்தியாவில் இதழ்கள்:**

- 1780-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29 ஆம் நாள் பெங்கால் கெஜட் (Bengal Gazette or Calcutta general Advertiser) என்ற முதல் இந்தியச் செய்தித்தாளை ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி வெளியிட்டார். சென்னையில் 1785 அக்டோபர் 12-இல் முதன் முதலாக ரிச்சர்டு ஜான்சன் (Richard Johnson) என்பவர் ”மெட்ராஸ் கூரியர்” (Madras courier) என்ற ஆங்கில வார இதழை வெளியிட்டார்.

**தமிழ் இதழ்கள்:**

- தமிழ்மொழியில் முதன் முதலில் வெளிவந்த நாளிதழ் எது என்பது பற்றித் திட்டவட்டமாகத் தெரியவில்லை. 1856-இல் பெர்சிவல் பாதிரியார் சென்னையில் தொடங்கிய “தினவர்த்தமானி“ தமிழில் வெளிவந்த முதல் வார இதழாகும். இந்த இதழ் செய்திகளோடு கலை, இலக்கியம், அறிவியல் சார்ந்த கட்டுரைகளையும் கொண்டு வெளிவந்தது. 1870-இல் கல்வித்துறையின் மகாகவி பாரதியார், 1907-இல் “இந்தியா” என்ற தமிழ் மாத இதழையும், ”பால பாரதம்” என்ற ஆங்கில வார இதழையும் தொடங்கினார். இதன் மூலம் நாட்டு மக்களிடையே விடுதலை உணர்வை வளர்த்தார். 1917-இல் திரு.வி.க அவர்கள் ”தேசபக்தன்” என்னும் நாளிதழைத் தொடங்கினார். சதேசமித்திரனுக்குப் பிறகு தமிழ் மண்ணில் விடுதலை வேட்கையின் வித்தாய் விளங்கிய இதழ் இதுவே. இதைத் தொடர்ந்து நவசக்தி, திராவிடன், தமிழ்நாடு, ஜெயபாரதி, சுதந்திரச்சங்கு, ஜனசக்தி போன்ற இதழ்களும் தோன்றி மக்களிடையே விடுதலை வேட்கையை எற்படுத்தின.

**விடுதலைப் போரில் தேசிய இதழ்கள்:**

- இந்தியா, ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டிருந்த போது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மக்களை ஒன்று திரட்டி ஆங்கிலேயரிடமிருந்து இந்தியாவை மிட்டெடுக்கவும் போராட்டம் செய்த தலைவர்களுக்கு இதழ்கள் உறுதுணையாக இருந்தன. திலகரின் "கேசரி" அரவிந்தரின் "வந்தே மாதரம்" சுவாமி விவேகானந்தரின் "சகோதரர்" போன்ற இதழ்கள் உரிமை வேண்டித் தொடர்ந்து குரல் கொடுத்தன.

- அதன் பின், அண்ணல் காந்தியடிகளின் சுதந்திரப் போராட்டங்கள் பல புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தின. அண்ணலின் அரசியல் நுழைவு, இதழ்களின் வளர்ச்சியில் இன்றியமையாத இடத்தைப் பெற்றது. அவர் தென் ஆப்பிரிக்காவில் "இந்தியன் ஒபினியன்" இதழையும் நம் நாட்டில் "யங் இந்தியா", "ஹரிஜன்", "நவஜீவன்" ஆகிய இதழ்களையும் அறத்தோடும் தரத்தோடும் நடத்தி வந்தார்.

- 1942 இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்திற்குப் பின்னர். பெரும்பாலான இதழ்கள் தேசிய இயக்கத்தோடு ஒன்றிணைந்தன. இந்திய மக்களிடையே விடுதலை வேட்கையை வளர்த்தன. இதன் விளைவாக, நாட்டு மக்கள் அந்நியர்களை நாட்டைவிட்டு விரட்டும் முயற்சியில் பல போராட்டங்களை நடத்தி விடுதலை பெற்றனர்.

**விடுதலை இந்தியாவில் இதழ்கள்**

- சிறையிலிருந்து விடுபட்ட பறவையைப்போல, இந்திய மக்களின் இதயங்களும் சிறகடித்துப் பறக்கத் தொடங்கின. இதயங்கள் மட்டுமல்ல. இதழ்களும் கருத்துச் சுதந்திரம் பெற்றன. அடிமை இந்தியாவில் ஆங்கில ஆட்சியின் அடக்குமுறையை எதிர்த்துச் சில இதழ்களே வெளிவந்தன. விடுதலைக்குப் பின் எண்ணற்ற இதழ்கள் தோன்றிச் சுதந்திரமாகச் செயல்படத் தொடங்கின.

- இதழ்கள் நாட்டுநடப்புகளையும் அறிவுசார் செய்திகளையும் அரசின் செயல்பாடுகளையும் மக்களுக்குத் தெரியப்படுத்தும் நோக்கோடு வெளிவருகின்றன. சமுதாயத்தில் நடக்கும் சீர்கேடுகளைக் கண்டறிந்து வெளியிடுவதன் மூலம் சமுதாயத்தை நெறிப்படுத்த அவை துணைபுரிகின்றன. சமுதாயத்தின் பல எதிர்ப்பகளைத் தாண்டி நடுநிலையோடு செய்திகளை வெளியிட்டு, நாட்டு மக்களின் வளமான வாழ்விற்கான அடித்தளத்தை அமைப்பதில் இதழ்களின் பணி இன்றியமையாததாகும்.

**சமுதாய முன்னேற்றத்தில் இதழ்களின் பங்கு:**

- மக்கள் ஒன்றாய்க் கூடி வாழும் அமைப்பே சமூகம் ஆகும். அது மொழி, இன, அரசியல் தொடர்புகளினால் ஒருங்கிணைக்கப்படுகிறது. அத்தகைய சமூகத்தின் எண்ணங்களையும் எழுச்சிகளையும் எதிரொளிக்கும் கண்ணாடியாய் இதழ்கள் விளங்குகின்றன. இதழ்கள் அடிமையாய் இருக்கும் நாடுகளின் விடுதலைக்கு வித்திடுவதுடன், விடுதலை பெற்ற நாடுகளுக்கு மக்களாட்சிக் காவலனாகத் திகழ்கின்றன. மேலும், சமுதாயத்தில் நிகழும் குற்றங்களையும், ஊழல்களையும் அச்சமின்றி எடுத்துரைத்து மக்களிடையே விழிப்புணர்வை எற்படுத்துவதில் இதழ்கள் பெருந்தொண்டு ஆற்றுகின்றன.

**மொழி வளர்ச்சியில் இதழ்கள்:**

- தமிழ் மொழியின் வளர்ச்சியில், இதழ்களின் பங்கு அளப்பரியது. எழுத்துருவாக்கம், புதுமையாக்கம், கலைச்சொல் படைத்தல் போன்றவற்றிற்கு இதழ்கள் பெருந்துணை புரிகின்றன. தொடக்கக்கால இதழ்களில் பிறமொழி கலந்தே எழுதவந்தனர். பின்னர் வந்த இலக்கிய இதழ்களும் தனித்தமிழ் இயக்க இதழ்களும் பிறமொழிக் கலப்பின்றி வெளிவந்தன. தமிழ் இதழியலில் மிகப்பெரிய மாற்றங்களை உருவாக்கிய பெருமை திரு.வி.கலியாண சுந்தரனாரையே சாரும். அவரின் இதழ்களில் கலப்பில்லாச் செந்தமிழ், சிறப்போடு வளர்ந்து வந்தது. புதுப்புதுத் தமிழ்ச் சொற்கள் உலா வந்தன. தமிழ் உரைநடை வரலாற்றில் அவரது நடை குறிப்பிடத்தக்க ஒன்றாகத் திகழ்ந்தது.

- தனித்தமிழ் இயக்க இதழ்கள் தமிழ் வளர்ச்சிக்கு உதவியுள்ளன. மறைமலை அடிகளின் "அறிவுக்கடல்". சி.பா. ஆத்தினாரின் "தமிழன்", "தமிழ்க்கொடி" பாரதிதாசனின் "குயில்"

பெருஞ்சித்திரனாரின் "தென்மொழி" "தமிழ்ச்சீட்டு" போன்றவை தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றிய இதழ்களாகும்.

- தமிழில் எழுத்துச் சீர்திருத்தத்தோடு வெளிவந்த பெரியாரின் "விடுதலை", "குடியரசு" ஆகிய இதழ்கள் தமிழ் மொழி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றின.

**பண்பாட்டு வளர்ச்சியில் இதழ்களின் பங்கு:**

- பண்பாட்டை உருவாக்குவதிலும் இதழ்கள் ஆற்றல் வாய்ந்தனவாக உள்ளன. வ.வே.சு. வின் பாலபாரதம் என்னும் இதழ் விடுதலை உணர்வை உண்டாக்கியது. பாரதியாரின் "இந்தியா" இதழில் விடுதலை உணர்வு, சமூகச்சீர்திருத்தம், பண்பாடு ஆகியன வலியுறுத்தப்பட்டன. மணிக்கொடி இதழ் சமூகச் சீர்திருத்தம், தமிழ் மொழி மேம்பாடு ஆகியவற்றை வெளியிடுவதையே தன் குறிக்கோளாகக் கொண்டு விளங்கியது. சுதந்திரச் சங்கு, ஜெயபாரதம், லோகோபகாரி போன்ற இதழ்கள் பண்பாட்டுப் பாதுகாப்பு, தமிழ் மறுமலர்ச்சி ஆகியவற்றிற்காகப் பாடுபட்டன.

**கல்வி மறுமலர்ச்சி:**

- ஒரு நாட்டின் அறிவு வளத்தை உறுதி செய்வது அக்கல்வியை வளர்ப்பதற்காகத் தமிழ்க்கல்வி (1897), முதியோர்கல்வி (1951), கல்விக்கதிர் (1969) போன்ற இதழ்கள் தொடர்ந்து பாடுபட்டுவந்தன. மருத்துவத்திற்காக ஆயுர்வேத பாஸ்கரன், ஆரோக்கியம், மூலிகை மணி, மூலிகை ரகசியம் முதலான இதழ்கள் வெளிவந்தன. தற்போது வார மாத இதழ்களிலும் நோய்கள் பற்றியும், நோய்க்கான மருத்துவம் பற்றியும், மருத்துவக் குறிப்புகளும் கட்டுரைகளும் வெளிவருகின்றன.

**அறிவியல் முன்னேற்றம்:**

- ஒவ்வொரு நாளும் புதிய புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் தோன்றியவண்ணம் உள்ளன. இத்தகைய புதிய கண்டுபிடிப்புகளையும் ஆராய்ச்சிகளையும் அறிவியல் இதழ்கள் உடனுக்குடன் வெளியிடுகின்றன. எதையும் ஏன்? எப்படி? எதற்கு? என்னும் வினாக்களுக்கு விடை கிடைத்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளும் அறிவியல் பார்வையை இவ்விதழ்கள் வளர்க்கின்றன.

**பேரரசர் அசோகர் பொ.ஆ.மு. 262 இல் மக்களுக்கு வெளியிட்ட அரசு செய்தி:**
"பிரியமான மன்னர் பியாதசி இவ்வாறு சொல்கிறார். "இதற்குமுன் அரசாங்க வேலைகளைச் சரியாகக் கவனிக்க முடியாமலும், சரியான நேரத்தில் சரியான தகவல்களைப் பெற முடியாத நிலையும் இருந்து வந்தது. அதனால், இந்தப் புதிய ஆணை பிறப்பிக்கப்படுகிறது. மாமன்னராகிய நான் எந்த நேரத்திலும், உணவு சாப்பிட்டுக்கொண்டு இருந்தாலும், தேரில் பயணம் செய்து கொண்டு இருந்தாலும், வேறு எந்த இடத்தில் எப்படி இருந்தாலும், அரசாங்க அலுவலர்கள் மூலம் மக்களின் பிரச்னைகள் தொடர்பான தகவல்கள் உடனுக்குடன் எனக்கு அனுப்பப்பட வேண்டும். கொடை மற்றும் நலத் திட்டப் பொது அறிவிப்புகள் தொடர்பாக நான் வாய் வார்த்தைகளாகப் பிறப்பித்து இருக்கும் ஆணைகள் தொடர்பாக யாருக்காவது ஏதேனும் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், அது தொடர்பான தகவல்கள் உடனடியாக மன்னராகிய என்னிடம் வந்து சேர வேண்டும். இது என்னுடைய ஆணை, வேலையைக் கவனமாகச் செய்வதிலும் அதற்காகக் கடுமையாக உழைப்பதிலும் பொதும் என ஒரு நாளும் நான் திருப்தி அடைவது இல்லை. மக்கள் அனைவரது நலத்தையும் போணுவதை என்னுடைய கடமையாக நினைக்கிறேன். அதைச் சிறப்பாகச் செய்ய நான் கடும் முயற்சியை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, வேலைகளைத் தாமதமின்றி உடனே முடிக்க வேண்டும். மக்களின் நலத்தை முன்னெடுப்பதைவிட முக்கியமான வேலை ஏதும் இல்லை. இது தர்ம ஆணை.

- தமிழில் புகழ்பெற்ற அறிவியல் இதழான "கலைக்கதிர்" 1948 முதல் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. அறிவியல் ஆய்வுகள் குறித்து நுட்பமாகவும் விரிவாகவும் அமைந்த கட்டுரைகளை அவ்விதழ் வெளியிடுகிறது. "துளிர்" என்னும் அறிவியல் இதழ் சிறவர்களிடையே அறிவியல் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் செய்திகளையும்,

செயல்பாடுகளையும் வெளியிட்டு வருகிறது. "கம்ப்யூட்டர் உலகம்", "தமிழ் கம்ப்யூட்டர்" போன்ற கணினி இதழ்கள் கணினி அறிவை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் பல புதிய தொழில்நுட்பச் செய்திகளைத் தாங்கி வெளிவருகின்றன.

**வேளாண்மை:**

- மனிதர் உட்பட அனைத்து உயிரிகளும் வேளாண்மையை நம்பியே உயிர் வாழ்கின்றன. அப்படிப்பட்ட வேளாண்மைத் துறையில் ஏற்படும் மாற்றங்களை மக்கள் தெரிந்துகொள்வது மிகவும் தேவையான ஒன்றாகும். பெரும்பாலும் வேளாண்மைத் தொழில் செய்வோர் கிராமங்களில் வாழ்கின்றனர். அவர்கள் புரிந்துகொள்ளும் எளிய நடையில் வேளாண்மை இதழ்கள் வெளிவருகின்றன. உற்பத்தியைப் பெருக்குதல், பயிர்ப் பாதுகாப்பு பற்றிய கட்டுரைகள் இவ்விதழ்களில் வெளிவருகின்றன.

**பெண்ணுரிமை:**

- பெண்கல்வியும், கைம்பெண் மறுமணமும் மறுக்கப்பட்ட காலத்தில் பெண்களுக்காக இதழ்கள பெரிதும் போராடின. இராஜாராம் மோகன்ராய் "சம்பத் கௌமுதி" என்ற இதழில் பெண்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகள் குறித்து வன்மையாகக் கண்டித்து எழுதினார். குறிப்பாகப் பெண்கள் உடன்கட்டை ஏறுவதைத் தீவிரமாக எதிர்த்தார். இவரின் முயற்சியால் 1829-இல் வில்லியம் பெண்டிங் பிரபு உடன்கட்டை ஏறும் வழக்கத்தை நீக்கினார். தற்போது அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்குச் சமஉரிமை வழங்கச் கோரி இதழ்கள் வெளிவருகின்றன. மேலும், பெண்களுக்கென்றே இதழ்கள் வெளிவருவதும் குறிப்பிடத்தக்கது.

**குழந்தை நலம்:**

- வளமான நாடு, நலமுடன் வளரும் குழந்தைகளாலேயே உருவாகும். எனவே, குழந்தைகளின் அறிவு வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் சிறுவர் இதழ்கள் பல வெளிவருகின்றன. அவற்றில் வெளியாகும் படக்கதைகள், விடுகதைகள், குழந்தைகளின் ஓவியங்கள் ஆகியன அவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கின்றன.

- இவ்வாறு அன்றாட நிகழ்வுகளின் பதிவுகள், அறிஞர்களின் படைப்புகள், கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் செயல்பாடுகள், தொழில், பொருளாதார வளர்ச்சி நிலைகள், சுகாதாரம், சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு நடைமுறைகள் முதலிய அனைத்து வாழ்வியல் கூறுகளையும் வெளியிடுவதன் மூலம் சமூக முன்னேற்றத்திற்கான மிகச்சிறந்த காரணிகளாக இதழ்கள் விளங்குகின்றன.

**தமிழ்ச் சிற்றிதழ்கள்:**
ஒரு குறிப்பிட்ட குழுவிலிருந்து குறிப்பிட்ட வாசகர்களை நோக்கி வலிமையான சமூக நோக்கங்களோடு வெளியிடப்படும் இதழ்களே சிற்றிதழ்கள். இவை மாத, காலாண்டு, அரையாண்டு மற்றும் ஆண்டு இதழ்களாக வெளிவருகின்றன. தமிழ் இலக்கியப் போக்கில் மாற்றங்களைச் சிற்றிதழ்களே ஏற்படுத்தியுள்ளன. ஒரு வணிக இதழ், தனக்குச் சார்பான நிலையில் அமைந்த பொழுதுபோக்கு எழுத்துகளை மட்டும் வெளியிடும் நிலையில் சிற்றிதழ்கள், மக்களின் வாழ்வியல் பதிவுகளைத் தாங்கி வரும் சமூக மாற்றத்திற்கான கருத்தாயுதங்களாகத் திகழ்கின்றன. தமிழின் புகழ்பெற்ற சிற்றதழ்களுள்சில மணிக்கொடி, கிராம ஊழியன், கலாமோகினி, எழுத்து, கசடதபற, ழ, வானம்பாடி, இலக்கிய வட்டம், சூறாவளி, சலங்கை, கலைமகள், சுபமங்களா, கணையாழி, நிகழ்

## ஊடகவியலில் தமிழ் ஆளுமைகள்

**வெள்ளையரின் சுரண்டலை வெளிக்காட்டிய படங்கள்:**

- ஆங்கிலேயர்கள் ஆண்டுக்கு 45 கோடி ரூபாய்க்கும் குறையாமல் இந்தியாவிலிருந்து உறிஞ்சிவிடுகிறார்கள் என்பதைக் குறிக்கும் வகையில் சித்திரம் ஒன்றையும் (இந்தியா இதழ் - 8.9.1906). இந்தியர்களை எலும்பும் தோலுமாகவும் வெள்ளையர்களைச் செல்வச்செழிப்புடனும் அமைத்து, இந்தியாவின் நிலையை விளக்கியிருந்தார்.

**சுதந்திர விடியல்:**

- எங்கு உரிமை மறுக்கப்படுகின்றதோ அங்குப் புரட்சி எழும் என்ற கருத்திற்கேற்ப ஆங்கிலேயர்களின் அடக்குமுறைகளால் இந்தியாவில் விடுதலை உணர்வு மேலோங்கியது. கடுமையான சட்டங்கள் என்ற கோழி, குப்பை மேட்டிலிருந்து கூவுகின்றது. இக்கோழியின் குரலைக் கேட்டவுனே 'சுதந்திர சூரியன்' உதிப்பது போன்ற (19.12.1908) சித்திரம் வரைந்தார். இவ்வாறு சித்திரங்களின் வழி, மக்களுக்குச் சுதந்திர உணர்வை ஊட்டினார்.

**பொருளாதாரம் சார்ந்த படங்கள்:**

- பாரதியார் ஒரு பன்முக ஆளுமைத்தன்மை கொண்டவர். அவருடைய பொருளாதார அறிவு வியக்கத்தக்கது. 'பஞ்சம்' என்ற தலைப்பில் சித்திரம் வரைந்து, அதில் பஞ்சத்திற்குக் காரணம் பருவநிலை மாற்றம் இல்லை. இந்திய உற்பத்திப் பொருள்கள் அனைத்தையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதுதான் என்பதைத் தெளிவாக உணர்த்தியுள்ளார்.

- ஆங்கிலேய அரசின் வரிவிதிப்புச் சார்ந்து 30.03.1907-இல் 'இந்திய யானையும் ஸர்க்கார்ப் பாகனும்' என்னும் தலைப்பில் வெளியான கருத்துப்படம் மக்களிடையே பெரிதும் பேசப்பட்டது. அமைதியும், பலமும் கொண்ட இந்தியா என்ற யானையின்மீது சுங்கவரி, நிலவரி, தொழில்வரி, வருமான வரி முதலிய சுமக்க முடியாத வரிச்சுமைகளை ஏற்றி, அதன் கழுத்தின் மீது அமர்ந்து ஜான் புல் துரை (ஆங்கிலேய அரசு) சவாரி செய்வது போல இக்கருத்துப்படம் அமைந்துள்ளது. இதில் சிறு வரிச்சலுகையாக உப்பு மூட்டையைத் தூக்கி எறிந்துவிட்டுப் பெரிய சுமையைக் குறைத்துவிட்டதாக ஆங்கில அரசு மகிழ்வதாகவும், யானை தன் மனத்திலே என்ன எண்ணம் வைத்திருக்கிறதோ யார் அறிவார்? என்ற வினாவையும் பாரதி படவிளக்கத்தில் குறிப்பிட்டு எழுதியுள்ளமை அவரது நுட்பமான வெளிப்பாட்டு உத்தியைக் காட்டுகிறது.

**சுதேசி ஒளிக்கு அஞ்சும் ஆந்தைகள்:**

- மிதவாதிகளை எள்ளி நகையாடுதல் போலவும், ஆங்கிலேய அரசை விமர்சிப்பது போலவும் கருத்துப்படங்கள் அமைந்திருந்தன. நாடு விரைந்து சுதந்திரம் அடைய போராடியவர்களுக்கு முட்டுக்கட்டை போட்ட மிதவாதிகளைப் பாரதி தயக்கமின்றி எதிர்த்து எழுதினார். சித்திரம் ஒன்றில் அவர்களைச் 'சுதேசி ஒளிக்கு அஞ்சும் ஆந்தைகள்' என்று பழித்தார். இவர்களை நிதானக் கட்சியினர். பழைய கட்சியினர் என்று அழைத்தார். அத்துடன் உலக அரசியல் நிகழ்வுகளைக் கூறியும் மிதவாதிகளை விமர்சித்தார். "கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி" (23.3.1907) என்று அமெரிக்கா, ஜப்பான் நாடுகளின் அரசியல் சூழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

**சுதேசிக் கப்பலின் கருத்துப்படம்:**

- பாரதியின் கருத்துப்படங்களில் தமிழகத்தைக் குறித்த படங்கள் மிகவும் குறைவு. இதற்குக் காரணம், பாரதியின் கனவு தேசியமே. ஆனால் சுதேசிக்கப்பலின் தேவையை உணர்ந்து நான்கு படங்களை வரைந்துள்ளார். இதில் மூன்று படங்கள் சுதேசிக்கப்பலுக்கு உதவுவது நமது கடமை என்பதனை வலியுறுத்தும் விதமாக அமைந்துள்ளது. ஒன்றில் பாரதமாதா தம் மக்களிடம் "இதற்கு உதவுங்கள்" என்று கூறுவதாக அமைத்திருக்கின்றது.

**பாரதியின் கருத்துப்படக் கனவு:**

- முழுவதும் கேலிச்சித்திரம் அடங்கிய இதழையும் வெளியிடும் எண்ணம் பாரதிக்கு இருந்தது. மேலும்,'இந்தியா' இதழில் முதல் பக்கச் சித்திரம் மட்டுமல்லாது ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள முதன்மை நிகழ்வுகளை விளக்கும் பொருட்டும் சித்திரம் வரைவதற்குத் தாம் எண்ணியுள்ளதாகவும் பாரதி கூறுகிறார். (இந்தியா இதழ் 13.3.1909).

**கருத்துப்படத்தின் வெற்றி:**

- கருத்துப்பட வடிவத்தினை இவ்வளவு வெற்றிகரமாகப் பயன்படுத்திக் காட்டியவர் பாரதியே. கருத்துப்படங்களுக்காகவே ‘இந்தியா’இதழினை அனைவரும் விரும்பிப் படித்தனர். பாரதியின் கருத்துப்படங்களைப் பற்றிப் பாரதிதாசன் எழுதும்போது,‘‘அந்தச் சித்திரம்தான் முதலில் என்னை அவர்தம் பரிவாரங்களின் பக்கமாக இழுத்தது. அந்தச் சித்திரம்தான் என்னை இன்னாரென்று எனக்குக் கூறிற்று’’ என்று கூறுவதிலிருந்து, பாரதியின் கருத்துப்படத்திற்குக் கிடைத்த வெற்றியினை நாம் அறியலாம்.

, , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , ,

**12th சிறப்பு தமிழ்**
**இயல் - 1**
**கவிதையியல்**

**கவிதையியல்**

- கவிதை, கதை, நாடகம், கட்டுரை என்ற நான்கும் இலக்கிய வடிவங்களாக உள்ளன. இவ்வடிவங்களுக்குள் பல வகைகள் இருக்கின்றன. இவ்விலக்கியவடிவங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன. அவற்றிற்குள்ளிருக்கும் வகைகள் எவ்வாறு வேறுபடுகின்றன எனப் பேசுவது இலக்கியவியல் படிப்பு.

- படைப்பாளன் தன் கருத்துகளை உணர்ச்சிகளோடு வெளிப்படுத்தும் வடிவம் கவிதை. பேசுபவர். எதிர் வினையாற்றுபவர் ஆகிய இருவருக்குமான உரையாடல் வடிவம் நாடகம். படைப்பாளரே அனைத்துப் பாத்திரங்களையும் இயங்கச் செய்யும் வடிவம் கட்டுரை. இவ்வாறு கவிதை, நாடகம், கதை, கட்டுரை என்பனவற்றை இலக்கியவியல் வகைப்படுத்துகிறது.

- இலக்கியவியல் பற்றிய பேச்சு என்பது தமிழில் செய்யுளாகவே தொடங்குகிறது. தொல்காப்பியச் செய்யுளியல் கவிதையின் வடிவம், உள்ளடக்கம், வெளிப்பாட்டு முறை என அனைத்துக் கூறுகளையும் விளக்குகிறது.

- தமிழின் தொல்லிலக்கணமான தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களில் ஐவகை இலக்கணங்களைக் கூறுகிறது. எழுத்ததிகாரத்தில் எழுத்துகளின் ஒலி மற்றும் வரிவடிவங்களின் தோற்றம், வகை, அளவு, எழுத்துகள் சொல்லாக மாறுதல், சொற்கள், புணர்தல் போன்றவை விளக்கப்படுகின்றன. சொல்லதிகாரத்தில் சொற்களின் வைக, உருபுகள், சொற்கள் இணைந்து தொடராக மாறுதல் போன்றவை விளக்கப்படுகின்றன.

- இவை பெரும்பாலும் நேர்ப்பொருளைத் தரக்கூடிய பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் உரியன.

- பொருளாதிகாரம் நேர்ப்பொருள் தரும் சொற்றொடர் பற்றிப் பேசாமல் புனைவாக உருவாக்கப்படும் சொற்றொடர்களின் மொழியையும் அதன் பொருளையும் பேசுகின்றது. தொல்காப்பியர் காலத்தில் புனைவாக உருவாக்கப்படும் மொழி, பா – ஆகவும், பாடல் - ஆகவும், பாட்டு – ஆகவும் அறியப்பட்டன. பா, பாடல், பாட்டு ஆகியவை எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும்? அதற்குள்ளே இடம்பெற வேண்டிய கூறுகள் எவை? அக்கூறுகளின் வழியாகக் கிடைக்கும் நுட்பங்கள் என்ன? என்பதையெல்லாம் பொருளதிகாரம் விரிவாக விளக்குகிறது. இவையே பின்னர் பாவியல் எனவும், கவிதையியல் எனவும் வரையறுக்கப்பட்டன.

- செய்யுளியலில் ஒரு பாவின் உறுப்புகள் 34 என வரையறை செய்துள்ள தொல்காப்பியம் அடிகளின் அளவு, அடிவரையறை, உண்டாக்கப்படும் ஒலியளவு போன்றவற்றையும் விரிவாகப் பேசுகின்து. அவற்றைப் பாக்களின் புறவடிவம் எனக் கொள்ளலாம். புறவடிவத்தில் உள்ள வேறுபாடுகளின் அடிப்படையில் பாக்கள் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என வகைப்படுத்தப்படுவதை இவ்வியல் வழி அறிகிறோம். இப்புறவடிவங்களின் வழியாக உருவாக்கப்படும் இலக்கிய வகைகளின் வடிவங்களை,

**பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே**
**அங்கதம் முது சொல்லோடு அவ்வேழ் நிலத்தும்**
**வண்புகழ் மூவர்தண் பொழில் வரைப்பின்**
**நாற்போர் எல்லை அகத்தவர் வழங்கும்**
**யாப்பின் வழியது என்மனார் புலவர்**

- **தொல். செய்யுளியல் 1336**

- என்ற நூற்பாவின் வழியாக அறியலாம். பாக்களின் புறவடிவத்தைச் செய்யுளியலில் கூறிய தொல்காப்பியர், அதன் உள்ளடக்கத்தைப் பொருளதிகாரத்தின் முதல் ஐந்து இயல்களில்

கூறியுள்ளார். கவிதையை எப்படி உருவாக்குவது? எப்படி வாசிப்பது? என்பதற்கான விரிவான பதில் தொல்காப்பியத்தில் கிடைக்கிறது.

- தொல்காப்பியர் போன்றே உலக அளவில் இலக்கிய வாசிப்பிற்கு வழிகாட்டும் நூலான கவிதையியலை (Poetics) எழுதியவர் அரிஸ்டாட்டில். நாடகத்தை எவ்வாறு வாசிக்கலாம்? நாடக உருவாக்கம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இந்நூலில் விளக்கியுள்ளார்.

- ஒரு பாவில் அல்லது கவிதையில் மூன்று கூறுகள் இடம்பெறுதல் சிறப்பு. அவை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன. இம்மூன்றில் உரிப்பொருள் முக்கியமானது என்பதை வலியுறுத்த,

**முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங்காலை முறை சிறந்தனவே**
**பாடலுள் பயின்றவை நாடும் காலை**

**- அகத்திணையியல் 3**

என்ற நூற்பாவைத் தொல்காப்பியர் எழுதியுள்ளார்.

- தம்மனதிற்குள் தோன்றும் அகநிலைப்பட்ட புணர்தல், இருத்தல், இரங்கல், ஊடல், பிரிதல், ஒருலைக்காமம், பொருந்தாக்காமம் ஆகிய உணர்வுகளை உரிப்பொருளாகக் கொண்டு அகக்கவிதைகள் எழுதப்படுகின்றன. இவற்றை அகத்திணைக்ள எனவும் இதற்கு மாறாக புறவாழ்க்கை குறித்து எழுதப்படுவனவற்றைப் புறக்கவிதைகள் எனவும் தொல்காப்பியர் வரையறுத்துள்ளார்.

- முதற்பொருள் என்பது நிலமும் பொழுதும் (Space and Time). இலக்கிய உருவாக்கத்தை நாடகத்தின் வழியாக விளக்கும் அரிஸ்டாட்டில் இவ்விரண்டையும் மையப்படுத்துகிறார். பாத்திரங்களையும் அவற்றின் செயல்களையும் முதற்பொருளை மையப்படுத்தியே அமைந்துள்ளார். காலம், இடம், பாத்திரங்கள் ஆகிய மூவோர்மைகள் (Three nities) இலக்கியத்தின் அடிப்படைக் கூறுகள் என்பது அரிஸ்டாட்டிலின் வரையறை. இம்மூன்றிற்கும் இடையேயுள்ள வினையோர்மைகள் பற்றிய இக்கோட்பாடே உலக இலக்கியத்தின் அடிப்படை. இவர் கூறிய பாத்திர முரண் சார்ந்த தொடக்கம், சிக்கல், வளர்ச்சி, உச்சநிலை, வீழ்ச்சி, முடிவு என அமையும் நாடக வடிவம் சிறந்த நாடக வடிவமாக உலகம் முழுவதும் போற்றப்படுகிறது.

- வடிவம் பற்றிய விரிவான கருத்துகளைச் சொல்லும் தொல்காப்பியரும் அரிஸ்டாட்டிலும் உள்ளடக்கத்தைப் பற்றி விரிவாகப் பேசவில்லை. ஒவ்வொரு மனிதனின் வெளிப்படும் புரிதலும் வெவ்வேறாக இருக்கும் என்பதால் உள்ளடக்கத்தை வரையறை செய்யும் முயற்சியை இருவருமே செய்யவில்லை. தொல்காப்பியரின் கவிதையியல் தந்துள்ள மரபைப் பின்பற்றித் தமிழில் ஒவ்வொரு காலகட்டத்திலும் கவிதைகள் எழுதப்பட்டன.

- தமிழ்ச் செவ்வியல் கவிதைகளில், புறக்கவிதைகளின் தொடர்ச்சியாக அறவியல் கவிதைகளை வாசிக்கலாம்; விளக்கம் கூறலாம். அதேபோல அகக்கவிதைகளின் வளர்ச்சியாகத் தமிழில் தோன்றிய பக்திக்கவிதை வடிவத்தைச் சொல்லலாம். புற இலக்கியத்தில் கவிஞர், கேட்பவர் தம் எதிரே இருப்பதாக நினைத்துக்கொண்டு தம் கருத்துகளைக் கூறுகிறார். கணியன் பூங்குன்றனாரின் “யாதும் ஊரே யாவரும் கேளிர்“ என்ற கவிதையின் மூலம் இதனை அறியலாம். அந்நோக்கத்தின் அடிப்படையிலேயே திருக்குறள், நாலடியார், பழமொழிநானூறு, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் போன்ற நூல்களும் அமைந்திருப்பதைக் காணலாம்.

- அகக்கவிதைகளில் தலைவியோ, தலைவனோ தனது காதலை ஏற்கும்படி சொல்லும் நோக்கம் வெளிப்படும். ஆனால், பக்திக்கவிதைகளில் தனது வேண்டுதலை ஏற்று அருள் புரியும்படி, இரக்கம் கொள்ளும்படி கெஞ்சும், இரங்கும் மொழிப் பயன்பாடுகள் வடிவம் கொள்வதைக் காணலாம்.

- பக்திக்கவிதைகளை அடுத்து அரசர்களின் அல்லது கடவுளின் பெருமைகளைப் பாடும் சிற்றிலக்கிய வடிவங்களைத் தமிழ் இலக்கியப்பரப்பில் நாம் காணலாம். அவற்றின்

வடிவங்கள் கூட, புறக்கவிதை வடிவங்களான பாடாண்திணை மற்றும் காஞ்சித்திணைப் பாடல் வடிவங்களைக் கொண்டிருக்கின்றன. எனவே தொல்காப்பியக் கவிதை மரபு பிற்காலக்கவிதைகளின் மரபாகவும் இருந்தது என்பதைப் புரிந்கொள்வது முதன்மையான இலக்கியவியல் அறிவாகும்.

**தொல்காப்பியம் கூறும் செய்யுள் உறுப்புகள் - 34**

| | | | |
|---|---|---|---|
| மாத்திரை | நோக்கு | பயன் | அழகு |
| எழுத்து | பா | மெய்ப்பாடு | தொன்மை |
| அசை | அளவு | எச்சம் | தோல் |
| சீர் | திணை | முன்னம் | விருந்து |
| அடி | கைகோள் | பொருள் | இயைபு |
| யாப்பு | கூற்று | துறை | புலன் |
| மரபு | கேட்போர் | மாட்டு | இழைபு |
| தூக்கு | களன் | வண்ணம் | ------- |
| தொடை | காலம் | அம்மை | ------ |

## செவ்வியல் இலக்கியங்கள்

**செவ்வியல் அறிமுகம்**

- உலகளவில் 'செவ்வியல்' என்ற பொருளில் 'கிளாசிசம்'(classism) என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலச்சொல்லாக 'கிளாசிகஸ்'(Classicus) என்ற இலத்தீன் சொல் உள்ளது. தமிழில் செவ்வியல் என்பதன் மூலச்சொல் 'செம்மை' என்பதாகும். செம்மை, இயல் என்ற இரு சொற்கள் இணைந்து செவ்வியல் என்ற சொல் உருவானது. செம்மை என்பதற்குச் செப்பம், செவ்வை, செவ்வி, நற்சீரடைதல், ஒழுங்குபடுத்துதல், பண்படுத்துதல் என்றெல்லாம் பொருள் கொள்ளலாம்.

- தொன்மை, பிறமொழித்தாக்கமின்மை, தூய்மை, தனித்தன்மை, இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பு, பொதுமைப்பண்பு, நடுவு நிலைமை, பண்பாடு, பட்டறிவு வெளிப்பாடு, உயர்சிந்தனை வெளிப்பாடு, மொழிக்கோட்பாடு போன்ற தகுதிக் கோட்பாடுகளைச் செவ்வியலுக்கான தன்மைகளாக அறிஞர்கள் வரையறுத்துள்ளனர்.

**செவ்வியல் இலக்கியங்கள்**

- பழைமையும் இலக்கிய இலக்கணப் பாரம்பரியமும் உள்ள மொழிகளே செவ்வியல் மொழிகள். செவ்வியல் இலக்கியங்களைப் பெற்றிருக்கும் பழைமையான மொழிகளைச் செவ்வியல் மொழிகள் என்று கூறலாம்.

- ஒருமொழி நிலைத்து நிற்பதற்கு அதன் பழமையும் வளமையும் மட்டும் போதாது. அம்மொழி பேசும் மொழியாக, எழுத்து மொழியாக, ஆட்சி மொழியாக, நீதிமன்ற மொழியாக, பயிற்று மொழியாக நிலை பெற்றிடல் வேண்டும். இலக்கிய வளம், இலக்கண அரண், மிகுந்த சொல்வளம், வரலாற்றுப் பின்னணி, தனித்தியங்கும் மாண்பு, காலத்திற்கேற்ற புதுமை எனப் பல வகைகளிலும் சிறப்புப் பெற்றிருத்தல் வேண்டும். தமிழுக்கு இவை அனைத்தும் பொருந்தும்.

- எழுத்து உருவான பின்னரே ஒரு மொழி முழுமை அடைகிறது. அதன் பின்னரே அது வளர்ந்து செழுமையுற்றுச் செவ்வியல் இலக்கியங்களைப் படைக்கும் திறன் பெறுகிறது. செவ்வியல் இலக்கியங்களைப் படிக்க இன்றியமையாதது, எழுத்து வடிவமே. அவற்றோடு அரசியல், பொருளாதாரம், வணிகம், தொழில், கலை, பண்பாடு ஆகிய பல துறைகளிலும் உயர் வளர்ச்சியை எட்டிய சமூகத்திலிருந்துதான் செவ்வியல் இலக்கியங்கள் தோன்றுகின்றன என்பது சான்றோர் கூற்று. தமிழ், சீனம், சமஸ்கிருதம், இலத்தீன், ஹீப்ரு, கிரேக்கம் போன்ற செவ்வியல் மொழிகள் அனைத்தும் எழுத்து வடிவத்தைப் பெற்ற பின்னரே செவ்வியல் இலக்கியங்களை உருவாக்கின.

**செவ்வியல் இலக்கியங்களின் காலகட்டம்:**

- கிரேக்க மொழியின் செவ்வியல் இலக்கியக் காலகட்டம் என்பது கி.மு. 5ஆம் நூற்றாண்டு முதல் 4ஆம் நூற்றாண்டு வரையாகும். இலத்தீன் மொழியின் செவ்வியல் இலக்கியக் காலகட்டம் என்பது கி.மு.1 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு வரையான கால கட்டமாகும்.

- சீன மொழியின் செவ்வியல் இலக்கிய காலகட்டம் என்பது கி.மு. 8ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரையான காலகட்டமாகும். சமஸ்கிருத மொழியின் செவ்வியல் இலக்கியக் காலகட்டம் என்பது கி.மு. 3ஆம் நூற்றாண்டு வரையான காலகட்டமாகும். சமஸ்கிருத மொழியின் செவ்வியல் இலக்கியக் காலகட்டம் என்பது கி.மு. 4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 8 ஆம் நூற்றாண்டு வரையான காலமாகும்.

**தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள்:**

- உலக மொழியியல் அறிஞர்கள் சங்ககால இலக்கியங்களைச் செவ்வியல் இலக்கியங்களாக ஏற்றுக்கொண்டுள்ளனர். சங்க இலக்கியங்களின் காலம் கி.மு 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.2 ஆம் நூற்றாண்டு வரையான காலம் என்பர். சங்கச் செவ்வியல் காலத் தமிழ்ச் சமூகம், பல துறைகளிலும்உயர் வளர்ச்சி அடைந்த ஒரு சமூகமாக இருந்துள்ளது. இக்காரணங்களால் தமிழில் உலகளாவிய உயர் மனித விழுமியங்களைக் கொண்ட செவ்வியல் இலக்கியங்களைப் படைத்திருக்க இயலும். தனித்தன்மை, தூய நிலை, செப்பமான ஒழுங்கு, சிறப்பான பொருள் புலப்பாடு எனப் போற்றத்தகுந்த பண்புகள் எல்லாம் நிறைந்திருந்ததால் தமிழைச் செந்தமிழ் என்றும் தமிழ் இலக்கியங்களைச் செவ்வியல் இலக்கியங்கள் என்றும் அழைத்தனர்.

**சங்க இலக்கியம்:**

- தமிழின் செவ்வியல் தன்மைக்குச் சான்றாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. பாட்டும் தொகையுமான பதினெட்டு நூல்களும் சங்க இலக்கியங்கள் என அறியப்படுகின்றன. பாட்டு என்பது பத்துப்பாட்டையும், தொகை என்பது எட்டுத்தொகையையும் குறிக்கும். இவற்றைப் பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்பர். இவை தமிழ் மக்களின் அக மற்றும் புற வாழ்வியல் கூறுகளை அறிய உதவுகின்றன.

**சங்க இலக்கியம்**

- **எட்டுத்தொகை**
  - **அகம்** → நற்றினை, குறுந்தொகை, ஐங்குநுறூறு, கலித்தொகை, அகநானூறு
  - **புறம்** → பதிற்றுப்பத்து, புறநானூறு
  - **அகப்புறம்** → பரிபாடல்
- **பத்துப்பாட்டு**
  - **அகம்**
  - **புறம்**

நற்றினை பதிற்றுப்பத்து பரிபாடல் குறிஞ்சிப்பாட்டு திருமுருகாற்றுப்படை
குறுந்தொகை புறநானூறு முல்லைப்பாட்டுபொருநராற்றுப்படை
ஐங்குநுறூறு பட்டினப்பாலை சிறுபாணாற்றுப்படை
கலித்தொகை நெடுநல்வாடை பெரும்பாணாற்றுப்படை
அகநானூறு மலைபடுகடாம்(கூத்தராற்றுப்படை) மதுரைக்காஞ்சி

- சங்கப்பாடல்களின் எண்ணிக்கை 2381. இவற்றுள் அகத்திணைப்பாடலக்ள் 1862. புறத்திணைப்பாடல்கள் 519. சங்கப்புலவர் எண்ணிக்கை 473. பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கை 49. இவர்களுள் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்னும் ஒரே பாடலால் உலகப் புகழ்பெற்ற கணியன் பூங்குன்றனாரும் உண்டு; 235 பாடல்களைப் பாடி முதலிடத்தைப் பெறும் கபிலரும் உண்டு. அரசர், வணிகர் மருத்துவர், கணியர் போன்று சமூகத்தின் பல்வேறு அங்கத்தினரும் நல்லிசைப் புலவராய் விளங்கினர். பெண்பாற்

புலவர்களும் தனிச்சிறப்புப் பெற்றிருந்தனர். இயற்பெரன்றி, பாடலில் இடம் பெற்ற தொடர்களால் பெயர் பெற்ற கவிஞர்களும் உண்டு. சங்ககாலப் புலவர்களைச் 'சான்றோர்' எனச்சுட்டுவது தமிழ் மரபு.

**பழந்தமிழர் வாழ்வியல்:**

- உலகின் மிகப்பழமையான செவ்வியல்மொழி இலக்கியங்களின் தொன்மைக்கும் செறிவிற்கும் சற்றும் குறைவில்லாத வளமுடையவை சங்க இலக்கியங்கள். பாடுபொருளாலும் இலக்கிய வகைமையாலும் திணை, துறை அமைப்புகளாலும் சங்கத் தமிழ்க் கவிதைகள் மேலோங்கி நிற்கின்றன. பழந்தமிழர், அகவாழ்விலும் புறவாழ்விலும், ஓர் ஒழுங்குமுறைக்குப்பட்டு வாழ்ந்தனர் என்பதைச் சங்கப்பாடல்கள் தெளிவுறுத்துகின்றன. சங்ககாலச் சமுதாயம் இயற்கை சார்ந்த சமுதாயமாக விளங்கியது. காடுகள், மலைகள், கழனிகள், கடற்கரைப் பகுதிகள் மக்கள் வாழிடங்களாக இருந்தன. இதனால், சங்ககாலத்தில் திணைநிலைச்சமூகம் நிலைபெற்றிருந்ததை அறியலாம.

- சங்க இலக்கியங்கள் பொதுமைச்சிறப்பும் புதுமைச்சிறப்பும் மிக்கவை. பொருட்சிறப்பும், கருத்துச் செறிவும், சொல்லினிமையும் வாய்ந்தவை. இவை அகத்திணை, புறத்திணை எனப் பகுக்கப்பெற்று, பெரும்பாலும் காதல், வீரம் குறித்துப் பேசின. இருப்பினும் இயற்கை, பிரிவாற்றாமை, விருந்தோம்பல், கொடை. அரசியல், கையறுநிலை, வணிகம், வேளாண்மை, விளையாட்டு போன்றவற்றையும் புலப்படுத்தத் தவறவில்லை.

**இயற்கை:**

- மானிட வாழ்வே சங்க இலக்கியத்தின் மையம். இயற்கை அதற்குப் பின்னணியாக இடம்பெறுகின்றது. சங்க அகப்புறப் பாடல்கள் இயற்கைக் காட்சிகளை வருணனையாக, உள்ளுறையாக மனித வாழ்வியலோடு இணைத்துப் பாடுகின்றன. ஐம்புலன்களுக்கும் விருந்தாக அமையும் இயற்கையை மக்களின் காதல், வீரம் இன்னபிற வாழ்வியல் கூறுகளோடு இணைத்துப் பாடுவது சங்க இலக்கிய மரபு. எனவே சங்க இலக்கியக் காலத்தை "இயற்கை நெறிக்காலம்" எனலாம்.

**பைந்தினை யுணங்கல் செம்பூழ் கவரும்**
**வன்புல நாடற் றரீஇய வலனேர்**
**பங்க ணிருவிசும் பதிர வேறொடு**
**பெயறொ டங்கின்றே வானங்**
**காண்குவம் வம்மோ பூங்க ணோயே**

- **ஐங்குறுநூறு**

ஆசிரியர் : பேயனார்
திணை : முல்லை
கூற்று : தோழி கூற்று

**பாடல் பொருள்:**

- காய்ந்த கொண்டிருக்கும் பசிய தினையைச் செம்பூழ்ப் பறவைகள் கவர்ந்து செல்லும் கடினமான நிலப்பகுதியைக் கொண்ட நாட்டினை உடையவன் நம் தலைவன். அவனை நம்மிடம் கொண்டுவந்து சேர்ப்பதற்காக, வலப்பக்கமாய் உயர்ந்து அழகிய பரப்பைக் கொண்ட பெரிய வானம் அதிரும்படியாக, மேகங்கள் இடியுடன் மழையைத் தொடங்கிவிட்டன. ஆதலால், பூப்போன்ற அழகிய கண்ணை உடையவளே, காண்போம்! வா ! எனத் தோழி தலைவியை அமைக்கிறாள்.

**காதல்:**

- பண்டைத் தமிழ்மக்களின் அன்புள்ளத்தோடு கலந்த ஓர் அகவுறுப்பாகவே புறவியற்கை விளங்கிற்று. அவ்வியற்கை, பழந்தமிழ் மக்களின் எண்ணங்களிலும் உணர்ச்சிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியதை அகத்திணைப் பாடல்களில் காணலாம். ஒவ்வோர் அகத்துறையும் இயற்கையோடு உறவுடையது.

**நிலம் தொட்டு புகாஅர் வானம் ஏறார்**
**விலங்கு இரு முந்நீர் காலின் செல்லார்**
**நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்**
**குடிமுறை குடிமுறை தேரின்**
**கெடுநரும் உளரோ நம் காதலோரே**

**- குறுந்தொகை**

ஆசிரியர்: வெள்ளீவீதியார்
திணை : பாலை
கூற்று : தோழி கூற்று

- **பாடல் பொருள்**: நிலத்தைத் தோண்டி அதனுள் புகமாட்டார்; வானத்தில் ஏற்மாட்டார்; குறுக்கிடும் பெரிய கடலில் காலால் நடந்து செல்லார்;நாடுகள்தோறும், ஊர்கள் தோறும் குடிமுறைகள் தோறும் தேடிப்பார்த்தால் காணாமற்போவாரோ நம் காதலர். ஆகையால் வருந்தாதே என தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

**பிரிவாற்றாமை:**

- பழந்தமிழர், திருமணத்திற்கு முந்தைய காதல் வாழ்வை, "களவொழுக்கம்" என்றும், திருமணத்திற்குப் பிறகு அவர்களின் இல்லற வாழ்வை, "கற்பொழுக்கமென்றும்" போற்றியுள்ளனர். களவொழுக்கத்தின் போது, தலைவனைப் பிரிந்த தலைவி பிரிவாற்றாமையால் வருந்தியிருப்பாள். அவளின் பிரிவுத்துயரத்தைப் போக்கும் மருந்தாகப் பாங்கி விளங்குகிறாள். தலைவிக்குப் பாங்கி போல தலைவனுக்குப் பாங்கன் இருப்பான்.

**யானே ஈண்டையேனே என நலனே**
**ஏனல் காவலர் கவண் ஒலி வெரீஇக்**
**கான யானை கை விடு பசும் கழை**
**மீன் எறி தூண்டிலின் நிவக்கு**
**கானக நாடனொடு ஆண்டு ஒழிந்தன்றே!**

**- குறுந்தொகை**

ஆசிரியர் : மீனெறிதூண்டிலார்
திணை : பாலை
கூற்று : தலைவி கூற்று

- **பாடல் பொருள்**: வினைமேற்சென்ற தலைவனின் பிரிவாற்றாத தலைவி, "காட்டு யானையானது தான் வளைத்த மூங்கிலைத் தினைப்புனம் காக்கும் காவலர்களின் கவண் ஒலிக்குப் பயந்து விட்டுவிடுகின்றது. அந்த மூங்கிலானது தூண்டில் போட்டு மீன் பிடிப்பவன், மீன் சிக்கியவுடன் தூண்டிலை விரைந்து மேலே தூக்கினாற்போலச் சட்டென்று மேலே போகின்றது. இத்தகைய காட்சியையுடைய மலைநாடனொடு நான் நட்பு கொண்டதால் இன்று நலிவடைகிறேன். அவன் என்னை வரையாது காலம் தாழ்த்துவதால்,

- இங்கு நானும் என்னுடைய நலன் அங்குமாக இருக்கும் நிலை நேர்ந்து விட்டது" எனத் தன்தோழியிடம் கூறுவதாக அமைந்த மீனெறிதூண்டிலாரின் குறுந்தொகைப் பாடல்வழி களவு வாழ்வின் பிரிவாற்றாமையை உணரலாம்.

**விளையாட்டு:**

- தொல்காப்பியர் கூறும் உவகை என்னும் மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய நான்கு வகைக் களங்களுள் ஒன்று விளையாட்டு. இதிலிருந்து மன மகிழ்ச்சியை விளைவிக்கும் ஒரு செயலே விளையாட்டு எனக் கருதலாம். விளையாட்டுகளில் ஈடுபடாமல் வீட்டினுள்ளே இருந்தால் உடல்நலமும் மனநலமும் கெடும். வீட்டினுள்ளே அடைந்துகிடப்பது அறமன்று என்பதை நற்றிணைப் பாடல் உணர்த்துகிறது.

**விளையாடு ஆயமொடு ஓரை ஆடாது**
**இளையோர் இல்லிடத்து இற்செறிந் திருத்தல்**

**அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம் என**
**குறுநுரை சுமந்து நறுமலர் உந்தி**
**பொங்கிய வரு புது நீர் நெஞ்சு உண ஆடுகம்**
**வல்லிதின் வணங்கிச் சொல்லுநர்ப் பெறினே**
**செல்க என விடுநள்மன்கொல்லோ எல் உமிழ்ந்து**
**உரவு உரும் உரறும் அரை இருள் நடு நாள்**
**கொடி நுடங்கு இலங்கின மின்னி**
**ஆடு மழை இறுத்தன்று அவர் கோடு உயர் குன்றே.**

**- நற்றிணை**

ஆசிரியர் : பிரான்சாத்தனார்
திணை : குறிஞ்சி
கூற்று : தோழி கூற்று

- பாடல்பொருள்: தலைவனின் உச்சி குன்றில் ஒளியை உமிழ்ந்து வலிய இடி முழங்கும் பாதி இரவாகிய நடுயாமத்தில், கொடிபோல் வளைந்தனவாய் விளங்கும் மின்னலோடு அசைகின்ற மேகங்கள் தங்கியிருத்தலின், அம்மலையிலிருந்து புதுநீர் பொங்கி பெருகி வரும். அந்நீரில் விளையாட்டுத் தோழியருடன் ஓரை என்னும் ஆட்டத்தை ஆடாமல் இளமங்கையர் தமது வீடுகளில் அடைந்துகிடத்தல் அறநெறி ஆகாது. வீட்டின் செல்வமும் குன்றும். அதனால் சிறிய நுரைகளைச் சுமந்துகொண்டு நறிய மலர்களை வீசிக்கொண்டு பொங்கி வருகின்ற புதுநீரில் மனம் மகிழ் ஆடுவோம். இதனை விரைந்து சென்று அன்னையிடம் சொன்னால் செல்லுங்கள் என்று அனுப்பிவிடுவாளோ? இவ்வாறு தோழியானவள். தலைவி இற்செறிக்கப்பட்டதைத் தலைவனுக்கு உணர்த்துகிறாள்.

| ஓரையாடுதல்: |
|---|
| ஓரை என்பது சங்ககால இளம் மகளிர் விளையாடிய விளையாட்டுகளில் ஒன்றாகும். ஓரை என்றால் "ஒலி எழுப்புதல்" என்று பொருள். இது ஆரவாரம் எழுமாறு ஆடப்படும் ஆட்டங்களைக் குறித்ததாகக் கொள்ளலாம். கடலலை பாயும் மணலிலும், ஆற்று மணலிலும், சேற்று நிலத்திலும், முற்றத்தில் பரப்பப்பட்ட மணலிலும் இது விளையாடப்பட்டதைச் சங்கப்பாடல்கள் தெரிவிக்கின்றன. |

**கொடை:**

- சங்ககாலத்தில், பொருள் உடையவர்கள் அதன் தேவைகருதி வேண்டி வருவோருக்குப் பயன் கருதாது வாரி வழங்கும் கொடைத்தன்மையுடையோராய் விளங்கினர். இரப்போர்க்கு வரையாது கொடுப்பதே பிறவிப்பயனாகக் கருதி வாழ்ந்தனர். சங்கக்கவிதைகள் வழி இக்கொடைப்பாங்க சிறந்து விளங்கிய பான்மையை நாம் அறியலாம். பொருநராற்றுப்படையில் கரிகால் பெருவளத்தானின் கொடைச்சிறப்பைக் கூறவந்த முடத்தாமக்கண்ணியார் பின்வரும் பாடல்வழிப் புலப்படுத்துகிறார்.

**ஈற்றா விருப்பிற் போற்றுபு நோக்குநும்**
**கையது கேளா அளவை ஒய்யெனப்**
**பாசி வேரின் மாசொடு குறைந்த**
**துன்னற் சிதாஅர் நீக்கித் தூய**
**கொட்டைக் கரைய பட்டுடை நல்கிப்**
**பெறலருங் கலத்திற் பெட்டாங் குணகெனப்**
**பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர**
**வைகல் வைகல் கைகவி பருகி**
**எரியகைந் தன்ன வேடில் தாமரை**
**சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி.**
**நூலின் வலவா நுணங்கரில் மாலை**
**வாலொளி முத்தமொடு பாடினி யணியக்**
**கோட்டிற் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்**
**ஊட்டுளை துயல்வர வோரி நுடங்க**
**பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்**
**காலி னேழடிப் பின்சென்று கோலின்**
**தாறுகளைந் தேறென் றேற்றி வீறுபெறு**
**பேரியாழ் முறையுழிக் கழிப்பி நீர்வாய்த்**
**தண்பணை தழீஇய தளரா விருக்கை**

**நன்பல் லூர நாட்டொடு நன்பல்.**
**வெரூஉப்பறை நுவலும் பரூஉப்பெருந் தடக்கை**
**வெருவரு செலவின் வெகுளி வேழம்**
**தரவிடைத் தங்கலோ விலனே வரவிடைப்**
**பெற்றவை பிறர்பிறர்க் கார்த்தித் தெற்றெனச்**
**செலவுகடைக் கூட்டுதி ராயிற் பலபுலந்து**
**நில்லா வுலகத்து நிலைமை தூக்கிச்**
**செல்கென விடுக்குவ னல்லன்**

**பொருநராற்றுப்படை**

- பாடல்பொருள்: பொருநர்களே! கரிகால் பெருவளத்தானை நீங்கள் நாடிச்சென்றால் பசு தன் கன்றை அன்போடு அரவணைத்தல் போல, உங்களை விரும்பிப் போற்றுவான். நீங்கள் கைதொழுவதற்கு முன்பாகவே பட்டாலான புத்தாடை தந்து மாற்றிக் கொள்ளச் செய்வான். நீங்கள் புத்தாடை புனைந்தபின் கிண்ணத்தில் தேறல் ஊற்றி வேண்டிய அளவு பருகத் தருவான். பின்னர் விருதாக உங்கள் தலையில் பொன்னாலான தாமரையைச் சூட்டுவான். அரில்மாலையையும், முத்துமாலையையும் பாடினி அணியத் தருவான். பின்னர் விருதாக உங்கள் தலையில் பொன்னாலான தாமரையைச் சூட்டுவான். அரில்மாலையையும், முத்துமலையையும் பாடினி அணியத் தருவான்.

- வெண்குதிரைகள் நான்கு பூட்டிய தேர்மேல் அனுப்பி வைப்பான். ஏழடி பின் சென்று நின்று ஏறுங்கள் என்பான். ஏறியபின் பேரியாழை மீட்டச் சொல்லிக் கேட்பான். அதற்குப் பரிசிலாக வளம் மிக்க ஊர் கொண்ட நாட்டுப் பகுதியைத் தருவான். கரிகாலன், குதிரையை ஓட்டும் தேரோட்டியின் கையில நுனியில் முள் பொருத்தப்பட்டிருக்கும் தாற்றுக்கோல் இல்லாமல் செய்வான். இது அவன் விலங்குகள் மட்டும் கொண்டிருந்த கருணையைப் புலப்படுத்துகிறது. அவன் பரிசிலாகத் தரும் யானைகள் சிறந்தவை. எனினும் பகை கண்டால் வெகுள்பவை.

- இவை கரிகால வளவன் தந்த பரிசில் என்று பிறர்க்குச் சொன்னமைக்காகக் கடிந்து கொள்வான். இந்த உலகம் நிலையில்லாதது என்னும் உண்மை நிலையைச் சீர்தூக்கிப் பார்த்துச் "செல்லுங்கள்" என அனுப்பிவைக்கவும் மாட்டான். அவனிடமே இருக்கக்கூடாதா என ஏங்குவான்.

- இயற்கை அல்லது செயற்கைக் காரணங்களால் மக்களுக்குத் தீங்கு நேரினும் மன்னனே அதற்குப் பொறுப்பேற்றான். தன் குடிகளையும் படைகளையும் காத்து நிற்க வேண்டியது அரசனது கடமை. தன் குடிகளைக் காக்கத் தவறும் மன்னனை உலகம் பழிக்கும் என்று புலவர்கள் நேரடியாக மன்னனுக்கு அறிவுறுத்திய காட்சிகளைச் சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது.

**யாண்டுபல வாக நரையில ஆகுதல்**
**யாங்கு ஆகியர் எனவினவுதிர் ஆயின்**
**மாண்ட என் மனைவியோடு மக்களும் நிரம்பினர்**
**யான்கண் டனையர்என் இளையோரும்**
**வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும் அதன் தலை**
**ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்**
**சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.**

**- புறநானூறு**

ஆசிரியர் : பிசிராந்தையார்
திணை : பொதுவியல்
துறை : பொருண்மொழிக் காஞ்சி

**பாடல் பொருள்:** "தங்களுக்கு இவ்வளவு வயதாகியும் தாங்கள் எப்படி நரையில்லாமல் இருக்கிறீர்கள்?" என்று கேட்பீரானால், சொல்கிறேன். "நற்குணத்தளாகிய என் மனைவியோடு, என்னுடைய மக்களும் அறிவு நிரம்பப் பெற்றவர்கள். என்னிடம் பணி புரிபவர்களும் நான் நினைப்பதையே தாங்களும் நினைத்துச் செயல்களைச் செய்து முடிப்பர். என் வேந்தன் முறையல்லாதவற்றைச் செய்யாமல் நாட்டைக் காப்பவனாக விளங்குகின்றான். நான் வாழும் ஊரில், மாட்சிமைக்குரிய நற்குணங்களும் நல்லொழுக்கங்களும் நிறைந்து ஐம்புலன்களையும் வென்று, பணிவோடும் சிறந்த

கொள்கைகளோடும் வாழும் சான்றோர்கள் பலர் உள்ளனர். ஆதலால் எனக்கு நரை தோன்றவில்லை யானும் முதுமையடையாதவனாய் உள்ளேளன்'' என்று பிசிராந்தையார் கூறுகின்றார்.

**கையறுநிலை:**

- தம் மன்னன் இறந்ததற்கு குடிமக்களும் சான்றோரும் வீரர்களும் வருந்திப் பாடுவது கையறுநிலை என்னும் துறையாகும்.

**இளையோர் சூடார் வளையோர் கொய்யார்**
**நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்**
**பாணன் சூடான் பாடினி அணியாள்**
**ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த**
**வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை**
**முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே**

**புறநானூறு**

**ஆசிரியர்:** குடவாயிற் கீரத்தனார்
திணை : பொதுவியல்
துறை : கையறுநிலை

- **பாடல் பொருள்:** ஒல்லையூர் நாட்டை ஆண்ட அரசன் பெருஞ்சாத்தன். அவன் இறந்த பின்னர் அந்நாட்டில் பூத்துக்கிடந்த முல்லைப் பூவை யாருமே சூடவில்லையாம். இளைய வீரர் சூடவில்லை. வளையல் அணிந்த மகளிர் சூடுவதற்காகப் பறிக்கவில்லை. பாணர் தம் வளைந்த யாழைப் பயன்படுத்திக் கீழே இழுத்துப் பறித்துத் தலையில் சூட்டிக் கொள்ளவில்லை. பாடினியும் அணிந்து கொள்ளவில்லை. அப்படி இருக்கும்போது, முல்லைப்பூவே! ஒல்லையூர் நாட்டில் எதற்காகப் பூக்கிறாய்?

**வணிகம்:**

- சங்கத்தமிழ்க் கவிதைகள் பழந்தமிழர்தம் வணிகச் சிறப்பைப் பறைசாற்றி நிற்கின்றன. தமிழர் கடல்கடந்து, அயல்நாடுகளிலும் வணிகம் செய்தனர் என்ற செய்திகளைச் சங்கப்பாடல்கள் வழ அறிகின்றோம்.

- பழந்தமிழர் வணிகத்தை உள்நாட்டு வணிகம். அயல்நாட்டு வணிகம் என வகைப்படுத்தினர். உள்நாட்டு வணிகம் பெரும்பாலும் நிலம் சார்ந்த பொருள்களையும் தொழில்களையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. அயல்நாட்டு வணிகம் இயற்கைப் பொருள்கள், கைவினைப் பொருள்கள் மற்றும் பருத்தி, பட்டாலான ஆடைகளை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்றது. பண்டமாற்றும் காசுகளைப் பயன்படுத்துதலும் வணிகத்தின் அடிப்படையாக விளங்கின. அக்காலத்தில் இருந்த அங்காடிகள் நாளங்காடி, அல்லாங்காடி என வகைப்படுத்தப்பட்டிருந்தன. எவ்வகை வணிகமாயினும் பழந்தமிழ் வணிகர்கள் நெறிபிறழாது, துலாக்கோல்போல் நடுவுநிலை நின்று வணிகம் செய்து வந்தனர் என்பதை பட்டினப்பாலை வழியே கடியலூர் உருத்திரங்கண்ணார் உணர்த்தும் விதத்தைக் காணலாம்.

**நெடு நுகத்துப் பகல் போல**
**நடுவு நின்ற நல் நெஞ்சினோர்**
**வடு அஞ்சி வாய் மொழிந்து**
**தமவும் பிறவும் ஒப்ப நாடி**
**கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதூஉம் குறை கொடாது**
**பல் பண்டம் பகர்ந்து வீசும்**
**தொல் கொண்டி துவன்று இருக்கை....**

**பட்டினப்பாலை**

- **பாடல் பொருள்:** நீண்ட நுகத்தடியில் தைத்த பகலாணி போல,நடுவுநிலையென்னும் குணம் நிலைபெற்ற நல்ல நெஞ்சினராய் வணிகர்கள் இருந்தனர். தன் குடிக்குப் பழிச்சொல் வருமென அஞ்சி, பொய்மை தவிர்த்து வாய்மையுடையோராய் இருந்தனர்.

தம்முடையவற்றையயும் பிறருடையவற்றையும் ஒன்றாக எண்ணினர். தாம் கொள்வனவற்றை மிகையாகக் கொள்ளாமல், கொடுப்பனவற்றைக் குறைவாகக் கொடுக்காமல், பல பண்டங்களையும் விலைசொல்லிக் கொடுக்கும், பழந்தொழிலால் வரும் உணவினைக் கொள்ளும், நெருங்கின குடியிருப்புகள் கொண்ட பட்டினமாக விளங்கியது காவிரிப்பூம்பட்டினம்.

**வேளாண்மை:**

- பழந்தமிழர் இயற்கைச் சூழல், பருவகாலம் ஆகியவற்றிற்கு ஏற்ப நிலத்தை நன்கு உழவு செய்யும் பாங்கு, விதைகளைத் தேர்வு செய்வதில் உள்ள அனுபவம், பயிர்நுட்ப அறிவு, நீர்ப்பாசன நுட்பம், வேளாண்மைக் காவல் பணி எனத் திணைகளின் அடிப்படையில் வேளாண்மையை முறைப்படுத்தி அதன் முழுப் பயனையும் தெரிந்து வைத்திருந்தனர். சங்கப்பாடல்கள் வழி தமிழர்தம் வேளாண்மை நுட்பத்தை அறிந்து இன்புறலாம்.

**குடிநிறை வல்சிச் செஞ்சால் உழவர்**
**நடைநவில் பெரும்பகடு புதவில் பூட்டி**
**பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்**
**உடுப்பு முகமுழுக் கொழு மூழ்க ஊன்றி**
**தொடுப்பு எறிந்துஉழுத துயர்படு துடவை**
**அரிபுகு பொழுதின் இரியல் போகி**
**வண்ணக் கடம்பின் நறுமலர் அன்ன**
**வளர்இளம் பிள்ளை தமீஇ குறுங்கால்**
**கறை அணற் குறும்பூழ் கட்சிச் சேக்கும்**
**வன்புலம் இறந்த பின்றை**

**பெரும்பாணாற்றுப்படை**

- **பாடல் பொருள்**: செம்மையான உழவு செய்கின்ற மருதநில உழவர்களின் வீட்டில் உணவுப் பொருள்கள் நிறைந்திருக்கும். உழவில் பழக்கிய எருதுகளை ஏரில் பூட்டி யானையின் வாயை ஒத்த கலப்பையின் கொழு நிலத்தில் அழுந்துமாறு பலமுறை உழுது பயிரிடுவர். மீண்டும் உழுது களையெடுத்த புன்செய் நிலத்தில் அறுவடை காலத்தின் போது அவர்கள் ஒலி எழுப்புவர். அவ்வொலிக்கு அஞ்சி நடுங்கும் வெண்மையான கடம்ப மலர்களை ஒத்த வளரும் இளைய குஞ்சுகளைக் கூட்டிக் கொண்டு, சிறிய கால்களையும், கரிய கழுத்துகளையும் கொண்ட காடைப்பறவைகள் பாதுகாப்பான இடம் நோக்கிச் செல்லும். இப்பாடல் சங்கத்தமிழர் வேளாண்நுட்பத்தை அறிந்திருந்ததைப் பறை சாற்றுகிறது.

**வீரம்:**

- சங்க காலத்தில் வீரம் முதன்மையாகப் போற்றப்பெற்றது. ஆடவரும், மகளிரும் இயற்கையிலேயே மறப்பண்பு மிக்கவராய் விளங்கியதால் எண்ணற்ற போர்கள் நடைபெற்றன. ஒரு சமதாயத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசனுக்கு இருந்தது. தன் நாட்டுமக்களின் வாழ்க்கை வளமாக அமைவதற்குப் பிறநாட்டுடன் போர் மேற்கொண்டான். போரில் புறுமுதுகிடுதல் பெரும்பழியாகக் கருதப்பட்டது. போரில் விழுப்புண்பட்டு உயிரை விடுதல் பெருமையாகக் கருதினர். புறப்புண் பெற்றவர்கள் வடக்கிருந்து உயிர்நீத்தலைப் புகழெனக் கருதினர். இவ்வாறு வடக்கிருந்து உயிர் நீத்தலைச் சிறந்த வீரமாக வெண்ணிக்குயத்தியார் பாடுவது இங்கு நோக்கத்தக்கது.

**நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி**
**வளிதொழில் ஆண்ட உரவோன் மருக**
**களிஇயல் யானைக் கரிகால் வளவ**
**சென்று அமர்க்கடந்த நின்ஆற்றல் தோன்ற**
**வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே**
**கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை**
**மிகப்புகழ் உலகம் எய்திப்**
**புறப்புண் நாணி வடக்கிருந் தோனே.**

**புறநானூறு**

ஆசிரியர் : வெண்ணிக்குயத்தியார்
திணை : வாகை

துறை : அரசவாகை

- **பாடல் பொருள்**: களிநடை போடும் யானைமேல் தோன்றும் கரிகால் வளவ! கடலில் நாவாய் ஓட்டிக் காற்றையே ஆண்ட வலிமையாளர் வழி வந்தவன் நீ. போரில் வென்றாய், அதனால் நீ நல்லவன். எனும் வெண்ணிப்பறந்தலைப் போரில் உன் வலிமைமிக்கத் தாக்குதலால் புறப்புண்பட்டு அதற்காக நாணி அப்போர்க் களத்திலேயே வடக்கிருந்து உயர் துறந்த பெருஞ்சேரலாதன் உன்னைக்காட்டிலும் நல்லவன் அல்லனோ?

- சங்க இலக்கியப் பாடல்கள் தம் பாடுபொருள்களாலும், திணை, துறை, மரபு முதலியவற்றாலும் சிறப்புற்று விளங்குகின்றன. ஐந்திணையொழுக்கம், இயற்கையைப் போற்றும் பாங்கு, மனிதநெறி கூறும் பான்மை போன்றன தமிழிலக்கியங்களில் விரவியுள்ளன. உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி உள்ளிட்ட உத்திகளை சங்கப்புலவர்கள் கையாண்டுள்ள விதமும் போற்றத்தக்கது. நம்மொழியின்கண் அமைந்த செவ்வியல் கவிதைகளை ஆழ, அகலக்கற்று இன்புறுவோம்.

## அறவியல் இலக்கியங்கள்

- மனிதன் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்கமுறைகளின் தொகுதியே அறம். உலகிற்கு அறம் கூறும் நோக்கோடு எழுந்த இலக்கியங்களை அறவிலக்கியங்கள் என்றும் அறங்கூர் கவிதைகளை அறக்கவிதைகள் என்றும் குறிப்பிடுவர்.

- 'அறம்' என்ற சொல்லை அறு + அம் எனப்பிரித்துத் தீமையை அறுப்பது, நீக்குவது என்றும் அறுதி செய்வது, கடமைகளை வரையறுப்பது என்றும் பொருள் கொள்வர்.

- அறநூல்களைச் சிறந்த இலக்கியங்களின் வரிசையில் வைத்துப் பாராட்டுவது தமிழின் மரபு. கி.பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரை அறம் வலியுறுத்தும் நீதி நூல்கள் தமிழில் பலவிதமான வடிவங்களிலும் வெளிப்பாட்டு முறைகளிலும் எழுதப்பெற்றுள்ளன. காதலும் வீரமும் சங்க காலத்தில் போற்றப்பட்டதைப் போலவே அறமும் நீதியும் சங்கம் மருவிய காலத்தில் பெரிதும் போற்றப்பட்டன.

- சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பட்ட பதினெட்டு நூல்கள் பதினெண் கீழ்கணக்கு நூல்கள் என வழங்கப்படுகின்றன.

**நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்**
**பால்கடுகம் கோவை பழமொழி – மாமூலம்**
**இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே**
**கைந்நிலைய வாம் கீழ்க்கணக்கு**

- என்னும் பழம்பாடல் இப்பதினெட்டு நூல்களின் பெயர்களைப் பட்டியலிடுகிறது. இந்நூல்களை அறம், அகம், புறம் என வகைப்படுத்துவர். அறம் பதினொன்று, அகம் ஆறு, புறம் ஒன்று எனத் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் அறம் பற்றிய நூல்கள் மிகுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

- தமிழ் இலக்கியங்கள் முழுவதுமே அற இலக்கியங்கள் எனலாம். சங்க இலக்கியம், காப்பியங்கள், அறநூல்கள். சிற்றிலக்கியங்கள், புராணங்கள் என்றெல்லாம் பல பிரிவுகள் இருப்பினும் அவற்றின் பாடுபொருளின் மையம் ஏதோ ஒரு அறமாகவே இருக்கிறது. தமிழ் அறநூல்கள் அதன் இலக்கியச்சுவைக்காகவும் போற்றப்படுகின்றன. பிற இலக்கியங்களின் கண் அமைந்த இலக்கியச்சுவை, சொல்லழகு, இசைக்கட்டு, பாவமைப்பு போன்றன தமிழ் அறவிலக்கியங்களிலும் மிளிரக்காணலாம். அறவியல் கவிதைகள், எக்காலத்திற்கும் ஏற்ற அறக்கருத்துக்களைக் கொண்டிலங்குவதை, அக்கவிதைகளைக் கற்பதன் மூலம் அறியலாம்.

- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அமைந்த அறநூல்கள், பிற்காலத்தில் தோன்றிய அறநூல்கள் எனத் தமிழின்கண் அமைந்த அறநூல்களை இருபிரிவாகப் பிரிக்கலாம்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் புறப்பொருள் சார்ந்த ஒரே நூல் களவழி நாற்பது. களத்தை ஏர்க்களம், போர்களம் என்று இருவகைப்படுத்துவர். நெல் முதலானவற்றை அடித்து தூற்றும் களத்தைப் பாடுவது ஏர்க்களம். பகைவரை அழிக்கும் போர்க்களத்தைப் பாடுவது போர்க்களம். போர்க்களத்தைப் பாடும் நூலே களவழி நாற்பது.

கழுமலத்தில் நடைபெற்ற போரில் சோழன் கோச்செங்கணான், சேரன் கணைக்கால் இரும்பொறையை வென்று சிறையிலிட்டதால், அவனை மீட்க பொய்கையார் பாடியதே இந்நூல்.

யானைப்போர் பற்றி குறிப்பிடுவதால் பரணி என்ற சிற்றிலக்கிய வகை தோற்றம் பெறுவதற்கு இந்நூலே காரணம் என்பர். இதிலுள்ள ஒவ்வொரு பாடலின் இறுதி சொல்லும் 'அட்டக்களத்து' என்று முடிவது இதன் சிறப்பு.

**பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள அறநூல்கள்:**

| நூல்கள் | ஆசிரியர் | நூல்கள் | ஆசிரியர் |
|---|---|---|---|
| திருக்குறள் | திருவள்ளுவர் | ஆசாரக்கோவை | பெருவாயின்முள்ளியார் |
| நாலடியார் | சமணமுனிவர்கள் | பழமொழி நானூறு | மூன்றுரையனார் |
| நான்மணிக்கடிகை | விளம்பிநாகனார் | சிறுபஞ்சமூலம் | காரியாசன் |
| இன்னா நாற்பது | கபிலர் | ஏலாதி | கணிதமேதாவியார் |
| இனியவை நாற்பது | பூதஞ்சேந்தனார் | முதுமொழிக்காஞ்சி | கூடலூர்கிழார் |
| திரிகடுகம் | நல்லாதனார். | | |

**ஒருமுறை:**

- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இடம்பெற்றுள்ள அறநூல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தன்மையென. மணிமுடியாக விளங்கும் திருக்குறள் உலகம் போற்றும் பொதுமறை. இது அறம். பொருள், இன்பம் என்னும் முப்பொருண்மைகளை உடையது. விவிலியத்திற்கு அடுத்தபடியாக உலகின் பெரும்பான்மையான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பெருமையுடையது. இந்நூலை இயற்றிய திருவள்ளுவரின் முழு வரலாறு கிடைக்கவில்லை. எனினும் இவர் பிறந்த ஆண்டு கி.மு. 31 எனக் கொண்டு திருவள்ளுவர் ஆண்டு (தி.பி) கணக்கிடப்படுகின்றது.

**கூடாவொழுக்கம்**

- வஞ்சமனம் கொண்டு உலகத்தாரை ஏமாற்றி வாழ்வு நடத்துவது பொய் ஒழுக்கமாம். இதை வள்ளுவர் கூடாவொழுக்கம் எனக் குறிக்கிறார். ஒழுக்கமுடைமை என்ற அதிகாரம் வகுத்து மாந்தர் ஒழுகுமுறைகளை முன்பு அறிவுறுத்திய வள்ளுவர் இங்குக் கூடாவொழுக்கம் எனத் தனியே பேசுகிறார்.

1. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
   ஐந்தும் அகத்தே நகும்

2. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
   தான்அறி குற்றப் படின்.

3. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
   புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

4. தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
   வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.

5. பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் என்றெற்றென்று

ஏதம் பலவுந் தரும்.

6. நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
   வாழ்வாரின் வன்கணார் இல்.

7. புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
   மூக்கிற் கரியார் உடைத்து.

8. மனத்தது மாசாக மாண்டார் நீராடி
   மறைந்தொழுகு மாந்தர் பலர்.

9. கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன
   வினைபடு பாலால் கொளல்.

10. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
    பழித்தது ஒழித்து விடின்.

அதிகாரம் 28

- இவ்வதிகாரம் பொதுவாகப் பிறரை ஏமாற்றி வாழும் அனைவரையும் பற்றியது என்றாலும் போலித்துறவியரை மனத்தில் கொண்டே வரையப்பட்டவை என்பதை எளிதில் உணரமுடிகிறது.

**இருநானூறு**

- திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத்தக்கது நாலடியார் ஆகும். நாலடி, நாலடி நானூறு, வேளாண்வேதம் என்று வெவ்வேறு பெயர்களாலும் இந்நூல் சுட்டப்படுகின்றது. சமணமுனிவர்களால் பாடப்பட்ட 400 வெண்பாக்களின் தொகுப்பே இந்நூல். இதனைத் தொகுத்தவர் பதுமனார். இந்நூலைப் போன்றே 400 வெண்பாக்களால் ஆனது பழமொழி நானூறு. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி அமையப் பாடப்பட்டிருப்பதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இந்நூலை இயற்றியவர் முன்றுரையரையனார்.

- வாழ்க்கையின் எல்லா இன்னல்களுக்கும் காரணமான அறியாமையாகிய மயக்கத்தைத் தீர்ப்பது கல்வி. இக்கருத்தை விளக்கும் நாலடியார் பாடல் நோக்கத்தக்கது.

  இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
  தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
  எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
  மம்மர் அறுக்கும் மருந்து.

நாலடியார்

- கல்வியின் சிறப்பை விளக்குவதாக அமைந்த இச்செய்யுளில் உவமையோ பிற இலக்கியச் சிறப்புகளோ அமையாவிட்டாலும், கூறுவதைச் செறிவாக, சிறப்பாகச் சொல்லும் தன்மை அமைந்திருப்பதைக் காணலாம்.

- தனக்கு உதவி செய்தவர்களுக்குத் தீங்கு செய்வது தனக்கே தீங்கு செய்து கொள்வதற்கு ஒப்பாகும் என்ற கருத்தை பழமொழி நானூற்றுப் பாடலொன்று கூறுகிறது.

  நாடி நமரென்று நன்கு புரந்தாரைக்
  கேடு பிறரோடு சூழ்தல் கிளர்மணி
  நீடுகல் வெற்ப நினைப்பின்றித் தாமிருந்த
  கோடு குறைத்து விடல்.

பழமொழி நானூறு

- தமக்கு உதவியவர்களுக்கு அவரின் பகைவரோடு சேர்ந்து தீங்கிழைப்பது, ஒருவன் உணர்வின்றித் தான் தங்கியிருந்த கிளையின் அடியை வெட்டி வீழ்த்தி உயிர்விடுதலைப் போன்றதாகும்.

**மும்மருந்து**

- பதினெண்கீழ்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று. அதில் முதலாவதாக அமைந்த நூல் திரிகடுகம். சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் கலந்த மருந்து உடல்நோயைத் தீர்ப்பது போல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ள மூன்று கருத்துகள் உள்ளத்து நோயைத் தீர்ப்பதால் இந்நூல் திரிகடுகம் எனப் பெயர் பெற்றது. 100 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலின் ஆசிரியர் நல்லாதனார்.

- இரண்டாவதாக அமைந்த நூல் சிறுபஞ்சமூலம். கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்கள் கலந்த மருந்து உடலை வலுப்படுத்துவதுபோல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் அமைந்த ஐந்து கருத்துகள் வாழ்வுக்கு வலிமை சேர்ப்பதால் இந்நூல் சிறுபஞ்சமூலம் எனப்பெயர் பெற்றது. 102 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலின் ஆசிரியர் காரியாசான்.

- மூன்றாவதாக அமைந்தது ஏலாதி, ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறும் கலந்த மருந்து உடலுக்குறுதி சேர்ப்பதுபோல, செய்யுள்தோறும் உள்ளத்திற்கு உறுதி சேர்க்கும் ஆறு கருத்துகளைக் கொண்டதால் இந்நூல் ஏலாதி எனப்பெயர் பெற்றது. 80 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலை இயற்றியவர் கணிதமேதாவியர்.

- மக்களைக் காப்பது அரசனின் கடமை. மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழி என்பது ஆன்றோர் வாக்கு. சிறுபஞ்சமூலம் அரசனின் இயல்புகளை விவரிக்கும் விதம் இங்கு நோக்கத்தக்கது.

**பொருள்போக மஞ்சாமை பொன்றுங்காற் போர்த்த**
**அருள்போகா வாரறமென் றைந்தும் இருள்தீரக்**
**கூறப்படும் குணத்தான் கூர்வேல்வல் வேந்தனால்**
**தேறப்படும் குணத்தி னான்**

**சிறுபஞ்சமூலம்**

- பொருள், இன்பம், இடுக்கண் வந்த காலத்து அஞ்சாமை, பிறிதோர் உயிரின் துன்பங்கண்டு இரங்குதல், நிலையான அறம் ஆகிய ஐந்தும் உடையவன் நல்ல அரசனாகச் செயலாற்றுவதற்குரிய தகுதியுடையவனாகிறான்.

**நானாற்பது**

- நானாற்பது என்று அழைக்கப்படும் நான்கு நூல்களாவன இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது. இவற்றுள் முறையே முதலிரண்டும் அறநூல்கள். கார் நாற்பது அகநூல். களவழி நாற்பது புறநூல்.

- இன்னது துன்பம் தரும் என்று கூறும் 40 வெண்பாக்களால் ஆன நூல் இன்னா நாற்பது. இந்நூலின் ஆசிரியர் கபிலர். இன்னது இன்னது இன்பம் பயக்கும் என 40 வெண்பாக்களைக் கொண்டு பூதஞ்சேந்தனாரால் பாடப்பட்ட நூல் இனியவை நாற்பது.

- வாழ்விற்கு இன்பம் பயப்பன இவைஇவை என இனியவை நாற்பது பட்டியலிடுகிறது. இன்னது செய்யாதே என்பதை விட இதைச்செய் என நெறிப்படுத்தும் பாங்கு இந்நூலின் சிறப்பு.

**கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே**
**மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே**
**எள்துணை யானும் இரவாது தான்ஈதல்**
**எத்துணையும் ஆற்ற இனிது.**

**இனியவை நாற்பது**

- கற்றறிந்தவர் முன் தான் கற்ற கல்வியைச் சொல்வது மிக இனியது. அறிவால் மேம்பட்ட கல்வியாளரைச் சேர்ந்து பொருந்தியிருப்பது மிகப் பெருமையுடன் முற்றிலும் இனியது. எள்ளளவாவது, தான் பிறரிடம் இரவாமல் தன் பொருளைப் பிறர்க்குத் கொடுத்து உதவுவது எல்லா விதத்திலும் மிக இனியது.

**மணிமொழிக்கோவை**

- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாவன நான்மணிக்கடிகை, முதுமொழிக்காஞ்சி, ஆசாரக்கோவை ஆகிய மூன்றையும் மணிமொழிக்கோவை என்பர். நான்கு மணிகள் பதிக்கப்பெற்ற கடிகை என்னும் அணிகலன் போல ஒவ்வொரு செய்யுளிலும் நான்கு அரிய கருத்துகளைக் கொண்டுள்ளதால் இந்நூல் நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது. இந்நூல் 104 வெண்பாக்களைக் கொண்டு விளம்பிநானனாரால் இயற்றப்பட்டது.

- பல மணிகளைக் கோவையாகக் கொண்டு அமைவது மகளிர் அணியும் காஞ்சி என்னும் அணிகலன். அதுபோல பல முதுமொழிகளைக் கோவையாகக் கொண்ட 100 வெண்பாக்களை உடைய நூல் முதுமொழிக்காஞ்சி, இதன் ஆசிரியர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்.

- ஆசாரமாகிய ஒழுக்க விதிகளைக் கோவையாகக் கொண்டு 100 வெண்பாக்களால் ஆன நூல் ஆசாரக்கோவை. இதன் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார்.

- நிலையாமை என்னும் கருத்தை அறவிலக்கியங்களும் குறிப்பிடுகின்றன. நிலையில்லாப் பொருளைத் தேடியலையும் மனித வாழ்வைப் பொருளற்றது என்கிறது நான்மணிக்கடிகை.

**கள்வம் என்பார்க்கும் துயில்இல்லை காதலி மாட்டு**
**உள்ளம் வைப்பார்க்கும் துயில்இல்லை ஒண்பொருள்**
**செய்வம் என்பார்க்கும் துயில்இல்லை அப்பொருள்**
**காப்பார்க்கும் இல்லை துயில்**

**நான்மணிக்கடிகை**

- கள்வர்களுக்கும் தூக்கம் இல்லை. தலைவியை விரும்பும் தலைமகளுக்கும் தூக்கம் இல்லை. செல்வத்தை ஈட்டுபவனுக்கும் தூக்கம் இல்லை. அச்செல்வத்தைத் திருடு போகாது காப்பவனுக்கும் தூக்கம் இல்லை. எனவே நிலையில்லாப் பொருள்களின் கண் நாட்டம் கொள்ளாமல் மெய்ப்பொருளைத் தேடியடைவதே மனித வாழ்வின் நோக்கமாகும்.

- அறவிலக்கியங்கள் பொதுவாகத் தனிமனித ஒழுக்கங்களை வலியுறுத்தி அமைகின்றன. அவ்வாறமைந்த ஆசாரக்கோவைப் பாடலொன்று இங்கு நோக்கத்தக்கது.

**வைகறை யாமம் துயிலெழுந்து தான்செய்யும்**
**நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதின்**
**தந்தையுந் தாயுந் தொழுதெழுக என்பதே**
**முந்தையோர் கண்ட முறை.**

**ஆசாரக்கோவை**

- அதிகாலையில் துயிலெழுந்து, தான் அன்று செய்யும் நல்லறத்தையும் செயலையும் ஆராய்ந்து சிந்தித்து, பின்னர்த் தந்தையையும் தாயையும் தொழுது அச்செயலைச் செய்யத் தொடங்குக என்று சொல்லப்படும் ஒழுக்கம், அறிவுடைய சான்றோர் சொல்லிய முறையாம்.

**பிற்கால நீதி நூல்கள்:**

- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுக்குப் பின் தோன்றிய அறநூல்கள் தனிமனித அறத்தையும், சமூக அறத்தையும் பேசின. முற்கால நீதி நூல்கள் கூறும் அறக்கருத்துகளின் தொகுப்பாகப் பிறகால நீதிநூல்கள் அமைந்துள்ளன. மக்கள் நல்வாழ்வுக்கேற்ற நூற்றுக்கும் மேற்பட்ட அறங்களை வகுத்தும் தொகுத்தும் எளிய மொழி நடையில் வழங்குகின்றன.

- இருப்பு, அறிவு, விழுமியம், காரணம், மனம், மொழி தொடர்பான சிக்கல்களைப் பற்றி ஆராய்வதே மெய்யியல். மெய்யியல் குறித்த ஆழமானதொரு பார்வையினை அறநிலைக்கவிதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

| நூல் பெயர் | ஆசிரியர் | நூல் பெயர் | ஆசிரியர் |
|---|---|---|---|
| அருங்கலச் செப்பு | --- | கபிலரகவல் | கபிலர் |
| அறநெறிச்சாரம் | முனைப்பாடியார் | கொன்றை வேந்தன் | ஔவையார் |
| நறுந்தொகை | அதிவீரராமபாண்டியர் | மூதுரை | ஔவையார் |
| நீதிநெறிவிளக்கம் | குமரகுருபரர் | நல்வழி | ஔவையார் |
| நன்னெறி | சிவப்பிரகாசர் | நீதி சிந்தாமணி | வேதகிரியார் |
| உலகநீதி | உலகநாதர் | பெண்மதிமாலை | வேதநாயகர் |
| முதுமொழி வெண்பா | --- | நீதிநூல் | வேதநாயகர் |
| ஆத்திசூடி | ஔவையார் | நீதிபேதம் | வேதநாயகர் |
| விவேக சிந்தாமணி | --- | புதிய ஆத்திச்சூடி | பாரதியார் |

**ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்**
**மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா!**
**நமக்கும் அதுவழியே! நாம்போம் அளவும்**
**எனக்கென்! என்(று) இட்டு உண்டு இரும்**

**நல்வழி**

- பல ஆண்டுகள் அழுதாலும் இறந்தவர் திரும்ப இந்தப் பூமிக்கு வருவதில்லை. பல முயற்சி செய்தாலும் இறப்பைத் தள்ளிப் போடலாமே தவிர தவிர்க்க முடியாது. இறப்பு உறுதியாக இறுதியில் வரும். ஆதலால், தமக்கெனச் சேர்த்து வைக்காமல் முடிந்த வரை பிறருக்குக் கொடுத்து வாழ வேண்டும்.

- பதினைந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த கபிலர் என்னும் புலவரால் இயற்றப்பட்ட நூல் கபிலர் அகவல். இந்நூல் கூறும் நீதி எக்காலத்திற்கும் பொருத்தமுடையதாக உள்ளது.

**ஒன்றே செய்யவும் வேண்டும் ஒன்றும்**
**நன்றே செய்யவும் வேண்டும் நன்றும்**
**இன்றே செய்யவும் வேண்டும் இன்றும்**
**இன்னே செய்யவும் வேண்டும்**

**கபிலர் அகவல்**

நாம் செய்யும் செயல் நல்லதாக இருக்க வேண்டும். அச்செயலை அன்றே அப்பொழுதே செய்து முடிக்க வேண்டும்.

- பிற்கால அறநூல்கள் பெரும்பாலும் சுருங்கச்சொல்லி விளங்கவைப்பவை. அவ்வகையில் ஓரடிப் பாக்கள் என்னும் வகையிலமைந்த அறவிலக்கியங்கள் பல தோன்றின. சிறுவர்களுக்கு நீதிகளைப் பயிற்றுவிக்க இவை பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

- அதிவீரராமபாண்டியர் இயற்றிய நறுந்தொகை, அறக்கருத்துகளை எடுத்துரைக்கும் ஓரடிப் பாக்களால் ஆன நூல்.

**எழுத்தறி வித்தவ னிறைவ னாகும்**
**கல்விக் கழகு கசடற மொழிதல்**
**நாளுங் கிழமையும் நலிந்தோர்க் கில்லை**
**கேளுங் கிளையுங் கெட்டோர்க் கில்லை**

**நறுந்தொகை**

- போன்ற ஓரடிப் பாக்கள் வடிவ எளிமையும் பொருளினிமையும் கொண்டு விளங்குவதை அறியலாம்.

- ஒழுக்கமுடையவர்களின் உயர்வும் ஒழுக்கத்துடன் வாழாதோர் எய்தும் இழிவும் விவேகசிந்தாமணியில் நயம்படக் கூறப்பட்டுள்ளது.

**ஆசாரஞ் செய்வா ராகி லறிவோடு புகழு முண்டாம்**
**ஆசாரம் நன்மை யானா லவனியிற் றேவ ராவார்**
**ஆசாரஞ் செய்யா ராகி லறிவொடு புகழு மற்றுப்**
**பேசார்போற் பேச்சு மாகிப் பிணியொடு நரகில் வீழ்வார்**
**- விவேகசிந்தாமணி**

- ஒழுக்கத்துடன் வாழ்பவர் அறிவும் புகழும் பெறுவர். தாம் செய்யும் நன்மைகளால் தேவருக்கு ஒப்பாகக் கருதப்படுவர். ஒழுக்கமில்லாதவர் நகரத்தை அடைவர் என்பதை இப்பாடல்வழி அறியலாம்.

இளம்வயதே கற்பதற்கு ஏற்ற வயது என்பதைக் கூற விழைந்த வேதநாயகர்.

**வளையின் மரந்தனை நிமிர்த்தல் வாய்க்கும் பொன்**
**இளகிய பொழுதணி யியற்றிய லாகுதல்**
**வளமுறு கேள்விநூன் மாண்பு நற்குணம்**
**இளமையி லன்றிமூப் பெய்தின் எய்துமோ**
**- நீதிநூல்**

- என்ற நீதிநூலின் பாடல்வழி மாத்தின் வளைவை இளமையில் நிமிர்த்தலும் பொன் இளகியிருக்கும்போதே நகை செய்தலும் போல, இளவயதில்தான் நூற்கல்வியையும் மாண்பையும் நற்குணங்களையும் பயிற்றுவிக்க முடியும் என்கிறார்.

- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அமைந்த அறநூல்கள் கூறும் அறக்கருத்துகளின் தொகுப்பாகவே பிற்கால அறநூல்கள் அமைந்திருந்ததை அந்நூல்களில் அமைந்த பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன.

## காப்பியங்கள்

- கி.பி.12ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'தண்டியலங்காரம்' காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளது. "பெருங்காப்பிய நிலை பேசுங்காலை" எனத் தொடங்கும் நூற்பா காப்பிய இலக்கணத்தைக் கூறுகிறது.

**பெருங்காப்பிய நிலை பேசுங்காலை**
**வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றில் ஒன்று**
**ஏற்புடைத்தாகி முன்வர இயன்று**
**நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்**
**தன்னிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய்**
**மலை கடல் நாடு வளநகர் பருவம்**
**இருசுடர்த் தோற்றமென றினையன புனைந்து**
**நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல் ......**

- இதன்படி, பெருங்காப்பியத்தில் இயற்கையை வாழ்த்துதல், தெய்வத்தினை வணங்குதல், உரைக்கும் பொருள் உணர்த்தல் என்னும் மூன்றினுள் ஒன்று முதலில் வர வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களைப் பெருங்காப்பியம் வலியுறுத்திப் பாட வேண்டும். இந்நான்கினுள் ஒன்றோ, பலவோ குறைந்து வருவதைத் தண்டியாசிரியர் சிறுகாப்பியமென்று கூறுகிறார்.

- பெருங்காப்பியங்கள், எதையும் குறைவின்றிச் செய்து முடிக்கும் வலிமை வாய்ந்த தன்னிகர் இல்லாத் தலைவனைப் பெற்று அமைதல் வேண்டும். காப்பியம் எழுந்த சூழல் சார்ந்து மலை, கடல், நாடு, நகர் முதலானவற்றின் வருணனைகள் இடம்பெற வேண்டும். பின்னர் அந்தந்த நிலத்து மக்களின் வாழ்வியல், சடங்குகள், விளையாட்டுகள், தூது, பயணம், போர், வெற்றி போன்ற செய்திகளைக் கொண்டிருக்க வேண்டும். எண்வகை மெய்ப்பாடுகளைக் கூறும் வகையில் இதன் உள்ளடக்கம் அமைதல் வேண்டும். காப்பியத்தின் பெரும்பிரிவிற்குக் காண்டம்.

- இலம்பகம், பருவம் எனவும் உட்பிரிவிற்குச் சருக்கம், காதை, படலம் எனவும் பெயரிடுவர்.

- தண்டியலங்காரத்திற்கு முன்பே தமிழில் இத்தன்மையுடைய இலக்கியங்கள் தோன்றி வளர்ந்துள்ளன. இவை காப்பிய இலக்கணத்தோடு பெரும்பாலும் பொருந்தியும் சிறுபான்மை மாறுபட்டும் அமைந்துள்ளன. அவை தொடர்நிலைச் செய்யுள் என அழைக்கப்பட்டன. அவற்றில் காப்பியச்சுவை சற்றும் குறையாமல் அமைந்திருப்பது சிறப்பு.

## ஐம்பெருங்காப்பியங்கள்

- சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி, சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் சங்கம் மருவிய கால இலக்கியங்கள். பின்னர் வரும் மூன்றும் சோழர் காலத்தைச் சேர்ந்தவை. அவற்றுள் குண்டலகேசியும், வளையாபதியும் காலவெள்ளத்தில் அழிந்துபோன காப்பியங்கள் ஆகும்.

### சிலப்பதிகாரம்

- தமிழில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் சிலப்பதிகாரம். இக்காப்பியம் நெஞ்சை அள்ளும் சுவையுடையது. இக்காப்பியம் நெஞ்சை அள்ளும் சுவையுடையது. சிலம்பால் உருவான நிகழ்வுகளையும் வரலாற்றையும் கூறுவதால் சிலப்பதிகாரம் எனப்பெயர் பெற்றது. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று இந்நூல் அறியப்படுகிறது. இக்காப்பியத்தைப் படைத்த இளங்கோவடிகள் சமண சமயம் சார்ந்தவர். கி.பி 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இளங்கோவடிகளைச் சேரன் செங்குட்டுவனின் தம்பி என்பர்.

- இந்நூல் புகார்க்காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக்காண்டம் என்ற மூன்று காண்டங்களையும்,“மங்கல வாழ்த்துப் பாடல்” தொடங்கி “வரந்தரு காதை”ஈறாக முப்பது காதைகளையும் உடையது.

**அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம்**
**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்**

என்னும் முப்பெரும் உண்மைகளை இந்நூல் கூறுகிறது.

### காப்பியச் சுருக்கம்

- பூம்புகாரில் மாசாத்துவான் மகனாகிய கோவலனுக்கும் மாநாய்கன் மகளாகிய கண்ணகிக்கும் திருமணம் நடைபெறுகிறது. சில ஆண்டுகள் இனிமையாக இல்லறத்தை நடத்துகின்றனர். இந்நிலையில் ஆடல், பாடல், அழகு என்ற மூன்றிலும் குறைவுபடாத மாதவி என்ற பெண் கோவலன் வாழ்வில் குறுக்கிடுகிறாள். அவளுடன் சில காலம் வாழ்ந்த கோவலன் ஊழ்வினையால் அவளைப் பிரிந்து விடுகிறான்.

- கற்புக்கரம்பூண்ட தெய்வமாகிய மனைவி கண்ணகியை அடைந்த கோவலன், அவள் காற்சிலம்புகளை மூலதனமாகக் கொண்டு இழந்த செல்வத்தை மீண்டும் திரட்ட மதுரைமாநகர் செல்கிறான். கண்ணகியும் உடன்செல்கிறாள். ஊழ்வினை தொடர்கிறது! மதுரையில் கள்வன் எனக் களங்கம் கற்பிக்கப்பட்டுக் கோவலன் கொல்லப்படுகிறான். கதிரவனையும் தன் கற்புத்திறத்தால் பேசவைத்த கண்ணகியால், மதுரை மாநகர் தீப்பிடித்து எரிகிறது. அதன்பின் சேரநாடு நோக்கிச் சென்ற கண்ணகி, தெய்வமாக்கப்படுகிறாள்.

காப்பிய நாயகியான கண்ணகியே இக்காப்பியத்தில் முதன்மைப்படுத்தப் படுகிறாள். அவளை அறிமுகம் செய்யவந்த இளங்கோவடிகள்,

போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங் கண்ணகியென்

பாள்மன்னோ

**காப்பியச் சிறப்புகள்**

- குடிமக்கள் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், நாடகக் காப்பியம், தேசியக் காப்பியம் முதலான சிறப்புப் பெயர்களால் இந்நூல் அழைக்கப்படுகிறது. அரங்க அமைப்பு முறைகள் பற்றிய செய்திகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. பூம்புகார், மதுரை, வஞ்சிமாநகர் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும், அக்காலச் சமுதாய அமைப்பு, ஆடல் வகைகள், இசைக் கருவிகள், கல்வி, வணிகம் பற்றிய குறிப்புகளையும், மூவேந்தர் ஆட்சிமுறை பற்றிய செய்திகளையும் கூறுகிறது. ஆகவே தமிழர்க்குக் கிடைத்த அரிய காப்பியக் கருவூலமாகக் சிலம்பைக் கருதலாம்.

**மணிமேகலை**

- பௌத்த சமயக் காப்பியமாகத் திகழும் மணிமேகலை கோவலனுக்கும், மாதவிக்கும் பிறந்த மகளாகிய மணிமேகலையின் வரலாற்றைக் கூறுகிறது. இதன் ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். இவரும் இளங்கோவடிகள் காலத்தைச் சேர்ந்தவரே. மணிமேகலையில் விழாவறை காதை முதல் பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை ஈறாக முப்பது காதைகள் உள்ளன. ஆனால் சிலப்பதிகாரத்திலுள்ளது போல் காண்டம் என்னும் பெரும்பிரிவுகள் இல்லை. மணிமேகலை இளங்கோவடிகள் முன்பாகவும், சிலப்பதிகாரம் சீத்தலைச் சாத்தனார் முன்பாகவும் அரங்கேற்றப்பட்டதாகக் கூறுவர். கதைக்களம், பாத்திரங்கள், கருத:துகள் இரண்டிலும் தொடர்வதால் சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் இரண்டைக்காப்பியம் என்பர். இந்நூல் மணிமேகலை துறவு என்றும் அழைக்கப்படுகிறது.

**காப்பியச் சுருக்கம்**

- கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த பெண் மணிமேகலை. தனக்கு நேர்ந்த கதிதன் மகளுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவளையும் தன்னைப்போலவே பௌத்தத் துறவியாக்கி இருந்தாள் மாதவி. இந்திரவிழா காணவந்த மணிமேகலா தெய்வம் மணிமேகலையைத் தூக்கிக் கொண்டு சென்று மணிபல்லவத்தீவில் சேர்க்கிறது. அங்கு தோன்றிய புத்த பீடிகையைத் தொழுது, தன் பழம்பிறப்பு பற்றி அறிகிறாள் மணிமேகலை. வான்வழியே பறத்தல், பசியாதிருத்தல், தன் உருவை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவற்றிற்கான மந்திரங்களையும், அள்ள அள்ளக் குறையாது அமுது சுரக்கும் அமுத சுரபியையும் பெறுகிறாள். பூம்புகாருக்குத் திரும்பிய மணிமேகலை அறத்தொண்டு ஆற்றுகிறாள். மணிமேகலையால் சிறைக்கோட்டம் அறக்கோட்டமாகிறது. மணிமேகலை மீது விருப்பம் கொண்ட உதயகுமரன், காயசண்டிகையின் உருவத்திலிருந்த மணிமேகலையைப் பின் தொடர்கிறான். தன் மனைவியைப் பின்தொடர்வதாகக் கருதி காயசண்டிகையின் கணவன் உதயகுமரனைக் கொன்றுவிடுகிறான். இதனால் சிறைக்கோட்டத்தில் வைக்கப்பட்ட மணிமேகலை தன் அறச்செயல்களால் விடுதலை அடைகிறாள். பின்னர் வஞ்சிமாநகர் வந்து கண்ணகி கொட்டத்தில் கண்ணகியை வணங்குகிறாள். அறம்பல பகர்ந்து பிற சமயத்தவரோடு வாதிட்டு வென்று இறுதியில் தவம் செய்து வீடுபேறு அடைகிறார்.

**பசியாகிய கொடிய நொய்,**
**குடிபிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்**
**பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்**
**நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்**

என்றும், வறுமையில் உழலும் மக்களுக்கு உணவு முழங்குவோரின் சிறப்பை,

மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே

என்றும் மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது.

**காப்பியச் சிறப்புகள்**

- மணிமேகலையில் இயற்கைக் காட்சிகளும், வருணனைகளும் அமைந்துள்ளன. கதைத்தலைவியால் பெயர் பெற்றது இந்நூல். பரத்தையொழிப்பு, மதுவொழிப்பு சிறையொழிப்பு என்னும் கருத்துகளைக் கூறும் சமுதாய சீர்திருத்தக்காப்பியமாக இந்நூல் விளங்குகிறது.

**சீவக சிந்தாமணி**

- தமிழில் விருத்தப்பாவால் இயன்ற முதல் காப்பியம் சீவகசிந்தாமணி. வடமொழியில் எழுந்த கத்திய சிந்தாமணியின் தழுவலே இந்நூல் என்பர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் திருத்தக்கதேவரை 'தமிழ்க் கவிஞர்களுள் அரசன்' என்று வீரமாமுனிவர் போற்றுகிறார். சீவகசிந்தாமணி செந்தமிழ்க் காப்பியங்களுள் சிறந்தது மட்டுமன்று, உலக மகாகாவியங்களில் ஒன்றாகும் என்று ஜி.யு.போப் பாராட்டுகின்றார்.

- சீவக சிந்தாமணி நாமகள் இலம்பகம் முதல் முக்தி இலம்பகம் வரை பதின்மூன்று இலம்பகங்களையும், 3145 பாடல்களையும் கொண்டது. காப்பிய இலக்கணம் முழுமையும் பொருந்தும் இந்நூல் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களையும் பேசுகிறது.

**காப்பியச் சருக்கம்**

- ஏமாங்கத நாட்டின் தலைநகர் இராசமாபுரம். இந்நாட்டை ஆண்ட மன்னன் சச்சந்தன்.தன் மனைவி விசயையோடு அரண்மனை அந்தப்புரத்திலே தங்கியிருக்க, நாட்டைக் கவனித்து வந்த அமைச்சன் கட்டியங்காரன் ஏற்ற நேரத்தில் அரசனைக் கொன்று ஆட்சியைப் பிடித்துக் கொண்டான். மயில்பொறி ஒன்றின் மூலம் தப்பிய விசயை, இராசமாபுரத்தின் இடுகாட்டில் சீவகனைப் பெற்றெடுக்கிறாள். சீவகன் பிறந்தபோது அதன் தாய் விசயை சிந்தாமணியே என அழைத்தாள். அக்குழந்தை தும்மியபொழுது 'சீவ' என்ற வாழ்த்தொலி கேட்டது. அதனால் அவன் சீவகன் என்று அழைக்கப்பட்டான். சீவகனின் வரலாற்றைக் கூறும் நூலாதலின் 'சீவகசிந்தாமணி' எனப்பெயர் பெற்றது. கந்துகடன் என்ற வணிகன் சீவகனை எடுத்து வளர்க்கிறான். அச்சணந்தி என்ற ஆசிரியர் சீவகனுக்குப் பல்வேறு கலைகளையும் கற்பிக்கிறார். தன்னிகரில்லாத் தலைவனாக விளங்கும் சீவகன் தன் ஆற்றலால் பல்வேறு வீரச் செயல்களைப் புரிந்து, கட்டியங்காரனைப் போரில் வீழ்த்தி மீண்டும் தன் நாட்டைப் பெறுகிறான். காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை ஆகிய எட்டுப் பெண்களை மணப்பதனால், இந்நூல் மணநூல் என்றும் அழைக்கப்படுகிறது. இறுதியில் அவன் துறவறம் பூண்டு முக்தி அடைகிறான்.

- நாமகள் இலம்பகத்தில் வரும் நாட்டுச் சிறப்பில், திருத்தக்கதேவர் ஏமாங்கதநாட்டின் சிறப்பைப் பின்வருமாறு பாடுகிறார்.

**சிந்துரப் பொடிகளுக்கு செம்பொற் சுண்ணமுஞ்**
**சந்தன நீரொடு கலந்து தையலார்**
**பந்தொடு சிவிறியிற் சிதறப் பார்மிசை**
**யிந்திர வில்லெனக் கிடந்த வீதியே**

என்று சோழநாட்டின் வளமையைக் கற்பனையில் கண்டு கவி இயற்றுகிறார்.

**காப்பியச் சிறப்புகள்**

- காப்பியங்களில் நாட்டுவளம், நகர்வளம் பாடுவதில் புதியமரபை ஏற்படுத்திக் கொடுத்த காப்பியம் சீவகசிந்தாமணி. இயற்கைக் காட்சிகள், அவை பற்றிய வருணனை,

போர்முறைகள், தமிழர்தம் பழக்கவழக்கங்கள், உவமை நயங்கள், அரசியல் சூழ்ச்சிகள், சமணக்கொள்கை விளக்கங்கள் பற்றி பேசுகிறது சிந்தாமணிக் காப்பியம்.

**குண்டலகேசி**

- அழிந்துபோன தமிழ்க் காப்பியங்களுள் ஒன்று குண்டலகேசி. இது பௌத்த சமய நூல். நாதகுத்தனார் என்ற புலவரால் இயற்றப்பட்டது. புறத்திரட்டில் குண்டலகேசியின் பாடல்களாகப் பத்தொன்பது செய்யுள்களும், நீலகேசி உரையில் 180 பாக்களும் இன்று கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டும், வேறு சில குறிப்புகள் மூலமும் குண்டலகேசியின் கதையமைப்பை அறியமுடிகிறது.

**காப்பியச்சுருக்கம்**

- இராசகிருகம் என்ற நகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அரசனுக்கு அமைச்சன் ஒருவன் இருந்தான். அமைச்சனின் மகள் பத்திரை திருட்டுக் குற்றத்திற்காகத் தண்டனை பெற்ற ஒருவனை விரும்பி மணக்கிறாள். கள்வன் நல்லவனாக மாறி இல்லறம் நடத்துகிறான். ஒருநாள் பத்திரை தன் கணவனை ‘‘நீ கள்வன்தானே’’ என்று கூறிவிடுகிறாள். மனைவியின் சொல்கேட்டு மனம் வருந்திய அவன் மலையிலே உள்ள தெய்வத்தை வழிபட்டு வருவோம் என்று வஞ்சகத்துடன் அழைக்கின்றான். மலையின் உச்சியை அடைந்ததும் பத்திரையைக் கொல்லப்போவதாகக் கூறுகின்றான். உங்களை ஒருமுறை சுற்றி வணங்கியபின் என்னைக் கொன்றுவிடுங்கள் என்று கணவனிடம் வேண்டுகிறாள். ‘‘தற்கொல்லியை முற்கொல்க’’ என்பதை உணர்ந்து அவனைச் சுற்றி வருகையில் பின்பறமாக மலையுச்சியிலிருந்து அவனைக் கீழே தள்ளிக் கொல்கிறாள். வாழ்க்கையில் வெறுப்புற்ற பத்திரை ஒரு சமணப் பள்ளியை அடைந்து துறவறம் ஏய்கிறாள். பின்னர் சாரிபுத்தரிடம் வாதத்தில் தோற்றுப் புத்தசமயத்தைத் தழுவுகிறாள்.

- மெய்யுணர்வுடையோர் எது நிகழ்ந்தாலும் எல்லாம் ஊழின் செயல் என்று கருதி அமைதியாய் இருப்பர்.

> மறிப மறியும் மலிர்ப மலிரும்
> பெறுப பெரும் பெற்றுஇழப்ப இழக்கும்
> அறிவது அறிவார் அழுங்கார் உவவார்
> உறுவதும் உறும் என்று உரைப்பது நன்று

- செல்வம் வரும்போது மகிழ்வதுமில்லை. வறுமையுற்றபோது வருந்துவதுமில்லை என்னும் நெறியை இப்பாடல் உணர்த்துகிறது.

**வளையாபதி**

- ஐம்பெரும் காப்பியங்களுள் இறுதியாக வைத்து எண்ணப்படுவது வளையாபதி. இந்நூல் முழுமையும் இன்று கிடைக்கவில்லை. சமணசமயத்தைச் சார்ந்த இந்நூலின் ஆசிரியர் பெயரும் தெரியவில்லை. புறத்திரட்டுத் தொகை நூலில் வளையாபதியின் பாடல்களாக அறுபத்தாறு செய்யுள்கள் காணப்படுகின்றன. விருத்தப் பாக்களாக அமைந்த வளையாபதிப் பாடல்கள் கள்ளாமை, கொல்லாமை, பொய்யாமை, இளமை நிலையாமை ஆகியன குறித்துப் பேசுகின்றன.

**காப்பியச் சுருக்கம்**

- நவகோடி நாராயணன் ஒரு வைர வணிகன், அவன் தன் குலத்தில் ஒரு பெண்ணையும், வேறு குலத்தில் ஒரு பெண்ணையும் திருமணம் செய்கிறான். இதனால் அவனைக் குலத்தை விட்டுத் தள்ளி வைத்துவிடுகின்றனர். துன்பமுற்ற நாராயணன், வேறு வழியின்றித் தான் மணம்புரிந்த வேறு குலத்துப் பெண்ணைத் தள்ளி வைத்து விடுகிறான். அவளோ, தனக்கு மறுவாழ்வு அளிக்கும்படி காளியை வேண்டுகிறாள். காளியின் அருளால் அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கிறது. அக்குழந்தை வளர்ந்து பெரியவனாகிப் புகார்

நகர் வணிகர் அவையில் 'தன் தந்தை நாராயணனே' என்று நிறுவுகிறான். காளிதேவியும் சாட்சி கூறி அதனை மெய்ப்பிக்கிறது. இதனால் குடும்பம் ஒன்றுசேர, அனைவரும் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர்.

இன்மை யிளிவா முடைமை யுயிர்க்கச்சம்
மன்னல் சிறிதாய் மயக்கம் பெரிதாகிப்
புன்மை யுறுக்கும் புரையில் பொருளைத்
துன்னா தொழிந்தார் துறவோ விழுமிதே.

- எந்நிலையிலும் மாந்தர்கள் கீழ்மையைத் தருகின்ற பொய்ப்பொருளைப் பற்றாது, சான்றோர் மொழிந்த துறவொழுக்கத்தைப் பின்பற்றுவதே சிறப்புடையது என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது.

## ஐஞ்சிறு காப்பியங்கள்

- அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கு உறுதிப்பொருள்களுள் ஒன்றோ சிலவோ குறைந்து, பெருங்காப்பிய இலக்கணத்திற்கு மாறுபட்டு வருவது சிறுகாப்பியமாகும். உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி என்பவை ஐச்சிறு காப்பியங்களாகும். இவ்வைந்தும் சமண சமயக் காப்பியங்களாகும்.

### உதயணகுமார காவியம்

- உதயணகுமார காவியம் ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாகும். இந்நூலில் ஆறு காண்டங்கள் உள்ளன. இக்காப்பியத்தின் முதற்பகுதி உதயணன் வரலாற்றையும், பிற்பகுதி அவனது மகனாகிய நரவாகனனது வரலாற்றையும் கூறுகிறது. இக்காப்பியத்தில் மொத்தம் 367 பாடல்கள் உள்ளன. இந்நூல் பெருங்கதை என்னும் காப்பியத்திலிருந்து வேறுபட்டது. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

- இந்நூலின்கண் அமைந்த 'விருத்தப்பா' அமைப்பு பல இடங்களில் நயமுடன் அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

**சிந்து கங்கை நீர் சேர்ந்து வளம்படும்**
**அந்த மாகும் அவந்தி நன்னாட்டினுள்**
**இந்து சூடிய விஞ்சி வளநகர்**
**உந்து மாளிகை யுஞ்சயினிப் பதி.**

இப்பாடல் உஞ்சையினி நாட்டின் வளத்தையும் பெருமையையும் எடுத்தியம்புகிறது.

### நாககுமாரகாவியம்

- நாககுமார காவியம் அல்லது நாகபஞ்சமி கதை எனப்படும் இந்நூல், தமிழில் தோன்றிய சிறு காப்பியங்களில் ஒன்றாகும். இதை எழுதியவர் யாரெனத் தெரியவில்லை. 170 விருத்தப்பாக்களால் ஆன இந்நூல் ஐந்து சருக்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இது சமணசமயக் கொள்கைகளை விளக்க முற்படுகிறது. இளமைக் காலத்தில் இன்பம் துய்ப்பதிலேயே தனது காலத்தைக் கழித்த நாககுமாரன் தனது இறுதிக் காலத்தில் வாழ்வின் நிலையாமையை உணர்ந்து துறவு மேற்கொள்வதே இக்கதை.

- பிறவிச் சூழலில் இருந்து விடுபட்டு முக்தி பெறுவதற்குத் துறவின் இன்றியமையாமையை பற்றி இக்கதை பேசுகிறது.

**திங்கள் முந்நான்கு யோகந் தீவினை யரிய நிற்பர்**
**அங்கபூ வாதி நூலு ளரிப்பறத் தெளிந்த நெஞ்சிற்**
**தங்கிய கருணை யார்ந்த தவமுனி யவர்கள் சொன்ன**
**பொங்குநற் கவிக்க டறான் புகுந்துநீர்த் தெழுந்த தன்றே.**

- தீவினைகள் நீங்கித் தம் நெஞ்சத்தில் கருணை உள்ளவர்களாகத் தவமுனிவர்கள் விளங்குவர் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

**யசோதர காவியம்**

- இந்நூல் யசோதரன் என்ற மன்னரின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கிறது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இது ஐந்து சருக்கங்களையும் 320 பாடல்களையும் கொண்டது. அபயருசி என்பான் ஔதய நாட்டுமாரிதத்தனுக்குத் தம் பழம்பிறப்பு வரலாறு உணர்த்திச் சமண நெறிப்படுத்தியதே இக்காப்பியக் கதை.

- அபயருசி கூறும் அறவுரையின் பயனைக் கீழ்வரும் பாடல் உணர்த்துகிறது.

**பிறந்தவர் முயற்சி யாலே பெறுபய னடைவ ரல்லா**
**லிறந்தவர் பிறந்த தில்லை யிருவினை தானு மில்லென**
**றறைந்தவ ரறிவி லாமை யதுவிடுத் தறநெ றிக்கட்**
**சிறந்தன முயலாப் பண்ணுஞ் செப்புமிப் பொருண்மை**

அபயருசி கூறும் அறவுரையின்படி வாழ்பவர் அதன் பயனாக வீடுபேற்றை அடைவர் என்பது இதன் பொருள்.

**சூளாமணி**

- பெருங்காப்பியத்திற்கு இணையாகப் போற்றப்படுகின்ற சூளாமணியை இயற்றியவர் தோலாமொழித்தேவர். இந்நூல் பன்னிரண்டு காண்டங்களையும், 2131 விருத்தப்பாக்களையும் உடையது. திவிட்டன், விசயன் ஆகிய இருமன்னர்களைப் பற்றிய வரலாற்றைக் கூறும் சூளாமணி ஒரு சமணநூல். திவிட்டனின் தந்தை பயாபதி மன்னன் "உயர்ந்து உலகின் முடிக்கோர் சூளாமணியானான்" என்பதனால் இந்நூலுக்குச் சூளாமணி எனப் பெயர் வழங்கிற்று என்பர்.

- இந்நூல் ஊழ்வினைக் கோட்பாட்டை வலியுறுத்துகிறது. மனித வாழ்வில் உயர்நிலை பெற்றால்தான் சூளாமணியாகத் திகழமுடியும் எனக் கூறுகிறது.

**ஆனைதுரப்ப அரவு உறை ஆழ்குழி**
**நானவிர் பற்றுபு நாலு மொருவனோர்**
**தேனின் அழிதுளி நக்குந் திறத்தது**
**மானுயர் இன்பம் மதித்தனை கொள்நீ**

உலக வாழ்வின் இயல்பு எத்தகையது என்பதை இப்பாடல்வழி அறியலாம்

**நீலகேசி**

- சமணநூலான நீலகேசி குண்டலகேசிக்கு மறுப்புநூலாக இயற்றப்பட்டது. தமிழில் தோன்றிய முதல் தருக்க நூல் இதுவெனக் கூறலாம். இதனை நீலகேசித் திரட்டு என்றும் அழைப்பர். பத்துச் சருக்கங்களையும், 895 விருத்தப்பாக்களையும் கொண்டுள்ளது. பாஞ்சால நாட்டில் நடக்கும் உயிர்க்கொலையை, முனிச்சந்திரர் என்ற சமண முனிவர் தம் தவ வலிமையால் தடுத்தார். அவர் தவத்தைக் பழையனூர் நீலி அரசிபோல் வேடமிட்டு வந்து கலைக்க முயற்சிக்கிறது. ஆனால் அம்முயற்சியில் தோற்ற அவள், அவருக்கே மனைவியாகிறாள். பின்னர் சமண சமயத்தின் உயிர்க் கொள்கையாகிய கொல்லாமையை உலகெங்கும் பரப்புவதோடு, பல சமயத் தலைவர்களையும் வாதில் வென்று சமணத் தலைவியாகிறாள்.

- தெய்வங்களுக்கு உயிர்ப்பலி இடுதல் தீமையே என்பதை நீலகேசி எடுத்துரைக்கிறது. இறைவன் அருளிய அறநெறியில் ஐயுறல் கூடாது; பேராசை தவிர்க்க வேண்டும்; மெய்த்துறவோரை மதித்தல் வேண்டும்; நட்பு, புகழ் இவற்றால் மயங்குதல் கூடாது; பிறர்

குற்றங்களை அகற்ற வேண்டும்; முறை தவறி நடப்பாரைத் திருத்த வேண்டும்; யாவரிடமும் மெய்யான அன்பு செலுத்த வேண்டும்; மாந்தர்தம் அறியாமை போக்க வேண்டும் என்று பல உலக நீதிகளை இந்த நூல் எடுத்துரைக்கிறது.

**ஆடுவோர் காண்பா ரவரருகே தான்சென்று**
**தேர்டுவார்ந் தாலொப்பச் சொல்விரிப்பான் போற்பாவம்**
**கூடுவார் கூடாதார் கொன்றார்தின் றாரென்னும்**
**சேடனார்க் காண்டுநா மென்றுதான் சென்றாளே**

**பிறகாப்பியங்கள்**

**பெருங்கதை**

- வடஇந்தியப் பகுதிகளைக் களமாகக் கொண்டு தமிழ்ச் சாயலோடு படைக்கப்பெற்ற முதல் தமிழ்ச் சாயலோடு படைக்கப்பெற்ற முதல் தமிழ்க் காப்பியம் பெருங்கதை. இக்காப்பியத்தை இயற்றியவர் கொங்குவேளிர். உதயணன் என்னும் காவியத் தலைவனின் வாழ்க்கையை விவரித்துச் சொல்கிறது இந்நூல், இதற்குக் கொங்குவேள் மாக்காதை, உதயணன் கதை என்ற வேறு பெயர்களும் உள்ளன.

- குணாட்டியர் என்பவர் பிருகத்கதா எனும் நூலைப் பைசாச மொழியில் இயற்றினார். இக்காப்பியமே பெருங்கதையின் மூல நூலாகக் கருதப்படுகிறது. பெருங்கதை சமண சமயக் காப்பியமாகும். இந்நூல் ஆறு காண்டங்களை உடையது.

- உதயணன் செல்லும் வழியிலுள்ள நருமதை என்னும் பேராற்றின் எழில் இங்கு அழகாகக் காட்டப்படுகின்றது.

**கல்லுட் பிறந்த கழுவாக் கதிர்மணி**
**மண்ணுட் பிறந்த மாசறு பசும்பொன்**
**வேயுட் பிறந்த பொதியவி ழுருநெல்**
**மருப்பினுட் பிறந்த மண்ணா முத்தம்**
**வரையிற் பிறந்த வயிரமொடு வரன்றி**

- நர்மதை என்னும் ஆறானது ஒளிபொருந்திய மணி, பொன், முத்து, நெல், வைரம் என அனைத்தையும் தன்னுள் கொண்ட வளமுடையது என்பதை இப்பாடல் நிறுவுகிறது.

**காப்பியச் சுருக்கம்**

- உதயணனின் தாய் கருவுற்று இருந்தபோது, சரபம் என்னும் ஒரு பறவை அரண்மனையில் இருந்து அவளைத் தூக்கிச் சென்று விபுலாசலம் என்னும் இடத்தில் போட்டுவிட்டுச் செல்கிறது. அங்கே உதயணன் பிறக்கிறான். இதிலிருந்து, உதயணன் வீரதீரச் செயல்கள், அரசனாதல், பல பெண்களை மணத்தல், துறவு பூணுதல் வரையான கதையைக் கூறுகிறது இக்காப்பியம், ஆசிரியப்பாவின் நேர்த்தியான வடிவமைப்பில் பல கருத்துகளைச் செம்மையாக ஆசிரியர் பேசியுள்ளார். நுணுக்கமான கலைத் திறன்கள் விளக்கப்பட்டிருப்பது போல ஆட்சித் திறனுக்கு அவசியமான கருத்துகளும் கூறப்பட்டிருப்பது இந்நூலின் சிறப்பு.

**கம்பராமாயணம்**

- தமிழில் தொடர்ச்சியாகச் செல்வாக்குப் பெற்று விளங்கும் காப்பியங்களுள் ஒன்றாகத் திகழ்வது கம்பராமாயணம். இது கம்பரால் இயற்றப்பட்டது. வடமொழியில் வான்மீகி இயற்றிய இராமாயணத்தைத் தழுவி எழுதப்பட்டது. இந்நூல். வழி நூலாயினும் கம்பர் தமக்கே உரிய நடையில் கருப்பொருள் சிதையாமல் இயற்றியுள்ளார். கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இட்ட பெயர் இராமாவதாரம். இராமனின் வரலாற்றைக் கூறும் நூலாதலின் இராமாயணம் எனப்பட்டது. இதன் காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு.

- கம்பராமாயணம் பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களை முழுமையாகப் பெற்றது. சொற்சுவையும் பொருட்சுவையும் கொண்டு தமிழ்ப்பண்பாட்டோடு இயைந்து விளங்குவது. கம்பராமாயணம் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களையும், 118 படலங்களையும் உள்ளடக்கியது. இக்காப்பியத்தின் ஏழாவது காண்டமாக விளங்கும் உத்தர காண்டத்தினை எழுதியவர் கம்பரின் சமகாலத்தவராகிய ஒட்டக்கூத்தர்.

- இந்நூலின் சிறப்பு கருதியும் திருக்குறளின் பெருமை கருதியும் இவ்விரு நூல்களையும் "தமிழுக்குக் கதி" (கம்பராமாயணம், திருக்குறள்) என்று திருமணம் செல்வக் கேசவராயர் கூறியுள்ளார்.

**காப்பியச்சுருக்கம்**

- அயோத்தி நகரத்து அரசனான தசரதனுக்கு இராமன், பரதன், இலக்குவன், சத்ருக்கன் ஆகிய நான்கு பிள்ளைகள் பிறப்பதும், இராமன் வில்லை வளைத்துச் சீதையை மணம் முடிப்பதும் பால காண்டத்தில் கூறப்படுகிறது.

கைகேயி கெட்ட இரண்டு வரங்களால் இராமன் காடடைவது அயோத்தியா காண்டத்திலும், இராவணன் சீதையைக் கவர்ந்து செல்வது ஆரணிய காண்டத்திலும், சீதையைத் தேடிச் செல்லும் இராமன் வாலியைக் கொன்று சுக்ரீவன், அனுமன் நட்பைப் பெறுவது கிட்கிந்தா காண்டத்திலும், இராமனைப் பிரிந்த சீதையின் நிலை, அனுமனின் ஆற்றல் ஆகியன சுந்தர காண்டத்திலும் இராவணனை அழித்து சீதையை மீட்பது யுத்த காண்டத்திலும் விளக்கப்படுகின்றன.

இறைவனின் தன்மையினைக் கம்பர் கூற வந்த விடத்து,

**சாணினும் உளன் ஓர்தன்மை அணுவினைச் சதகூறு இட்ட**
**கோணினும் உளன் மாமேருக் குன்றினும் உளன் இந்நின்ற**
**தூணினும் உளன் நீசொன்ன சொல்லினும் உளன் இத்தன்மை**
**காணுதி விரைவின் என்றான் நன்றெனக் கனகன் சொன்னான்**

- என்னும் பாடல் வழியாக, இறைவன் உலகிலுள்ள எல்லாப் பொருள்களிலும் நீக்கமற நிறைந்திருப்பதாகக் கூறுகின்றார்.

**பெரியபுராணம்**

- பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணம் பெருங்காப்பிய இலக்கணங்கள் பொருந்தியும் சில நிகழ்ச்சிகளை உள்வாங்கியும் இயற்றப்பெற்ற சைவக் காப்பியமாகும்.

- சுந்தரர் எழுதிய 'திருத்தொண்டத்தொகை' நம்பியாண்டார் நம்பி எழுதிய 'திருத்தொண்டர் திருவந்தாதி' ஆகிய நூல்களை முதல் நூலாகக் கொண்டு இந்நூல் இயற்றப்பட்டது.

- இது 63 அடியார் பெருமக்களை மையமாகக் கொண்டு திகழ்கின்றது. இந்நூல் பெரும் பிரிவாக இரண்டு காண்டங்களையும், உட்பிரிவாக 13 சருக்கங்களையும் உடையது. இது சைவத்திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் சேக்கிழார். இவரின் இயற்பெயர் அருண்மொழித்தேவர்.

- ஆண் பெண் வேறுபாடின்றிப் பல இனங்களையும், தொழில் பிரிவுகளையும் சார்ந்த சிவனடியார்களைப் பற்றிய நூலாக அமைந்துள்ளதால் இந்நூலைத் தேசிய இலக்கியம் என்று சான்றோர்கள் பாராட்டுவர்.

அடியவர்களின் பெருமையைக் கூற கருதிய சேக்கிழார்,

**பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்**
**ஒருமையால் உலகை வெல்வார் ஊனமேல் ஒன்றும் இல்லார்**
**அருமையாம் நிலையில் நின்றார் அன்பினால் இன்பம் ஆர்வார்**
**இருமையும் கடந்து நின்றார் இவரைநீ அடைவாய் என்று**

என்ற பாடல்வழியே இறைவனின் மெய்யன்பினைப் பெற்றவர்கள் இம்மை மறுமைகளைக் கடந்து இனிய நிலையைப் பெறுவார்கள் எனக் கூறுகிறார்.

**காப்பியச்சுருக்கம்**

- சுந்தரரைக் காப்பியத் தலைவராகக் கொண்டு இந்நூல் அமைகின்றது. சுந்தரரின் சிறப்பு. சைவ அடியார்களின் சிறப்பு, சிவபெருமானின் அருள்திறம், அடியார்களின் வரலாறு, அவர்கள் கடைபிடித்த தொண்டு நெறி, இறைவன் அவர்களை ஆட்கொண்ட விதம், அடியார்கள் இறைவனை வழிபட்டு முக்தி பெற்ற தன்மை ஆகியன இந்நூல் முழுதும் எடுத்துக் கூறப்படுவதால் சேக்கிழார் இந்நூலிற்குத் திருத்தொண்டர் மாக்காதை எனப் பெயரிட்டார். செயற்கரிய செயல் புரிந்த அடியார்களின் சிறப்பினை உரைப்பதால் இதனைச் சான்றோர்கள் பெரியர் புராணம் என்று கூற, காலப் போக்கில் இந்நூல் பெரியபுராணம் என்று வழங்கப்பட்டது.

**இருபதாம் நூற்றாண்டுக் காப்பியங்கள்:**
பழங்காப்பிய மரபைப் பின்பற்றிய காப்பியங்களும், புதுக்கவிதை போன்ற புதிய மரபைப் பின்பற்றிய காப்பியங்களும் இருபதாம் நூற்றாண்டில் படைக்கப்பட்டன.
பாரதியின் பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு, பாரதிதாசனின் பாண்டியன் பரிசு, புரட்சிக்கவி, வீரத்தாய் போன்றன இவ்வகையில் அடங்குவன. கவிமணி தேசிய விநாயகம் எழுதிய மருமக்கள் வழி மான்மியம், கண்ணதாசனின் ஆட்டனத்தி ஆதிமந்தி, இயேசு காவியம், மாங்கனி, முடியரசனின் பூங்கொடி, வீரகாவியம், கவியோகி சுந்தானந்த பாரதியின் பாரதசக்தி மகாகாவியம், சாலை இளந்திரையனின் சிலம்பின் சிறுநகை, புலவர் குழந்தையின் இராவண காவியம் போன்ற காப்பியங்கள் பழங்காப்பிய மரபைப் பின்பற்றி படைக்கப்பட்டவை. யாப்பு வடிவத்தை உடைத்து வளர்த்தெடுக்கப்பட்ட புதுக்கவிதைகளிலும் காப்பியங்கள் தற்காலத்தில் படைக்கப்படுகின்றன. பாரதியின் வாழ்க்கை வரலாற்றைப் புதுக்கவிதை வடிவில் கவிராஜன் கதை என்னும் பெயரில் காப்பியமாகப் படைத்துள்ளார். வைரமுத்து, கவிஞர் வாலி இராமயணத்தை அவதார புருஷன் என்ற பெயரிலும், மகாபாரதத்தை பாண்டவர் பூமி என்ற பெயரிலும் புதுக்கவிதை வடிவில் காப்பியமாக்கியுள்ளார்.

## சமய இலக்கியங்கள்

**பக்திமை – விளக்கம்**

- கடவுளை வணங்குதல், கடவுளிடம் தன்னை அர்ப்பணித்தல் என்னும் பொருளில் இன்று ‘பக்தி’ என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. கடவுளின் மீது மனிதன் கொண்ட நம்பிக்கையைப் பக்தி என்பர். பக்தியால் அன்பு பெருகி உயிர் தூய நிலையை அடைகிறது. கடவுளின் மீது மனிதன் கொண்டுள்ள எல்லை கடந்த அன்பே ‘பக்தி’ என்ற பொருளில் தமிழிலக்கியங்களில் மிகுதியும் கையாளப்படுகின்றது.

**பக்தி இலக்கியங்களின் தோற்றம்:**

- பக்தி இலக்கிய காலத்தில் இயற்றமிழ்ப் பாடல்கள் பண்ணோடு இணைந்து இசைத் தமிழ்ப்பாடல்களாக மாறின. கற்றோர் நாவில் மட்டும் நடனமாடிய தமிழ், கல்லாதார் நெஞ்சிலும் களிநடனம் புரிந்தது. வடமொழிச் சொற்களும் தமிழுடன் இணைந்து புதிய மரபு தோன்றியது. சொல் வளமும் உணர்ச்சிப் பெருக்கும். இசை இனிமையும் சேர்ந்து தமிழ் இலக்கியம் புது மெருகு பெற்றது. இந்த எழுச்சிக்கு ஆதரவளித்த பல்லவர் ஆட்சிக்காலம் பக்தி இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்காலம் எனப்படுகிறது. பக்தி இயக்கத்தால் தமிழகத்தில் தமிழுக்கு மீண்டும் புதுப்பொழிவு ஏற்பட்டது.

- இக்காலத்தில் எழுந்த பக்தி இலக்கியங்கள் தனித்தனிப் பாடல்களாகவும் பிரபந்தங்களாகவும் வெளிப்பட்டன.

- சங்க இலக்கியத்தில் மாந்தரின் காதல் வாழ்வு கற்பனை கலந்த பாடல்களாகப் பாடப்பட்டது. பின்னர் இந்நிலை மாறி, தெய்வத்தின் மீது கொண்ட காதலைப் பாடும் பாடல்களாக வளர்ச்சிபெற்றன. அரசர்களின் வீரம் மற்றும் கொடைகளைப் பாடிய பாடல்கள், கடவுளின் திருவிளையாடல்களையும் அருட்செயல்களையும் பாடும் பாடல்களாக மாறின. கற்பனைக் காதலுக்குப் பின்னணியாக இயற்கைச் சூழல் வருணிக்கப்பட்டது போலவே கடவுளிடம் செலுத்தும் பக்திக்குப் பின்னணியாகக் உடம்பு,பொருள், இளமை ஆகியன நிலையாக நில்லாமல் மறைந்துவிடக் கூடியன; இவற்றை உணர்ந்து அறத்தைச் செய்பவனாக மனிதன் மாறவேண்டும்" என்று வலியுறுத்தின. சமயப் பெரியோர் அருளுணர்வுடையோராகவும் பண்பாடு மிக்கவராகவும் இருந்தனர்.

- மேலும், "பிறவா நிலையை அடைவதற்குத் துறவறமே சிறந்த வழி" என்ற அறவியல் கருத்து நிலவியது. உலகில் உள்ள நிலையில்லாத இன்பங்களை ஒதுக்கி, நிலையான வீடுபேற்றை நாடுவதே கடமை என்று கருதும் நிலை உருவானது.

- இச்சூழலில், நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி "உலக இன்பங்களைத் துயத்தவாறே இறைவனிடத்தில் பக்தி செலுத்தலதலாம்; இறைவன் அன்பின் வடிவானவன்; அன்பு ஒன்றே அவனை அடையும் வழி" என இல்லறத்திற்கும் முதன்மை கொடுத்தனர். ஊர்கள் தோறும் கோவில்களுக்குச் சென்று இசைப்பாடல்களால் மனமுருக இறைவனைப் பாடிப் பரவினர். அப்பாடல்கள், கற்றவர்களோடு மற்றவர்களம் கூடிப் பாடுமாறு எளிய இனிய தமிழில் இருந்தன. இறைவனை, ஆண்டாள், தந்தை, தோழன், நாயகன் என பல பரிமாணங்களில் கண்டு போற்றினர். இவற்றையே தாச, சற்புத்திர, சக, ஞான மார்க்கங்கள் என்று குறிப்பிடுகின்றனர்.

- திருநாவுக்கரசர், குலசேகராழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் போன்றோர் அடிமை நெறியையும், திருஞான சம்பந்தர் பிள்ளைமை நெறியையும்,

- சுந்தரர், திருமழிசையாழ்வார் போன்றோர் தோழமை நெறியையும், மாணிக்கவாசகர், திருமங்கையாழ்வார் போன்றோர் நாயகன் நாயகி நெறியையும் பின்பற்றினர். பெரியாழ்வார் இறைவனைக் குழந்தையாக் கருதி தாலாட்டுப் பாடல்கள் பல பாடியுள்ளார். அவர்தம் வளர்ப்பு மகளான ஆண்டாள் இறைவனையே தன் தலைவனாகப் பாவித்து வாழ்ந்தாள்.

- சிவனைத் தலைவனாகக் கொண்ட 27 அடியார்கள் பாடிய பதிகங்கள் பன்னிரு திருமுறைகள் என்றும், திருமாலைத் தலைவனாகக் கொண்ட 12 ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் என்றும் அழைக்கப்பட்டன.

- முகலாயப் படையெடுப்பின் காரணமாகத் தமிழகத்தில் இசுலாம் பரவியது. இசுலாமியக் கவிஞர்கள் தமிழ்மரபினைப் பின்பற்றி இறைவனையும், இறைவனின் திருத்தூதரான நபிகள் நாயகத்தையும் போற்றிப் பரவினர். இசுலாமியப் பாடல்கள் மொழிபெயர்ப்புப் பாடல்களாகவும், நேரடிப் பாடல்களாகவும் இருவகைகளில் பாடப்பெற்றன.

- பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் மேலைநாட்டவர் பெருமளவில் தமிழகத்திற்கு வருகைபுரிந்தனர். அவர்களுள் கிறித்துவ மதபோதகர்களும் அடங்குவர். அவர்கள், பன்மொழிப் புலமையும் பல்துறை அறிவும் மிக்க தமிழ்மக்களிடம் இரண்டறக்கலந்து தமிழைக் கற்றனர். தமிழின்வழி தங்கள் சமயக் கருத்துகளைப் பரப்பினர். இதன் விளைவாக கிறித்துவ இலக்கியங்களும் தமிழில் பல்கிப்பெருகின.

| பன்னிரு திருமுறைகள் | | |
|---|---|---|
| **திருமுறைகள்** | **நூல்கள்** | **ஆசிரியர்கள்** |
| முதல் திருமுறை<br>இரண்டாம் திருமுறை<br>மூன்றாம் திருமுறை | தேவாரம் | திருஞானசம்பந்தர் |
| நான்காம் திருமுறை | தேவாரம் | திருநாவுக்கரசர் |

| | | |
|---|---|---|
| ஐந்தாம் திருமுறை<br>ஆறாம் திருமுறை | | |
| ஏழாம் திருமுறை | தேவாரம் | சுந்தரர் |
| எட்டாம் திருமுறை | திருவாசகம்,<br>திருக்கோவையார் | மாணிக்கவாசகர் |
| ஒன்பதாம் திருமுறை | திருவிசைப்பா,<br>திருப்பல்லாண்டு | திருமாளிகைத்தேவர்<br>உள்ளிட்ட ஒன்பது பேர் |
| பத்தாம் திருமுறை | திருமந்திரம் | திருமூலர் |
| பதினொராம் திருமுறை | 40 நூல்களின் தொகுப்பு | காரைக்காலம்மையார்<br>உள்ளிட்ட பன்னிரண்டு பேர் |
| பன்னிரண்டாம் திருமுறை | திருத்தொண்டர் புராணம்<br>(பெரிய புராணம்) | சேக்கிழார் |

**சைவம்**

- திருநாவுக்கரசர் சிவபெருமானிடம், இப்பிறப்பு மட்டுமல்லாமல் எப்பிறப்பிலும் உனக்கு நான் அடிமை; நின் திருநாமமே எனது படைக்கலம் எனக் குறிப்பிடுவதைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

**படைக்கல மாவுகன் நாமத் தெழுத்தஞ்சு என் நாவிற்கொண்டேன்;**
**இடைக்கல மல்லேன்; எழுபிறப்பும் உனக்காட் செய்கின்றேன்;**
**துடைக்கினும் போகேன்; தொழுது வணங்கித் தூநீறணிந்துன்**
**அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச் சிற்றம் பலத்தரனே!**

- **பாடல் பொருள்:** அழகிய தில்லை நகரிலுள்ள சிற்றம்பலத்தில் உள்ள பெருமானே! என்னை அறிவிலார் செய்கின்ற தீங்குகளிலிருந்து பாதுகாக்கும் படைக்கருவியாக உன் திருநாமமாகிய திருவைந் தெழுத்தினை அடியேன் நாவினில் நீங்காது கொண்டுள்ளேன். ஒருபோதும் உனக்கு அடிமைத் தொண்டு செய்தலைத் தவிர்ந்தேன் அல்லேன். எடுக்கும் பிறவிகள் எதுவாக இருந்தாலும் அதற்கேற்ப உனக்கு அடிமைத் தொண்டு செய்கிறேன். அடியேனை நீ விலக்கினாலும் அடியேன் உன்னை விட்டுப் பிரியேன். எப்பொழுதும் உன்னை மனத்தால் தொழுது உடலால் வணங்கித் திருநீறு அணிந்து உன்னால காக்கப்பட வேண்டிய பொருளாக அடியேன் இருக்கிறேன்.

- தன்னைச் சரணடைந்த அடியவர்களைக் காத்தருளும் தயாளனாக இறைவன் விளங்குவதை அற்புதத்திருவந்தாதியில் காரைக்காலம்மையார் எடுத்துக்கூறுகிறார்.

**இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான் தோற்றி**
**இறைவனே ஈண்டு இறக்கம் செய்வான் - இறைவனே**
**எந்தாய் என இரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்**
**வந்தால் அதுமாற்று வான்.**

**பாடல் பொருள்:** இறைவனே எவ்வுயிரையும் தோற்றுவிப்பவன். உயிர்களைக் காத்து அருள்பவனும் அவனே. இறைவனையே தன் தந்தை எனப் போற்றிப்பரவும் அடியவர்களுக்கு எவ்வுளவு கொடிய துயரம் வரினும் அதை உடனே மாற்றிவிடுவானும் அவ்விறைவனே,

**வைணவம்**

- நாராயணனாகிய திருமாலின் பெயரை அன்போடு உச்சரிப்பதால் அடியவர்கள் எய்தும் நன்மையை பூதத்தாழ்வார் பின்வரும் பாடலால் உணர்த்துகிறார்.

**ஞானத்தால் நன்குணர்ந்து நாரணன்றன் நாமங்கள்**
**தானத்தால் மற்றவன் பேர் சாற்றினால் - வானத்**
**தணியமர ராக்குவிக்கு ம.்.தன்றே நாங்கள்**
**பணியமரர் கோமான் பரிசு**

**பாடலின் பொருள்:** ஞானத்தால் நன்றாக உணர்ந்து திருமாலின் திருப்பெயர்களை அன்பின் உச்சியில் நின்று சொன்னால், தேவருலகிற்கு அணியாகவுள்ள இறைவனோடு என்றும் உடன் உறைபவர்கள் போலே நம்மை இறைவன் ஆக்குவான்.

- ஆண்டாள் அருளிச்செய்த நாச்சியார் திருமொழிப் பாசுரங்களைப் பாடும் அடியவர்கள் துன்பம் நீங்கப்பெறுவர் என்பதைக் கீழ்வரும் பாடல் கூறுகிறது.

**அல்லல் விளைத்த பெருமானை ஆயர் பாடிக் கணிவிளக்கை**
**வில்லிப் புதுவை நகர்நம்பி விட்டு சித்தன் வியன்கோதை**
**வில்லைத் தொலைத்த புருவத்தாள் வேட்கை யுற்று மிகவிரும்பும்**
**சொல்லைத் தூதிக்க வல்லார்கள் துன்பக் கடவுள் துவளாரே**

**பாடல் பொருள்:** வில்லிப்புத்தூர் நகர் விஷ்ணு சித்தன் என்ற பெரியாழ்வாரின் மகள் கோதை. வில் போன்ற அழகிய புருவத்தை உடையவள். கொடியவர்களுக்குத் துன்பம் விளைவித்த பெருமானை, ஆயர்பாடிக்கு அழகான விளக்காகத் திகழும் கண்ணனைப் புகழ்ந்து இவள் பாடிய பாசுரங்களைப் பாடிப்பரப்பரவுவோர் துன்பமாகியக் கடலுள் மூழ்கித் துவள மாட்டார்கள்.

**பன்னிரு ஆழ்வார்கள்**

| வரிசை எண் | ஆழ்வார்கள் | நூல்கள் |
|---|---|---|
| 1 | பொய்கையாழ்வார் | முதல் திருவந்தாதி |
| 2 | பூதத்தாழ்வார் | இரண்டாம் திருவந்தாதி |
| 3 | பேயாழ்வார் | மூன்றாம் திருவந்தாதி |
| 4 | திருமழிசையாழ்வார் | நான்காம் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் |
| 5 | நம்மாழ்வார் | திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி |
| 6 | குலசேகராழ்வார் | பெருமாள் திருமொழி |
| 7 | தொண்டரடிப் பொடியாழ்வார் | திருமலை, திருப்பள்ளியெழுச்சி |
| 8 | பெரியாழ்வார் | திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி |
| 9 | ஆண்டாள் | நாச்சியார் திருமொழி, திருப்பாவை |
| 10 | திருப்பாணாழ்வார் | திருப்பதிகம் |
| 11 | திருமங்கையாழ்வார் | பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் |
| 12 | மதுரகவியாழ்வார் | திருப்பதிகம் |

**சமணம்**

- அனைத்துவிதமான சிறந்த குணங்களைச் செல்வமெனக் கொண்டு மூவுலகும் போற்ற அழிவற்ற இன்பம் நல்கும் தேவாதி தேவனின் திருவடியைப் போற்றுவோம் என்று சமண சமயக் காப்பியமான சீவகசிந்தாமணியில் திருத்தக்கதேவர் குறிப்பிடுகிறார்.

மூவா முதலா உலகம் ஒரு மூன்றும் ஏத்தத்
தாவாத இன்பம் தலை யாயது தன்னின் எய்தி
ஓவாது நின்ற குணத்தொண்ணிதிச் செல்வனென்ப
தேவாதி தேவன் அவன் சேவடி சேர்தும் அன்றே!

**பாடல் பொருள்:** மூன்று உலகமும் ஏத்தும் தன்மையன்; பேரின்ப வடிவினன்; உயர் குணங்கள் அனைத்தும் தாங்கியவன்; தேவர்களுக்கு எல்லாம் முதன்மையானவன்; அவன் திருவடிகளை வணங்கிப் போற்றுவோமாக.

**பௌத்தம்**

- மணிமேகலை, பௌத்த சமயக் கருத்துகளைப் பரப்பும் சிறந்ததோர் நூலாக விளங்குகிறது. இது காமம், வெகுளி, மயக்கம், என்னும் மூன்று குற்றங்களையும் நீக்கும் தூய அறிவுமிக்க நூலை அருளிய புத்தரைப் போற்றுகிறது.

**முரணாத் திருவற மூர்த்தியை மொழிவோன்**
**அறிவு வறிதா உயிர்நிறை காலத்து**
**முடிதயங்கு அமரர் முறைமுறை இரப்பத்**
**துடித லோகம் ஒழியத் தோன்றிப்**
**போதி மூலம் பொருந்தி இருந்து**
**மாரனை வென்று வீரன் ஆகிக்**
**குற்றம் மூன்றும் முற்ற அறுக்கும்**
**வாமன் வாய்மை ஏமக் கட்டுரை**
**இறந்த காலத்து எண்ணில்புத் தர்களும்**
**சிறந்துஅருள் கூர்ந்து திருவாய் மொழிந்தது**

**பாடல் பொருள்:** நல்லறிவின்றி மக்கள் பூமியில் நிரம்பியிருந்த காலத்தில்; தேவர்கள் புத்தரை வணங்கி நிலவுலகில் தோன்றி அறங்கூற வேண்டுமென வேண்டினர். புத்தர் துடித லோகத்தை விட்டு நீங்கி மண்ணுலகில் தோன்றி; புத்த கயை யென்னுமிடத்தே அரசமரத்தினடியில் எழுந்தருளினார். மாரனென்னும் தேவனை வென்றதனால் வீரனாக விளங்கியவர், மூவகைக் குற்றங்களையும் முழுமையாக ஒழிப்பவர் புத்த தேவன். அவர் மெய்ம்மை நிறைந்ததும் உயிர்கட்குப் பாதுகாப்பாக எடுத்தோதியதும்; உயிர்கள் பால் மிக்க அருள் பூண்டு; மறவாது நிலைபெற வற்புறுத்தப்பட்டதுமாகிய அறம் ஈண்டு யான் கூறலுறுவது என முன்பின் மாறுபாடில்லாத அறங்களின் வடிவாகிய புத்ததேவன் வரலாற்றினைச் சுருங்கக் கூறலுற்றார் அறவணன்.

**இசுலாம்**

- சீறாப்புராணத்தில் உமறுப்புலவர் முகம்மது நபிகளின் அருளில் ஆட்பட்டு பக்திமை தோன்ற வியந்து போற்றுகின்றனர்.

**திருவினுந் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்**
**தெளிவினுந் தெளிவதாய்ச் சிறந்த**
**மருவினு மருவா யணுவினுக் கணவாய்**
**மதித்திடாப் பேரொளி யனைத்தும்**
**பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்**
**பூதலத் துறைந்த பல் லுயிரின்**
**கருவினுங் கருவாய்ப் பெருந்தலம் புரந்த**
**கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.**

**பாடல் பொருள்:** மேன்மையிலும், மேன்மையாய், உண்மையிலும் உண்மையாய், அறிவிலும் அறிவாய்ச், சிறப்பினை யுடைய நறுமணத்தினும் நறுமணமாய், அணுவுக்கும் அணுவாய்க், கணிக்கக் கூடாத பெரிய பிரகாச முழுவதும் ஒப்பிலும் ஒப்பாய் உருவிலும் உருவாய்ப் பூமியினிடத்துத் தங்கியபல ஜீவ ராசிகளின் கருவிலுங் கருவாய்ப் பெரிய உலகத்தை ஆட்சி செய்கின்ற கர்த்தாவாகிய அல்லாவை இருதயத்தின்கண் பொருந்தச் செய்வது கருத்தாகும்.

**சமயங்களின் பொதுநீதி**
நிலத்தின் கடினத்தன்மையை இளக்கி நெகிழ்ச் செய்து பயன்படு பொருள்களின் விளைவுக்குத் தகுதியாக்குவது உழவு. சுவையுடையனவாக, ஆனால் ஒன்றோடொன்று மாறுபட்ட சுவையுடையனவாகிய பொருள்களைச் சுவைத்தற்குரிய சுவையுடையனவாக ஆக்குவது சமைத்தல். மனித உள்ளங்களை இன்ப அன்பின் விளைநிலமாகத் தகுதிப்படுத்திப் பக்கவப்படுத்தும் தத்துவத்திற்கு, வாழ்க்கை முறைக்குச் சமயம் என்று பெயர். மனித வாழ்க்கையைச் சமைத்துப் பக்குவப்படுத்துவதே சமயத்தின் நோக்கம்.
குன்றக்குடி அடிகளார்

**கிறித்துவம்**

- இயேசு பெருமான் மனிதகுலத்தின் உயர்வுக்காக உயிர் நீத்த திருச்சிலுவை,கிறித்தவ நம்பிக்கைக்கு அடிப்பாடையாக விளங்குகிறது. சிலுவையில் அறையப்பட்ட போதும் பகைவர்க்கு அருளிய இயேசுவே உலக இரட்சகர்; இதற்கு வேறு சான்றுகள் வேண்டுமோ? என அன்பு மேலிடும் இரட்சணிய யாத்திரிகப் பாடல் வழியே எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை வினவுகிறார்.

**கீண்டிருப்பு முளையுடலைக் கிழித்துருவி வதைப்புண்டு**
**மாண்டுபடும் போதிவர்க்கு மன்னியுமென் றுரைத்தமொழி**
**ஈண்டிவரே உலகினுக்கோர் இரட்சகரென் றெடுத்துரைக்கும்**
**வேண்டுமோ இனிச்சான்றும் இதைவிடுத்து வேறொன்றே?**

**பாடல் பொருள்:** இரும்பு ஆணிகளால் உடலைத் துண்புறுத்தி சிதைத்தபோதும்,''இச்செயலைச் செய்தோரை மன்னித்தருளும் ஆண்டவரே'' என வேண்டிய இயேசுவே உலகைக் காக்க வந்த பெருமானாவார். பகைவர்க்கும் அருளிய இவ்வுயிரிரக்கப் பண்பு ஒன்றே இவர் இவ்வுலகைக் காக்க வந்தவர் என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமோ?

- தமிழில் தோன்றிய சமய இலக்கியங்கள் பலவாயினும் அவற்றின் நோக்கம், மனித மனங்களைப் பக்குவப்படுத்தி அன்பின் வழி செலுத்துதலே ஆகும்.

## சிற்றிலக்கியங்கள்

### சிற்றிலக்கியங்கள் - ஓர் அறிமுகம்

- தமிழ் இலக்கியங்கள் பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என இரு வகைப்படும். பாட்டுடைத் தலைவனின் வாழ்வில், சிறுகூறினை மட்டும் எடுத்துக்கொண்டு அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்னும் நான்கு உறுதிப்பொருள்களுள் ஒன்று அமையப்பாடுவது சிற்றிலக்கியம். இது தொண்ணூற்றாறு வகைப்படும். அவற்றுள், அந்தாதி, கலம்பகம், பரணி, கோவை, சதகம், பிள்ளைத்தமிழ், பள்ளு, குறவஞ்சி, உலா, தூது ஆகியன பெரும்பாலும் வழக்கில் உள்ளன.

### வகையும் தொகையும்

- சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தையும் எண்ணிக்கையையும் பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. ஒவ்வொரு பாட்டியல் நூலும் சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கையைக் கூறுமிடத்து வேறுபடுகின்றன. இருப்பினும் பிரபந்த மரபியல், பிரபந்தத் தீபிகை, சதுரகராதி, தொன்னூல் விளக்கம் ஆகியன 96 எனக் குறிப்பிடுகின்றன.

**அந்தாதி:**

- ஒரு பாடலின் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அடுத்த பாடலின் அல்லது அடுத்த அடியின் தொடக்கமாகக் கொண்டு பாடப்படுவது அந்தாதி. (அந்தம் + ஆதி; அந்தம் - இறுதி; ஆதி – தொடக்கம்) இது ''சொற்றொடர்நிலை'' எனப் பெயர்பெறும்.

### அருணகிரி அந்தாதி

**செப்பரிய ஞானச் செழுஞ்சுடரே சோணகிரி**
**அப்பனே நன்னூல் அறிந்தாலும் - இப்புவியில்**
**கொண்டகுரு வைப்பொருளாக் கொள்ளார் பயனேது?**
**கண்டவெல்லாம் வீணிலே கற்று.**

**கற்றதனால் தொல்லைவினைக் கட்டறுமோ? நல்லகுலம்**
**பெற்றதனால் போமோ பிறவிநோய் - உற்றகடல்**
**நஞ்சுகந்து கொண்டருணை நாதரடித் தாமரையை**

நெஞ்சுகந்து கொள்ளா நெறி.

- (மேற்கண்ட இரு பாடல்களில், முதல் பாடலின் இறுதிச் (அந்தம்) சீராகிய கற்று என்பது, அடுத்த பாடலின் முதல் (ஆதி) சீராக அமைந்து அந்தாதித் தொடையாக வந்துள்ளது)

**பாடல் விளக்கம்:** உலகில் நல்ல பல நூல்களைத் தெளிவாகக் கற்றுத் தேர்ந்தாலும், தனக்குக் கிடைத்த குருநாதரை மதியாதவருக்கு யாதொரு பயனுமில்லை. ஈட்டிய செல்வங்களும், துய்த்த இன்பங்களும் எவ்விதப் பயனுமின்றி வீணே கெட்டழியும். எனவே, சொல்லுதற்கு அரிய அறிவுப்பொருளாகவும் சுடராகவும் தந்தையாகவும் விளங்கும் அருணகிரியில் (திருவண்ணாமலை) கோவில் கொண்டுள்ள அண்ணாமலை அண்ணமலைக் குருவாகப் போற்றி வாழ்வாயாக.

- இறைவன் பாற்கடலில் எழுந்த நஞ்சினைத் தனது கண்டத்தில் தனது கண்டத்தில் அடக்கிய கருணையாளன். அவனது திருவடியாகிய அருளை நெறியாகக் கொண்டு வாழ வேண்டும். அவ்வாறில்லாமல், எவ்வுளவுதான் கற்றாலும், நல்ல குலத்திலே பிறந்தாலும் வினைகள் நீங்கிவிடுமா? இல்லையே!

**<u>கலம்பகம்:</u>**

- அம்மானை, கார், ஊசல், கைக்கிளை, புயவகுப்பு முதலான பதினெட்டு உறுப்புகள் அமையப் பாடப்படுவது கலம்பகம் (கலம் - பன்னிரண்டு; பகம் - ஆறு). அவற்றுள் ‘அம்மானை’ என்பது மகளிர் விளையாடும் விளையாட்டுகளில் ஒன்று. பாட்டுடைத் தலைவனின் புகழை ஒரு பெண் புகழ்ந்து பாட, மற்றொரு பெண் அது தொடர்பான ஒரு வினா கேட்டு, மூன்றாம் பெண் ஒரு கருத்தைக் கூறி அதை முடிப்பது அம்மானை.

**திருக்காவலூர்க் கலம்பகம்**

**சீர்த்ததிருக் காவல்நல்லூர்த் தேவஅணங்கு தாள்கமலம்**
**நீர்த்ததிருத் திங்கள்மேல் நின்றனகாண் அம்மானை**
**நீர்த்ததிருத் திங்கள்மேல் நின்றனஎன்று ஆம்ஆகில்**
**ஆர்த்ததிரு வண்டு உவப்ப ஆங்கு அலரா அம்மானை**
**போர்த்ததிருச் சோதிஇன்புஅப் போது அலரும் அம்மானை**

**பாடல் விளக்கம்:**

**முதல் பெண் கூறுவது:**

- பெருமைமிக்க செல்வமுடைய திருக்காவலூரின் தெய்வப் பெண் அடைக்கல அன்னை. அவள் திருவடிகளாகிய தாமரை மலர்கள் குளிர்ந்த நிலவின்மீது பொருந்தி உள்ள அதிசயத்தைப்பார்.

**இரண்டாம் பெண் வினாவுதல்:**

- “நிலவில் அன்னையின் தாமரை போன்ற திருவடி பொருந்தி உள்ளது” என நீ கூறுகின்றாய். அது உண்மை. ஆனால் நிலவு உள்ள இடத்தில் தாமரை மலர்கள் மலருமா?

**மூன்றாம் பெண் முடித்தல்:**

- அன்னையின் அருளாகிய,“கதிரவன் நிகர்த்த சோதியின் இன்பத்தில் தாமரைகள் மலர்வது இயல்புதானே” என்று முடிக்கின்றாள்.

**<u>பரணி:</u>**

* போரில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிபெறும் வீரனின்மேல் பாடப்படுவது பரணி. போரில் தோற்ற அரசனது நாட்டின் பெயரால் இந்நூல் வழங்கப்பெறும்.

**தக்கையாகப்பரணி**

**சிரமும் சிரமும் செறிந்தன**
**சரமும் சரமும் தறிப்பவே**
**கனமும் கனமும் கனைத்தன**
**சினமும் சினமும் சிறக்கவே**

**கடையும் கடையும் கலித்தன**
**தொடையும் தொடையும் துரப்பவே**

**தாரும் தாரும் தழைத்தன**
**தேரும் தேரும் திளைப்பவே**

**தோலும் தோலும் துவைத்தன**
**கோலும் கோலும் குளிப்பவே!**

**பாடல் விளக்கம்:** வீரபத்திரர் - தக்கன் படைகளுக்கிடையே போர் நிகழ்கிறது. வீரபத்திரருக்கு உதவியாகப் பூதகணங்களும் தக்கனுக்கு உதவியாகத் தேவர்களும் துணைநின்று போர் புரிகின்றனர். போரில் அம்புகளும் எதிர் அம்புகளும் மேலே விழுவதால் வீரர்களின் தலைகள் எல்லாம் மேலே விழுவதால் வீரர்களின் தலைகள் எல்லாம் மழை கொட்டுவது போல வீழ்ந்தன. வீரபத்திரரின் பூதகணங்கள் மேகங்களைப்போல் கோபம் மிகுந்து ஒலி எழுப்பின. காலாட்படையும் காலாட்படையும் மோதிக்கொண்டன. தேர்ப்படையும் தேர்ப்படையும் மோதிக் கொண்டன.

* ஈட்டியும்,ஈட்டியும் மிகுதியாகப் பாய்ந்ததால் தலைகள் செறிந்தன. மேகக் கூட்டங்கள் ஒன்று சேர்வது போல் வீரர்களின் சினம் ஒன்றுசேர்ந்தது. நீர்த்திவலைகள் ஒன்று சேரும்போது எழும் ஓசைபோல் அம்புகள் ஒன்றோடொன்று மோதி ஒலி எழுப்பின. காலாட்படையும் தேர்ப்படையும் யானைப்படையும் மோதிக்கொள்கின்றன.

**<u>கோவை:</u>**

* அகப்பொருளுக்குரிய துறைகள் பலவற்றை 400 கட்டளைக் கலித்துறையால் சங்கிலித்தொடர் போலப் பாடப்பட்டது கோவையாகும். கடவுளரையோ, அரசரையோ படைத்தலைவரையோ வள்ளல்களையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டது. தஞ்சாவூரில் பிறந்த சந்திரவாணன், பாண்டிவள நாட்டைச் சார்ந்த குலசேகர பாண்டியனின் அமைச்சராக விளங்கினான். இவன் புலவர்களைப் புரக்கும் வள்ளலாக விளங்கினமையால் பொய்யாமொழிப்புலவர் இவன் பெயரில் தஞ்சைவாணன் கோவையை எழுதினார்.

**தஞ்சைவாணன் கோவை**

**புயலே சுமந்து பிறையே அணிந்து பொருவிலுடன்**
**கயலே மணந்த கமலம் மலர்ந்துஒரு கற்பகத்தின்**
**அயலே பசும்பொற் கொடிநின்றதால் வெள்ளை அன்னம்செந்நெல்**
**வயலே தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன் மலையத்திலே.**

**பாடல் விளக்கம்:** பொதியமலையில் வெள்ளைநிற அன்னப்பறவைகளும் செந்நெல் வயல்களும் பெரிய குளங்களும் சூழ்ந்துள்ளன. அம் மலையின் பக்கத்தில் மிக அழகான பொற்கொடி ஒன்று நிற்பதைக் கண்ட தலைவன் தனக்குள் பேசிக்கொள்கிறான். ‘‘இப்பொற்கொடி கரிய மேகத்தைச் சுமந்துகொண்டும், பிறைநிலவைக் கொண்டும், போரிடும் வளைந்த இரு விற்களைக் கொண்டும், தாமரை மலரில் மீன்களைக் கொண்டும், கற்பக மரத்தின் பக்கத்திலே நிற்கிறதே!’’ இங்குத் தலைவியின் கூந்தல் மேகமாகவும், நெற்றி பிறையாகவும், புருவம் வில்லாகவும், கண் கயலாகவும், முகம் தாமரையாகவும், முழுத்தோற்றம் பொற்கொடியாகவும் முற்றும் உருவகப்படுத்தி இருப்பது உணரத்தக்கது. இப்பாடல் காட்சி என்னும் துறையில் அமைந்ததாகும்.

**சதகம்:**

- தமிழ் இலக்கியத்தில் சொல்லப்படும் அகப்பொருள் அல்லது புறப்பொருள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை அடிப்படையாகக் கொண்டு நூறு பாடல்களால் பாடப்படுவதே சதகம் என்பது பாட்டியல் நூல்களில் சொல்லப்படும் இலக்கணம். சதம் என்பது நூறு எனப் பொருள்படும். நூறு பாடல்களைக் கொண்ட சிற்றிலக்கியம் சதகம் எனப்பட்டது.

**அறப்பளீசுர சதகம்**

**வைதாலும் ஓர் கொடுமை செய்தாலுமோ சீறி**
**மாறா திகழ்ந்தாலுமோ**
**மனது சற்றாகிலும் கோணாது நாணாது**
**மாதா பிதா எனக்குப்**
**பொய்யாமல் நீயென்று கனிவொடும் பணிவிடை**
**புரிந்து பொருள் உடல் ஆவியும்**
**புனித உன் தனதெனத் தத்தம் செய்து இரவு பகல்**
**போற்றி மலரடியில் வீழ்ந்து**
**மெய்யாகவே பரவி உபதேசம் அது பெற**
**விரும்புவோர் சற்சீடராம்.**

**பாடல் விளக்கம்:** மாணவனின் நன்மைகருதித் திட்டினும், ஏதேனும் கொடுமையிழைக்கினும், மாறாமற் சினந்து இழிவுபடுத்தினும், சிறிதும் மனங்கோணாமலும் வெட்கப்படாமலும், உண்மையாக எனக்கு அன்னையும் தந்தையும் நீயேயென்று கூறி, ஆசிரியனுக்கு மனங்கனிந்து வழிபாடு செய்து, பொருளும் உடலும் உயிரும் உன்னுடையவை என்று கூறி, இரவும் பகலும் விடாமல் வணங்கி, ஆசிரியனின் மலர் போன்ற திருவடிகளில் உண்மையாகவே புகழ்ந்துகூறி, அறிவுபெற விழைவோர் நல்ல மாணாக்கராவர். அவர்களுக்கு வினையின் வேர் கெடும்படி அருள்செய்வது சிறந்த ஆசிரியரது கடமையாகும்.

<u>பிள்ளைத்தமிழ்:</u>

- கடவுளரையோ அரசரையோ பிறரையோ குழந்தையாகக் கருதி அவர்தம் குழந்தைப் பருவத்தைப் பத்துப்பருவங்களாகப் பகுத்துப் பருவத்திற்குப் பத்து ஆசிரிய விருத்தங்களாகப் பாடுவது பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுதேர், சிறுபறை ஆகிய பத்துப் பருவங்களை அமைத்துப் பாடுவது ஆண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும், முதல் ஏழு பருவங்களோடு இறுதியில் உள்ள மூன்று பருவங்களுக்குப் பதிலாக அம்மானை, நீராடல், ஊசல் ஆகிய பருவங்கள் அமைத்துப் பாடுவது பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும் குறிப்பிடுவர

- நமக்குப் பாடமாக அமைந்துள்ள பகுதி செங்கீரைப் பருவத்தில் அமைந்ததொரு பாடலாகும். செங்கீரை, பிள்ளைத்த்தமிழில் இரண்டாவது பருவமாகும். பொருள் புரிந்து கொள்ளமுடியாத வகையில் குழந்தை ங்க ங்க என்று ஓசை எழுப்பக் கேட்டுத் தாய் மகிழும் பருவமாகும். தொட்டில் பிள்ளை தலையை உயர்த்திக் கையை ஊன்றி உடம்பை அசைத்து ஆடுதலைச் செங்கீரைப்பருவம் என்பர்.

**பாவேந்தர் பிள்ளைத்தமிழ்**

**வடிவமை காதினில் குண்டலகேசி வயங்கொளி கொண்டாட**
**வார்ந்த எழிற்கரம் ஏந்திய ஆடக வளையாபதி ஆடத்**
**துடியிடை கையினில் ஒருபிடி என்று துவண்டு துவண்டாடும்**
**துறவற மேகலை ஒரு புறமாகவும் தூய சிலம்பாடும்**
**அடிமலர் கண்டொரு மாமயி லானவன் ஆடுக செங்கீரை**
**அஞ்சுகமாம் தமிழ் கொஞ்ச மகிழ்ந்தவன்**

ஆடுக செங்கீரை

**பாடலின் விளக்கம்:** தமிழ்மொழியைப் பெண்ணாகவும், அம்மொழியில் அமைந்த நூல்களின் பெயர்களைப் பெயர்ஒப்புமைகொண்டு அப்பெண்ணின் அணிகலன்களாகவும் உருவகப்படுத்தி, தமிழ்ப்பெண் ஆடிய அழகைக் கண்டு மனத்தைப் பறிகொடுத்து மயில்போலக் களித்து பாக்களைப் பாடிய புரட்சிக்கவிஞராம் குழந்தையே! நீ, செங்கீரையாடி அருள்வாயாக.

**பள்ளு:**

- சிற்றிலக்கிய வகைகளில் எளிமையும் இனிமையும் வாய்ந்த ஓர் இலக்கியம் பள்ளு இலக்கியம் ஆகும். உழவுத்தொழில் செய்யும் மக்களின் வாழ்க்கையைப் பாடும் இலக்கியம் பள்ளு இலக்கியம் எனப்படும்.

**முக்கூடற்பள்ளு**

**சோதி மாமணி வீதி நெருக்கும்**
**சுரும்பு பாடி**
**இரும்பும் உருக்கும்**
**சாதி நால்வளம் நீதி பெருக்கும்**
**தடத்து வாளை குடத்தை நெருக்கும்**
**போதில் மேய்ந்து இளமேதி செருக்கும்**
**புனம் எல்லாம் அந்தண்**
**மலர் விண்டு இருக்கும்**

**பாடல் விளக்கம்:** ஒளி வீசும் சிறந்த மணிவகைகள் பதித்த மாளிகைகளை உடையன விதிகள். வீதிகளின் நெருக்கம் அதிகமாக இருக்கும். மலர்ச் சோலைகளில் திரியும் வண்டு இனங்கள் தம் ரீங்காரப் பண்ணினைப் பாடும். அப்பாடல் இரும்பு உள்ளங்களையும் உருகச் செய்துவிடும். நால்வகை வருணத்து மக்களும் தம் வேற்றுமையை மறந்து ஒன்றுபட்டு நீதியைப் பெருக்குவர்.

- நீர் நிலைகளில் உள்ள வாளை மீன்கள் நீர் முகப்பார் குடங்களில் புகும். புகுந்து குடத்தை நெருக்கும். இளம் எருமை மாடானது கழனிகளிலே உள்ள நீர்ப்பூக்களை மேயும்; அதில் உள்ள மதுவை உட்கொண்டு செருக்கித் திரியும். மேட்டு நிலங்களில் எல்லாம் குளிர்ந்த மலர்கள் இதழ் விரித்து மலர்ந்திருக்கும்.

**சிற்றிலக்கிய வகைகள்**

| | | |
|---|---|---|
| 1. அகப்பொருள்கோவை | 31. காப்பியம் | 61. பதிற்றந்தாதி |
| 2. அங்கமாலை | 32. காப்பு நிலை | 62. பயோதரப் பத்து |
| 3. அட்டமங்கலம் | 33. குழமகன் | 63. பரணி |
| 4. அநுராகமாலை | 34. குறத்திப்பாட்டு | 64. பல்சந்த மாலை |
| 5. அரசன் விருத்தம் | 35. கேசாதி பாதம் | 65. பவனிக்காதல் |
| 6. அலங்கார பஞ்சகம் | 36. கைக்கிளை | 66. பன்மணி மாலை |
| 7. ஆற்றுப்படை | 37. கையறுநிலை | 67. பாதாதி கேசம் |
| 8. இணைமணி மாலை | 38. சதகம் | 68. பிள்ளைக்கவி (பிள்ளைத்தமிழ்) |
| 9. இயன்மொழி வாழ்த்து | 39. சாதகம் | |
| 10. இரட்டை மணிமாலை | 40. சின்னப் பூ | 69. புகழ்ச்சி மாலை |
| 11. இருபா இருப..்து | 41. செருக்கள வஞ்சி | 70. புறநிலை |
| 12. உலா | 42. செவியறிவுறுஉ | 71. புறநிலை வாழ்த்து |
| 13. உலாமடல் | 43. தசாங்கத்தயல் | 72. பெயர் நேரிசை |
| 14. உழத்திப்பாட்டு | 44. தசாங்கப்பத்து | 73. பெயர் இன்னிசை |
| 15. உழிஞைமா | 45. தண்டக மாலை | 74. பெருங்காப்பியம் |
| 16. உற்பவ மாலை | 46. தாண்டகம் | 75. பெருமகிழ்ச்சிமாலை |
| 17. ஊசல் | 47. தாரகை மாலை | 76. பெருமங்கலம் |
| 18. ஊர் நேரிசை | 48. தானை மாலை | 77. போர்க்கெழு வஞ்சி |
| 19. ஊர் வெண்பா | 49. தும்பை மாலை | 78. மங்கல வள்ளை |
| 20. ஊரின்னிசை | 50. துயிலெடை நிலை | 80. முதுகாஞ்சி |
| 21. எண் செய்யுள் | 51. தூது | 81. மும்மணிக்கோவை |
| 22. எழு கூற்றிருக்கை | 52. தொகைநிலைச் | 82. மும்மணிமாலை |

| | | |
|---|---|---|
| 23. ஐந்திணைச் செய்யுள்<br>24. ஒருபா ஒருப.்.து<br>25. ஒலியல் அந்தாதி<br>26. கடிகை வெண்பா<br>27. கடைநிலை<br>28. கண்படை நிலை<br>29. கலம்பகம்<br>30. காஞ்சி நிலை | செய்யுள்<br>53. நயனப்பத்து<br>54. நவமணி மாலை<br>55. நாம மாலை<br>56. நாற்பது<br>57. நான்மணி மாலை<br>58. நூற்றந்தாதி<br>59. நொச்சிமாலை<br>60. பதிகம் | 83. மெய்கீர்த்தி மாலை<br>84. வசந்த மாலை<br>85. வரலாற்று வஞ்சி<br>86. வருக்கக் கோவை<br>87. வருக்க மாலை<br>88. வளமடல் - மடலேருதல்<br>89. வாகை மாலை<br>90. வாதோரண மஞ்சரி<br>91. வாயுறை வாழ்த்து<br>92. விருத்த இலக்கணம்<br>93. விளக்கு நிலை<br>94. வீர வெட்சி மாலை<br>95. வெற்றிக் கரந்தை மஞ்சரி<br>96. வேனில் மாலை |

## 12th சிறப்பு தமிழ் புத்தகம்
## இயல் - 3
## அரங்கவியல்

நவீன நாடகம், திரைக்கலை,நாட்டார் அரங்கக்கலை ஆகியன அரங்கவியலின் கூறுகளாக அறியப்படுகின்றன. நாடகக்குழுக்களின் தோற்றம் நவீன நாடகங்களின் வளர்ச்சிக்கு வித்திட்டது. காந்திகிராமம் கிராமியப் பல்கலைக்கழகம் நடத்திய நாடகம் தொடர்பான கருத்தரங்கும் பயிற்சிப் பற்றறையும் நவீன நாடக்குழுக்கள் தோன்றக் காரணமாகின. இவ்வகை நாடக்குழுக்களில் பயிற்சி பெற்றவர்கள் திரைத்துறையிலும் வெற்றி பெற்றனர்.

முதலில் நவீன நாடக வரலாற்றைப் பேசும் இவ்வியல் பின்னர், தமிழ்த்திரைப்பட வரலாற்றையும் பேசுகிறது. திரைக்கலை நுட்பங்கள், இலக்கியத்தைத் திரைப்படமாக்குதல் குறித்த செய்திகள் மாணவர்தம் படைப்பாற்றலைத் தூண்டும் விதமாக அமைந்துள்ளன.

தமிழகத்தில் மாவட்டங்கள் தோறும்அவ்வம்மாவட்டங்களின் மரபு சார்ந்து நிகழ்த்தப்படும் கலைகளே நாட்டார் அரங்கக்கலைகள். இவை இன்றளவும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், குறிப்பிட்ட காலங்களில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அரங்கக்கலையை உயிர்ப்போடு வைத்திருக்கும் காரணிகளில் இன்றியமையாததாக இக்கலை வடிவத்தைக் கூறலாம். ‘நாட்டார் அரங்கக்கலை’ என்னும் பகுதி தமிழகத்தின் மரபார்ந்த கலைகளை மீட்டெடுக்கும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது.

### நவீன நாடக வரலாறு

**நாடகத்தின் தோற்ற வரலாறு**

தமிழ்மொழியின்கண் வழங்கும் கலைகளை இயல் இசை நாடகம் எனப்பகுத்துக் கூறுவது மரபு. சங்க காலத்தில் நாடக அரங்கில் நிகழ்த்துக்கலை நிகழ்ந்ததற்கான அடையாளங்களாக ஆடல், நடனம், நாட்டியம் போன்ற சொற்கள் கிடைக்கின்றன. ஆட்டத்தோடு பேச்சும் கலந்து நிகழ்த்தப்பெற்றது நாடகம். பழந்தமிழில் கூத்து என்ற சொல் நாடகத்தைக் குறித்தது. தெய்வங்களை வணங்குதல், வெற்றிக் கொண்டாட்டம், சமூக சடங்குகள் போன்ற நிகழ்வுகளின்போது மக்களை மகிழ்விக்க நிகழ்த்தப்பட்ட நடனங்களும் கூத்துகளும் நாளடைவில் பல்வேறு நிலைகளில் மாற்றம் பெற்று நாடகமாக வளர்ச்சியடைந்தன.

அரங்கம் மற்றும் அரங்க நிகழ்வுகள் குறித்தத் தொல்காப்பியத்தின் மெய்ப்பாட்டியல் வழியாகவும் சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக்காதை வழியாகவும் வரிவான செய்திகளை அறியமுடிகிறது. பிற்காலச் சோழ, பாண்டிய மன்னர்கள் நாடகக்கலை வளர உறுதுணையாக இருந்தனர். கலைஞர்களுக்குப் பரிசுகளும், பட்டங்களும் நிலங்களும் கொடுத்து ஊக்குவித்த குறிப்புகளை அவர்களின் கல்வெட்டுகள் காட்டுகின்றன. பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி, கீர்த்தனை, நாட்டார் நாடகங்கள் எனப் பல்வேறு நாடக வகைமைகள் தோன்றின.

**நவீன நாடகத்தின் தோற்றம்**

இந்தியாவிற்கு வணிகம் செய்ய வந்த ஐரோப்பியர்களின் ஆட்சி மற்றும் கல்விமுறைகளால் ஒவ்வொரு துறையிலும் நவீனத்தன்மை புகுந்தது. நாடகக் கலையும் இதற்கு விதிவிலக்கல்ல. ஐரோப்பிய, பார்சிய, மராத்திய அரங்கியலை உள்வாங்கிய நாடக நிகழ்வுகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் நிகழ்ந்தன. அதன்பின் தமிழ் நாடகக் கலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. நாடகங்களின் அமைப்பு, மேடை அலங்காரம், உத்திகள், ஒப்பனைகள், நாடகம் நடக்கும் கால அளவு போன்றவற்றில் மாற்றம் ஏற்பட்டது. அதனால் நாள்தோறும் காணும் நிகழ்ச்சியாக நாடகக்கலை மாறியது.

நாடகத்துறையின் புதிய பரிமாணத்திற்குக் காரணமாக அமைத்தவர்களாகச் சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்தனார், பரிதிமாற் கலைஞர் ஆகியோரைக் குறிப்பிடலாம். சங்கரதாஸ் சுவாமிகள் கூத்திற்குப் புதிய வடிவம் தந்ததுடன், மேலைநாட்டு உத்திகளையும் இணைத்துப் புதிய போக்கினை உருவாக்கித் தந்தார். தமிழ் நாடகங்களில் பாடல்களின் கருத்தகளைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளும் வகையில் உரைநடையில் இடம்பெறச் செய்தார். 1891ஆம் ஆண்டு சுகுண விலாச சபையை நிறுவிய பம்மல் சம்பந்தனார் இருபதாம் நூற்றாண்டின்

தொடக்கத்தில் மேடைகளில் பல புதுமைகளைக் கையாண்டார. பரிதிமாற்கலைஞரின் நாடகவியல் என்னும் நூல் நாடகக்கலைக்கு இலக்கணம் வகுத்தது.

ஆங்கிலேயரை வெளியேற்றும் நோக்கோடு பரப்புரை நாடகங்களும் அரங்கேறின. பிறகு திராவிட இயக்க நாடகங்களும் சபா நாடகங்களும் வளர்ச்சி பெறற்ன.

1946 ஆம் ஆண்டு தமிழில் முதன்முதலாக அமைதி என்னும் தலைப்பில் உரையாடல் இல்லாத மௌன நாடகம் எழுதியவர் பாரதிதாசன். அந்நாடகம் 'அமைதி' என்னும் தலைப்பில் எழுதப்பட்டது. இந்நாடகம் பதினாறு காட்சிகளைக் கொண்டது.

புராணக் கதைகளேயன்றிச் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளைக் கொண்ட சீர்திருத்த நாடகங்களும் இயற்றப்பட்டன. தமிழில் சீர்திருத்த நாடகங்கள் உருவாக அடித்தளமாய் அமைந்தவை பெரியாரின் சுயமரியாதை இயக்கமும் திராவிட இயக்கமுமாகும். விடுதலைக்குப்பின் மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களைப் பேசும் நாடகங்கள் எழுதப்பட்டன. நடுத்தர மக்களின் நடப்பு வாழ்க்கையை இந்நாடகங்கள் சித்திரித்தன.

இலக்கியத்தின் பிற துறைகளான கவிதை, சிறுகதை போன்வற்றில் நவீன சிந்தனைகளையும் வடிவங்களையும் புகுத்தும் சோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நாடகத்திலும் இதே போன்ற மாற்றங்கள் ஏற்படலாயின. இதனால் எழுபதுகளின் இறுதியில் நவீன நாடகங்கள் தோற்றம் பெறுதவற்கான சூழல் உருவாகத் தொடங்கியது.

**நாடக அமைப்புகள்**

அகில இந்திய அளவில் 'பாரதீய நாட்டியகஸ்' என்னும் நாடக அமைப்பு உருவாக்கப்பட்டு, யுனெஸ்கோவின் சர்வதேச நாடகக்கலை மையத்தோடு இணைக்கப்பட்டது. இந்திய அரசின் முயற்சியால் நிகழ்கலைகளின் வளர்ச்சிக்காக மத்திய சங்கீத நாடக அகாதெமியும் நாடகத்துறைக்கென்றே பயிற்சியளிக்க தேசிய நாடகப் பள்ளியும் உருவாக்கப்பட்டன. இதனையடுத்து உலக நாடகக் கழகமும் உருவாக்கப்பட்டத. இவ்வமைப்புகள் நவீன நாடகங்களின் வளர்ச்சிக்கு வித்திட்டன.

**நவீன நாடகத்தின் நோக்கம்**

தொடக்க நிலையில் நவீன நாடகம், தெரு நாடகம் (Street Play) என்ற நிலையிலேயே மக்களிடம் அறிமுகமாகியது. எனவே எளிய அரங்கு என்ற பெயராலேயே இது சுட்டப்பட்டது. நவீன நாடகக் கலைஞர்கள் மக்கள் முன் தங்கள் நாடகங்களை நடத்திக் காட்ட மேடையமைப்பையோ, அரங்கேற்ற உத்திமுறைகளையோ பயன்படுத்தவில்லை. நவீன நாடகம், மரபுமுறை நாடகக் கூறுகளான அங்கம், களம் போன்றவற்றிற்கு முதன்மை தராமல் கருத்துகளை மட்டுமே முதன்மைப்படுத்தியது. பொருட்செலவைத் தவிர்த்து, எந்த இடத்திலும் நாடகத்தை நிகழ்த்தலாம் என்ற சூழ்நிலையை உருவாக்கியது. மக்களைக் கற்பனை உலகிற்குக் கொண்டு செல்லாமல் சமூகச் சிக்கல்களை அந்தந்தச் சூழ்நிலையிலேயே மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்பதே நவீன நாடகத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

நவீன நாடகம், பார்வையாளர்களுக்கும் நடிகர்களுக்கும் இருந்த இடைவெளியைக் குறைத்து அவர்களுக்கிடையேயான கருத்துப் பரிமாற்றத்தை முதன்மைப்படுத்தியது. பாத்திரங்கள், பார்வையாளரின் இடையில் சென்று நடிப்பதும் உண்டு. மக்கள், நாடகத்தை நோக்கி வந்த நிலையை மாற்றி, நாடகத்தை நோக்கிச் செல்லும் நிலை ஏற்பட்டது. நவீன நாடகம் புதுமையும் புரட்சிகரமான உணர்வும் கொண்டவர்களாலும், மக்கள் நலம்காக்க எண்ணியவர்களாலும் உருவாக்கப்பட்டது.

**தமிழ் நாடகக்கலையின் மறுமலர்ச்சிக் காலம்**

சிறுபத்திரிகைகளில் எழுதிய சிறுகதை ஆசிரியர்கள், தமிழ் இலக்கியத்துறையைச் சார்ந்த பேராசிரியர்கள், பொதுவுடைமைக் கருத்துகளின்பால் ஈடுபாடுகொண்ட எழுத்தாளர்கள் முதலானோர் நவீன நாடகம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர். இதன் விளைவாக இருபதாம் நூற்றாண்டின் இறுதி இருபதாண்டுகள், தமிழ் நாடகக்கலையின் மறுமலர்ச்சிக் காலமாக அமைந்தன. நவீன நாடக ஆசிரியர்கள் படிப்பதற்காக நாடகங்களை எழுதவில்லை.

அரங்கத்தில் நிகழ்த்துவதற்கு ஏற்ற வகையில் எழுதினர். வாசகர்களுக்கு என்று எழுதாமல் பார்வையாளர்களுக்காக எழுதினார்.

**நாடகப் பயிற்சிப் பட்டறைகள்**

தமிழில் நவீன நாடகத்திற்கான அடிப்படைகளை உருவாக்கியதில் குறிப்பிடத்தக்க பயிற்சிப்பட்டறைகள்.

தேசிய நாடகப்பள்ளியின் மூலம் 1977இல் காந்திகராம கிராமியப் பல்கலைக்கழகத்தில் ஒருவார நாடகப் பயிற்சிப் பட்டறை.

1978 இல் தேசிய நாடகப் பள்ளியும் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகமும் சேர்ந்து நடத்திய எழுபது நாள் நாடகப் பயிற்சிப் பட்டறை.

பாதல் சர்க்கார் அவர்களைக் கொண்டு 1980 சென்னையில் நடத்தப்பட்ட பத்து நாள் பயிற்சிப்பட்டறை.

எண்பதுகளின் தொடக்கத்தில் நிகழ்ந்த நாடகப் பயிற்சிப் பட்டறைகள், நாடகக் குழுக்களின் தோற்றம், நாடக விழாக்கள் போன்றவை நவீன நாடகத்திற்கு உந்து சக்தியாக அமைந்தன.

நாடகப் பயிற்சிப் பட்டறைகளில் இந்திய, மேற்கத்திய நாடகக் கோட்பாடு, நடிப்பு ஒப்பனை, அரங்கமைப்பு உள்ளிட்ட நாடகத் தயாரிப்பு தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

1980-களின் காலகட்டத்தில் நாடகம் குறித்த கட்டுரைகளை வெளியிடுவதில் கொல்லிப்பாவை, வைகை, விழிகள், யாத்ரா போன்ற சிறுபத்திரிகைகள் குறிப்பிடத்தகுந்தவையாக இருந்தன. கணையாழியிலும் அவ்வப்போது நாடக நிகழ்வுகள் குறித்த செய்திகளும் விமரிசனக் குறிப்புகளும் வெளியிடப்பட்டன. சிறுபத்திரிகைகளின் செயல்பாட்டைத் தொடர்ந்து தமிழகத்தின் பல பகுதிகளில் நவீன நாடகக் குழுக்கள் உருவாயின. கூத்துப்பட்டறை, நிஜ நாடக இயக்கம், பரீக்ஷா, வீதி போன்றன 1980 களில் தொடங்கப்பெற்ற நவீன நாடகக் குழுக்கள். 1990 ஜூலையில் ரெங்கராஜனால் நாடகத்திற்கெனத் தொடங்கப்பெற்ற “நாடகவெளி” என்னும் இதழ் பத்து ஆண்டுகளில் நூற்பது இதழ்களை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

**பல்கலைக் கழகங்களின் பங்கு**

1900-களில் தஞ்சை, புதுவை, மதுரை முதலான பல்கலைக்கழகங்களில் நாடகத்துறைகள் தொடங்கப்பட்டன. முதுகலைப் பாடத்திட்டத்தில் நாடகம் ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்டது. பல்கலைக் கழகங்களில் நாடகத்துறை தோன்றியதன் விளைவாகப் பல நவீன நாடகக் குழுக்கள் தோன்றின. சென்னையில் ‘ஆடுகளம்’,‘யவனிகா’, பல்கலை அரங்கம், அரூபம், மதுரையில் ‘சுதேசிகள்’, பாண்டிச்சேரியில் ‘கூட்டுக்குரல்’, தலைக்கோல், தஞ்சையில் ‘அரசங்கம்’, காந்தி கிராமத்தில் ‘தளிர்’, திருச்சியில் ‘நாடகச் சங்கம்’, திருவண்ணாமலை ‘தீட்சண்யா’ என்று பல நவீன நாடகக் குழுக்கள் தோன்றலாயின. திருவண்ணாமலையில் ‘தீட்சண்யா’ என்று பல நவீன நாடகக் குழுக்கள் தோன்றலாயின.

**நவீன நாடகத்திற்கான திட்டங்கள்**

மத்திய சங்கீத நாடக அகாதெமி இளம்நாடக இயக்குநர்களையும், நாடக குழுக்களையும் ஊக்குவிக்க நிதி வழங்கியது. ஒவ்வோர் ஆண்டும் நவீன நாடகத்திற்கான திட்டங்களைச் செயல்படுத்தி வந்ததோடு, மரபார்ந்த அரங்க வடிவங்களைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தியது. பிறமொழி நாடகங்களோடு ஒப்பிட்டுப் பேசவும் போட்டிபோடவும் வாய்ப்புகளை உருவாக்கித் தந்தது. இதன் காரணமாக நவீன நாடகக்குழுக்கள் மரபார்ந்த கலைகளைக் கையிலெடுக்கத் தொடங்கின. அதனால் நவீனத்தையும் மரபையும் இணைக்கும் போக்கு நாடகங்களில் உருவாயின. இந்தப் போக்கினால் தெருக்கூத்து, தேவராட்டம், தப்பாட்டம் என நிகழ்கலைகளைத் தன்னுள் கொண்ட நவீன நாடகங்கள் உருவாகின. உறுமியின் ஓசை, பறையிசையின் துள்ளல், நாட்டார் கலைகளில் இருந்த அரங்கப் பொருட்கள் எல்லாம் நவீன மேடைக்குள் காட்சிப்படுத்தப்பட்டன.

## நவீன நாடக ஆசிரியர்களும் நாடகங்களும்

| நாடக ஆசிரியர்கள் | நாடகங்கள் |
|---|---|
| ந. முத்துசாமி | காலம் காலமாக நாற்காலிக்காரர், அப்பாவும் பிள்ளையும், இங்கிலாந்து சுவரொட்டிகள், உந்நிச்சுழி, கட்டியக்காரன், விறகுவெட்டிகள், வண்டிச்சோடை, நற்றுணையப்பன் அல்லது கடவுள். |
| இந்திரா பார்த்தசாரதி | இராமாநுஜர், இறுதி ஆட்டம், கொங்கைத்தீ, ஔரங்கசீப், நந்தன் கதை, பசி, மழை, காலயந்திரங்கள், புனரபி ஜன்னம் புனரபி மரணம், தர்மம், போர்வை போர்த்திய உடல்கள். |
| சே. இராமனுஜம் | புறஞ்சேரி, பிணம் தின்னும் சாத்திரங்கள், சுமை, முகப்போலிகள், சஞ்சயன் காட்சி தருகிறான், அக்கினிக்குஞ்சு, கேகயன் மடந்தை, வெறியாட்டம், செம்பவளக்காளி, மௌனக்குறம். |
| மு. இராமசுவாமி | துர்க்கிர அவலம், சாபம்! விமோசனம்? புரட்சிக்கவி, ஆபுத்திரன். |
| பிரபஞ்சன் | முட்டை, அகல்யா. |
| ஜெயந்தன் | மனுசா மனுசா, நினைக்கப்படும் |
| ஞான ராஜசேகரன் | வயிறு, மரபு, பாடலிபுத்திரம் |
| பிரளயன் | உபகதை, நவீன மத்தவிலாசப் பிரகடனம் அல்லது காஞ்சித் தலைவி |
| எம்.டி.முத்து குமாரசாமி | சைபீரிய நாரைகள் இனி இங்கு வரப் போவதில்லை, குதிரைக்காரன் கதை. |
| இன்குலாப் | ஔவை, மணிமேகலை. |
| எஸ்.எம்.ஏ.ராம் | சுயதர்மம், மூடிய அறை, மணிமேகலையின் கண்ணீர், எப்போ வருவாரோ. |
| கே.ஏ.குணசேகரன் | பலிஆடுகள், சத்தியசோதனை, பவளக்கொடி அல்லது குடும்பவழக்கு, அறிகுறி, பாறையைப் பிளந்து கொண்டு, கனவுலகவாசி, தொட்டில் தொடங்கி. |
| ரமேஷ்-பிரேம் | ஆதியிலே மாம்சம் இருந்தது, அமீபாக்களின் காதல் |
| எஸ். ராமகிருஷ்ணன் | உருளும் பாறைகள், தனித்திருக்கப்பட்டவர்கள், சூரியனின் அறுபட்ட சிறகுகள், அரவான். |
| அ. ராமசாமி | ஒத்திகை, மூட தேசத்து முட்டாள் ராஜா, தொடரும் ஒத்திசைகள், 10 குறு நாடகங்கள் |
| வ. ஆறுமுகம் | கருஞ்சுழி, ஊசி, தூங்கிகள். |
| முருகபூபதி | சுரித்திரத்தின் அதீத ம்யூசியம், கண்ணாடியுள் அலைவுறும் பிம்பங்கள், வனத்தாதி, தேகவயல், ரகசிய நிழல்கள், தனித்திருக்கப்பட்டவர்கள், கூந்தல் நகரம், செம்மூதாய் |

**தழுவல் நாடகங்கள்**

நாடகக் குழுக்கள் தோன்றிய அளவிற்கு நவீன நாடக எழுத்தாளர்கள் தமிழில் இல்லை எனலாம். இந்திரா பார்த்தசாரதி, ந.முத்துசாமி, ஞான. ராஜசேகரன், ஜெயந்தன், ஞாநி போன்றோர் எழுதிய ஒரு சில நாடகங்களே முதலில் இருந்தன. எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் தழுவல் நாடகங்களும் மொழிபெயர்ப்பு நாடகங்களும் ஏராளமாகப் பெருகின. பிற மொழிப் படைப்பாளிகளான பாதல் சர்க்காரின் ஏவம் இந்திரஜித், விஜய் டெண்டுல்கரின் கமலா, கிரிஷ் கர்னாட்டின் துக்ளக், பெர்டோல்ட் பிரெகட்டின் வெள்ளை வட்டம் போன்ற நாடகங்கள் தமிழில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

மு. ராமசாமி மேடையேற்றிய ‘துர்க்கிர அவலம்’, சே. இராமானுஜத்தின் ‘கறுப்புத் தெய்வத்தைத் தேடி’ போன்றவை தழுவல் நாடகங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன. தமிழ் நாடகங்களைவிடவும் மொழியாக்கம் செய்யப்பட்ட நாடகங்களே பெரும்பாலும் மேடையேறின. இதன்பின் நேரடி தமிழ் நவீன நாடகத்திற்கான முயற்சிகள் நாடக ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டன. இதனால் தமிழில் நவீன நாடகங்கள் மிகுதியாகத் தோன்றலாயின. தங்களின் படைப்புகளின் மூலம் நவீன நாடக ஆளுமைகள் இக்காலகட்டத்தில் அடையாளம் காணப்பட்டனர்.

**ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கச் செயல்பாடுகள்**

சமூக மாற்றத்திற்கேற்ப கலை இலக்கிய வடிவங்களின் போக்குகளிலும் மாற்றங்கள் ஏற்படலாயின. சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளால் பெண்கள், தாழ்த்தப்பட்டோர், திருநங்கைகள், சிறுவர் போன்றோர் பல்வேறு முறைகளில் ஒடுக்கப்படுவதால் அவர்களின் வாழ்வியல் பிரச்சினைகளை முன்னிறுத்தி விவாதிக்கும் போக்கு 1990களின் தொடக்கத்தில் உருவானது. அதனால் நாடகத்துறையில் ஒடுக்கப்பட்டோர் அரங்கு உருவாவதற்கான சூழல் தோன்றியது. அந்த வகையில் பெண்ணிய அரங்கம், தலித்திய அரங்கம், திருநங்கைகள் அரங்கம், சிறுவத் அரங்கம் போன்றவை தோன்றின.

பெண்ணிய அரங்கச் செயல்பாடுகளில் இயங்கியவர்களில் முக்கியமானவர்களாக அ.மங்கை, மு.ஜீவா, பிரசன்னா ராமசாமி ஆகிய மூவரையும் குறிப்பிடலாம். அ. மங்கை, இன்குலாப் எழுதிய 'ஔவை', சே.இராமானுஜம் எழுதிய 'மௌனக்குறம்' ஆகிய நாடகங்களை மேடையேற்றினார். மு. ஜீவா பல்வேறு நாடகக் குழுக்களில் நடிகையாகச் செயல்பட்டதோடு ஐரோப்பியப் பெண்ணிய நாடகங்களிலிருந்து சில பகுதிகளைக் காட்சிகளாக நிகழ்த்திக் காட்டியுள்ளார். மற்றொரு பெண் நாடக இயக்குநரான பிரச்சன்னா ராமசாமி போர், சாதி, சுற்றுச்சூழல், நகரமயமாதல் போன்றவற்றில் பெண்கள் கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றனர் என்பதை மேடைகளில் நிகழ்த்திக் காட்டினார்.

90-களின் தொடக்கத்தில் தலித்திய அரங்கம் கவனம் பெற்றது. குறிப்பிடத்தக்க நாடக ஆசிரியராகவும் இயக்குநராகவும் இருந்தவர் கே.ஏ.குணசேகரன். அவரது 'பலி ஆடுகள்' முதல் தலித் நாடகமாகக் கருதப்படுகிறது. அ.ராமசாமி, பிரேம் இரா.ராஜூ போன்றவர்கள் தலித்திய, பெண்ணிய உள்ளடக்கங்களோடு நாடகங்களை மேடையேற்றினர்.

200-க்குப் பிறகு விளிம்புநிலைக் கருத்துகளோடு மேடை ஏறிய நாடகங்களான ஆஷா பாரதியின் நாடகங்கள் திருநங்கைகள் குறித்துப் பேசின. அதற்கெனவே 'கண்ணாடிக் கலைக்குழு' என்ற நாடக அமைப்பு செயல்பட்டது.

குழந்தைகள் நாடகச் செயல்பாட்டாளர்களாக வேலு சரவணன், ரவியண்ணா போன்றோரைக் குறிப்பிடலாம். முருகபூபதியின் நாடகங்கள் காட்சிப் படிமங்களின் வழியாக நிலமற்ற வேளாண்மைக் குடிகளையும் பழங்குடி மனிதர்களையும் காட்சிப்படுத்தின. செம்மூதாய், வனத்தாதி, தேகவயல், பித்த நிலத்தின் பொம்மைகள் போன்றவை குறிப்பிடத்தகுந்த நாடகங்களாகும்.

**மூவகை அரங்குகள்**

அரங்க நிகழ்வுகள், பார்வையாளர்கள், பேசுபொருள் அடிப்படையில் மூவகை அரங்கை முன் வைத்தவர் வங்க நாடக ஆசிரியர் பாதல் சர்க்கார்.

இந்தியாவில் ஒவ்வொரு மாநிலங்களின் மரபுக்கேற்றவாறு அரங்கக்கலை வடிவம் பெற்றிருந்தது. கதகளி, யட்சகானம், ஜாக்ரா, பங்காரா, தமாஷா, தெருக்கூத்து என ஒவ்வொரு மாநிலச் சூழலுக்கேற்பப் பெயர் பெற்றிருந்த இக்கலைகளை முதலாம் அரங்கு என பாதல் சர்க்கார் வகைப்படுத்துகிறார். இம்முதல் வகை அரங்கு புராண, இதிகாச. வரலாற்றுப் பாத்திரங்களின் மூலம் மக்களின் பண்பாடு, வாழ்வியல், சடங்குகள் போன்றவற்றை வெளிப்படுத்தியது. பார்வையாளர்களின் சுதந்திரத்தையும் நெருக்கத்தையும் தன்னகத்தைக் கொண்டதாக முதல் வகை அரங்கு உள்ளது என்பார் பாதல் சர்க்கார்.
பத்தொன்தாம் நூற்றாண்டில் இந்திய மேடை நாடகங்களில் மேற்கத்திய நாடகத்தின் தாக்கம் இருந்தது. இந்திய நவீன நாடகத்தின் தொடக்கமாகக் கருதப்பட்ட விக்டோரியா நாடக மரபினைப் பின்பற்றியப் பார்சி கம்பெனிகளின் நாடகங்கள் மக்களிடையே செல்வாக்குப் பெற்றன. விடிய, விடிய நடைபெற்ற நாடகங்களை மூன்று அல்லது நான்கு மணிநேர நிகழ்வாகச் சுருக்கியது பார்சி நாடகங்கள். உரைநடை, வசனம்? மேடையமைப்பு, ஒளி அமைப்பு போன்ற அரங்கக்கூறுகள் இணைக்கப்பட்டதாலும் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு பெற்றன. இவ்வகை அமைப்புகளோடு கூடிய அரங்கினைப் படச்சட்டக அரங்கம் என்பர். இதனையே பாதல் சர்க்கார் இரண்டாம் அரங்கு எனச் சுட்டிக்காட்டினார். இவ்வமைப்பு பார்வையாளர்களைத் தூரமாக்கும் தன்மையுடையது என்று விமர்சனம் செய்தார் பாதல் சர்க்கார்.

பத்தொன்தாம் நூற்றாண்டின் இறுதியில் உலகெங்கிலும் மக்களின் சிந்தனையின் வளர்ச்சிக்கேற்ப நாடகங்கள் புதுவடிவம் பெற்றன. இதனால் முதல் மற்றும் இரண்டாம் வகை அரங்குகள் தம் செல்வாக்கை இழக்கத் தொடங்கின. இந்தியாவில் அரங்க வடிவத்தை சமகாலத்திற்கேற்ற வடிவமாக பாதல் சர்க்கார் மாற்ற எண்ணினார். நாடகங்களைப் பார்க்கப் பார்வையாளர்கள் வரவேண்டும் என்பதற்குப் பதிலாக பார்வையாளர்களை நோக்கி நாடகங்கள் செல்ல வேண்டும் என்ற கருத்து உருவானது. இதனைப் பாதல் சர்க்கார் மூன்றாம் அரங்கம் என்பதாக அறிமுகப்படுத்தினார். இது முதல் அரங்க அமைப்பைப்போல மக்கள் இருக்கும் இடத்தை நோக்கி அரங்கச் செயல்பாடுகளை நகர்த்தியது. ஒப்பனை அரங்கை கைவிட்டு விட்டு நடிகனின் குரல், உடல் இவற்றை மையப்படுத்தும் அரங்கு. மூன்றாம் அரங்கு அல்லது ஏழைகளின் அரங்கு எனவும் இது அழைக்கப்பட்டது.

**நவீன நாடகக் குழுக்கள்**

| நாடகக் குழுக்கள் | இடம் | நாடகக் குழுக்கள் | இடம் |
|---|---|---|---|
| கூத்துப்பட்டறை | சென்னை | ஐக்யா | சென்னை |
| நிஜநாடக இயக்கம் | மதுரை | திருச்சி நாடகச் சங்கம் | திருச்சி |
| பரீக்ஷா | சென்னை | யவனிகா | சென்னை |
| வீதி | சென்னை | ஒத்திகை | மதுரை |
| முத்ரா | சென்னை | தியேட்டர் லெப்ட் | மதுரை |
| தளிர் அரங்கு | காந்தி கிராமம் | தலைக்கோல் | புதுவை |
| துளிர் | தஞ்சை | கூட்டுக்குரல் | புதுவை |
| அரங்கம் | தஞ்சை | கூடம் | சென்னை |
| எது? | சென்னை | தன்னானே கலைக்குழு | புதுவை |
| சுதேசிகள் | மதுரை | ஆழி | புதுவை |
| ஜ்வாலா | மதுரை | ஆப்டிஸ்ட் | புதுவை |
| பல்கலை அரங்கம் | சென்னை | சென்னை முற்போக்கு எழுத்தாளர் கலைக்குழு | சென்னை |

**முதன்மையான நவீன நாடகக் குழுக்கள்**
**கூத்துப்பட்டறை**

கூத்துப்பட்டறை தொன்மையான தெருக்கூத்துக் கலையை நவீனமாக்கி, மேம்படுத்தும் நோக்கத்தோடு சென்னையில் 1977 ஆம் ஆண்டு ந.முத்துசாமியால் உருவாக்கப்பட்டது. இந்திய அரசின் கலாச்சார அமைச்சகம், யுனெஸ்கோ, ஃபோர்ட் அறக்கட்டளை, அலயன்ஸ் பிரான்சே, ஜெர்மனியின் மேக்ஸ்முல்லர் பவன் போன்ற அமைப்புகளின் ஆதரவில் இவ்வமைப்பு அரங்கச் செயல்பாடுகளை முன்னெடுத்தது. கூத்துப்பட்டறையில் நடிப்பிற்கு மட்டும் பயிற்சி அளிக்கப்படுவதில்லை. மாறாக நடனம், யோகா, சிலம்பம், தேவராட்டம், களரி, தாய்சி, தியானம் எனப் பல்துறைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இங்கு பயிற்சி பெற்ற பலர், தமிழ்த் திரைப்படங்களிலும் நடிகர்களாகச் சிறந்து விளங்குகின்றனர்.

இதுவரை 40-க்கும் மேற்பட்ட நாடகங்களை மேடையேற்றியுள்ளது கூத்துப்பட்டறை. அவற்றுள் நாற்காலிக்காரர், இங்கிலாந்து, நற்றுணையப்பன், காண்டவவன தகனம் போன்றன குறிப்பிடத்தக்கவை.

**நிஜ நாடக இயக்கம்**
நிஜ நாடக இயக்கத்தை 1978ஆம் ஆண்டு மதுரையில் மு. இராமசுவாமி தொடங்கினார். தொடக்கத்தில் எளிமையான திறந்தவெளி நாடகங்களை மட்டுமே நிகழ்த்திக் கொண்டிருந்த இவ்வியக்கம் பின்னாளில் மேடைகளில் தங்கள் நாடகங்களை அரங்கேற்றியது. நம் நாட்டின் மரபார்ந்த கலைகளை நகர்ப்புற மக்களுக்கு அறிமுகப்படுத்தி வந்த ‘தெம்மாங்கு’ அமைப்புடன் தன்னை இணைத்துக்கொண்டு தானும் அப்பணியைச் செய்தது. துர்க்கிர அவலம், சாபம் விமோசனம், கலகக்காரர் தோழர் பெரியார் போன்ற முக்கியமான நாடகங்களோடு 30-க்கும் மேற்பட்ட நாடகங்களை மேடையேற்றியுள்ளது.

**பரீக்ஷா**
‘பரீக்ஷா’, என்னும் நாடகக்குழு ஞாநியால் 1978ஆம் ஆண்டு சென்யில் தொடங்கப்பட்டது. நவீன நாடகங்களில் சோதனை முயற்சிகளை மேற்கொண்டதால் இக்குழு ‘பரீக்ஷா’ என்னும் பெயரைப் பெற்றது. முதன்முதலில் ந.முத்துசாமியின் ‘நாற்காலிக்காரர்’ என்ற நாடகத்தை

மேடையேற்றியது. இந்திரா பார்த்தசாரதியின் 'போர்வை போர்த்திய உடல்கள்', அம்பையின் 'பயங்கள்', அறந்தை நாராயணனின் 'மூர்மார்க்கெட்', பிரபஞ்சனின் 'முட்டை', ஞாநியின் 'பலூன்','நாங்கள்' அ. ராமசாமியின் 'பல்லக்குத்தூக்கிகள்' முதலான நாடகங்கள் பரீக்ஷா, நாடகக்குழுவின் மூலம் அரங்கேற்றம் செய்யப்பட்டன.

பாதல் சர்க்கார், பெர்டோல்ட், பிரெக்ட், விஜய் டெண்டுல்கர் போன்றோரின் பிறமொழி நாடகங்களையும் மேடையேற்றியுள்ளது.

**சென்னைக் கலைக்குழு**

சென்னைக் கலைக்குழு எழுத்தறிவு மற்றும் அறிவியல் பிரச்சார நாடகங்களை நடத்தும் நோக்கத்தோடு பிரளயனால் தொடங்கப்பட்டது. எளிமையும் கிராமியத் தன்மையும் சமூக விமர்சனங்களும் கொண்ட நாடகங்களை நடத்தி வருகின்றது. சென்னைக் கலைக்குழுவினர்,'வள்ளியின் வழக்கு','கொள்ளி வை' ஆகிய இரு வீதி நாடகங்களை நடத்தினர்.

**பல்கலையரங்கம்**

பல்கலைக்கழக மாணவர்களிடையே அரங்க ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் உருவாக்கும் நோக்கில் தொடங்கப்பட்ட அமைப்பு. ஈழ அரங்க ஆளுமையான இளைய பத்மநாபனிடம் பயிற்சிபெற்ற நடிகர்களைக் கொண்டு நாடகங்களை மேடையேற்றியது. 'ஏகலைவன்','ஒரு பயணத்தின் கதை','தீனிப்போர்' போன்ற நாடகங்கள் அக்குழுவின் குறிப்பிடத்தக்க நாடகங்கள்.

**கூட்டுக்குரல்**

பாண்டிச்சேரியில் 1990களில் இக்குழுவை ஆரம்பித்தவர் அ.ராமசாமி. இக்குழு 'நியாயங்கள்','திருப்பிக்கொடு','பல்லக்குத்தூக்கிகள்','சிற்பியின் நகரம்' முதலான நாடகங்களை நடத்தியுள்ளது. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நாடகங்களையும் தலித்திய உள்ளடக்க நாடகங்களான 'தண்ணீர்''வார்த்தை மிருகம்' போன்றனவும் இக்குழுவின் முக்கியமான நாடகங்கள்.

**மௌனக்குரல்**

இக்குழுவை நடத்தியவர் அ.மங்கை. இது பெண்களின் பல்வேறு பிரச்சனைகளைப் பேசும் நாடகங்களில் கவனம் செலுத்தியது. 'காலக்கனவு','ஔவை','குறிஞ்சிப்பாட்டு','மணிமேகலை' முதலான நாடகங்களை மேடையேற்றியுள்ளது. 'பெண் சிசுக் கொலை' நிகழும் தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் இக்குழு 'பச்ச மண்ணு' என்னும் விவாதக்கள வீதி அரங்க நிகழ்வை (Forum Theatre) நிகழ்த்தியது.

**சங்கீத நாடக அகாதெமி**

'சங்கீத நாடக அகாதெமி' (Sangeet Natak Akademi) இந்திய அரசால் நிகழ்த்துக் கலைகளுக்காக நிறுவப்பட்ட தேசியளவிலான அமைப்பாகும். 1952ஆம் ஆண்டு புதுடெல்லியில் உருவான இவ்வமைப்பு இந்தியக் கல்வி அமைச்சகத்தின்கீழ் செயல்பட்டு வந்தது. தற்போது இந்தியப் பண்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. இது இசை, நாட்டியம், நாடகம் ஆகிய கலைகளை ஊக்குவிப்பதே இதன் குறிக்கோள். சங்கீத நாடக அகாதெமியின் திட்டத்தில் தயாரிக்கப்பட்ட நாடகங்கள் அந்நதந்த மாநிலத்தின் பாரம்பரியத்தையும் புராண இதிகாசக் கூறுகளையும் மேடையேற்றின.

யுனெஸ்கோவின் உதவியோடு டில்லியில் இயங்கி வந்த 'பாரதிய நாட்டிய சங்கம்' (Bharathiya Natya Sangh) என்ற அமைப்பு 1958-இல் 'ஆசிய அரங்க நிறுவனம்' (Asian Theatre Institute) என்ற அமைப்பை ஏற்படுத்தியது.

பின்னர் 1959-இல் இந்த நிறுவனம் மைய அரசின் சங்கீத நாடக அமைப்போடு இணைக்கப்பட்டு 'தேசிய நாடகப்பள்ளி' (National School of Drama) என்று பெயர் மாற்றம் பெற்றது. இப்பள்ளி இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த இனம், மொழி பேசும் மக்கள் நாடகக்கல்வியை முறையாகப் பயில வழிவகுத்தது.

**தமிழ்நாடு இயலிசை நாடக மன்றம்**

'தமிழ்நாடு இயலிசை நாடக மன்றம் 'மத்திய சங்கீத நாடக அகாதெமியின் நோக்கங்களை மாநில அளவில் நிறைவேற்றுவதற்கா மாநில அரசால் உருவாக்கப்பட்ட அமைப்பு. இது தன்னாட்சி பெற்ற ஒரு கலை நிறுவனம். இம்மன்றம் தொன்மை வாய்ந்த தமிழகக் கலைகளைப் போற்றிப் பாதுகாத்து மேம்படுத்தி வருகிறது. இந்திய மாநிலங்களுக்கு இடையே பண்பாட்டுப் பரிவர்த்தனைத் திட்டத்தின்படி பிற மாநிலங்களுக்குக் கலைக்குழுக்களை அனுப்பியும் பிற மாநிலக் கலைக்குழக்களை வரவேற்றும் நிகழ்ச்சிகள் நடத்தி வருகிறது.

நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்குதல், மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குதல், இளங்கலைஞர்களை ஊக்குவித்தல், சாதனையாளர்களுக்குக் கலைமாமணி விருது வழங்குதல், நாடகக்குழுக்களுக்கு மானியம் வழங்குதல் முதலான பலதிட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்குதல், மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குதல், இளங்கலைஞர்களை ஊக்குவித்தல், சாதனையாளர்களுக்குக் கலைமாமணி விருது வழங்குதல், நாடகக்குழுக்களுக்கு மானியம் வழங்குதல் முதலான பலதிட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**நாடக விழாக்கள்**
தேசிய சங்கீத நாடக அகாதெமி நடத்திய போட்டியில் மு. இராமசுவாமி, துர்க்கிர அவலம் என்னும் நாடகத்தை அரங்கேற்றினார். பின்னர் பெங்களூரில் நடந்த தென் மண்டல நாடக விழாவிலும், டெல்லியில் நடந்த தேசிய விழாவிலும் இதனை நிகழ்த்திக் காட்டினார். இதனால் இந்திய அரங்கில் தமிழ் நாடகத்திற்கு ஓர் அடையாளம் கிடைத்தது. தென் மண்டல நாடக விழாவில் நிஜநாடக இயக்க நாடகமான "சாபம்! விமோசனம்! அரங்கேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மதுரையில் முதல் நாடக விழாவை நிஜநாடாக இயக்கம் 1988 ஆம் ஆண்டு நடத்தியது. திருச்சி தூய வளனார் கல்லூரியில் 1991 ஆம் ஆண்டு நடந்த பாதல் சர்க்கார் நாடக விழா குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

## தமிழ்த் திரைப்பட வரலாறு

திரைப்படம் ஓர் ஆற்றல் வாய்ந்த தகவல் தொடர்பு ஊடகம். மக்களுக்கு ஒரு கருத்தை எளிமையாகக் கொண்டுசெல்ல திரைப்படம் உதவுகிறது. இது மக்களின் இன்றியமையாத பொழுதுபோக்குச் சாதனமாக உள்ளது. உலகளாவிய திரைப்படங்களின் தாக்கத்தினால் நாகரிகம், பண்பாடு முதலியவற்றில் மாற்றங்கள் விளைகின்றன. திரைப்படம் இல்லாத உலகை நினைத்துப் பார்க்கவே முடியாது என்ற அளவில் திரைப்படம் மக்களோடு ஒன்றிவிட்டது.

**தொடக்கம்:**

19ஆம் நூற்றாண்டில் தோன்றிய விமையான காட்சி ஊடகம் திரைப்படம். 1895 இல் லூமியர் சகோதரர்களால் சலனப்படம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியாவில் 1896-ஆம் ஆண்டு மும்பையில் முதல் சலனப்படம் திரையடப்பட்டது. இதனைத் தொடர்ந்து சென்னையில் எட்வர்டு என்ற ஆங்கிலேயர் 1897 ஆம் ஆண்டு சில நிமிடங்களே ஓடக்கூடிய முதல் சலனப்படக் காட்சியைத் திரையிட்டுக் காட்டினார். சென்னையில் "விக்டோரியா பப்ளிக் ஹால்" என்ற அரங்கில் இக்காட்சி காட்டப்பட்டதைத் தொடர்ந்து பல நகரும்படக் காட்சிகள் சென்னை நகரின் பல்வேறு

**திரையரங்கு:**
1900 இல் தென்னிந்தியாவின் முதல் திரையரங்கு, சென்னை அண்ணாசாலையியல் (மவுண்ட் ரோடு) வார்விக் மேஜர் என்னும் ஆங்கிலேயரால் கட்டப்பட்டது. இதன் பெயர் எலக்ட்ரிக் தியேட்டர்.

1905 இல் திருச்சியில் சுவாமிக்கண்ணு வின்சென்ட் என்பவர் "எடிசன் சினிமாட்டோ கிராப்" என்ற திரைப்படம் காட்டும் நிறுவனத்தைத் தொடங்கினார். தென்னிந்தியாவின்

முதல் "டூரிங் டாக்கீஸ்" இதுவே. அதன் பிறகு கோயம்புத்தூரில் ரெயின்போ டாக்கீஸைக் கட்டிப் பல படங்களைத் தயாரிக்கவும் செய்தார். 1914 இல் சென்னையில் வெங்கையா என்பவரால் "கெயிட்டி" திரையரங்கு கட்டப்பட்டது. இந்தியர் ஒருவரால் தென்னிந்தியாவில் கட்டப்பட்ட முதல் திரையரங்கு இதுவே.

**மௌனப்படம்:**

டுபாண்ட் என்பவர் ஏசுநாதரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் கதைப்படத்தைக் கொண்டு வந்து பம்பாயில் காட்டினார். அந்தப் படத்தின் பெயர் "ஏசுவின் வாழ்க்கை" என்பதாகும். அந்த மௌனப்படம்தான் இந்தியாவில் காட்டப்பட்ட முதல் கதைப்படம் ஆகும். அதன்பின்,

**சலனப்படம்**

அசையாத படங்களை (Still pictures) வைத்து அசைவது போன்ற பிரமையை ஏற்படுத்துவது சலனப்படம் ஆகும். ஆங்கிலத்தில் இதனை "மூவி" (Movie) என்பர்.

பெரும்பாலும் மேலைநாட்டில் தயாரிக்கப்பட்ட கதைப்படங்களே இங்கு திரையிடப்பட்டன. இக்கதைப்படங்கள் வெளிவர ஆரம்பித்த பின், திரைப்படங்களுக்கு மக்களிடையே வரவேற்பு கூடியது. அதனால் இந்தியாவில் திரைப்படம் தயாரிக்கும் ஆர்வம் எழுந்தது.

தாதாசாகேப் பால்கே தயாரித்து வெளியிட்ட "ராஜா ஹரிச்சந்திரா" என்னும் மௌனப்படமே இந்தியர் ஒருவர் தயாரித்து வெளியிட்ட முதல் இந்தியத் தரைப்படம் ஆகும்.

மும்பையில் தயாரான "ராஜா ஹரிச்சந்திரா" போன்ற புராணப் படங்கள் சென்னையில் திரையிடப்பட்டன. புராணப் படங்களின் வரவேற்பைக் கண்ட நடராஜர் என்பவர் கீழ்ப்பாக்கத்தில், "இந்தியா பிலிம் கம்பெனி" என்ற நிறுவனத்தை நிறுவி, 1916 இல் "கீசகவதம்" என்ற மௌனப் படத்தைத் தயாரித்தார். தென்னிந்தியாவின் முதல் திரைப்படம் இதுதான்.

அதனைத் தொடர்ந்து மேலும் சில தயாரிப்பாளர்கள் திரைப்படங்களை எடுக்க ஆரம்பித்தனர். இதில் முக்கியமானவர் ஏ. நாராயணன். இவர் ஜெனரல் பிக்சர்ஸ் கார்ப்பரேஷன் என்ற பட நிறுவனத்தை நிறுவி, பல வெற்றிப் படங்களைத் தயாரித்தார். அதே காலகட்டத்தில் சென்னையில் நூற்றுக்கும் மேற்பட்ட மௌனப்படங்கள் தயாரிக்கப்பட்டன.

திரையரங்குகளில் மௌனப்படம் ஓடிக்கொண்டிருக்கும்போது, இடையே படத்தை நிறுத்தி, வெள்ளைத் திரைக்கு முன் அமைந்த மேடையில் மல்யுத்தம் நடனங்கள் முதலியவற்றை நடத்துவதும் ஒரு வழக்கமாக இருந்தது. இக்காலத்தில் "கதைசொல்லிகள்" என்னும் ஒருவகைக் கலைஞர்கள் உருவாயினர். படம் ஓடிக்கொண்டிருக்கும் போது, இருட்டில் திரையோரமாக நின்றவாறே ஒலிபெருக்கிக் குழாய் மூலமாக உரத்த குரலில் காட்சிச் சூழலை வருணித்தும், தேவையான இடங்களில் சுவையான வசனத்தையும் பேசிக் கதை கூறுபவர்களே இந்தக் கதைசொல்லிகள்.

திரைப்படக் காட்சிகள் மக்களிடம் செல்வாக்குப் பெற்றதைக் கண்ட ஆங்கில அரசு இந்த வெகுசனத் தொடர்புச் சாதனத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடிவு செய்தது. தொடர்ந்து இந்திய திரைப்படத் தணிக்கைச் சட்டத்தின் (Indian Cinematograph Act) மூலம் தணிக்கைத் துறையை 1918 ஆம் ஆண்டில் செயல்படுத்தியது.

**பேசும் படங்கள்:**

1926 இல் "வார்னர்" சகோதரர்களால் தயாரிக்கப்பட்டு முதன் முதலாகப் பேச்சு, பாடல் இல்லாமல் வெறும் சப்தத்தை மட்டும் கொண்டு வெளிவந்த படம் "டோன்ஜுன்", அதன்பின் உரையாடலையும் பாடல்களையும் கொண்டு உலகில் முதல் பேசும்பாடான "தி ஜாஸ் சிங்கர்" (The Jazz singer) வெளிவந்தது.

இந்தியாவின் முதல் பேசும்படம் இந்தி மொழியில் தயாரிக்கப்பட்ட “ஆலம் ஆரா“, இப்படம் 1931 இல் அர்தேஷிர் இரானி என்பவரால் இயக்கித் தயாரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழல் “குறத்திப்பாட்டும் டான்ஸும் என்ற நான்கு படச்சுருள் கொண்ட குரும்படம் வெளி வந்தது. அதே ஆண்டு எச்.எம்.ரெட்டி இயக்கிய முதல் முழுநீளத் தமிழ்ப் படமான “காளிதாஸ்“ வெளிவந்தது. இதுவே தமிழில் வெளிவந்த முதல் பேசும் படம்ட. “காளிதாஸ்“ படம் வெளிவந்ததும் தமிழ்த் திரைப்படங்களைத் தமிழகத்திலேயே தயாரித்து வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

முதல் நான்கு ஆண்டுகள் வரை சென்னையில் ஒலிப்பதிவுத் தொழில் நுட்ப வசதிகள் ஏதும் இல்லாததால் தமிழ்த் திரைப்படங்கள் மும்பையிலும், கல்கத்தாவிலுமே தயாரிக்கப்பட்டன. 1934 ஆம் ஆண்டில் தென்னிந்தியாவிலேயே சென்னையில் முதல் ஒலிப்பதிவுக் கூடம் நிறுவப்பட்டது. இதில் தயாரிக்கப்பட்ட முதல் தமிழ் பேசும்படம் “சீனிவாசக் கல்யாணம்“, இப்படம் ஏ. நாராயணனால் இயக்கப்பட்டது. அதன் பின் பல ஒலிப்பதிவுக் கூடங்கள் சென்னையில் நிறுவப்பட்டன.

**புராணக்கதைகள்:**

தொடக்கக்காலத் தமிழ்ப்படங்கள் புராணக்கதைகளை அடிப்படையாகக் கொண்டே எடுக்கப்பட்டன. அதிலும், கம்பெனி நாடகங்கள் மூலம் வரவேற்பு பெற்ற இராமாயண, மகாபாரத கதைகளே படமாக்கப்பட்டன. 1935 முதல் சமூக சீர்திருத்தக் கருத்துகளைக் கதைகளாகக் கொண்ட படங்கள் வெளிவந்தன. கௌசல்யா என்ற திரைப்படம் இக்கதையமைப்பில் வெளிவந்த முதல் திரைப்படமாக அறியப்படுகிறது. இதையடுத்து. வடுவூர் துரைசாமியின் மேனகா, காசி விஸ்வநாதரின் டம்பாச்சாரி ஆகிய படங்கள் இவ்வகையில் தயாரிக்கப்பட்டன.

ஆங்கிலேயரின் காலத்தில் காவல் ஆணையரின் கீழ் செயல்பட்ட தணிக்கைத்துறை ஒத்துழையாமை இயக்கத்தால் தன் சட்டங்களைக் கடுமையாக்கியது. அதனால், சில படங்கள் தயாரிப்பு நிலையிலேயே கைவிடப்பட்டன.

தேசியக் கருத்துகளையோ, காந்திய சமூக சீர்திருத்தங்களையோ ஆதரிக்கும் காட்சிகள் வெட்டப்பட்டன. எனவே, புராணக்கதைகளும், மாயாஜாலக் கதைகளுமே பெரிதும் தயாரிக்கப்பட்டன.

**பாடலுக்கு முதன்மை:**

தமிழ்நாட்டில் பேசும்படம் தோன்றியதும் தமிழ் நாடகங்களில் இருந்த பாடத் தெரிந்த நடிகர்கள், வசனகர்த்தாக்கள், இசையமைப்பாளர்கள் முதலிய கலைஞர்கள் திரைப்படங்களை நாடினர். அக்காலகட்டத்தில் வெளிவந்த திரைப்படங்களில் பெரும்பாலும் மேடை நாடகத் தன்மையே மேலோங்கியிருந்தது. பாட்டும் இசையும் தொடக்க காலத் திரைப்படங்களின் முதன்மை கூறுகளாக விளங்கின. ஒரே படத்தில் 50, 60 பாடல்கள் இருப்பது சிறப்பான நிலையாகக் கருதப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டது. அக்காலத்

> ஹாலிவுட்
> அமெரிக்காவில் இருந்த பழைமைவாதிகளாலும் மதப் பற்றுள்ளவர்களாலும் பல இன்னல்களுக்கு ஆளான திரைப்படக் கலைஞர்கள் அனைவரும், லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் இருந்த அடர்ந்த காட்டிற்குள் ஓடி ஒளிந்தனர். அந்தக் காடே அவர்களுக்குப் புகலிடம் தந்தது. அங்கிருந்தபடியே திரைப்படத் தொழிலில் ஈடுபட்டனர். தங்களுக்கு வாழ்க்கை அளித்த அந்தக் காட்டினை “ஹோலி வுட்“ (Holy wood - புனிதமான காடு) என்று பெயரிட்டுப் புகழந்து, அதனையே தங்கள் வாழ்விடமாகக் கருதினர். அதுவே இன்று திரைப்படத் துறையில் உலகப் புகழ்பெற்று விளங்கும் “ஹாலிவுட்“ நகரமானது.

திரைப்படங்கள் பாடலுக்கே முதன்மை தந்தன. அதனால் பாடும் திறமை பெற்றவர்களே நடிகர்களாக வரமுடிந்தது.

**விடுதலை உணர்வு:**

நாடக மேடைகளில் சுதந்திர வேட்கை கொழுந்துவிட்டு எரிந்த சூழலில், திரைப்படக் கதாபாத்திரங்கள் பேசும் வசனங்களின் மீதும் கவனம் செலுத்தப்பட்டது. இராஜாஜி முதல்வராக இருந்த இக்காலத்தில் தணிக்கை முறை விலக்கி வைக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் தான்

தியாக பூமி, மாத்ருபூமி, விமோசனம், தேச முன்னேற்றம் போன்ற நாட்டுப்பற்றைப் போற்றும் தமிழ்த் திரைப்படங்கள் வெளிவந்தன.

**வசனத்திற்கு முக்கியத்துவம்**

எல்லிஸ் ஆர். டங்கன் தமிழ்த் திரைப்படங்களில் 50, 60 பாடல்கள் என்றிருந்த நிலையை மாற்றி ஆறு அல்லது எட்டுப் பாடல்களாகக் குறைத்தார். வெளிப்புறப் படப்பிடிப்பை அதிகம் பயன்படுத்தினார். ஹாலிவுட் பாணியில் கதைகூறும் முறையைத் தமிழ்ப் படங்களில் அறிமுகப்படுத்தியவரும் இவரே. இம்முறையைப் பயன்படுத்தி எடுக்கப்பட்ட தமிழ்த் திரைப்படங்கள் இசைக்கும், பாட்டுக்குமே முதன்மை அளித்து வந்த நிலையை மாற்றிப் பாத்திரப் பேச்சுக்கு முக்கியத்துவம் தந்தன. மணிமேகலைக்குச் சோமையாஜுலுவும், சிவகவிக்கு இளங்கோவனும் வசனம் எழுதி, தமிழ்த் திரைப்படங்களில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தனர். இதனைத் தொடர்ந்து வந்த படங்களில் இலக்கியத்தமிழ் கொண்ட வசனங்கள் முதன்மை பெற்று, வசனம் எழுதுபவர்கள் கவனம் பெற்றனர்.

திரைப்படத்தின் நோக்கத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் வசனங்களுக்கு இன்றியமையாத பங்குண்டு. இயக்குநர் தம் மனதில் தோன்றும் காட்சிகளை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துவதற்கு வசனங்கள் உதவுகின்றன. வசனம் என்பது பாத்திரங்களுக்கிடையேயான உரையாடல் மட்டுமன்று. அது கதையின் போக்கை நகர்த்திச் செல்ல உதவும் முக்கிய கூறு, வசனம் கதாபாத்திரத்தின் குணலன்களையும், அக்கதாபாத்திரத்தின் சமூக, பண்பாட்டுப் பின்புலங்களையும் வெளிப்படுத்துகிறது. கதை களத்திற்கு ஏற்றவாறு கதை வசனம் அமைதல் வேண்டும்.

தமிழ்த் திரைப்பட வரலாற்றில் வசனங்களுக்கென்று மிகப்பெரிய இடம் உண்டு. அண்ணா, ஆரூர்தாஸ், கலைஞர், ஏ.பி. நாகராஜன், கே.எஸ். கோபாலகிருஷ்ணன், பஞ்சு அருணாசலம், கே. பாக்யராஜ், சேரன் போன்றோர் வசனத்திற்காகவே புகழ்பெற்றவர்கள். தற்போது புனைகதைகளை எழுதிவரும் எஸ். ராமகிருஷ்ணன், ஜெயமோகன், நாஞ்சில் நாடன் போன்றவர்களும் வசனம் எழுத வந்துள்ளனர்.

**பகுத்தறிவுக் கருத்துகள்:**

பகுத்தறிவுக் கருத்துக்களை உள்ளடக்கிய சில படங்கள் 1940 களில் வெளிவந்தன. நாடக ஆசிரியர்களாகப் புகழ் பெற்ற திராவிட இயக்கத் தலைவர்கள் சிலர் திரைப்படத் துறையில் ஈடுபாடு கொண்டனர். "நல்லதம்பி" படத்திற்குக் கதை வசனம் எழுதியதன் மூலம் அறிஞர் அண்ணா திரையுலகில் அறியப்பட்டார். "வேலைக்காரி" படம் அவருக்கு மேலும் புகழைப் பெற்றுத்தந்தது.

அவரைத் தொடர்ந்து மு. கருணாநிதி "மந்திரி குமாரி" என்ற படத்திற்கு வசனம் எழுதினார். இவர் வசனம் எழுதிய "பராசக்தி" திரைப்படத்தின் வெற்றிக்குப் பாத்திரங்களின் அலங்கார வசனமே முதன்மை காரணமானது. இந்தக் காலகட்டத்தில் சீர்திருத்தக் கருத்துகளை உள்ளடக்கிய திராவிட இயக்கத் திரைப்படங்கள் பல வெளிவந்தன.

**நடிகர்கள்**

ஒரு திரைப்படத்தின் வெற்றி கதாபாத்திரங்களின் நடிப்புத் திறனைக் கொண்டே அமைகின்றது. ஒரு நடிகர் கதாப்பாத்திரம் வாழும் சூழல், குணநலன்கள் ஆகியவற்றை உள்ளவாங்கிக் கொண்டு அந்த கதாபாத்திரமாகவே மாறி நடிக்க வேண்டும். நடிகர்கள் எண்வகை மெய்ப்பாடுகளையும் வெளிப்படுத்துபவராக இருக்க வேண்டும். தேர்ந்த குரல் வளம், உடல் மொழி, முகத்தோற்றம் போன்றவை நடிகனுக்கு இன்றியமையாதவை. தமிழ்த் திரைப்படத்தில் தன் நடிப்புத் திறமையால் கதாநாயகர்களாகவும் கதாநாயகிகளாகவும் எதிர்நிலை நாயகர்களாகவும் நகைச்சுவை நடிகர்களாகவும் உயர்ந்தவர்கள் பலர்.

தமிழ்த் திரைப்படம் பெரும்பாலும் நடிகர்களை முன்னிலைப்படுத்தியே கவனம் கொள்ளப்பட்டு வருகின்றது. அதிலும் கதாநாயகர்கள் குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெற்று வருகின்றனர். பாடல் முதன்மை பெற்றபோது பாடும் திறம் கொண்ட நடிகர்களான பி.யு. சின்னப்பா, எம்.கே. தியாகராஜ பாகவதர் போன்றோர் நாயகர்களாகத் திகழந்தனர். பின்பு வசனமும் மக்களைக் கவரும் கதையமைப்பும் முக்கியத்துவம் பெற்றபோது அதில் நடித்த நாயகர்கள் பெரும்புகழைப் பெற்றனர். உணர்ச்சிகரமான வசனத்திற்காக சிவாஜிகணேசனும், அதன் மறுதலையாக

மக்களின் துயரங்களைப் போக்கும் விதமான பாத்திரங்களுக்காக எம்.ஜி. ஆரும் அறியப்பட்டார்கள். இவ்விரு ஆளுமைகளும் ஒரே காலகட்டத்தில் நாயகர்களாக வலம் வந்தது தமிழ்த் திரைப்பட வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. ஜெமினிகணேசன், ஜெயசங்கர் போன்றோரும் அக்கால கட்டத்தில் நாயகர்களாக நன்கு அறியப்பட்டனர்.

பானுமதி - இயக்குநர், நடிகை, எழுத்தாளர், இசையமைப்பாளர் போன்ற பன்முகத் தன்மை வாய்ந்த ஆளுமையாகத் திரையுலகில் புகழ்பெற்றவா.

சாவித்திரி, சரோஜாதேவி, பத்மினி, ஜெயலலிதா, லட்சுமி போன்றோர் நாயகிகளாக நடித்துத் தனி முத்திரை பதித்தனர்.

பி.எஸ். வீரப்பா, எம்.ஆர். ராதா, எம்.என். நம்பியார், ஆர்.எஸ். மனோகர், அசோகன் போன்றோர் சிறந்த எதிர்நிலை கதாபாத்திரங்களாகத் தோன்றி தமிழ்த் திரையுலகில் வலம்வந்தனர்.

என்.எஸ். கிருஷ்ணன், சந்திரபாபு, தங்கவேலு, நாகேஷ், டி.ஏ. மதுரம், மனோரமா போன்றோர் தங்கள் நகைச்சுவையால் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தனர்.

இவர்களைத் தொடர்ந்து எண்ணற்ற நடிகர்கள் நாயகர்களாகவும் நாயகிகளாகவும் எதிர்நிலை நாயகர்களாகவும் நகைச்சுவை எதிர்நிலை நாயகர்களாகவும் நகைச்சுவை நடிகர்களாகவும் தங்கள் பங்களிப்பை நல்கிவருகின்றனர்.

**இயக்குநர்கள்:**
அறுபதுகளில் புதிய இயக்குநர்கள் பலர் தமிழ்த் திரையுலகில் நுழைந்தனர். பீம்சிங் என்ற இயக்குநர் “பாவ மன்னிப்பு“, “பார்த்தால் பசி தீரும்“ ஆகிய படங்களை இயக்கி புகழுடன் விளங்கியவர். ஏ.பி. நாகராஜன் “சரஸ்வதி சபதம்“ படத்தின் மூலம் சிறந்த புராணப்பட இயக்குநர் என்ற பெயரைப் பெற்றுப் பல படங்களை இயக்கினார். ஸ்ரீதர் “கல்யாணப் பரிசு“ படத்தின் மூலம் புகழ்பெற்றார். “நெஞ்சில் ஓர் ஆலயம், “காதலிக்க நேரமில்லை” போன்ற படங்களையும் இயக்கியுள்ளார். கம்பெனி நாடகப் பாரம்பரியத்தில் வளர்ந்த கே.எஸ். கோபால கிருஷ்ணன் “கற்பகம்“ படத்தின் மூலம் புகழ்மிக்க இயக்குநரானார். ஜெயகாந்தன் “உன்னைப் போல் ஒருவன்“ என்ற தனது குறுநாவலைத் திரைப்படமாக அவரே இயக்கினார். அது தேசிய அளவில் விருதினையும் பெற்று எதார்த்தத் திரைப்படமாக அறிமுகமானது. மேடை நாடக ஆசிரியராகத் திகழ்ந்த கே. பாலசந்தர் “நீர்க்குமிழி” படத்தின் மூலம் தமிழ்த் திரைப்பட இயக்குநராகப் புகழ் பெற்றார்.

**எதார்த்தப் பாணி:**

சென்னை அடையாறில் திரைப்படக் கல்லூரி தொடங்கப்பட்டது. இது திரைப்படக் கல்லூரி மாணவர்களின் புதிய பாணி தமிழ்த் திரைப்படத்தில் வெளிப்படத் தொடங்கியது. மகேந்திரன், பாலுமகேந்திரா ஆகியோர் எதார்த்த பாணியில் அமைந்த திரைப்படங்களை இயக்கினர். பாரதிராஜா வெளிப்புறப் படப்பிடிப்பை முதன்மையாக்கிக் கிராமியப் படங்களை உருவாக்கினார்.

அதன்பின்பு வெளிவந்த படங்களில் புதிய நடிகர்கள், கிராமியப் பின்னணி, எதார்த்தத்தில் அழுத்தம் ஆகியன கதைச் சூழலை மாற்றின. இயல்பு நடிப்பைப் பின்பற்றிப் பல படங்கள் வெளிவந்தன. இக்காலகட்டத்தில் நிகழ்ந்த மற்றொரு முக்கிய நிகழ்வு இளையராஜாவின் இசை, இவர் கிராமிய இசையினை எதார்த்தப் பாணியில் கொண்டுவந்து தமிழ்த் திரையில் ஒலிக்கச் செய்தார். “அன்னக்கிளி“ படத்திற்கு அமைத்த இசை மக்களால் பெரிதும் பேசப்பட்டது.

**காதல் சிக்கல்கள்:**

எண்பதுகளின் தொடக்கத்தில் தமிழ்ப் படத் தயாரிப்பு, முன்பில்லாத அளவு அதிகரித்தது. இந்தியாவில் வர்த்தரீதியில் இந்தித் திரைப்படங்களுக்கு அடுத்தபடியாக இரண்டாமிடத்தில் இருப்பது தமிழ்த் திரைப்படங்கள் தான். நட்சத்திர ஆளுமையில் ராஜினிகாந்த், கமலஹாசன் போன்றோரின் புகழ் ஓங்கசகியதும் இந்த ஆண்டுகளில் தான். பெண்களின் மன இயல்பு, காதலால் ஏற்படும் சிக்கல்கள் போன்றவை இக்காலகட்டத் திரைப்படங்களில் மிகுதியும் கருப்பொருளாயின. அடையாறு திரைப்படக் கல்லூரியில் பயின்ற ருத்ரய்யாவின் “அவள் அப்படித்தான்“ படம் பெரிதும் பேசப்பட்டது. எண்பதுகளில் குறிப்பிடத்தக்க மற்றுமோர்

இயக்குநராகக் கருதப்படுபவர் மணிரத்னம். அவரது “மௌனராகம்“ சிறந்த தமிழ்ப் படத்திற்கான விருதைப் பெற்றது.

பாக்யராஜ், ஷங்கர், பாலா, வசந்தபாலன், பாலாஜி சக்திவேல், வெற்றிமாறன் போன்றோர் இந்திய அளவில் கவனம் ஈர்த்த இயக்குநர்களாக அறியப்படுகின்றனர்.

**இன்றைய தமிழ்த் திரைப்படங்கள்:**

இன்றைய தமிழ்த் திரைப்படங்களில் படப்பிடிப்பிலும் படத்தொகுப்பிலும் தொழில் நுட்ப வளர்ச்சியைக் காணமுடிகிறது. முழுவதும் எண்ணிமத் (digital) தொழில் நுட்பமாக்கப்பட்ட தமிழ்த் திரைப்படத்தில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய இயக்குநர்களின் வருகை புது நம்பிக்கையைக் கொடுத்துள்ளது. தேசிய அளவில் தமிழ்த் திரைப்படங்கள் கவனிக்கப்படுவதுடன் வருதுகளைப் பெற்றும் வருகின்றன.

சில படங்களே உலக அளவில் பேசப்படுகின்றன. பெரியார், வெயில், காக்கா முட்டை, மனுசங்கடா, விசாரணை போன்ற படங்கள் குறிப்பிடத்தக்கன. தமிழ்த் திரைப்படத்துறை பல்வேறு வளர்ச்சிப் படிநிலைகளைக் கொண்டது. கலைத்தன்மை வாய்ந்த திரைப்படங்கள் அவ்வப்போது வந்தாலும் வணிக ரீதியிலான படங்களே பெரும்பான்மையாகத் தயாரிக்கப்படுகின்றன.

**ஆல்கர் விருது:**
ஆஸ்கர் விருது எனப் பரவலாக அறியப்படும் அகாதெமி விருதுகள் அமெரிக்காவில் திரைத்துறைக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதாகும். ஆஸ்கர் விழாவை 1927 இல் நிறுவப்பட்ட “அகாதெமி ஆப் மோஷன் பிக்கசர் ஆர்ட்ஸ் & சயின்ஸ்“ என்ற அமைப்ப ஒருங்கிணைக்கிறது. இவ்வமைப்பு 1929 ஆம் ஆண்டு முதல் ஆஸ்கர் விருதினை வழங்கி வருகிறது. ஆஸ்கர் விருது பெற்ற முதல் இந்தியர்

**உலகளாவிய திரைப்பட விருதுகள்:**
பானு அத்தையா, காந்தி படத்திற்காக இவ்விருதினைப் பெற்றார். வாழ்நாள் சாதனைக்காக ஆஸ்கர் விருது பெற்ற இந்தியர் சத்தியஜித் ரே. இசைக்கலைஞர் ஏ.ஆர். ரகுமான் ‘ஸ்லம்டாக் மில்லியனர்’ என்ற திரைப்படத்திற்காக 2009 ஆம் ஆண்டு இரண்டு விருதுகள் வென்றார்.

**கான்ஸ் உலகத் திரைப்பட விழா:**
1939-இல் கான்ஸ் உலகத் திரைப்பட விழா பிரான்சில் தொடங்கப்பட்டது. இரண்டாம் உலகப்போரால் தடுமாற்றம் கொண்டதால், அதன் தொடர்ச்சியான ஆண்டுகளில் திரைப்பட விழா நடைபெறவில்லை. மீண்டும் 1949 ஆம் ஆண்டிலிருந்து இத்திரைப்பட விழாவிற்கு மிகுந்த முக்கியத்துவம் உருவானது. 1955 ஆம் ஆண்டிலிருந்து தங்கப் பனை (The Golden Palm) விருது வழங்கப்படுகிறது.
இவற்றைப் போன்றே பெர்லின் உலகத் திரைப்பட விழா, வெனிஸ் திரைப்பட விழா, மாஸ்கோ திரைப்பட விழா, நியூயார்க் திரைப்பட விமர்சகர் விழா, டோக்கியோ திரைப்பட விழா போன்றவை குறிப்பிடத்தக்கவை.

**இந்தியத் திரைப்பட விருதுகள்**
**சர்வதேச திரைப்பட விழா (IFFI)**
திரைப்பட ஆர்வலர்களுக்குத் திருவிழா என்பது ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாக்கள் தாம். இந்தியாவின் முதல் பிரதம மந்திரி ஆதரவுடன், 1952 ஆம் ஆண்டு மும்பையில் முதலில் நடைபெற்றது. அதன்பின் சென்னை, கல்கத்தா, திருவனந்தபுரம். கோவா போன்ற இந்திய நகரங்களில் தொடர்ச்சியாக நடந்துவருகின்றது. இது மத்திய அரசின் அங்கீகாரத்துடன் நடைபெறுகிறது. இதில் உலகின் பல்வேறு நாட்டிலிருந்து வருகை தரும் திரைக்கலைஞர்களின் நேரடி பங்களிப்போடு நடைபெறுவதால் இது முக்கியமான திரை விழாவாகும். இதில் “இந்தியன் பனோரமா“ பிரிவில் ஒவ்வோர் ஆண்டும் வெளியான முக்கியமான இந்தியத் திரைப்படங்கள் திரையிடப்படும்.

**தாதாசாகேப் பால்கே விருது:**
இந்தியத் திரைப்படத் துறையில் வாழ்நாள் சாதனை புரிந்தோருக்காக இந்திய அரசால் ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படும். இந்தியத் திரைப்படத் துறையின் தந்தை எனக்

கருதப்படும் தாதாசாகேப் பால்கே அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டான 1969 ஆம் ஆண்டு இவ்விருது வழங்கும் அமைப்பு நிறுவப்பட்டது. தேவிகா ராணி 1969 ஆம் ஆண்டு முதன் முதலில் இவ்விருதைப் பெற்றார். தமிழகத்தில் 1996 ஆம் ஆண்டு சிவாஜி கணேசனும் 2010 ஆம் ஆண்டு கே. பாலச்சந்தரும் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

**தேசிய திரைப்பட விருது:**
இந்தியாவின் தொன்மையானது முதன்மையானதுமான விருது தேசிய திரைப்பட விருது. இவ்விருது வழங்கும் அமைப்பு 1954 ஆம் ஆண்டு இந்திய அரசால் நிறுவப்பட்டது. இந்திய திரைப்பட விழாக்களின் இயக்குநரகம் 1973 முதல் இவ்விருதுகளை வழங்கி வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் குடியரசுத் தலைவரால் புதுதில்லியில் இவ்விருது வழங்கப்படுகிறது. முதல் தேசிய விருதினைப் பெற்ற தமிழ்ப்படம் “மலைக்கள்ளன்“.

## திரைக்கலை நுட்பங்கள்

திரைப்படம் தயாரித்தல் ஒரு கலை, காட்சிகளின் ஒளிப்பதிவும் அக்காட்சிகளைப் படமாக்கும் நுட்பமும் முதன்மையான ஒன்று, காட்சிகளின் வெளிப்பாட்டு நுட்பமும் பின்னணி இசையும் கதைக்குள் பார்வையாளரை ஈர்த்துக்கொள்பவை.

நாம் திரையில் பார்க்கும் செவ்வச் சட்டகத்திற்குள் (frame) பல்வேறு திரைக்கலை நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டரை மணி நேரத்தில் நாம் பார்த்துவிடக் கூடிய ஒரு திரைப்படத்தை எடுப்பதற்குத் திரைப்படக் குழுவினர் மேற்கொள்ளும் முயற்சிகள் அளப்பரியவை. திரைவெளியில் பயன்படுத்தப்படும் திரைக்கலை நுட்பங்களைத் தெரிந்துகொள்வதென்பது ஒரு திரைப்படம் எப்படி உருவாக்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள உதவும்.

### கதை (Story):
ஒரு நல்ல திரைப்படம் ஒரு கதையைச் சொல்ல வேண்டும். அதனால்தான் “கதை“ திரைப்படத்தின் உயிர் என்று கருதப்படுகிறது. ஒரு கதையை எப்படித் தேர்ந்தெடுப்பது? கதை, உணர்வுபூர்வமாக நம் மனநிலையில் ஒரு பாதிப்பை ஏற்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட கதையைத் திரைப்படத்திற்கேற்ற திரைக்கதையாக மாற்ற வேண்டும்.

### முடிச்சு (knot)
திரைக்கடையின் உயிர்மூச்சு முடிச்சு ஆகும். கதையின் விறுவிறுப்பு கதைமுடிச்சில் உள்ளது. இதனை ஆங்கிலத்தில் “நாட்“ (knot) என்பர். காப்பியம், புதினம் முதலிய எல்லாவகைக் கதை இலக்கியங்களுக்கும் இந்த முடிச்சு அடிப்படையானது. அதனால் ஒரு கதையில் முடிச்சு எது என்பதை அறிதல் வேண்டும். ஒரு சிக்கலை முடிச்சு எனக் கருதலாம். “திரைக்கதையில் அவிழ்ப்பதற்கு மிகச் சவாலான சிக்கலே முடிச்சு” என்று கூறுவர். இதனை இடைஞ்சல், லாக், ஸ்டன் டிவிஸ்ட், பொறி, ஐடியா என்று பல பெயர்களால் சுட்டுவர். ஒரு திரைக்கதையில் எத்தனை கற்பனை வளமான காட்சிகளைச் சேர்த்துச் சுவையாக்கினாலும், விவாதப் பொருண்மை என்னும் அடிப்படையான கருத்து இல்லாமல் திரைக்கதையை எழுதத் தொடங்கக் கூடாது என்பர்.

கருத்து இல்லாமல் திரைக்கதையை எழுதத் தொடங்கக் கூடாது என்பர்.

### ஒருவரிக் கதை (One line):
திரைக்கதையைத் தேர்ந்தெடுத்துவிட்டால், அதன் பிறகு செய்ய வேண்டிய வேலை, அதைக் காட்சிகளாகப் பிரித்து, காட்சிகளில் அந்தந்த இடங்களுக்குத் தேவையான, முக்கியமான வசனங்களை உட்படுத்துவது, சுருக்கமாகச் சொன்ன ஒரு கதையை, விரிவான காட்சியகளாக மாற்றி அமைக்க முதலில் இதை ஒருவரியாக மாற்ற வேண்டும். எடுக்கப்போகும் ஒரு திரைப்படத்தின் கதையை மிகமிகச் சுருக்கமாக ஒரு பத்தி அளவில் சொல்லப்படுகிற கதைச்சுருக்கம் “ஒன் லைன்“ அல்லது “ஒருவரிக் கதை“ என்று கூறப்படும். இரண்டரை மணிநேரம் திரையில் ஓடக்கூடிய ஒரு திரைப்படத்தின் கதையை ஒரு நிமிட நேரத்திற்குள் மிகவும் சுருக்கமாகச் சொல்வதால், இதனை ஒருவரிக் கதை என்று சொல்வர்.

ஒவ்வொரு காட்சியையும் இரண்டு அல்லது மூன்று வரிக்குள் எழுதும் சுருக்க வடிவமாகவும் ஒருவரி அமையும். இந்த ஒருவரி அடிப்படையில்தான் திரைக்கதையின் ஒவ்வொரு காட்சியும்

எழுதப்படுகிறது. இந்தக் காட்சிகளை வைத்துக்கொண்டுதான் காட்சித் துணிப்புகளை உருவாக்குகின்றனர். பல காட்சித் துணிப்புகள் சேர்ந்துதான் ஒரு காட்சியானது உருவாகின்றது. திரைக்கதையில் மிகவும் முக்கியமான கட்டமைப்பு முறையே காட்சி எனப்படுகிறது. காட்சிகள் தாம் கதையை நகர்த்திச் செல்ல உதவும்.

காட்சிகள் மூலம் கதையை நகர்த்திச் செல்ல முடியாதபோதுதான், உரையாடல்கள் இடம்பெறும். இதை கதையின் நோக்கத்தை முழுமைப்படுதுத்த வேண்டும். கதாபாத்திரத்தின் உள்ளுணர்வை வெளிப்படுத்துவதோடு காட்சிகளுக்கு மேலும் வலுவேற்ற வேண்டும். எழுதி முடித்த ஒரு காட்சியை, விஷுவலாக எவ்வாறு பார்வையாளரிடம் கொண்டு போய்ச் சேர்ப்பது என்பது முக்கியம். அதற்குக் கதை, காட்சி, உரையாடல் போன்றவற்றோடு திரைப்படத்தின் பிற நுட்பங்களையும் அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது.

ஒரு கதையை எப்படித் திரைப்படமாக எடுக்க முடியும் என்பதை அறிவதற்குத் திரைப்பட நுட்பங்கள் தாம் முதலில் தேவை. அதன் நுட்பங்களை ஒரு கதையோடு பொருத்திப் பார்த்தால் எவ்வாறு திரைப்படமாகிறது என்பதை அறியலாம். அந்த வகையில் நம் பாடத்தில் கதையியல் பகுதியில் இடம்பெற்றுள்ள "கல்மரம்" புதினத்தின் ஒரு காட்சியை மட்டும் எடுத்துக் கொள்வோம். அந்தக் காட்சியை எப்படிப் படமாக்கலாம். படமாக்கப்படுவதற்கான உத்திகள் என்னென்ன? அதில் எவ்வாறு திரைநுட்பங்களைப் பயன்படுத்தலாம் என்பனவற்றை இக்காட்சியின் வழியே காண்போம்.

"கையில் இருந்த உணவுக் கவளத்தைத் தட்டில் உதறிவிட்டு கன்னியம்மாளின் அருகேபோய் உட்கார்ந்தாள் ஆதிலட்சுமி, உட்காருவதற்குக் கூட தெம்பு இல்லாதவளாக உட்கார்ந்த நிலையிலேயே சுருண்டாற் போல் தரையில் சரிந்தாள் கன்னியம்மாள்.

'ஒரே மயக்கமாக்கீது' என்று அவள் வாய் முணுமுணுத்தது.

சொர சொரத்துக் காய்ந்து கருத்துப்போன தன் இடது கைவிரல்களால் தாய்மையின் கனிவெல்லாம் மேன்மையெல்லாம் தேக்கித் தரையில் கிடந்த மகளின் மெலிந்த உடலையும் நெற்றியையும் ஆதரவாகத் தடவிக் கொடுத்தது ஆதிலட்சுமியின் கை"

### காட்சித்துணிப்பு (Shot):

கல்மரம் கதையில் உள்ள இந்தக் காட்சியைப் படமாக்கும் போது பல காட்சித் துணிப்புகளாக எடுத்துப் பின் ஒரே காட்சியாக இணைக்க வேண்டும். காட்சித் துணிப்பு என்பது திரைப்படத்தின் மிகச் சிறிய கூறு. இடையே எந்த வெட்டும் இல்லாமல் தொடர்ந்து பதிவு செய்யப்பட்ட ஒரு படமாகும். இயக்குநர், தொடங்கு எனச் சொல்வதிலிருந்து நிறுத்து சொல்வது வரை 'காட்சி' என்று சொல்லலாம். கன்னியம்மாள் வீட்டிற்குள் வருவதை மட்டும் காட்டுவது ஒரு காட்சித் துணிப்பு (Shot). கன்னியம்மாளைப் பார்த்துவிட்டு ஆதிலட்சுமி உணவுக் களத்தைத் தட்டில் உதறுவது மற்றொரு காட்சித் துணிப்பு. கன்னியம்மாள் சோர்வாக உட்காருவது இன்னொரு காட்சித் துணிப்பு. இந்தக் காட்சித் துணிப்புகள் அனைத்தையும் ஒரே காட்சித் துணிப்பாகவும் எடுக்கலாம். அது சட்டகத்தைப் பொறுத்தே அமையும்.

### சட்டகம் (Frame):

திரையில் காட்டப்படும் தனியான பிம்பம் ஒரு சட்டகம். அது படச்சுருளிலும் பின்னர்த் திரையிலும் தெரியும் பிம்பத்தின் அளவும் வடிவமும் ஆகும்.

மேலும் சட்டகம் என்பது திரைப்படத்தின் அமைப்புரீதியான ஓர் அலகு ஆகும். கன்னியம்மாள், ஆதிலட்சுமி, காவேரி ஆகிய மூவரையும் ஒரே சட்டகத்திற்குள் அமையுமாறும் வைக்கலாம். தனித்தனி சட்டகத்திற்குள் அமையுமாறும் வைக்கலாம். இந்த சட்டகத்திற்குள் நிகழும் நிகழ்வே காட்சித்துண்டு.

### காட்சி (Scene):

இப்படி ஒவ்வொரு நிகழ்வையும் தனித்தனி காட்சித்துணிப்புகளாக எடுத்து அவற்றை ஒன்றாக இணைத்தே ஒரு காட்சி (scens) உருவாக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிகழும் ஒரு

நிகழ்ச்சியைக் காட்டும் பல்வேறு காட்சித்துணிப்புகளின் தொகுப்பே காட்சி. இக்காட்சியானது எவ்வளவு நீளமாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஒரே காட்சித்துணிப்பாகவும் இருக்கலாம்.

காட்சித்துணிப்பு அண்மைக் காட்சி (Closcup shot), இடைநிலைக் காட்சி (Mid shot), சேய்மைக் காட்சி,(Long shot), முழுக்காட்சி (Full shot) எனப் பல வகையாக அமையும். அண்மைக் காட்சியாக எடுக்கும்போது இவை தனித்தனி காட்சித்துணிப்புகளாகவும் முழுக்காட்சியாக, சேய்மைக்காட்சியாக எடுக்கும் போது ஒரே காட்சித்துணிப்பாகவும் இருக்கின்றன.

**அண்மைக் காட்சி:**

மனிதனையோ பொருளையோ அண்மையில் எடுக்கப்படும் துணிப்புக்கு அண்மைக் காட்சி என்று பெயர். அண்மைக்காட்சியில் மற்றவை மறைந்து எந்தப் பகுதியை மையப்படுத்துகிறோமோ அதுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. இதனால் மனிதனின் உணர்வுகளைத் தெளிவாக உணர முடியும். கன்னியம்மாள் சோர்வாக இருப்பதை உணர்த்த முகத்தை மட்டும் காட்டுவது அண்மைக் காட்சி.

**இடைநிலைக் காட்சி:**

சாதாரணமாக ஒருவரைப் பார்க்கும்போது கால் வரை நாம் பார்ப்பதில்லை. இடுப்பு வரைதான் பார்ப்போம். இடுப்புவரை எடுக்கப்படும் காட்சியை இடைநிலைக் காட்சி எனலாம். பொதுவாக திரைப்படங்களில் இக்காட்சியை அதிகம் பயன்படுத்துகிறார்கள். உரையாடலுக்கு ஏற்ற துணிப்பு இது. ஆதிலட்சுமியிடம் ‘ஒரே மயக்கமாக்கீது’ என்று கன்னியம்மாள் உரையாடுகிறாள். இதனை இடைநிலைக்காட்சியின் மூலம் காட்டப்படும் போது உச்சரிப்பை நன்கு உணரலாம்.

**சேய்மைக்காட்சி:**

துணிப்புகளின் தலைமையாக சேய்மைக்காட்சி விளங்குகிறது. நகரத்தையோ, நிலப்பகுதியையோ காண்பிப்பதற்கு ஏற்ற துணிப்பு இது. கதையில் வரும் கட்டடத் தொழிலாளர் தாங்கள் கட்டிய கட்டடங்களை நினைத்துப் பார்க்கும் போது, சேய்மைக்காட்சி அனைத்துக் கட்டடங்களையும் ஒரு சேரக் காட்டலாம்.

**முழுக்காட்சி:**

முகத்திலிருந்து பாதம் வரை எடுக்கப்படும் காட்சிக்கு முழுக்காட்சி என்று பெயர். ஓர் இடத்தையோ, பொருளையோ ஒரு செயல் நடந்து கொண்டிருக்கும் காட்சியையோ, முழுமையாகக் காண்பிக்கும் காட்சியை முழுக்காட்சி (மாஸ்டர் ஷாட்) என்கிறோம். ஆதிலட்சுமி எழுந்து தன் மகள் கன்னியம்மாளிடம் வருவதைக் காட்டுவது ‘முழுக்காட்சி’.

இவ்வாறு ஒவ்வொரு துணிப்பும் அது வெளிப்படுத்தும் உணர்ச்சிக்கேற்ப மாறுபடும். உணர்ச்சியைச் சரியாகக் காட்சிப்படுத்த பல்வேறு கோணங்களில் படம் பிடிக்கப்பட வேண்டியிருக்கிறது. தூக்கிச் சுழலும் காட்சி (Crane shot) பலவித கோணங்களையும் தீர்மானிக்கிறது. மனிதன் பார்க்க முடியாத கோணங்களையும் இதன்மூலம் எடுக்கலாம்.

**படப்பிடிப்புக் கருவி கோணம்:**

ஒரு காட்சியை மூன்றுவித கோணங்கள் மூலம் கொண்டுவர முடியும். இதனைப் புறநிலைக் கோணம், அகநிலைக் கோணம், பார்வையாளர் கோணம் என்று அழைப்பர். எந்தக் கோணத்தில் படமாக்க கருவியை வைக்கிறோமோ என்பதையே படப்பிடிப்புக் கருவி கோணம் என்கிறோம். இந்தக் கோணம் காட்சியின் பொருளையே மாற்றும், காட்சித்துணிப்பின் தன்மைக்கேற்பக் கோணங்கள் அமையலாம்.

**நகர்வு (Movement):**

உண்மையில் படப்பிடிப்புக் கருவியை நகர்த்தாமல் படம் பிடிப்பது தான் சரியான படப்பிடிப்பு ஆகும். உலகில் திரைப்படம் தோன்றி வளர்ந்த ஆரம்பக் காலங்களில், அதாவது மௌனப்படக்

காலங்களில:, படப்பிடிப்புக் கருவியை முக்காலி நிறுத்தத்தில் ஆடாமல் அசையாமல் வைத்து ஒவ்வொரு காட்சியாகவே படம் பிடித்தனர்.

சும்மா இருக்கும் படப்பிடிப்புக் கருவியை இங்குமங்குமாக நகர்த்துவது நகர்வு அல்ல. படப்பிடிப்பில் படம் பிடித்துக்கொண்டிக்கும் நிலையில் குனிந்தோ, நிமிர்ந்தோ, பக்கவாட்டில், இடமும் வலமுமாகத் திரும்பியோ, மேலும் கீழுமாக ஏறி இறங்கியோ, முன்னும் பின்னுமாக அசைந்தோ, வட்டமாகச் சுழன்றோ அல்லது வேறு வகையிலோ நகர்வதையே நாம் இங்கு படப்பிடிப்புக் கருவி நகர்வுகள் என்று குறிப்பிடுகிறோம்.

இன்றும் ஹாலிவுட் படங்களில் படப்பிடிப்புக் கருவி நகர்வுகளை அதிகம் பார்க்க முடியாது. தொடர்ச்சியான வெட்டுத் துண்டுகளாக காட்சிகள் அடுக்கப்படுவது பெரும்பான்மையான படங்களின் அமைப்பாக உள்ளது.
படம்பிடித்துக் கொண்டிருக்கும் நிலையில் படப்பிடிப்புக் கருவியை நகர்த்த வேண்டிய சில தருணங்கள் உண்டு. அத்தகைய தருணங்களில் படப்பிடிப்புக் கருவியை நகர்த்திப் படம்பிடிப்பதால் எதார்த்தம் கெடாமல், பார்ப்பவர்களுக்கு இன்னும் தெளிவாகக் காட்சியை உணர்த்த முடியும்.

**நகர்வுக்கு உதவும் கருவிகள்:**

நாம் படப்பிடிப்புக் கருவியைத் தோளில் சுமந்தே நகர்த்தலாம். ஆனால் கனமான, விலையுயர்ந்த படப்பிடிப்புக் கருவி, அப்படித் தோளில் வைத்து நகர்த்தும்போது கீழே விழுந்துவிடலாம் அல்லது படம் அசைந்து ஆடியவாறு பதிவாகலாம். அதற்காகவோ படப்பிடிப்புக் கருவி நகர்வுகளுக்கென்று சில கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை.

1. உருளைகள் பொருத்தப்பட்ட முக்காலி (Rolling Tripod)
2. நகர்த்தி (Trolly)
3. தூக்கிச் சுழற்சி (Crane)
4. வாகனங்கள் (கார், ஹெலிகாப்டர் போன்றவை)

இயக்குநர் எந்தக் கோணத்தில் ஒரு காட்சியைப் படமாக்க விரும்புகிறாரோ, அதற்கேற்ற கருவியைப் பயன்படுத்திப் படமாக்கலாம்.

## எடுப்பு (Take):

காட்சித்துண்டு நாம் எதிர்பார்த்தது போலவே சரியாக அமையும்வரை எடுப்பு (take) நிகழும். ஒரு சரியான காட்சித்துணிப்பு பல எடுப்புகள் வரை செல்லும். சரியான கோணத்தில் எடுக்கப்பட்ட காட்சித்துணிப்புதான் ஒரு தேர்ந்த காட்சியாக மாறுகிறது. ஒரு காட்சியைப் படம்பிடிக்கும் போது ஒரே முறையில் அது சரியாக அமைந்து விடாது. நடிகர் சரியாக நடித்திருக்க மாட்டார். இருவர் தோன்றும் காட்சியில் ஒருவர் சரியாகச் செய்ய மற்றவர் நடிப்பு சரியாக இருந்திருக்காது. நடிகரின் பார்வைக் கோணம் தவறாகப் போய்விடலாம். நடிப்பிடத்தில் சம்பந்தமில்லாதவர் வந்துவிடலாம். படப்பிடிப்பாளர் தவறு செய்துவிட்டாலும் அந்தக் குறிப்பிட்ட துணிப்பைத் திரும்பவும் எடுக்க வேண்டிநேரும். அதுதான் எடுப்பு.

**ஒருங்கமைத்தல்:**

ஒரு காட்சியை எடுக்கும் போது அக்காட்சிக்கு ஏற்பத் திரைக்கதையும் உருவாக்கப்படும். அக்காட்சியில் வரும் கதாபாத்திரம், அவர்கள் பேசும் உரையாடல், ஒலி, ஒளி (வண்ணம்) போன்றவை திரைக்கதையிலேயே குறிக்கப்பட வேண்டும்.அப்பொழுதுதான் ஓர் ஒருங்கமைவு இருக்கும். சட்டகத்தில் உள்ள நடிகர்கள் மற்றும் பொருட்கள் அனைத்தையும் ஓர் அழகியல் முறையில் ஒருங்கிணைத்து அமைக்கும் கலையே ஒருங்கமைத்தல் (Composition) என்று கூறுவர்.

ஆதிலட்சுமியின் வீட்டில் நிகழும் நிகழ்வைக் காட்சிப்படுத்தும்போது கதாபாத்திரங்கள் அவற்றின் அவற்றின் தன்மையோடு இருத்தல் வேண்டும். ஏழை கூலித்தொழிலாளராக இருக்கும் அவர்கள் வீட்டின் பின்புலம், அவர்களின் நடை, உடை, பாவனை, வட்டாரப் பேச்சு முறை இவையெல்லாம் ஒருங்கமைத்து ஒரே சட்டகத்திற்குள் கொண்டு அமைக்கப்பட வேண்டும்.

அப்பொழுதுதான் அந்தக் காட்சி மூலம் பார்வையாளருக்கு நாம் என்ன சொல்ல வருகிறோமோ அப்போய்ச் சேரும். இதற்குக் கூடுதல் சிறப்பாக அமைவது ஒலியும் ஒளியும்.

**ஒளி:**
ஒளி இல்லாமல் காட்சி இல்லை. தெளிவான பார்வை இருந்தாலும் ஒருவரால் இருட்டில் எந்தப் பொருளையும் காண முடியாது. ஒளி காட்சியைக் காண்பதற்கு எப்படி முக்கியமோ, அப்படித்தான் ஒரு காட்சியைப் படம் பிடிப்பதற்கும் ஒளி இன்றியமையாத ஒன்று.

ஒளியை இரண்டு வகையாகக் கொள்ளலாம். அவை, இயற்கை ஒளி (NaturalLight) செயற்கை ஒளி (Artificial Light). சூரிய ஒளி மட்டுமே இயற்கை ஒளி, ஏனைய எல்லாம் செயற்கை ஒளி. ஒளி ஒரு மொழியாகவே செயல்படுகிறது.

- வெளிச்சம் - மகிழ்ச்சி, வீரம், நேர்மையின் குறியீடு.
- இருட்டு – சோகம், பயம், இரகசியத்தின் குறியீடு.

ஆதிலட்சுமியின் குடிசை வீட்டிற்குள் இருள்சூழ்ந்தவாறு மங்கலாகச் செயற்கை ஒளி பாய்ச்சப்படுபோது அது சோகத்தின் குறியீடாகத் தெரியும்.

வெளிச்சம், இருட்டு என்பதாக இல்லாமல், காட்சியின் பின்புலத்தில் வண்ணங்கள் காட்டப்படும் போது அவ்வண்ணங்களின் இயல்பை அறிந்து தர வேண்டும். காட்சிக்கு வண்ண ஒளி தருவதில் இரண்டு முறைகள் உள்ளன. ஒன்று, படக்கருவிக்கு முன்னால் வண்ணத் தடுப்பு எனப்படும் வண்ண முகமூடி முறை, மற்றொன்று வண்ணத் தாளைக் கட்டி படம்பிடிக்கும் முறை.

| | |
|---|---|
| சிவப்பு | சினம், அபாயம், நெருப்பு |
| பச்சை | செல்வம், தாராளம், அமைதி, மகிழ்ச்சி, ஓய்வு |
| கருநீலம் | குளிர்ச்சி, களங்கமின்மை, பயபக்தி, அடிமை, வானம், கடல் |
| இளஞ்சிவப்பு | காதல், பாலுணர்வு |
| கருப்பு | துக்கம், பயம், பரிதாபம், கள்ளம், கவலை |
| வெண்மை | குளிர்ச்சி, இளமை, தூய்மை, சுறுசுறுப்பு |

| | |
|---|---|
| சிவப்பு | சினம், அபாயம், நெருப்பு |
| பச்சை | செல்வம், தாராளம், அமைதி, மகிழ்ச்சி, ஓய்வு |

| | |
|---|---|
| கருநீலம் | குளிர்ச்சி, களங்கமின்மை, பயபக்தி, அடிமை, வானம், கடல் |
| இளஞ்சிவப்பு | காதல், பாலுணர்வு |
| கருப்பு | துக்கம், பயம், பரிதாபம், கள்ளம், கவலை |
| வெண்மை | குளிர்ச்சி, இளமை, தூய்மை, சுறுசுறுப்பு |
| ஊதா | பெருமை, பிரகாசம், பயபக்தி, கடவுள் நம்பிக்கை |
| நீலம் | தெய்வீகம், தியானம், சாந்தம் |
| மஞ்சள் | உற்சாகம், நல்லெண்ணம், பெருமகிழ்ச்சி, சூரியன், இன்றியமையாமை |
| ஆரஞ்சு | வேடிக்கை, விளையாட்டு, செழிப்பு, நகைச்சுவை |

இப்படி ஒவ்வொரு வண்ணமும் ஒருவகை உணர்ச்சியைத் தருகிறது. காட்சிக்குப் பொருத்தமான வண்ணத்தையே பின்புலத்தில் தர வேண்டும்.

**ஒளிப்பதிவு:**

படம்பிடிப்புக் கருவி எல்லாவற்றையும் துணிப்புகளாகத்தான் படமாக்குகிறது. படத்தொகுப்பு மூலமாகத்தான் துணிப்புகள் இணைக்கப்படுகின்றன. இவ்வாறு எடுக்கப்படும் ஒவ்வொரு துணிப்பும் ஒரு கோணத்திலிருந்து எடுக்கப்படுகிறது. இக்கோணம் படம் பார்ப்பவரின் கோணமோ, அப்படம் எடுப்பவரின் கோணமா, கதாபாத்திரங்களின் கோணமே? என்று கேட்டால் இதற்குப் பதில் படப்பிடிப்பு கருவி எல்லாக் கோணங்களிலிருந்தும் செயல்படுகிறது என்பது தான். திரைப்படத்தின் முக்கிய கூறாக ஒளிப்பதிவு உள்ளது.

**ஒலி:**

திரைமொழிக்கு உதவும் கூறுகளில் ஒன்று ஒலி. திரைப்படம் கண்ணால் பார்க்கப்படும் காதால் கேட்கப்படும் நுகரப்படுகிறது. பிம்பமும் ஒலியும் இணைந்து நிற்பதுதான் திரைப்பட மொழி. திரைப்படங்களில் ஒலி, இசை, பாடல்களின் மெட்டு முதலான அனைத்திற்கும் இசையமைப்பாளர்தான் காரணகர்த்தா.

திரைப்படங்களில் அமைக்கப்படும் ஒலியை இயலப்பான ஒலி, மிகை ஒலி என்று இருபெரும்பிரிவாக வகைப்படுத்தலாம்ட.
ஒலிப்பதிவு:
திரைப்படத்தில் ஒலிப்பதிவு, நான்கு வித ஒலிகளை முதன்மைப்படுத்துகிறத.
1. உரையாடல்
2. பாடல்கள்

பின்னணி இசை
4. சிறப்பு ஒலிகள்

படப்பிடிப்புக்குப் பிறகு ஒலிப் பதிவுக் கூடங்களில் இந்த நான்கு வகையான ஒலிகளையும் இணைத்தல் மூலம் ஒரே ஒலி தடத்தில் இணைக்கிறார்கள்.

திரைப்படத்தில் ஒலியின் தன்மை என்பது, காட்சியை அழகுபடுத்துதல், மேம்படுத்துதல் ஆகியவற்றுடன் காட்சிகளில் முழுமை அடையாத சில கூறுகளை முழுமைப்படுத்துவதும் கூட. இசை மனிதர் புரிந்துகொள்ளும் பொதுமொழியாகும்.

**மௌனம் (Silence):**
திரைப்படத்திற்கு மௌனம் ஒரு நல்ல மொழி. சரியாகச் சொல்வதானால், திரைப்படத்தின் மொழியே அது தான். அதனுடைய மொழியில் பேசுவதே அதற்கு அலகு.

கதையில் வரும் கதாபாத்திரங்கள் பேசாமல் திரைப்படமே பேச வேண்டும். பேசாமல் பேசும் மொழியே திரைமொழி. காட்சிகளின் வழியாக மக்கள் பெரும்பாலும் தங்கள் காதுகளை மறந்துவிட்டுக் கண்களின் வழியாகக் கண்ட காட்சிகளால் கதையையும் கருத்தையும் உணருமாறு பேசாமலேயே புலப்படுத்தும் மொழியே மௌனமொழி. கதையை, கருத்தைப் பார்வையாளர்களுக்கு மௌனத்தின் வழியாகவே உணர்த்திவிட முடியும்.

**உணர்வு (Emotion):**
நடிகர்கள் பேசாமல் அவர்களின் முகபாவம், அபிநயம், உடல் அசைவுகள், இசை, காட்சி அமைப்பு முதலான திரைப்படத்தின் வசனமற்ற கூறுகள் அனைத்தாலும் கருத்தைப் புலப்படுத்துபோது பார்வையாளர் அந்த உணர்வைப் பெறுகின்றனர். பேச்சு ஒரு மொழி என்பது போல, காட்சி வழியாகக் கருத்தைப் புலப்படுத்துவதும் ஒரு மொழிதான். இதனைக் காட்சிமொழி என்று கூறுவதே பொருத்தமாகும். இந்தக் காட்சிமொழி திரைப்படத்தின் உயிரோட்டமான கூறு என்பதால் படம் சொல்ல வரும் கருத்தைப் பார்வையாளர்கள் உணர்வு ரீதியாகப் பெறுகின்றனர்.

**திரைமொழி:**
திரைமொழி என்பது உலகத் திரைப்படங்கள் முழுமைக்குமான ஒரு பொதுமொழி. அது பாத்திரங்கள் வாய் திறந்து பேசும் மொழியன்று. அவர்களது முகபாவனை, அபிநயம், அவர்கள் தோன்றும் இடச்சூழலான காட்சியமைப்பு, அவர்களின் ஒப்பனைக் கோலம், பின்னணியில் எழும் ஓசைகள், இசை, பாடல்கள், திரைப்படம்

புகழ் மிக்க நகைச்சுவை நடிகரும் இயக்குநருமான சார்லி சாப்ளின் ஊமைப்படங்களையே தயாரித்து வருவதைக் கண்டு பொறுமையிழந்த அமெரிக்கப் பத்திரிகையாளர்கள் சாப்ளினிடம் கேட்டார்கள். ”பேசும் படம் எடுப்பதானால் செலவு கூடுதலாக வரும் தான் உங்களை விடவும் வசதி குறைந்த தயாரிப்பாளர்கள் எல்லாரும் பேசும் படங்களை எடுக்கும் போது, நீங்கள் மட்டும் இன்னமும் ஊமைப்படங்களையே தயாரிக்கிறீர்களே, ஏன்?” என்று கேட்டார்கள். இந்தக் கேள்விக்குச் சார்லி சாப்ளின் இவ்வாறு பதிலுரைத்தார்.

”என் படங்கள் ஊமைப்படங்கள் என்று கூறுவதைக் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். அவற்றைப் பார்க்கும் உங்களுக்கு அந்தப் படங்கள் கூறும் செய்தி புரிகிறதல்லவா? அவ்வாறெனில், அந்தப் படங்கள் உங்களோடு பேசிவிட்டன என்று தானே அர்த்தமாகிறது! என் திரப்படங்கள் திரைக்கே உரிய அதன் சொந்த மொழியில் பேசுகின்றன (It speaks in tis own language) என்றார். மேலும் ”என் திரைப்படங்களில் வரும் கதாப்பாத்திரங்கள் நீங்கள் எதிர்பார்ப்பது போல், ஆங்கில மொழியில் பேசியிருந்தால், அது ஆங்கிலம் தெரிந்த குறிப்பிட்ட ஒரு வட்டார மக்களுக்கு மட்டுமே புரிந்திருக்கும். ஆனால் என் படங்கள் திரைமொழியில் பேசுவதால், உலகின் அனைத்துப் பகுதியிலும் வாழ்கின்ற எல்லா மக்களுக்கும் புரிகின்றது. என் படங்கள் வட்டார மொழிப் படங்கள் அல்ல. அவை உலகப் பொதுமொழியில் (Universal Language) பேசும் உலக மொழிப் படங்கள் ஆகும்” என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.

**ஆவணப்படம் (Documentary Film):**

உலகில் நடக்கும் நிகழ்வுகளை நடந்தது நடந்தவாறே எழுதி அல்லது பதிந்து வைக்கும்

உண்மைக் குறிப்பே ஆவணம் ஆகும். திரைப்பட வகைகளில் ஆவணப்படம் என்பதும் ஒன்றாகும். ஒரு நிகழ்ச்சி நடந்துகொண்டிருக்கும் போதே படப்பிடிப்புக் கருவி படம்பிடித்த உண்மைச் சம்பவங்களையே உண்மை ஆவணப்படம் என்று கூறுவர். இதனை “டாக்குமெண்டரி ஃபிலிம்“ (Documentary Film) என்று ஆங்கிலத்தில் சுட்டுவர். விவரணப்படம், தகவல் படம், செய்திப்படம், சாசனப்படம் என்ற பல பெயர்களால் இதனை அழைப்பர். தமிழின் ஆவணப்பட முன்னோடியான ஏ.கே. செட்டியார் ”வாழ்க்கைச் சித்திரப் படம்“ என்று இதனைக் குறிப்பிட்டார். இவர் 1940 இல் “மகாத்மா காந்தி” என்னும் ஆவணப்படத்தைத் தயாரித்துப் புதுமையை ஏற்படுத்தியவர்.

நடைமுறையிலுள்ள உண்மைகளை மக்களுக்கு எடுத்துரைப்பதற்குச் சில நேரங்களில் உண்மை நிகழ்வுகள் சிக்குவதில்லை. அதாவது உண்மையான நிகழ்ச்சி நடந்து முடிந்திருக்கும். அச்சம்பவத்தைச் சிலரை நடிக்க வைத்து நாடகமாக அதை வெளிப்படுத்த வேண்டியிருக்கும். அதனால், அதனை நாடக ஆவணப்படம் என்பர். இது “டாக்கு டிராமா” அல்லது “ஃபிக்ஷன் டாக்குமெண்டரி” என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும்.

1911 ஆம் ஆண்டு டில்லியில் ஐந்தாம் ஜார்ஜின் முடிசூட்டு விழாவை எடுத்த படமே இந்தியாவில் உருவாக்கிய முதல் ஆவணப்படம். இதனை மருதப்பன் என்ற தமிழர் உருவாக்கினார். ஒவ்வொர் ஆண்டும் நடக்கும் “கேன்ஸ்” திரைப்பட விழாவில் வழங்கும் “பாம்டி ஆர்” என்ற விருது குறிப்பிடத்தக்கது. அவ்விருதினைப் பெற்ற முதல் ஆவணப்படம் 1956 இல் வெளியான “தி சைலன்ட் வேல்டு“ என்பதாகும்.

### குறும்படம் (Short Film)

குறும்படம் என்பது குறைந்த நேரத்திற்குள், அதாவது முப்பது நிமிடத்திற்குள் திரையில் காட்டப்படும் படங்கள் ஆகும். இன்று குறும்படங்கள் ஐந்து நிமிடத்திற்குள் முடிவதும் உண்டு. முழுநீளக் கதைப்படத்தை ஒரு புதினம் என்று சொன்னால், குறும்படத்தை ஒரு சிறுகதை என்று கூறலாம். ஒரு குறிப்பிட்ட நீதியை அல்லது ஒரு கருத்தைச் சட்டென மக்களுக்கு உணர்த்த இவ்வகையான குறும்படங்கள் பயன்படுகின்றன.

நடிகர்களை நடிக்க வைத்துத்தான் குறும்படம் உருவாக்க வேண்டும் என்பதில்லை. கருத்துப்படமாகவோ, அசைவூட்டப் படமாகவோ, வரைகலை சித்திரமாகவோ இருக்கலாம். “விம்பம்” (VIMBAM) என்ற அமைப்பு லண்டனில் குறும்பட விழாக்களை 2004 ஆம் ஆண்டு முதல் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

என்ற கலைக் சாதனத்திற்குரிய உத்திகள் முதலானவற்றின் அடிப்படையில் கருத்தைப் புலப்படுத்தும் கலையே திரைமொழி.

**உடல்மொழி:**

நடிகரின் இயல்பான உடலின் தோற்றம் உடல் தோற்றம் எனப்படும். ஆனால் உடல்மொழி என்பது அதிலிருந்து வேறுபட்டது. நடிகர் குனிந்தோ நிமிர்ந்தோ வளைந்தோ நிற்கும் நிலைகளால் பணிந்து போகிறார், எதிர்க்கிறார், மகிழ்கிறார் என்பதாக ஒரு கருத்தைப் புலப்படுத்த தம் உடலை வைத்து மேற்கொள்ளும் உடல்நிலையை உடல்மொழி என்பர். நடிகர்களின் சிறு அசைவுகளும் செயல்களும் உடல்மொழியில் அடங்கும். இதனை, பேசாமல் பேசும் திரைமொழிக் கூறு எனலாம்.

காட்சியமைப்பு வழியாக ஒரு கருத்தை உணர்த்துவது ”காட்சியமைப்புத் திரைமொழி” ஆகும். நடிகரின் உருவத்தோற்றம், செயல்கள் மட்டுமன்றி, அவர்கள் நிற்கும் இடம், காலச்சூழல், உடை, ஒப்பனை, கைப்பொருள்,சுற்றுப் புறங்களில் இருக்கும் பொருள்கள் என அனைத்தும் ஒரு கருத்தைப் புலப்படுத்துவதைக் காட்சியமைப்புத் திரைமொழி எனலாம்.

**திரைக்கதை:**

திரைக்கலை நுட்பங்களைக் கவனத்தில் கொண்டே திரைக்கதையை உருவாக்க வேண்டும். ஏனெனில், கேட்பதற்கான வடிவம் கதை. கேட்பதற்கும் பார்ப்பதற்குமான வடிவம் திரைக்கதை. தேர்ந்தெடுத்த கதையைப் பார்ப்போரின் மனநிலையைக் கருத்தில் கொண்டு காட்சிகளை வரிசைப்படுத்திக் கட்டமைப்பது திரைக்கதை. கதை நகர்விற்கு ஒவ்வொரு காட்சியும்

முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் திரைக்கதையை உருவாக்குபவரின் மனவோட்டத்தில் காட்சிக்கான சூழல், காட்சிக் களம், கதை நகர்வு ஆகியன நினைவில் கொள்ளப்படுகின்றன. கதைக்கும் திரைக்கதைக்கும் வேறுபாடு உண்டு. கேட்கச் சொல்வது கதை, சொல்வதும் காட்டுவதுமானது திரைக்கதை. ஒலியை எழுதினால் அது கதை. ஒலி, ஒளி இரண்டையும் எழுதினால் அது திகைக்கதை ஆகும்.

ஒரு படத்தின் தொடக்கம் முதலாக முடிவு வரையிலும் ஒவ்வொரு காட்சியாகத் திரைமொழியில் காட்சி வருணனை, உரையாடல், நடிப்பு முதலிய செய்திகளை இயக்குநரின் படப்பிடிப்பிற்குத் துணைபுரிகின்ற வகையில் எழுத்துவடிவில் குறித்து வைக்கும் விளக்கக் குறிப்பே திரைக்கதை (Sreen Play).

**வசனம்:**

திரைப்படத்தில் வசனம் வகிக்கும் இடம் முக்கியமானது. கதையைப் புரிந்துகொள்ள பாத்திரங்கள் பேசும் வசனம் உதவிபுரிகிறது. திரைக்கதைக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் போலவே வசனத்திற்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது. இயக்குநரே வசனம் எழுதும்போது காட்சிகளுக்கும் கதாபாத்திரப்பேச்சுக்கும் நல்ல சமநிலையை உருவாக்க முடியும். தேவையற்ற வார்த்தைகளுக்கு இங்கு இடம் இருக்காது. அந்த உரையாடல்கள் காட்சிகளைச் சார்ந்தே இருக்கும். சான்றாக பாலு மகேந்திரா தன் படங்களில் பாத்திரப் பேச்சுக்கான இடத்தைக் குறைத்து, காட்சிகளின் வழி கதைசொல்வதைப் பார்க்கலாம்.

கதாபாத்திரங்களாக வேடமிடும் நடிகர் நடிகையர் பேச வேண்டிய சொற்களும் அவற்றின் ஏற்ற இறக்கங்களுடனான தன்மையுமே உரையாடல் (Dislogue) எனப்படுகிறது. திரைப்படம் அடிப்படையில் காட்சி ஊடகம் என்பதால் காட்சிகளின் அழகும், பொருட்செறிவுமே காட்சியை முன்னோக்கி வழி நடத்துகின்றன. அதற்கு உதவும் வகையில் உரையாடல்கள் அமையவேண்டும்.

**படத்தொகுப்பு:**
நல்ல படம் எனக் குறிப்பிடப்படுவது இரண்டு மேசைகளில் உருவாகிறது. ஒன்று கதை எழுதுபவரின் மேசை, மற்றொன்று படத்தொகுப்பாளரின் மேசை, படத்தொகுப்பு என்பது ஒரு படைப்புக் கலைத்திறன், அத்திறனைப் பாடம் நடத்தி ஒருவருக்குள் உருவாக்கிவிட முடியாது. அது உளவியல் சார்ந்த கலை. கவிதை எழுதுவதைப் போல இயல்பாகவே அத்திறன் இருக்க வேண்டும். அது மிக நுட்பமான கல்வி ஆகும்.

முறையாக எழுதி முடித்த கதையின் அடிப்படையில் படம் பிடித்த அனைத்து துணிப்புகளையும் கதைகூறும் வரிசையில் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்குவதே படத் தொகுப்பாகும். பல துணிப்புகளைக் கொண்ட ஒரு காட்சியில் எதை முதலில் காட்டுவது, எதை அடுத்ததாகக் காட்டுவது என்ற உளவியல் நுட்பம் ஒரு நல்ல படத்தொகுப்பாளருக்கு இருக்க வேண்டிய தகுதியாகும்.

ஒரு கதை எவ்வாறு சிறந்த திரைப்படமாகத் தயாரிக்கப்படுகிறது என்பது அதன் திரைக்கலை நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைப் பொறுத்தே அமைகின்றது. திரைப்படத்தின் இந்த முக்கியமான நுட்பங்களை அறிந்து கொள்ளும் போது திரைப்படம் ஒரு சிறந்த கலைப்படைப்பாக உருவாக்கின்றது.

## இலக்கியமும் திரைப்படமும்

(இலக்கியமும் திரைப்படமும் என்ற முகநூல் குழுவைத் திரைப்பட விமர்சனம் எழுதும் ஒரு பேராசிரியர் நிர்வகித்து வருகிறார். இக்குழுவில் பலர் உறுப்பினர்களாக உள்ளனர். இதில் பன்னிரண்டாம் வகுப்பு சிறப்புதமிழ் பயிலும் மாணவர்கள் அகிலனும் முகிலனும் உறுப்பினராக உள்ளனர் பேராசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே நிகழ்ந்த முகநூல் உரையாடல்)

**முகிலன்:** இலக்கியம் என்ற கலையைப் பயன்படுத்தித்தான் திரைப்படம் உருவானதா? அடிப்படையில் இரண்டும் கலைகள் தானே.

**பேராசிரியர்:** இலக்கியமும் திரைப்படமும் கலைகள்தான். கதை என்ற கூறில் வேண்டுமானால் இரண்டும் ஒன்றுபடலாம். ஆனால், வெளிப்படுத்தும் முறையால் வேறுபடுகின்றன. சமூக

மாற்றத்திற்கான உந்துசக்தியாக எழுத்தாளர்களின் படைப்புகள் இருந்தாலும், அவை அனைத்து மக்களிடமும் சென்று சேருவதில்லை. அவ்விலக்கியம் சொல்லவரும் கருத்தை மக்களிடம் கொண்டு செல்லத் திரைப்பட ஊடகமே பெருந்துணையாக இருந்துவருகின்றது. இதன் தொடர்ச்சியாக இலக்கியம் திரைப்படமாக உருவானது. மேற்கத்திய நாடுகளிலும் கூட, திரைப்படத்திற்கான கதையை இலக்கியத்தில் இருந்து தேர்ந்தெடுக்கின்றனர்.

**அகிலன்:** தொடக்க காலத்தில் இலக்கியங்களில் இருந்துதான் திரைப்படங்கள் எடுக்கப்பட்டனவா? அப்படியென்றால் அவ்விலக்கியங்கள் எவை எவை?

**பேராசிரியர்:** ஆரம்ப காலத்தில் எடுக்கப்பட்ட தமிழ்த் திரைப்படங்கள் மேடை நாடகங்களையும் நாடக நடிகர்களையுமே அடிப்படையாகக் கொண்டவை. எழுதப்பட்ட கதைகள் நாடகமாக நடிக்கப்பட்ட போது அந்நாடகங்களைக் கண்ட திரைப்படத் தயாரிப்பாளர்கள் அதனையே திரைப்படமாக்கினர். வடுவூர் துரைசாமியின் ‘‘மேனகா’, காசி விஸ்வநாதரின் ‘டம்பாச்சாரி’, ஜே.ஆர். ரங்கராஜுவின் ‘ராஜாம்பாள்’, பம்மல் சம்பந்தனாரின் ‘இழந்த காதல்’ போன்றவை திரைப்படமாக்கப்பட்டவை.

கே. பாலசந்தரின் நாடகமான சர்வர் சுந்தரம், நீர்க்குமிழி, எதிர்நீச்சல் போன்றனவும் படங்களாக்கப்பட்டன. கோமல் சுவாமிநாதனின் தண்ணீர் தண்ணீர், செக்கு மாடுகள் போன்ற நாடகங்களும் படமாயின.

**முகிலன்:** நாடகங்கள் போலவே சிறுகதைகள், புதினங்கள் படமாக்கப்பட்டனவா?

**பேராசிரியர்:** இந்தியத் திரைப்பட வரலாற்றில் சிறுகதை அல்லது புதினத்தின் கதையைத் திரைமொழிக்கேற்ப வடிவ மாற்றம் செய்து திரைப்படங்களாக்கினர். இந்தியத் திரைப்பட மேதை சத்யஜித் ரேயின் உலகப் புகழ்பெற்ற திரைப்படங்கள் பெரும்பாலும் புதினங்களையும், சிறுகதைகளையும் அடிப்படையாகக் கொண்டவை.

அவருடைய முதல் மூன்று காவியப் படங்களான பதேர் பாஞ்சாலி, அபராஜிதோ, அபுர்சன்சார் ஆகியவை ‘பிபூதி பூஷன்’ என்ற எழுத்தாளரது புதினம். தாகூரின் கதைகளும் திரைப்படங்களாக வெளிவந்துள்ளன. தாஸ்தயாவ்ஸ்க்கி, டால்ஸ்டாய் போன்ற ரஷ்ய இலக்கியவாதிகளின் புதினங்களும் திரைப்படமாக்கப்பட்டன. அதில் ‘குற்றமும் தண்டனையும்’ என்ற புதினத்தின் கதையை உள்வாங்கிப் பல திரைப்படங்கள் வெளிவந்துள்ளன.

அகிலன்: தமிழில் இப்படிப்பட்ட முயற்சிகள் ஏதேனும் நிகழ்ந்திருக்கின்றனவா?

**பேராசிரியர்:** நிகழ்ந்திருக்கிறது. மௌனப்படக் காலத்திலேயே வை.மு. கோதைநாயகி அம்மாளின் ‘அனாதைப் பெண்’, புதினம் அதே பெயரில் படமாக்கப்பட்டது. இதே புதினம் பேசும் படமாகவும் எடுக்கப்பட்டது. இவரின் ‘தயாநிதி’ புதினம் ‘சித்தி’ என்னும் திரைப்படமானத.

ஜே.ஆர். ரங்கராஜுவின் ‘சவுக்கடி சந்தரகாந்தா’, வடுவூர் துரைசாமியின் ‘மைனர் ராஜாமணி’, கல்கியின் ‘தியாகபூமி’, பார்த்திபன் கனவு’, ராஜாஜியின் ‘திக்கற்ற பார்வதி’, அண்ணாவின் ‘வேலைக்காரி’ கொத்தமங்கலம் சுப்புவின் ‘தில்லனா மோகனாம்பாள்’, இராமலிங்கனாரின் ‘மலைக்கள்ளன்’, அகிலனின் ‘பாவை விளக்கு’ போன்றவை திரைப்படங்களாக வெளிவந்தன.

பெண் எழுத்தாளர்களான லட்சுமி, சிவசங்கரி, அனுராதா ரமணன் போன்றோரின் புதினங்களும் படமாக்கப்பட்டன. ஜெயகாந்தன், இந்திரா பார்த்தசாரதி, சுஜாதா இவர்களின் படைப்புகள் திரைப்படமாகி பெரும் வறவேற்பைப் பெற்றுள்ளன. ஜெயகாந்தனின் படைப்புகளை நீங்கள் வாசித்தது உண்டா?

**முகிலன்:** வாசித்திருக்கிறேன் ஐயா! உன்னைப்போல் ஒருவன், யாருக்காக அழுதான். சில நேரங்களில் சில மனிதர்கள், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள். இதில் ‘சில நேரங்களில் சில மனிதர்கள்’ எனக்குப் பிடித்த நூல்களில் ஒன்று. இது சாகித்திய அகாதெமி விருது பெற்ற படைப்புதானே?

**பேராசிரியர்:** ஆம். விருது பெற்ற நூல்தான். நீங்கள் சொன்ன படைப்புகள் அனைத்துமே திரைப்படங்களாக வெளிவந்திருக்கின்றன. தமிழ்த் திரைப்படத்தில் இலக்கியத்துக்கும் தமிழ்த் திரைப்படத்திற்குமான உறவு குறித்துப் பேசும் போது முக்கிய ஆளுமையாக அறியப்படுபவர் ஜெயகாந்தன். ‘உன்னைப்போல் ஒருவன்’ படத்திற்கான திரைக்கதை, வசனம், இயக்கம், தயாரிப்பு என அனைத்தும் ஜெயகாந்தனே,‘யாருக்காக அழுதான்’’ என்ற படத்திற்குத் திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியும் இருக்கிறார். ஊருக்கு நூறு பேர், நடிகை நாடகம் பார்க்கிறாள் போன்ற புதினங்கள் திரைப்படங்களாகி இருக்கின்றன. வழக்கமான திரைப்படங்களில் இடம்பெறும் நடனத்தையும் பாட்டையும் தவிர்த்து தான் எழுத்தில் படைத்த உலகை, திரைப்படத்தில் காட்ட முயன்ற இலக்கிய எழுத்தாளர் இவர்.

**அகிலன்:** அப்படியென்றால், தமிழ் திரைப்படத்தில் இலக்கியவாதியாகவும் திரைப்படக் கலைஞராகவும் சாதித்தவராக ஜெயகாந்தனைச் சொல்லலாமா?

**பேராசிரியர்:** சொல்லலாம். ஏனென்றால், ஜெயகாந்தனின் கதைகளைப் படிக்கும் பொழுதெல்லாம் அவர் திரைப் படத்திற்கு மிகவும் நெருக்கமானவர் என்கிற எண்ணம் மேலோங்கும். அவரது கதைகளைப் படிப்பது திரைப்படம் பார்ப்பது போன்றது. இவரின் “உன்னைப்போல் ஒருவன்” கலைத்தன்மை வாய்ந்த படமாக இன்றும் பார்க்கப்படுகிறது.

**முகிலன்:** தமிழில் கலைத்தன்மை கொண்ட திரைப்படங்கள் வேறு ஏதேனும் வந்துள்ளனவா?

**பேராசிரியர்:** தமிழில் இப்படிக் கலைத்தன்மை கொண்ட படங்கள் என பாலு மகேந்திராவின் ‘சந்தியா ராகம்’,‘வீடு’, ருத்ரய்யாவின் ‘அவள் அப்படித்தான்’, மகேந்திரனின் முள்ளும் மலரும், உதிரிப் பூக்கள், பூட்டாத பூட்டுகள், சாசனம், ஞான ராஜசேகரனின் ‘மோகமுள்’ போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**முகிலன்:** ஏன் இவர்களின் படங்கள் கலைத்தன்மை வாய்ந்தவையாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

**பேராசிரியர்:** கற்பனைக் கதையைத் திரைக்கதையாக மாற்றுவதாக இருந்தாலும், புதினம் ஒன்றைத் திரைக்கதையாக மாற்றுவதாக இருந்தாலும் எழுத்துகளால் வெளிப்படுத்த முடியாத எதார்த்த உலகத்தைக் காட்சிகளால் எளிதில் காட்ட முடியும். எழுத்துகளுக்கு இல்லாத ஒரு வசதி காட்சிகளுக்கு உண்டு. அந்த வகையில் காட்சிகள் எழுத்துகளை விட பலம் வாய்ந்தவை. ஆக, எழுத்துகளால் உருவாக்கப்படும் கற்பனைக் காட்சிகளை விட, ஒளிப்பதிவுக் கருவியின் மூலம் உருவாக்கப்படும் காட்சிகள் அடிப்படையிலேயே எதார்த்தமானவை. திரைப்படங்கள் காட்சிகளால் ஆனது என்றாலும் அக்காட்சிகள் சொல்லப்படும் விதத்தில் தான் கலைத்தன்மை வாய்ந்த படமாக மாறுகின்றன. அத்தோடு பாத்திரங்களின் உணர்ச்சி வெளிப்பாடு, உரையாடல் முரண், வாழ்க்கையை விவாதிக்கும் பாங்கு போன்றவை ஏற்கும்படியாக அமைந்திருக்கும்.

**முகிலன்:** தமிழ் சினிமாவில் எதார்த்த உலகத்தைக் காட்சிகளால் எளிதில் காட்டியவர்களாக மகேந்திரனையும், பாலு மகேந்திராவையும் குறிப்பிடலாமா?

**பேராசிரியர்:** ஆம். 1970 களில் தமிழ்த் திரைப்படத்தில் பல்வேறு மாற்றங்கள் நிகழ ஆரம்பித்தன. எப்போதும் வசனங்களால் நிரப்பப்பட்டுக் கொண்டிருந்த தமிழ்த் திரைப்படத்தைக் காட்சிப் பூர்வமாக அணுகியவர்கள் மகேந்திரனும் பால மகேந்திராவும், அதற்கான களத்தை இலக்கியத்தில் இருந்து தேர்ந்தெடுத்தனர்.

மகேந்திரன் இலக்கியத்தைத் திரைப்படமாகப் பெரும் ஆளுமையோடு உருவாக்கியவர். குறிப்பாக அவரது ‘உதிரிப்பூக்கள்’ தமிழ்த் திரைப்படத்தின் தரத்தை உயர்த்தியது எனலாம். திரைப்படம் ஒரு காட்சி மொழி என்பதை உணர்ந்தவர் பாலு மகேந்திரா. அவர் இயக்கிய ‘சந்தியா ராகம்,‘வீடு’’ போன்ற படங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

பல்வேறு கலைகளும் சங்கமிக்கும் இடம் திரைப்படம். இதன் நுட்பத்தை மக்களிடையே எடுத்துச் சென்றவர்கள் இந்த இரண்டு இயக்குநர்கள்.
பேசும் படங்கள் வந்த பிறகுதான், திரையில் சப்தங்களும். வசனங்களும் அதிகமாக இடம்பெறத் தொடங்கின. வார்த்தைகள், இசை, பாடல்கள் இல்லாமல் திரைப்படங்கள் இல்லை என்ற நிலையை மாற்றியவர்கள். குறிப்பாக இவர்களின் படங்களில் பயன்படுத்தப்படும் இசை

முக்கியமானது. மௌனமே ஒலியை விடச் சிறந்தது என்பதைத் தமிழ்த் திரைக்கு உணர்த்தியவர்கள்.

பாலு மகேந்திராவின் படங்களில் ஒரு காட்சியை அழகுபடுத்த, அதன் கருத்தைப் பார்வையாளனுக்குச் சரியாகக் கொண்டு சேர்க்க இசை பயன்படுத்தப்பட்டிருக்கும். இவர் தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு மிக்கவர். தன்னை ஒரு எழுத்தாளராக அடையாளம் காட்டுவதோடு பல படங்களுக்குத் திரைக்கதையையும் வசனத்தையும் இவரே எழுதியிருக்கிறார்.

**அகிலன்:** பாலு மகேந்திரா, ஒளிப்பதிவாளராக இருந்து இயக்குநரானவர் என்பதால் திரைப்பட மொழி அவருக்குத் தெரிந்திருக்கும். ஆனால், மகேந்திரன் ஒளிப்பதிவாளராக இருந்ததில்லை. அப்படியிருந்தும் மகேந்திரன், திரைப்பட மொழியைச் சரியாகக் கையாண்டு இருக்கிறார். இதற்கு இலக்கிய வாசிப்பு அடிப்படைக் காரணமாக இருந்தது எனலாமா?

**பேராசிரியர்:** ஒரு தேர்ந்த எதார்த்தத் திரைப்படத்தை உருவாக்க நினைக்கின்ற படைப்பாளிக்குக் கண்டிப்பாக இலக்கிய நுண்ணறிவும் வாசிப்பும் தேவை. அதனால்தான் மகேந்திரன் இலக்கிய வாசகராகவும் திரை நுட்பங்களை அறிந்தவராகவும் இருக்கின்றார். அவர் இயக்கிய படங்கள் பெரும்பாலும் இலக்கியத்திலிருந்து எடுக்கப்பட்டவையே. அவரது முதல் படம் உமாசந்திரனின் “முள்ளும் மலரும்“ புதினத்தை அடிப்படையாகக் கொண்டதுதான்.

திரைப்படத்தின் தன்மையையும் இலக்கியத்தின் தன்மையையும் நன்கு அறிந்தால் மட்டுமே அதனைச் சிறப்பாகக் கொடுக்கமுடியும். புதினம் எழுத்து மொழியின் ஆளுமையை காட்டுமிடம், திரைப்படம் காட்சிமொழியின் ஆளுமையைக் காட்டுமிடம் என்று தெரிந்து வைத்திருந்ததால், அவரால் தொடர்ச்சியாக புதினத்தைப் படமாகக் கொடுக்க முடிந்தது. நேரமிருந்தால் மகேந்திரன் இயக்கிய முள்ளும் மலரும் திரைப்படத்தை திரையிட்டுப் பாருங்கள். அத்தோடு வேறு படங்களையும், அப்படங்களின் மூலக்கதைகளுக்கான புதினங்களையும் தேடிப் படிக்கலாம்.

**அகிலன்** : கட்டாயம் படிக்க வேண்டும். இயக்குநரும் ஒளி ஓவியருமான தங்கர்பாச்சானின் படங்கள் கூட இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டவை எனக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

**பேராசிரியர்:** சிறுகதை, நாவல்களைப் படமாக்குவதில் தங்கர்பச்சான் காட்டிய அக்கறை அதிகம். ஒளிப்பதிவாளர், எழுத்தாளர், இயக்குநர், நடிகர் எனப் பன்முகத் தன்மைகொண்டவர் இவர். தமது “கல்வெட்டு“ என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு “அழகு“ படத்தை இயக்கினார். நாஞ்சில் நாடனின் நாவலான “தலைகீழ் விகிதங்கள்“ கதையை “சொல்ல மறந்த கதை“ என்ற படமாக்கினார். தாம் எழுதிய “ஒன்பது ரூபாய் நோட்டு”, “அம்மாவின் கைப்பேசி“ நாவல்களை அதேபெயரில் படமாக்கினார். இவற்றில் “அழகி“ படம் தான் தங்கர்பச்சான் என்ற ஆளுமையைத் திரையுலகில் பரவலாக அறிய செய்தது. எதார்த்தமான வாழ்வியலைச் சொன்ன இப்படமும் இலக்கியத் தரம் வாய்ந்ததாகவே பார்க்கப்படுகிறது.

முகிலன்: சசி இயக்கிய “பு” திரைப்படமும் எதார்த்த வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்தது தானே. இதுவும் இலக்கியத்திலிருந்து எடுக்கப்பட்டதா?

**திரைப்பட ரசனை:**
சிறந்த இலக்கியம் என்பது மனிதர்களை மேம்படுத்தும் சிறந்த திரைப்படம் என்பது மனிதர்களைப் பண்படுத்தும். நம்மை அடுத்த நிலைக்கு நகர்த்தும், ஒரு சிறந்த திரைப்படமானது மனிதர்களை முற்றிலும் மாற்றும் திறன் உடையது. அப்படிப்பட்ட மாற்றத்தை உருவாக்குவதே சினிமா ரசனை.

திரைப்படம் வெறும் பொழுதுபோக்கிற்கான கலை வடிவம் அன்று. ஒரு திரைப்படத்தை ரசனையோடு அணுகும் முறையே திரைரசிகராக நம்மை உருவாக்குகின்றது. ஒரு திரைப்படம் சொல்லும் கருத்து, இயக்குநரின் பார்வை, காட்சி அமைப்பு, படத்தின் இசை, படத்தொகுப்பு எனப் பல்வேறு கோணங்களில் காணும் அனுபவமே திரைப்பட ரசனையாக மாறுகிறது. இவற்றையெல்லாம் ஒரு திரைப்படம் பார்க்கும் போது நாம் கவனித்தால், அது நம் ரசனையை மேம்படுத்தும்.
கலையின் வெளிப்பாடு:

சினிமா என்பது வணிகம் என்ற அம்சத்தைத் தாண்டி கலை என்பதன் முழுமையான வெளிப்பாடு. எல்லாக் கலைகளையும் அது தன்னகத்தே உள்ளடக்கியிருக்கின்றது. மற்ற எந்தக்

கலைகளைக் காட்டிலும் சினிமா தனித்துவமானது. திரைப்படம் பார்ப்பது என்பது ஓர் அனுபவம். அந்த அனுபவம் ஒவ்வொருவருக்கும் வேறுபடும். காண்போரின் மனநிலை, சூழல், வெளிப்படுத்தும் தன்மை ஆகியவற்றைப் பொருத்து ரசனையும் மாறுபடும்.

**பேராசிரியர்:** ஆமாம், ச. தமிழ்ச்செல்வன் எழுதிய “வெயிலோடு போய்” என்ற சிறுகதையைச் சசி “பூ“ என்ற பெயரில் திரைப்படமாக்கினார். இக்கதை எளிமையான பெண்ணின் பேரன்பைப் பேசுகிறது.

**அகிலன்:** மகேந்திரன் “முள்ளும் மலரும்” கதையில் சில மாற்றங்களைச் செய்ததாகச் சொன்னீர்கள். அப்படியென்றால் ஒரு நாவல் அல்லது சிறுகதை எந்த முறையில் திரைப்படமாக எடுக்கப்படுகிறது?

**பேராசிரியர்:** ஒரு நாவலைத் திரைப்படமாக்கும் முறையை இருவகையாக பிரிக்கலாம். முதலாவது, வாக்கியத்திற்கு வாக்கியம் மூலப்படைப்பைச் சார்ந்தே திரைப்படக்காட்சிகளை அமைப்பது.

இரண்டாவது முறை திரைப்படத்தின் சாத்தியக்கூறுகளை, பலத்தை உணர்ந்து சினிமா மொழியில் ஒரு புதிய படைப்பை உருவாக்குவது. நாவலாசிரியரின் மையக்கருத்தை உள்வாங்கி அதற்கேற்றபடி திரைக்கதையை அமைத்து அக்கருத்தைத் திரைப்படக் காட்சிகள் மூலம் வெளிக்கொணர்வது.

**முகிலன்:** புரிகிறது ஐயா! சமீபத்தில் இலக்கியங்களிலிருந்து எடுக்கப்பட்ட திரைப்படங்களாக எவற்றைச் சொல்லலாம்?

**பேராசிரியர்:** கி. ராஜநாராயணனின் கிடை (ஒருத்தி), ஜெயமோகனின் ”ஏழாம் உலகம்” (நான் கடவுள்), பாஸ்கர் சக்தியின் “அழகர் சாமியின் குதிரை” (அழகர்சாமியின் குதிரை), பி.எச். டேனியலின் எரியும் பனிக்காடு (பரதேசி), மு. சந்திரகுமாரின் “லாக்கப்” (விசாரணை), தமயந்தியின் தடயம் (தடயம்) ஆகியன திரைப்படங்களாக்கப்பட்டுள்ளன.

வசந்தபாலன் இயக்கிய “அரவான்“ திரைப்படம், சு.வெங்கடேசனின் “காவல் கோட்டம்“ புதினத்தின் ஒரு பகுதியே. ”நோட்டா” படம் ஷான் கருப்பசாமி எழுதிய “வெட்டாட்டம் நூலை அடிப்படையாகக் கொண்டதுதான். இது போன்றே அவ்வப்போது இலக்கியங்களிலிருந்து திரைப்படங்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் அவை சிறந்த கலைப்படைப்பாக மாறுவது இயக்குநரின் ரசனையையும் மக்களின் ரசனையையும் பொறுத்ததே.

**வங்க மொழியின் இரு சிங்கங்கள்:**
இந்தியத் திரைப்பட இயக்குநர்களுள் குறிப்பிடத்தக்கவர். சத்தியஜித் ரே. இந்தியமொழிக் கவிஞர்களுள் குற்பிடத்தக்கவர், இரவீந்திர நாத தாகூர். இருவரும் வங்கமொழிக்குப் பெருமை சேர்த்தவர்களாவர். தாகூரிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்த சத்தியஜித் ரே, அவரது பண்பட்ட சிந்தனைத் தளங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். தாகூரின் எழுத்துப் படைப்புகளை நேரில் கண்டு, கேட்டறியும் உயரி செறிந்த கலையனுபவங்களாக, உலகமெல்லாம் இரசித்து மகிழும் வகையில் உருவாக்கிய பெருமை, சத்தியஜித் ரேவையே சாரும். தாகூரின் ‘சாருலதா’’,‘வீடும் உலகமும்’ (கரே பைரே) என்னும் இருநாவல்கள், சத்யஜித் ரேவால் உருவாக்கப்பட்ட அரிய திரைப்படக் கலை வடிவங்கள், 1961 ஆம் ஆண்டில், தாகூரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வகையில், இரவீந்திர நாத தாகூர் தொடர்பான ஆவணப்படம் ஒன்றை உருவாக்கினார். கலை இலக்கிய சிந்தனாவாதி ஒருவர் பற்றிய படம் என்றால், அ்.து இப்படித்தானே இருக்க வேண்டும் என்று கூறத்தக்க அளவில், அருமையான படைப்பாக, அவ் ஆவணப்படம் இன்றளவும் விளங்குகிறது.

**திரைப்படமான சில தமிழ் இலக்கியங்கள்**

| ஆசிரியர் | நூல் | திரைப்படம் |
|---|---|---|
| ஜே.ஆர். ரங்கராஜு | மோகனசுந்தரம் | மோகனசுந்தரம் |
| வடுவூர் துரைசாமி | கும்பகோணம் வக்கீல் | திகம்பர சாமியார் |
| வை.மு. கோதைநாயகி | ராஜ்மோகன் | ராஜ்மோகன் |
| வை.மு. கோதைநாயகி | தியாகக்கொடி | தியாகக்கொடி |
| கல்கி | பொய்மான் கரடு | பொன்வயல் |

| | | |
|---|---|---|
| அகிலன் | கயல்விழி | மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் |
| அண்ணாதுரை | ரங்கோன் ராதா | ரங்கோன் ராதா |
| அண்ணாதுரை | பார்வதி பி.ஏ | பார்வதி பி.ஏ |
| மு. கருணாநிதி | பொன்னர் சங்கர் | பொன்னர் சங்கர் |
| வெ. ராமலிங்கம் பிள்ளை | மலைக்கள்ளன் | மலைக்கள்ளன் |
| பி.எஸ். ராமையா | போலீஸ்காரன் மகள் | போலீஸ்காரன் மகள் |
| மு. வரதராஜன் | பெற்ற மனம் | பெற்ற மனம் |
| இந்திரா பார்த்திசாரதி | உச்சி வெயில் | மறுபக்கம் |
| மஹரிஷி | புவனா ஒரு கேள்விக்குறி | புவனா ஒரு கோள்விக்குறி |
| மணியன் | இதய வீணை | இதய வீணை |
| நீல. பத்மநாதன் | தலைமுறைகள் | மகிழ்ச்சி |
| தி. ஜானகிராமன் | மோகமுள் | மோகமுள் |
| ரா.கி. ரங்கராஜன் | ஒரு சத்தியம் | இது சத்தியம் |
| எஸ்.எஸ் வாசன் | சதி லீலாவதி | சதி லீலாவதி |
| சுஜாதா | பிரியா | பிரியா |
| சுஜாதா | இருள் வரும் நேரம் | வானம் வசப்படும் |
| டி. செல்வராஜ் | தேனீர் | தேனீர் |
| பூமணி | கருவேலம்பூக்கள் | கருவேலம்பூக்கள் |
| சி.ஆர். ரவீந்திரன் | நண்பா நண்பா | நண்பா நண்பா |
| லக்ஷ்மி | பெண் மனம் | இருவர் உள்ளம் |
| லக்ஷ்மி | காஞ்சனையின் கனவு | காஞ்சனா |
| அனுராதா ரமணன் | சிறை | சிறை |
| அனுராதா ரமணன் | கூட்டுப்புழுக்கள் | கூட்டுப்புழுக்கள் |
| சிவசங்கரி | நண்டு | நண்டு |
| சிவசங்கரி | ஒரு சிங்கம் முயலாகிறது. | அவன் அவள் அது |

## நாட்டார் அரங்கக் கலைகள்

- நாட்டார் அரங்கக் கலைகள் தமிழ்ப் பண்பாட்டின் முக்கியமான அடையாளங்களாகத் திகழ்கின்றன. இக்கலைகளை நிகழ்த்துபவர்கள் கற்பனைத் திறன் மிகுந்த உழைக்கும் கலைஞர்கள். இக்கலைகள் மனிதர்களின் வாழ்க்கைச் சூழல், தெய்வ வழிபாடு, அன்றாட வாழ்க்கைச் சிக்கல் இவற்றின் கூட்டுப்படைப்பாக வெளிப்படுகின்றன. அதே நேரத்தில் சமூகத்தை உள்வாங்கித் தங்களது உள்ளடக்கத்தையும் வடிவத்தையும் புத்தாக்கம் செய்து மக்களிடையே வரவேற்பைப் பெற்று வருகின்றன. இக்கலைகள் வட்டாரத் தன்மைக் கொண்டவை. தமக்கென மரபுவழிபட்ட பார்வையாளர்களைக் கொண்டவை. மக்கள் குழுக்களின் வழிபாட்டு மரபுகள், சடங்குகள், வட்டாரக் குழுக்கள், பழக்க வழக்கங்கள், கைவினைக் கலைகள் போன்றவற்றின் அடிப்படையில் நிகழ்த்துக்கலைகளுக்கான பண்பாட்டு எல்லைகள் உருவாகின்றன.

- தமிழகம் முழுவதும் பரவலாக நிகழ்த்தப்படும் இக்கலைகளை அதன் தன்மைக்கேற்ப,

1. **சடங்குசார் கலைகள்**
2. **பாடல்சார் கலைகள்**
3. **கருவிசார் கலைகள்**

என வகைப்படுத்துவர். இக்கலைகள் தமிழரின் மரபானபண்பாட்டுக்கூறுகளை விளக்குவனவாக அமைகின்றன. பார்வையாளர்கள் புரிந்துகொள்ளும் தன்மைக்கேற்ப இக்கலைகள் நிகழ்த்தப்படும். ஏதேனும் ஓர் ஊரில் அவ்வூர் சார்ந்த மக்களுக்காக நிகழ்த்தப்படும் இக்கலை வடிவங்களைப் பிற பகுதிகளிலிருந்து வரும் மக்களும் கண்டு இன்புறுவர்.

**சடங்குசார் கலைகள்**

- மக்களின் வாழ்க்கைக்குள் பல்வேறு சடங்குகள் நிகழ்ந்திருக்கின்றன. சடங்குகள் குடும்பவெளியிலும் சமூகவெளியிலும் இடம்பெறும். சமூக வெளியில் நடப்பன கலைகளாக மாறுகின்றன. நாட்டார் வழிபாடுகளில் குறிப்பிட்ட தெய்வத்தைப் பற்றிய வரலாற்றுக் கதைகளின்

ஒரு பகுதியோ சில பகுதிகளோ சடங்குகளாக நிகழ்த்திக் காட்டப்படுகின்றன. சமயச் சடங்குகளோடு ஆடல்கலை நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் பரவலாக உள்ள சாமியாட்டம்,தேவராட்டம், கணியன் அட்டம், பொன்னர் சங்கர் கதைப்பாடல் முதலானவற்றில் சடங்குக் கூறுகள் அதிகம் உண்டு.
கொடை தீமிதி விழா, முளைப்பாரி, சூரசம்ஹாரம், கள்ளர் வெட்டு, மயானக் கொள்ளை, ஏழு கன்னிமார் வழிபாட்டில் இடம்பெறும் கன்னிவிலக்கு (மாசி மகம்) எனத் தமிழக மாவட்டங்கள் பலவற்றிலும் கோவில் திருவிழாக்களில் சடங்கியல் நாடகங்கள் நடைபெறுகின்றன. இச்சடங்கியல் நாடகங்கள் பெரும்பாலும் அந்தந்த கோவில் விழாக்களின் முக்கிய நிகழ்வாக உள்ளன.

**பொன்னர் சங்கர் கதைப்பாடல்:**

பொன்னர் சங்கர் கதைப்பாடல் என்பது இடைகக்காலத்தில் வாழ்ந்த பொன்னர் சங்கர் என்ற சகோதரர்களின் வரலாற்றினைக் கதைப்பாடலாக நிகழ்த்திக் காட்டுவதாகும். திருச்சி, சேலம், கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் இக்கதைப்பாடல் நிகழ்த்தப்படுகிறது. பொன்னர் சங்கர் எனப்படும் அண்ணன்மார் சாமி கோவில், பெரிய காண்டியம்மன் கோயில், மாரியம்மன் கோயில்களின் முன்பு நிகழ்த்தப்படுகின்றது.

தற்போது இக்கதைப்பாடல் சின்னண்ணன் பெரியண்ணன் நாடகம், வளநாடு நாடகம், பொன்னர் சங்கர் படுகளம் என்ற பெயர்களில் நிகழ்த்தப்படுகின்றது. ஆண்டுதோறும் தை மாதம் முதல் ஆடி மாதம் வரையில் ஊர்தோறும் நடைபெறும் திருவிழாக்களின் போது நிகழ்த்தப்படுகின்றது. இதில் உடுக்கு, பறை, கொம்பு, சங்கு. சேகண்டி போன்ற இசைக் கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. இக்கதைப்பாடல் நிகழ்வில் முதன்மைக் கதாபாத்திரங்களாகவும் துணைக்கதாபாத்திரங்களாகவும் ஏழுபேர் முதல் ஒன்பது பேர் வரை நடிக்கின்றனர். ஒயிலாட்டம், கும்மி, தாலாட்டு, ஒப்பாரி, தெம்மாங்கு, காவடியாட்டம் போன்ற கலைகள் தேவைக்கேற்ப இவற்றில் இணைக்கப்படுவதும் உண்டு.

தொல்காப்பியம் கருப்பொருள்களின் பட்டியலில் ஐந்திணைக்கும் உரிய இசைக்கருவிகளைக் குறிப்பிடுகிறது. பறை, யாழ் போன்ற இசைக்கருவிகளை அத்திணை சாா்ந்த மக்கள் வழிபாட்டின் போது இசைத்தும் ஆடியும் வந்துள்ளனா். நாடகத்திற்குரிய இசைக்கருவிகளான யாழ், முழவு, ஆகுளி,பாண்டில், கோடு, நெடுவங்கியம், குறுந்தூம்பு, தட்டைப் பறை, சல்லி, பதலை ஆகியவை பயன்படுத்தப்பட்டு வந்ததாக மலைபடுகடாம் தெரிவிக்கிறது.

**பாடல்சார் கலைகள்**

- நிகழ்த்துக்கலைகளுள் பாடலுக்கு முக்கியத்துவம் அளித்து அரங்கேற்றப்படும் கலைகளைப் பாடல்சார் கலைகள் என்பர். பாடலுக்கேற்ற நடன அசைவுகளுடன் கூடியவை இக்கலைகள். இலாவணி, உடுக்கைப்பாட்டு, பகல்வேடம், ராஜாராணி ஆட்டம் போன்றவை பாடலோடு இணைந்து நிகழ்த்தப்படுகின்ற பாடல்சார் கலைகளாகும்.

**உடுக்கைப்பாட்டு:**

- உடுக்கு என்னும் இசைக்கருவியை அடித்துப்பாடும் கலை உடுக்கைப்பாட்டு ஆகும். இசைக்கருவியால் பெயர் பெற்ற கலை எனினும் இதில் பாடலே முதன்மை பெறும். ஒரு கதையைப் பாடி பின்னணியாக உடுக்கடிக்கும் முறையில் இக்கதை நிகழ்கிறது. இக்கலை நிகழ்ச்சியில் ஒருவர் உடுக்கை அடிக்க, ஒரு பெண்ணோ, பெண் வேடமிட்ட ஆணோ கதைப் பாடலைப் பாடி ஆடுவர். பின்பாட்டுக்காக இருவர் அல்லது மூவர் இருப்பதும் உண்டு.

- கோவில் சார்ந்த கலையாக முதலில் அறியப்பட்ட இக்கலை, பின்னர் சமுதாயம் சார்ந்தும் பொழுதுபோக்கிற்காகவும் உரியதாக மாறியுள்ளது. கோயம்புத்தூர்,ஈரோடு, உடுமலைப்பேட்டை, பழனி, திருச்சி முதலிய பகுதிகளில் பரவலாக நிகழ்த்தப்படுகிறது.அண்ணன்மார் சாமி கதை, காத்தவராயன் கதை, நல்லதங்காள் கதை, மதுரை வீரன் கதை போன்றவை உடுக்கைப்பாட்டிற்குரிய கதைப்பாடல்களாக உள்ளன.

**3. கருவிசார் கலைகள்**

- பல்வேறு கருவிகளைப் பயன்படுத்தி நிகழ்த்தப்படும் கலைகள் கருவிசார் கலைகள் எனப்படும். நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளில் இசைக்கருவிகளை இசைத்துக்கொண்டே ஆடுவதும் பாடுவதும் இயல்பு. கரகாட்டம், களரி, சிலம்பாட்டம், பறையாட்டம், தோல்பாவைக்கூத்து, மயிலாட்டம், மரக்காலாட்டம், பொய்க்கால் குதிரை, வில்லுப்பாட்டு, காவடியாட்டம் போன்றவற்றைக் கருவிசார் கலைகள் என்பர். இக்கலைகள் ஒவ்வொன்றும் தனக்கான தனித்த துணைக்கருவிகள் மற்றும் இசைக்கருவிகளோடும் நிகழ்த்தப்படுகின்றன.

**கரகாட்டம்:**

தமிழர்களின் பாரம்பரிய ஆட்டங்களில் ஒன்று கரகம். தலையில் கரகம் வைத்து ஆடுவதால் இப்பெயர் பெற்றது. சங்க இலக்கியங்களில் கரகாட்டம் 'குடக்கூத்து' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பல விதங்களில் அலங்கரிக்கப்பட்ட கரகத்தை தலையில் வைத்தபடி ஆடுவர். தெய்வ வழிபாட்டிற்கு ஆடும் கரகம் 'சத்தியக்கரகம்' என்றும், தொழில்முறைக் கரகத்தை 'ஆட்டக்கரகம்' என்றும் சொல்வர்.

கரகாட்டம் மதுரை, திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் கோவில் திருவிழாக்களின்போது நிகழ்த்தப்படுகின்றது. இவ்வாட்டத்திற்கு நையாண்டி மேளம், சிறிய உடுக்கை, பெரிய உடுக்கை, சத்தக்குழல், பறை போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன.

**மார்ச் 27 – உலக நாடக நாள்:**
சர்வதேச அரங்காற்று நிறுவனம் (International Theatra Institute) பின்லாந்தில் செயல்பட்டு வருகின்து. அந்நிறுவனத்தின் தலைவராக இருந்த ஆர்வி கிவிமா அரங்காற்று நிகழ்வுகளுக்காக ஒரு நாளைக் கொண்டாட வேண்டும் என முன் மொழிந்தார். 1961 இல் கூடிய அரங்காற்றுக் கலைஞர்களின் மாநாட்டில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 27 ஆம் தேதியை உலக நாடக நாளாகக் (World Treatre day) கொண்டாட முடிவு செய்தனர். உலகெங்கிலுமுள்ள நாடகக்கலைஞர்கள் அந்த நாளைக் கொண்டாடத் தவறுவதில்லை.

**தெருக்கூத்து:**

தெருக்கூத்து, சாமியாட்டம், தேவராட்டம், கணியன் ஆட்டம், கதைப்பாடல், இலாவணி, உடுக்கை, ஒயிலாட்டம், பகல்வேடம், ராஜா ராணி ஆட்டம், கரகாட்டம், களரி, சிலம்பாட்டம், பறையாட்டம், தோல்பாவைக்கூத்து, மயிலாட்டம், மரக்காலாட்டம், பொய்க்கால் குதிரை, வில்லுப்பாட்டு போன்ற கலைகள் தமிழர்கள் வாழ்க்கையில் கலந்திருக்கின்றன. இவற்றைப் பொதுவாக நாட்டார் அரங்கக் கலைகள் என அழைக்கின்றோம். இவை முறையான அரங்குகளில் நிகழ்த்தப்படாமல் தெருக்கள், வயல்வெளிகள், கோயில் முற்றங்கள் போன்ற இடங்களில் நிகழ்த்தப்படுகின்றன. இவற்றுள் தெருக்கூத்து சடங்குசார் கலையாகவும் பாடல்சார் கலையாகவும் கருவிசார் கலையாகவும் அறியப்படுகிறது.

தமிழக மக்களின் வாழ்வியலோடு ஒன்றிய கலை தெருக்கூத்து, இதனைக் "கட்டைக்கூத்து" என்றும் அழைப்பர். கதை சொல்லல், ஆடல், பாடல் என பலதரப்பட்ட கூறுகள் தெருக்கூத்தில் கலந்திருக்கின்றன. பொதுவாக தொன்மம், நாட்டார் கதை, சீர்திருத்தக் கதை, விழிப்புணர்வுக் கதை முதியனவற்றை மையமாகக் கொண்டு தெருக்கூத்து நிகழ்த்தப்படுகின்றது.

**களமும் முறையும்:**

கிராமப்புறங்களில் உள்ள கோவில்களில் மூன்று பக்கமும் மக்கள் சூழ்ந்த திறந்தவெளி ஆடுபரப்பில் இக்கூத்து நிகழ்த்தப்படுகின்றது. தெருக்கூத்து நடைபெறும் இடம் களரி எனப்படும். ஊரின் புறத்தே அல்லது கோவில் திடல்களில், அல்லது அறுவடை ஆன வயல்களின் நடுவே களரி அமைக்கப்படும். அத் திடலில் இரு கழிகளை நட்டு அவற்றில் விளக்குகளைக் கட்டுவர். கழிகளுக்கு இடையில் உள்ள இடமே கூத்து நடைபெறும் களரியாகும். இதனை விட்டமாகக் கொண்டே மக்கள் வட்டமாகச் சுற்றி அமர்வார்கள். கூத்தாடும் களத்தின் நடுவில் இருவர் வந்து வேட்டியைத் திரையாகப் பிடித்தபடி நிற்பர். கூத்தின் கதாபாத்திரங்கள் அனைவரும் முதல் முறையாக மேடையில் தோன்றுவதற்கு முன்னர், இத்திரையின் பின் நின்று பாடிய பின்பே மக்கள் முன் காட்சி தருவர். பொதுவாக தெருக்கூத்தில் பெண்கள் நடிக்கும் வழக்கம் இல்லை. ஆண்களே பெண்வேடமிட்டு நடிப்பர்.

இப்போது பெண்களும் கூத்துப் பாத்திரங்களை ஏற்று நடிக்க முன்வந்துள்ளனர். கூத்தில் வேடம் கட்டுபவர்கள், கூத்து தொடங்கி முடியும் வரை நோன்பிருப்பது வழக்கம். இரவு பத்து மணிக்குத் தொடங்கி மறுநாள் காலை வரையிலும் நிகழத்தப்படுகின்றது.

**கருவிகள்:**

தெருக்கூத்து நிகழ்ச்சியில் முகவீணை, ஆர்மோனியம், மத்தளம், தாளம் ஆகிய இசை கருவிகளுடன் குழுவாகவே தெருக்கூத்து நடத்தப்படுகின்றது. மேலும் தெருக்கூத்து கலைஞர்கள் புஜக்கீர்த்திகள், கிரீடங்கள், மார்புப்பதக்கம், கால்சலங்கை ஆகிய பொருட்களைத் தங்கள் உடலில் கட்டிக்கொண்டு கூத்தில் பங்கேற்கின்றனர்.

**தமிழ்நாட்டில் தெருக்கூத்து:**

தெருக்கூத்து தமிழகத்தின் வடப்பகுதிகளான திண்டிவனம், காஞ்சிபுரம், செய்யாறு, வேலூர், கடலூர், தருமபுரி, சேலம் முதலான பகுதிகளில் நடத்தப்படுகின்றது. தெருக்கூத்தில் பலவகைகள் உள்ளன. தொண்டை மண்டலத் தெருக்கூத்தில் பெரும்பாலும் மகாபாரதக் கதை நிகழத்தப்படுகிறது. திரௌபதி அம்மன் வழிபாடும் பரவலாகக் காணப்படுகிறது. காரைக்குடியைச் சுற்றியுள்ள பகுதிகளில் பிரகலாதன் கதையினைக் கூத்தாக நிகழ்த்துகின்றனர்

**நிகழ்த்தப்படும் கதைகள்:**



திருவிழாக்காலங்களில் மட்டுமில்லாமல் பொழுதுபோக்கிற்காகவும் கூத்து நடைபெறும்போது இராமாயண, மகாபாரதக் கதைகளும் அதன் கிளைக்கதைகளும் நடத்தப்படுகின்றன. மாரியம்மன் கதை, நல்லதங்காள் கதை, கண்ணிக கதை முதலான கதைகளும் நிகழ்த்துக்கலைகளின் பல்வேறு வடிவங்களில் நிகழ்த்தப்படுகின்றன. கூத்தில் மகாபாரதக் கதைகள் இடம்பெறுவது போல ராமாயணக் கதைகளும் இடம்டபெறுகின்றன. தஞ்சை மாவட்ட நார்த்தேவன் குடிக்காடு கூத்தில் இராமாயணம் இடம்பெறுகின்றது. இதில் ஒவ்வொரு பாத்திரமும் இரண்டிரண்டு பேரால் ஒரே நேரத்தில் நடிக்கப்படுவது அதன் சிறப்பு.

இத்தகு நாட்டார் நிகழத்துக்கலைகளைப் பற்றிய அறிந்து கொள்வது நமது பண்பாட்டு மரபை அறியும் தேவையாகும். இன்றைய காலம் உலகம் முழுவதும் ஒரே வகையான உணவு, உடை என மாறத் தொடங்கிய பண்பாட்டினைப் பின்பற்றும் காலமாக மாறிவருகிறது.

மண்சார்ந்தவற்றை, பண்பாடு சார்ந்தவற்றைப் பற்றிய அறிதலும் பயன்படுத்துதலும் குறைந்து வருகிறது. அழிந்துவரும் கலைகளாக இவை மாறும் குழலிலிலிருந்து அவற்றை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பை ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டியது மிகவும் இன்றயிமையாதது ஆகும்.

## Impact of Thirukkural on Humanity
### அலகு– 7 - இந்தியப் பொருளாதாரம்

**வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் என்பதன் பொருள்:**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது பொதுவாக அந்நாட்டின் வருமானத்தால் அளவிடப்பட்டாலும், அது மொத்த உள்நாட்டு உற்பத்தியாலேயே (GDP) குறிப்பிடப்படுகிறது. ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில். அதாவது ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பைக் குறிக்கும்.

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் என்பது பொதுவாக அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியால் மட்டும்ட குறிப்பிடப்படுவதன்றி, அந்நாட்டு மக்களின் உயர்ந்த வாழ்க்கைத்தரம் அல்லது மக்களின் நல்வாழ்வையும் உள்ளடக்கியதாகும். ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தின் அளவீடுகள் என்பது மனிதவள மேம்பாட்டுக் குறியீடு (HDI) வாழ்க்கைத் தரக்குறியீடு (PQLI) மொத்த நாட்டு மகிழ்ச்சிக் குறியீடு (GNHI) ஆகியவற்றைப் பொறுத்தது.

**மொத்த நாட்டு மகிழ்ச்சிக் குறியீடு (GNHI):**
”மொத்த நாட்டு மகிழச்சி” என்ற தொடர் 1972 ஆம் ஆண்டு பூடான் நாட்டின் நான்காவது மன்னரான ஜிக்மே-சிங்யே-வாங்சுக் என்பவரால் உருவாக்கப்பட்டது. இது நிலைத்த முன்னேற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கலாச்சார மேம்பாடு, சிறந்த நிர்வாகம்

வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே உலக நாடுகள் வளர்ந்த மற்றும் வளர்ந்து கொண்டிருக்கும் நாடுகள் என்று வகைப்படுத்தப்படுகின்றன. வளர்ந்த பொருளாதார நாடுகள் என்பவை தொழில்மயமான, வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதுமான நாடுகளைக் குறிக்கும். (எ.கா) அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜப்பான். வளர்ந்த நாடுகள் என்பவை முழுமையாக பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகள் என்று குறிப்பிடப்படுகின்றன. மாறாக தன் வளங்களான நிலம், சுரங்கங்கள், உழைப்பாளர்கள் ஆகியவற்றை முழுமையாகப் பயன்படுத்தாத நாடுகளை அதாவது குறைந்த தலா வருவாய் கொண்ட நாடுகளை வளர்ந்து கொண்டிருக்கிற நாடுகள் என்று அழைக்கிறோம். (எ.கா) ஆப்பிரிக்கா, பங்களாதேஷ், மியான்மர், பாகிஸ்தான், இந்தோனேசியா, இந்நாடுகளை முன்னேனேற்றமடையாத வளர்ச்சி குன்றிய, பின்தங்கிய மற்றும் மூன்றாம் உலக நாடுகள் என்றும் அழைக்கலாம்.

**இந்தியப் பொருளாதாரம்:**

உலகின் வலிமையான மற்றும் பெரிய பொருளாதாரங்களின் வரிசையில் இந்தியா 7-வது இடத்தைப் பிடித்திருக்கிறது. தொழில்மயமாதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் முன்னேறிக்கொண்டிருக்கும் நாடுகளில் 7 சதவீத பொருளாதார வளர்ச்சியுடன் ஒரு வலுவான இடத்தை அடைந்திருக்கிறது. நமது வளர்ச்சி விகிதம் நீடித்ததாகவும், நிலையானதாகவும் இருப்பதுடன் வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பெருமளவில் கொண்டிருந்தாலும் சில பின்தங்கியிருப்பதற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன.

**முன்னேறிய நாடுகளின் இயல்புகள்:**

1. உயர்ந்த நாட்டு வருமானம் வளர்ச்சி
2. உயர்ந்த தனிநபர் வருமானம்
3. உயர்ந்த வாழ்க்கைத் தரம்
4. முழு வேலைவாய்ப்பு
5. தொழில்துறையின் ஆதிக்கம்
6. உயர் தொழில் நுட்பம்
7. தொழிற்செறிவு
8. அதிக நுகர்ச்சி நிலை
9. அதிக நகர்மயமாதல்
10. சீரிய பொருளாதார வளர்ச்சி

11. சமுதாய, சமத்துவம், பாலின சமத்துவம் மற்றும் மிகக்குறைந்த வறுமை நிலை
12. அரசியல் நிலைத்தன்மை மற்றும் நல்ல ஆட்சி

**இந்தியப் பொருளாதாரத்தின் இயல்புகள்:**
**இந்தியப் பொருளாதாரத்தின் பலங்கள்:**

1. **இந்தியா ஒரு கலப்பு பொருளாதாரம்:**

இந்தியப் பொருளாதாரம் கலப்புப் பொருளாதாரத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இதன் பொருள் தனியார் துறையும் பொதுத்துறையும் இணைந்த சீரியமுறையில் செயல்படுவது. ஒரு புறம் மிக முக்கியமான அடிப்படை மற்றும் கனரக தொழில்கள் பொதுத்துறையால் நிர்வகிக்கப்படுகின்றன. அதே சமயம் பொருளாதார தாராள மயமாக்கலின் விளைவாக தனியார் துறையின் வளர்ச்சி முக்கியத்துவம் பெற்றுள்ளன. இதனால் தனியர் துறையும் பொதுத்துறையும் ஒரே கட்டமைப்பின் கீழ் இணைந்து செயல்பட ஏதுவாகின்றது.

2. **வேளாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது:**

இந்தியாவில் அதிகமானோர் வேளாண் தொழில் செய்து வருவதால் அது பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவில் 60% மக்கள் தங்கள் வாழ்க்கை ஆதாரமாக வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இந்தியாவில் 17% மொத்த உள்நாட்டு உற்பத்தி வேளாண் துறையிலிருந்தே கிடைக்கிறது. பசுமைப்புரட்சி, பசுமைமாறாபுரட்சி மற்றும் உயிரி தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளால் வேளாண்மையில் தன்னிறைவு அடைந்ததுடன் அல்லாமல் உபரி உற்பத்தி அடைந்துள்ளது. பழங்கள், காய்கறிகள், வாசனைப் பொருட்கள், தாவர எண்ணெய், புகையிலை, விலங்குகளின் தோல் போன்ற இந்திய வேளாண் பொருட்கள் பன்பாட்டு வாணிபத்தின் மூலம் நமது பொருளாதாரத்திற்கு வலுச்சேர்க்கின்றன.

3. **வளர்ந்து வரும் சந்தை:**

முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கிடையே இந்தியாவின் சந்தை பிற நாடுகளுக்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்கி வருகிறது. நிலைத்த உள்நாட்டு உற்பத்தியை தொடர்ந்து தக்க வைத்து கொண்டிருப்பதால், பிற நாடுகள் அந்நிய நேரடி முதலீடு (FDI) மற்றும் அந்நிய நிறுவன முதலீட்டாளர் (FII) வழியாக முதலீடு செய்ய பெரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். இது இன்னொரு வகையில் இந்தியப் பொருளாதாரம் வலிமையாக மாறுவதற்கு உதவி செய்து வருகிறது. இந்தியா குறைந்த முதலீட்டில், குறைவான இடர்பாட்டு காரணிகளினால் அதிகமான வளர்ச்சி சாத்தியங்களைக் கொண்டுள்ளதால் நம் நாடு வேகமாக வளர்ந்து சந்தையாக மாறி இருக்கிறது.

4. **வளர்ந்து வரும் பொருளாதாரம்:**

உலகப் பொருளாதாரத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) ஏழாவது இடத்தையும், வாங்கும் சக்தியில் (PPP) மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது. விரைவான பொருளாதார வளர்ச்சியின் விளைவாக இந்தியப் பொருளாதாரம் G20 நாடுகளில் இடம் பெற்றுள்ளது.

5. **வேகமாக வளரும் பொருளாதாரம்:**

இந்தியப் பொருளாதாரம் அதிக நிலையான வளர்ச்சியினை கொண்டது. 2016 – 17 ல் சீன மக்கள் குடியரசு நாட்டிற்கு அடுத்தபடியாக மொத்த உள்ளநாட்டு உற்பத்தி 7.1% பெற்றதன் வாயிலாக உலகின் வேகமாக வளர்ந்து வரும் நாடுகளுக்கிடையே, இந்தியா மிக வேகமாக வளர்ந்து வருகிறது என்பதை காட்டுகிறது.

6. **வேகமாக வளரும் பணிகள் துறை:**

இந்தியாவின மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும் பங்கு பணிகள்துறையின் பங்களிப்பாகும். தகவல் தொழில்நுட்பம்,BPO போன்ற தொழில்நுட்ப சேவைகள் பேரளவு வளர்ச்சி பெற்றுள்ளது. இவை பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகிக்கின்றன. இத்தகைய வளர்ந்து வரும் பணிகள் துறைகள், நாட்டை உலக அளவில் கொண்டு செல்லவும் மற்றும் பணிகள் துறையின் பிரிவுகளை உலகம் முழுவதும் பரவச் செய்யவும் துணைநிற்கின்றன.

7. **பேரளவு உள்நாட்டு நுகர்ச்சி:**

நமது நாட்டின் வேகமான பொருளாதார வளர்ச்சியின் காரணமாக மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளதால், உள்நாட்டு நுகர்வுப் பொருட்களை வங்குவது பெருமளவு அதிகரித்து இருக்கிறது. வாழ்க்கைத்தரம் உயர்ந்ததால் மக்களின் வாழ்க்கை முறையை மாற்றி உள்ளது.

8. **நகரப்பகுதிகளின் விரைவான வளர்ச்சி:**

பொருளாதார வளர்ச்சிக்கான அறிகுறிகளில் நகரமயமாதல் முக்கிய அறிகுறியாகும். சுதந்திரத்திற்குப் பின்னர் நகர்ப்புறங்கள் விரைவான வளர்ச்சி பெற்று வருகிறது. மேம்பட்ட போக்குவரத்து மற்றும் தொடர்புகள், கல்வி மற்றும் சுகாதார வசதிகள் நகரமயமாதலை மேலும் விரைவுபடுத்துகின்றன.

9. **நிலையான பேரளவு பொருளாதாரம்:**

உலக நாடுகளில் இந்தியா ஒரு நிலைத்த பேரளவு பொருளாதார நாடு என்பதை தொடர்ந்து நிரூபித்து வருவதை புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. நடப்பாண்டின் பொருளாதார ஆய்வறிக்கை இந்தியப் பொருளாதாரத்தை “நிலைத்த, உறுதிவாய்ந்த, சிறந்த எதிர்காலம் கொண்ட பேரியல் பொருளாதாரத்திற்கான சொர்க்கம்” என்று குறிப்பிடுகிறது. பொருளாதார ஆய்வறிக்கையின்படி, 2014 – 2015 க்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் 8% ஆக இருக்கும் என நிர்ணயித்து இருந்தபோதிலும் உண்மையான வளர்ச்சி அதைவிட சற்று குறைவாக 7.6% ஆக இருந்தது. இதன்மூலம் இந்தியா ஒரு நிலையான பேரளவு பொருளாதார வளர்ச்சியுடையது என நிரூபித்து வருகிறது.

10. **மக்கள் தொகை பகுப்பு:**

இந்திய மனித வளம் இளைஞர்களால் நிரம்பியுள்ளது. இதன் பொருள் இந்தியா, அதிக அளவு இளைஞர்கள் எண்ணிக்கையைக் கொண்டுள்ளது. இளைஞர்களே வளர்ச்சியின் அடிப்படை. இந்திய இளைஞர்களின் திறமை மற்றும் அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் காரணமாக பொருளாதார வளர்ச்சி உச்சத்தை எட்டியுள்ளது. நாடு உச்ச வளர்ச்சி அடைவதற்கு மனிதவளம் ஒரு முக்கிய பங்கு அளிக்கிறது. மேலும் இது வெளிநாட்டு முதலீட்டையும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளையும் ஈர்க்கிறது.

**இந்தியப் பொருளாதாரத்தின் பலவீனம்:**

1. **அதிக மக்கள் தொகை:**

மக்கள் தொகைப் பெருக்கத்தில் இந்தியா, சீனாவிற்கு அடுத்த இரண்டாவது நாடாக உள்ளது. வரும் காலத்தில் சீன மக்கள் தொகையையும் மிஞ்சக்கூடும். மக்கட்தொகை வளர்ச்சி வீதம் இந்தியாவில் அதிகமாக இருப்பதால் இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் தடையாக உள்ளது. மக்கள் தொகை அதிகரிப்பு ஒவ்வொரு 1000 பேருக்கும் 1.7 என்ற வீதத்தில் அதிகரிக்கிறது. ஆண்டு தோறும் ஏற்படும் மக்கள் தொகை பெருக்கம் ஆஸ்திரேலியாவின் மொத்த மக்கள் தொகைக்குச் சமமாக உள்ளது.

2. **ஏற்றத்தாழ்வு மற்றும் வறுமை:**

இந்திய பொருளாதாரத்தில் பொருளாதார ஏற்ற தாழ்வுநிலை நீடிக்கிறது. அதிக அளவில் வருமானம் மற்றும் சொத்துக்களைப் பெற்றிருக்கும் 10% இந்தியர்களின் சொத்துக்கள் மேலும் அதிகரித்தவண்ணம் உள்ளது. இதனால் சமுதாயத்தில் மீதமுள்ள அதிக அளவு மக்களின் வறுமை நிலை அதிகரிப்பதற்கும், வறுமைகோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் வீதம் அதிகரிப்பதற்கும் காரணமாக அமைகிறது. பணக்காரர்கள் தொடர்ந்து பணக்காரர்களாகவும், ஏழைகள் தொடர்ந்து ஏழைகளாகவும் நீடிக்கின்றனர்.

3. **அத்தியாவசியப் பண்டங்களின் விலை உயர்வு:**

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிலையான வளர்ச்சி மற்றும் வளர்ச்சி வாய்ப்புகள் இருந்த போதும். அத்தியாவசியப் பண்டங்களின் விலை தொடர்ந்து உயர்கிறது. இந்த தொடர் விலை ஏற்றத்தால் வாங்கும் சக்தி குறைவதோடு மட்டுமல்லாமல் நிரந்தர வருமானம் இல்லாத ஏழை மக்களை பாதிக்கிறது.

4. **உள்கட்டமைப்பு பலவீனம்:**

கடந்த பத்து இருபது ஆண்டுகளில் உள்கட்டமைப்பு வளர்ச்சியில் படிப்படியான முன்னேற்றம் காணப்பட்டாலும் மின் ஆற்றல், போக்குவரத்து, பண்டங்கள் பாதுகாப்பு பெட்டகம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளில் இன்றளவும் பற்றாக்குறையாக உள்ளது.

5. **வேலைவாய்ப்பை உருவாக்க திறனற்ற நிலை:**

அதிகரித்து வரும் இளைஞர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வேலை வாய்ப்பு வசதியை அதிகரிப்பது அவசியமாகிறது. உற்பத்தியில் ஏற்படும் வளர்ச்சி வேலை வாய்ப்பை உருவாக்கவில்லை. எனவே, இந்தியப் பொருளாதாரம் ”வேலை வாய்ப்பற்ற வளர்ச்சி” என்ற பண்பைக் கொண்டுள்ளது.

6. **பழமையான தொழில் நுட்பம்:**

வேளாண்மை மற்றும் சிறுதொழில் நிறுவனங்களின் தொழில்நுட்ப நிலை இன்னும் பழமையானதாகவும், வழக்கொழிந்ததாகவும் உள்ளது.

**இந்தியாவில் மக்கள் தொகை போக்குகள்:**

மக்கள் தொகை அம்சங்கள் பற்றி அறிவியல் நெறிப்படி படிப்பதே மக்கள் தொகையியல் எனப்படும். இந்திய மக்கள் தொகை போக்கின் பல்வேறு கூறுகளாவன.

- மக்கள் தொகை அளவு
- வளர்ச்சி வீதம்
- பிறப்பு மற்றும் இறப்பு வகிதம்
- மக்கள் தொகை அடர்த்தி
- பாலின விகிதம்
- வாழ்நாள் எதிர்பார்ப்பு
- எழுத்தறிவு விகிதம்

**மக்கள் தொகை அளவு:**

| கணக்கெடுப்பு ஆண்டு | மக்கள தொகை (கோடிகளில்) | சராசரி ஆண்டு வளர்ச்சி |
|---|---|---|
| 1901 | 23.84 | - |
| 1911 | 25.21 | 0.56 |
| 1921 | 25.13 | -0.03 |

| | | |
|---|---|---|
| 1931 | 27.90 | 1.04 |
| 1941 | 31.87 | 1.33 |
| 1951 | 36.11 | 1.25 |
| 1961 | 43.92 | 1.96 |
| 1971 | 54.81 | 2.20 |
| 1981 | 68.33 | 2.22 |
| 1991 | 84.33 | 2.16 |
| 2001 | 102.70 | 1.97 |
| 2011 | 121.02 | 166 |

கடந்த நூறு ஆண்டுகளில் நான்கு மடங்கு மக்கள் தொகை அளவு அதிகரித்து உலக அளவில் சீனாவிற்கு அடுத்து 2-ம் நிலையை அடைந்துள்ளது. உலகின் புவிப்பரப்பில் 2.4% பரப்பளவு மற்றும் உலக வருவாயில் 1.2% வருவாயைப் பெற்றுள்ள இந்தியா, உலக மக்கள் தொகையில் 17.5% - ஐக் தன்னகத்தே கொண்டுள்ளது. வேறு வகையில் கூறினால் உலக மக்கள் தொகையில் 6-ல் ஒருவர் இந்தியர். உண்மையில் உத்திரபிரதேசம் மற்றும் மகாராஸ்டிரா இவற்றின் மக்கட்தொகையின் கூடுதலை ஒப்பிட்டால் மக்கள் தொகையில் மூன்றாம் இடம் பிடிக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளை விட அதிகம். இந்தியாவின் சில மாநிலங்களின் மக்கள் தொகை உலகின் பல்வேறு நாடுகளின் மக்கட் தொகையை விட அதிகளவு உடையது.

காலரா, பிளேக், இன்ஃபுளுயன்சா போன்ற கொள்ளை நோய்கள் மற்றும் பஞ்சம் இவற்றின் காரணமாக 1911 – 1921 காலகட்டத்தில் மக்கள் தொகை எதிர்மறையாகக் குறைந்தது. 1921 ஆம் ஆண்டு மக்கள் தொகை அதிகரிக்க துவங்கியதால் அவ்வாண்டு “பெரும் பிரிவினை ஆண்டு” என அழைக்கப்படுகிறது.

1951 ஆண்டு மக்கள் தொகைப் பெருக்க வீதம் 1.33% லிருந்து 1.25% ஆக குறைந்து வந்தது. ஆகையால் இது “சிறுபிளவு ஆண்டு” என அழைக்கப்படுகிறது.

1961-ல் இந்திய மக்கள் தொகை உயர்வு வீதம் 1.96% அதாவது 2% ஆகும். ஆகையால் 1961 ஆம் ஆண்டை ”மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு” என்கிறோம். 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை ஒரு பில்லியன் (100 கோடி) அளவைக் கடந்தது.

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இளைஞர்களின் மக்கட் தொகை குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. இது “மக்கட் தொகை மாறுதலைக“ குறிக்கிறது.

**பிறப்பு விகிதம் மற்றும் இறப்பு விகிதம்:**

**குழந்தைகள் பிறப்பு விகிதம்:**
இது 1000 மக்கள் தொகைக்கு பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறிக்கம்.

**இறப்பு விகிதம்:** இது 1000 மக்கள் தொகைக்கு இறப்பவர்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்.

வெவ்வேறு ஆண்டுகளில் இந்தியாவில் குழந்தைகள் பிறப்பு விகிதம் மற்றும் இறப்பு விகிதங்கள்.

**பிறப்பு மற்றும் இறப்பு வீதம்:**

| **ஆண்டு** | **பிறப்பு வீதம்** | **இறப்பு வீதம்** |
|---|---|---|
| 1951 | 39.9 | 27.4 |
| 2001 | 25.4 | 8.4 |
| 2011 | 21.8 | 7.11 |

1951-ல் 39.9 ஆக இருந்த பிறப்பு விகிதம் 2011 ஆம் ஆண்டு 21.8 ஆக குறைந்தது. பிறப்பு விகிதம் குறைவாக இருந்தாலும் குறிப்பிடப்படும் படியானதாக இல்லை. இறப்பு விகிதம் 1951 ல் 27.4 ஆக இருந்தது. 2011 – ல் 7.1 ஆக குறைந்தது.

மேற்கண்ட அட்டவணை பிறப்பு விகிதத்தின் குறைவானது, இறப்பு விகிதத்தின் குறைவைவிட குறைவாக உள்ளதைக் காட்டுகிறது.

கேரளா மிகக் குறைந்த பிறப்பு விகிதம் (14.7) மற்றும் உத்திரபிரதேசம் (29.5) அதிக அளவு பிறப்பு விகிதத்தையும் கொண்டுள்ளது. மேற்கு வங்காளம் மிகக் குறைந்த இறப்பு விகிதத்தையும் (6.3) ஒரிசா அதிக இறப்பு விகிதத்தையும் (9.2) கொண்டுள்ளது. மாநிலங்களிடையே பத்தாண்டுகளில் (2001 – 2011) பீகார் அதிக மக்கள் தொகை பெருக்கத்தையும் கேரளா குறைந்த பிறப்பு விகிதத்தையும் கொண்டுள்ளது. பீகார் (BI), மத்திய பிரதேசம் (MA), ராஜஸ்தான் (R), உத்திரபிரதேசம் (U) ஆகிய நான்கு மாநிலங்கள் ”BIMARU” பிமரு மாநிலங்கள் எனப்படுகின்றன. அவை அதிக மக்கள் தொகை கொண்ட மரிநலங்கள் ஆகும்.

$$\text{மக்கள் தொகை அடர்த்தி} = \frac{\text{மொத்த மக்கள் தொகை}}{\text{அப்பகுதியின் நிலப்பரப்பு}}$$

மக்கள்தொகை அடர்த்தி என்பது ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையைக் குறிக்கின்றது. அதாவது நிலம் மற்றும் மனிதன் விகித அளவைக் குறிக்கிறது. மொத்த நிலப்பரப்பு மாறாதிருக்கும் போது அதிகரிக்கும் மக்கள் தொகையானது மக்கள் தொகையின் அடர்த்தியை அதிகரிக்கின்றது.

**மக்கள் தொகை அடர்த்தி:**

| ஆண்டு | மக்கள் தொகை அடர்த்தி (ஒரு சதுர கிலோ மீட்டரில் உள்ள மக்கள்) |
|---|---|
| 1951 | 117 |
| 2001 | 325 |
| 2011 | 382 |

சுதந்திரம் அடைவதற்கு சற்று முன்னர் வரை மக்கள் தொகை அடர்த்தி 100-க்கும் குறைவு. ஆனால் சுதந்திரத்திற்கு பின்னர் மக்கள் தொகை அடர்த்தியானது 1951 ல் 117 – ஆக இருந்து உயர்ந்து பின் 2001 – ல் 325 ஆக அதிகரித்தது.

2011- ல் மக்கள் தொகைக் கணக்கீட்டின்படி மக்கள் தொகை அடர்த்தி 382 ஆகும். இவ்வாறு மக்கள் தொகை அழுத்தம் மேலும் அதிகரிக்கிறது. கேரளா, மேற்கு வங்காளம், பீகார், உத்திரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் இந்தியாவின் சராசரி அடர்த்தியை விட மக்கள் தொகை அடர்த்தி மிகுந்து காணப்படுகிறது. பீகார் மிகவும் அதிக மக்கள் தொகை அடர்த்தியுடன், ஒரு சதுர கி.மீக்கு 1,102-என உள்ளது. அதனை அடுத்ததாக மேற்கு வங்காளம் 880 மக்கள் தொகை அடர்த்தி கொண்டுள்ளது. ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 17 நபர்கள் என்ற அளவில் அருணாசலப் பிரதேசம் மிக குறைவான மக்கள்தொகை அடர்த்தியைப் பெற்றுள்ளது.

**பாலின விகிதம்:**

மக்கள் இது 1000 ஆண்களுக்கு உள்ள பெண்களின் விகிதத்தை குறிக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஆண் பெண் பாலின விகிதத்தை அளவிடவும், பாலினச் சமநிலையை பிரபலப்படுத்துவதற்கான முக்கியமான சுட்டிக் காட்டியாகும்.

**பாலின விகிதம்:**

| கணக்கெடுப்பு ஆண்டு | பாலின விகிததம் (1000-ஆண்களுக்கு உள்ள பெண்கள் வீதம்) |
|---|---|
| 1951 | 946 |
| 2001 | 933 |
| 2011 | 940 |

இந்தியாவில் பெண்களை விட ஆண்களின் பெருக்க விகிதம் அதிக சாதகமாக உள்ளது. கேரளாவில், 2011 ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி 1084 என்ற அளவில் வயது வந்தோர் பாலின விகிதம் இருந்தது. இறுதியாக 2011ல் எடுக்கப்பட்ட மக்கட் தொகை கணக்கெடுப்பின் படி பாலின விகிதம் அதிகரித்து உள்ளது. 2011-ன் படி ஹரியானா மிகக்குறைந்த பாலின விகிதமான 877-யும் கேரளா மற்றும் மாநிலங்களை விட பெண்கள் பாலின விகிதம் அதிகரித்து 1000 ஆண்களுக்கு 1084 பெண்களைக் கொண்டுள்ளது.

**பிறப்பின் போது வாழ்நாள் எதிர்பார்ப்பு:**

பிறப்பின் போது எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் அளவே வாழ்நாள் எதிர்பார்ப்பு எனக் குறிக்கப்படுகிறது. வாழ்நாள் எதிர்பார்ப்பு காலம் அதிகரித்து வருகிறது. இறப்பு விகிதம் அதிகமாக இருக்கும் போது வாழ்நாள் காலம் குறைவாகவும், மாறாக இறப்பு விகிதம் குறைவாக இருக்கும் போது வாழ்நாள் காலம் அதிகமாகவும் உள்ளது. வேறு வகையில் கூறுவதானால் அதிக வாழ்நாள் காலம், குறைந்த இறப்பு விகிதத்தையும், குறைந்த வாழ்நாள் காலம் அதிக இறப்பு விகிதத்தையும் குறிப்பிடுகின்றது.

**வாழ்நாள் எதிர்பார்ப்பு**

| ஆண்டு | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1951 | 32.5 | 31.7 | 32.1 |
| 1991 | 58.6 | 59.0 | 58.7 |
| 2001 | 61.6 | 63.3 | 62.5 |
| 2011 | 62.6 | 64.2 | 63.5 |

1901 – 1911 ஆண்டுகாலங்களில் வாழ்நாள் எதிர்பார்ப்பு விகிதம் 23 வருடங்கள் மட்டுமே ஆகும். இது 2011-ல் 63.5 வருடங்கள் என்ற அளவில் அதிகரித்தது இதற்கு முக்கியக் காரணம் இறப்பு விகிதம் குறிப்பிடத்தக்க அளவு குறைந்ததே ஆகும். ஆயினும் மற்ற வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவின் வாழ்நாள் எதிர்பார்ப்பு காலம் குறைவே ஆகும்.

**எழுத்தறிவு விகிதம்**

இது மொத்த மக்கள் தொகையில் எழுத்தறிவு பெற்றவர்கள் எண்ணிக்கை விகிதத்தை குறிப்பிடுகிறது. 1951-ல் ஆண்கள் நான்கில் ஒருவர் மற்றும் பெண்கள் பன்னிரெண்டில் ஒருவர் என்ற அளவிலேயே எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை இருந்தது. சராசரியாக ஆறு பேருக்கு ஒருவர் மட்டுமே எழுத்தறிவு பெற்றவர் ஆவார். இது 2011ல் ஆண்கள் 82% மற்றும் பெண்கள் 65.5% என்ற அளவில் ஒட்டு மொத்த எழுத்தறிவு விகிதம் 74.04%. இது மற்ற வளர்ந் நாடுகள் மற்றும் இலங்கையைக் காட்டிலும் கூட மிகவும் குறைவு.

| கணக்கெடுப்பு ஆண்டு | கல்வியறிவு பெற்றவர்கள் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|
| 1951 | 18.3 | 27.2 | 8.9 |
| 2001 | 64.8 | 75.3 | 53.7 |
| 2011 | 74.04 | 82.1 | 65.5 |

கேரளா 92% - உடன் அதிக எழுத்தறிவு விகிதமும், அடுத்தப்படியாக கோவா (82%) எழுத்தறிவு விகிதமும் ஹிமாச்சலப் பிரதேசம் (76%) மகாராஷ்டிரா (75%) மற்றும் தமிழ்நாடு

(74%) என அடுத்த இடங்களைப் பிடிக்கிறது. 2011-ன் படி பீகார் 53% குறைவான எழுத்தறிவு விகிதம் பெற்ற மாநிலமாக உள்ளது.

**இயற்கை வளங்கள்:**

ஒரு நாட்டில் இயற்கையிலிருந்து பெறப்படும் வளங்கள் இயற்கை வளங்கள். காடு, நீர், கனிம வளங்கள் மற்றும் ஆற்றல் சக்திகள் ஆகியன முக்கிய இயற்கை வளங்கள் ஆகும். அதிக இயற்கை வளங்களைக் கொண்டுள்ள இந்தியா பெருவாரியான ஏழை மக்களையும் கொண்டுள்ளது. இயற்கை நமக்கு பல்வேறு காலநிலை, பாசனத்திற்கான பல்வேறு ஆறுகள், மின் சக்தி, அதிக கனிமவளங்கள் காடுகள் மற்றும் பல்வேறு மண் வளங்களை அளிக்கிறது.

**இயற்கை வளங்களின் வகைகள்**

**புதுப்பிக்கக்கூடிய வளங்கள்:**
நீண்டகாலங்கள் நிலைத்து இருக்கக்கூடிய மீண்டும் உருவாக்கக்கூடிய வளங்கள் எ.கா. காடுகள், வனவிலங்குகள், காற்று, கடல்வளங்கள், நீர்மின் சக்தி, உயிரினத் தொகுதி, காற்றாலை மின் உற்பத்தி போன்றவை.

**புதுப்பிக்க இயலாத வளங்கள்:**
மீண்டும் உருவாக்கப்பட முடியாத நிலைத்து இருக்க முடியாதவைகள் எ.கா. படிம எரிபொருட்கள் நிலக்கரி, பெட்ரோலியம் கனிமங்கள் போன்றன.

**மண் வளம்:**

இந்தியா மொத்த பரப்பளவில் 32.8 லட்சம் சதுர கிலோமீட்டர் நில பரப்புடன் உலகில் ஏழாவது இடத்தை பெற்றுள்ளது. இது உலக நிலப்பரப்பில் 2.42% ஆகும். இந்தியா நிலப்பரப்பளவில் உண்மையில் பெரியநாடு என்ற போதும் மிகப்பெரிய மக்கட் தொகை அளவினால் நிலப்பரப்பு – மனிதன் விகிதம் சாதகமானதாக இல்லை.

வேளாண் புள்ளி விவர அறிக்கையின்படி, அதிக விவசாய பரப்பில் விவசாயம் செய்பவர்கள் (10 ஹெக்டேர் மற்றும் அதற்கு மேலும்) குறைவான எண்ணிக்கையிலும் மிக குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள் (1 ஹெக்டேர் அதற்கும் குறைவு) அதிகமான எண்ணிக்கையிலும் இருக்கின்றனர். இது நிலம் துண்டாடப்படுதல், மேலும் பிரிவினையைக் கூடும் என்பபதையே காட்டுகிறது.

**வனவளம்:**

2007 – ம் ஆண்டு கணக்கீட்டின் படி இந்தியாவின் காடுகள் 69.09மில்லியன் ஹெக்டேர் அதாவது மொத்த நிலப்பரப்பில் 21.02% ஆகும். இதில் 8.35 மில்லியன் ஹெக்டர் அடர்ந்த காடுகள்,31.90 மில்லியன் மில்லியன் ஹெக்டேர் காடுகள் ஓரளவு அடர்ந்த காடுகள் மற்றும் 28.84 மில்லியன் ஹெக்டேர் காடுகள் பரந்தவெளி காடுகள்.

**முக்கியமான கனிம வளங்கள்:**

1. **இரும்புத்தாது:**

இந்தியாவில் உயர்தரமான இரும்புத்தாது அபரிமிதமாகக் காணப்படுகிறது. (ஹேமடைட்) இரும்பு தாது 4630 மில்லியன் டன் மற்றும் (மேக்னடைட்) இரும்புத்தாது 10619 மில்லியன் டன் அளவிற்கு இரும்புத்தாது நமது நாட்டில் இருப்பு உள்ளது. ஹேமடைட் இரும்புத்தாது அதிகமாக சத்தீஸ்கர், ஜார்கண்ட், ஒடிசா, கோவா மற்றும் கர்நாடகா ஆகிய இடங்களில் கிடைக்கிறது. மேக்னடைட் தாது கர்நாடகாவில் உள்ள மேற்கு கடற்கரையில் அதிகம் கிடைக்கிறது. கேரளா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசங்களிலும் சில இடங்களில் இரும்புத்தாது காணப்படுகிறது.

2. **நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி:**

பூமிக்கு அடியில் அதிகமாக கிடைக்கக் கூடிய கனிமங்களில் நிலக்கரி முக்கியமானதாகும். சீனா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு அடுத்தபடியாக நிலக்கரி உற்பத்தியில் மூன்றாவது இடத்தில் இந்தியா உள்ளது. மேற்கு வங்காளம், பீகார், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா மற்றும் ஆந்திரபிரதேசம் முக்கிய நிலக்கரி கிடைக்கக்கூடிய இடங்களாகும். வங்காளம், ஜார்கண்ட் மாநில நிலக்கரி வயல்களிலிருந்து அதிக அளவு நிலக்கரி கிடைக்கிறது.

3. **அலுமினியத்தாது (பாக்சைட்)**

பாக்சைட் அலுமினியம் தயாரிக்கப் பயன்படும் முக்கியமான தாது ஆகும். கிழக்குக் கடற்கரையில், ஒடிசா, ஆந்திரப்பிரதேசம் ஆகிய இடங்களில் அதிக அளவு பாக்சைட் தாது செறிந்து காணப்படுகிறது.

4. **மைக்கா:**

மைகா ஒரு வெப்பத்தை தடுக்கும் கனிமம் மற்றும் அரிதிற் மின் கடத்தி ஆகும். இந்தியா மொத்த வியாபாரத்தில் 60% பங்குடன், மைக்காதாள் உற்பத்தியில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. பெக்மடைட் எனப்படும் மைக்கா வகை ஆந்திர பிரதேசம், ஜார்க்கண்ட், பீகார் மற்றும் ராஜஸ்தானில் கிடைக்கிறது. மின் உபகரணங்களில் மின் தடுப்பானாக பயன்படுத்தப்படுகிறது.

5. **சுத்திகரிக்கப்படாத எண்ணெய்:**

இந்தியாவில் அஸ்ஸாம் மற்றும் குஜராத்தின் பல இடங்களில் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் எடுக்கப்படுகிறது. டிக்பாய், பாடர்பூர், நாகர்காட்டிகா, காசிம்பூர், பள்ளியரியா, ருத்ராபூர், சிவசாகர், மார்ன் (அஸ்ஸாமின் அனேக இடங்கள்) காம்பே வளைகுடா அங்கலேஸ்வர் மற்றும் காலோல் (குஜராத்தின் அனேக இடங்கள்) ஆகியவை முக்கியமான எண்ணெய் வளங்கள் உள்ள இடங்களாகும்.

6. **தங்கம்:**

இந்தியா குறைந்த அளவே தங்க வளம் இருப்பு பெற்று விளங்குகிறது. மூன்று முக்கிய தங்கச் சுரங்கப் பகுதிகள் உள்ளன. கோலார் மாவட்டத்தில் கோலார் தங்க வயல் சுரங்கத்திலும் ரெய்ச்சூர் மாவட்டத்தில் உள்ள ஹட்டி தங்க வயல் சுரங்கத்திலும் (இரண்டும் கர்நாடகாவில் உள்ளது) மற்றும் ஆந்திர மாநிலம் அனந்தபூர் மாவட்டத்தில் உள்ள ராம்கிரி தங்க வயல் சுரங்கத்திலும் ஒரளவு தங்கம் கிடைக்கிறது.

7. **வைரம்:**

UNECE அறிக்கையின்படி நாடு முழுவதிலும் 4582 ஆயிரம் காரட் வைரங்கள் கிடைக்கின்றன. அதில் அதிகமாக மத்தியபிரதேசத்தின் பன்னாவிலும், ஆந்திரபிரதேசத்தில் கர்னூல் மாவட்டம் ராமல்ல கோட்டா போன்ற இடங்களிலும், கிருஷ்ணா நதியின் படுகையிலும் கிடைக்கிறது. புதிதாக ராய்பூர் இம்பெரலி சுரங்கம் ராஜ்பூர் மற்றும் சட்டீஸ்கரிலுள்ள பாஸ்டர் மாவட்டத்திலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒடிஷாவின் நியுபடா மற்றும் பார்கர் மாவட்டம், ஆந்திராவின் நாராயணபேட் மத்தூர் கிருஷ்ணா பகுதி, கர்நாடகாவின் ராய்ச்சூர் குல்பர்ஹா மாவட்டத்தில் ரெய்சூர் ஆகிய சில வைரம் கிடைக்கக்கூடிய மற்ற இடங்களாகும்.

**கட்டமைப்பு வசதிகள்:**

கட்டமைப்பு மேம்பாடு என்பது பல்வேறு வளர்ச்சிக்கு உதவும் வகையிலான கட்டமைப்புகளாகும் இது இரு வகைப்படும்.

1. பொருளாதார கட்டமைப்பு 2. சமூக கட்டமைப்பு

**பொருளாதார கட்டமைப்பில் உள்ளடக்கியது:**

போக்குவரத்து தொலை தொடர்பு, ஆற்றல் வளங்கள், நீர்பாசனம் பண மற்றும் நிதிநிறுவனங்கள் முதலியனவாகும்.

**சமூக கட்டமைப்பில்:**

கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி, சுகாதாரம் வீட்டு வசதி மற்றும் பொது வசதிகள் ஆகியன அடங்கியுள்ளன.

**பொருளாதார கட்டமைப்பு வசதிகள்:**

பொருளாதார கட்டமைப்பு வசதிகள் நாட்டின் உற்பத்தி மற்றும் பகிர்வு வசதிக்கு பயன்படுவதாகும்.

உதாரணமாக, இருப்புப் பாதைகள், சரக்கு வாகனங்கள், தபால் மற்றும் தொலை தொடர்பு நிலையங்கள், துறைமுகங்கள், கால்வாய்கள், மின் உற்பத்தி நிலையங்கள், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் ஆகியவை பொருளாதார கட்டமைப்புக்கு உதவுகின்றன. இவை பண்டங்கள் பணிகள் உற்பத்திக்கு உதவுகின்றன.

**போக்குவரத்து:**

உறுதியான பொருளாதார வளர்ச்சிக்கு அனைத்து இடங்களையும் நன்றாக இணைக்ககூடிய திறன்மிகு போக்குவரத்து முறை தேவைப்படுகிறது.

இந்தியா இருப்புப் பாதை, சாலை, கடல்வழி (கப்பல் போக்குவரத்து) மற்றும் வான்வழி போக்குவரத்தின் நல்ல கட்டமைப்பை பெற்றுள்ளது. சாலைப் போக்குவரத்தில் 30 லட்சம் கி.மீ நீளம் கொண்ட சாலைகளால் உலகத்தின் மிகப்பெரிய சாலை போக்குவரத்து கொண்ட நாடாக திகழ்கிறது. ஆசியாவில் மிகப்பெரிய இருப்புப் பாதை வழிகளிலும், உலகின் நான்காவது பெரிய போக்குவரத்து அமைப்பாகவும் விளங்குகிறது. இந்தியாவின் இருப்புப் பாதை நீளம் உள்ளது 63,000 கி.மீ இதில் 13,000 கி.மீ மின் மயமாக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் முக்கியமான துறைமுகங்களான கொல்கத்தா, மும்பை, சென்னை, விசாகப்பட்டினம்,கோவா ஆகிய இடங்களில் 90% கடல் வழி வாணிபமும், உலகின் பல பகுதிகளிலிருந்தும் சரக்கு கப்பல்கள் மற்றும் பயணிகள் கப்பல்கள் பொருட்கள் இறக்கும் இடங்களாகவும், உலகின் அதிக பயணிகள் வந்து போகும் இடங்களாகவும் உள்ளன. இந்தியாவின் முக்கிய நகரங்களை வான் வழி போக்குவரத்து நாட்டின் பெரிய நகரங்கள் மற்றும் சிறு நகரங்களை இணைக்கின்றன. உள்நாட்டு விமானச் சேவையை இந்தியன் ஏர்லைன்ஸ் மற்றும் தனியார் விமான சேவைகள் செய்து வருகின்றன. பன்னாட்டு விமானப் போக்குவரத்து ஏர் இந்தியன் நிறுவனம் வழங்கி வருகிறது.

இந்திய இரயில்வே முதல் Wi-fi-வசதியை பெங்களூருவில் தொடங்கியது.

இந்திய விமான போக்குவரத்து நிறுவனம், ஏர் இந்தியா மற்றும் இந்தியன் ஏர்லைன்ஸ் ஆகியவை 27-8-2007 அன்று ஒன்றாக இணைத்தது.

மத்திய மற்றும் மாநில அரசுகள் துறைமுகங்களின் மேலாண்மை மற்றும் வளர்ச்சிக்கு, குறிப்பாக சிறு துறைமுகங்களின் வளர்ச்சிக்கு வழிகாட்ட 1950-ல் தேசிய துறைமுக வாரியம் உருவாக்கப்பட்டது.

**ஆற்றல்:**

நம் வாழ்க்கைக்கு தேவையான அங்கங்களில் ஒன்று மின் ஆற்றலாகும். இன்றைய நவீன தொழில்நுட்ப காலத்தில் மின்சாரம் இன்றி நம்மால் வாழ்வது சிரமம். மின் உற்பத்திக்கு

பயன்படுத்துக் கிடைக்கக்கூடிய மூல வளங்கள் அடிப்படையில் அவை இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது.

1. புதுப்பிக்க இயலாத மின் ஆற்றல் மூல வளங்கள்
2. புதுப்பிக்கக்கூடிய மின் ஆற்றல் மூல வளங்கள்

1. **புதுப்பிக்க இயலாத மின் ஆற்றல் மூலங்கள்:**

இதன் பெயருக்கு ஏற்றார் போல் இத்தகைய வளங்களை நாம் மறுபடியும் பயன்படுத்த முடியாது. அவை தீர்ந்து விட்டால் மறுபடியும் உருவாக்க முடியாது. இத்தகைய ஆற்றல் மூலங்கள் தொடர்ந்து பயன்படுத்திட அவை காலப்போக்கில் தீர்ந்து போகும். உதாரணம் நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு மற்றும் பல.

2. **புதுப்பிக்கக்கூடிய மின்சக்தி மூல வளங்கள்:**

இத்தகைய வளங்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்த இயலும் ஏனென்றால் இத்தகைய வளங்கள் தீர்த்து போகாதவை. இவை ஏராளமாகவும், முற்றுப் பெறாதவைகளாகவும் இருக்கின்றன.

அவை

1. **சூரிய சக்தி**
2. **காற்று சக்தி**
3. **அலைகள் சக்தி**
4. **புவி வெப்ப சக்தி**
5. **உயிரி எரிவாயு சக்தி**

சில நேரங்களில் புதுப்பிக்க கூடிய வளங்களை, வழக்கில் இல்லாத ஆற்றல் எனவும் அழைப்பதுண்டு. காரணம் இவ்வளங்கள் கொண்டு முன்காலங்களில் மின் ஆற்றல் உற்பத்தி செய்யப்பட வில்லை அல்லது வழக்கத்தில் இல்லை எனலாம்.

**சமூகக் கட்டமைப்பு:**

மனித வளங்களை மேம்படுத்துவதும், பொருளாதார வளர்ச்சிக்கு மறைமுகமாகத் துணை செய்வதுமான அமைப்புகளை சமூகக் கட்டமைப்புகள் என்கிறோம். இந்த அமைப்புகள் உற்பத்தி மற்றும் பகிர்வுக்கு வெளியே இருக்கின்றன. இந்த சமூக அமைப்புகளின் மேம்பாடு மனித வளங்களின் திறமையையும், உற்பத்தி திறனையும் அதிகரிக்கின்றன. (எ.கா) பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் மற்றும் பொது வசதி மற்றும் இதர குடிமை வசதிகள், குறைவான சமூக அடிப்படைக் கட்டமைப்பினால், இந்தியப் பணியாளர்களின் உற்பத்தித் திறன் குறைவாக இருக்க காரணமாக உள்ளது சமூகக் கட்டமைப்புகளின் நிலை மற்றும் வளர்ச்சி பற்றி காண்போம்.

**கல்வி:**
**இந்தியாவில் கல்வி:**

இந்தியாவில் குருகுல முறையில் பன்னெடுங்காலமாக கல்வி போதிக்கப்பட்டது. தற்போது வளர்ந்து வரும் பொருளாதாரத் தேவைகளுக்கேற்ப இந்தியக் கல்வி முறை வேகமாக வளர்ந்து வருகிறது. மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் (MHRD) தம் நாட்டின் கல்விக் கொள்கைகளையும், திட்டங்களையும் வகுத்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

**இந்திய கல்வி முறை:**

1976 வரை மாநில அரசின் பொறுப்பில் இருந்த கல்வி அதன்பிறகு மத்திய மாநில அரசுகளின் கூட்டுப்பொறுப்பில் வந்தது. மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுதுறை கல்விக்கான வரவு செலவுகளை மேற்கொள்கிறது.
இந்திய கல்வி முறை, அடிப்படையில் ஆறு நிலைகளைக் கொண்டுள்ளது.

- ❖ குழந்தைக்கல்வி
- ❖ தொடக்க கல்வி
- ❖ இடைநிலைக் கல்வி
- ❖ மேல்நிலைக் கல்வி
- ❖ இளங்கலைப் பட்டம்
- ❖ முதுகலைப் பட்டம்

**இந்திய கல்வி நிறுவனங்கள்:**

இந்திய கல்வி முறை 10, +12 முறையைக் கொண்டுள்ளது. உயர் கல்வியைப் பொறுத்த அளவில், அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள், பல்வேறு படிப்புகளை மற்றும் பாடங்களை வழங்கி வருகின்றன. பல்கலைக்கழக மானியக் குழுச் (UGC) சட்டத்தின்படி பல்கலைக்கழகங்களின் தரம் அளவிடப்படுகிறது. கல்வித்துறை என்பது பல்வேறு பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை உள்ளடக்கியது. இது சமூதாயத்தின் எல்லா பிரிவு மக்களுக்கும் நடுநிலையான கல்வியளிக்கும் அமைப்பு ஆகும். வரவு செலவுத் திட்டத்தில் 3% (GDP) நிதி கல்வித்துறைக்கு ஒதுக்கப்பட்டு, பெருமளவு நிதி பள்ளிக் கல்விக்கே செலவிடப்படுகிறது. இருப்பினும் ஒரு மாணவருக்கு ஆகும் கல்விச் செலவு இன்னமும் குறைவாகவே இருக்கிறது.

**உடல் நலம்:**

1. **இந்தியாவில் உடல் நலம்:**

இந்தியாவின் உடல்நலம் மாநில அரசின் பொறுப்பில் வருகிறது. மத்திய சுகாதாரம் மற்றும் நலவாழ்வு கழகம் பல்வேறு நலக் கொள்கைகளையும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகிறது. மத்திய நலத்துறை அமைச்சகம் நலத்துறையின் நிர்வாகத்தையும், அதற்கான தொழில்நுட்ப தேவைகளையும் கவனித்துகொள்கிறது.

இந்தியாவில் உடல்நலம் பேணுதல் பல முறைகளில் (பலவடிவங்களில்) நடக்கிறது. ஆயுர்வேதம், சித்தா, யுணானி, மூலிகை மருத்துவம், ஹோமியோபதி, ஆங்கில மருத்துவம், யோகா போன்ற பல முறைகள் இங்குண்டு. ஒவ்வொன்றும் தனித்தனி சிகிச்சை முறைகள் மற்றும் சிறப்புக் குணங்கள் உள்ளன. இந்தியாவில் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள நடுவண் நலத்துறை அமைச்சகத்திடமிருந்து முறையான அனுமதி பெறவேண்டும். அனைத்து மருத்துவ நடைமுறைகளும் ஓரே அமைச்சகத்தின் கீழ் (ஆயுஷ் AYUSH) தற்போது உள்ளன.

2. **இந்தியாவில் உடல்நலப் பணிகள்:**

இந்தியாவில் உடல்நலப்பணிகள் மத்திய நலத்துறை அமைச்சகத்தின் கீழ் வருகின்றன. மாநிலங்களைப் பொறுத்த வரையில் கேரளா மற்ற மாநிலங்களை விட உடல் நலம் பேணுதலில் சிறப்பான இடத்தை பெற்றிருக்கிறது. மற்ற முன்னேறிய நாடுகளை ஒப்பிடுகையில் இந்தியாவில் உடல்நலம் பேணுதல் திருப்திகரமானதாக இல்லை. இலங்கையை விட இந்தியாவில் உடல் நலம் பேணுதல் குறைவாக உள்ளது.

**இந்தியப் பொருளாதாரச் சிந்தனையாளர்களின் பங்களிப்பு:**

**திருவள்ளுவர்:**

திருவள்ளுவரின் பொருளாதாரக் கருத்துக்கள் காலத்தால் அழியாத, அறநூலான திருக்குறளில் காணக் கிடைக்கின்றன. திருவள்ளுவரின் காலம் குறித்து பல்வேறு கருத்துகள் அறிஞர்கள் மத்தியில் நிலவினாலும் பொதுவாக பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டின் சங்க காலத்தையே அவரின் காலமாகக் கருதலாம். திருவள்ளுவரின் கருத்துக்கள் நடைமுறைக்கு ஏற்றவைகளாகவே இன்றும் கருதப்படுகின்றன.

வள்ளுவரின் நிறைய பொருளாதாரக் கருத்துகளை திருக்குறளின் இரண்டாம் பகுதியான பொருட்பாலில் காணப்படுகின்றன. பொருட்பால் செல்வத்தோடு தொடர்புடையது. வாழ்வின்

அடிப்படைகளை அறிந்தவர் வள்ளுவர். அவர் மழையை வாழ்வின் பெரும் ஆதாரமாகக் கருதினார். மழை தான் உணவு தருகிறது. மழைதான் பொருளாதார வாழ்வில் அடிப்படையை உருவாக்குவதாக நம்பினார். வாழ்வின் அடிப்படை பொருளாதார தேவையான வேளாண்மை மழையைச் சார்ந்திருக்கிறது அழிமானத்தையும் தரும், அழிமானத்திலிருந்து மீண்டும் தழைத்தோங்கவும் செய்யும் ஆகிய இரண்டையும் செய்யும் தன்மையுடையது மழையாகும்.

**1. உற்பத்திக் காரணிகள்:**

உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, முதல், அமைப்பு, காலம், தொழில்நுட்பம் ஆகியவை குறித்து பல கருத்துகளை வள்ளுவர் எளிமையாகச் சொல்லியிருக்கிறார்.

“பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற”
என்கிறார் திருவள்ளுவர் (குறள் 61)

2. **வேளாண்மை:**

வள்ளுவர் வேளாண்மையை, அடிப்படைப் பொருளாதார நடவடிக்கை என்கிறார். உலகத்தின் அச்சாணியாக வேளாண்மை இருப்பதாகவும், பொருளாதார ரீதியாக பிற துறைகளின் செழுமை வேளாண்மை துறையின் செழிமையைச் சார்ந்தது. உழவுத்தொழில் புரிபவன் மட்டுமே தலையாய மனிதன்.

”உழுதுண்டு வாழ்வோரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்”
(குறள் எண் - 1032, அதிகாரம் - உழவு)
உழவுத்தொழிலே மற்ற தொழில்களைவிட உயர்ந்ததாக வள்ளுவர் கருதுகிறார்.

3. பொது நிதி:

திருவள்ளுவர் பொதுநிதி பற்றி பொது வருவாய், பொதுச்செலவு, நிதி நிர்வாகம் ஆகிய தலைப்புகளில் விரிவாக எழுதியிருக்கிறார்.

1. **வருவாய் உருவாக்குதல்**
2. **வருவாயை சேகரித்தல்**
3. **வருவாய் நிர்வாகம்**
4. **பொதுச் செலவு பற்றியெல்லாம் குறிப்பிடுகிறார்.**

4. **பொதுச் செலவு**:

வள்ளுவர் சமநிதிநிலை அறிக்கையைப் பிரிந்துரை செய்கிறார். ”ஒரு நாடு அதன் செலவுகளைக் கட்டுக்குள் வைத்திருக்கும் பட்சத்தில் அதன் வருமானம் குறைவாக இருந்தாலும் பாதகமில்லை” என்கிறார். நிதிநிலைக் கொள்கை வகுக்கும்போது செய்ய வேண்டியதாக அவர் சொல்வது “எப்போதும் உபரி நிதிநிலை இருக்கட்டும். சில நேரங்களில் சம நிதி நிலை இருக்கலாம். ஆனால் ஒரு போதும் பற்றாக்குறை நிதிநிலை மட்டும் கூடாது” பொதுச் செலவை கீழ்க்காணும் மூன்று இனங்களுக்கு செலவிடுமாறு வலியுறுத்துகிறர் வள்ளுவர்
1. பாதுகாப்பு 2. பொதுப்பணிகள் 3. சமூகப்பணிகள்

**5. வெளிநாட்டு உதவி**
வள்ளுவர் வெளிநாட்டு உதவி பெறுதலை ஆதரிக்கவில்லை. குறள் 739 ல் வெளி உதவி கோரும் நாடுகள் நாடுகளே அல்ல என்கிறார். வேறுவகையில் சொல்வதனால் அவர் தன்னிறைவு பெற்ற பொருளாதாரத்தையே வலியுறுத்தினார்.

**6. வறுமை மற்றும் பிச்சையெடுத்தல் (இரத்தல்)**

பசிக்கொடுமையிலிருந்து பெறும் விடுதலையே ஒவ்வொரு மனிதனும் பெறக்கூடிய அடிப்படை சுதந்திரம் என்றும் அனைத்து குடிமகனும் இதனை அனுபவிக்க வேண்டும் என்று வள்ளுவர் கருதினார். வறுமையே அனைத்து தீமைகளுக்கும் வேறாய் இருந்து எக்காலத்தும் தீராத துன்பங்களைத் தருவதாகவும் கருதினார். ஆனால் இந்தியாவில்

வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்பவர்கள் எண்ணிக்கையில் பிச்சையெடுப்பவர்கள், வசிப்பிடமின்றி சாலையோரம் வாசிப்பவர்கள் மற்றும் குப்பை பெருக்குபவர்கள் அதிகமாக உள்ளனர்.

7. **செல்வம்**

செல்வம் வாழ்வதற்கான வழியே அன்றி அதுவே இலக்கல்ல என்று வள்ளுவர் கருதினார். செல்வம் சிறந்த மதிக்கத்தகுந்த வழிகளிலேயே ஈட்டப்படவேண்டும் என்கிறார். செல்வத்தைப் பதுக்கி வைப்பது பயனற்றுப் போகும் என்றகிறார். அவரைப் பொறுத்த வரையில் தொழில்தான் உண்மையான செல்வம், மேலும் உழைப்பு தான் மிகப் பெரும் வளம்.

8. **நலம்பேணும் அரசு:**

திருவள்ளுவர் நலம்பேணும் அரசு எது என்பதைக் குறித்து விளக்கியுள்ளார். ஒரு நலம்பேணும் அரசில் வறுமை, எழுத்தறிவின்மை மற்றும் நோய்கள் போன்றவை இருக்காது என்கிறார்.

- **நோய் நொடியற்ற ஆரோக்கியமான மக்கள்**
- **பெருஞ்செல்வம்**
- **நல்ல விளைச்சல்**
- **வளம் மற்றும் மகிழ்ச்சி**
- **மக்களுக்கு முழுப் பாதுகாப்பு**

**மகாத்மா காந்தியடிகள்:**

காந்தியப் பொருளதாரம் நன்நெறியை அடிப்படையாகக் கொண்டது. 1921-ல் காந்தி ”ஒரு தேசத்தின் அல்லது ஒரு தனியாரின் தார்மீக ஒழுக்க நெறிகளை காயப்படுத்தினால் அந்த பொருளாதார நடவடிக்கையும் இழுக்கானது மேலும் அது பாவமானது” என எழுதுகிறார். ”தர்மீக மதிப்புகளைப் புறந்தள்ளும் பொருளாதாரம் உண்மையற்றது” என அதே நம்பிக்கையை காந்தியடிகள் மீண்டும் 1924 ல் கூறுகின்றார்.

**காந்தியப் பொருளாதார சிந்தனைகளின் சிறப்பியல்புகள்:**

1. **கிராமக் குடியரசு:**

காந்தியடிகள் கிராமங்களில் தான் இந்தியா வாழ்வதாகக் கருதினார். தன்னிறைவு பெற்ற கிராமமாக முன்னேறுவதை அவர் விரும்பினார். அதிக அளவில் இயந்திரங்களைப் பயன்படுத்துதல், நகர்மயமாதல் மற்றும் தொழில் மயமாதல் ஆகியவற்றை எதிர்த்தார்.

2. **இயந்திரங்கள்:**

காந்தியடிகள் இயந்திரங்களை “மிகப்பெரிய பாவம்“ என்று வர்ணித்தார். காந்தியடிகள், ”இயந்திரங்களின் தீமைகள் குறித்து விளக்க புத்தகங்கள் எழுதப்பட வேண்டும், அதன் தீமைகள் மக்களுக்கு உணர்த்தப்படவேண்டும். இயந்திரங்கள் வரமல்ல, மாறாக நமக்கு சாபம் என்று நாம் உணர வேண்டும். இயந்திரத்தின் தீமைகளை நாம் பார்க்க வேண்டும். அவைகள் நம் இணக்கமான வாழ்வை முடிவுக்கு கொண்டு வந்து விடும்” என்கிறார்.

3. **தொழில்மயம்:**

தொழல்மயம் மனித இனத்தின் பெரும் சாபக்கேடு என்று காந்தி கருதினார். நாட்டின் திறனை முழுவதும் சுரண்டுவதை தொழில்மயம் சார்ந்துள்ளது எனக் கருதினார்.

## 4. உற்பத்தி பரவலாக்கம்:

உற்பத்தி பரவலாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய காந்தி அது அநேக இடங்களில் சிறிய அளவிலும் அல்லது வீடுகளிலேயே உற்பத்தி நடைபெற வேண்டுமென்றும் விரும்பினார்.

## 5. கிராம சர்வோதயா:

"உண்மையான இந்தியா வாழ்வது நகரங்களிலோ புறநகரங்களிலோ இல்லை கிராமங்களில் தான்" என்று சொன்ன காந்தியடிகள் கிராமங்கள் தன்னிறைவு பெற்றவைகளாகவும் சுயசார்பு பெற்றவைகளாகவும் இருக்க வேண்டும் என்றார்.

## 6. உடல் உழைப்பு (bread labour):

மனித உழைப்பின் மகத்துவம் உணர்ந்தவர் காந்தியடிகள். கடவுள் மனிதனைப் படைத்ததன் நோக்கமே, தனக்கு தேவையான உணவை தானே நெற்றியில் வியர்வை சிந்தி தன் உழைப்பின் வழியால் பெற்றுக்கொள்வான் என்ற கருத்தை நம்பினார். மனித உழைப்பு என்பதே உடல் உழைப்பு தான் என்று காந்தி உறுதிபடக் கூறுகிறார்.

## 7. அறக்கட்டளைக் கோட்பாடு:

தற்போதைய முதலாளித்து முறையை மாற்றி சமத்துவ சமூகத்தை உருவாக்குவதே அறக்கட்டளைக் கோட்பாடு எனப்படும் இதில் முதலாளித்துவத்திற்குப் பங்கில்லை. இருப்பினும் இந்தியா சூதாட்ட முதலாளித்துவம் மற்றும் குறைகூறும் முதலாளித்துவம் சார்ந்த அனுபவங்களையும் பெற்றுள்ளது.

## 8. உணவுப்பிரச்சனை:

உணவுப்பொருட்களின் மீதான எந்தவிதக் கட்டுப்பாடுகளையும் காந்தி எதிர்த்தார். அத்தகைய கட்டுபாடுகள் செயற்கைப் பற்றாக்குறையை உருவாக்கும் என்றார். இந்தியா ஒர சமயத்தில் உணவு தானியத்திற்காக கையேந்தும் நிலையில் இருந்தது. ஆனால் தற்போது, உணவு தானியம், பழங்கள், காய்கறிகள், பால், முட்டை இறைச்சி போன்ற அதிக அளவு உற்பத்தி செய்து உலக அளவில் உயர்ந்த இடத்தில் உள்ளது.

## 9. மக்கள் தொகை:

காந்தி செயற்கையான குடும்பக் கட்டுபாட்டு முறைகளை எதிர்த்தார். ஆனாலும், மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த சுயகட்டுப்பாடு மற்றும் பிரம்மச்சாரியத்தை வலியுறுத்தினார். சுயகட்டுப்பாடு மற்றும் பிரம்மச்சாரியத்தை வலியுறுத்தினார். சுயகட்டுப்பாடே மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த சிறந்த வழி என்று கருதினார்.

## 10. மதுவிலக்கு:

முழுமையான மதுவிலக்கை வலியுறுத்தியவர் காந்தியடிகள். "மது நமக்கு எந்த விதத்திலும் துணை செய்வதல்ல, மாறாக நோயைத் தருகிறது" என்றார் காந்தியடிகள். "இந்தியா குடிகாரர்களின் நாடாக இருப்பதை விட ஏழைகளின் நாடாக இருப்பதே மேல்" என்றார். ஆனால் பல மாநிலங்களின் வருவாய் மது விற்பனையைச் சார்ந்துள்ளது.

### ஜவஹர்லால் நேரு:

நவீன இந்தியாவை கட்டமைத்த முதன்மை சிற்பிகளில் ஒருவர் ஜவஹர்லால் நேரு ஆவார். சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம அமைச்சராக பதவியேற்ற நாள் முதல், 1964-ல் இறக்கும் வரை அவர் பதவி வகித்தார். அவர் ஒரு மிகப்பெரிய தேச பக்தர், சிந்தனையாளர், அரசியல்வாதி அவருடைய பொருளாதார கருத்துக்கள் அவர் ஆற்றிய எண்ணற்ற உரைகளிலிருந்தும் அவர் எழுதிய புத்தகங்களிலிருந்தும் நமக்கு கிடைக்கின்றன.

**ஜனநாயகம் மற்றும் மதச் சார்பின்மை:**

ஜனநாயகத்தை உறுதியாக நம்பியவர் ஜவஹர்லால் நேரு. அவர் பேச்சுரிமை குடிமக்கள் உரிமை, வாக்குரிமை சட்டத்தின் வழி ஆட்சி மற்றும் பாராளுமன்ற ஜனநாயகம் ஆகியவற்றை நம்பியவர். மதச்சார்பின்மை இந்தியாவிற்கு நேரு தந்த மிகப்பெரிய பங்களிப்பு. நமது இந்தியாவில் இந்து மதம், இஸ்லாமிய மதம், கிறிஸ்துவ மதம். புத்த மதம். ஜைனமதம், சொராஸ்வீரிய மதம், சீக்கிய மதம் போன்ற இன்னும் பிற மதங்களும் இருக்கின்றன. ஆனால் மதப்பெருமான்மையால் எந்த ஒரு அச்சுருத்தலும் இல்லை. மதச்சார்பின்மை என்பது எல்லா மதங்களுக்கும் சமமான மரியாதை ஆகும்.

**திட்டமிடுதல்:**

திட்டமிடுதலை நம் நாட்டில் அறிமுகப்படுத்திய பெருமை ஜவஹர்லால் நேருவையேச் சேரும். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறைக்கு, திட்டம் அவசியம் என்று அவர் கருதினார். 1956-ம் ஆண்டு மே மாதம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கருப்பொருள் மீதான விவாதத்தை பாராளுமன்றத்தில் துவக்கிவைத்து பேசினார். ”திட்டமிடுதலின் சாரம் என்பது மனித சக்தி வளங்கள், பணம் இவற்றை சிறந்த வழிகளில் பயன்படுத்துவதை குறிக்கும்” – என்கிறார்.

திட்டமிடுதல் என்பது தொழில் மயமாதலோடு தொடர்புடையது. இதன்மூலம் ஒரு நாடு தன்னைத்தானே வளர்ச்சியடைய செய்து தற்சார்பினை அடைகிறது. எனவே நேரு திட்டமிட்ட வளர்ச்சிபெற இந்த யுக்தியை முன்னெடுக்கிறார். ”அறிவியல், ஆராய்ச்சி, தொழில் நுட்பம் மற்றும் தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் நேருவின் பங்களிப்பு மறக்க முடியாது. அவர் பிரதமராகப் பணியாற்றிய காலத்தில் தான் பல IIT (இந்திய தொழில் நுட்ப கழகம்) மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. அவர் எப்போதும் அறிவியல் மனப்பான்மையை வலியுறுத்தினார்.

**3. ஜனநாயக சமதர்மம்:**

சமதர்மம் என்பது இந்தியாவிற்கு நேருவின் மிகப்பெரிய பங்களிப்பு ஆகும். அவர் நம் இந்தியாவை சமதர்ம சமூகமாக கட்டமைக்க விரும்பினார். ஆனால் நேருவின் சமதர்மம் என்பது ஜனநாயக சமதர்மம் ஆகம்.

**பி.ஆர். அம்பேத்கர்:**

பி.ஆர். அம்பேத்கர் (1891 – 1956) ஒரு பன்முகத்திறன் பெற்றவர். அவர் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சிற்பி, சமதர்ம காவலர், சமூக நீதி பாதுகாவலர் மற்றும் அரசின் திட்டங்களை வடிவமைத்தவர். “பழங்கால இந்திய வர்த்தகம்” (1915 – ல் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் முதுகலை பட்டப் படிப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை) ”இந்தியாவின் தேசிய பங்கீடு பற்றி வரலாறு மற்றும் பகுப்பாய்வு ஆய்வறிக்கை” (முனைவர் பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை) என்ற இரண்டு நூல்களிலும் அவருடைய பொருளாதார கருத்துக்கள் காணப்படுகின்றன. மேலும் ”பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாணநிதிகளின் மதிப்பீடு: மாகாண ஏகாதிபத்தியத்தின் நிதிகள் பரவலாக்கம் பற்றிய ஓர் ஆய்வு” கட்டுரையாக வெளியிடப்பட்டது.

1921-ல் அம்பேத்கருடைய பிரிட்டிஷ் இந்தியாவின் மாகாண நிதி பரவலாக்கள் என்ற ஆய்வுக் கட்டுரை M.Sc பட்டத்திற்காக ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் 1923 ல் ரூபாயின் பிரச்சனைகள்“ என்ற ஆய்வறிக்கையை ஏற்று லண்டன் பொருளாதார பள்ளி D.Sc பட்டம் வழங்கியது. ஆச்சரியமான விசயம் என்னவென்றால் இந்திய ரிசர்வ் வங்கியானது அம்பேத்கர் நூலான ரூபாயின் பிரச்சினைகள் அதன் தோற்றமும் - அதன் தீர்வும் என்பதில் வழங்கப்பட்ட வழிகாட்டுதலின் படி கருத்தாக்கம் பெற்றது. அவருடைய பொருளாதார கருத்துக்கள் நான்கு தலைப்புகளில் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. **நிதிப்பொருளாதாரம்:**

அம்பேத்கருடைய பெரும்பாலான நூல்கள் அவர் வெளிநாட்டில் தங்கியிருந்த 1913 – 1923 வரையிலான காலத்தில் எழுதப்பட்டவை. அவர் நிதிப் பொருளாதாரம் குறித்து நிறைய எழுதி இருக்கிறார். மாகாண நிதி பெருக்கத்தை மூன்று நிலைகளாகப் பிரிக்கிறார்.

1. ஒப்படைப்பு வரவு செலவுத் திட்டம் (1871 – 72) முதல் 1876 – 77 முடிய)

2. ஒதுக்கீடு வரவு செலவுத் திட்டம் (1877 – 78 முதல் 1881 – 82 முடிய) மற்றும்

3. வருவாய் பங்கீடு வரவு செலவுத் திட்டம் (1882 – 83 முதல் 1920 – 1921 முடிய)

**2. வேளாண்மை பொருளாதாரம்:**

1918-ல் அம்பேத்கர் ”இந்தியாவில் குறைந்த நிலவுடமை மற்றும் தீர்வுகள்” என்ற கட்டுரையை எழுதினார். ஆடம்ஸ்மித்தின் “நாடுகளின் செல்வத்தைப் போல்” நிலவுடைமை ஒருங்கிணைப்பு மற்றும் நிலவுடைமை விரிவாக்கம் இவற்றிற்கிடையேயான வேறுபாட்டினை கூறுகிறார்.

3. **நிதிப்பொருளாதாரம்:**

சமூக முன்னேற்றத்திற்கு சாதி மிகப் பெரிய தடையாக இருப்பதாக அம்பேத்கர் நம்பினார். சாதி சமூக பிரிவினைக்கு வழிவகுக்கிறது. தனி நபர்கள் தங்களுக்குள் வேலைகளை பரிமாறிக்கொள்ளும் வழி இருக்கவேண்டுமென்று அவர் சொன்னார். மேலும் சாதிய முறை சமூக பதட்டத்திற்கு காரணமாக அமைகிறது. சாதி முறை அரசியல் ஜனநாயத்தை விடவும், சமூக ஜனநாயத்தை அமைப்பதில் தோல்வியடைந்திருக்கிறது என்று அவர் கூறுகிறார்.

**4. சமதர்ம பொருளாதாரம்:**

அம்பேத்கர் ஒரு சமதர்மவாதி சமூக நீதியின் பாதுகாவலர். அவர் அனைத்து முக்கியமான தொழில்களையும் நாட்டுஉடமை ஆக்க வேண்டுமென்றும், நிலத்தை அரசே நிர்வகிக்க வேண்டும் என்றும் கூட்டு வேளாண்மை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். அரசே காப்பீடு வணிகம் செய்ய வேண்டும் என விரும்பினார். அனைத்து மக்களுக்கும் கட்டாயமாக காப்பீட்டு வசதி அளிக்கப்பட வேண்டுமென்று கூறினார்.

அம்பேத்கர் மிகச்சிறந்த பொருளியல் அறிஞர் என்பதில் அய்யமில்லை. ஆனால் சட்டம் மற்றும் அரசியலில் அவரது அளப்பரிய பங்களிப்புகள் அவருடைய பொருளாதார பங்களிப்பை குறைத்து காட்டிவிட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக அவர் மிகச்சிறந்த சமூக சீர்திருத்தவாதி.

## J.C குமரப்பா:

ஜோசப் செல்லத்துரை குமரப்பா தமிழ்நாட்டின் தஞ்சாவூரில் 1892-ஜனவரி 4-ல் பிறந்தார். கிராமப் பொருளாதார முன்னேற்றக் கொள்கைகளின் முன்னோடியாக அறியப்படுகின்ற குமரப்பா அவரது அனைத்து பொருளாதார கருத்துக்களையும் காந்தியம் என்பதன் அடிப்படையிலேயே அமைத்துக்கொண்டார். மேலும் ”காந்தியப் பொருளாதாரம்” என்ற கருத்தையே அவர் உருவாக்கினார்.

**காந்தியப் பொருளாதாரம்:**

J.C. குமரப்பா, காந்தியின் கருத்தான கிராமத் தொழில்கள், கிராமத் தொழில் வளர்ச்சி சங்கம் ஆகியவற்றை வலுவாக ஆதரித்தார். கிருஸ்துவ மற்றும் காந்திய மதிப்பீடுகளை உள்ளடக்கி அவர் கோட்பாடுகளைப் கொண்டு வந்தார். அதில் அஹிம்சைக் கொள்கை, மனித நடத்தைகளை மையப்படுத்துதல் மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றை பொருள் முதல் வாதத்திற்குப் பதிலாக பயன்படுத்தினார். சோசலிசம் எடுத்துரைக்கும் வர்க்கப் போர்

முக்கியத்துவத்தை நிராகரிக்கும் அதே வேளையில், தரையில்லா சந்தையில் உள்ள பருப்பொருள் வளர்ச்சி, போட்டி மற்றும் திறன் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் நிராகரித்தார் காந்தியும் குமரப்பாவும் மனிதனின் பொருளாதார தேவைகளை நிறைவேற்ற வேண்டுமானால் சமூக பொருளாதார பிரச்சினைகள், வேலையின்மை, வறுமை, மற்றும் ஆதரவற்ற நிலை ஆகியவற்றை களையவேண்டும் என்று கூறுகின்றனர்.

குமரப்பா உப்பு சத்தியாக் கிரகத்தின் போது "யங் இந்தியா" பத்திகையில் பணியாற்றிக் கொண்டே, அகமதாபாத்தில் உள்ள குஜராத் வித்யா பீடத்தில் பொருளாதார பேராசிரியராகவும் பணியாற்றி வந்தார். அனைத்திந்திய கிராம தொழில் கழகத்தை 1935-ல் தோற்றுவித்தார். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது ஓராண்டிற்கும் மேல் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்தபோது "நிலைத்த பொருளாதாரம்", "இயேசுவின் வழிமுறைகள் (1945)" மற்றும் "கிறிஸ்துவம்: அதன் பொருளாதாரம் வாழ்க்கை முறையும் (1945)" ஆகிய இரண்டு புத்தகங்களை எழுதினார்.

காந்தியைப் பின்பற்றுபவர்கள் சுற்றுப்புற சூழலியல் குறித்து நிறைய கோட்பாடுகளை உருவாக்கினர். குமரப்பா 1930 – 1940 ஆண்டுகளுக்குகிடையே இதுகுறித்து நிறைய புத்தகங்களை எழுதினார். வரலாற்று ஆய்வாளர் இராமச்சந்திர குஹா அவர்கள் குமரப்பாவை "பச்சை காந்தி" என்று அழைத்து சிறப்பிக்கிறார். இந்தியாவின் சுற்றுச் சூழலியல் குறித்து அடித்தளமிட்டதால் அவ்வாறு அழைக்கப்படுகிறார். இந்தியத்திட்டக் குழுவிலும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியிலும் பணியாற்றி வந்த குமரப்பா, வேளாண்மைக்கான தேசிய கொள்கைகள் மற்றும் கிராம முன்னேற்றம் குறித்து பல கொள்கைகளை வகுத்து தந்தார். சீனா, கிழக்கு ஐரோப்பா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுக்கு அரசுமுறைப் பயணம் சென்று அங்கு இருந்த கிராம வளர்ச்சித் திட்டங்களை பார்வையிட்டு நம் நாட்டில் அமல்படுத்த முனைந்தார்.

## V.K.R.V. ராவ்:

P.R பிரமானந்தாவின் கூற்றுப்படி, "சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் இந்தியாவின் தலைசிறந்த பொருளியல் அறிஞர்களாக D.R. காட்கில்,C.N. வக்கில் மற்றும் V.K.R.V ராவ் ஆகியோரைக் குறிப்பிடலாம். இந்த அறிஞர்கள் சிறந்த கனவுகளோடும், இந்தியப் பொருளாதார பிரச்சனைகளை ஆராய்ந்து கொள்கைகளையும் திட்டங்களையும் இந்தியாவின் முன்னேற்றத்திற்காக வழங்கியிருக்கிறார்கள்" என்றார்.

**V.K.R.V ராவ் ஒரு தேர்ந்த எழுத்தாளர் அவர் மூன்று முக்கிய கருத்துக்களில் ஆர்வமுடையவராக இருந்தார்.**

1. தேசிய வருமானம்
2. உணவு, ஊட்டச்சத்து மற்றும் பண்டங்களின் பகிர்வு
3. வேலைவாய்ப்பு மற்றும் தொழில்பகிர்வு

**1. தேசிய வருமானம் கணக்கீட்டுமுறை:**

தேசிய வருமான கணக்கீட்டு முறையின் வாயிலாக ராவ் ஒரு நடைமுறைப் பொருளாதார வாதியாக நினைவில் கொள்ளப்படுகிறார். ராவ் J.M. கீன்சின் மாணவர் மட்டுமல்லாது கோலின் கிளார்க் அவர்களுடன் பணி செய்து இருக்கிறார். H.W. சிங்கர், "கீன்சன் மாணவர்களில் சிறந்தவராக V.K.R.V. ராவ்" அவர்களைக் கருதுகிறார். ராவின் கணக்கீட்டு முறை

1. பொதுவாக வளரும் நாடுகள், குறிப்பாக இந்தியாவிற்கு உகந்த தேசிய வருமானக் கருத்துக்கள்.

2. முன்னேறிக்கொண்டிருக்கும் பொருளாதாரத்தில் முதலீடு, சேமிப்பு, பெருக்கி ஆகியவற்றை ஆய்வு செய்தல்.

3. வளர்ச்சி குன்றிய நாடுகளின் தொழில்மயமாக்கலின் விளைவுகளை, தேசிய வருவாயை இணைத்துப் படிக்க வேண்டும். "முழு வேலை வாய்ப்பும் பொருளாதார முன்னேற்றமும்" என்ற ராவின் ஆய்வுக் கட்டுரை வேலை வாய்ப்புத் துறையில் மிகச்சிறந்த ஒன்றாக கருதப்படுகிறது.

2. **பான்னாட்டு உணவு உதவி:**

உலக வறுமையை ஒழிப்பதில் ராவ் சிறந்த கொள்கைகளை வகுத்துத் தந்தது மட்டுமல்லாது உணவுப் பொருட்களை பன்னாட்டு அளவில் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்றும், தேர்ச்சி பெற்ற பன்னாட்டு சாதனங்களின் பங்களிப்பு கருத்தையும் முன்வைத்தார். தனது பங்களிப்பு மட்டுமன்றி, பன்னாட்டு உதவி மற்றும் வெளி வளங்களின் மூலம் உணவுக்கான நிதி வாய்ப்புகளை உருவாக்கினார்.

3. **சமதர்மத்திற்கு ஆதரவு:**

இந்திய திட்டமிடலின் முந்தைய காலங்களில் ராவ் சமதர்ம இந்தியாவை வலியுறுத்தினார். அரசாங்கமே பொருளியல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டது என்றும், பொதுத்துறை பொருளாதார வளர்ச்சியின் உச்சத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்து பொருளாதார முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகிக்க வேண்டும் என்ற கருத்தையும் கொண்டிருந்தார்.

4. **ராவின் பார்வையில் தொழில்மயமாதல்:**

ராவ் எழுதிய "இந்தியப் பொருளியல் வாழ்வில் என்ன தவறு? (1938) என்ற சிறு புத்தகத்தில் இந்தியாவில் தனிநபர் வருமானம் குறைவிற்கும், தனிநபர் ஊட்டச்சத்து குறைவிற்கும் பின்வரும் காரணங்களை விளக்குகிறார்.

1. முறையற்ற நிலவுடைமை, நிலம் துண்டாடல், நிலம் பிரிக்கப்படுதல்.
2. பயிர்களுக்கு குறைவான நீர்பாசன வசதி கிடைத்தல்.
3. பேரளவு தொழில்துறை இன்மையால், வேளாண்மையில் அதிக மக்கள் தொகை அழுத்தம் ஏற்படுகின்றது.
4. முதலீடு இன்மை
5. நாணயத்தில் சுயாட்சி கொள்கையின்மை மற்றும் பணம் பற்றிய கருத்துக்களில் தங்கத்தை உடமையாகக் கொள்வதை ஊக்குவித்தது.

6. **கிராம தொகுதிகள்:**

கிராம முன்னேற்றத்திற்காக கிராம குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். ஊரக வளர்ச்சிக்காக கிராமங்கள் தொகுப்பாக ஒரே அலகாக செயல்பட வேண்டும். அதனால் கிராமங்களிடையே சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு அடையும், அக்குழுக்கள் திறம்பட சுயமுன்னேற்றத்திற்கு பொதுமக்கள் பங்கேற்புடன் தங்களை வடிவமைத்துக் கொள்ளும். குழுக்கள் ஒன்றுக்கொன்று உதவிக்கொள்பவராகவும், அதன் மூலம் சமூக பொருளாதார தொடர்பு கிராமத்தில் அதிக வளர்ச்சியையும், ஆற்றல் மிக்க உற்பத்தியையும், தன்னாக்க முறையில் செய்ய பொதுமக்கள் அதன் முன்னேற்றத்தில் பங்கெடுத்துக் கொள்பவராகவும் இருக்க வேண்டும் என்று ராவ் கருதினார்.

7. **முதலீடு, வருமானம் மற்றும் பெருக்கி:**

"முன்னேற்றம் அடையாத நாடுகளின் முதலீடு, வருமானம் மற்றும் பெருக்கி ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பு" (1952) என்ற ராவ் அவர்களின் புத்தகம் பேரியியல் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தகுந்த பங்களிப்பு வழங்கியது. சிந்தனையாளர், ஆசிரியர், பொருளாதார ஆலோசகர் மற்றும் நேரடி கொள்கை வடிவமைப்பாளர் என்ற பார்வையில் J.M. கீன்சின் அடிகளை பின்பற்றுகிறார்.

8. **நிறுவனக் கட்டமைப்பாளர்:**

ராவ் தேசிய அளவிலான மூன்று ஆராய்ச்சி நிறுவனங்களை உருவாக்கினார். அவை டெல்லி பொருளாதாரப் பள்ளி (டெல்லி), பொருளாதார வளர்ச்சிக் கழகம் (டெல்லி), சமூக பொருளாதார மாற்றத்திற்கான கழகம் (பெங்களூரு).

**அமர்த்தியாகுமார் சென்:**

நோபல்குழு, சென்னின் பங்களிப்பைப் பற்றி குறிப்பிடும்போது, அவருடைய சமூகத் தொழிவு கொள்கை, வளர்ச்சிப் பொருளாதாரம், வறுமை மற்றும் பஞ்சங்கள் பற்றிய ஆய்வு மற்றும் உரிமங்கள் திறன் முன்னேற்றம் பற்றிய கருத்து (1998) ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது.

1. **வறுமை மற்றும் பஞ்சம்**:

சென்னின் வறுமை மற்றும் பஞ்சம் “உரிமை மற்றும் இழப்பு பற்றிய ஓர் கட்டுரை (1981) சிறந்த ஒன்றாக இருக்கிறது. அவருடைய புத்தகத்தில் பல்வேறு பஞ்சங்கள் பற்றி ஆய்வு செய்து அவற்றின் உண்மையான காரணங்கள் எடுத்து காட்டியிருக்கிறார். வறுமை பற்றிய பல்வேறு விளக்கங்களை ஆராய்ந்து முழு வறுமை மற்றும் தொடர்புடைய வறுமை ஆகியவைப் பற்றிய காரணங்களைக் கூறி கவனத்தை ஈர்க்கின்றனர்.

2. **வறுமை மற்றும் சமத்துவமின்மை:**

சென் இந்தியாவில் வறுமை மற்றும் சமத்துவம் இன்மை பற்றி நிறைய எழுதி இருக்கிறார். வருமானப் பகிர்வு மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள மக்களின் நுகர்வு ஆகியவை கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது சென் அவர்களின் முக்கியக் கருத்தாகும்.

3. **திறன் பற்றிய கருத்து**:

பொருட்கள் அல்லது பயன்பாடுகளைவிட திறன்களை வளர்ப்பது பற்றிய சென்னின் கருத்துக்கள் முக்கியமானவையாக கருதப்படுகின்றன. சென் அவர்களின் கருத்துப்படி திறன் என்பது அடிப்படை கச்சாப் பொருட்களை மக்கள் நலத்திற்காக மாற்றி அமைப்பது ஆகும்.

4. **உரிமைகள்:**

ஊட்டச்சத்து உணவு, மருத்துவம், உடல் நலப் பாதுகாப்பு, வேலை வாய்ப்பு, பஞ்சத்தின் போது வழங்கப்படும் உணவு ஆகியவை நமது உரிமைகளாக மாற வேண்டும் என்று சென் கருதினார். இத்தகைய உரிமைகள் வழிவகுவதில் ஏற்பட்ட தோல்வியே பஞ்சம் ஏற்படுவதற்கு காரணமாகும் என அவர் கருதினார்.

5. **தொழில் நுட்பத் தெரிவு:**

மூலதன செறிவு நுட்ப முறையில், உழைப்பாளர்கள் உபரியாக உள்ள பொருளாதாரத்தில் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பது கடினம் என்று “தொழில் நுட்பத் தெரிவு“ என்ற புத்தகத்தில் சென் குறிப்பிடுகிறார்.

முடிவாக அமர்த்தியசென் பொருளியியல் அறிஞர் மட்டுமல்ல நன்னெறி தத்துவ அறிஞரும் ஆவார். அவர் சுதந்திரத்தை நேசிப்பவர் மற்றும் மனித நேய ஆதரவாளர். அவர் ஏழைகளைக் குறித்து அதிக அக்கரை எடுத்துக்கொண்டார். மேலும் அவர்களை இரக்கத்திற்கு உரியவர்களாக பார்க்காமல், உரிமைகள் வழங்கப்பட அதிகார உரிமைகள் கொண்டவர்களாக பார்க்க வேண்டும். அதிகாரம் வழங்குதல், கல்வி, உடல்நலம், ஊட்டச்சத்து, பாலின சமநிலை, துன்பம் நேரும் காலங்களில் பாதுகாப்பு ஆகியவை வழங்கப் படவேண்டியவர்களாக கருதுகிறார்.

# 11th political science
## Unit-1
### அரசியல் அறிவியலின் அறிமுகம்

அரசியல் என்ற சொல் கிரேக்க மொழியில் நகர அரசு என்ற பொருள்படும் "பொலிஸ்"(POLIS) என்ற சொல்லோடு நெருங்கிய தொடர்புடையதாகும். அரசியலைக் கற்பது என்பதை பொ.ஆ.மு. ஐந்தாம் நூற்றாண்டில் கிரேக்கத்தில் வாழ்ந்த பிளாட்டோ (Plato) (428BCE – 347 BCE) மற்றும் அரிஸ்டாட்டில் (Aristotle) (384 BCE – 322BCE) அகிய அரசியல் தத்துவஞானிகளின் அளப்பரிய பங்களிப்பினால் தொடங்கப்பட்டதாகும். இருபதாம் நூற்றாண்டிற்குப் முன்பு வரையிலும் அரசியலைக் கற்றறிவது என்பது வரலாறு மற்றும் தத்துவம் போன்ற பிற துறைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது எனலாம்.

அரசியல் என்பது அடிப்படையில் நன்னெறியைப் பற்றிய கல்வியாகும். அரசியல் பாடத்தின் பார்வையானது சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு ஆகிய இரண்டிற்கும் இடையேயான மோதல்கள் பற்றியதாகவே இருந்து வருகிறது. இது தவிர மேம்பாடு சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, பாலின சமத்துவம், பன்னாட்டு அமைதி மற்றும் ஒத்துழைப்பு போன்றவை அரசியலின் முக்கியமாகக் கருதப்படாத பிற மையக் கருத்துகளாக இருந்தன.

வரலாற்றுக்காலம் முதலே அரசியலின் மையக்கருத்து பற்றி அரசியல் தத்துவஞானிகளுக்கு இடையே மாறுபட்ட கருத்துக்களே நிலவி வந்தது. அரசியல் அறிவியலின் தந்தை என்று அழைக்கப்படுபவரும், மாபெரும் கிரேக்க சிந்தனையாளருமான அரிஸ்டாட்டில் அரசியல் பற்றிய உண்மைகள் மற்றும் அரசுக்கும் மக்களுக்கும் உள்ள உறவு முறைகளையும் முறைப்படி படித்து அறிந்து கொள்வதே அரசியல் பாடத்தின் முக்கியமான பணி என்கிறார். ஆவர் மேலும் பல்வேறு அரசியல் முறைமைகளைப் பற்றி வகைப்படுத்தி விளக்குகிறார். அரசியல் பாடத்தின் உருவாக்கம் மற்றும் மேம்பாட்டுக்கு பிளாட்டோவும், அரிஸ்டாட்டிலும் பெரும் பங்களிப்பனை ஆற்றியுள்ளனர். அரிஸ்டாட்டில் தனது குருவான பிளாட்டோவின் அரசியல் வகைப்பாட்டினை மேலும் வரலாற்று ரீதியாக பகுப்பாய்வு செய்து விளக்கியுள்ளார். இவர்கள் இருவரும் பல்வேறு வகையான அரசாங்கங்கள் எவ்வாறு செயல்படுகின்றன. என்பதனை புரிந்து கொள்ள முயற்சி செய்தனர்.

இடைக்காலத்தில் புனித ரோமானிய பேரரசின் காலத்தில் அரசியல் அதிகாரம் முழுவதும் பேராலயங்களின் கட்டுப்பாட்டில் இருந்ததால் அரசியல் பற்றி பேசும் இடமாக பேராலயம் மட்டுமே இருந்தது. புனித அகஸ்டின் (St. Augustine) போன்ற தத்துவஞானியின் நூலான 'கடவுளின் நகரம்'(The City of God) எனும் படைப்பில் அரசியல் தத்துவம் என்பது மதத்தின் ஒரு அங்காமாகவே வலியுறுத்தப்பட்டுள்ளது. இப்படியாக இடைக்கால ஐரோப்பிய தத்துவஞானிகள் மற்றும் கிரேக்க சிந்தனையாளர்கள் அனைவருமே அரசியல் என்பதனை அரசின் ஒரு அங்கமாகக் கருதாமல் மதம் மற்றும் பக்தி சார்ந்ததாகவும், சமூகம் சார்ந்ததாகவும் மட்டுமே பார்த்து வந்தனர் என்பது இங்கே குறிப்பிடத்தகுந்ததாகும்.

இத்தாலிய மறுமலர்ச்சிக் காலத்தின்போது நிக்காலோ மாக்கியவல்லி (Niccolo Machiavelli) என்பவர்தான் செயலறிவிலான கூர்நோக்குதல் மற்றும் பட்டறிவின் (empiricism) அடிப்படையில் அரசியல் அமைப்புகள் மற்றும் அரசியல் நடத்தைகள் பற்றிய தனது மதச்சார்பற்ற அணுகுமுறையின் மூலம் நவீன அரசியல் அறிவியல் பாடத்திற்கு அடிகோலினார் என்று கூறலாம். அமெரிக்க அரசியல் அறிவியல் அறிஞர் ஹெரால்ட் லாஸ்வெல் (Harold Lasswell) என்பாரின் கூற்றுப்படி அரசியல் அறிவியல் என்பது "யார், எப்போது, எதனை, எப்படி அடைகிறார்கள்? என்பது பற்றியதாகும்.

**மகிழச்சி பற்றி அரிஸ்டாட்டிலின் கருத்து**

மகிழ்ச்சி என்பது வாழ்க்கையின் ஒரு முக்கியமான அம்சம் என்பது அரிஸ்டாட்டிலின் கருத்தாகும். ஒரு மனிதன் தற்காலிக இன்பத்தை தேடுவதில் நேரத்தை செலவிடுவதைக் காட்டிலும், நிரந்தரமான மகிழ்ச்சியை தேடுவதே சிறந்தது என்பது அரிஸ்டாட்டிலின் கருத்தாகும். ஒருவனின் மகிழ்ச்சி என்பது பொருள் அடிப்படையிலானவற்றில் இல்லை என்பது அவரின் கருத்து. அரிஸ்டாட்டிலின் புகழ்பெற்ற கருத்தாக்கம் ஒன்று பின்வருமாறு "மனிதனின் உயிர்வாழ்தலின் நோக்கம் மற்றும் பொருளே மகிழ்ச்சியை தேடுவதேயாகும்.

“எல்லா சமூகங்களும் வேறுபட்ட தங்களின் விருப்பங்களையும், தேடல்களையும் அடைவதற்கு முயற்சிப்பதும், இந்த வேறுபட்ட தேடல்களின் விளைவாக எழும் மோதல்களை ஒழுங்குபடுத்த உருவானதே அரசியல்” என்பதும் லாஸ்வெல்லின் இந்த விளக்கத்தினால் நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய செய்தியாகும். மேலும், தற்கால சமூகங்களில் காணப்படும் பற்றாக்குறை மூலவளங்களை அதிகமான கூறுகிறார். தேவைகளுக்கு முறையாக மற்றும் திறமையாக பகிர்ந்து அளிப்பதே அரசியல் எந்திரம் என்பதும் உணரப்பட வேண்டிய செய்தியாகும். காரல்மார்க்சின் (Karl Marx) கூற்றுப்படி “அரசியல் என்பது அரசியல் அதிகாரம் மற்றும் வகுப்பு மோதல்கள்” பற்றியதாகும். இதனையே டேவிட் ஈஸ்டன் (David Easton) “விழுமியங்களை அதிகாரப் பூர்வமாக ஒதுக்கீடு செய்தல்”(Authoritative Allocation of Values) என்று கூறுகிறார்.

அரசியல் அறிஞர்கள் பலரும் அரசியல் என்பதனை அதிகாரம், முறையான ஒழுங்கமைவு, மற்றும் நீதி ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே விவரித்துள்ளனர். விதிமுறைகளை உருவாக்கவும், நடைமுறைப்படுத்தவும் அதன் மூலம் மனிதர்களின் செயல்பாடுகளை/நடத்தையை ஆட்கொள்ள வல்ல ஆற்றல் எதுவோ அதுவே அதிகாரம் எனப்படும். அதிகாரம் சட்டப்படியோ அல்லது சட்டப்படி இல்லாமலோ கூட இருக்கலாம். இங்கே அதிகாரம் மற்றும் அதிகாரத்துவம் என்ற இரண்டு கருத்தாக்கங்களுக்கிடையே உள்ள வேறுபாட்டினை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகம். சட்ட அங்கீகாரம் பெற்ற செயல்பாட்டினை “அதிகாரத்துவம்”(Authority) என்றும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். அதிகாரம் என்பது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் மூலம் செயல்படுத்தப்படும்போது மக்கள் அதனை முறையாக ஏற்றுக்கொள்கின்றனர்.

அரசியல் என்பது அரசியல் அமைப்பை உருவாக்கும் கட்டமைப்பு, விதிமுறைகள், வழிமுறைகள், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றின் ஒழுங்கமைவிலும் அக்கறை கொண்டதாகும். பெரும்பான்மையான மக்கள் ஒரு சிலரால் ஆளப்படும்போது அத்தகைய அரசு இயந்திரம் நியாயமானதாக அமைந்திருக்க வெண்டியது அவசியமானதாகும். எனவே அதிகாரத்தினை செயல்படுத்தும்போது அது நீதியின் மீது கட்டமைக்கப்பட்டதாக இருக்க வேண்டியது முக்கியமாகும். இவ்வாறாக அதிகாரம், முறையான ஒழுங்கமைவு, மற்றம் நீதி ஆகியவை அரசியல் பாடத்தின் அடிப்படை கருத்தாக்கங்கள் ஆகும். 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து அரசியல் குறித்த கல்விப்புல படிப்பு அரசியல் அறிவியல் என அழைக்கப்படலாயிற்று.

**டி.ஜி.ஹிட்ச்னர் (D.H.Hitchner)**
இவ்வுலகமே அரசியலைச் சுற்றி சுழன்று வருகிறது. ஒட்டுமொத்த மனித இனமும் ஒருவிதமான அரசியல் கூட்டமைவுக்குள் உள்ளிழுக்கப்பட்டு அதற்கு உள்ளேயே மனிதர்களுக்கிடையேயான செயல்பாடுகளும் மோதல்களும் நிகழ்ந்து வருகின்றன.

**அரசியல் என்ற நூலில் அரிஸ்டாடில்,**
மனிதன் என்பவன் இயற்கையாகவே ஓர் அரசியல் விலங்கு! இயற்கையில் ஒரு மனிதன் அரச இல்லாமல் வாழ முடியாது. ஆவ்வாறு அரசின்றி வாழ்பவன் மனித குலத்திற்கு மேலானவன் அல்லது கீழானவன் ஆவான்!

**காரல்மார்க்ஸ்** அதிகாரம் என்பது,
எல்லா சமூகத்திலும் ஒரு குறிப்பிட்ட அளவிலான அதிகாரம் இருக்கிறது. அது ஒரே நேரத்தில் ஒருவராலோ அல்லது ஒரு குழுவினாலோ கையாளப்படுகிறது.

**டேவிட் ஈஸ்டன் (David Easton)**
ஆதிகாரம் என்பது ஒரு குழு மற்றொரு குழுவின் செயல்பாடுகள் மற்றும் போக்குகளைத் தங்களின் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றியமைக்கும் உறவுமுறையே ஆகும்.

**ராபர்ட் மிச்செல்ஸ் (Robert Michels)**
அதிகாரம் மேலும் அதிகாரங்களை உருவாக்கி கொள்கிறது. அதிகாரமே உயர்குடியினவாதத்தின் மையச் சார்பாக அமைந்துள்ளது.

## அரசியல் அறிவியல்

தற்காலத்தில் ‘அரசியல்’ என்ற பெயரில் புதியதொரு தனித்து இயங்கும் பாடமாக மாறியுள்ளது. பண்டைய கிரேக்கத்தின் சிறிய நகர அரசுகளின் விவகாரங்களைக் குறிப்பது அரசியல் என்ற சொல்லாகும். ஆனால் இப்போது அரசியல் என்ற சொல் “அரசாங்கங்களின் தற்கால பிரச்சனைகளைப் பற்றியது” என அடம் கில்கிறிஸ்ட் (Adam Gilchirist)என்ற அறிஞர் கூறுகிறார். ஒருவன் தனக்கு அரசியலின் மீது ஆர்வம் உள்ளது என்று கூறுவானெனில் அவன் அரசியல் பிரச்சனைகள், சட்டமியற்றல், தொழிலாளர் பிரச்சனைகள், கட்சி நடவடிக்கைகள் ஆகியவற்றின் மீதும் ஆர்வமாக இருக்கிறான் என்பதே பொருளாகும். ஆனால் அரசியல் நிகழ்வுகளிலிருந்து வேறுபட்டதாகும். மேலும் ஒரு நாட்டின் அரசியல் என்பது மற்றொரு நாட்டின் அரசியலிலிருந்து வேறுபட்டதாகும். இந்தியாவில் அரசியலைப் பற்றி நாம் புரிந்துகொண்டிருப்பது மாதிரியே உலகின் எல்லா நாடுகளிலும் அரசியல் இருப்பதில்லை. அது நாட்டுக்கு நாடு வேறுபடும். ஆனால் ‘அரசியல் அறிவியல்’ என்பது உலகம் முழுவதும் ஒரே பொருளில் அறியப்படுகிறது. அதனால்தான் இப்பாடத்தினை அரசியல் என்று அழைப்பதைக்காட்டிலும் அரசியல் அறிவியல் என்று அழைப்பதே சிறப்பானது ஆகும். 1948-ல் பிரான்சு நாட்டின் பாரிஸ் நகரில் கூடிய அரசியல் அறிஞர்கள் இப்பாடத்தினை அரசியல் அறிவியல் என்று மட்டுமே அழைப்பது என்பதில் ஏற்புடைய கருத்தினைக் கொண்டிருந்தனர். எனவே ஒரே பாடத்தினை ‘அரசியல்’ என்றும் ‘அரசியல் அறிவியல்’ என்றும் இரண்டு பெயர்களில் அழைக்காமல் இனி அரசியல் அறிவியல் என்று அழைப்பதே சரியானதாகும்.

இப்பாடத்தினை ஒரு தனித்தியங்கும் துறை சார்ந்த பாடமாக மாற்றியமைத்த பெருமை அமெரிக்க ஐக்கிய நாட்டையே சாரும். அதுவரையிலும் இப்பாடம் தத்துவம், வரலாறு, சட்டம், பொருளியல் போன்ற பாடங்களில் ஒரு துணைப்பாடமாகவேதான் இருந்து வந்தது. 1880-ல் ஜான் W. பர்ஜெஸ் (John W Burgess)என்பவர் கொலம்பிய பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் பாடத்திற்கென தனியாக ஒரு துறையை போதுதான் இப்பாடம் தன்னாட்சியான துறையாக உருவானது என்று கூறலாம். அதன் பின்பு படிப்படியாக வளர்ச்சி பெற்று 1920களில் உலகின் பெரும்பாலான பல்கலைக் கழகங்களில் இப்பாடத்திற்கென தனியான துறைகள் ஏற்படுத்தப்பட்டன. தத்துவம், சட்டம், வரலாறு போன்ற பாடங்களின் கீழ் இயங்கிவந்த அரசியல் பாடத்தினை தனிப்பெரும் பாடமாக மாற்றியமைத்த பெருமை முழுவதும் அமெரிக்க அரசியல் அறிஞர்களையே சேரும். இப்பாடம் அதன் பிறகும், இரண்டாம் உலகப்போர் நடைபெறும் காலம் வரையிலும் கூட மிகவும் முறைசார்ந்ததாகவும் நிறுவனம் சார்ந்த அணுகுமுறையிலும் மட்டுமே இருந்தது.

நிலையான நிறுவனங்கள் சார்ந்த படிப்பாக மட்டுமே இருந்த அரசியல் பாடத்தினை சமுதாயப் பிரச்சனைகளைப் பற்றி படிக்கும் பாடமாக மாற்றியமைக்க அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி- உட்ரோ வில்சன் (Woodrow Wilson)என்ற அறிஞரும் பெரும் முயற்சிகளை எடுத்துக் கொண்டனர். அமெரிக்காவின் சிகாகோ பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த ஆர்தர் பென்ட்லி (Arthur Bentley) என்ற அறிஞர் இப்பாடத்தை விழுமியங்கள் நீக்கிய நடுநிலையான அரசியல் பகுப்பாய்வு செய்யும் ஆற்றல் பெற்றதாக (value-free analysis of politics) மாற்றியமைக்க பெரும்பாடு பட்டவர் ஆவார். மேலும் சார்லஸ் ஈ.மெர்ரியம் (Charles E.Merriam)“அரசியல் அதிகாரம்” என்ற நூலும், ஹெரால்ட் லாஸ்வெல் என்பாரின் “அரசியல்: யார், எப்போது, எதனை, எப்படி அடைகிறார்கள்?”(Politics: Who Gets What,when, How?) என்ற நூலும் அரசியலின் மையக் கருத்தாக அதிகாரம் என்னும் அம்சத்தினை உருவாக்கின.

1920-களிலும் 1930-களிலும் ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளில் நிலவிய முற்றதிகார ஆட்சிகள் மற்றும் இரண்டாம் உலகப்போரின் விளைவாக இந்த அரசியல் அறிவியல் பாடம் தனது அமைப்புகள் மற்றும் நடைமுறைகளின் மீதான கவனத்திலிருந்து மாறி அரசியல் கட்சிகள், அழுத்தக்குழுக்கள், உயர்குடியினர் நடத்தை, தேர்தல் விருப்ப நடத்தைகள், வாக்காளர் நடத்தை என ஒரு நடத்தையியல் (Behavioralism) என்ற ஒரு புதிய பாடம் பிறந்தது. ‘நடத்தையியல்’ என்ற இந்த சொல் உளவியல் பாடத்திலிருந்து பெறப்பட்டதாகும். அதன் பிறகு 1960-களில் ‘பின்தோன்றிய நடத்தையியல்’(Post-Behavioralism) என்ற புதிய பாடமும் பிறந்தது. நடத்தையியல் என்பது அளவுக்கு அதிகமான பழமைவாத அணுகுமுறைகளை உருவாக்கியதாலேயே இந்த பதிய முறையான “பின்தோன்றிய

நடத்தையியல்'' உருவானது. இதில் ஒரு விந்தை என்னவெனில் இப்புதிய போக்கினை மேம்படுத்தி உருவாக்கிய டேவிட் ஈஸ்டன் (David Easton) என்பவரே நடத்தையியல் புரட்சியினை தொடக்கி வைத்தார். டேவிட் ஈஸ்டனின் கருத்துப்படி நடத்தையியல் என்பது யதார்த்தம் மற்றும் உண்மைத்தன்மை ஆகியவற்றுக்கு எதிரானதாக மாறிவிட்டதாக கருதப்பட்டது. ஆகவே பின்தோன்றிய நடத்தையியல் என்பது ஆய்வுகள், விழுமியங்களை மட்டுமே முழுமையாக சார்ந்திருக்காமல் துல்லியத்தன்மையையும் சார்ந்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இவ்வாறாக அரசியல் அறிவியலின் அறிவுசார் புரட்சி என்பது சமூகவியல், மானுடவியல் மற்றும் உளவியல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைந்தது. மேலும் இந்த அறிவு சார் புரட்சியாளர்கள் பழமைவாத கருத்துகளையும், குறுகிய நோக்கம் கொண்ட அணுகுமுறைகளையும் தீவிரமாக எதிர்த்தனர். முற்கால அரசியல் நிறுவனங்கள், அவைகளின் முறையான கட்டமைப்புகள் போன்றவற்றை படித்தனரே தவிர மனிதர்களின் அரசியல் நடத்தையையும் அவர்களுக்குள் உள்ள உறவுமுறைகள் குறித்தும் படிக்கவில்லை. எனவேதான் தற்கால அரசியல் பகுப்பாய்வாளர்கள் பின்வரும் நான்கு அடிப்படைக் கூறுகளில் கவனம் செலுத்தினர்.

- பல்முனைப் பரப்பெல்லையை உள்ளடக்குவதற்கான ஒரு தேடல்
- யதார்த்தத்திற்கான தேடல்
- தெளிவும் சுருக்கமும் பெறுவதற்கான தேடல்
- அறிவுப்பூர்வ வரிசை முறைக்கான தேடல்

**அரசியல் அறிவியலின் வரையறை**

அரசியல் அறிவியல் பற்றி பல்வேறு அறிஞர்கள் மாறுபட்ட விளக்கங்களை அளித்துள்ளனர். கார்னர்(Garner) இதனை 'அரசிடம் ஆரம்பித்து அரசிடமே முடியும் ஒரு பாடம்' என்கிறார். 'லீகாக்'கும் 'சீலே'வும் (Leacock) (Seeley)இப்பாடம் 'அரசாங்கத்தினைப் பற்றி படிக்கும் பாடம்' என்கின்றனர். ராப்சன் (Robson)மற்றும் லாஸ்வெல் (Lasswell) ஆகிய இருவரும் இப்பாடம் 'அதிகாரம் மற்றும் செல்வாக்கு ஆகியவைகளைப் பற்றிய படிப்பு' என்கின்றனர். சில அறிஞர்கள் இதனை ஒருங்கிணைக்கப்பட்ட மனித சமூகத்தின் அரசியல் அம்சங்களைப் படிக்கும் பாடம் என்கின்றனர். இவ்வாறாக இப்பாடத்தின் பரப்பெல்லையானது பலமுனைகளிலும் வளர்ந்துகொண்டே வருகிறது. அரசியல் அறிவியல் என்பது வரலாற்றுப்பூர்வமாக அரசு, அதன் அமைப்புகள், சட்டங்கள், அதன் செயலாக்கங்கள் பற்றிய படிப்பாகவே அறியப்பட்டது. நடத்தைசார் புரட்சிக்குப் பின்னர் தனிமனிதர்கள் மற்றும் குழுக்களின் அரசியல் நடத்தைகளும் இதன் அங்கமாகிவிட்டன. அரசியல் அறிவியல் பாடத்தில் அண்மைக்காலத்தில், சேர்ந்துகொண்ட கரத்தாக்கம் 'ஆளுகை' (Governance) என்பதாகும்.

அரிஸ்டாட்டில் மக்களாட்சியை மோசமான அரசாங்க முறை என்றார்.

தூய அரசியலில் மேலான அதிகாரம் என்பது பெருவாரியாக மக்களிடம் இருப்பதுடன் அது பொது நன்மைக்காகப் பயன்படுத்துகிறது.

**ப்லன்ட் சிலி (Bluntschil)**
அரசியல் அறிவியலானது அரசு என்பதைப் பற்றியும், அதன் தன்மைகள், பல்வேறு வடிவங்கள், செயல்பாடுகள் மற்றும் அதன் மேம்பாட்டினைப் பற்றியும் படிக்கும் ஓர் அறிவியலாகும்.

**கேரிஸ் (Garris)**
அரசியல் அறிவியல் என்பது அரசின் தோற்றம், மேம்பாடு, நோக்கம் மற்றும் அதன் பல்வேறு பிரச்சனைகளைப் பற்றி அறிந்து கொள்வதாகும்.

**ஹேரால்ட் லாஸ்கி (Harold Laski)**
அரசியலைக் கற்றல் என்பது ஒருங்கிணைக்கப்பட்ட ஓர் அரசுடன் மக்களின் வாழ்க்கைக்கு உள்ள தொடர்பினை படிப்பதாகும்.

**சீலே (Seeley)**
அரசியல் அறிவியல் என்பது அரசாங்கம் மற்றும் அரசியல் பொருளாதாரம் என்பவைகளை வளம், உயிரியல், வாழ்க்கை, இயற்கணிதம், வரைகணிதம், விண்வெளி போன்றவற்றோடு தொடர்புபடுத்தி படிப்பதாகும்.

**ஹெரால்ட் லாஸ்வெல் (Harold Lasswell)**

அதிகாரம் வடிவமைத்து பங்கிடப்படுவதை அனுபவ விசாரணை செய்வதே அரசியல் அறிவியல் ஆகும்.

**கெட்டல் (Gettel)**

அரசியல் அறிவியல் என்பது கடந்த காலத்தை வரலாற்று ரீதியாகவும், நிகழ் காலத்தினை பகுப்பாய்வு ரீதியாகவும், எதிர்காலத்தினை நன்னெறி ரீதியாகவும் படிக்க உதவும் ஒரு பாடமாகும்.

**டேவிட் ஈஸ்டன் (David Easton)**

ஒரு சமுதாயத்தின் எல்லைக்குள் ஒரு நகரத்திற்கோ, ஒரு அரசுக்கோ, ஒரு தேசத்திற்கோ அந்த சமுதாயத்தில் நிலவும் பற்றாக்குறையான மனிதவளம், பொருளியல் வளம் போன்றவற்றினை மனித தேவைகளுக்கும், மனித விருப்பங்களுக்கும் ஏற்ப முறைப்படுத்தி வழங்கும் செயல்முறையே அரசியல் ஆகும்.

**எதிர்காலத்தினை நம்பிக்கையோடு சந்திப்போம்**

**"Tryst with Destiny"**

ஜவஹர்லால் நேருவின் வரலாற்று புகழ் மிக்க உரையான "எதிர்காலத்தினை நம்பிக்கையோடு சந்திப்போம்" என்ற உரை குறித்து 14.08.1947 அன்று இந்து நாளிதழில் வெளியான செய்தி:

"நீண்ட வருட காலமாக நாம் நம்பிக்கையோடு காத்திருந்த எதிர்காலம் இப்போது நமக்கு முழுமையாக கிடைக்கவில்லை எனினும் மிகவும் கூடுதலாகவே உறுதிமொழியாக வந்து வாய்த்துள்ளது" என துவங்கிய பண்டித ஹவஹர்லால் நேரு அரசமைப்பு நிர்ணய சபையில் அன்றிரவு பதவியேற்கவிருந்த உறுப்பினர்களுக்கான உறுதிமொழி தீர்மானத்தின் போது பின்வருமாறு கூறுகிறார்.

"உலகமே உறங்கி கொண்டிருக்கும்போது இந்தியா இந்த நள்ளிரவில் விழித்தெழுந்திருக்கிறது. பழமையிலிருந்து புதுமை நோக்கி பயணிக்கத்தயாராகிவிட்டோம். நீண்ட காலம் ஒடுக்கி வைக்கப்பட்ட ஒரு தேசத்தின் ஆன்மா உயிர்ப்பித்திருக்கிறது. இந்த சமயத்தில் இந்திய தேசத்திற்கும், இந்திய மக்களுக்கும் சேவை செய்ய நாம் தியாக உணர்வுடன் சில உறுதிமொழிகளை எடுத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம்".

"சுதந்திரமும், அதிகாரமும் நமக்கு பொறுப்புணர்வினை அதிகமாகக் கொண்டு வந்துள்ளது. அந்த பொறுப்புணர்வு இறையாண்மையுள்ள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இறையாண்மை கொண்ட இந்த அவையிடம் வழங்கப்பட்டுள்ளது. இந்த சுதந்திரத்தை நாம் பல வலிகளையும், துன்பங்களையும் துயரங்களையும் தாங்கி, கனத்தஇதயத்துடனேயே பெற்று இருக்கிறோம். இவற்றுள் பல வலிகள் இன்னும் தொடரலே செய்கின்றன. எப்படியிருப்பினும் கடந்த காலம் முடிவுக்கு வந்து புதிய எதிர்காலம் நம் கண் முன் வந்துள்ளது.

இந்தியாவுக்கான நமது சேவை கோடிக்கணக்கான இந்திய மக்களை அவர்களின் வறுமை, அறியாமை, பிணி, சமத்துவமின்மை ஆகியவைகளிலிருந்து மீட்டெடுக்க செய்யும் சேவையை பொறுத்தே அமையும். இந்த தலைமுறையின் மிகச் சிறந்த மனிதர்களாக நாம் வாழ விரும்பினால் இந்தியர்கள் ஒவ்வொருவரின் கண்களில் இருந்து வழியும் கண்ணீரை துடைப்பதற்கு முன்வர வேண்டும். அது நமது சக்திக்கு அப்பாற்பட்டு கூட இருக்கலாம். கண்ணீரும், துன்பங்களும் தொடரும்வரை நமது பணிகளும் ஓயப்போது கிடையாது. ஆகவே நம் கனவுகளை நனவாக்க நாம் மென்மேலும் கடினமாக உழைக்க வேண்டும். இக்கனவுகள் இந்தியாவுக்கானது மட்டுமல்ல, உலகிற்கானது, உலகின் அனைத்து தேசங்கள் மற்றும் மக்கள் ஒன்றாக இருப்பதால் தனித்து இயங்குவதை கற்பனை கூட செய்ய முடியாது. ஆமைதி என்பது பிரிக்க முடியாதது. சுதந்திரமும் அது போலத்தானே, தற்பொழுது வளமும் அப்படியே ஆகும். பேரழிவும் அப்படியே இருப்பதால் இந்த ஒரே உலகில் அவற்றினை தனித்தனி பாகங்களாகப் பிரிக்க முடியாது"

**அரசியல் அறிவியலின் தன்மை (Nature of Political Science)**

மனிதன் என்பவன் ஒரு சமூக விலங்கு ஆவான். முனிதன் தனிமையைவிட பிறருடன் இருப்பதையே விரும்புகிறான். மனிதன் தனது பரந்துபட்ட தேவைகளுக்கும், திருப்திக்கும் சக மனிதனைச் சார்ந்தே வாழவேண்டியுள்ளது. அதனால் மனிதர்கள் எப்போதும் சமூக குழுக்களாகவே வாழ வேண்டியுள்ளது. சமூகத்தின் ஒரு அங்கமாக விளங்கும் மனிதர்கள் பொதுவான நடத்தை விதிகளை கடைபிடித்தே வாழ வேண்டியுள்ளது. இத்தகைய சமுதாயம் முறையாக ஒருங்கிணைக்கப்பட்டு விதிமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளதால்

அதனை ஏற்பது மிகவும் நன்றாகும். இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட சமுதாயம், அரசு, சட்டம், தனிமனித உரிமைகள், குழுவில் உள்ள உரிமைகள் ஆகியவைகளைப் பற்றியே அக்கறை கொண்டுள்ளது. இவ்வாறாக அரசியல் அறிவியல் என்பது மனித இனத்திற்கு, அரசு மற்றும் அரசாங்கத்துடனான தொடர்பினை முக்கியமாக விளக்குகிறது.

அரசியல் அறிவியல் என்பது கோட்பாடு மற்றும் செயல்முறை ஆகியவற்றை பற்றியதாகும். இத அரசியல் முறைமைகளையும், அரசியல் நடத்தைகளையும் விவரித்து பகுப்பாய்கிறது. அரசின் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றி கண்டறிகிறது. அரசுக்கும் அதன் கீழ் உள்ள சங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியனவற்றுக்கும் உள்ள தொடர்பினைப் படிக்கிறது. அரசியல் சூழல்களில் ஆடவர் மற்றும் மகளிர் ஆகியோர் என்ன செய்கிறார்கள் என்பதனை விளக்குகிறது. ஆரம்ப காலகட்டத்தில் இப்பாடம் வரலாறு மற்றும் தத்துவம் ஆகிய பாடங்களோடு இணைந்து செயல்பட்டது. 1903-ல் தோன்றிய ‘அமெரிக்க அரசியல் அறிவியல் கழகம்’(American Political Science Association) இப்பாடத்தினை வரலாறு, பொருளியல் மற்றும் பல சமூக அறிவியல் பாடங்களின் பிடியிலிருந்து மீட்டெடுத்து ஒரு தனிப்பாடமாக உருவாக வழிவகை செய்தது. பிற்காலத்தில் அதிகமான அறிவியல் அணுகுமுறை எற்பட்ட பிறகு இப்பாடம் உளவியல் மற்றும் மானுடவியல் போன்ற பாடங்களோடு நெருங்கிய தொடர்பில் இருந்தது. நடத்தையியல் புரட்சி ஏற்பட்ட பிறகு இப்பாடம் தனிமனிதன், குழுக்கள் ஆகியவற்றின் நடத்தைகள் பற்றி ஆய்ந்தது. பின்னா் தோன்றிய நடத்தையியலால் இப்பாடம் சமூகத்தின் அன்றாட பிரச்சனைகளையும், அரசியல் உண்மைகளையும் பற்றிய படிப்பாக மாறியது.

### அரசியல் அறிவியலின் பரப்பெல்லை (Scope of Political Science)

அரசியல் அறிவியல் பாடத்தின் பரப்பெல்லை என்பது இந்தப் பாடத்தின் வரம்பு மற்றும் பாட உள்ளடக்கங்கள் பற்றியதாகும். இது அடிப்படையில் ‘அரசு’ என்பதைப் பற்றி படிப்பது மிகவும் பரந்த பகுதிகளை கொண்டதாகும். ‘அரசு’ என்பது ஒரு குறிப்பிட்ட எல்லைப் பகுதிக்குள் தனது சொந்த மக்களின் முறையான மற்றும் மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழிசெய்யும் அரசாங்கத்தையும் கொண்டதாகும். மனித நடத்தை என்பது நிலையாக இல்லாமல் மாறிக்கொண்டேயிருப்பதால் இப்பாடத்தின் பரப்பெல்லை தொடர்ந்து விரிவடைந்து கொண்டே செல்கிறது. இப்பாடம் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடன் மற்ற மனிதர்களுக்கும் உள்ள தொடர்பினைப் பற்றிய சட்டமாக்கல் பற்றி படிப்பதால், இதன் பரப்பெல்லையானது பொருளியல், வணிகவியல், சமூகவியல், சட்டம் என்ற பலவகையாக விரிவடைந்து கொண்டே செல்கிறது.

1948ல் நடந்த பன்னாட்டு அரசியல் அறிவியல் சங்கமாநாடு இப்பாடத்திற்கு பின்வரும் பரப்பெல்லைகளை குறிப்பிட்டது.

- ❖ **அரசியல் கோட்பாடு**
- ❖ **அரசியல் நிறுவனங்கள்**
- ❖ **அரசியலின் இயக்கவியல்**
- ❖ **பன்னாட்டு உறவுகள்**

அரசியல் அறிவியல் பாடத்தின் பரப்பெல்லையை மேற்கண்ட நான்கு உபதலைப்புகளில் அடக்கிவிட முடியாது என்பதால் பின்வரும் படவிளக்கம் அரசியல் அறிவியலின் பரந்த பரப்பெல்லையை விளக்குகிறது.

அரசியல் அறிவியல் பாடமானது அரசு மற்றும் அரசாங்கங்களின் பிரச்சனைகளைப் பற்றி முக்கியமாகப் படிக்கிறது. தனது குடிமக்களை ஆள்வதற்கான சட்டங்களை உருவாக்கும் அதிகாரத்தினை அரசு பெற்றுள்ளது. அரசு தனது அதிகாரங்களை அரசாங்கங்கள் மூலமாக செயல்படுத்துகிறது. அரசாங்கம் என்பது அரசின் ஒரு முகமை ஆகும். அரசு என்பது அரசாங்கங்களை உள்ளடக்கியதாக இருப்பதால் பிளண்ட்சிலி(Bluntschli) போன்ற அரசியல் கோட்பாட்டாளர்கள் அரசியல் அறிவியலின் பரப்பெல்லையை மிகவும் குறைத்து அது ‘அரசு’ என்பதைப் பற்றி மட்டும் படிப்பதாக கூறுகின்றனர். அரசாங்கம் என்பது அரசின் ஒரு பகுதியே ஆகம். அதே சமயம் கார்ல் டாஷ்(Karl Deutsch)போன்ற அறிஞர்கள் ‘அரசியல் அறிவியல் என்பது அரசாங்கங்களைப்

பற்றி மட்டுமே படிப்பது' என்கின்றனர். ஹெரால்ட் லாஸ்கி (Harold Laski)போன்ற அறிஞர்கள் 'அரசியல் அறிவியல் என்பது அரசுகள் மற்றும் அரசாங்கங்கள் ஆகிய இரண்டையும் படிப்பதாக' வாதிடுகின்றனர். அரசு மற்றும் அரசாங்கம் ஆகிய இரண்டுக்கும் அடிப்படையான வேறுபாடுகள் இருந்தாலும் அவைகளின் பரப்பெல்லைகளை ஆயும்போது ஒன்றினை விட்டு மற்றதை தனியாகப் படிக்க முடியாது. அரசியல் அறிவியலின் பரப்பெல்லையானது, அரசின் கடந்த காலம், நிகழ் காலம் மற்றும் எதிர்கால வளர்ச்சிகளையும் அரசின் மேம்பாட்டினையும் பற்றி படிப்பதாகக் கூறலாம்.

அரசியல் கோட்பாடு என்பது அரசியல் அறிவியலின் ஒரு முக்கியமான பகுதியாகக் கருதப்படுகிறது. அரசியல் கோட்பாடு என்பது அரசியல் சிந்தனைகள் மற்றும் அரசியல் தத்துவங்களை உள்ளடக்கிய அரசியல் அறிவியலின் முக்கிய கருத்தாக்கங்களை விவரிக்கும் ஒரு பாடமாகும். அரசியல் அறிவியல் பாடமானது அரசியல் அறிவியல் பாடமானது அரசியல் நிறுவனங்களின் தன்மை, அமைப்பு மற்றும் செயல்பாடு ஆகியவைகளைப் பற்றியதாகும். இப்பாடம் மேலும் பலவகையான அரசமைப்புச் சட்டங்களையும் மற்றும் பிற அரசாங்கங்களை ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்யும் பணியினையும் செய்கிறது. இப்பாடத்தின் பரப்பெல்லை தற்கால அரசியல் மற்றும் அரசாங்கங்களின் சக்திகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இப்பாடம் அரசியல் கட்சிகள், தன்னலக்குழுக்கள் மற்றும் அழுத்தக்குழுக்கள் ஆகியவைகளைப் பற்றி படிப்பதாகவும் அமைந்துள்ளது. அரசியல் இயக்கவியல் பற்றிய செயலறிவிலான கற்றலாக தனிமனிதர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவைகளின் நடத்தைகள் பற்றியும் ஆராய்கிறது. முக்கியமாக அரசியல் அறிவியல் என்ற பாடம் தனி மனிதனுக்கும், அரசுக்கும் உள்ள உறவுமுறைகளின் மீது பெரிதும் ஆர்வம் காட்டுகிறது. இதன் விளைவாக தற்கால அரசியல் அறிஞர்கள் அரசியல் அறிவியலின் நடத்தையியல் மற்றும்முறைமை அணுகுமுறையின் அடிப்படையில், அரசியல் அறிவியல் பாடத்தின் பரப்பெல்லையை மிகவும் விரிவுபடுத்தியுள்ளனர். இதனால் 'அரசியல் சமூகமயமாதல்''அரசியல் பண்பாடு' அரசியல் மேம்பாடு''முறைசாரா அமைப்புகள்''அழுத்தக் குழுக்கள்' போன்றவைகளும் அரசியல் அறிவியல் பாடத்தின் பரப்பெல்லைக்குள் வருகின்றன.

மேலும் அரசியல் அறிவியலின் பரப்பெல்லையின் கீழ் தூதாண்மை(Diplomacy), பன்னாட்டுச் சட்டங்கள், பன்னாட்டு அமைப்புகள் போன்றவைகளும் உள்ளடங்கியுள்ளன. அரசாங்கம் சார்ந்த மற்றும் அரசாங்கம் சாராத நிறுவனங்களின் அரசியல் பிரச்சனைகளின் மீதான பொதுக்கொள்கைகளை வகுப்பது பற்றியும் அரசியல் அறிவியல் பாடம் தனது பரப்பெல்லையில் உள்ளடக்கியுள்ளது.

**அரசியல் அறிவியல் என்பது ஒரு அறிவியலா? அல்லது ஒரு கலையா?** (Is Political Science, a Science or an Art?)

அரசியல் அறிவியல் என்ற இந்த பாடம் ஒரு கலைப் பாடமா? அல்லது ஒரு அறிவியல் பாடமா? என்பது பற்றியான ஒரு பெரிய விவாதமே அரசியல் அறிவியல் அறிஞர்களிடையே நிலவி வருகிறது. சில அறிஞர்கள் இப்பாடமானது அரசு மற்றும் அரசாங்கம் என்பது பற்றிய ஒரு அறிவியல் பாடம் என்று கருதுகின்றனர். மற்றும் சிலரோ இப்பாடத்தினை மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள ஒரு கலைப்பாடம் என்கின்றனர். இப்பாடத்தின் தன்மை, வழிமுறைகள், அணுகுமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அறிவியல் தன்மை மிகவும் குறைவாக காணப்படுவதால் அகஸ்டே கோம்டே(Auguste Comte) மற்றும் மைட்லேன்ட் (Mait Land) போன்ற அறிஞர்கள் இப்பாடத்தினை ஒரு கலைப் பாடமாகக் கருதுகின்றனர். ஏனெனில் இப்பாடத்தில் தொடர்ச்சி, மேம்பாட்டுத்தன்மை, அடிப்படை தெளிவு போன்றவைகளும், உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளக் கூடிய பொதுவான கொள்கைகளும், அறிவியல் பூர்வ அணுகுமுறைகளும், பரிசோதனை முறைகளும் மிகவும் குறைவாகவே இருக்கிறது என்று இவர்கள் வாதிடுகின்றனர். மேலும் நம்பகத்தன்மை, சரிபார்ப்புத்தன்மை, தெளிவு, துல்லியம் போன்ற தூய அறிவியலின் கூறுகள் இப்பாடத்தில் இல்லை என்பதும் இவர்களின் வாதமாகும். தூய அறிவியல் பாடங்களான இயற்பியல், வேதியியல் போன்ற பாடங்களில் உள்ளது போல காரணங்களையும் விளைவுகளையும் (Cause and Effect)தொடர்புப்படுத்தி உருவாக்கும் பொதுக் கோட்பாடுகள் உலகம் முழுதும் இப்பாடத்தில் ஒரே மாதிரியாக இல்லை என்பதனால் இப்பாடத்தினை ஒரு கலைப்பாடம் என்றே பல அறிஞர்களும் கருதுகின்றனர்.

இப்பாடத்தினை ஒரு கலைப் பாடமே என்று வாதிடுவோர் மத்தியில் அரிஸ்டாட்டில்தான் இதனை ஒரு மேலான அறிவியல் என்று முதன்முதலாக அழைத்தார். ப்லன்ட்சிலி (Bluntschili), மாண்டெஸ்கியூ (Montesquieu), போடின் (Bodin) , ஹாப்ஸ் (Hobbes) போன்ற அறிஞர்கள் இந்த கருத்தினை ஒப்புக்கொண்டு இப்பாடம் ஒரு அறிவியல் பாடமே என்கின்றனர். முனைவர் கார்னர்(Dr. Garner) போன்றோர் இப்பாடத்திலும் முறைமையான அணுகுமுறை, உற்றுநோக்கல், பரிசோதனை போன்றவை இருப்பதாக கூறுகின்றனர். தூய அறிவியல் பாடங்களில் உள்ளதுபோல உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளப்பட்ட கோட்பாடுகள் அரசியல் அறிவியல் பாடத்தில் முழுக்க இல்லாமல் போனாலும் கூட இந்த அரசியல் அறிவியல் பாடத்திலும் பல கருத்துக்களை பொதுமைப்படுத்தி நிரூபிக்க முடியும் என்பது இவர்களின் கருத்தாகும். உதாரணமாக சமூக நல மேம்பாட்டுக்கும், பன்மைத் தன்மை கொண்ட சமுதாயங்களுக்கும் மக்களாட்சியே சிறந்த ஆட்சிமுறை என்ற கருத்து பொதுவானதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த கருத்து முடிவு முற்காலம், இடைக் காலம்

- ❖ **அரசியல் அறிவியல் என்றால் என்ன?**
  அரச அரசாங்கம் மற்றும் அரசியல் பற்றிய அறிவியல் பூர்வ படிப்பே அரசியல் அறிவியல் எனலாம்.
- ❖ **அரசியல் அறிவியல் பாடம் எதுவாக இல்லை?**
  ஆரசியல் அறிவியல் என்பது அனைத்து விடைகளையும் தன்னகத்தே கொண்ட முழுநிறைவான அறிவியலாக இல்லை.
- ❖ அரசியல் அறிவியல் ஓர் அறிவியலா? அவ்வாறெனில், அது எங்ஙனம் அறிவியல் தன்மையுடையதாகிறது?

‘அரசியல்’ என்ற இந்த பாடம் அமெரிக்க அரசியல் அறிவியல் சிந்தனையாளர்களின் அறிவியல் பூர்வ அணுகு முறைகளுக்குப் பிறகுதான் “அரசியல் அறிவியல்” எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டது. எனினும் தூய அறிவியல் பாடங்களான இயற்பியல், வேதியியல், உயிரியல் போன்ற பாடங்களுக்கு இணையாக இந்த அரசியல் அறிவியல் பாடத்தினைக் கருத முடியாது. ஆகவே, மனித நடத்தைப் பற்றியதாக இருப்பதால் மற்றொரு புறத்தில் அரசியல் அறிவியல் என்பது அரசு மற்றும் அரசாங்கத்தைப் பற்றிய அறிவியலாகும் என வாதிட்டனர். அரசியல் அறிவியல் பாடத்தினை ஓர் சமூக அறிவியல் பாடம் என்று அழைப்பதுதான் பொருத்தமானதாக இருக்கும்.

நவீனகாலம் ஆகியவற்றில் பல்வேறு வகையான ஆட்சி முறைகளை ஆய்வுக்கு உட்படுத்திய பின்னரே உருவாக்கப்பட்டது. ஆனால் அதே சமயத்தில் இப்பாடத்தின் தன்மை, வழிமுறை, கோட்பாடுகள் ஆகியன பற்றி ஒத்த கருத்துக்களை ஏற்படுத்த முடியவில்லை. ஏனெனில் இப்பாடத்தில் அரசியல் நிறுவனங்கள் அனைத்திலுமே மனித உறவுகள் தொடர்பில் இருக்கின்றன. மனிதனோடு தொடர்புடைய எந்த ஒரு செயல்பாடும் நிலையானதாக இல்லாமல் மாறக்கூடியதாகும். இந்த காரணத்திலேயே இப்பாடத்திற்கு முழுமையான தகுதியினை கொடுக்க இயலவில்லை. எப்படியிருப்பினும் ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், சமத்துவமின்மை, எழுத்தறிவின்மை, வறுமை போன்றவை சமுதாயத்தினை பெரிதும் பாதிக்கும் காரணிகள் என்பதை அனைத்து அரசியல் அறிஞர்களும் ஏகமனதாக ஒப்புக்கொள்கின்றனர்.

அதேபோல ‘காரணங்கள் மற்றும் அதன் விளைவுகள்’ பற்றிய தூய அறிவியல் கோட்பாடு அரசியல் அறிவியலுக்கு பொருந்தாது என்று கூறினாலும் ‘வறுமை வேலையின்மை போன்ற காரணிகள் புரட்சியினை ஏற்படுத்திவிடும்’ என்பது அரசியல் அறிவியலிலும் ‘காரண விளைவுக் கோட்பாடு’(Cause and Effect Theory) உள்ளதைக் காட்டுகிறது. எனவேதான் சில அரசியல் அறிஞர்கள் இப்பாடத்தினை ஒரு அறிவியல் பாடம் என தொடர்ந்து கூறிவருகின்றனர்.

எப்படியிருப்பினும், அரசியல் அறிவியலை இயற்கை அறிவியலுடன் ஒப்பிட முடியாமல் இருந்தாலும் அது அரசு மற்றும் அரசாங்கத்துடனான தனிமனிதர்களின் உறவினைப் பற்றிய ஓர் சமூகவியலாகும். அரசியல் அறிவியல் என்பது கலையா அல்லது அறிவயலா என்பது கற்பதற்கு எடுத்தக் கொண்ட பொருள் மற்றும் அதனைக் கற்றறிய பயன்படுத்தம் அணுகுமுறையைப் பொறுத்ததாகும்.

மார்ஷல் பெர்மன் (Marshall Bermen)
நீ யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். நீ எப்படியாக வேண்டமானாலும் மாற விரும்பலாம்.

| |
|---|
| நீ அரசியலின் மீது ஆர்வம் இல்லாமல் கூட இருக்கலாம். ஆனால் அரசியல் உன் மீது ஆர்வமாக இருக்கிறது. |

**அரசியல் அறிவியலை படிப்பதற்கான அணுகுமுறைகள்**

அணுகுமுறை என்பது ஒரு அரசியல் நிகழ்வினைக் கண்டுணர்ந்து பின்பு அதனை விளக்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது ஆகும். அரசியல் அறிவியலை பற்றி அறிந்து கொள்ள பல்வேறு அணுகுமுறைகள் உள்ளன. அவைகளை பாரம்பரிய அணுகுமுறைகள் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பாரம்பரிய அணுகுமுறைகள் என்பவை அனமானங்கள் மற்றும் கருத்தறிவு அடிப்படையிலானவை. தற்கால அணுகுமுறைகள் என்பவை அனுபவ அறிவு மற்றும் அறிவியல் தன்மையை அடிப்படையாகக் கொண்டவை ஆகும்.

## அ) தத்துவார்த்த அணுகுமுறை (Philosophical Approach)

இந்த அணுகுமுறைதான் அரசியலைக் கற்பதற்கான மிகவும் பழமையான அணுகுமுறையாகும். இதனை அனுமானங்கள் மற்றும் மனோதத்துவ அல்லது நன்னெறி சார்ந்த அணுகுமுறை என்றும் கூறலாம். இந்த அணுகுமுறைப்படி அரசு, அரசாங்கம் மற்றும் மனிதனின் அரசியல் நடத்தையைப் பற்றிய படிப்பானது சில இலக்குகள், நீதிநெறிகள் மற்றும் உண்மைகள், ஆகியவற்றை அடைவதில் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இந்த அணுகுமுறைப்படி இந்த அரசியல் அறிவியல் பாடம் நன்நெறி உலகத்தோடு நெருக்கமாக கொண்டு செல்லப்படுகிறது. ஆனால் இந்த அணுகுமுறை மிகவும் மேலோட்டமானதாகவும் மிகுந்த யூகங்கள் அடிப்படையிலானதாகவும் இருப்பதாக பல விமர்சகர்கள் கருதுகிறார்கள்.



### ஆ. வரலாற்று அணுகுமுறை (Historical Approach)

இந்த அணுகுமுறையானது 'அரசியல் அறிவியல்' என்ற இந்த பாடம் கடந்த காலங்களில் அரசுகளும், அரசாங்கங்களும், அரசியல் நிறுவனங்களும் எவ்வாறு தோன்றி படிப்படியாக வளர்ச்சி பெற்று வளர்ந்து வந்தன என்பதை அறிந்துகொள்வதில் இருந்து தொடங்குகிறது. தனி மனிதர்களும், அவர்களின் தனிப்பட்ட விருப்பங்களும் எவ்வாறு அரசியல் அமைப்புகளின் வெற்றி தோல்விகளுக்கு காரணமாக இருந்தன. என்பதைப் பற்றியும், அதனால் கற்றுக்கொண்ட பாடங்கள் எவ்வாறு எதிர்கால அரசியல் அமைப்புகளுக்கு உதவின என்பதும் இந்த அணுகுமுறையினால் பெறப்படும் சில தகவல்களாகும். தற்கால அரசியல் பிரச்சனைகளைப் புரிந்து கொள்வதற்கு அதே போன்ற வரலாற்று நிகழ்வுகள் அறியப்பட்டன. இதனை விமர்சிப்பவர்கள் கூறுவது என்னவென்றால் பழங்காலத்தைப் பற்றிய பல தகவல்கள் பிரகாசமாக தோன்றிய போதிலும் அவைகளில் சில மேலோட்டமான ஒற்றுமைகள் தந்து பல சமயங்களில் நம்மை தவறான பாதைக்கு கொண்டு சேர்த்து விடும் என்பது இவர்களின் வாதமாகும்.

### இ) சட்ட பூர்வ அணுகுமுறை (Legal Approach)

அரசியல் அறிவியலைப் பற்றி கற்பது என்பது அரசினால் ஓர் அரசியல் அமைப்பினை நிர்வகிக்க உருவாக்கப்பட்ட சமூக நிறுவனங்களுடனான தொடர்படையதாகும். மேலும் அரசு என்பது சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றியதாக இருப்பதால் அரசியல் கொட்பாட்டாளர்கள் நீதித்துறை நிறுவனங்கள் மீது அதிகக் கவனம் செலுத்துகின்றனர். இந்த அணுகுமுறையானது சட்டத்தினை, உருவாக்கி அதனை செயல்படுத்தும் ஒரு நிறுவனமாகவே அரசினைப் பார்க்கின்றது. சில அரசியல் விமர்சகர்கள் இந்த அணுகுமுறை மிகவும் குறுகிய பார்வையிலானது என்பதுடன் சட்டம் மற்றும் ஒழுங்கினைச் செயல்படுத்துவதைத் தவிர அரசுக்கு பல்வேறு பணிகள் உள்ளனவென்றும், சட்டம் என்பது தனி மனித வாழ்வின் ஒரே ஒரு அம்சம் பற்றியதாகும் என்றும், சட்டத்தை வைத்தே மனிதனின் அரசியல் நடத்தையை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது எனவும் குறிப்பிடப்படுகின்றனர்.

### ஈ) நிறுவனம் சார்ந்த அணுகுமுறை (Institutional Approach)

அரசியலின் முறையான அமைப்புகளான சட்டமன்றம், நீதித்துறை மற்றும் செயலாட்சித் துறை ஆகிய துறைகளின் செயல்பாடுகளின் அடிப்படையில் அரசியல் அறிவியலை அணுகுவது நிறுவனம் சார்ந்த அணுகுமுறையாகும். இந்த அணுகுமுறையை கட்டமைப்பு அணுகுமுறை **(Structural Approach)**என்றும் சிலர் கூறுகிறார்கள். இந்த அணுகுமுறையில் பல்வேறு முறைசாரா அமைப்புகளைப் பற்றி படிப்பதோடு பல்வேறு வகையான அரசாங்கங்களும் ஒப்பீட்டு முறையில் படிக்கப்படுகின்றன. இந்த அணுகுமுறையில் முறை சார்ந்த மற்றும் முறை சாராத அமைப்புக்களை மட்டும் கவனத்தில் எடுத்துக்கொள்கிறார்களே தவிர அதனுடன் தொடர்புடைய மனிதர்களின் நடத்தையினை கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை என்பது ஒரு குறைபாடாகும்.

## II. நவீன அணுகுமுறைகள் (Modern Approach)

### அ) சமூகவியல் அணுகுமுறை(Sociological Approach)

சமூகவியல் அணுகுமுறையானது சமூக உறுப்பினர்களின் அரசியல் நடத்தையை சமூக சூழலில் புரிந்து கொள்வது குறித்து வலியுறுத்துகிறது. அரசு என்பது அடிப்படையில் ஒரு சமூக உயிரினமாகும். எனவே, அரசியல் என்பதை சமூக காரணிகளின் மூலம் புரிந்து கொள்ள முடியும். ஆனால், அரசியல் அறிஞர்கள் சிலர் அரசியல் அறிவியல் பாடத்தில் சமூகவியல் பிரச்சனைகளுக்கு அதிகக் கவனம் மற்றும் அதிக முக்கியத்துவம் கொடுப்பது அரசியல் அறிவியலின் தனித்தன்மைக்கு ஏற்புடையதன்று என்று கருதுகின்றனர்.

### ஆ. உளவியல் அணுகுமுறை (Phychological Approach)

உளவியல் அணுகுமுறையானது அரசியல் மற்றும் சமூக நிறுவனங்கள் உளவியல் விதிமுறைகளின் அடிப்படையில் இயங்க வேண்டுவதின் அவசியத்தை விளக்குகின்றன.

இவ்வணுகுமுறை அரசியல் தலைவர்களைப் பற்றிய உளவியல் பகுப்பாய்வினால் அரசியலைப் பற்றி குறிப்பிடத்தகுந்த அறிவு வெளிப்படுவதாக என அனுமானிக்கிறது. இருந்தபோதிலும் இந்த அணுகுமுறையானது சமூகவியல், சட்டம் மற்றும் பொருளியல் காரணிகளை புறந்தள்ளுகிறது என்பத இந்த அணுகுமுறையின் ஒரு குறையாகக் கருதப்படுகிறது.

### இ. பொருளியல் அணுகுமுறை (Economical Approach)

பொருள்களின் உற்பத்தி மற்றம் பகிர்ந்தளித்தல் ஆகிய இரண்டும் ஒரு அரசுக்கு மிக முக்கியமான பணிகள் என்பதால் அரசியல் அறிவியலை பொருளியல் அடிப்படையில்தான் படிக்க வேண்டும் என்று கூறுவது பொருளியல் அணுகுமுறையாகும். பொருளாதார விவகாரங்களை ஒழுங்குபடுத்தும் அரசின் பங்கு மற்றும் அரசினுடைய அரசியல் நடைமுறையுடனான பொருளாதாரத்தின் தொடர்பு பற்றியும் இந்த அணுகுமுறை வலியுறுத்துகிறது. ஒரு மனிதனின் அரசியல் மற்றும் பொருளாதார வாழ்வினை புரிந்து கொண்டு தொடர்புபடுத்துவது இந்த அணுகுமுறையாகும். இருந்தபோதிலும் இந்த அணுகுமுறையில் பொருளாதார விவகாரங்களை மட்டுமே கருத்தில் கொண்டு உளவியல் மற்றும் சமூகவியல் பிரச்சனைகளைப் புறந்தள்ளுவது என்பது ஒரு குறைபாடாகும்.

### ஈ. நடத்தையியல் அணுகுமுறை (Behavioural Approach)

நடத்தையியல் அணுகுமுறையானது அரசியல் நடத்தை என்பதனை மையமாகக் கொண்டதாகும். ஓர் அரசின் கீழ் வாழும் மனிதர்களின் மனப்பாங்கு மற்றும் முன்னுரிமைகளை அரசியல் சூழலில் கற்பதற்கு இந்த அணுகுமுறை அதிகக் கவனம் செலுத்துகிறது. இந்த அணுகுமுறை அரசியலை முறைமைவாதம் மற்றும் கருத்தறிவுவாதத்தின் அடிப்படையில் கற்பதலிருந்து விலகி மனிதனின் அரசியல் நடத்தையை படிப்பதில் கவனம் செலுத்துகிறது. இருந்தபோதிலும் சில அரசியல் அறிவியல் விமர்சகர்கள் நடத்தையியல் அணுகுமுறை அரசியல் அறிவியல் பாடத்தை அறிவியல் முறைகளின் தவறான கருத்தாக்கப் புரிதலோடு அணுகுவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

### உ. மார்க்சிய அணுகுமுறை (Marxist Approach)

பிற தற்கால அணுகுமுறைகளைக் காட்டிலம் மார்க்சிய அணுகுமுறை அடிப்படையில் மிகவும் வேறுபட்டதாகும். இந்த அணுகுமுறையானது வர்க்கப் போராட்டத்தில் அரசு என்பது ஒரு தவிர்க்க முடியாத விளைவினால் உருவான அமைப்பு என்று கூறுகிறது. மேலும் அரசியல் மற்றும் பொருளியல் சக்திகள் ஆகியவை ஒன்றோடு ஒன்று உட்செயல்பாட்டிலான தொடர்பு கொண்டவை என்பதனையும், இவை இரண்டையும் ஒன்றைவிட்டு ஒன்றினைப் பிரிக்க முடியாது என்பதனையும் விளக்குகிறது. இந்த அணுகுமுறை பொருளியல் காரணிகளுக்கு அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுப்பதாகவும், பிற முக்கியமான காரணிகளை இந்த அணுகுமுறை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்பதும் இந்த முறையை பற்றிய விமர்சகர்களின் கருத்தாகும்.

மேற்கண்ட பல அணுகுமுறைகளையும் பகுப்பாய்வு செய்து பார்க்கிற போது, ஒவ்வொரு அணுகுமுறையிலும் ஒரு சில குறைபாடுகள் இருப்பினும் ஒவ்வொரு விதத்தில் அவை முக்கியமானவைதான் என்பதும், அரசியல் அறிவியலை முழுமையாகப் புரிந்து கொள்ள இந்த அணுகுமுறைகள் அனைத்துமே பயன்படுகின்றன என்பதும் உணரப்படுகிறது.

## III. அரசியல் அறிவியலுக்கும் பிற சமூகு அறிவியல்களுக்கும் இடையேயான தொடர்பு

### அ. அரசியல் அறிவியல் மற்றும் வரலாறு (Political Science and Histry)

அரசும் அதன் நிறுவனங்களும் வரலாற்றின் படிப்படியான வளர்ச்சியால் உருவானவை ஆகும். அரசு தனக்குரிய பல பொதுவான சட்டங்களையும், கொள்கைகளையும் வரலாற்று உண்மைகளின் அடிப்படையிலேயே கண்டறிந்துள்ளது என்பது உண்மை ஆகும். அரசியல் வரலாறு என்பது அரசியல் நிகழ்வுகளையும், அரசியல் இயக்கங்களையும் விவரிப்பதாகும். ∴பிரிமேன் (Freeman)என்பவரின் கூற்றுப்படி ‘‘வரலாறு என்பத கடந்த கால அரசியல், அரசியல் என்பது நிகழ்காலத்தின் வரலாறு’’ என்பது ஒரு சரியான மற்றும் பொருத்தமான

விளக்கமாகும். ஜான் சீலே (John seeley) தனது மேற்கோளில் "அரசியல் அறிவியல் இல்லாத வரலாறு பழமே இல்லாத ஓர் மரம் என்றும் அதேபோல வரலாறு இல்லாத அரசியல் அறிவியல் என்பது வேர் இல்லாத ஓர் மரமாகும்" என்று விளக்குகிறார். இந்த உதாரணம் இந்த இரண்டு பாடங்களுக்கும் உள்ள நெருங்கிய உறவு முறையை தெளிவாக உணர்த்துகிறது.

**ஆ. அரசியல் அறிவியல் மற்றும் பொருளியல் (Political Science and Economics)**

பொருளியல் என்பது அரசியல் அறிவியலின் ஒரு கிளைப்பிரிவு என்று பண்டைய கிரேக்கர்கள் கருதினார்கள். அவர்கள் அரசியல் அறிவியல் பாடத்தினை அரசியல் பொருளாதாரம் (Political Economy) என்றே அழைத்தனர். அரசியல் பொருளாதாரம் என்ற படமானது அரசியல் நிறுவனங்களும், அரசியல் சூழல்களும் பொருளியலுடன் நெருங்கிய உறவுமுறையில் இருப்பதனை விளக்குகிறது. நாட்டிலுள்ள ஒவ்வொரு குழுக்களும் தங்களது பொருளியல் விருப்பங்களை நிறைவு செய்து கொள்ள அரசியல் செயல்பாடுகளையும், அரசியல் சூழல்களையும் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு செயல்படுகிறார்கள். இந்த இரண்டு பாடங்களையும் இணைக்கும் பல கருத்துக்கள் பாடத்தில் இருக்கின்றன. இவை ஒரே நோக்கம் கொண்டதாக இருப்பதுடன் மக்களுக்கு சிறந்த வாழ்வினைத் தரும் நோக்கமுடையதாகும்.

**இ. அரசியல் அறிவியல் மற்றும் அறிவியல் (Political Science and Ethics)**

அறிவியல் என்பது அரசியலோடு நெருங்கிய தொடர்புடைய சமுதாயத்தில், தனிமனிதர்களுடைய நடத்தையைக் கட்டுப்படுத்தும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவற்றை உருவாக்குவதுடன், நீதிநெறி முறைமையோடும் தொடர்புடைய அறிவியலாகும். அறிவியல் என்பது நீதி முறைமையின் அறிவியலாகும். அதேபோல அரசியல் அறிவியல் என்பது அரசியல் முறைமையின் அறிவியல் ஆகும். அரசியல் அறிவியல் மற்றும் அறிவியல் ஆகிய இரண்டு பாடங்களும் மனித சமுதாயத்தை மிகவும் சரியான மற்றும் மாண்பான வாழ்வினை நோக்கி நெறிப்படுத்துவனவாகும்.

**ஈ. அரசியல் அறிவியல் மற்றும் சமூகவியல் (Political Science and Sociology)**

அரசியல் அறிவியலும், சமூகவியலும் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்புடைய பாடங்களாகும். அரசு மற்றும் பிற அரசியல் நிறுவனங்கள் அனைத்தும் எவ்வாறு தோன்றி வளர்ந்தன என்பதன் அடிப்படைத் தகவல்களை சமூகவியல் பாடமே நமக்கு தரமுடியும். அரசியல் அறிவியல் பாடத்தினை கொள்கை அறிவியல் (Policy science) பாடம் என்றும் கூறுகின்றனர். அரசின் பொதுக்கொள்கை (public Policies) களை வகுக்க மக்களின் சமூக தேவைகளைப் பற்றிய அறிவு மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது. சமூகவியல் அறிவு இல்லாமல் எந்தவொரு நாட்டின் அரசியலையும் சிறப்பாக நடத்தமுடியாது. அதேபோல சமூகவியலுக்கு அரசியல் அறிவியலானது அரசின் அமைப்பு மற்றும் பணிகள், அரசின் திட்டங்கள் மற்றும் பணிகள், அரசின் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் சமுதாயத்தை எவ்வாறு பெருமளவில் பாதிக்கிறது என்பன பற்றிய தகவல்களைத் தருகிறது.

**உ. அரசியல் அறிவியல் மற்றும் உளவியல் (Political Science and Psychology)**

உளவியல் என்பது மனித நடத்தையின் அனைத்து அம்சங்களையும் பற்றி படிக்கும் ஒரு பாடமாகும். அரசியல் அறிவியல் என்பது மனிதர்களின் அரசியல் நடவடிக்கைகளைப் பற்றிய ஒரு பாடமாகும். உளவியல் என்பது தனிமனிதர்கள் மற்றும் குழுக்களின் குறிப்பிட்ட நடத்தைப் பாங்கிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. உளவியல் பாடம் அரசியல் கட்சிகளின் நடத்தை மற்றும் அரசிலுள்ள பிற குழுக்களின் செயல்பாடுகள் ஆகியவற்றினை புரிந்து கொள்ள அரசியல் அறிவியலுக்கு உதவி செய்கிறது. பார்க்கர் (Barker) அறிஞர் கூறியது போல "மனிதர்களின் பல புதிரான நடவடிக்கைகளைப் பற்றி அறிந்து கொள்ளும் விடைப்பகுதி உளவியல் பாடத்திலேயே உள்ளது". நமது முன்னோர்கள் உயிரியல் அடிப்படையில் சிந்தித்தார்கள் என்றால் நாம் உளவியல் அடிப்படையில் சிந்திக்கிறோம் என்கிறார்.

## ஊ. அரசியல் அறிவியல் மற்றும் பொது நிர்வாகம் (Political Science and Public Administration)

அரசியல் அறிவியலும், பொது நிர்வாகம் மிகவும் நெருங்கிய தொடர்புடைய பாடங்களாகும். பொது நிர்வாகப் பாடத்தில் வரும் 'பொது' என்ற வார்த்தை அரசாங்கத்தை குறிக்கும். பொது நிர்வாகம் என்பது அரசு சாரா அமைப்புகளையும் உள்ளடக்கியதாகும். பொது நிர்வாகம் என்பது அரசாங்கத்தின் கொள்கைகளை செயல்படுத்துவதாகும். அரசியல் அறிவியல் என்பது பொதுக்கொள்கை உருவாக்க நடைமுறையாகும். அரசியல் அறிவியல் மற்றும் பொது நிர்வாகம் ஆகிய இரண்டு துறைகளின் நோக்கங்களுமே ஒப்புமை உள்ளவையாகும். இவை இரண்டுமே வளங்களைத் தகுந்த முறையில் பயன்படுத்தவதுடன் சமூக நலநன மேம்படுத்துகின்றன. இவ்வாறு அரசியல் அறிவியல் பாடம் என்பது ஆளுகை(Governance) என்பதனை முறையாகப் படிக்க உதவும் ஒரு பாடமாகும். அரசியல் அறிவியல் பாடத்தில் அறிவியல் பூர்வமான முறைகளும், செயலறிவிலான பகுப்பாய்வும் செயல்படுத்தப்படுகின்றன. அதில் செயலறிவிலான புலனாய்வுகள் இருப்பினும், துல்லியமான முன் கணிப்புகள் மிகவும் குறைாவாகவே உள்ளன. அரசியல் அறிவியலானது அரசு, அதன் அங்கங்கள் மற்றும் நிறுவனங்களை ஆராய்கிறது. மேலும் அரசியல் அறிவியல் பாடத்தில் சமூகம், பண்பாடு, பொருளாதாரம் மற்றும் உளவியல் காரணிகள் அதிகம் கலந்துள்ளன. பிற சமூக அறிவியல் பாடங்கள் அனைத்திலிருந்தும் அரசியல் அறிவியல் பாடம் நிறைய கருத்துக்களையும், தகவல்களையும் பெற்றிருந்தாலும் அதிகாரத்தின் மீதான அதன் தனிக்கவனம் அதனை பிற துறைகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. அரசியல் அறிவியல் என்ற இப்பாடத்தில், அதிகாரம், ஒப்பீட்டு அரசியல், பன்னாட்டு உறவுகள், அரசியல் கோட்பாடுகள், பொதுச் சட்டங்கள், பொதுக்கொள்கைகள், என அரசியல் அறிவியலைக் கற்பதன் மூலமாக அரசியல் நடைமுறைகள், அரசாங்க முறைமை மற்றும் குடிமக்களின் வாழ்வில் அது எங்ஙனம் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது என்பதன் அடிப்படைகளைப் புரிந்து கொள்ள முடியும்.

## அலகு– 15
## தமிழக அரசியல் சிந்தனைகள்

**வரலாற்றுப் பின்னணி:**

அடிப்படையில் செம்மொழியான தமிழின் தாய்நாடு (தமிழகம்) என்பதை தமிழ்நாடு என்று அழைக்கின்றோம். இதன் அருகில் உள்ள சில பகுதிகளாக கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடகாவை உள்ளடக்கியதாக தமிழகம் இருந்தது. ஸ்டராபோ (கி.மு. (பொ.ஆ) 63- முதல் கி.பி. (பொ.ஆ) 24 வரை). வாழ்ந்த கிரேக்க வரலாற்று சிந்தனையாளர் மற்றும் புவியியலாளர் ஆவார். இவர் தமிழ் முடியாட்சியின் பாண்டியர்கள் காலத்தில் உள்ள இராஜதந்திர வரலாற்றை உற்றுநோக்கியிருந்தார். கடல் பயணங்களின் மூலமாக சோழ, சேர மற்றும் பாண்டியர்கள் கடலருகில் வாழும் மக்களிடம் தமிழரின் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் இந்தியா மற்றும் மத்தியத்தரைக்கடல் பகுதிகளில் வர்த்தகத்தை வளர்ப்பதற்காக தமிழக கரையோரங்களில் இருந்த துறைமுகங்கள் முக்கிய மையமாக செயல்பட்டன. குறிப்பாக கி.மு (பொ.ஆ.மு) 200 முதல் காலகட்டத்தைச் சார்ந்த கி.பி. (பொ.ஆ) 300 வரையானது ஆகும்.பண்டையகால துறைமுகங்களான கொற்கை,

கற்றலின் நோக்கங்கள்:

- ❖ மாணவர்கள் எளிதில் தமிழத்தின் பண்டைய அரசியல் கருத்துக்களைக் கற்பர்.
- ❖ திருவள்ளுவரின் அரசியல் கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல்.
- ❖ பாரதியாரின் மூலமாகத் தேசியவாதத்தை புரிந்து கொள்ளுதல்
- ❖ தமிழ்நாட்டில் தோன்றியுள்ள பொதுவுடைமைவாத கருத்துக்கள் பற்றி தெரிந்து கொள்ளுதல். குறிப்பாக சிங்காரவேலரின் பொதுவுடைமைவாத படைப்புகளைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல்.
- ❖ திராவிடக் கொள்கையைப் பற்றி புரிந்துகொண்டு மற்றும் தமிழ்நாட்டின் அரசியல், சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படுத்தியுள்ளதாக்கத்தை பற்றி அறிந்துகொள்ளுதல். குறிப்பாகஈ.வெ.ரா. பெரியாரின் பங்களிப்பின் மூலமாக சமுகநீதி, சமத்துவம் மற்றும் உயர் சாதியினரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை போன்றவற்றை புரிந்துகொள்ளுதல்.
- ❖ தமிழ் இயக்கம் மற்றும் திராவிட இயக்கத்தின் முக்கிய விளக்கங்களைத் தெளிவாக விவரித்தல் மற்றும் இவற்றின் அரசியல் போக்கினை விவரித்தல்

பூம்புகார், வசவசமுத்திரம், பெரிமுளா, அரிக்கமேடு, அழகன்குளம், மாமல்லபுரம் போன்றவை சிறந்தமுறையில் செயல்பட்டன. குறிப்பாக வர்த்தகம், வாணிபம் மற்றும் பண்பாட்டுப் பரிமாற்றங்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகள், இலங்கை, சீனா எகிப்து, கிரேக்க மற்றும் ரோமாபுரி போன்ற நாடுகளுடன் திறம்பட மேற்கொள்ளப்பட்டது. கப்பல் கட்டுதலில் பாரம்பரியமிக்க தமிழர்கள் சிறந்த கடலோடிகளான நமது முன்னோர்கள் உலகின் அடிப்படை தன்மைகளின் தாக்கங்களாக அரசியல், சமுதாயம், பண்பாடு, வர்த்தகம் மற்றும் வாணிபத் தொடர்புகளை உலகின் மற்ற நாடுகளுடன் ஏற்படுத்தினர்.

ஏறத்தாழ கி.மு (பொ.ஆ.மு) 300 முதல் கி.பி. (பொ.ஆ) 300. வரையிலான சங்க இலக்கியங்களில் முக்கிய ஆதாரங்களாக விளங்குவதுடன் அக்கால சமுதாயம், பொருளாதாரம், பண்பாடு மற்றும் அரசியலை பிரதிபலித்திருக்கின்றன. சங்கப்பாடலின் வகைப்பாட்டியலில் அகம் (அன்பு சார்ந்து இருத்தல்) மற்றும் புறம் (போர், நன்மை மற்றும் தீமை, சமூகம், நீதி மற்றும் முடியரசு) போன்றவற்றால் தமிழ் அரசியல் முறைமை பற்றி கூறியிருக்கின்றன. சங்க இலக்கிய புத்தகங்கள் (எட்டுத்தொகை) எட்டு நூல் திரட்டு ஆகும், அவையாவன:

1. **நற்றிணை**
2. **குறுந்தொகை**
3. **ஐங்குறுநூறு**
4. **பதிற்றுப்பற்று**
5. **பரிபாடல்**
6. **கலித்தொகை**
7. **அகநானூறு**
8. **புறநானூறு,**

இவை தவிர மேலும் ஒன்பதாவது குழுவாக விளங்கும் பாட்டுகளான பத்துப்பாட்டும் காணப்பட்டது. ஆரம்ப காலத்தில் தொல்காப்பியத்தின் முதல் இரண்டு புத்தகங்களும் தமிழ் இலக்கணமாகக் கருதப்பட்டதும் இக்காலக்கட்டத்தில் தான் என்பது நினைவு கூறத்தக்கதாகும்.

சங்க இலக்கியங்களுக்கு பிறகு சேகரிக்கப்பட்ட பிரபலமான நூற்கோவை /பாடல் திரட்டு என்பது “கீழ்கணக்கு“ என அழைக்கப்படுகிறது. இப்பதினெட்டு நூல்களின் ஒரு பகுதிதான் மிகவும் பிரபலமான சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பதினெட்டு சிறிய நூல்கள் (பதிணென் கீழ்க்கணக்கு, இது திருக்குறளையும் உள்ளடக்கியதாகும்) அக்காலகட்டத்தில் எழுதியதாகும். பிரபந்த இலக்கியம் பல்வேறு வகையான பாடல்களைக் கொண்டிருந்தது அவை: “கோவை”, என்பது குறிப்பிட்ட கருத்திலான வரிகளைக் கொண்டிருப்பதுடன் (பொதுவாக அரசன் மற்றும் வீரத்தை குறிப்பிடுதல்) மேலும் “பரணி” என்பதற்கும் வழி வகுக்கிறது. இது பாரம்பரியத்தின் சிறந்த எடுத்துக்காட்டாக பாண்டிக்கோவை, நந்திக்கலம்பகம் மற்றும் கலிங்கத்துப் பரணி அகியவற்றைக் குறிப்பிடலாம்

பண்டைய கால தமிழ் இலக்கியங்களை திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை பல சங்க கால அரசியலின் தன்மை, சமுதாயம் மற்றும் பண்பாட்டினைப் பற்றிய ஆழ்ந்த நுண்ணறிவுடன் படைக்கப்பட்டு இருந்தன. தமிழ் மொழியானது தமிழ் அடையாளம், பண்பாடு, பாரம்பரியம் மற்றும் மரபுகளின் அடிப்படையாக உள்ளதாகும். நிலம், புவியமைப்பு, ஆட்சியாளர்கள் மற்றும் தலைவர்களால் வேறுபட்டு இருந்தாலும் தமிழ் பேசும் பகுதிகளில் தமிழரின் நாடு மற்றும் தேசக் கூட்டமைவு என்பது இருந்தது. கலிங்க அரசன் காரவேலா கி.மு. (பொ.ஆ.மு) 165 காலத்தின் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்தான் 132 வருடமாக இருந்த “தமிழ் கூட்டமைவு“ என்பதை அழித்தார்“ என்று அக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. இதுபோன்றே தமிழ் அரசர்களின் கூட்டமைவின் பிறநாட்டு படையெடுப்பிற்கு எதிராக சண்டையிட்டதை சங்க கால இலக்கியமான அகநானூறு“ விவரித்துள்ளது. ஆனால் தமிழ் தேசியவாதம் என்பது காலனி ஆதிக்கத்தின் விளைவினால் தோன்றியது என்று சாதாரணமாக கூறிவிட முடியாது.

**கண்ணகியின் சிறப்புகளாக எரிக்மில்லர் கூறுவது:**
கண்ணகி என்பவர் ஓர் அறிமுகமற்ற ஊரில் ஆதரவிற்கு யாருமற்ற நிலையில் கைச்செலவிற்கு ஏதுமின்றி இருந்த சூழ்நிலையிலும் அரசவையில் தனது வழக்கினை உரைத்து வெற்றி கண்டது அனைவருக்கும் உத்வேகம் அளிக்கக்கூடியதாகும்.

நான் அவர் உலகளாவிய நீதி மற்றும் தனிமனித மாண்பிற்கும் அடையாளமாக திகழ்கிறார். இந்த கதை அவருடைய சிலப்பதிகாரம் எனப்படும் காவியத்தின் மூலமாக அறியப்படுகிறது. எனக்குத் தெரிந்தவரையிலும் கோவலன் மற்றும் கண்ணகிக்கு கிழக்கு கடற்கரையோரம் உள்ள பூம்பூகாரில் திருமணம் நடைபெற்றது. சில காலத்திற்கு பின்னர், கோவலன் மாதவி எனப்படும் நாட்டின் மங்கையுடன் வாழ்ந்து வரலானார். ஒரு வருடத்திற்கு பிறகு அவர் வீடு திரும்பினார். அவரும் கண்ணகியும் 250 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மதுரைக்கு சென்றனர். அங்கே அவர்கள் புதிய வாழ்க்கையைத் தொடங்கினர். கோவலன் நீதி நியாயமற்ற முறையில் பாண்டிய அரசரால் கொல்லப்படுகிறார். கோவலன் அரசியாரின் கால் சிலம்பைத் திருடியதாக பொய்யான முறையில் குற்றம் சாட்டப்படுகிறார். கண்ணகி அரசவைக்கு வந்து தன்னுடைய கணவன் நிரபராதி என்பதுடன் ஒன்றும் அறியாதவர் என்று வாதிட்டு உண்மையை நிருபிக்கிறார். அரசர் நீதி தவறியதற்காக “யானோ அரசன்; யானே கள்வன்“ என ஓலமிட்டவாறு தரையில் வீழ்ந்து மடிந்தார். பின்னர் கண்ணகி மூன்று முறை மதுரையை வலம்வந்து அரசன் நீதி தவறியதற்காக மதுரையையே எரிக்கின்றார். ஆனால் நல்ல மனிதர்கள், விலங்குகள் பாதிக்கப்படாமல் இருக்குமாறு அக்னி கடவுளை வேண்டுகிறார். அவரும் இதை ஏற்றுக்கொள்கிறார். பின்னர் மேற்கு தொடர்ச்சி மலைகளுக்கு சென்ற கண்ணகியை மக்கள் தெய்வமாக வழிபடுகின்றனர்.

எரிக்மில்லர் நாட்டுபுறவியலில் தன்னுடைய முனைவர் பட்டத்தை அமெரிக்காவில் உள்ள பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் பெற்றார். இவருடைய ஆய்வோடு தமிழ் குழந்தைகளின் பாடல், விளையாட்டு மற்றும் மொழியினைக் கற்றல் பற்றியதாகும். சிலப்பதிகாரத்தினை ஆராய்ச்சி செய்வதற்காக இவர் கண்ணகியின் அடியொற்றிய பூம்புகாரிலிருந்து மதுரை வரை நடை பயணத்தினை, குறிப்பாக அதிலும் மேற்குத் தொடர்ச்சி மலை வரை மேற்கொண்டார்.

தமிழ் தேசியத்தின் மூல ஆதாரங்கள் தமிழ் மொழி மற்றும் பண்பாட்டினுடைய வரலாற்றுடன் தொடர்புடைய பங்கு வகிப்பதாகும். இதனால் அரசியல் வரையறுக்கப்பட்டிருப்பதனை சங்க காலம் முதல் காணலாம்.

இங்கே அரசு கருத்தாக்கமும், லட்சிய அரசன் எனும் பதமும், கிரேக்கத்தில் நில எல்லைகளில் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்த நகர அரசை போன்று இருந்தது. பண்டைய தமிழ்நாடு என்பது தமிழகம் என்று அழைக்கப்பட்டது. இது மேற்கு மலையைச் சார்ந்த திருப்பதியிலிருந்து கன்னியாகுமரியின் நுனிவரை உள்ளடக்கியதாகும். இந்த நிலமானது பாரம்பரியமாக ஐந்து புவியியல் சார்ந்த பிராந்தியமாக (திணை) இயற்கைத் தன்மையுடன் பிரிக்கப்பட்டுள்ளது. மலையை சார்ந்த பகுதி (குறிஞ்சி), காடுகளை சார்ந்த பகுதி (முல்லை), வயல் சார்ந்த பகுதி (மருதம்), கடல் சார்ந்த பகுதி (நெய்தல்), மணல் சார்ந்த பகுதி (பாலை) ஆகியன ஐந்திணைகள் ஆகும்.

தமிழ் மொழி பேசும் பகுதிகள் சோழர்கள் (தலைநகரம் உறையூர்), பாண்டியர்கள் (தலைநகரம் மதுரை), சேரர்கள் (தற்போதைய கொங்கு நாடு மற்றும் கேரளா), பல்லவர்கள் (தலைநகரம் காஞ்சிபுரம்) என பலவாறு பிரிக்கப்பட்டு இருந்தது. தமிழ்நாடு பல்வேறு அரசர்கள் மற்றும் குறுநில மன்னர்களால் ஆளப்பட்டது. கடை ஏழு வள்ளல்கள் புலவர்களுக்கு வாரி வழங்கியதை பற்றி சங்கபுலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். கபிலர் மற்றும் ஔவையார் கடை ஏழு வள்ளல்களான ஆய், பாரி, ஓரி, காரி, அதியமான், பேகன் மற்றும் நல்லியை பற்றி குறிப்பிடுகின்றனர். ஓர் சிறந்த அரசனின் குணங்களாக அவன் பாகுபாடற்ற நீதி வழங்கும் அரசனாகவும், மக்களிடத்தில் அன்பு உடையவனாகவும் போர்களத்தில் எதிரிகளிடம் வீரத்தை வெளிப்படுத்துபவனாகவும் இருக்க வேண்டும் என குறிப்பிடப்படுகிறது.

சபை அல்லது மன்றம் மன்றம் எனப்படுவது அரசன் தலைமையேற்று நடத்தும் நாட்டின் உயர்ந்த நீதிமன்றம் ஆகும். இதை போலவே ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு மன்றம் உண்டு. அது அந்த கிராமத்தின் பொது இடத்தில் கூடி அந்த கிராமத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கும். போர் வீரர்கள் மிகவும் மதிப்புடன் நடத்தப்பட்டனர். போரில் அவர்கள் இறக்க நேரிட்டால் அவர்களின் நினைவாக, நினைவுத்தூண் ஒன்று ஊரில் எழுப்படும். ஆனால் போரில் ஒருவீரன் தன் பின்புறம் காயப்பட்டு அதனால் இறந்தால் சங்க இலக்கிய காலங்களில் அது அவமானமாக கருதப்படும்.

போரின் நல்ல நடைமுறைகள் பலவற்றை சங்க இலக்கியங்கள் நிறைய தெரிவிக்கின்றன. புறநானூறு என்பது ஒரு சங்க இலக்கியம் ஆகும். இது பாண்டிய அரசனை புகழ்கிறது. அவன் பெண்கள், குழந்தைகள், நோயாளிகள் மற்றும் வயோதிக மக்கள், கால்நடைகள் இவைகள் அனைத்தையும் பாதுகாப்பான இடங்களில் போர்காலங்களில் இடம் பெயரச் செய்தான். நீதி என்பது அரசு மற்றும் அரசனின் மனசாட்சிக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். நீதி என்பது அரசனின் ஆட்சியில் ஒரு முக்கியமான கூறாக இருக்க வேண்டும். ஒர நல்ல அரசன் எந்த சூழ்நிலையிலும் நீதியை தியாகம் செய்யக் கூடாது. அரசனின் நல்லாட்சி மற்றும் நற்சசெயல்கள் எப்பொழுதும் நிலையான நீடித்த புகழை கொண்டு வரும். இவைகள் தான் முக்கிய அரசியல் கொள்கைகளாக சங்க காலங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னராட்சி முடியாட்சி தன்மையைச் கொண்டிருந்தாலும் அரசனின் சட்டப்படியான முடிவுகள் மக்களின் ஒப்புதலைச் சார்ந்தே இருந்தது. அரசன் மக்களின் ஆதரவு இருக்கும் வரை சட்டப்படியான முடிவுகளை அனுபவிப்பவராகவும் அதே சமயம் அவற்றை தவறாக பயன்படுத்தினால் மக்கள் ஆதரவை இழக்கவும் நேரிடும். சங்க இலக்கியம் (பட்டினப்பாலை) பல்வேறு வகையான வரிகளைப் பற்றி கூறுகின்றது. அவைகள் சுங்கவரி, வருமானவரி, பொருள் மீதுள்ள வரி மற்றும் பல வரிகள் அரசின் வருவாய்களை பெருக்கும் ஆதரமாக கூறப்பட்டுள்ளன. எளிமையான நிர்வாக கட்டமைப்பின் வழியே (அமைச்சர்கள், அதிகாரிகள்) தமிழ் அரசர்கள் தமிழகத்தை ஆட்சி புரிந்தனர் வெளிநாட்டு வர்த்தகம், சுங்க வரி முதலானவை அரசின் வருவாயில் பெரும் பங்கு வகித்தன. பாண்டியர் கல்வெட்டில் முத்துக்குளித்தல் (கலாத்திகர்) பற்றியும் மற்றும் முதன்மை எழுத்தர் (கண்த்திகன்) பற்றியும் கூறப்பட்டுள்ளது. சோழர்களின் கொடியிலும் மற்றும் நாணயங்களிலும் புலி சின்னத்தை பொறித்து இருந்தார்கள், சேரர்கள் வில் மற்றும் அம்புகளையும், பாண்டியர்கள் மீன் சின்னத்தையும் மற்றும் பல்லவர்கள் சிங்கத்தை சின்னமாக பெற்று இருந்தனர்.

ஒற்றர்கள் மூலம் உளவு பார்த்தல் என்பது நிறுவனப்படுத்தப்பட்டு நாட்டின் முக்கியமானதொரு அங்கமாக இருந்தது. நாட்டின் நிலைத்தன்மையும் அமைதியும் இதன் செயல்பாட்டை பொறுத்தே அமைந்திருந்தது. நிறுவனப்படுத்தப்படாமல் இருந்தாலும் அடிமைகள்

இல்லாமலில்லை அடிமைகளை படையெடுத்தபின் பிடிப்பதும், அடிமைகளை வர்த்தகத்திற்கு பயன்படுத்தவும், பரிசுக்காக பரிமாற்றம் செய்யவும் அரசாட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது. குறிப்பாக கட்டுமானம் மற்றும் கட்டிட வேலைகளுக்கு அடிமைகள் பயன்படுத்தப்பட்டனர்.

பண்டைய தமிழில் சாதி முறை என்பது காணப்படவில்லை. வர்க்க கொள்கை மற்றும் வர்க்க கொள்கை மற்றும் வர்க்க கருத்து வேறுபாடுகள் அவரவர்களின் தொழில் சார்ந்த முறையில் காணப்பட்டன. சங்ககால சமுதாயத்தில் சாதிய முறை என்பது வெளியிடத்திற்குரியதாகவும் மற்றும் அறியப்பட்டாததாகவும் இருந்தது. சமுதாயப் பிரிவுகளை வர்க்கத்தின் அடிப்படையில் சங்க புலவர்கள் தரம் பிரித்தினர்.

அவைகள்: (குடி) துடியன், பாணன் மற்றும் கடம்பன் அல்லது அரசர் (ஆட்சிபுரிபவர்), வைசியர் (வர்த்தகர்கள்) மற்றும் வேளாளர் (விவசாயிகள்) என்று குறிப்பிட்டுள்ளனர். தகுதிநிலைகளில் காணப்பட்ட வித்தியாசங்கள் தவிர்க்க முடியாததாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் வர்ண முறை எனும் சாதி அமைப்பு சங்ககால சமுதாயத்தில் சிறிதளவே காணப்பட்டன.

பண்டைய தமிழ் சமூக அமைப்புகளில் மனுதர்மம் மூலமாக சட்டமாக்கப்படவில்லை. ஆரம்பக்கால ஆரிய-பிராமண சாதிய அமைப்புகள் சங்க காலத்தில் குறிப்பிடப்படவில்லை. இதுபோன்ற அமைப்புகள் சங்க காலத்திற்கு பிறகே தோன்றின. பண்டைய தமிழ் மதங்கள் நாட்டுபுற கலையை சார்ந்தே இருந்தது. இயற்கையை வழிபடுதல் மற்றும் இயற்கை காரணிகளே பொதுவாக காணப்பட்டன. முருகக்கடவுளை வழிபடுவதே தமிழ்நாடு பழங்குடியினரின் வழிபாட்டு மரபு ஆகும். முருகக் கடவுளை போராளிகளின் / மாவீரர்கள் கடுவுளாக நாட்டுப்புற கலாச்சாரமாக செயல்படுத்தினர். உலகில் பற்றுடைய கடவுளாக தமிழ் - திராவிட மரபுகளின் கட்டுரைகளில் வேர் ஊன்ற ஆரம்பித்தது. கி.பி. (பொ.ஆ) ஆறாம் நூற்றாண்டுக்கு பிறகே தமிழ் மற்றும் சமஸ்கிருதம் போன்ற எழுத்துகள் தோன்ற ஆரம்பித்தது.

சமஸ்கிருதமயமாதல் பொதுவாக பொது வெளிக்கு பரவ ஆரம்பித்தது. பிராமணர்கள் அரசனுக்கு ஆசி வழங்குபவர்களாகவும், மற்றவர்களை விட உயர்ந்தவர்களாகவும் கருதும் மனப்பாங்கு தொடங்கியது. இக்கால கட்டத்திற்கு பின் பிராமணர்களிடம் ஆசி பெறுவது சட்டபூர்வ வழியாக துங்கியது. சமஸ்கிருதமயமாதலுடன் சேர்ந்து, வேத சடங்குகள், மனு கொண்டு வந்த வர்ணாசிரமம் அமைப்பு போன்றவை, எற்கனவே தொழில் ரீதியாக பிரிக்கப்பட்டு இருந்த திராவிட சமூகத்தை மேலிருந்து கீழாக சாதி ரீதியாக பிரித்தது.

மரபு வழி கொள்கையும் இயற்கை வழிபாடும் தமிழ் மன்னர்களிடம் பொதுவாக காணப்பட்டது. முடியாட்சியும் கலாச்சார மையத்திலிருந்து அதிகார மையத்தை நோக்கி நகர்ந்தது. இதனால், சங்க காலத்துக்கு பிந்தைய காலத்தில் அரசனின் அதிகாரங்கள் அதிகரித்து நாட்டின் மொத்த அதிகாரமும் பெற்ற ஒரே அமைப்பாக அரியனை உயர்ந்தது.

அரசுரிமையானது புனிதத் தன்மையுடையதாகவும், மரபு வழியானதாகவும் பல்லவர்கள் கூறினர். பல்லவர் காலத்தில் வட இந்தியாவில் இருந்த ஆரிய கலாச்சாரம் தமிழ்நாட்டில் ஊடுருவியது. இரண்டு கலாச்சாரங்களிலும் உள்ள கருத்துக்கள், அமைப்புகள், சில ஒன்றிணையும் முரண்பட்ட சில வழக்கொழிந்து போகவும் இந்த ஊடுறுவல் வழி வகுத்தது. இந்த கலப்பின் விளைவாக தமிழ் பக்தி கலாச்சாரம் தோன்றியது.

பெண்கள் மிகவும் உயரிய மரியாதையுடன் நடத்தப்பட்டனர் மற்றும் இவர்கள் அரசர்களுக்கு பாதுகாவல் மற்றும் பல்வேறு வகையான பணிகளையும் செய்தனர். ஆனால் அதிகாரங்கள் அனைத்தும் ஆண்களிடம் மட்டுமே இருந்தது. பெண்கள் பொது அவையில் பங்கேற்கலாம். ஆனால் ஆண்களே நிர்வாகிகளாகவும் மற்றும் ஆட்சியாளர்களாகவும் இருந்தனர். பெண்கள் சமூக சடங்குகளில் முக்கிய பங்கு வகித்தனர். மேலும் மரபு வழி உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் ஆண்களிடம் இருந்தாலும், குடும்பத்தில் பெண்ணின் பங்கு முக்கியமானதாக இருந்தது.

தமிழகச் சமூகத்தில் பெண்களின் பங்கை பற்றி விவாதிக்கையில் ஔவையார் பற்றி குறிப்பிடுவது அவசியமாகிறது. (ஔவையார் என்றால் மதிப்புக்குரிய பெண் என்று பொருள்) தமிழ் இலக்கியத்திற்கு எந்த பெண்மணிகளெல்லாம் முக்கிய பங்களித்தனரோ,

அவர்கள் ஔவையார் என்று பட்டப்பெயரிட்டு அழைக்கப்பட்டனர். வெவ்வேறு காலத்தில் வாழ்ந்த ஆறு பெண் தமிழ் புலவர்களுக்கு இப்பட்டப்பெயர் வழங்கப்பட்டது.

சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையாரும் மற்றும் சோழர்களும் சிறந்த சிறப்புத்தன்மை வாய்ந்தவர்களாக கருதப்பட்டனர். இலக்கியம், காலாச்சாரம், உலகளாவிய அறநெறி, அரசியல் தன்மை, போர், அமைதி மற்றும் இராஜதந்திரம் போன்றவற்றில் இவர்கள் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தினர். இந்த ஔவையார் ஒன்றாம் மற்றும் இரண்டாம் நூற்றாண்டு (பொ.ஆ) காலத்தில் வசித்தவர். இவர் அதியமானின் அவையில் இருந்தார். இவர் திருவள்ளுவர் மற்றும் கபிலரின் சம காலத்தவர் ஆவார். நற்றினை குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு இவற்றில் குறிப்பிடத்தக் பங்களிப்பை செய்துள்ளார். இவர் சிறந்த ஒரு தூதராகவும் இருந்தார். அதியமானுக்காக பலமுறை பல அரசர்களிடம் தூதுவனாக சென்றுள்ளார். அதியமான் அவையில் புலவராகவும், அதியமானின் உற்ற தோழராகவும் இருந்தார். தன் தூது திறமையின் மூலம் போர்களைக் கூட இவர் தவிர்த்துள்ளார்

ஒரு முறை காஞ்சியை ஆண்ட தொண்டைமான், அதியமான் ஆண்ட தகடூரை தாக்கி போர்புரியும் எண்ணத்துடன் இருந்தான் இதை அறிந்த ஔவையார் காஞ்சி சென்று தொண்டைமானை சந்தித்து பின் வருமாறு கூறினார்.

”தொண்டைமான் அரசரே உங்களுக்கும் அதியமானுக்கும் தான் எவ்வளவு வேறுபாடு உங்களது ஆயுதக்கிடங்கில் ஆயுதங்கள் சுத்தமாகவும் பளபளப்பாகவும் நெய் பூசப்பட்டு அழகாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஆனால் பாவம் அதியமானின் ஆயுதங்கள் உடைந்தும், ரத்தக்கரை படிந்தும், பட்டறைகளில் பழுது நீக்கும் பணியிலும் உள்ளன” என்றார். தொண்டைமானை புகழ்வது போல், ஔவையார் அவனது போர் அனுபவமின்மையும், அதியமானின் தொடர்ந்த போர்களையும், போர் திறனையும் தெரிவித்து போர் வந்தால் தொண்டைமான் வெற்றி பெறுவது கடினம் என்பதையும் உணர்த்தினார்.

சோழர் காலத்தில் பத்தாம் நூற்றாண்டில் இன்னொரு புகழ்பெற்ற ஔவையார் இருந்தார்.

இவரே குழந்தைகளுக்கான நீதி கதைகளையும் ஆத்திச்சூடியையும் கொன்றைவேந்தனையும் எழுதியவர். சற்றே வளர்ந்த குழந்தைகளுக்காக மூதுரை மற்றும் நல்வழி என்ற இரண்டு நூல்களை இவர் எழுதியுள்ளார்.

**திருக்குறள்:**

நம் பண்டைய இலக்கியங்கள் நம் கலாச்சாரம் மற்றும் இலக்கிய மரபுகளை பற்றி குறிப்பிடுகிற அதே வேளையில் நம் தமிழ் கலாச்சாரத்தின் வரலாற்றை குறிப்பாக தமிழ் சமூக அமைப்பு மற்றும் மத நம்பிக்கைகள். வாழ்வாதாரம், விதிமுறைகள், தொழிற்கல்வி மற்றும் பெண்களின் தகுதிநிலை, திருமணம், பாலினம், வர்க்க கட்டமைப்பு, சாதி அமைப்பின் தோற்றம், அமைதி, ஆட்சி முறை, கடற்படை, மீன்பிடித்தொழில் பாரம்பரியம், வர்த்தகம், வணிகம், கப்பல் கட்டும் பணி, மற்றும் கடற்பயணங்கள் பொருளாதாரம், நிலம், அமைப்பு, விவாசயம், கலை, நாட்டியம், பாடல்கள், இசை, கட்டடக்கலை மற்றும் அயல் நாடுகளுடன் உறவு மற்றும் தொலை தூர தேசங்களைப் பற்றியும் கூறுகின்றன.

**அறிமுகம்:**

அரசியல் என்பது சமுதாயத்தின் நடைமுறைச் செயல்பாடுகளை அப்படியே கிரகித்துக் கொள்வதற்கு மாறாகச் சமுதாயத்தின் விழிப்புணர்வை மாற்றுவதற்கான நடவடிக்கை ஆகும். இத்தகைய நடவடிக்கைகள் ஏழ பல காரணிகள் உள்ளன. சமூக, பொருளாதார, தொழில்நுட்ப வளர்ச்சிக் கட்டங்களில் பழைய சிந்தனைகளால் இடையூறுகளுக்கு உள்ளாகும். சமூகத்தில் புதிக காரணிகள் நெருக்கடிகளை உருவாக்குகின்றன. இவை சமூகத் தளத்தில் புதிய சிந்தனையாளர்களை தோற்றுவிக்கின்றன. இவர்களில் நீண்டகாலத் தாக்கங்களை உருவாக்குபவர்கள் அரசியல் சிந்தனையாளர்களாக உருவாகிறார்கள்.

**அரசியல் சிந்தனையாளருக்கான வரையறைகளாக கீழ்க் காண்பவற்றைக் கூறலாம்:**

- **சமூகத்தில் சமூக மாற்றத்தை ஏற்படுத்திய கொள்கைகள், நிகழ்வுகளுக்குக் காரணியாக இருத்தல்; மக்களின் பொதுப் புத்தியில் மாற்றத்தை உருவாக்குதல்.**

❖ **சமூகத்தில் திருப்புமுனை ஏற்படுத்திய அரசியல் முடிவுகளை எடுத்தல்.**

❖ **சமூகத்தின் பல பிரிவுகளைச் சேர்ந்த பயனாளர்களுக்கும் பலன்கள் அளித்த அரசு முடிவுகளுக்குக் காரணமாக இருத்தல்.**

❖ **சமூகத்தின் பல பிரிவு மக்களின் முன்னேற்றத்துக்குக் காரணமான அரசியல் கருத்துகளை பொதுக் கருத்தாக உருவாக்குதல்.**

அரசியல் சிந்தனையாளர்களின் நடவடிக்கைகள் புதிய அரசியல் சிந்தனைகளுக்கு ஆதரவாக மக்களின் ஈடுபாட்டினையும் பகுத்தறிவினையும் உருவாக்குகின்றன. சமகால அரசியல் களங்களில் அவர்கள் ஊடாட்டம் கொள்வதால் புதிய சமூக விழுமியங்கள் உருவாகின்றன. அடுத்த காலகட்டத்துக்கு அறைகூவல் விடுக்கும் அரசியல் மாற்றத்துக்கான அரசியல் முடிவுகளை அவர்கள் மேற்கொள்கிறார்கள். அவர்களது அரசியல் முடிவுகள் அநேக மக்களின் அன்றாட வாழ்வில் நீண்டகால மாற்றங்களை உருவாக்குகின்றன.

நவீன அரசியல் கருத்தாக்கங்களின் படி தேசிய அரசியல் சிந்தனையாளர்கள், பொதுவுடைமைவாத் அரசியல் சிந்தனையாளர்கள், திராவிரடப் பண்பாட்டு

திருவள்ளுவர் தம் நூலின் முதல் பகுதியாகிய அறத்துப் பாலில் அறத்தின் சிறப்பைத் திடமாக எடுத்துரைத்துக் கற்பவரின் நெஞ்சில் பதியுமாறு செய்கிறார். இங்கே நெறி தவறாத ஓர் அறவோராக விளங்கி, உணர்ச்சி வயப்படாமல், கற்பனைக்கு இடம் தராமல், நடுநிலையில் நின்று தாம் உணர்ந்த உண்மைகளைத் தெளிவாக விளக்குகிறார். இரண்டாம் பகுதியாகிய பொருட்பாலில் உலக வாழ்க்கையின் இயல்புகளையும் நடைமுறைகளையும் அலசி ஆராயும் ஓர் அனுபவம் நிறைந்த அறிஞராகத் திகழ்கிறார் பல காலத்தும் பல துறைகளிலும் கண்டும் கேட்டும் அறிந்தவற்றை எல்லாம் தம் சிந்தனைத் திறத்தால் தெளிவாக உணர்ந்து வகைப்படுத்திக் கூறுகிறார். மூன்றாம் பகுதியாகிய காமத்துப் பாலில் படைப்புத் திறன் மிக்க ஒரு கவிஞராக நின்று குறள் மணிகளை இயற்றியுள்ளார். தாம் மறைந்திருந்து, நாடகப் போக்கில் காதலனையும் காதலியையும் பேசச் செய்துள்ளார்.

**பொருட்பாலின் ஏழு பகுதிகள்:**

**"அரசியல் ஐந்து: அமைச்சியல் ஈரைந்து;**
**உருவவல் இரண்டு; ஒன்று ஒண்கூழ் - இருவியல்**
**திண்படை; நட்புப் பழனேழ்; குடிபதின்மூன்று**
**எண்பொருள் ஏழாம் இவை".**

என்பது போக்கியார் என்னும் புலவர் பெயரால் அமைந்த பழைய வெண்பா. இதன் படி, பொருட்பால் ஏழு பகுதிகளை உடையது அரசியல் 25, அமைச்சியல் 10, அரண் 2, கூழ் 1, படை 2, நட்பு 17, குடி 13 ஆக பொருட்பாலின் எழுபது அதிகாரங்கள் ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

"படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" (குறள் : 381)

என வரும் பொருட்பாலின் முதல் குறட்பாவிலேயே இந்த வேறுபாட்டிற்கான அடிப்படையும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இக்குறட்பாவில் உள்ளவாறு அரசாங்கம் (அரசின் அங்கம்) என்பதன் அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, குடி என்னும் ஆறு அங்கங்களையும் தனித்தனியே வகுத்து, இந்த ஆறு அங்கங்களையும் உடைய ஆட்சித் தலைவனைப் பற்றித் தனியே சில அதிகாரங்களில் கூறி ஏழு வகையாக வேறுபாடு செய்வது திருக்குறளின் அமைப்பு முறைக்கு ஏற்றதாக உள்ளது.

**அரசனது இயல்பு கூறும் இருபத்தைந்து அதிகாரங்கள்:**

பொருட்பாலின் முதலில் அரசனது இயல்பு கூறும் அரசியலை மிக விரிவாக இருபத்தைந்து அதிகாரங்களில் கூறியுள்ளார் திருவள்ளுவர். “இறைமாட்சி“ (அதிகாரம் 39) தொடங்கி “இடுக்கண் அழியாமை“ (அதிகாரம்ட 63) வரையிலான இருபத்தைந்து அதிகாரங்களில் “அரசர்“, “வேந்தர்“, “நிலன் ஆண்டவர்“, “மன்னவர்” முதலான பெயர்களால் நாற்பத்தாறு முறை அவர் ஆட்சித் தலைவனைச் சுட்டிக் கூறியிருப்பது நோக்கத்தக்கது. கல்வி வேண்டும் (40), கேள்வி வேண்டும் (42), அறிவு வேண்டும் (43), குற்றம் கடிந்த வாழ்வு வேண்டும் (44), பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டும் (45), சிற்றினம் சேராமல் வாழ வேண்டும் (46), தெரிந்து (அராய்ந்து) செய்யும் இயல்பு வேண்டும் (47), வலியும் காலமும் இடமும் அறிந்து வினை செய்யும் திறம் வேண்டும் (48 – 50),தெரிந்து தெளியும் ஆற்றல் வேண்டும் (51), தெரிந்து வினையை ஆளும் வன்மை வேண்டும் (52), சுற்றம் தழுவ வேண்டும் (53), மறதி (சோர்வு) இல்லாமல் கடமைகளைச் செய்ய வேண்டும் (54), செங்கோன்மை (நேர்மை) வேண்டும் (55), கொடுங்கோன்மையை வெறுக்க வேண்டும் (56), வெருவந்த (பிறர் அஞ்சி நடுங்கும் செயல்கள்) செய்யாமை வேண்டும் (57), கண்ணோட்டம் (இரக்கம்) வேண்டும் (58), ஒற்று (உளவு) ஆளும் முறை வேண்டும் (59), ஊக்கம் வேண்டும் (60), சோம்பலை ஒழிக்க வேண்டும் (61), முயற்சி வேண்டும் (62), இருக்கண்ப் (துன்பத்தைப்) பொருட்படுத்தாத உறுதி வேண்டும் (63), இவைகளே அரசியலில் ஆட்சித் தலைவர்களுக்குத் திருவள்ளுவர் வலியுறுத்தும் இயல்புகள். இவை யாவும் நன்மக்கள் எல்லோருக்கும் வேண்டும் பண்புகளே என்பது நெற்றித் திலகம்.

**குடியாட்சிக் காலத்திற்கும் பொருந்தி வரும் அறிவுரைகள்:**

அரசனைப் பற்றியும், அரசியல் அமைப்பினைப் பற்றியும் திருவள்ளுவர் பொருட்பாலில் கூறியுள்ள கருத்துக்கள் இன்றும் பொன் போல் போற்றத்தக்கனவாக விளங்குகின்றன. திருவள்ளுவர் வாழ்ந்த காலம் முடியாட்சிக்காலம். எனினும் அந்தக் காலத்தில் அவர் அரசனுக்குச் சொன்னவைகளாக அமைந்த அறிவுரைகள், இன்று குடியாட்சி முறையில் உள்ள தலைவர்களுக்கும் பொருந்தும் நன்மொழிகளாக உள்ளன. திருவள்ளுவர், அரசு எப்படி இருக்க வேண்டும் என்று முடியாட்சி எங்கும் பரவியிருந்த காலத்திலேயே அழகாக எடுத்துக்காட்டியிருக்கிறார்.

திருவள்ளுவர் காட்டுகின்ற அரசு எந்தக் காலத்திற்கும், எந்த அமைப்பிற்கும் பொருத்தமாகக் காணப்படுகிற நிலையினை நாம் காண்கின்றோம். அவருடைய அரசியல் கருத்துக்கள் எந்தக் காலத்திற்கும் எந்த அமைப்பும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சிறப்பினைப் பெற்று விளக்குகின்றன.

**மக்கள் நல அரசு:**

சுருங்கக் கூறின், திருவள்ளுவருடைய அரசியல் அமைப்பு ஒரு “மக்கள் நல அரசு“ (Welfare State) அடிப்படையில் அமைந்தது எனலாம் (திருக்குறளில் அறிவுத் துறைகள், பக்கம் 114 : 118) என்ற குறப்பாவில், அரசு குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, அரசனாகப் பொறுப்பு ஏற்றால் மட்டுமே ஒருவன் அரசனாகச் சிறக்க முடியாது“ என்னும் கருத்தியலைத் தெள்ளத் தெளிவாகப் பறைசாற்றியுள்ளார் திருவள்ளுவர். ஒரு மன்னன் நீதி நெறி வழுவாமல் தன் கடமையைச் சரிவரச் செய்தால் - குடிமக்களைக் காப்பாற்றினான் என்றால் - அவன், “இறை என்று வைக்கப்படும்“ - “முறை செய்து காப்பாற்றும்” அவனை மக்கள் காணும் கடவுளாகவே கருதுவார்கள் என்கிறார் அவர். மன்னனைக் கடவுளாக நினைத்த ஒரு காலக்கட்டத்தில், “நீ ஒன்றும் கடவுள் அல்ல, நல்ல வண்ணம் நடந்தால், நீதி நெறி வழுவாமல் காப்பாற்றினால் உன்னை மக்கள் கடவுளாகவே கருதுவார்கள்“ என்று வள்ளுவர் கூறியிருப்பது, ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. இக்கருத்து, முடியாட்சிக் காலத்திற்கு மட்டுமின்றி, குடியாட்சி மலர்ந்துள்ள இக்காலக்கட்டத்திற்கும் பொருந்தி வருவதே.

திருவள்ளுவரின் கண்ணோட்டத்தில் “அறம் வழுவாது, தீமைகளை நீக்கி, மறம் வழுவாது, மானம் காப்பது அரசு“ ஆகும்.

”அறனிழுக்கா தல்லாவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு” (குறள் : 384)

என்னும் குறட்பா இவ்வகையில் கருத்தில் கொள்ளத்தக்கது.

“மன்னர் எவ்வழி மக்கள் அவ்வழி“. நாடாளும் மன்னன் தனது குடிமக்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டியவன் ஆவான். அவன் ஒருவன் தீய வழியில் நடந்தால், மற்றவர்களுக்கு அதுவே தூண்டுகோல் ஆகிவிடும். அவன் தலைவனாக இருப்பதால், அவனுடைய ஒழுக்கம் மற்றும் தனிவாழ்வு பற்றிய செய்திகள் நாடெங்கும் பரவுதல் எளிது. ஆகவே, அவனுக்கு அறநெறி கட்டாயம் வேண்டும் என்று திருவள்ளுவர் வலியுறுத்தியுள்ளார். மானம் வேண்டும் என்று கூறும் போதும், தனிவாழ்க்கை பற்றிய மான உணர்ச்சியைக் குறிப்பிடாமல், “மறன் இழுக்கா மானம்“ என வீரத்திற்கு ஏற்புடைய மானத்தைக் குறிப்பிட்டு, நாட்டின் மானமே தன் மானமாகக் கொண்டு மன்னன் வாழ்க்கை நடத்த வேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

“செங்கோன்மை“ அதிகாரத்திலும் நல்லாட்சி பற்றி எக்காலத்திற்கும் பொருந்தி வருகின்ற அடிப்படையான கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார் திருவள்ளுவர். உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை எதிர்பார்த்து வாழ்கின்றன அது போல், குடிமக்கள் எல்லாம் அரசனுடைய செங்கோலை – நல்லாட்சியை – எதிர்பார்த்து வாழ்கின்றனர் என்கிறார்.

**”வானோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்**
**கோல்நோக்கி வாழுங் குடி” (குறள் : 542)**

என்ற குறட்பாவில் ”மன்னவன் கோல்” என்னும் முடியாட்சிக் காலத்திற்கான தொடரின் இடத்தில், “நல்லாட்சி” என்ற பொதுவான இன்றைய மக்களாட்சிக்கு ஏற்ற தொடரைப் பொருத்திக் கொள்ளும் வகையில் பாடியிருப்பது திருவள்ளுவரின் தனிச்சிறப்பாகும்.

**”குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு” (குறள் : 544)**

என்னும் குறட்பாவும் திருவள்ளுவரின் காலம் கடந்து நிற்கும் பொதுமை நோக்கினைத் தெற்றெனப் புலப்படுத்தி நிற்கின்றது. “குடிமக்களை அன்போடு அணைத்துக் கொண்டு ஆட்சி புரியும் அரசனுடைய அடிகளைப் பொருந்தி நிற்குமாம் உலகம்”.

இக்கருத்தினையே “கொடுங்கோன்மை“ அதிகாரத்தில் வரும் குறட்பா ஒன்றில் எதிர்மறை வாய்பாட்டால் தெளிவுபடுத்தியுள்ளார் திருவள்ளுவர். கொடுமையைப் பொறுத்துக் கொள்ளமுடியாமல் துன்புற்றுக் குடிமக்கள் அழும் கண்ணீருக்கு மிகுந்த ஆற்றல் உண்டு அதுவே ஆற்றல் மிக்க படையாகி முறை செய்யாத மன்னனுடைய அரசையே அடியோடு அழித்துவிடும்.

**”அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே**
**செல்வத்தைத் தேய்க்கும் படை” (குறள் : 555)**

இங்கே அல்லற்பட்டு ஆற்றாது குடிமக்கள் அழும் “கண்ணீரை“, அழித்துவிடும் “படையாக“ உருவகம் செய்திருக்கும் திருவள்ளுவரின் சிந்தனை புதுவது; இதுவரை யாரும் கூறாதது. ஹிட்லர், முசோலினி, ஜார் முதலான உலகின் கொடுங்கோலர்களுக்கு எதிராகத் திருவள்ளுவர் இக்குறட்பாவில் அடித்திருக்கும் சாவுமணி வலிமையானது.

**வருவாயைப் பெருக்குவதற்கான நான்கு வழிவகைகள்:**

ஒரு மன்னன் தனது அரசின் வருவாயைப் பெருக்கும் துறையிலும் வரவு – செலவுத் திட்டத்திலும் (Budget) வல்லவனாக விளங்க வேண்டும். இவ்வகையில் திருவள்ளுவர் “இறைமாட்சி“ அதிகாரத்தில் கூறியுள்ள ஓர் அடிப்படையான அரசியல் சிந்தனை வருமாறு:

**”இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலுமட் வல்ல தரசு” (குறள் : 385)**

முதலாவதாக, ஒரு மன்னன் பொருள் வரும் வழிவகைகளைப் பெருக்க வேண்டும்; இதனை “இயற்றல்“ என்ற சொல்லால் குறிப்பிடுகிறார் வள்ளுவர். அடுத்து, அரசுக்குப் பல வழிகளிலே வந்த வருவாயைத் திரட்டி ஒன்று சேர்க்க வேண்டும்; இதனை “ஈட்டல்“ என்கிறார் வள்ளுவர். மூன்றாவதாக ஒன்று சேர்த்த பொருளை அழிவு நேராமல் காக்க வேண்டும் இது “காத்தல்“ ஆகும். மிக இன்றியமையாத நான்காவது படிநிலை, இயற்றியும் ஈட்டியும் காத்தும் வைத்துள்ளவற்றைச் செலவிடுவதற்கு உரிய துறைகள் இவை இவை, அவற்றிற்கான தொகைகள் இவ்வளவு இவ்வளவு என்று வகுத்துச் செலவு செய்தல் ஆகும். இதுவே “வகுத்தல்“ எனப்படும். இங்ஙனம் இயற்றல்,ஈட்டல், காத்தல், வகுத்தல் என்னும் நான்கு வழிமுறைகளில் அரசின் வருவாயைச் சேர்த்து, பகிர்ந்து, திட்டமிட்டு, பயன்படுத்திக் கொள்வது ஒரு சேர்ந்த மன்னனின் தலையாய கடமை ஆகும் என்கிறார் திருவள்ளுவர்.

இக்கருத்து இன்று அரசியல் மற்றும் பொருளியல் சார்ந்த அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சமதர்மம் அடிப்படைக் கருத்துக்களில் ஒன்றாகும். ஓர் அரசு தனது வருவாயை எவ்வாறு எல்லாம் சிறந்த முறையில் திட்டமிட்டுக் கையாள வேண்டும் என்ற முற்போக்கான கருத்தினை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நறுக்குத் தறித்தாற் போல் ”இயற்றல்,ஈட்டல், காத்தல், வகுத்தல் என நான்கே நான்கு சொற்களில் வடித்துத் தந்துள்ள பாங்கினை இங்கே நம்மால் காண முடிகின்றது.

அரசனுக்கென்று திருவள்ளுவர் பொருட்பாலில் கூறியுள்ள நல்லியல்புகள் நாட்டு மக்கள் எல்லோருக்கும் வேண்டியனவாக, பொருந்தக் கூடியனவாக இருக்கின்றன. அதனால்தான் அவர் அரசனுக்கென்று திருவள்ளுவர் பொருட்பாலில் கூறியுள்ள நல்லியல்புகள் நாட்டு மக்கள் எல்லோருக்கும் வேண்டியவாக, பொருந்தக் கூடியனவாக இருக்கின்றன. அதனால் தான் அவர் அரசனுக்கு என்று கூறத் தொடங்கிய “கல்வி“ முதலாக ”இடுக்கண் அறியாமை“ வரையிலான பண்பு நலன்களை “வாழும் உயிர்க்கு“ என்றும் “மாந்தர்க்கு” என்றும் பலர்க்கும் பொதுவாக்கிக் கூறியுள்ளார். திருவள்ளுவர் பொருட்பாலில் வலியுறுத்தியுள்ள அரசியல் சிந்தனைகளில் அறநெறியே முதன்மையான இடத்தினைப் பெறுகின்றது. அவரது அரசியல் அமைப்பில் மக்கள் நலமே அடிப்படையாக விளங்குகின்றது. வேறு சொற்களில் கூறுவது என்றால், முடியாட்சிக் காலத்தைச் சார்ந்த திருவள்ளுவரின் பெரும்பாலான அரசியல் சிந்தனைகள் இன்றைய குடியாட்சிக்கு காலத்திற்கும் ஏற்புடையனவாகத் திகழ்கின்றன.

திருக்குறள் ஓர் மதச்சார்பற்ற நூல்
திருக்குறளை நாம் படிக்க ஆரம்பித்த உடனேயே அது ஒரு மதச்சார்பற்ற நூல் என்ற உண்மையை நாம் அறியலாம். திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பௌத்த மதம், சீக்கிய மதம், ஜைன மதம், மற்றும் இந்த மதம் போன்ற பல மதங்கள் இருந்தன. அதைப்போலவே இறை மறுப்பாளர்களும் இருந்துள்ளனர். ஆனால் மதச்சார்பற்ற தன்மை எனும் கருத்தாக்கத்தை யாரும் அறிந்திருக்கவில்லை. வள்ளுவரே மத நம்பிக்கை உடையவர் தான். கடவுளைப் புகழ்ந்தே பத்து குறள்களை கொண்ட ஒரு அதிகாரத்தை படைத்துள்ளார். அவரும் ஒரு மதத்தில் இருந்திருக்கலாம். ஆனால் எந்த ஒரு மதத்துக்கும் ஆதாரமாக இந்நூல் இல்லை. குறிப்பாக சொல்வதென்றால் எந்த மதத்தைப் பற்றியும் குறிப்பிடக்கூட இல்லை.

**தேசியவாதம்:**
**சுப்ரமணிய பாரதியார் (1882 – 1921)**

ஜாதி மதங்களைப் பாரோம் - உயர் ஜன்மம் இத் தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே – அன்றி
வேறு குலத்தின் ராயினும் ஒன்றே
நாம் சாதி மதங்களைப் பார்க்க வேண்டாம். இந்த நிலத்தில் வாழும் அனைத்து மனிதர்களும் ஒன்றே அவர்கள் எந்த சாதியினரை சார்ந்திருந்தாலும் அல்லது எந்த வேதத்தை போதிப்பவராக இருந்தாலும் நாம் அனைவரும் ஒன்றே அது மனிதகுலம் ஆகும்.
சுப்ரமணிய பாரதியார்

சி. சுப்ரமணிய பாரதியார் தமிழகத்தின் தலைச்சிறந்த கவிஞர், சுதந்திரப் போராளி மற்றும் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவர் மகாகவி பாரதியார் என்று மிகவும்

போற்றப்படுகிறார். மகாகவி என்றால் மிகப்பெரிய கவிஞர் எனப்பொருள்படும் இவர் இந்தியாவின் தலைசிறந்த கவிஞராகக் கருதப்படுகிறார். இவருடைய பாடல்கள் தேசிய உணர்வைத் தூண்டி தேச விடுதலைக்காக மக்களைத் திரட்ட உதவியதுடன் தமிழகத்தில் இந்திய சுதந்திர போராட்டத்திற்கு ஆதரவாகவும் இருந்தன.

”நாம் ஆயிரம் பிரிவுகளாக வேண்டுமானாலும் பிரிந்து இருக்கலாம். ஆனால், எப்படி இருந்தாலும் அந்நிய படையெடுப்பை நியாயப்படுத்த முடியாது”.

பாரதி: ஓர் பாடலாசிரியர் மற்றும் ஓர் தேசியவாதி

தமிழ் இலக்கியங்களின் ஓர்புதிய சகாப்தமே சுப்ரமணிய பாரதியாரிடமிருந்து தொடங்கியுள்ளது எனலாம். இவருடைய பெரும்பாலான படைப்புகள் தேசபற்று, பக்தி மற்றும் மறைபொருள் பற்றியதாகும். பாரதியார் மிகவும் உணர்ச்சிப் பெருக்குள்ள கவிஞர் ஆவார். ”கண்ணன்பாட்டு” ”நிலவும் வான்மீனும் காற்றும்” ”பாஞ்சாலி சபதம்” போன்றவை பாரதியாரின் மிகச் சிறந்த படைப்புகளின் வெளிப்பாடுகளாகும்.

பாரதியாரின் ”பாஞ்சாலி சபதம்” என்பது ஓர் தலைசிறந்த படைப்பாகும். இது இந்தியாவை திரௌபதியாகவும், ஆங்கிலேயரை கௌரவர்களாகவும் சுதந்திர போராட்ட வீரர்களை பாண்டவர்களாகவும், உருவகப் படுத்தியிருந்தார். திரௌபதியின் போராட்டம் மூலமாக அவர் இந்திய தாய் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுள்ளதை மறைமுகமாக வெளிப்படுத்தினார்.

பாரதி ஓர் தேசியக் கவிஞராக கருதப்படுகிறார். இவருடைய பாடல்கள் தேசப்பற்று மிக்கதாக மக்கள் மத்தியில் போற்றப்பட்டுள்ளன. இதனால் மக்கள் ஈர்க்கப்பட்டு சுதந்திரப் போராட்டத்தில் மிகுந்த ஈடுபாடுடன் பங்கேற்று நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டனர். பாரதியார் நாட்டின் பெருமையை மட்டும் கூறாமல் சுதந்திர இந்தியாவைப் பற்றிய தெலைநோக்குப் பார்வையை கோடிட்டுக் காட்டுகிறார். இவர் 1908 ம் ஆண்டு ”சுதேச கீதங்கள்” எனப்படும். உணர்ச்சிமிக்க பாடல் தொகுப்பினை வெளியிட்டார்.

**ஓர் இதழாசிரியகராக பாரதியார்:**

பாரதியார் (பல வருடங்களைப்) தன்னுடைய வாழ்க்கையில் பத்திரிக்கையாளராக செலவிட்டார். பாரதி இளம் வயதில் தன்னுடைய வாழ்க்கையை ஓர் பத்திரிக்கையாளர் மற்றும் துணை ஆசிரியராக ”சுதேச மித்திரன்” என்ற பத்திரிக்கையில் 1904ஆம் ஆண்டு தொடங்கினர். 1906-ஆம் ஆண்டு மே மாதம் ”இந்தியா” எனப்படும் ஓர் புதிய நாளிதழ் தொடங்கப்பட்டது. இது பிரஞ்சு புரட்சியின் மூன்று முக்கிய முழக்கங்களான சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் போன்றவற்றை தனது குறிக்கோளாக அறிவித்தது. இது தமிழ் பத்திரிக்கை துறையில் ஓர் புதிய பாதையை ஏற்படுத்தியது எனலாம். இது புரட்சிகரமான புதிய முயற்சியாக தோன்றியது. தனது புரட்சிகரமான முனைப்புகளை வெளியிடுவதற்கு பாரதியார் அவர்கள் வார இதழை சிகப்புதாளில் அச்சிட்டு பிரசுரித்தார். அரசியல் கேலிச் சித்திரத்துடன் வெளியிடப்பட்ட தமிழ் நாட்டின் முதல் நாளேடு “இந்தியா“ என்பதாகும். இவர் மேலும் விஜயா என்கிற தமிழ் தினசரியின் அதன் பதிப்பாசிரியராகவும் இருந்து வெளியிட்டார். “பால பாரதா” என்கிற ஆங்கில மாத இதழையும், பாண்டிச்சேரியில் ”சூர்யோதயம்” எனும் உள்நாட்டு வார இதழை வெளியிட்டார்.

சுயராஜ்ய தினம்” கொண்டாடுவதற்காக 1908-ஆம் ஆண்டு சென்னையில் மிகப்பெரிய பொதுக் கூட்டத்திற்கு இவர் ஏற்பாடு செய்தார். ”வந்தே மாதரம்” ”எந்தையும் தாயும் ஜெய பாரத்” போன்ற பாரதியாரின் கவிதைகள் அச்சிட்டு இலவசமாக மக்களுக்கு வினியோகிக்கப்பட்டன.

சுப்ரமணிய பாரதியார் (டிசம்பர்) பதினோராம் நாளில் 1882-ஆம் ஆண்டு எட்டயபுரம் என்னும் கிராமத்தில் பிறந்தார். இந்த ஊர் தமிழ்நாட்டில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. இவருடைய குழந்தை பருவ பெயர் சுப்பையா ஆகும். இவரது தந்தையார் சின்னசாமி, தாயார் லட்சுமி அம்மாள் ஆவார்.

பாரதியார் ஏழு வயதில் தமிழ்க் கவிதைகளை எழுத ஆரம்பித்தார். தன்னுடைய பதினோராம் வயதில் அவருடைய படைப்புகள் மற்றும் திறமைகள் கற்றறிந்த அறிஞர்களால் புகழப்பட்டது. பதினோராம் வயதில் சுப்பையா அனைத்து பெருமக்கள் மற்றும் அறிஞர்கள்

கூடியிருக்கும் சபையில் ஓர் சவால் விட்டார். யாரேனும் என்னுடன் எந்தவித முன்னறிப்பு மற்றும் பயிற்சி இல்லாமல் எந்த தலைப்பில் வேண்டுமானாலும் பேச தயாரா? என சவால் விட்டார். இந்த போட்டி எட்டையபுர அரசவையில் ஓர் சிறப்பு அமர்வாக எட்டயபுர அரசரின் தலைமையில் நடைபெற்றது. சவாலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்பு “கல்வி” ஆகும். சப்பையா பேச்சுப் போட்டியில் வென்றார். இது சுப்பையாவின் வாழ்க்கையில் ஓர் திருப்பு முனையாக அமைந்தது. இந்த மறக்க முடியாத நிகழ்வுக்கு பிறகு “எட்டயபுர சுப்பையா“ என்று அழைக்கப்பட்ட அவர் “பாரதி“ என்றும் பிற்காலத்தில் பாரதியார் என்றும் மரியாதையுடன் அழைக்கப்பட்டார். “பாரதியார்“ என்ற பெயர் அனைவராலும் குறிப்பாக தேசவாதிகளாலும் உலகெங்கிலும் உள்ள கோடான கோடி தமிழப் பற்றாளர்களால் மரியாதையுடனும் நினைவு கூறப்படுகிறது.

ஜீன் 1897- இல் பாரதியாருக்கு பதினைந்து வயது நிரம்பியிருந்த போது செல்லமாளுடன் திருமணம் நடந்தது. இதன்பிறகு பாரதியார் காசிக்கு சென்றார். அங்கு தனது அத்தை குப்பாள் மற்றும் மாமா கிருஷ்ணசிவனுடன் இரண்டு ஆண்டுகள் இருந்தார். அங்கிருந்த போது தான் சமஸ்கிருதம், இந்தி மற்றும் ஆங்கில மொழியறிவினை பெற்றார். அகலாபாத் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் அவர் வெற்றி பெற்றார். காசியில் தங்கியருந்தது பாரதியின் ஆளுமையில் பெரும் மாற்றங்களை எற்படுத்தியது. முறுக்கு மீசை, சீக்கியர்களின் தலைப்பாகை மற்றும் வீறு கொண்ட நடையினை தனக்கே உரித்தானதாக்கினார். இத்தகைய வெளிப்படையான மாற்றங்களும் பாரதியாரிடம் ஏற்பட்டன.

”இந்தியா” என்கிற இதழின் பதிப்பாசிரியராக இருந்து செயல்பட்டதனால் பாரதியாருக்கு கைது ஆணைப் பிறப்பிக்கப்பட்டது. இதனால் நிலைமை மிகவும் மோசமானதால் 1908-ஆம் ஆண்டு பாண்டிச்சேரிக்கு செல்ல முடிவு எடுத்து அவர் அங்கே சென்றார். அந்த கால கட்டத்தில் பாண்டிச்சேரி பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. அங்கு பாரதியாரின் வாழ்வில் பல்வேறு சாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டன. இதன் மூலம் பல தலைவர்களை சந்திக்கவும், சுதந்திரப்போராட்டத்தில் ஆயுதமேந்திய இயக்கத்தின் தலைவர்களான அரவிந்தோ, லாலா லஜபதிராய் மற்றும் வி.வி. சுப்ரமணியம் ஆகியோரையும் பாண்டிச்சேரியில் தஞ்சம் புகுந்திருக்கும் பொழுது சந்தித்தார். மிகவும் ஆதாயத்திற்குரிய பாரதியாரின் வாழ்க்கை என்பது பாண்டிச்சேரியில் பத்து வருடம் அவர் தங்கியிருந்த காலமாகும். இவர் தமிழ் இளைஞர்களை ஒன்று திரட்டி தேசிய பாதைக்கு இட்டுச் சென்றார். பாரதியாரின் படைப்புகள் ஆங்கிலேய அரசுக்கு மிகவும் எரிச்சலூட்டின, இவரின் எழுத்துக்கள் மூலம் தாய் நாட்டுப்பற்றை தமிழ் இளைஞர்களிடம் விதைத்தார். பாரதியார் 1919-ஆம் ஆண்டு சென்னையில் ராஜாஜி வீட்டில் மகாத்மா காந்தியை சந்தித்தார். பாரதியார் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டிருந்த இந்தியாவிற்கு அருகில் 1918-ஆம் ஆண்டு கடலூரில் நெருங்கினார். அப்பொழுது அவர் கைது செய்யப்பட்டார். இவர் சிறையில் இருக்கும்பொழுது தன்னுடைய நேரத்தை சுதந்திரம், தேசியவாதம் மற்றும் நாட்டின் நலத்தைப் பற்றிய கவிதைகள் எழுதுவதற்கு செலவிட்டார். பாரதியார் தன்னுடைய இளமைக்காலத்தில் தமிழ் தேசியத் தலைவர்களிடம் நல்ல உறவுகளை ஏற்படுத்தினார், குறிப்பாக வ.உ. சிதம்பரம், சுப்ரமணிய சிவா, மண்டயம் திருமலச்சாரியார் மற்றும் சீனுவாச்சாரி போன்றவர்களிடம் நல்லுறவுகளை வளர்த்தார். இந்த தலைவர்களிடம் ஆங்கிலேயர் ஆட்சியினால் ஏற்படும் பிரச்சனைகளை பற்றி விவாதித்தார். பாரதியார் இந்திய தேசிய காங்கிரசின் வருடாந்திர மாநாட்டில் கலந்து கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தார் தேசிய பிரச்சனைகளை தீவிரமான இந்திய தேசியவாதத் தலைவர்களான பிபின் சந்திரபால், பாலகங்காதரதிலக் மற்றும் வி.வி. சுப்ரமணியம் போன்றோரிடம் விவாதித்தார். பாரதியாரின் பங்கேற்பு மற்றும் செயல்பாடுகளால் 1905-ஆண்டு பனாரஸ் மற்றும் 1907-ஆம் ஆண்டு சூரத் மாநாட்டில் இந்திய தேசிய காங்கிரசு தலைவர்களை இவரது தேசபற்று மிகவும் கவர்ந்து இழுத்ததுடன் பல தாய் நாட்டை நேசிக்கும் சேதத் தலைவர்களால் மதிக்கப்பட்டார். சில தேசத்தலைவர்களுடன் தேசம் பற்றிய சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டார். அதுமட்டும் இல்லாமல் பல்வேறு முறையில் தேசிய இயக்கத்தை வலுப்படுத்துவதற்கு அவர் அறிவுரைகளை வழங்கினார். சந்தேக மில்லாமல் பாரதியாருடைய அறிவுரைகள் மூலமாகப் பல தேசிய தலைவர்கள் புத்துணர்வு பெற்று தேசியவாதத்திற்கு பங்காற்றினார். இவ்வாறு பாரதியார் இந்திய சுதந்திரத்திற்காக முக்கிய பங்காற்றினார் என்பதை நாம் அறிவோம்.

**ஓர் சமூக சீர்திருத்தவாதியாக பாரதியார்:**

பாரதியார் சாதிய அமைப்புக்கு எதிராக செயல்பட்டவர். இவர் உலகில் இரண்டு சாதிகள் உள்ளன. ஒன்று ஆண்சாதி மற்றொன்று பெண்சாதி என்பதைத் தாண்டி வேறு ஒன்றுமில்லை என்று பிரகடனப்படுத்தியிருக்கிறார். இவற்றிற்கெல்லாம் இவர் தனது பூநூலை அகற்றினார். மேலும் அட்டவணை சாதியினரையும் பூநூல் அணியச் செய்து வேதம் ஓதச் செய்தார். இவர் முஸ்லிம்கள் நடத்தும் கடையில் தேநீர் பருகினார். இவர் தன்னுடைய குடும்ப

உறுப்பினர்களுடன் தேவாலாயத்திற்கு அனைத்து விழாக்களிலும் பங்கேற்றார். இவர் பட்டியல் இனத்தவரை கோயிலுக்கு அனுமதிப்பதை ஆதரித்தார். இவருடைய அனைத்து சீர்திருத்தங்களுக்கும் இவருடைய அக்கம் பக்கத்தினரிடையே பெரிய எதிர்ப்பு இருந்தது. பாரதியார் மிகவும் திறமையானவர். இந்தியர், தெளிவாக அனைவரும் பாரதத்தாயின் குழந்தைகள் என ஒன்றுபட்டு செயல்பட்டால் அன்றி இந்திய விடுதலை சாத்தியமாகாது என்று கூறினார். இவர் பெண்களின் உரிமைகள், பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களின் ஆற்றலாதல் ஆகியவற்றை மிகவும் நம்பினார். இவர் குழந்தை திருமணம், வரதட்சணை முறையைத் தீவிரமாக எதிர்த்தார். ஆனால் விதவை திருமணத்தை அவர் ஆதரித்தார்.

ஆணும் பெணும் சமமாகக் கருதப்பட்டால் மட்டுமே இவ்வுலகம் அறிவு மற்றும் புத்திக்கூர்மையில் சிறப்புறும். – சுப்பிரமணிய பாரதியார்

விவேகானந்தரின் சீடரான சகோதரி நிவேதிதாவுடனான பாரதியாரின் சந்திப்பு பெண்களுக்கான உரிமைகள் பற்றி சிந்தனையைப் பாரதியாரிடம் ஏற்படுத்தின. இது சாதியப் பிரச்சனையிலிருந்து சுதந்திரம் வரைக்கும் மற்றும் ஆன்மீகம் வரை பாடுபட்டவர். இவர் தற்கால பெண்களுக்கு சக்தி என்கிற அடையாளத்தை ஏற்படுத்தியவர். குறிப்பாக நவீன பெண்களின் அதிகாரம், பலமான, சுதந்திரமான மற்றும் ஆண்களுக்கு சமமான பங்குதாரர் என்று பெண்களை குறிப்பிடுகிறார்.

**ஓர் தொலைநோக்குச் சிந்தனையாளராகப் பாரதியார்:**

பாரதி என்பவர் ஒரு கவிஞர், பத்திரிக்கை ஏழுத்தாளர், சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவர் தமிழக சமுதாயத்தில் மிகப் பெரியத் தாக்கத்தை ஏற்படுத்தியவர். இவர் சொன்னதைச் செய்துக் காட்டியவர் என்பது இவரின் உயர்வைக் காட்டுகிறது. இவருடைய தொலை நோக்கான முன்கணிப்பு போல அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் இந்தியா சுதந்திரம் பெற்றது. ஓர் மக்கத்தான இந்தியா பற்றிய இவரின் தொலை நோக்கு சிந்தனைகள் சுதந்திர இந்தியாவில்

பாரதியார் செப்டம்பர் பதினோராம் நாள் 1921-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். ஆனால் இவரின் இறுதி சடங்கில் பதினான்கு நபர்கள் மட்டுமே பங்கேற்றனர். இதற்கு சாதியை விட்டு தள்ளி வைக்கப்படுவோம் என்பதுடன் ஆங்கிலேய அரசாங்கத்தின் அடக்கு முறையினால் ஏற்பட்ட பயமே காரணமாகும்.

செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பாரதியார் தனக்காக வாழாமல் மக்களுக்காகவும் தேசத்திற்காகவும் வாழ்ந்தவர். ஆகையால்தான் மரியாதையுடன் இவரைப் பாரதியார் எனப் போற்றுகின்றனர். பல ஆண்டுகளுக்குப் பிறகும் சுப்ரமணிய பாதியார் இந்திய சுதந்திரத்தின் சின்னமாகவும் தமிழ் தேசியவாத அதிர்வலையை ஏற்படுத்தியவராகவும் விளங்குகிறார்.

**பொதுவுடைமைவாதம்:**

ம. சிங்காரவேலர் (1860 – 1946)

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுச்சிபெற்ற சுதேசி மற்றும் தன்னாட்சி இயக்கங்களால் நாடு முழுவதும் விடுதலை உணர்வு பரவியது. சமூகரீதியிலும் இந்து மத்திற்குள் சில சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அரசியல் ரீதியாக இந்தியத் தன்மை அல்லது தேசிய உணர்வு உருவாவதில் இந்த இயக்கங்கள் முக்கியப் பங்கு வகித்தன.

இருந்த போதும் இவை மதவாதத் தன்மையை கொண்டிருந்தன. அதேபோல இந்த இயக்கங்களில் பங்கேற்றவர்கள் பெரும்பாலும் படித்த மேல்தட்டு வர்க்கத்தினராக இருந்தனர். அவர்கள் கோரும் விடுதலை மட்டுமே அரசியல் விடுதலையாக இருந்தது. அடித்தட்டு மக்களான விவசாயிகள், தொழிலாளர்களின் பொருளாதார நலன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. பெரும்பாலான விவசாயிகள் ஏழைகளாக இருந்தனர். மேலும், காங்கிரசு கட்சிக்குள் சாதிப் பாகுபாடுகள் நிலவின. குறிப்பாக, தமிழகத்தில் பிரமாணர், பிராமரல்லாதவர் என்ற பாகுபாடு நிலவியது.

இந்த நிலைமையில் தமிழக அரசியல் இயக்கத்தில் பகுத்தறிவு கருத்துகள், அறிவியல் பார்வை ஆகியன உருவாவதிலும் விடுதலைப் போராட்டங்களுக்கு ஒரு வட்டாரத் தன்மை

அளிப்பதிலும், விடுதலைப் போராட்டத்தில் விவசாயிகள், தொழிலாளர்கள் நலன்களை இணைப்பதிலும் இந்திய அரசியலில் சமதர்மக் கருத்துகள் பரவியதிலும் ம. சிங்காரவேலரின் அரசியல் சிந்தனைகள் முக்கியப் பங்காற்றின.

**காங்கிரசு அரசியலில் சிங்காரேவேலருடைய சிந்தனைகளின் தாக்கம்:**

தொடக்கத்தில் இந்தியாவில் இருந்து இயற்கை வளங்களைக் கொள்ளையடித்து மூலப்பொருட்களாகத் தங்கள் நாட்டுக்கு ஏற்றுமதி செய்த ஆங்கிலேய அரசு, தங்கள் தேவைகள் அதிகரித்ததால் இந்தியாவிலேயே தொழிற்சாலைகளைத் தொடங்கியது. ஏற்கனவே இந்தியாவில் பாரம்பரியத் தொழில்களை காலனியாதிக்க அரசு முடக்கிவிட்டதால் மக்கள் வாழ்வாதாரங்களை இழந்து பசி, பட்டினி, வறுமையில் வாடினர். இதனால் மக்களின் வாழ்க்கை தரத்தினை மேலும் மோசமாக்கியது. இதனால் கூலி வேலை கிடைத்தால் போதும் என்ற நிலைக்குத் தொழிலாளர்கள் தள்ளப்பட்டனர்.

இதனால் பின்னர் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகள் அனைத்திலும் தொழிலாளர்கள் மிகக் குறைவான கூலிக்கு வேலையில் அமர்த்தப்பட்டனர். அடிமைகளைப் போல் உழைத்தனர். போராடினால் கடுமையான அடக்குமுறையால் ஒடுக்கப்பட்டனர்.

இவ்வாறு பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்காகத் தொழிலாளர் அமைப்புகள் உருவாகத் தொடங்கின. அன்றைய சென்னை மாகாணத்தில் இந்த அமைப்புகளுக்கு திரு.வி. கல்யாணசுந்தரனார், தி. வரதராஜுலு போன்றோர் தலைமை தாங்கினர். இந்த தொழிலாளர் அமைப்புகள் உருவாக முன்முயற்சிகள் எடுத்து பாடுபட்டவர் ம. சிங்காரவேலர் ஆவார் என்பது மிகையில்லை.

இந்த தொழிலாளர்களை அரசியல்மயப்படுத்தி விடுதலை இயக்கத்தோடு இணைக்க வேண்டும் என்று ம. சிங்காரவேலர் விரும்பினார். ஆனால் காங்கிரசு கட்சி இதனை விரும்பவில்லை. ம. சிங்காரவேலர் இதனைக் கடுமையாக விமர்சித்து 1920 ஆம் ஆண்டிலேயே காங்கிரசு தலைமைக்கு தந்தி அனுப்பினார். தொடர்ந்து அண்ணல் காந்திக்குப் பகிரங்கக் கடிதமும் எழுதினார். அத்துடன் ஹிந்து. சுதேசமித்திரன் உள்ளிட்ட முன்னணி நாளிதழ்களிலும் நவசக்தி போன்ற பருவ இதழ்களிலும் ஏராளமான கட்டுரைகள் எழுதினார். காங்கிரசு தொண்டர்கள் மத்தியிலும் பிரச்சாரம் செய்தார். இச்சமயத்தில் 1922-ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய காங்கிரசு குழுவின் கூட்டத்தில் தமிழகப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட அவர் அங்கும் விவாதத்தை உருவாக்கி தமக்கு ஆதரவு திரட்டினார். அவரது கருத்துக்கள் வருமாறு.

- இந்திய விடுதலை என்பது விவசாயிகள். தொழிலாளர்களின் பொருளாதார சுதந்திரத்தை உள்ளடக்கியதாகும்.
- தொழிலாளர்கள், விவசாயிகள் நலன்களுக்காகவும் காங்கிரசு பேரியக்கம் போராட வேண்டும்.

விடுதலைப் போராட்டத்தில் தொழிலாளர்கள், விவசாயிகளையும் இணைத்துக் கொள்ளவேண்டும். பல்வேறு அமைப்புகளில் உள்ள மக்களை ஒன்று திரட்ட காங்கிரசு தலைவர்கள் உதவ வேண்டும். இதன் விளைவாக 1922-இல் இந்திய தேசிய காங்கிரசு தொழிலாளர்களை அமைப்பு ரீதியாக ஒன்று திரட்டத் தீர்மானம் நிறைவேற்றியதுடன் இதற்கென ஓர் குழுவினை அமைத்தது. ஆறுபேர்கொண்ட அக்குழுவில் சிங்காரவேலரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்க சட்டம் இயற்ற வேண்டும் என்று போராடினார். அதனை வலியுறுத்தி அன்றைய முன்னணி நாளிதழ்களில் தொடர்ந்து எழுதினார். இதுபோன்ற முயற்சிகளின் பலனாக முதல் முறையாக 1926-இல் தொழிலாளர் நலன்களைப் பேணும் சட்டம் இயற்றப்பட்டது.

இதேபோல காங்கிரசு தலைவர்கள் அந்தந்த வட்டார மொழிகளில் பேசினால்தான் விடுதலைக்கருத்துகள் மக்களைச் சென்றடையும் என்பதுடன் மக்களுக்கும் காங்கிரசு பேரியக்கத்துக்கும் இடையே நெருக்கம் உருவாகும் என்றார். மக்கள் பிரச்சனைகளைப் பொதுமக்களிடம் பேசும்போது தமிழ் மொழியிலேயே பேச வேண்டும் என உறுதியாக இருந்தார். இதையொட்டி 1918-இல் சென்னை மாகாண சங்கத்தின் மாநாட்டில் இது குறித்த தீர்மானம்

நிறைவேற்றப்பட்டது. இந்த மாநாட்டில் சிங்காரவேலர் மற்றும் ஈ.வெ.ரா. பெரியார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுயமரியாதை, பொதுவுடைமைவாதம் இயக்கங்களின் மீதான ம. சிங்காரவேலரின் தாக்கம்: பிராமணர், பிராமணரல்லாதோர் பாகுபாடு காங்கிரசு கட்சியில் நிலவுவதைக் கண்டித்து பெரியார் விலகியபோது ம. சிங்காரவேலர் அவரை ஆதரித்தார். சோவியத் ஒன்றியம் சென்று வந்து ஈ.வெ.ரா. பெரியார் அதன் தாக்கத்தில் பொதுவுடைமைவாதக் கருத்துகளை ஏற்றுக்கொண்டு சுயமரியாதை இயக்கத்தினை சுயமரியாதை சமூக நீதிக்கட்சி என்று பெயர் மாற்றினார். அதற்கான கொள்கைத் திட்டங்களை வகுத்தளிப்பதில் ம. சிங்காரவேலர் உறுதுணையாக நின்றார். இந்த அமைப்பு தமிழ்நாடு முழுவதும் பரவ ம. சிங்காரவேலர் அயராது பாடுபட்டார்.

பெரியார் நடத்திய “குடியரசு” உள்ளிட்ட இதழ்களில் மூட நம்பிக்கைகளுக்கு எதிராக ஏராளமாக கட்டுரைகளையும் எழுதினார். அவரது கட்டுரைகள் எளிமையான நடையில் புரிந்துகொள்ளும் வகையில் இருந்தன.

ம. சிங்காரவேலர் பொதுவுடைமைவாதத் தத்துவத்தில் ஆழமான நம்பிக்கை கொண்டவர். காங்கிரசு பேரியக்கம் தொழிலாளர் அமைப்புகளை ஆதரிக்க வேண்டும் என்று 1920-இல் தலைமைக்குத் தந்தி அனுப்பினார். அது சென்னை சமதர்மவாதிகள் சார்பில் அனுப்பப்படுவதாக அதில் தெரிவித்திருந்தார். அகில இந்திய காங்கிரசு குழுவின் கூட்டங்களிலும். மாநாடுகளிலும் பொதுவுடைமைவாதப் பிரதிநிதியாகவே வாதிட்டார்.

தொழிலலர்கள் பலமாகத் திகழ்ந்த சென்னை நகரில் இந்தியாவின் முதல் உழைப்பாளர் தினத்தை 1923 மே முதல் நாளன்று நடத்திக்காட்டினார். அதே நாளில் தொழிலாளர் விவசாயிகள் கட்சி அமைக்கப்படுவதாகவும் அறிவித்தார்.
அக்கட்சியின் குறிப்பிடத்தக்க கோரிக்கைகள் பின்வருமாறு.

தொழிலாளர்களுக்கான கோரிக்கைகள்:

- **எட்டுமணிநேர வேலை**
- **சங்கம் அமைக்கும் உரிமை**
- **தங்கள் கோரிக்கைகளை வென்றெடுக்க கடைசி ஆயுதமாக வேலைநிறுத்தம் செய்யும் உரிமை**
- **கோரிக்கைகளை பரிசீலிக்க முத்தரப்பு பேச்சு வார்த்தைக் குழு**
- **குறைந்தபட்ச ஊதியம்**
- **அடிப்படை வசதிகளுடன் கூடிய சுகாதாரமான குடியிருப்பு வசதி**
- **மருத்துவம் மற்றும் ஆயுள் காப்பீடு**
- **வருங்கால வைப்பு நிதி**
- **சம்பளத்துடன் கூடிய ஈட்டிய விடுப்பு**
- **இலவச மருத்துவ உதவி**
- **பேறுகால விடுப்பு**
- **ஒப்பந்த முறை ஒழிப்பு**

**விவசாயிகளுக்கு**

- **இலவச நீர்ப்பாசனம்**
- **சமீன்தார முறை ஒழிப்பு**

**பொதுமக்களுக்கு:**

- அனைவருக்கும் வாக்குரிமை
- அடித்தட்டு மக்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் போன்றோர் தேர்தலில் போட்டியிட அனுமதி.

1925 ல் கான்பூர் நகரில் இந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதம் மாநாடு நடந்தபோது அதற்குத் தலைமை ஏற்று நடத்தித் தந்தார். அப்போது “வன்முறையற்ற மார்க்சியப் பாதை”

யை வலியுறுத்திப்பேசினார். மேலும், ”இந்தியாவுக்கேற்ற மார்ச்சியப் பாதையைத் திட்டமிட வேண்டும்” என்றும் கேட்டுக்கொண்டார். ”காங்கிரசு கட்சியில் இருந்துகொண்டே பொதுவுடைமைவாதிகள் தனிப்பிரிவாக இயங்க வேண்டும்” என்றார். இதையொட்டி காங்கிரசு கட்சிக்குள் சமதர்ம பிரிவு உருவானது.

**ம. சிங்காரவேலரின் வாழ்வும் சமூக பணியும்**

ம சிங்காரவேலர் இளம் வயதிலேயே இந்து மதத்தில் நிலவும் வர்ண அமைப்பிலும் மூட நம்பிக்கைகளிலும் அதிருப்தி அடைந்திருந்தார். இதன் விளைவாக 1890 களிலேயே பல இடங்களில் பௌத்த சங்கம் அமைத்து வர்ண அமைப்புக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் எதிராகப் பரப்புரை செய்தார்.

வசதி மிக்க குடும்பத்தில் பிறந்து சட்டம் பயின்ற சிங்கார வேலர் சென்னை மாநகராட்சி மன்றத்தில் உறுப்பினராகவும் அதன் சுகாதாரக் குழுவிலும் பணியாற்றினார். அப்போது குடிசைப் பகுதிகளில் கொள்ளை நோய் தாக்கம் அதிகமாக இருந்ததால் சுகாதாரம், கல்வி ஆகிய பிரச்சனைகளுக்கு முன்னுரிமை அளித்தார். தொடர்ந்து குடிசைப் பகுதிகளில் வாழ்ந்த தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடினார். இதன் அடிப்படையிலேயே காங்கிரசு இயக்கத்தில் செயலாற்றினார். பின்னர் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார்.

தனது ஐம்பது வயதைக் கடந்தபின்பே அரசியலில் இறங்கினாலும் சுமார் முப்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக முதுமையையும் பொருட்படுத்தாமல் பகுத்தறிவு மற்றும் பொதுவுடைமைவாதக் கருத்துக்களையும் விடாது பிரசாரம் செய்தார்.

தனது ஐம்பது வயதைக் கடந்தபின்பே அரசியலில் இறங்கினாலும் சுமார் முப்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக முதுமையையும் பொருட்பாடுத்தமால் பகுத்தறிவு மற்றும் பொதுவுடைமைவாதக் கருத்துகளையும் விடாது பிரசாரம் செய்தார்.

ம. சிங்காரவேலர் தென்னிந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதி என்று நேசத்துடன் நினைவு கூறப்படுகிறார்.

**திராவிடக் கொள்கைவாதம்**

**அறிமுகம்:**

தமிழக அரசியல் சிந்தனையாளர்களில் இ.வெ.ரா. பெரியார் மிகச்சிறந்த சிந்தனையாளராக கருதப்படுகிறார். ஏனெனில் இவர்க தமிழகத்தின் தலைசிறந்த சீர்திருத்தவாதி ஆவார். இவரைப்பற்றி விரிவாக இப்பாடத்தில் காணலாம்.

பன்னெடுங்காலமாக தமிழகத்தைப் பீடித்திருந்த மூடப்பழக்க வழக்கங்கள், பெண்ணடிமை, சமூகப் பின்னடைவுகளுக்கு அறிவையும், சுய மரியாதையையும் அடிப்படையாகக் கொண்டு தனது நெடிய வாழ்நாள் முழுவதும் போராடியவர். இதற்காகத் தந்தை பெரியார் என்று தமிழக மக்களால் அழைக்கப்படுபவர். பண்பாட்டு ரீதியாக அவர் வகுத்துத் தந்த திராவிடக் கருத்துக்கள் இன்று இந்தியா முழுவதும் ஒளி வீசுகிறது என்று புகழ்பெற்ற சமூக நீதி அறிஞர்கள் கூறுகிறார்கள்.

ஈ.வெ. ராமசாமி என்ற இயற்பெயரைக் கொண்ட தந்தை பெரியார் ஈரோட்டில் செல்வச் செழிப்புள்ள வணிகக் குடும்பத்தில் 1879-இல் பிறந்தார். இளமைப் பருவத்திலேயே தனது குடும்பத்திலும், சுற்றியுள்ள சமுதாயத்திலும் நிலவிய மூட நம்பிக்கையை எள்ளி நகையாடிய பெரியார், தொடக்கத்தில் தீவிர அரசியலில் ஈடுபடவில்லை. ஆனாலும்,ஈரோடு நகர்மன்றத்தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தார்.

காந்தியின் அரசியல் வருகையால் ஈர்க்கப்பட்ட பெரியார் காங்கிரசு இயக்கத்தில் இணைந்து சுதந்திரப் போராட்ட இயக்கத்திலும், சமூக சீர்திருத்தத்திற்காகவும் தீவிரமாகப் பங்காற்றினார். (காங்கிரசு இயக்கத்தில் மேட்டுக்குடியினரின் செல்வாக்கு கோலோச்சிய 1920-களில் அடித்தட்டு மக்களிடம் காங்கிரசு பேரியக்கத்தைக் கொண்டு சென்றதிலும், ஆலய நுழைவு போராட்டங்கள் வெற்றி பெற்றதிலும் பெரியார் பெரும் பங்காற்றினார். ஆனால், காங்கிரசு கட்சியில் வர்ணாசிரம கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதால் அதிலிருந்து விலகி

நீதிக்கட்சியில் இணைந்து சுய மரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். இதற்குப் பின்னர் தந்தை பெரியாரின் பங்களிப்புகள் மற்றும் செயல்பாடுகள் இந்திய மற்றும் தமிழக அரசியலில் பிரிக்க முடியாத வரலாறாயின.

தேசத்தின் பெயரால் ஓர் குழு மக்களைச் சுரண்ட நினைத்தால் அத்தேசம் போராடிப்பெற்ற உண்மையான சுதந்திரம் அதுவல்ல என்றார் ஈ.வெ.ரா. பெரியார் பல்வேறு நிலைகளில் தேசம், இனம் மற்றும் தேசியவாதம் ஆகியவற்றை பெரியார் கடுமையாக விமர்சித்தார். தேசம்,தேசியவாதம், மற்றும் தேசிவாதம் ஆகியவை ஒரே மாதிரியான கருத்தாக்கங்களே என அவர் கருதினார். இவ்வேறுபாடுகளே அந்நாட்டிலுள்ள ஒட்டுமொத்த குடிமக்களின் சுயமரியாதையைக் குறிப்பதாக அவர் கூறுகிறார். அவர் மேலும் கூறுகையில் தமிழகத்தில் தேசியவாதத்தைப் பற்றி யாரேனும் பேசுகையில் அசர்கள் மக்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கிறார்களா? என தாம் வியப்பதாகப் பெரியார் வினவுகிறார்.

**தேசியவாதம் என்பது சுருண்டலாகும்:**

இந்தியர்கள் மற்றும் தமிழர்களை மட்டுமல்லாமல் மக்களின் சுயமரியாதையைப் பற்றியும் கவலைப்படாத மனிதர்களும் உள்ளனர். அவர்கள் தங்களின் சுயநலன் மற்றும் மேம்பாட்டிற்காக மக்களை தேசம் மற்றும் தேசியவாதத்தினை நம்பவைத்து ஏமாற்றுவர், தேசம் மற்றும் தேசியவாதத்திற்காக சுயமரியாதை மறைக்கப்படுமானால் அது தேசத்திற்கு எதிரான குற்றமாகும் என்றார் பெரியார்.

தேசிய வாதம் என்பது ஓர் கற்பனையான உணர்வாகும். ஆகவே தேசிய உணர்வு என்பது வசதிமிக்க மற்றும் அதிகாரத்தில் உள்ளவர்களால் மக்களை ஏமாற்றி அவர்களின் எதிர்மறை உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் சதியாகும். அது ஓர் தவறான அனுமானமாகும். இதனை வசதிபடைத்த உயர் குடியினர் ஏழை சமுதாயத்தின் உரிமைகளைத் தடுப்பதற்காகப் பயன்படுத்துகின்றனர்.

தேசியவாதம் என்பது மக்களுக்கு ஓர் மயக்கத்தையும் உணர்வுப்பூர்வமான வெறியையும் குறிக்கும் சொல்லாகி விட்டது எனக் கூறுகிறார்.

உலகளாவிய தேசியவாதத்திற்கு மறுப்பு

பெரியார் தனது இலங்கைப் பேருரையில்,

| |
|---|
| பெரியார் ஓர் கடவுள் மறுப்புக் கொள்கையுடைய முற்போக்கான சமூக சீர்திருத்த<br>பொரியாரின் படைப்புகள் மற்றும் மரபு:<br>சராசரித் தமிழனுக்குப் பெரியார் ஓர் கொள்கையாக உள்ளார். சமூக |

தேசம், தேசியவாதம் என்பதைக் கடுமையாக எதிர்த்துள்ளார். “இந்திய தேசியவாதம்“ என்ற கருத்தை சிலர் தங்கள் ஆயுதமாகக் கையிலெடுத்த காலத்தில் தேசியவாதத்தைப் பற்றி பெரியார் எதிர்த்துப் பேசியுள்ளார். இந்திய தேசியவாதத்தை மட்டுமின்றி, உலகில் உள்ள மற்ற நாடுகளின் தேசியங்களையும் சான்றாகக் காட்டி, தேசியவாதத்தை மறுக்கிறார் பெரியார்.

”தேசியவாதம் என்பது முதலாளித்துவவாதிகள் தங்கள் தங்கள் மூலதனத்தை பெருக்கிக் கொள்ள ஏழை மக்களை பலி கடாவாக்குவதற்காகக் கற்பித்துக் கொண்ட தந்திர வார்த்தையாகும்.

உதாரணமாக, “இங்கிலாந்து நாட்டின் பணக்கார சமூகத்திற்கு அமெரிக்கா நாட்டின் பணக்கார சமூகத்துடன் மோதல் வந்தால் இங்கிலாந்து தேசத்து முதலாளிகள் அந்நாட்டின் ஏழைமக்களைப் பார்த்து “ஓ இங்கிலாந்து மக்களே! தேசபக்கதர்களே! தேசத்துக்கு நெருக்கடி வந்து விட்டது, என்று கூறி ஏழை சமுதாயத்தை தூண்டுகின்றனர்.

இவ்வகைப் பொய்யுரைகள் மூலம் மக்களைச் சுரண்டி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்கிறார்கள் என்று கூறுகிறார்.

பல்வேறு தேசிய இனங்களையும் - தேசங்களையும் உள்ளடக்கிய நாடு ரஷ்யா, அந்த ஒன்றுபட்ட ரஷ்யாவில் எந்த வகையான ஏற்றத் தாழ்வுகளும் இல்லை என்று கூறி, அந்த வகையான புரட்சிக்கு ஆதரவாக நின்றவர் பெரியார்.

"கடவுள், மதம், மற்றும் தேசியவாதம் ஆகியவை அடியோடு அழிக்கப்பட்ட நாடுகளில் பணக்காரக் கொடுமையும், சோம்பேறி வாழ்க்கையும், பட்டினி கஷ்டமும். உயர்வு தாழ்வு நிலையும் காணப்படவில்லை. அது போன்ற நாடுகளில் கடவுள், மதம் மற்றும் தேசப்பற்று ஆகியவை இல்லை. ஆனால் மனித சமூக சமத்துவ சமுதாயமே அந்நாடுகளில் முக்கியமாக்க கருதப்பட்டது. அங்கு பணக்காரன் - ஏழை. முதலாளி – தொழிலாளி, அதிகாரி – குடிமக்கள் என்கின்ற பாகுபாடு காணப்படவில்லை. மேன்மக்களுக்கு சமத்துவ விரும்பிகளும் கடவுள் மற்றும் தேசியவிவாதத்திற்கு முன்னுரிமை தரும் தேசத்திற்கு சமமானவர்கள் அல்ல.

உலகில் உள்ள அனைத்து தேசங்களையும், தேசியங்களையும் கடுமையாக எதிர்த்தது போல "இந்திய தேசம்" என்பது, பல்வேறு தேசிய இனங்களை – பல்வேறு தேசங்களை இணைத்து உருவாக்கப்பட்ட ஒன்று – அந்த இணைப்பு ஒரு சிலரின் ஆதிக்கத்திற்குக் கருவியாக இருந்தால் அதையும் பெரியார் எதிர்க்கிறார்.

**இந்தியாவில் வேறுபாடுகளின் தேசம்**

"தேசம் என்ற கருத்தியல் இந்தியாவுக்குப் பொருந்துமா? என்ற கேள்விக்கு அவரே சிறப்பான பதில் அளித்துள்ளார்.

"மதராஸ்" என்பது ஒரு தனித் தேசம் அல்லவென்றும் அது தனித்து செயல்பட முடியாது என்றும் தோழர்கள் சிலர் சொல்கிறார்கள். மதராஸ் ஒரு தனி தேசமாக இருந்தது. இன்றும் இருக்கிறது. அதுதான் "திராவிடம்". அதனுடைய நாகரிகம், பண்பாடு பழக்கவழக்கங்கள் ஆகியவை வங்காளம், பம்பாயிடம் இருந்து வேறுபட்டது. ஆங்கிலேயர் ஆட்சியால் ஆங்கில மொழி அறிமுகம் ஆகி இருக்கிறது. ஆங்கிலமும் ஆங்கிலேயர் ஆட்சியும் ஒழிந்து ஹிந்தி மொழி வந்தால் அன்றே மதராசானது ஜெர்மனி, இத்தாலி, பிரான்சு முதலிய ஏதோ ஒரு நாட்டுடன் சேர்ந்துவிடும்.

"இந்தியா ஒரு "தேசம்" என்று சொல்வதைவிட, "திராவிட நாடு" ஒரு "தேசம்", ஆந்திராநாடு ஒரு "தேசம் வங்காள நாடு ஒரு "தேசம்" என்று சொன்னாலும் பொருந்தும். உதாரணமாக திராவிட நாட்டை எடுத்துக்கொண்டால் திராவிடநாடு என்று தனிப்பட்ட பண்பாடு கலை, மொழி, நாகரிகம், மற்றும் ஆட்சியின் கீழ் ஆயிரக்கணக்கான வருடங்கள் இருந்து வந்ததென்று சரித்திரம் கூறுவதை யாராலும் மறைக்க முடியாது.

மாறுபட்ட ஆட்சிகளின் கீழ் இருந்துவரும் ஒரு நாட்டை ஒரு "தேசம்" என்று சொல்லி எல்லா மக்களையும் ஒன்றுபடுத்தி அன்னியனிடமிருந்து விடுதலையடைந்த பின்னர் ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரை ஆளலாம் என்றால், இதை யார் ஒப்புகொள்வார்கள் என்று கேட்கிறார். பெரியார் முன்மொழிந்த "திராவிட தேசியவாதம்" முற்றிலும்ட பெருவாரியாக மத ஆதிக்கங்களுக்கு எதிராக இருந்தது.

**மொழிக் கொள்கை:**

"அவர்வர் மொழியைக் காப்பாற்றிக்கொள்வதற்கு அவரவருக்கு உரிமை உண்டு. இந்த உரிமை திராவிட சமதர்மக் குடியாட்சியில் பாதுகாக்கப்படும். எந்த ஒரு மொழியும், மற்றொரு மொழி பேசுபவர் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படக்கூடாது. பிரிவினை வாதத்திற்கான ஆயுதமாக மொழி பயன்படுத்தப்படக்கூடாது. மக்களின் அனைத்து தேவைகளுக்கும் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்திருப்பது எதனையும் வெளிப்படுத்தாது. ஒருவேளை மொழியானது தேசியமயமாக்கப்பட்டால் மக்களுக்கு அதனால் பட்டினியில் இருந்து விடுதலை கிடைக்குமா? தெளிவாகக் கூறுவதெனில் தமிழ் உழைப்பாள்கள் தமிழ் பேசும் முதலாளிகளாலேயே சுரண்டப்படுகின்றனர்.

**சாதியற்ற சமுதாயம்:**

பெரியார் "தமிழ்நாடு தமிழருக்கே, திராவிடநாடு திராவிடருக்கே" என்று தொடர்ச்சியான பரப்புரைகள், போராட்டங்களை நடத்தினார். பொதுச்செயல்திட்டம், பொதுவேலைத்திட்டம்,

இஸ்லாமுக்கு மதமாற்றம், திராவிடநாட்டுப் பிரிவினை போன்றவற்றில் பல்வேறு வடிவங்களில் ஆதிக்க சக்திகளை எதிர்த்துப் போராடினார்.

ஆனால், ஆதிக்க சக்திகள் மிக எளிதாக, தமிழன், தமிழ்த் தேசியவாதம், தேசிய இனம் போன்ற உணர்வுகளை ஏற்றி, சில தமிழ் தேசியத் தலைவர்கள் மூலமாக மீண்டும் தங்களது ஆதிக்கத்தைத் தொடரும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்ட போது, ஒருகால கட்டத்தில் பெரியார், இந்தத் திராவிடநாடே கூட வேண்டாம். சாதி ஒழிப்பே முக்கியம் என்ற முடிவுக்கு வந்தார் என்பதை அவரின் சிந்தனைத் தொகுப்புகள் வழியாக அறியலாம்.

”திராவிடநாடு பெறாவிட்டாலும் சரி சில ஆதிக்க சக்திகளை ஒழிக்க முடியாவிட்டாலும் சரி முதலாளித்துவத்தை அழிக்க முடியாது போனாலும் சரி சாதியை ஒழிக்கின்ற ஒரே காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்தால் போதும் என்கிறார். இது ஒன்றே திராவிடர் கழகத்தின் லட்சிய வெற்றி என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அந்த அளவுக்கு இந்த சாதி வெறியானது, திராவிட இனத்தைச் சின்னாபின்னப்படுத்தி ஆரியத்துக்கு அடிமையாக்கி வைத்திருக்கிறது” என்று 1950 களின் தொடக்கத்தில் அவர் தனது அரசியல் கருத்துக்களை வெளியிட்டள்ளார்.

, , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , ,

## அலகு– 4

## இந்திய நீதித்துறை

**இந்திய உச்ச நீதிமன்றம்:**
"உச்ச நீதிமன்றம், அனைத்து இந்திய நீதிமன்றமாகும். கட்சி அட்சியலில் இருந்தும், அரசியல் கோட்பாடுகளில் இருந்தும் உறுதியாக தனித்து நிற்கும். அது அரசுகள் மாறுவதைக் குறித்து அக்கறை கொள்வதில்லை. நீதிமன்றமானது, அந்த நேரத்தில் நடைமுறையில் இருக்கும் சட்டத்தின்படி, நிற்கிறது. அனைவரின் மீதும் பரிவு, நன்மதிப்பு கொண்டுள்ளது. எனினும் அது யாருடனும் அணி சேர்வது இல்லை".

நீதித்துறையானது அரசாங்கத்தின் மூன்று உறுப்புகளில் ஒன்றாகும். மற்ற இரண்டு சட்டமன்றமாகவும், ஆட்சித்துறையாகவும் இருக்கின்றன. நீதித்துறையானது சட்டங்களுக்கு விளக்கம் அளிப்பதையும், அரசமைப்பை பாதுகாப்பதையும் பணியாகக் கொண்டிருக்கிறது. அது நீதித்துறை நிர்வாகத்தை உறுதிப்படுத்துகின்றது. தனி மனித உரிமைகள், முன்னுரிமைகள் ஆகியவற்றின் மீது அரசு மற்றும் தனிமனிதர்களால் மேற்கொள்ளப்படும் மீறல்களில் இருந்து பாதுகாப்பு அளிப்பதை உறுதிப்படுத்துகிறது. சுதந்திரமான மற்றும்

**திருக்குறள்:**

1. **பிணையாக திருக்குறள் ஒப்புவித்தல்:**

   கைகலப்பில் ஈடுபட்ட மூன்று கல்லூரி மாணவர்களுக்கு பிணையாக 100 திருக்குறள்களை தொடர்ந்து 10 நாட்கள் அப்பகுதியிலுள்ள குறிப்பிட்ட தமிழாரசிரியர் முன்பு ஒப்புவிக்க வேண்டுமென்று நிபந்தனை விதித்து தமிழ்நாடு நீதிமன்றம் பிப்ரவரி 2019 அன்று உத்தரவிட்டது.

   ஒரு நபர் மீது தாக்குதல் நடத்தியதாக மூன்று கல்லூரி மாணவர்களுக்கு மேட்டுபாளையம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அப்போது, அவர்கள் சார்பில் பிணைக் கோரப்பட்டது. பிணையின் நிபந்தனையாக அப்பகுதி அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர் முன்பு தினமும் 100 திருக்குறள்கள் ஒப்புவிக்க வேண்டுமென்று நீதிபதி கூறினார்.
   இவ்வாறு தொடர்ந்து 10 நாட்கள் திருக்குறள் ஒப்புவித்தப் பின்பு இறுதி நாளில் அந்த மாணாக்கர்களுக்கு சான்றிதழ் வழக்கும்படியும் நீதிபதி அப்போது உத்தரவிட்டார்.

2. **திருக்குறளை ஆழமாகக் கற்பதற்கு வழிவகுத்த மதுரை உயர் நீதிமன்ற கிளை:**

   சென்னை உயர் நீதிமன்றத்தில் மதுரை கிளை வழங்கிய தீர்ப்புகளில் தமிழக பள்ளிகளில் திருக்குறளை ஆழமாகக் கற்க வழிவகுத்து அளித்தத் தீர்ப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். மதுரைகிளை கடந்த 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறைக்கு அளித்த உத்தரவில் பள்ளிப் பாடத்திட்டத்தில் திருக்குறளின் 133 அதிகாரங்களில் 108 அதிகாரங்கள் சேர்க்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது. இதன்மூலம் 2017 – 18 கல்வியாண்டிலிருந்து மாணவர்கள் 1050 திருக்குறள்களையும் கற்கும் வகையில் தமிழ்நாடு அரசு ஆணைப் பிறப்பிப்பதற்கு மதுரைகிளையின் உத்தரவு வழிவகுத்தது. 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்கள் முன்கூடிய திருக்குறள் பாக்கள் அனைத்தையும் கற்பதுடன் அதன் பொருளினையும் தெளிவாகப் புரிந்து கொள்வதை உத்தரவாதம் செய்யும்படியும் அது கூறியது. இதன்மூலம் தற்போது பள்ளிக் கல்வி மாணவர்கள் திருக்குறள் பாக்களை கற்று ஆழமாகப் புரிந்து வருகிறார்கள்.

தமிழில் பண்டைய இலக்கியங்களில் உலகின் 60 –க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்ட இலக்கியம் திருக்குறள் ஒன்றேயாகும்.

பாகுபாடற்ற நீதித்துறையை உருவாக்குவது ஒரு நாகரிக அரசு செயல்படுவதற்கு மன் நிபந்தனையாகும். இந்தியா போன்ற கூட்டாட்சி அரசு முறை கொண்ட நாடுகளில் கூட்டாட்சியின் பாதுகாவலனாகவும், மத்திய, மாநில அரசாங்கங்களுக்கிடையே எழும் அதிகார வரம்பு கருத்துவேறுபாடுகளுக்குத் தீர்வ காண்பதனாலும் நீதித்துறை மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

**இந்திய நீதித்துறையின் பரிணாம வளர்ச்சி:**
**பண்டைய இந்தியாவில் நீதிமுறையமைப்பு:**

இந்தியா பல்வேறு இனங்கள், பண்பாடுகள், மொழிகள் மற்றும் அரசியல், சமூக அமைப்புகளை கொண்ட ஒரு துணைக்கண்டமாக இருக்கிறது. இந்தியாவின் பண்டைய காலத்திலும் மற்றும் இடைக்காலத்திலும் அரசு எந்த ஒரு ஆட்சித்துறையிலிருந்தும் நீதித்துறை பணிகளைப் பிரித்து வைக்கப்படவில்லை. வேதகாலத்தின் போது (குலபா (அ) குலபாடோ), குடும்பத் தலைவனின் அதிகாரமானது மன்னர் வழி குறுக்கீடுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டிருந்தது. அதேபோல் கிராமா, தோபா, வைசியா, ஜனம் மற்றும் கனம் போன்ற குலவகைப்பட்ட மற்றும் இனக்குழு அமைப்புகளும் தன்னாட்சி பெற்றுத் திகழ்ந்தன. பண்டைய இந்திய முடியாட்சிகளில் நீதித்துறை அதிகாரத்தில் அரசரே உயர்நிலையில் இருந்தார். அரசர் நினைத்ததே சட்டமாக இருந்தது. வழக்குகளில் அவர் வார்த்தையே உயர்ந்த நீதியாகவும் இறுதித் தீர்ப்பாகவும் இருந்தது.

எனினும், கிராமப்புறங்களில் பெரும்பாலான வழக்குகள் சாதி அமைப்புகள் அல்லது உள்ளாட்சி நிர்வாக அமைப்புகளின் சட்டத்திட்டங்களின் மூலமாகவே தீர்க்கப்பட்டு வந்தன. தேசத் துரோகம் போன்ற மிகத் தீவிரமான வழக்குகள் மட்டும் அரசவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டன. அங்கு முறையான சட்ட அமைப்பு அல்லது நீதித்துறை வழி முறை இருந்ததில்லை. பெரும்பான்மையான நேரங்களில் குற்றம் சாட்டப்பட்டவர், தான் குற்றமற்றவர் என்பதை ஆதாரங்கள், சாட்சியங்கள் மூலமாக நிரூபிக்க வேண்டும். அல்லது தீக்குளித்தல், தண்ணீரில் மூழ்குதல், விஷம் அருந்துதல் போன்ற கடும் சோதனைகளுக்கு தன்னை ஆட்படுத்திக் கொள்ளுதல் மூலமாக தாம் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க வேண்டும். தண்டனைகள் (தண்டனை முறை) மிகவும் கடுமையாக இருந்தது. மேலும். காட்டுமிராண்டித்தனம் கொண்டதாக இருந்தது. இதற்கு பரிகாரம் என்பது வழக்கத்தில் இல்லை. கசையடி, பிரம்படி, முழங்கால்களைத் துண்டித்தல், கழுமரத்தில் ஏற்றுதல், அடிமைப்படுத்துதல், சொத்துக்களை பறிமுதல் செய்தல். நாடு கடத்துதல், தலையை துண்டித்தல், யானை மூலம் தலையை இடரச்செய்தல் மற்றும் மிதிக்கச் செய்தல் போன்ற தண்டனைகள் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்டன. அரசுகள் பிராமணர்களின் தாக்கத்தின் கீழ் வந்த பின்னர், ஸ்மிருதிகள் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டு, தண்டனைகள் வழங்கப்பட்டன.

அக்காலத்தில் மனுஸ்மிருதி, நாரதர் ஸ்மிருதி, யக்ஞுவாக்கியர் ஸ்மிருதி போன்றவை இருந்தன. அவற்றுள் “மனுஸ்மிருதி” அடிப்படையாக இருந்தது. இந்த ஸ்மிருதிகள் பொதுவாக வர்ணம். சாதிபடிநிலைச் சமூக அமைப்பை உயர்த்திப் பிடிப்பதாக இருந்தன. ”சட்டத்தின் முன் அனைவரும் சமம்” என்ற கருத்து இருந்ததில்லை. பிராமணர்கள் பெரும்பாலும் தண்டனைகளிலிருந்து பாதுகாக்கப்பட்டிருந்தனர். எந்தவிதத்திலும் பிராமணர்கள், அவர்கள் கொடிய குற்றங்களை செய்துவிட்டாலும் உடல் ரீதியான துன்புறுத்தல், உறுப்பு நீக்கம் செய்தல், கழுமரத்தில் ஏற்றுவது, மரணதண்டனை ஆகியவற்றில் இருந்து விதிவிலக்கு செய்யப்பட்டிருந்தார்கள். மற்றொருபுறம் ஒடுக்கப்பட்ட சாதியினரை கடுமையான துன்பங்களுக்கும் மற்றும் உச்சபட்ச தண்டனைகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர். சாதி அடிப்படையிலான தொழில்களை மாற்றிக் கொள்வது என்பது மிகக் கொடிய குற்றமாக (Varna Sangraha) கருதப்பட்டது.

அர்த்தசாஸ்திரம் குற்றங்கள் நிகழ்வதை கட்டுப்படுத்துவது என்ற பெயரில் அளவுக்கு அதிகமான தண்டனைகளைப் பரிந்துரைத்தன. குற்றவாளிகள் மீது அபராதங்கள் விதிப்பது, சொத்துக்களை பறிமுதல் செய்வது முதன்மையான அரசு வருமானமாக இருந்தன. ஸ்மிருதிகள் பெண்களை கீழ்நிலை மனிதர்களாகவே நடத்தியது. வாரிசுரிமை விவகாரங்களில் பெண்களுக்கு எதிரான பாகுபாட்டுடன் தீர்ப்பளித்தனர். சூத்திரர்களும், பஞ்சமர்களும் நியாயமான விசாரணைக்கும், நியாயமான தண்டனைகளுக்கும் தகுதி இல்லாதவர்கள் ஆனார்கள். வர்த்தகத் தகராறுகள் பெரும்பாலும் வணிகக் குழு மூலம் தீர்க்கப்பட்டன. அதைப்போலவே ஒவ்வொரு கைவினைக் கலைஞர்கள் குழுவும் தங்களுடைய சொந்த பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள கைவினைஞர்கள் சங்கத்தைத் தமக்குள் வைத்து கொண்டனர். பல்லவர், பாண்டிய, சோழர்கால மகாசபைகள் நீதி விசாரணை நடைமுறைகளிலிருந்து பிராமணர்களைப் பாதுகாத்தன. மகாசபையின் வாரியம் (தர்ம வாரியங்கள், நியாய வாரியம்) மகாசபைகளுக்குள் எழும்பிரச்சனைகளை தீர்த்து வைத்தன. உள்ளூர் அமைப்புகளான ஊர், ஊரார், நகரத்தார் போன்றவை அவர்களுக்கு உரிய நீதித்துறை ஏற்பாடுகளைக் கொண்டிருந்தனர்.

அசோகப் பேரரசு போன்ற புத்த பேரரசுகள் பெரும்பாலும் ஸ்மிருதி முறைகளை புறம்தள்ளின. நீதி வழக்குகளில் சமூகக் குழுக்களுக்கிடையே ஓரளவுக்குச் சமமாக நடத்தப்பட்டன. அசோகர் கொடிய தண்டனைகளை நீக்கினார். மேலும், அவர் தனது அதிகாரிகளிடம் கைதிகளிடத்தில் மிகவும் மனிதாபிமானம் உடையவர்களாகவும், கருணை உள்ளவர்களாகவும் இருக்கும்படி அறிவுறுத்தினார். சிலப்பதிகாரத்தில் கோவலன் தூக்கிலிடப்படும் சம்பவமானது நீதித்துறை செயல் முறையிலுள்ள குறைபாடுகளை வெளிப்படுத்துகிறது. நீதித்துறையில் உயர் அதிகாரிகள் அறநெறியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று இலக்கியங்கள் வலியுறுத்தினாலும், நீதி வழக்கு விசாரணைகளில் வரம்பு மீறி நடந்து தண்டனையில் இருந்து விதிவிலக்கு கொடுப்பதோ அல்லது அநீதியான தண்டனைகளை வழங்கியிருப்பதையோ நாம் அடிக்கடி கண்டிருக்கிறோம். பண்டைய இந்தியாவில் சட்டத்தின் ஆட்சி அங்கு இருந்தது இல்லை, ஆனால் அதிகாரம் கொண்டோரின் ஆட்சியையே நாம் காண்கிறோம்.

| **கடும் சோதனைகள்:** | | |
|---|---|---|
| **தராசு முறை:** ஒரு தராசில் ஒரு பக்கம் ஒரு பனை ஓலை கட்டு வைத்துவிட்டு இன்னொரு பக்கம் குற்றம் சாட்டப்பட்டவர் அமரும்படியாக செய்யப்பட்டு தராசு சமமாக இருக்கும்படி வேண்டிக் கொள்ளுப்படுகிறார்கள். வேண்டுதலுக்கு பிறகும் அவர் இருக்கும் தராசின் பகுதி கீழே வந்து விட்டால் அவர் குற்றம் செய்தவர் என்று அறிவிப்பார்கள். | **நெருப்பு சோதனை:** குற்றம் சாட்டப்பட்டவர் தீயின் நடுவே நடந்து வர செய்யப்படுவார். அந்த நபர் எந்த தீ காயமும் அடையவில்லை என்றால் மட்டுமே அவர் குற்றமற்றவராக கருதப்படுவார். | **தண்ணீர் முறை:** தெய்வ சிலையை சுத்தப் படுத்துவதற்கு உள்ள நீரை, குற்றம் கூறினால் குற்றம் சாட்டப்பட்டவர் அதை குடிக்கும்படி செய்யப்படுவார். அதனை தொடர்ந்து வரும் 14 நாட்களுக்குள் குடிக்கும் வரை அவருக்கு எந்த கேடான பாதிப்பும் ஏற்படவில்லை என்றால் அவர் குற்றமற்றவர் என கருதப்படுவார் |
| **நஞ்சு அருந்தும் சோதனை:** இம்முறையில் குற்றம் சாட்டப்பட்டவர்கருக்கு நஞ்சு அருந்தும்படியாக செய்யப்படுவார். அந்த நபருக்கு எந்த தீய விளைவும் ஏற்படவில்லை என்றால் அவர் குற்றமற்றவர் என கருதப்படுவார் | **குலுக்கல் சோதனை:** குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு தொகுப்பில் இருந்து ஒன்றை எடுத்து தரும்படி கேட்டுக் கொள்ளப்படுவார். அதில் அவருக்கு ”தர்ம கட்டு” வந்திருந்தால் அவர் குற்றமற்றவராக கருதப்படுவார். | **அரிசி தானிய சோதனை:** இம்முறையில் குற்றம் சாட்டப்பட்டவர் உமி நீக்கப்படாத நெல் தானியத்தை மென்று சாப்பிடும் படியாக செய்யப்படுவார். அவருடைய வாயில் இரத்தக்கறை காணப்பட்டால் அவர் குற்றம் செய்தவர் என்று அறிவிக்கப்படுவார். |
| **ஊற்றுநீர் சோதனை முறை:** இங்கு குற்றம் சாட்டப்பட்டவர் நஞ்சு போன்ற நீரை குடிக்கும்படியாக செய்யப்படுவார். அவர் உளறினால் அவர் குற்றம் செய்தவராவார் அல்லது குற்றத்தை அந்த நபர் ஒத்துக் கொண்டவராவார். | | |

இடைக்கால இந்தியாவில், முஸ்லீம் ஆட்சியாளர்கள் ஒருவித தனித்தன்மை கொண்ட சூழ்நிலையை எதிர்கொண்டனர். அங்கே அவர்கள் ஆட்சியின் கீழ் வாழ்ந்த மக்கள் பெரும்பான்மையானோர் முஸ்லீமல்லாதவர்கள். முஸ்லீம் மற்றும் முஸ்லீம் நலன்கள் சார்ந்த வழக்குகளில் இஸ்லாமிய சட்டங்களை பயன்படுத்தினர். அதேநேரம், முஸ்லீம் அல்லாதவர்களின் சமூக-மத விவகாரங்களில் தலையிடா கொள்கைக்கு முன்னுரிமை அளித்தனர். அங்கெல்லாம் கிராமப்புற பாரம்பரிய விசாரணை முறையை ஏற்றனர். முஸ்லீம் ஆட்சியாளர்கள் குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை மிகவும் சரியாக வேறுபடுத்திக் காட்டியிருந்தனர். ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட முறைகளைக் கையாண்டனர். எனினும், இறைப்பழி போன்ற வழக்குகளில் மிகவும் கொடிய தண்டனைகளை குற்றம் சாட்டப்பட்டவருக்கு அளித்தனர்.

**இடை காலத்தில் இந்தியாவில் நீதித்துறை அமைப்பு:**

இடைக்கால இந்தியாவில் பேரரசை நிர்வகிக்கும் சுல்தான் / சுல்தானா ஆகியோரே நீதி நிர்வாகத்தை நிர்வகிக்கும் உச்சபட்ச அதிகாரம் கொண்டவர்கள் ஆவர். அவர்கள் கீழ்க்கண்ட தகுதி நிலைகளில் இருந்து நீதி நிர்வாகத்தை நடத்தினர். அவற்றின் பெயர்கள் பின்வருமாறு:

- ❖ திவான்-இ-குவாசா (நடுவர்)
- ❖ திவான்-இ-மசலிம் (அதிகாரத்துவத்தின் தலைவர்) மற்றும்
- ❖ திவான்-இ-ரியாசத் (தலைமை தளபதி).

இடைக்கால இந்தியாவில் நிர்வாக அமைப்புமுறைகளே நீதித்துறை அமைப்புகளாக வகைப்படுத்தப்பட்டிருந்தன. நீதிமன்றங்களின் அதிகார வரம்பானது தலைநகரம், மண்டலம், மாவட்டம், பர்கானா (வட்டம்) மற்றும் கிராமம் என நிலப்பரப்பு அடிப்படையில் தெளிவாக பிரிக்கப்பட்டிருந்தது. பொதுவாக, சுல்தானத்தின் தலைநகரில் கீழ்க்கண்ட ஆறு வகையான நீதிமன்றங்கள் நிறுவப்பட்டு இருந்தன.

- ❖ மன்னர் நீதிமன்றம்
- ❖ மேல்முறையீட்டு உச்ச நீதிமன்றம் (திவான்-அல்-மசாலிம்)
- ❖ குடிமையியல் வழக்குக்கு உள்ள நீதிமன்றம் (திவான்-இ-ரிசாலட்)
- ❖ மாநிலத் தலைமை நீதிபதி நீதிமன்றம் (சத்ரே ஜகான் நீதிமன்றம்)
- ❖ தலைமை நீதிபதி நீதிமன்றம்
- ❖ தேசத்துரோக வழக்குகள் நீதிமன்றம் (திவான்-இ-ரியாசட்)

மன்னர் நீதிமன்றம் சுல்தானால் தலைமையேற்று நடத்தப்பட்டது. இந்த நீதிமன்றம் அசல் அதிகாரவரம்பு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றம் என இரண்டும் கொண்ட அமைப்பாகச் செயல்பட்டது. நீதி நிர்வாகத்தைப் பொருத்தவரை இதுவே உச்சபட்ச மேல்முறையீட்டுத் தீர்ப்பாகும். முப்தி (சட்டவல்லுனர்) எனப்படும் சட்டவல்லுனர்கள் சுல்தானுக்கு உதவியளித்தனர்.

திவான்-அல்-மசாலிம் மற்றும் திவான்-இ-ரிசாலட் நீதிமன்றங்கள் முறையே தேச துரோக வழக்குகள் மற்றும் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் உச்ச நீதிமன்றங்களாகும்.

இந்த நீதிமன்றங்கள் அலுவலக ரீதியாக சுல்தானால் தலைமை தாங்கி நடத்தப்பட வேண்டும் எனினும், அவர் அதிகமாக குற்றவியல் நீதி விசாரணைகளின்போது மட்டுமே கலந்து கொண்டார். சுல்தான் இல்லாதபோது குவாசி-உல்-குசாட் எனும் அரசின் நீதிமன்ற தலைமை அலுவலர் தலைமை தாங்கி நடத்துவார். ஆனால், பின்னர் சத்ரே ஜகான் எனும் அலுவலர் பதவி உருவாக்கப்பட்டு நீதித்துறையின் உண்மையான தலைமை அலுவலராக செயல்பட்டார். இந்த சத்ரே ஜகான் நீதிமன்றமும் மற்றும் தலைமை நீதிபதி நீதிமன்றமும் பின்னர் அலாவுதீன் கில்ஜி ஆட்சியில் இணைக்கப்படும்வரை நீண்டகாலமாகத் தனித்தே இயங்கின. தலைமை நீதிபதியின் நீதிமன்றம் குடிமையியல் மற்றும் குற்ற வழக்குகளைக் கையாண்டது. தலைமை நீதிபதியின் கீழ் திறமையான, நேர்மையான மதிக்கப்பட்ட உதவி நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். முப்தி, பண்டிட், மொக்டாசிப் (அரசு வழக்கறிஞர் தரப்பு) தாத்பாக் (நிர்வாக அலுவலர்) போன்ற அலுவலர்கள் தலைமை நீதிபதியின் நீதிமன்றத்துடன் இணைக்கப்பட்டிருந்த அலுவலர்கள் ஆவர். திவான்-இ-ரியாசத் பெரும் தேச துரோக வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம் ஆகும்.

**நவீன இந்தியாவில் நீதித்துறை அமைப்பு:**

கிழக்கிந்திய கம்பெனி 1600 ஆண்டு முதலாம் ராணி எலிசபெத்தின் சாசன சட்டத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டது. கிழக்கந்திய கம்பெனி வர்த்தகம் மேற்கொள்ளத் தேவையான ஒழுங்கு முறைகள் மற்றும் அங்கீகாரத்தை அரசு அளித்தது. மதராஸ் நிர்வாகத்தைப் பொருத்தவரை 1661-ஆம் ஆண்டு சாசன சட்டம் ஒரு ஆளுநர் அவருடன் தலா ஒரு குடியேற்றப்பகுதிக்கு ஒரு உறுப்பினர் என்ற அடிப்படையில் ஒரு குழுநியமிக்க வழி வகுத்தது. இக்குழுவே வழக்குகளை விசாரித்தது. கிழக்கிந்திய கம்பெனி குறிப்பாக மதராஸ் பகுதியில் ஒரு ஆளுகை சக்தியாக உருவானது. இங்கு ஏற்கெனவே இயங்கிய உள்ளூர் நீதி நிர்வாக முறையைப் பின்பற்றும் வகையில் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்தது. இங்கிலாந்து சட்டத்தின்படி ஆளுநரும் அவருடைய ஆட்சிகுழுவும்

குடிமையியல், குற்ற வழக்குகளைத் தீர்மானிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டன. எனினும் உள்நாட்டு வழக்குகளில் உள்ளூர் பாரம்பரிய முறைகளே பின்பற்றப்பட்டன. இங்கிலாந்து அரசால் விசாரிக்கப்பட்ட முதல் வழக்கு அசென்டினா வழக்கு ஆகும்.

1665-ஆம் ஆண்டு இந்த வழக்கு நடந்தது. அப்போது, பாக்ஸ் க்ராப்ட் ஆளுநராக இருந்தார். 1678-ஆம் ஆண்டு ஸ்டிரெய்ன்ஷாம் மாஸ்டர் என்பவர் ஆளுநராக நியமனம் செய்யப்பட்டது. மதராஸ் நீதிமுறை அமைப்பு மறுசீரமைப்பு செய்யப்படுவதற்குக் காரணமானது. ஆளுநரும் அவருடைய குழுவும் சேர்ந்து நீதி வழங்கும் அதிகாரம் கொண்ட உயர் நீதிமன்ற ஆட்சி குழுவாக மாறியது. ஆங்கிலம் நீதிமன்ற மொழியாக அறிவிக்கப்பட்டது. வணிகர்கள் கடலில் மேற்கொள்ளும் குற்றங்களை விசாரிக்க ஒரு கடற்படை நீதிமன்றம் நிறுவ 1683-ஆம் ஆண்டு சாசன சட்டம் வழிவகுத்தது. 1687 – ஆம் ஆண்டு சாசன சட்டம் மதராஸ் மாநகராட்சி அமைப்பதற்கு கிழக்கிந்திய கம்பெனிக்கு அதிகாரமளித்தது. அதோடு மேயர் நீதிமன்றம் இணைக்கப்பட்டது. இதுவே மதராஸ் நகரத்தின் நீதிமன்றமாக (வழக்கு மன்றம்) இயங்கியது.

பம்பாயின் நீதி நிர்வாகத்தைப் பொருத்தவரை, பாம்பே மீது கிழக்கிந்திய கம்பெனி நீதிதுறை அதிகாரம் செலுத்த 1668 ஆம் ஆண்டு சாசன சட்டம் அதிகாரம் அளித்தது. 1672-ஆம் ஆண்டு பிரகடனம். ஆங்கிலேயச் சட்டத்தை பம்பாயில் அறிமுகப்படுத்தியது. மேலும், பம்பாய் நீதிவழக்கும் அதிகாரம் கொண்ட நீதித்துறை புதிய மத்திய நீதிமன்றத்தை நிறுவியது. ஆங்கில சட்டத்தின் பயன்பாடு என்பது ஐரோப்பியர்கள் மற்றும் ஐரோப்பியர்கள் நலன்கள் சார்ந்த விவகாரங்களுக்கு பொருந்தக் கூடியதாகும். இந்த நீதிமன்றமானது குடிமையியல், குற்றவியல் மற்றும் நிருபிப்பு வழக்குகளில் அதிகாரவரம்பைச் செயற்படுத்தியது. மேலும் குற்றச் சட்டங்களை நிர்வகிக்க அமைதிக்கான நீதிபதிகள் நியமனம் செய்யப்பட்டனர். அதன்பிறகு சாட்சியங்களை விசாரணை செய்யவும், தொடக்கநிலை விசாரணைகள் செய்யவும், வழக்ககுகள் நீதிமன்றத்தை நோக்கி கொண்டு செல்லப்பட்டன. எனினும் சித்தி யாக்கூப் எனும் முகலாய கடற்படை தளபதியின் படையெடுப்பு 1690-ஆம் ஆண்டு பம்பாயில் நீதிமன்றம் கலைக்கப்படக் காரணமாகிறது. 12 ஆண்டுகளுக்குப் பிறகு, 1718 ஆம் ஆண்டு மீண்டும் நீதிவழங்கும் அதிகாரம் கொண்ட நீதிமன்றம் புதுப்பிக்கப்பட்டது. இந்த நீதிமன்றம் குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்கு விவகாரங்கள் மீதான விசாரணை நடத்த அதிகாரம் கொண்டதாகும். இந்த நீதிமன்றமானது வாரத்திற்கு ஒரு முறை கூடினாலும், துரிதமான விசாரனைக்கும் பாகுபாடற்ற தீர்ப்புகளுக்கும் புகழ் பெற்றதாகக் கருதப்படுகிறது.

கல்கத்தா மாகாணத்தைப் பொருத்தவரை, ஆளுநருக்கும், அவருடைய ஆட்சிக் குழுவுக்கும் நீதித்துறை அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. குடிமையியல் மற்றும் குற்றவியல் விவகாரங்களைப் பொருத்தவரை, கிழக்கிந்திய கம்பெனியானது ஏற்கனவே வழக்கத்திலிருந்த முகலாய நீதித்துறை நிர்வாக முறையையே பின்பற்றியது. ஆங்கிலேயே மாவட்ட ஆட்சியரால் மூன்றாம் நடுவர் தீர்ப்பாயத்திற்குப் பரிந்துரைக்கப்படும் குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை பாஜ்தாரி நீதிமன்றம் தலைமையேற்று நடத்தியது. கல்கத்தா நீதித்துறை நிர்வாகத்தில் மாவட்ட ஆட்சியர் மிக முக்கியப் பங்கு வகித்தார். மேலும், அவருடைய அலுவலகம் குடிமையியல், குற்றவியல் மற்றும் வருவாய் வழக்குகளை விசாரிக்கும் அலுவலகமாகவும் இருந்தது.

இதேபோல் சாசன சட்டம் 1687 மதராஸ் மாகாணத்தில் பயன்படுத்தப்பட்டது. அதே நேரத்தில் 1726-ஆம் ஆண்டு சாசன சட்டம் மூன்று மாகாணங்களிலும் ஒவ்வொரு மேயர் நீதிமன்றங்களை அமைத்தது. 1753-ஆம் ஆண்டு சாசன சட்டம், 1726-ஆம் ஆண்டு சாசனத்தில் நீதி தொடர்பான பகுதிகளை மேலும் சீர்த்திருத்தம் செய்தது. மேலும் இந்த சாசனம் சட்டம் ஐந்து நீதிமன்றங்களை நிறுவியது. அவைகள், முறையே கோரிக்கைகள் நீதிமன்றம், மேயர் நீதிமன்றம், குடியரசுத்தலைவர் நீதிமன்றம். ஆட்சிக்குழு கொண்ட நீதிமன்றம் மற்றும் அரசர் தலைமையிலான நீதிமன்றம் ஆகியனவாகும். இந்திய நிதித்துறையின் மற்றொரு வரலாற்றுச் சிறப்புமிக்க பரிணாம வளர்ச்சி 1772-ஆம் ஆண்டு வாரன் ஹேஸ்டிங்கின் திட்டமாகும். இது நீதித்துறை நிர்வாகத்தை ஒழுங்குப்படுத்துவதாக இருந்தது. 1780-ஆம் ஆண்டுகளில் அவர் மாகாண நீதிமன்றங்களைச் சீரமைத்தார்.

காலனி ஆட்சிக் காலத்தில் நீதித்துறையில் ஏற்பட்ட மிக முதன்மையான மேம்பாடு என்பது உள்ளூர் சட்டங்களை தொகுத்தது ஆகும். முதலாவது கவர்னர் ஜெனரல் பதவி வகித்த வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்து சட்டங்களைத் தொகுப்பதற்கு காரணமானவர் ஆவார். அடுத்து கார்ன் வாலிஸ் தொகுத்த சட்டத் தொகுப்பு மற்றொரு முதன்மையான பங்களிப்பாகும்.

அதைப்போலவே இஸ்லாமிய சட்டங்களும் தொகுக்கப்பட்டு நீதிமன்றங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

கல்கத்தாவில் ஒழுங்குமுறைச் சட்டம் 1773-ஆம் ஆண்டு. ஒரு உச்ச நீதிமன்ற நீதி நிர்வாகம் அமைக்க மன்னருக்கு அதிகாரம் அளித்தது. சாசன சட்டம் 1774 உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்புகளை விரிவாக்கம் செய்தது. எனினும் மதராஸ், பம்பாய் உச்ச நீதிமன்றங்கள் உடனடியாக நிறுவப்படவில்லை. 1801 மற்றும் 1824 ஆம் ஆண்டுகளில் முறையே மதராஸ், பம்பாய் உச்ச நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. 1793-ஆம் ஆண்டில் காரன்வாலிஸ் பிரபு “சட்ட விதிகள் தொகுப்பு“ ஒன்றினைத் தயாரித்தார். இதுவே, “காரன்வாலிஸ் சட்டத் தொகுப்பு“ எனப் புகழ்பெற்றது. அது குடிமை மற்றும் குற்றவியல் என இரு விசாரணை முறைகளையும் கையாளுவதாக இருந்தது. அவர் குடிமையியல் நீதிமன்றங்களை அங்கீகரித்தார். நீதிமன்றக் கட்டணங்களை ஒழித்தார். மேலும், குற்றவியல் நீதிமன்றங்களில் சீர்திருத்தம் செய்தார். வங்காளத்தின் கவர்னர் ஜெனரலாக 1807-ஆம் ஆண்டு பதவியேற்ற மின்டோ பிரபு பல்வேறு நீதிமன்றங்களின் அதிகாரங்களையும், அதிகார வரம்பினையும் அதிகரித்தார். 1813-ஆம் ஆண்டு ஹாஸ்டிங்ஸ் பிரபு கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அவர் நாட்டின் குடிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நிர்வாகத்தில் மேலும் பல சீர்த்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். நீதி நிர்வாகத்தில் நிலவும் சிவப்பு – நாடா முறையைத் தடுக்க முயற்சி எடுக்கப்பட்டது. இவரைத் தொடர்ந்து பெண்டிங் பதவியேற்றார்.

இவர் இந்தியாவின் நீதித்துறை நிர்வாகத்தை மறுசீரமைப்பு மற்றும் தொகுக்கும் பணியை செய்தார். அவர் மாகாண மேல்முறையீட்டு நீதிமன்றங்களை மூடினார். அப்பணிகளை மாவட்ட நடுவர் நீதிமன்றங்களுக்கு மாற்றினார். 1834 – 1861 காலகட்டத்தில் இங்கிலாந்து மன்னர் நீதிமன்றமும், இந்தியாவில் கம்பெனி நீதிமன்றமும் தனித்தனி அதிகார வரம்புகளைக் கொண்ட இரட்டை நீதி அமைப்பை உருவாக்கி இருந்தது.

இந்திய உயர் நீதிமன்ற சட்டம் 1861, கல்கத்தா, மதராஸ், பாம்பாய் ஆகிய நகரங்களில் நீதி வழங்கும் அதிகாரம் கொண்ட உயர் நீதிமன்றங்களை அமைக்க மன்னருக்கு அதிகாரம் அளித்தது. இது உச்ச நீதிமன்ற முறை ஒழிப்புக்கு இட்டுச் சென்றது. இதுவே இந்தியாவில் உயர் நீதிமன்றங்கள் தோன்றுவதற்கான வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வாகக் கருதப்படுகிறது. பின்னர், இந்திய அரசாங்கச் சட்டம் 1935, இந்திய உயர் நீதிமன்றங்களின் தன்மை, அதிகார வரம்பில் குறிப்பிடத்தக்க மாறுதல்களைச் செய்தது. இந்தியா விடுதலை அடைந்து அரசமைப்பு ஏற்கப்பட்ட காலகட்டத்தில் பஞ்சாப், அசாம், ஒடிசா, ராஜஸ்தான், திருவாங்கூர், மைசூர் மற்றும் ஜம்மு காஷ்மீர் என ஏழு உயர் நீதிமன்றங்கள் நிறுவப்பட்டிருந்தன. பிற உயர் நீதிமன்றங்கள் பின்னர் உருவாயின. இந்திய அரசமைப்பு நடைமுறைக்கு வந்த பின்னர், ஏற்கெனவே இயங்கிய உயர் நீதிமன்றங்கள் அங்கீகரிக்கப்பட்டன. மேலும், அனைத்து மாநிலங்களும், ஒன்றிய ஆளுகைக்குட்பட்டப் பகுதிகளும் உயர் நீதிமன்றம் பெறும் வகையில் ஒவ்வொரு மாநிலம் அல்லது இரண்டு, மூன்று பகுதிகள் இணைத்து உயர் நீதிமன்றங்களை நிறுவ நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. 1976-ஆம் அ்ணடு 42-வது அரசமைப்பு திருத்தச்சட்டம் உயர் நீதிமன்றங்களின் அதிகார வரம்பில் பெருமளவு மாற்றத்தினை கொண்டு வந்தது.

இவ்வாறாக, தொடக்கக் காலத்தில், கல்கத்தா, சென்னை, பம்பாய் என மூன்று உயர் நீதிமன்றங்களே அன்று இருந்தன. சுதந்திரத்திற்கு முன் இருந்த சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் மட்டுமல்லாமல், உயர் நீதிமன்றங்கள் அமைப்பு மற்றும் அதிகாரவரம்பிலும் பெயரளவில் மாற்றங்களைக் கொண்டுவந்தன. இதன்மூலம் அவற்றின் சுதந்திரத் தன்மை பாகுபாடற்றத் தன்மை போன்றவை உறுதி செய்யப்பட்டன. அரசமைப்பை நடைமுறைக்கு கொண்டு வந்த பின்பே உயர் நீதிமன்றங்களின் நிலையானது வலிமையடைந்தது மேலும் குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் அசல் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்ற என்ற நிலையைக் கடந்து, அரசமைப்பின் பாதுகாவலனாகவும், அரசமைப்பு குறித்து விளக்கமளிக்கும் அதிகாரம் கொண்டதாகவும் வலுவடைந்தது.

இந்திய உச்ச நீதிமன்றத்தை பொருத்தவரை, இந்திய அரசாங்கச் சட்டம் 1935 ல் ஓர் மைல்கல் சட்டமாகும். இந்திய அரசாங்கத்தின் அமைப்பை மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி இச்சட்டம், ஒற்றையாட்சி முறையில் இருந்து கூட்டாட்சி முறைக்கு மாறிக் கொண்டிருந்த அத்தருணத்தில் ஒரு கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்றம் தேவை அதிகரித்தது. எனவே, இது தொடர்பாக, அச்சட்டத்தில் ஒரு வதி சேர்க்கப்பட்டது. அதன்படி 1937-ஆம்

ஆண்டு கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்றம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதியையும் மற்றும் ஆறு நீதிபதிகளையும் கொண்டிருந்தது. 1950-ஆம் ஆண்டு இந்நீதிமன்றம் இந்தியாவின் உச்ச நீதிமன்றமாக ஆனது.

இடைப்பட்ட 12 ஆண்டுகள் எனும் குறுகிய காலத்தில் கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்றம் இந்திய சட்ட வரலாற்றில் அழியாத விளைவுகளை விட்டுச் சென்றது. தேசிய அதிகார வரம்பு கொண்ட முதல் நீதிமன்றமும் இதுவே ஆகும். இந்த கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்றத்தில் இருந்துதான் அதன் நீதிபதிகள் சுதந்திரம், நேர்மை, பாகுபாடற்ற விசாரணை என்ற மரபைப் பெற்றெடுத்தனர். மேலும், 1726 மற்றும் 1883-ஆம் ஆண்டுகளுக்கிடையே பிரபுக்களின் நீதிமன்ற மேலவை (Privy Council) ஆற்றிய பங்கு குறித்தும் இங்கு சிறப்பாக குறிப்பிட்ட வேண்டியது தேவையாகிறது. இது இந்திய நீதித்துறை முறைக்கு இன்றியமையாத அளவிற்கு பங்களித்தது. இன்றளவும் நீதிமன்றங்களில் ஒளிவிளக்காக உள்ள அடிப்படையான இந்திய சட்டக் கோட்பாடுகளை வகுத்துக் கொடுத்தது இதுவே ஆகும்.

**சர் ஹரி சிங் கோர்:**
இறுதிக்கட்ட மேல்முறையீட்டுக்காக பிரிந்து செல்லாமல் இந்தியாவிலேயே மேல்முறையீடு ஒரு அனைந்திந்திய தலைமை நீதிமன்றத்தின் தேவையை 1921 ல் உணர்ந்தவர்.

இந்திய சுதந்திரச் சட்டம், 1947-ஆம் ஆண்டு மூலம் அரசியல் அதிகாரம் மாற்றப்பட்டது. இந்தியாவில் தனித்த, சுதந்திரமான நீதித்துறை அமைப்பு நிறுவுவதன் தேவையை ஏற்படுத்தியது. இந்த நோக்கத்துடன் கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பு இது விரிவாக்கப்பட்டது. இதையொட்டி, பிரபுக்கள் நீதிமன்ற மேலவை ஒழிப்பு, கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்ற அதிகார விரிவாக்கம் சட்டம் 1949 இயற்றப்பட்டது. இதன்படி, இந்தியக் கூட்டாட்சிமுறை சார்ந்த நீதிமன்றம் நாட்டின் உயர்ந்தபட்ச நீதி அதிகார வரம்பு கொண்டதாக வலுவடைந்தது. ஜனவரி 26. 1950 – ஆம் ஆண்டு அரசமைப்பு அமலாக்கத்துடன், அரசமைப்பு உறுப்பு 124 இந்திய உச்ச நீதி மன்றத்தை நிறுவ வழி செய்தது. இவ்வாறு, மெதுவாகவும், சீராகவும் படிப்படியாகவும் இந்திய நீதி அமைப்பு பரிணாமம் அடைந்தது. இது காலத்தோடு பொருந்தி சிறப்பாக வளர்ந்து தன்னை நிரூபித்துக் கொண்டுள்ளது.

**இந்திய உச்ச நீதிமன்றம்:**

தனித்தன்மை – சட்ட மூலவளங்கள் - அதிகார வரம்பு மற்றும் அதிகாரங்கள் - நிறுவனமயம்.

இந்திய அரசமைப்பு மூன்று அடுக்கு நீதித்துறை அமைப்பினை வழங்குகிறது. அவை வருமாறு:

1. இந்திய உச்ச நீதிமன்றம்
2. அரசமைப்புப்படி உருவாக்கப்பட்ட மாநிலங்களில் உள்ள உயர் நீதிமன்றங்கள்.
3. ஒவ்வொரு மாநிலத்திலும் நீதி மாவட்டங்களில் வாரியாக மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள்

இந்திய அரசமைப்பு நீதித்துறைக்கு சுதந்திரம் வழங்கியுள்ளது. அதாவது, ஆட்சித்துறை சட்டமன்றங்களின் தலையீடுகளில் இருந்து நீதித்துறைக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தியா போன்ற கூட்டாட்சி மக்களாட்சியில், உச்ச நீதிமன்றமே அரசமைப்பின் காவலன் ஆகும். மத்திய, மாநில அரசுகளுக்கு இடையில் எழும் சிக்கலுக்கு, தீர்வு காண்பது, மாநிலங்களுக்கு இடையே எழும் சிக்கல்களுக்கு தீர்வு காண்பது, குற்றவியல், குடிமையியல் வழக்குகளில் உயர்ந்தபட்ச மேல்முறையீடு நீதிமன்றம் ஆகிய மிகப் பெரிய பொறுப்புகளை நிறைவேற்றுகிறது. அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் அடிப்படை உரிமைகள் அமலாக்கம் மற்றும் அனைத்து இந்தியக் குடிமக்களின் சுதந்திரம் ஆகிய பெரும் பொறுப்புகளை உச்ச நீதிமன்றம் சுமக்கிறது. எனினும் அமெரிக்க, ஐக்கிய நாடுகளின் கூட்டாட்சி அமைப்பு போன்று (ஒன்று கூட்டாட்சிக்காக மற்றொன்று மாநிலங்களுக்காக) என இரண்டு தொகுப்பு நீதித்துறை அமைப்பினை இந்திய அரசமைப்பு வழங்கவில்லை. இந்தியா ஒரு ஒருங்கிணைந்த நீதித்துறை முறையினை மட்டுமே கொண்டிருக்கிறது. இதன்படி, உச்ச நீதிமன்றம் தலைமை நீதிமன்றமாக (Apex) இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்கள் மீதும் அதிகாரம் செலுத்துகிறது.

**சட்ட மூலவளங்கள்:**

இந்தியாவில் சட்ட ஆட்சியின் மூல ஊற்றாக அரசமைப்பு அமைந்திருக்கிறது. அரசமைப்பின் அடிப்படைகளுக்கு ஏற்ப நாடாளுமன்றம் மற்றும் மாநிலங்கள், ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் சட்டமன்றங்கள் சட்டங்கள் இயற்றிக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது. தவிர, உறுப்புகள், ஒழுங்குமுறைகள், நிர்வாக அமைப்புச் சட்டங்கள் என துணைச் சட்டங்கள் இயற்றவும் அனுமதிக்கப்படுகிறது. அதே சமயம், இவை மூன்றாவது சட்ட மூலங்கள் எனக் கருதப்படும்.

**ஒருங்கிணைந்த நீதித்துறை:**
இந்தியக் கூட்டாட்சி, இரட்டை ஆட்சி அமைப்புமுறை கொண்டிருந்தாலும் இரட்டை நீதித்துறை அமைப்பைக் கொண்டிருக்கவில்லை.
உயர் நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றமும், அரசமைப்பின் கீழ் ஒருங்கிணைந்த நீதித்துறையாகச் செயல்பட்டு அனைத்து குடிமையியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கு தீர்வு காண்கிறது. தீர்வு வழங்கும் முறையில் வேறுபாடுகளைக் களைவதற்காக இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது.

**உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பும் அதிகாரங்களும்:**

உச்ச நீதிமன்றமே அசல், மேல்முறையீட்டு மற்றும் ஆலோசனை வழங்குதல் என மூன்று அதிகார வரம்புகளைக் கொண்டுள்ளது. அசல் நீதி அதிகாரவரம்பு என்பது உச்ச நீதிமன்றங்களில் அனைத்து வழக்குகளுக்கும் மூலதாரமாகிவிடுகிறது என்பதாகும். இவை மத்திய அரசாங்கங்களுக்கும் அல்லது இதர மாநில அரசுகளுக்கும் இடையே எழும் கருத்து வேறுபாடுகள் அல்லது மாநிலங்களுக்கு இடையே எழுகின்ற சிக்கல்களையும் உள்ளடக்கியது ஆகும். அடிப்படை உரிமைகள் தொடர்புடைய வழக்குகளில் உச்ச நீதிமன்றமானது அசல் நீதித்துறை, மேல்முறையீட்டு அதிகார வரம்பு என இரண்டு அதிகாரங்களையும் கொண்டிருக்கிறது. மேலும் நீதிப்பேராணைகள் முறையே, ஆட்கொணரவு, நெறியுறுத்தும் நீதிப்பேராணை, தகுதிமுறை வினவுதல், தடை, கீழமை நீதிமன்றங்களுக்கு ஆணையிடுதல், விளக்கம் கோரி ஆணையிடுதல் போன்ற ஆணைகளை உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கிறது.

உச்ச நீதிமன்றம்தான் இந்தியாவில் உள்ள உச்சபட்ச மேல் முறையீட்டு நீதிமன்றமாகும். உயர் நீதிமன்றங்களுக்கு எதிரான மேல்முறையீடுகளை இங்கு தான் செய்ய முடியும் (குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் இரண்டிற்கும்). குறிப்பிட்ட விவகாரங்களில் வழிகாட்டுதல் வழங்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்துக்கு உள்ளது.

**தாமதமாகும் நீதி, மறுக்கப்படும் நீதியே**

- கீழமை நீதிமன்றங்களில் 2.91 கோடி வழங்குகள் நிலுவையில் உள்ளது. நீதி பரிபாலனம் தாமதம்.

- 10 ஆண்டுகளுக்கும் அதிகமாக வழக்குகள் அதிகம் தேக்கம் அடைந்துள்ள மாநிலங்களில் மாவட்ட மற்றும் துணை நீதிமன்றங்களில் மட்டும் 8 கோடி வழக்குகளை நிலுவையாகக் கொண்டு உத்திரப்பிரதேச மாநிலம் முதலிடம் வகிக்கிறது.

- தேசிய நீதித்துறை தகவல் அமைப்பின்படி, நாடு முழுவதும் மாவட்ட மற்றும் துணை நிலை நீதிமன்றங்களில் 2.91 கோடி வழக்குகள் தேக்கமடைந்துள்ளன. இவற்றில் 21.9 லட்சம் வழக்குகள் 10 ஆண்டுகளுக்கும் அதிகமாக நிலுவையில் உள்ளன.

- வழக்குகள் அதிகமாக தேக்கமடைந்த மாநிலங்களில் உத்திரப்பிரதேச மாநிலத்திற்கு அடுத்தப்படியாக பீகார் மாநிலத்தில் மூன்று லட்சம் வழக்குகளும் மஹாராட்டிர மாநிலத்தில் இரண்டு லட்சம் வழக்குகளும் நிலுவையில் உள்ளன. சிக்கிம் மாநிலத்தில் இரண்டு வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளது. அந்தமான் நிக்கோபார் மாநிலத்தில் ஒரு வழக்கும் நிலுவையில் இல்லை.

தாமதமாகும் நீதி மறுக்கப்படும் நீதி என்ற தலைப்பில் மாணவர்களை இருப்பிரிவுகளாகப் பிரித்து உரையாடுவதற்கு ஆசிரியர் ஏற்பாடு செய்யலாம். ஒருக் குழுவினர் தலைப்பிற்கு ஆதரவாகவும் மற்றக் குழுவினர் தலைப்பிற்கு எதிராகவும் வாதிடும்படி குடியரசுத்தலைவர் உச்ச நீதிமன்றத்திடம் எந்த ஒரு சட்ட விவகாரம் குறித்தும் ஆலோசனை கேட்டு அணுக முடியும். ஆனால் உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனைகளை குடியரசுத்தலைவர் ஏற்க வேண்டிய கட்டாயம்

| |
|---|
| இல்லை. |

உச்ச நீதிமன்றம் இந்திய அரசமைப்பின் பாதுகாவலனாக இயங்குகிறது அரசமைப்புக்கு விளக்கம் அளிப்பதில் உச்ச நீதிமன்றமே இறுதி அதிகாரம் கொண்டுள்ளது. நிர்வாக நடவடிக்கையோ, கீழமை நீதிமன்றங்களின் தீர்ப்புகளோ அரசமைப்பின் அடிப்படை நோக்கங்களுக்கு எதிராக உள்ளது என உச்ச நீதிமன்றம் கருதுமானால் அதனை ரத்து செய்யும் அதிகாரம் கொண்டுள்ளது.

**உச்ச நீதிமன்றம் அமைப்பு:**

உச்ச நீதிமன்றமானது இந்திய அரசமைப்புப் பகுதி 5 அத்தியாயம் 4 முதல் நிறுவப்பட்டுள்ளது. அரசமைப்பு உறுப்புகள் 124 முதல் 147 வரை இந்திய உச்ச நீதி மன்றத்தின் வடிவம் மற்றும் அதிகார வரம்புகள் குறித்து கூறுகின்றன. அரசமைப்பு ஆரம்பத்தில் ஒரு நீதிபதி, ஏழு கீழ்நிலை நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்றத்தினை அனுமதித்தது. இந்த எண்ணிக்கையை அதிகரிக்கவும் நாடாளுமன்றத்திற்கு அரசமைப்பு அதிகாரம் கொடுத்திருந்தது. 2008-ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்தது.

உச்ச நீதிமன்ற நீதிபதியை நியமனம் செய்வதற்கு, தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்றத்தின் இதர நான்கு மூத்த நீதிபதிகள் கொண்ட “குழு” – வுடன் (Collegium) கலந்தாலோசிக்க வேண்டும். புதிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குறித்து குழு ஒருமித்த கருத்து அடிப்படையில் பரிந்துரைக்கிறது. உச்ச நீதிமன்றத்தின் ஒவ்வொரு நீதிபதியும் அமைச்சரவை மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளுடன் கலந்தாலோசனை செய்த பின்னர் குடியரசுத்தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார். அவ்வாறு நியமனம் செய்யும் உச்ச நீதிமன்ற நீதிபதி 65 வயது அடையும் வரை பதவியில் இருக்கலாம். எந்த ஒரு நீதிபதியாவது பதவி விலக நினைத்தால், தன்னால் கைப்பட எழுதிய பதவி விலகல் கடிதத்தில் கையொப்பமிட்டு குடியிரசுத்தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டும். ஒரு நீதிபதியை நாடாளுமன்றத்தில் கண்டன தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம் பதவி நீக்கம் செய்ய முடியும்.

குடியரசுத்தலைவருக்க சமர்ப்பிக்க வேண்டும். ஒரு நீதிபதியை நாடாளுமன்றத்தில் கண்டன தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம் பதவி நீக்கம் செய்ய முடியும்.

ஒருவர் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட அவர் இந்தியக் குடியுரிமை பெற்றிருத்தல், உயர் நீதிமன்ற நீதிபதியாக ஐந்து ஆண்டுகள், பணியாற்றிய அனுபவம் அல்லது குறைந்தது 10 ஆண்டுகள், தொடர்ந்து ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட உயர் நீதிமன்றங்களில் வழக்குரைஞராகப் பணியாற்றிய அனுபவம் இவற்றுடன் நாடாளுமன்றம் விதித்துள்ள தகுதிகளையும் கொண்டிருக்க வேண்டும் அல்லது அத்தகைய ஒரு நபர் கட்டாயம் குடியரசுத்தலைவர் கருத்தில் தலைசிறந்த சட்ட நிபுணராக இருக்க வேண்டும்.

**கண்டனத் தீர்மானம்:**

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் விவாதிக்கப்பட்டு ஒட்டு மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாமல் கலந்து கொண்டு, அதே அமர்வில் வாக்கெடுப்பில் ஆதரவு பெரும்பான்மை பெற்றால் உச்ச நீதிமன்ற நீதிபதியை விசாரிக்க குடியரசுத்தலைவர் ஆணையிடுவார்.

**நியமனங்கள் அனைத்தும் பொதுவாக பணிமூப்பு அடிப்படையில் செய்யப்படுகிறது.**

பட்டியலினத்தவர் சமுதாயத்தில் இருந்து ஒருவர் முதல் முறையாக 2000-இல் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டார். அவர் நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன் ஆவார். இவர் 2007-இல் பட்டியலினத்தைச் சார்ந்த முதல் தலைமை நீதிபதியாக உயர்ந்தார்.

தற்போதுள்ள அரசமைப்பின் கீழ் இந்திய உச்ச நீதிமன்றம் ஜனவரி 28, 1950-ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கியது. தொடக்கத்தில் நாடாளுமன்றத்தின் இளவரசர்கள் மாடத்தில் செயல்பட்டது. 1958-ஆம் ஆண்டு தற்போது உள்ள வளாகத்துக்கு மாற்றப்பட்டது.

நீதிபதி ஹரிலால் ஜெ.கனியா, உச்ச நீதிமன்றத்தின் முதல் தலைமை நீதிபதி ஆவார். அவருடன் நீதிபதிகளாக பதவியேற்றவர்கள் முறையே, நீதிபதி சையத் பாசல் அலி, பதஞ்சலி

சாஸ்திரி, நீதிபதி மெகர்சந் மகாஜன், நீதிபதி பிஜன் குமார், நீதிபதி முகர்ஜி மற்றும் நீதிபதி எஸ்.ஆர். தாஸ் ஆகியோர்கள் ஆவர்.

**உயர்நீதிமன்றங்கள்:**

உயர் நீதிமன்றங்கள் மாநிலங்களின் தலைமை நீதித்துறை நிர்வாக அமைப்பு ஆகும். அரசமைப்புப்படி ஒவ்வொரு மாநிலமும் ஒரு உயர் நீதிமன்றத்தை பெற்றிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தபோதும், தற்போது நான்கு மாநிலங்கள் ஒன்றுக்கு அதிகமான மாநிலங்களுடன் இணைந்த உயர் நீதிமன்றத்தினைக் கொண்டுள்ளன. ஆறு ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகள் அருகே அமைந்த மாநிலத்தின் உயர் நீதிமன்றத்தின் நீதி அதிகார வரம்பின் கீழ் வருகின்றன. ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் டில்லி மட்டுமே தனக்கான உயர் நீதிமன்றத்தினைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் ஒரு தலைமை நீதிபதியையும் இதர நீதிபதிகளையும் கொண்டிருக்கிறது.

குறித்த இடைவெளிகளில் குடியரசுத்தலைவர் உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்கின்றார். உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியினை உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, மாநிலத்தின் ஆளுநர் ஆகியோரை கலந்தாலோசித்து குடியரசுத்தலைவர் நியமனம் செய்கிறார். பிற நீதிபதிகள் நியமனத்தில் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகளின் பிரிந்துரைகளும் ஆலோசனை கேட்கப்படும். உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் 62வயது நிரம்பும் வரை பதவியில் இருப்பார். பதவி நீக்கத்தை பொருத்தவரை உச்ச நீதிமன்ற நீதிபதியின் பதவி நீக்க நடைமுறை போலவே இருக்கும். உயர் நீதிமன்ற நீதிபதி நியமனத்திற்கு ஒருவர். இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும் 10 ஆண்டுகள் நீதித் துறையில் பணிபுரிந்திருக்க வேண்டும் அல்லது 10 ஆண்டுகள் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக பணியாற்றி இருக்க வேண்டும்.

உயர் நீதிமன்றத்தின் வழக்குகள் மாநில ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அசல் நீதித்துறை மற்றும் மேல்முறையீட்டு அதிகார வரம்பு ஆகியனவற்றை உள்ளடக்கியது. ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் தனது கீழ் உள்ள கீழமை நீதிமன்றங்களின் மீது மேலாதிக்க அதிகாரம் கொண்டிருக்கிறது. உயர் நீதிமன்றங்கள் தனித்த, ஒருங்கிணைந்த நீதித்துறை அதிகார அமைப்பாக இருந்தாலும் அவை இன்னும் முழுமையான சுதந்திரமான நீதித்துறை நிறுவனங்கள் எனக் கூறமுடியாது.

உச்ச நீதிமன்றம் அவைகளின் மீது நேரடியான நிர்வாக கட்டுப்பாடு எதுவும் கொண்டிருக்கவில்லை, அவை எந்த விதத்திலும் சட்டமன்றத்தாலோ அல்லது மாநில ஆட்சித்துயையாலோ கட்டுப்படுத்தப்படுவதில்லை. ஆனால் அவற்றின் நீதிபதிகள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி உடனான ஆலோசனைக்கு பிறகு குடியரசுத்தலைவரால் ஒரு உயர் நீதிமன்றத்தில் இருந்து மற்றொரு உயர் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட முடியும். உயர் நீதிமன்றங்களும் கூட அடிப்படை உரிமைகள் தொடர்புடைய வழக்குகளில் நீதிப் பேராணைகள் வழங்கும் அதிகாரங்கள் கொண்டவைகளாகும்.

**அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கான சட்ட வழித்தீர்வுகள்:**

உரிமைகள் மீறப்பட்ட நபர்களுக்கு விரைந்து நீதி வழங்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் பார்வையில் உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்கள் இரண்டும் நீதிப் பேராணைகள் இடைக்கால உத்தரவு வழங்கும் அதிகாரங்கள் கொண்டிருக்கின்றன. அவைகள் ஐந்து வகைப்படும்.

1. **ஆட்கொணர்வு நீதிப்பேராணை:**

   இதன் பொருள் ஒரு நபரை உயிருடன் கொண்டு வந்து நிறுத்தும்படி கூறுவதாகும். இந்த நீதிப்பேராணை ஒரு நபர் சட்டவிரோதமாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு வழக்கிற்கு பொருந்தக் கூடியதாகும். இந்த நீதிப்பேராணையானது ஒவ்வொரு தனிநபரின், தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாக்கிறது.

2. **நெறியுறுத்தும் நீதிப்பேராணை:**

இந்த பேராணையானது, சட்டப்படி இயங்கும் படியும், சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும் இடப்படும் ஆணையாகும். இதன் பொருள் எந்த ஒரு அதிகாரம் கொண்டோரையும் அவரின் சட்டபூர்வமான கடமையை செய்ய உத்தரவிடுவதை குறிக்கும். இந்த நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையானது, சட்டபூர்வ கடமையை வலியுறுத்துவதுடன், பொது மக்கள் நலன்காக்கும் கடமையை செய்ய மறுக்கும் அதிகாரி, அலுவலர்கள், அரசு என நீதிமன்ற அமைப்புகளுக்கு எதிராகக் கூட ஆணையிடக் கூடியதாகும்.

3. **தடை நீதிப்பேராணை:**

இந்த நீதிப் பேராணையானது உயர்மட்ட நீதிமன்றம், கீழ்நிலை நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயங்கள் தங்களின் அதிகார வரம்பை மீறி நடப்பதைத் தடுக்கும் விதமாக வழங்கப்படுவதாகும். இந்த தடை விதமாக வழங்கப்படுவதாகும். இந்த தடை ஆணை நீதித்துறை சார்ந்த அமைப்புகள் அல்லது பகுதி அளவு மட்டுமே நீதித்துறை அமைப்புகளுக்கு எதிராக மட்டும் வழங்கப்படும் தடை ஆணைகள் ஆகும்.

4. **தகுதி முறை வினவும் நீதிப் பேராணை:**

இதன் பொருள், எந்த அதிகாரத்தின் அடிப்படையில் அல்லது பணி சான்றிதழ் ஆணை அடிப்படையில் என வினா எழுப்புவதை குறிப்பிடுவதாகும். இதன் பொருள் ஒரு நபர், ஒரு அரசு அலுவலக பதவியில், எந்தத் தகுதியின் அடிப்படையில் அமர்ந்திருக்கிறார் என வினா எழுப்பும் படியான விவகாரத்தில் வழங்கப்படும் நீதிப்பேராணையாகும்.

5. **விளக்கம் கோரும் ஆணை:**

ஒரு பொது அலுவலில் சட்டபூர்வ நிலையை ஒருவர் எதன் அடிப்படையில் அல்லது எந்த அதிகார அமைப்பின் அடிப்படையில் அதில் அமர்த்தப்பட்டார் என்று கேள்விக்கேட்பது ஆகும்.

மேற்கண்ட நீதிப் பேராணைகளோடு, உயர் நீதிமன்றமானது சட்டஉறுப்பு 266-ன் கீழ் பொது மக்கள் நலன்கருதி வழிகாட்டுதல்கள், உத்தரவுகள் பிறப்பதாகும்.

**நீதித்துறைச் சீராய்வு பொது நல வழக்கு மற்றும் நீதித்துறை செயல்பாட்டு முறை**

**நீதித்துறைச் சீராய்வு:**

தனி நபர்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு இந்திய அரசமைப்பு வழங்கியுள்ள நீதிமன்றச் சீராய்வு அதிகாரம் மிகவும் முக்கியமானது. இந்திய உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்றங்களுக்கு இருக்கும் இத்தகைய நீதித்துறைச் சீராய்வு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டம் இயற்றுவது மற்றும் அதனைச் செயல்படுத்துவது என இரண்டின் மீதும் அரசமைப்புப்படி மறு ஆய்வு செய்து தீர்ப்பு வழங்கும் வகையில் இந்த அதிகாரம் விரிவான வரம்புகளைக் கொண்டுள்ளது.

நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்கள் அரசமைப்பிற்கு முரணாக இருக்குமானால் அச்சட்டம் செல்லாது என்று நீக்கப்படும். இவ்வாறு மிகவும் துணிச்சலான, முரண்பாடான ஒரு தீர்ப்பு, வங்கிகள் தேசியமயமாக்கும் சட்டம் செல்லாது என அறிவித்ததாகும். சிறுபான்மையினர் தங்களுக்கான கல்வி நிறுவனங்கள் நிறுவவும் நிர்வகிக்கவும் வழங்கப்பட்ட உரிமைகளைப் பறிக்கும் வகையில் இயற்றப்பட்ட சட்டங்கள் செல்லாதது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தலும் நீதித்துறைச் சீராய்வு முறையீடு மனு மீது வழங்கப்பட்ட முக்கிய தீர்ப்பாகும்.

இதே அடிப்படையில் ஒரு அரசமைப்புத் திருத்தச் சட்டம் மீதே சீராய்வு மனு தாக்கல் செய்யும் அளவுக்கு நீதத்துறைச் சீராய்வு அதிகார வரம்பு விரிவடைந்ததாகக் காணப்படுகிறது. இந்த வழக்குகள் அரசமைப்பு திருத்தச்சட்டம் ஒரு அரசமைப்பின் அடிப்படை கோடபாட்டுக்கு பாதிப்பிற்குள்ளாகிறதா என்று மறு ஆய்வு செய்வதாகும். உதாரணமாக மதச்சார்பற்றத்தன்மை, மக்களாட்சி, கூட்டாட்சி முறை போன்றவை மீதான திருத்தச்சட்டம், அரசமைப்பிற்கு எதிரானது என்று உச்ச நீதிமன்றம் கருதினால் அத்திருத்தச்சட்டம் அரசமைப்புக்கு விரோதமானது எனவே செல்லாது என்று அறிவிக்கப்படும்.

இந்தியாவில் சட்ட நிர்வாகத்தில் நீதித்துறைச் சீராய்வு அதிகாரம் முக்கியப் பங்காற்றுகிறது. இந்திய அரசமைப்பு உறுப்பு 13 (2)-வது, நாடு முழுவதும் ஒரே மாதிரியான விதிகளை அமல்படுத்துவது சரியல்ல என்று நம்புகிறது. குறிப்பாக, அத்தகைய நாடு தழுவிய விதிகள் அரசமைப்பு பாகம் 3இல் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பறிப்பதாகும் எனக் கருதுகிறது. அரசமைப்பில் இந்தப் பிரிவுக்கு எதிராக விதிக்கப்படும் எந்த விதிமீறலாகக் கருதப்பட்டு, சீராய்வுக்கும் பின்னர் அந்த விதி ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்படும்.

விதிகளை அமல்படுத்துவது சரியல்ல என்று நம்புகிறது. குறிப்பாக, அத்தகைய நாடு தழுவிய விதிகள் அரசமைப்பு பாகம் 3இல் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பறிப்பதாகும் எனக்கருதுகிறது. அரசமைப்பில் இந்தப் பிரிவுக்கு எதிராக விதிக்கப்படும் எந்த விதிமீறலாகக் கருதப்பட்டு, சீராய்வுக்கும் பின்னர் அந்த விதி ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்படும்.

எனினும், 24.04.1973 க்குப் பின்னர் அரசமைப்பின் ஒன்பதாவது பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள சட்டங்கள் தொடர்பாக மறுசீராய்வு கோர முடியாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. மேலும், தற்போது சீராய்வுக்கு உட்பட்டதாகத் தோன்றும் சட்டங்கள் ஒன்பதாவது பட்டியலில் சேர்க்கப்பட்டாலும் அவற்றின் மீது மறுசீராய்வு கோர முடியாது. நீதிமன்ற மறுசீராய்வு என்பது சட்டம் குறித்த வினாக்களுக்கு மட்டுமே பொருந்தக்கூடியது ஆகும். அரசியல் சம்பந்தமாக எழும் பிரச்சினைகளுக்கு சம்பந்தமாக எழும் பிரச்சினைகளுக்கு இதனை செயல்படுத்த முடியாது. உச்ச நீதிமன்றமும் தானாகவே எந்த ஒரு சட்டத்தையும் மறுசீராய்வுக்கு உட்படுத்த முடியாது. ஒரு குறிப்பிட்ட விதி அல்லது சட்டம் ஆகியவற்றை எதிர்த்து வரும் வழக்கில் மட்டுமே பயன்படுத்த முடியும்:

**பொது நல வழக்கு:**

பொது மக்கள் நலன் கருதி எந்த ஒரு தனிநபரும் நீதிமன்றத்தை நாடி மனு அளிக்க முடியும். இது பொதுநலன் மனு எனப்படுகிறது. இதன்படி, அரசமைப்பு உறுப்பு 32-ன் கீழ் உச்ச நீதிமன்றத்திலும், அரசமைப்பு உறுப்பு 226- இன் கீழ் உயர் நீதிமன்றங்களிலும், குற்றவியல் நடைமுறைச் சட்டம் 133-ன் படி நடுவர் நீதி மன்றங்களிலும் பொது நல வழக்கிற்கான மனுவைத் தாக்கல் செய்ய முடியும். மேலும், இதற்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி கீழ்க்கண்ட வகைகளில் பொது நல வழக்குகள் தொடர முடியும்.

1. கொத்தடிமை தொழிலாளர்கள் முறை தொடர்பான விவகாரங்கள்
2. கைவிடப்பட்ட (ஆதவற்ற) குழந்தைகள்
3. குறைந்தபட்ச கூலி வழங்காமை
4. சிறைச்சாலையில் நிகழும் மரணம், வன்கொடுமைகள் தொடர்பான புகார்கள், விரைவான நீதி அடிப்படை உரிமை என்பதால் துரித விசாரணை கோருதல்.

5. வழக்குப் பதிவு செய்ய மறுக்கும் காவல் துறை அதிகாரிக்கு எதிராக வழக்கு மனுதாக்கல் செய்தல், வரதட்சனை கோரி பெண் வன்கொடுமை, மணப்பெண் தீவைப்பு, பாலியல் வன்கொடுமை, கடத்தல், கொலை, வதை போன்ற குற்றங்களுக்கு எதிரான புகார்கள்.

6. பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமை புகார்.

7. சுற்றுச்சூழல் மாசுபாடு தொடர்புடைய புகார்கள் என வகைப்படுத்துகின்றன.

அரசமைப்பு உறுப்பு 32-ன் கீழ் உச்ச நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் பொது நல மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளும் அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் தமக்குள் இணைத்துக் கொண்டுள்ளது. பொது நல வழக்கு என்பது ஒரு பகைத் தன்மையில் வழக்கு தொடுக்கும் முறையல்ல. மாறாக, ஒடுக்கப்பட்ட மற்றும் பாதிப்புக்குள்ளாகும் சமூகப் பிரிவினர்களுக்கு மனித உரிமைகளை அர்த்தமுள்ளதாகவும், அவர்களுக்கு அரசமைப்பு வழங்கியுள்ள சமூக – பொருளாதார நீதியை உறுதிப்படுத்தவும் அரசு மற்றும் அரசு அதிகாரிகளுக்கு வாய்ப்பு வழங்குவதுடன் அவ்வாறு செயல்படாத அரசு மற்றும் அரசு அதிகாரிகளுக்கு எதிராகவும் விசாரிக்கிறது. மாநில அரசுகள், மத்திய அரசு, மாநகராட்சி ஆகியவற்றிக்கு எதிராக பொது நல வழக்கு தொடர முடியும். ஆனால், தனிநபருக்கு எதிராக பொது நல வழக்கு பதிவு செய்ய முடியாது.

அண்மையில் இந்தியாவில் ஏராளமான பொது நல மனுக்கள் நீதிமன்றங்களில் பதிவு செய்யப்படுவதைக் காணமுடிகிறது. உச்ச நீதிமன்றம் 2005-ஆம் அண்டு ஒரு வழக்கை பொது நல வழக்காகத் தீர்மானித்தது. பொது நலனுக்கான சமூகம் எதிர் இந்திய அரசு (Common Cause Society Vs Union of India), என அவ்வழக்கு பதிவு செய்யப்பட்டது. பெருகி வரும் சாலை விபத்துகளை கருத்திற்கொண்டு சாலை பாதுகாப்பு சட்டங்களை இயற்றும்படி அரசுக்கு உத்தரவிட வலியுறுத்தி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அந்த மனுவே பொது நல வழக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதேபோல அங்கம்மாள் பாண்டே எதிர் உத்தரபிரதேச மாநில அரசு என்ற வழக்கில், உயர்நிதிமன்றத்தின் லக்னோ அமர்வு, கன்சிராம் நினைவு அரங்கம் அருகே நடைபெறும் கட்டுமானப் பணிகளைக் குறிப்பிட்ட காலத்துக்கு தடை செய்தது.

இதேபோல மக்களாட்சி உரிமைக்களுக்கான மக்கள் ஒன்றியம் எதிர் இந்திய அரசு (Peoples' Union for Democratic Rights vs. Union of India) என்ற வழக்கினையும் உச்ச நீதிமன்றம் பொது நல வழக்காக எடுத்துக் கொண்டது. சமூக, பொருளாதார ரீதியாகப் பின்தங்கியுள்ள மக்கள் தமக்கான நிவாரணம் கோரி நீதிமன்றங்களை அணுக இயலாத நிலையில் இருப்பதால் இத்தகைய தனிநபர் அல்லது குழுவினருக்கு அரசமைப்பு ரீதியான தீர்வு கோரி "பொது ஆர்வம் கொண்ட குடிமக்கள்" நீதிமன்றத்தை நாடும்போது அதனை பொது நல வழக்காகக் கருதலாம் என்று கூறிய உச்ச நீதிமன்றம் இதனை பொது நல வழக்காக அனுமதித்தது. பொது நல வழக்குகள் என்பவை "பங்களிப்பு நீதி" எனும் செயல்முறையின் ஒரு பகுதியாகும் குடிமை வழக்குகளாக இவை நீதிமன்றங்களால் தாராளமாக வரவேற்கப்படுகிறது.

பரமானந் கட்டாரா எதிர் இந்திய அரசு என்ற வழக்கு (Parmanand Katara Vs. Union of India) பொதுமக்கள் நலனுக்காகப் பாடுபடும் மனித உரிமை செயற்பாட்டாளர் தொடுத்த பொது நல வழக்கு ஆகும். இதில் மருத்துவ தொழிலில் உள்ள ஒவ்வொரு நபரும், காயமடைந்த என்ற வழக்கு பொதுமக்கள் நலனுக்காகப் பாடுபடும் மனித உரிமை செயற்பாட்டாளர் தொடுத்த பொது நல வழக்கு ஆகும். இதில் மருத்துவ தொழிலில் உள்ள ஒவ்வொரு நபரும், காயமடைந்த எந்த ஒரு குடிமகனுக்கும் வழக்கமான நடைமுறைகளைக் காரணங்காட்டி (Procedural Formalities) காத்திருக்க வைக்காமல் மருத்துவ உதவியினை செய்ய வேண்டும் எனும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பினை உச்ச நீதிமன்றம் வழங்கியது.

**நீதித்துறை செயல்பாட்டு முறை:**
மாறிக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில் நீதித்துறை மேற்கொள்ளும் வீரியமிக்க செயற்பாடுகள் நீதித்துறை செயல்பாட்டு முறை எனப்படுகிறது. அமெரிக்காவில் 1947 ஆம் ஆண்டு ஆர்தர் சன் சிங்கர் ஜூனியர் என்பவர் "உச்ச நீதிமன்றம்" 1947 என்று தலைப்பிட்ட கட்டுரை ஒன்றில் "Judicial Activism" (நீதித்துறை செயல்பாட்டு முறை) என்ற சொல்லினை அறிமுகப்படுத்தினார். பிளாக்ஸின் சட்ட அகராதி (Black's Law Dictionary), "Judicial Activism" - என்பது ஒரு "நீதித்துறை தத்துவம்" என்று கூறுகிறது. அது நீதிபதிகளை பழமைவாதத்திலிருந்து பிரித்து புதிய முற்போக்கான சமூக கொள்கைகளுக்கு ஆதரவாக ஊக்கப்படுத்துவதாகும்.

சட்ட ஆக்கமானது நீதித்துறை செயல்பாட்டு முறை மூலம் (Judicial Activism) புதிய பரிணாமத்தை பெற்றிருக்கின்றது. சமூகக் கண்ணோட்டத்தில் சட்டங்களுக்கு விளக்கமளிக்கும் ஆரோக்கியமான போக்கு நீதித்துறையில் காணப்படுகிறது. அமலில் உள்ள சட்டங்களின் அடிப்படையில் அல்லாமல் தனிநபர் அல்லது அரசியல் சக்திகளுக்கு சாதகமாக மேற்கொள்ளப்படும் நீதிமன்ற உத்தரவுகளை நீதித்துறை செயல்பாட்டு முறை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது. நீதித்துறை செயல்பாட்டு முறை என்பது அரசமைப்பின் விளக்கம், சட்டப்பூர்வ அடித்தளங்கள் மற்றும் அதிகாரப் பிரிவினை ஆகியன தொடர்புடையதாகும்.

நீதித்துறையில் காணப்படுகிறது. அமலில் உள்ள சட்டங்களின் அடிப்படையில் அல்லாமல் தனிநபர் அல்லது அரசியல் சக்திகளுக்கு சாதகமாக மேற்கொள்ளப்படும் நீதிமன்ற உத்தரவுகளை நீதித்துறை செயல்பாட்டு முறை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது. நீதித்துறை செயல்பாட்டு முறை என்பது அரசமைப்பின் விளக்கம், சட்டப்பூர்வ அடித்தளங்கள் மற்றும் அதிகாரப் பிரிவினை ஆகியன தொடர்புடையதாகும்.

இந்திய அரசமைப்பு 1950 –ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் பெரும்பான்மையான கோட்பாடுகள் மேற்கு உலக மாதிரிகளிலிருந்து நாடாளுமன்ற மக்களாட்சியும், தனித்துவ நீதித்துறையும் இங்கிலாந்திலிருந்து, அடிப்படை உரிமைகள், முன்வரைவு, கூட்டமைவு, கூட்டாட்சி அமெரிக்க அரசமைப்பிலிருந்து, மாநிலக் கொள்கைகள் நேரடி கோட்பாடுகள், அயர்லாந்து நாட்டிலிருந்தும் பெறப்பட்டதாகும். இருந்தபோதும், இந்தியாவில் அப்போது நிலவிய பகுதி அளவு நிலப்பிரபுத்துவ பிற்போக்கு நிலையில் இருந்து ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் காண்பதற்காகப் பெறப்பட்டதாகும்.

இந்திய நீதித்துறையானது. அரசின் ஒரு அங்கமாக இருக்கின்றபடியால், அதன் அமெரிக்க நீதித்துறைப் பிரிவைக் காட்டிலும் மிகுந்த செயலாக்க மிக்க பணியினை ஆற்றுகிறது. அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள கொள்கைகள், கோட்பாடுகளைக் கடைபிடிப்பதன் மூலம் இந்திய சமூகத்தை ஒரு நவீன சமூகமாக மாற்றும் தீர்ப்புகளை வழங்குகின்றன. இந்திய அரசமைப்பு உறுப்பு 21 அடிக்கடி உச்ச நீதிமன்றத்தில் எடுத்தாளப்படுகிறது. இந்த அரசமைப்பு உறுப்பின் மீதான தீர்ப்புகள் யாவும் நீதித்துறை செயல்பாட்டு முறைப் போக்கினை பிரதிபலிக்கின்றன.

ஏ.கே. கோபாலன் எதிர் மதராஸ் மாநில அரசு எனும் வழக்கில், ஒரு மனிதனின் வாழ்க்கை அல்லது சுதந்தரம் ஒடுக்கப்பட வேண்டும் என்ற வாதத்தை சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள செயல்முறைகள் அடிப்படையில் மட்டுமல்லாமல் பகுத்தறிவு மற்றும் நீதியின் அடிப்படையிலும் உச்ச நீதிமன்றம் நிராகரித்தது. எனினும். அதனைத் தொடர்ந்து மேனகா காந்தி எதிர் இந்திய அரசு என்ற வழக்கில், மேற்கண்ட நியாய வாதத்தினை நீதிமன்ற விளக்கம் மூலம் அரசமைப்பு உறுப்பு 21-ல் துணைப்பிரிவாகச் சேர்க்கப்பட்டது.

இது, அரசமைப்பு உருவாக்கத்தின் போது தவிர்க்கப்பட்ட பிரிவாகும். எனினும், அடுத்தடுத்த வழக்குகளில் உச்ச நீதிமன்றம் மரண தண்டனையை உறுதி செய்தும் இருக்கிறது. உதாரணமாக, சாதிக்கு வெளியே திருமணம் செய்து கொண்ட காரணத்திற்காக, ஆண் - பெண் இருவரை கௌரவக் கொலை செய்த பகவான் தாஸ் வழக்கில், (பசவான்தாஸ் எதிர் தில்லி மாநில அரசு) அவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

**அரசமைப்பும், நிர்வாகச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டம்:**
**அரசமைப்பு:**

மக்கள், மனிதன் அனைவருக்கும் விதிகளால் ஆளப்படுகிறார்கள் என்பது நன்கு தெரிந்தது. உதாரணமாக, விளையாட்டு போட்டிகளுக்கும் சமூக மன்றங்களுக்கும் விதிகள் உள்ளதை கூறலாம். நமது அன்றாட வாழ்வைத் தீர்மானிப்பதில் ஒழுக்க விதிகளும், வழக்காறுகளும் முக்கிய பங்காற்றுகின்றன. நாட்டிற்காகச் சட்ட மன்றங்களில் இயற்றப்படும் விதிகள் யாவும் ”சட்டங்கள்” என்று அழைக்கப்படுகின்றன. சமூகம், அதன் பணிகளை முறையாக செய்வதற்குச் சட்டங்கள் மிகவும் அவசியமாகும். அவைகள் நமது சொத்துக்களை முறையாகப் பாதுகாப்பதற்கு உருவாக்கப்பட்டவைகள் ஆகும், மற்றும் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் முறையாக நடந்து கொள்வதை உறுதிபடுத்துகிறது.

அடிப்படையில், அரசமைப்பு மேலான சட்டமாகும். மற்ற எல்லா சட்டங்களும் அரசமைப்பிற்கு பொருந்தி வர வேண்டும். அரசமைப்பானது அரசு தொடர்புடைய சட்டங்களையும், மக்கள் தொடர்புடைய சட்டங்களையும் உள்ளடக்கியதாகும். அரசமைப்பு விதிகள் என்பது அரசின் பல்வேறு நிறுவனங்களின் வரையறை, பணிகள், அதிகாரங்கள், மற்றும் அவற்றின் அமைப்புகள் குறித்த தொகுப்பு விதிகள் ஆகும். அதாவது சட்டமன்றம், ஆட்சித்துறை, நீதிதுறை போன்றவைகள் மற்றும் குடிமக்களின் அடிப்படை உரிமைகள், மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையிலான உறவுகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

அரசமைப்பு என்பது வழியுறுத்துவதும் வழிகாட்டுவதுமான விதிகளின், ஒரு தொகுப்பு ஆகும். இது நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரு விதிமுறைகளின் தொகுப்பை முன்மொழிவதன் மூலம் தேசத்தை ஒழுங்குபடுத்துகிறது. அவை நாட்டைச் சரியான திசை வழியில் வழி நடத்துகிறது. அவை பல்வேறு அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள், அரசு வழிகாட்டு நெறிமுறைகள் உள்ளிட்டவைகள் ஆகும். நாட்டில் நிலவும் அமைப்பு முறையை ஒழுங்குபடுத்துவதற்கு நமக்கு அரசமைப்பு விதிகள் தேவைப்படுகின்றன. நாட்டு மக்கள்

அடிப்படை உரிமைகளைக் கடந்து போகாமல் இச்சட்ட விதிகளே நாடு முழுவதும் கண்காணிக்கின்றன.

அரசமைப்பு விதிகள் குடிமக்களுக்கிடையே சமத்துவ உணர்வினை உருவாக்குகின்றன. இவை குழந்தைகள் நலனுக்காக குழந்தைகள் மீது பெற்றோர்கள் செலுத்தும் கட்டுப்பாடுகளைப் போன்றவையே ஆகும். அதைப்போலவே அசரமைப்பு விதிகள் எல்லா குடிமக்கள் மீதும் செயலாற்றுகிறது. அதே வழியில் அரசமைப்பு வழங்கியுள்ள வழிகாட்டுதளின்படி சட்டங்கள் இயற்றுவதற்காக சிலரைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கவும் சிலரை நியமனம் செய்யவும் அரசமைப்பு விதிகள் வழிவகை செய்கின்றன. அரசமைப்பு விதியின்படிதான், பல்வேறு மொழிகள் பேசும் வேறுபட்ட பண்பாடுகள் கொண்ட மிகப் பரந்த இந்நாட்டை அதன் தலைவர் நிர்வாகம் செய்கிறார்.

**சட்டத்தின் ஆட்சி:**

இந்தியாவில் ”சட்டத்தின் ஆட்சி” என்ற ஆங்கிலக் கருத்தை காலனி ஆட்சி அறிமுகப்படுத்தியது. சட்டத்தின் ஆட்சியில் மூன்று முதன்மையான சிறப்புகள் உள்ளன. அவைகள்,

- சட்டத்தின் முன் அனைவரும் சமம்
- சட்டத்திற்கு மேல் யாரும் இல்லை
- சட்டம் அனைவருக்கும் பொருந்தக்கூடியது
- சட்டத்தின் ஆட்சியானது நீதிவழங்குவதில் குடிமக்களின் சமத்துவத்தை உறுதிபடுத்துகிறது. சொந்த உறவுகளுக்காகச் சாதகமாக நடப்பது, குறிப்பிட்ட நபருக்குச் சலுகை அளிப்பது நீதித்துறை முறைகேடுகள் ஆகியவற்றை குறைக்கின்றன. இத்துடன் அதிகார, நிர்வாக முறைகேடுகளையும் கட்டுப்படுத்துகின்றன. அரசு நிர்வாகத்தினை ஆளுகை செய்வதுடன் செயல்முறை சட்டங்களும், அரசமைப்பு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளும் சட்டத்தின் ஆட்சி உறுதிபடுத்துவதை வலியுறுத்துகின்றன.

**நிர்வாகச் சட்டம்:**

நிர்வாகச் சட்டம் என்பது நிர்வாகச் செயல்முறைகளை ஆளுகை செய்வதற்கான சட்டமாகும். நிர்வாகச் சட்டங்கள் என்பவை, நிர்வாகத்துடன் தொடர்புடையவை என ஐவோர் ஜென்னிங்ஸ் விளக்கம் அளிக்கிறார். ஒரு நிர்வாக அமைப்பு, அதன் அதிகாரம் மற்றும் அதன் அதிகாரிகளின் கடமைகளை அது தீர்மானிக்கிறது. நிர்வாக அமைப்புகளின் சட்டம் இயற்றும் அதிகாரம், பாதியளவு நீதித்துறை அதிகாரம் கொண்ட நிர்வாக முகமைகள் அரசு அதிகாரிகளின் சட்ட வரம்பு, நிர்வாக அதிகாரிகளைக் கண்காணிக்கும் சாதாரண நீதிமன்றங்களின் அதிகாரம் என அனைத்தையும் கட்டுப்படுத்துகின்றன. மக்களிடம் நியாயமாக நடந்து கொள்வதை உறுதிப்படுத்துகின்றன.

நிர்வாகச் சட்டம் என்பது பொதுசட்டத்தில் ஒரு பிரிவு ஆகும். அது அரசாங்கத்திற்கும் தனிமனிதனுக்கும் உள்ள உறவு குறித்தும் பேசுகிறது. அது சட்டத்தை அமலாக்கம் செய்யும் அமைப்பைத் தீர்மானிக்கும் உயர்மட்டத்தினர் மற்றும் பகுதியளவு நீதித்துறை அதிகாரம் கொண்டோரை வரையறை செய்கிறது. நிர்வாகச் சட்டமானது முதலாவதாக அதிகாரிகளின் செயல்கள் மற்றும் செயல்முறை ஆகியவற்றையும், நிர்வாக தன்மைக் கொண்ட அமைப்புகளையும் அதற்குரிய கட்டுப்பாடு எந்திரத்திகுள்ளாகவே வைக்கப்படும்படியாக செய்வதாகும். இந்தியாவில் நிர்வாகச் சட்டங்கள் வளர்ச்சிப் பெறுவதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன.

முதலில், இந்தியா ஒரு ”மக்கள் நல அரசு” ஆகும். அரசாங்கத்தின் செயற்பாடுகள் மிக அதிகரித்த வண்ணம் இருக்கிறது. எனவே அவற்றினை ஒழுங்குப்படுத்தும் தேவை உருவாகிறது. எனவே, நிர்வாகச் சட்டப் பிரிவு தோன்றியது. இரண்டாவதாக, சட்டங்கள் இயற்றுவதில் (Legislation) போதாமை நிலவுகிறது. அன்றாடம் மாறிக் கொண்டிருக்கின்ற சமூகத்திற்கு ஏற்ப சட்டங்களை இயற்ற சட்டமன்றங்களுக்கு கொண்டிருக்கின்ற சமூகத்திற்கு ஏற்ப சட்டங்களை இயற்ற சட்டமன்றங்களுக்கு போதிய நேரம் இருப்பதில்லை. அவ்வாறு அது செய்யப்பட்டாலும், சட்டம் இயற்றுவதற்கான நடைமுறை நீண்டதாகவும், அதிக காலம் எடுத்துக்

கொள்ளும்படியாக இருப்பதாலும், அவ்வாறு உருவாக்கப்பட்ட விதிகள் யாவும் தேவைக்கு பயன்படுத்தும் போது, மாறிவிடுகின்றன.

மூன்றாவதாக, இந்தியாவில் நீதிமன்ற காலதாமதம் நிலவுகிறது. மந்தமான வேகம், அதிக செலவு மற்றும் சிக்கலான நடைமுறைகள் போன்றவை இதன் காரணங்களாகும். இதனால் நீதி பெறுவதற்கான செயல்முறைகள் தாமதமடைகின்றன. ஏற்கனவே வழக்குகள் தேங்கிக்கிடப்பதால் விரைவான விசாரணை சாத்தியமற்றதாக உள்ளது. இதனால்தான் நிர்வாகத் தீர்பாயங்கள் உருவாகின்றன. நான்காவதாக, நிர்வாகச் சட்டங்கள் என்பவை தொகுக்கப்பட்டவைகள் (Codified) அல்ல. எனவே, அரசு இயந்திரத்தின் தேவைக்கு ஏற்றாற்போல் மாற்றியமைத்துக் கொள்ளும் செயற்பரப்பைக் கொண்டுள்ளன. எனவே, இது மிகவும் நெகிழ்வுத் தன்மைக்கொண்டதாகும். நெகிழ்வற்ற திடமான சட்ட நடைமுறைகளை மீண்டும் மீண்டும் பின்பற்றத் தேவை இல்லை. நிர்வாகச் சட்டத்திற்கும், அரசமைப்பிற்கும் இடையே வேறுபாடு இருக்கின்றது. அரசமைப்பு என்பது இந்த மண்ணின் மேம்பட்ட உயர்வான சட்டமாகும். எந்த ஒரு சட்டமும் அரசமைப்பிற்கு மேலானது இல்லை. எனவே இதர சட்டங்கள் அதன் உறுப்புக்களை நிறைவு செய்வதாக இருக்க வேண்டும். அதனை மீறும்படியாக இருக்கக்கூடாது.

எனவே நிர்வாகச் சட்டங்களும் அரசமைப்பிற்குக் கீழான சட்டமே ஆகும். அரசமைப்பானது அரசின் அமைப்பு (Structure) மற்றும் அதன் பல்வேறு உறுப்புகளைப் பற்றிப் பேசுகிறது. நிர்வாகச் சட்டங்கள் என்பவை நிர்வாகத்தைப் பற்றி மட்டுமே செயலாற்றுகிறது (Deals). நிர்வாக அதிகாரிகள் முதலில் அரசமைப்பு விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதுடன் தொடர்ந்து நிர்வாகச் சட்டங்களின்படி பணியாற்ற வேண்டும்.

**இந்திய தண்டனைச் சட்டம்:**

இந்திய தண்டனைச் சட்டம் என்பது இந்தியாவின் குற்றவியல் சட்டமாகும். அது குற்றவியல் சட்டத்தின் உள்ளார்ந்த அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சட்டமாகும். 1834-ஆம் ஆண்டு இந்தியாவில் அமைக்கப்பட்ட முதல் சட்ட ஆணையத்தின் பரிந்துரையின் கீழ் 1860 – ஆம் ஆண்டு இச்சட்டம் தயாரிக்கப்பட்டது. இது தொடக்ககால பிரிட்டிஷ் இந்திய ஆட்சியின் கீழ் 1862-ல் அமலுக்கு வந்தது. இதன் நோக்கம் இந்தியாவிற்கு ஒரு பொதுத் தண்டனைச் சட்டத் தொகுப்பை அளிப்பதாகும். இந்திய தண்டனைச் சட்டம் ஒரு அடிப்படையான வடிவத்தைக் கொண்டிருக்கிறது. ஒரு நபர் மேற்கொள்ளும் அனைத்து குற்றங்களுக்கான வழக்குகள், அவற்றுக்கான தண்டனைகள் ஆகியனவற்றின் பட்டியல் கொண்ட ஆவணமாகும். இது அனைத்து குடிமக்களையும் உள்ளடக்கியது. இராணுவத்தினரும் இதர படைகளின் வீரர்களும் விலக்களிக்கப்பட்டுள்ளனர். அவர்களை இந்தியக் குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் தண்டிக்க முடியாது. அவர்களுக்கு பல்வேறு தனி விதிகள் உள்ளன. பல ஆண்டுகள் சோதனைகளுக்கு பின்னர் பரிசோதிக்கப்பட்டு பரிணாமம் பெற்ற நியாயமான, திடமானக் குற்றத்தடுப்பு அமைப்பைக் கொண்டுள்ள ஒரு நீதித்துறை அமைப்பு என்ற சிறப்பினை இந்திய நீதித்துறை பெறுகிறது.

இந்திய தண்டனைச் சட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பியல்பானது, அந்த ஆவணம் வளர்த்தெடுக்க நினைத்த பாரபட்சமற்ற தன்மை கொண்ட தீர்ப்புமுறை ஆகும். இந்திய தண்டனைச் சட்டம் ஒவ்வொரு அரசு ஊழியர், ஒவ்வொரு பொதுமக்கள் ஏன் நீதிபதியைக்கூட உள்ளடக்குவதாக இருக்கிறது. நாட்டின் சட்டம் இயற்றும், சட்டத்தை அமலாக்கம் செய்யும் அமைப்புகள் பொதுமக்களின் நம்பிக்கையைத் தட்டி எழுப்புகிறது மேலும், அதிகாரத்தில் இருப்பவர்கள் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்துவதையும் தடுக்கிறது.

இந்திய தண்டனைச் சட்டமானது, அரசுக்கு எதிரான குற்றங்கள், பொது இடங்களில் நடைபெறும் குற்றங்கள், ஆயுதப்படைகளின் குற்றங்கள், கற்பழிப்பு மற்றும் கொலை, ஆட்கடத்தல் போன்ற குற்றவியல் நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து குற்றங்களையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் மதம் தொடர்புடைய குற்றங்கள், சொத்துடைமை குற்றங்கள், திருமண குற்றங்கள், கணவர்கள் மற்றும் உறவினர்களால் செய்யப்படும் கொடுமைகள் மற்றும் அவதூறுகள் போன்றவற்றையும் கையாளுகின்றது. இந்திய தண்டனைக் குறியீட்டுக் கீழ் பிரிவு 34, ஒரு குழச் செயல்பாட்டில் கலந்து கொண்ட ஒரு நபர் ஆற்றிய பங்களிப்பு எவ்வளவு சிறியதாக இருந்தாலும், அக்குழுவினர் மேற்கொண்ட செயல்களின் பொது நோக்கிற்கும் முழுமையான பொறுப்பானவராகவே கருதப்படுவார். சாட்சிகளின் அடிப்படையில் இவர்கள் சமமான குற்றவாளிகள் கருதப்படுவர்.

இதே சட்டம் பிரிவு 149-ன் கீழ், சட்ட விரோதமாகக்கூடிய ஒரு குழுவைச் சேர்ந்த நபர்கள் அனைவரும் அந்த சட்ட விரோத குழுச் செயலின் உள்நோக்கம் அல்லது சட்டவிரோதக் கூடுதலில் ஏற்படக் கூடிய கெடு விளைவு அடிப்படையில் தண்டனைக்குரியவர்கள் ஆவர். மேலும், குற்றச் சதி தயாரிப்பில் பங்கேற்றல், உடந்தையாக இருந்ததல் போன்ற செயல்களும் தண்டனைக்குரியவையாகும்.

இந்திய தண்டனைக் சட்டமானது, பல முறை தேவையின் அடிப்படையில் திருத்தப்பட்டிருக்கிறது. தேசத் துரோகம் போன்ற தண்டனைச் சட்டத்திற்கு வெளியே இருந்து கருத்தாக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. குடிமகன்களின் எதிர்பார்ப்புகளில் மாறுதல்கள் ஏற்படுவதாலும், அது சமூக மாற்றங்களில் முடிவதாலும், குற்றவியல் நீதி அமைப்பு முறைகளை அடிக்கடி மாற்றி அமைக்க வேண்டிய தேவை உணரப்பட்டது. சில நேரங்களில் இதுவே மிகுந்த மன உளைச்சல்கள், மன அழுத்தங்களுக்கு உள்ளாகின்றன. குற்றவியல் புலன்விசாரணை செயல்முறைகள், குற்றங்களை முறையாக நீதிமன்றத்தில் வைத்து குற்றம் சாட்டுதல் மற்றும் தீர்ப்பு வழக்குதல் போன்றவையெல்லாம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களில் ஏற்படும் மாறுதல்கள் மற்றும் உருமாற்றங்களுக்கு இசைவானதாக மாற வேண்டியதன் அவசியத்திற்கு சாட்சியாக இருக்கிறது.

**தகவல் தொடர்பு:**

தொழில்நுட்ப வளர்ச்சிக்காலமான தற்போது, குற்ற நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள நவீனமுறைச் செயல்கள், நவீன புலனாய்வு முறை மற்றும் குற்றம் நிரூபிக்கும் புலனாய்வு முறை மற்றும் குற்றம் நிரூபிக்கும் முறைகளை உருவாக்கக் கோரியது. இதற்காக புதிய குற்றவியல் சட்டம் தேவைப்பட்டது. இதையொட்டி, இந்திய அரசு 2000-ஆம் ஆண்டு ஒரு குழு அமைத்தது. இந்த குழு தனது அறிக்கையை 2003-ஆம் ஆண்டு அளித்தது. குற்ற நீதிமுறை அமைப்பில் பல மாற்றங்களை ஏற்படுத்தக் கோரி பல பரிந்துரைகளை இக்குழு அறிக்கையில் வலியுறுத்தியது. இவற்றில், சில பரிந்துரைகளை அரசு ஏற்றுக் குற்றவியல் சட்டத்தோடு நடைமுறைப்படுத்தி வருகிறது.

, , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , ,